2022 අගෝස්තු 24
2022 ஆகஸ்ட் 24
24 August 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

# 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකොළොස් වන කාණ්ඩය - 09
பதினோராவது தொகுதி - 09
Eleventh Volume - 09

## රාජ්‍ය සමාගම්
## பொதுக் கம்பனிகள்
## Public Companies

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூவாண்டு அறிக்கை

2018-2020

அரசுக்குச் சொந்தமான கம்பனிகள்

# உள்ளடக்க அட்டவணை


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| **1.** | நிறைவேற்றுப் பொழிப்பு | | 6 |
| **2.** | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகளை சமர்ப்பித்தல் பற்றிய விபரம் | | 10 |
| **3.** | ஒட்டுமொத்த புள்ளவிபரங்கள் | | 15 |
| **4.** | அரசாங்க கம்பனிகளின் தனிப்பட்ட அவதானிப்புகள் | | |
| | 4.1 | இலங்கை கேட்டரிங் லிமிடட் | 27 |
| | 4.2 | இலங்கை விமான நிலைய மற்றும் விமான போக்குவரத்து சேவைகள் (AASL) | 29 |
| | 4.3 | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடட் | 33 |
| | 4.4 | கொழும்பு கொமர்ஷல் உர லிமிடட் | 40 |
| | 4.5 | சிலோன் பெர்டிலைசர் கம்பெனி லிமிடட் | 52 |
| | 4.6 | NSB நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் | 74 |
| | 4.7 | சீபேங் ஹொலிடே ஹோம் (பிரைவட்) லிமிடட் | 78 |
| | 4.8 | BOC டிராவல்ஸ் (பிரைவட்) லிமிடட் | 82 |
| | 4.9 | ஆதன அபிவிருத்தி பிஎல்சி | 85 |
| | 4.10 | BOC ஆதன அபிவிருத்தி முகாமைத்துவ (பிரைவட்) லிமிடெட் | 89 |
| | 4.11 | BOC முகாமைத்துவ மற்றும் ஆதரவு சேவைகள் (பிரைவட்) லிமிடட் | 94 |
| | 4.12 | ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிடெட் | 96 |
| | 4.13 | பீப்பிள்ஸ் டிராவல்ஸ் (பிரைவட்) லிமிடட் | 100 |
| | 4.14 | பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் ∴பைனான்ஸ் பிஎல்சி | 101 |
| | 4.15 | பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் ∴ப்ளீட் மெனேஜ்மென்ட் லிமிடெட் | 103 |
| | 4.16 | பீப்பிள்ஸ் லீசிங் பிராப்பர்ட்டி டெவலப்மெண்ட் லிமிடெட் | 104 |
| | 4.17 | பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | 105 |
| | 4.18 | பீப்பிள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிடெட் | 107 |
| | 4.19 | பீப்பிள்ஸ் லீசிங் ஹேவ்லாக் பிராப்பர்டீஸ் லிமிடெட் | 109 |
| | 4.20 | சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 110 |
| | 4.21 | சுயாதீன தொலைக்காட்சி நெட்வொர்க் லிமிடெட் (ITN) | 121 |
| | 4.22 | லேக் ஹவுஸ் ஆதன அபிவிருத்தி (பிரைவட்) லிமிடட் | 130 |
| | 4.23 | அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் | 131 |
| | 4.24 | இலங்கை CERT (பிரைவட்) லிமிடட் | 137 |

| | | | |
|---|---|---|---|
| | 4.25 | லங்கா அரசு தகவல் உட்கட்டமைப்பு (பிரைவட்) லிமிடட் | 139 |
| | 4.26 | இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் | 144 |
| | 4.27 | லக்திவா பொறியியல் நிறுவனம் | 149 |
| | 4.28 | லங்கா லேலண்ட் (பிரைவட்) லிமிடட் | 155 |
| | 4.29 | அகாடமி ஆ.ஃப் ஃபைனான்சியல் ஸ்டடீஸ் லிமிடட் | 157 |
| | 4.30 | சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் | 159 |
| | 4.31 | சீ-நோர் பவுன்டேஷன் | 180 |
| | 4.32 | ஸ்ரீ லங்கா கால்நடை அபிவிருத்தி கம்பனி (பிரைவட்) லிமிடட் | 187 |
| | 4.33 | ஓஷன் வியூ டெவலப்மெண்ட் கம்பனி | 191 |
| | 4.34 | நகர்ப்புற முதலீட்டு மற்றும் அபிவிருத்தி கம்பனி (பிரைவட்) லிமிடட் | 200 |
| | 4.35 | லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடட் | 209 |
| | 4.36 | வாட்டர்ஸ் எட்ஜ் லிமிடட் | 220 |
| | 4.37 | காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனி லிமிடெட் | 233 |
| | 4.38 | ஏல்ஆர்டிசி சேர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் | 237 |
| | 4.39 | பிசிசி லங்கா லிமிடட் | 240 |
| | 4.40 | லங்கா பாஸ்பேட் லிமிடட் | 244 |
| | 4.41 | லங்கா மினரல் சாண்ட் லிமிடட் | 241 |
| | 4.42 | பரந்தன் கெமிக்கல் கம்பனி | 275 |
| | 4.43 | SLINTEC அகாடமி | 280 |
| | 4.44 | ஸ்ரீ லங்கா இன்ஸிடியூட் ஒ.ஃப் நெனோ டெக்னொலொஜி (பிரைவட்) லிமிடட் | 283 |
| | 4.45 | முகாமைத்துவ சேவைகள் ரக்ஷன (பிரைவட்) லிமிடட் | 292 |
| | 4.46 | ஹேலன்கோ ஹொட்டேல் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட் | 297 |
| | 4.47 | கேன்வின் ஹொட்டேல் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட் | 298 |
| | 4.48 | சினோ லங்கா ஹொட்டேல் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட் | 301 |
| | 4.49 | கேன்வின் ஹொல்டிங் (பிரைவட்) லிமிடட் | 306 |
| | 4.50 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிடட் | 310 |
| | 4.51 | லிட்ரோ எரிவாயு | 315 |
| | 4.52 | லிட்ரோ கேஸ் டெர்மினல் | 321 |
| | 4.53 | இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (பிரைவட்) லிமிடட் | 327 |
| | 4.54 | மஹாவலி கன்சல்டன்சி பீரோ (பிரைவட்) லிமிடட் | 329 |

| | | | |
|---|---|---|---|
| | 4.55 | மஹாவலி வென்ச்சர் கெபிடல் (பிரைவட்) லிமிடட் | 335 |
| | 4.56 | மகாவலி கால்நடை மற்றும் விவசாய நிறுவனம் | 338 |
| | 4.57 | நெஷனல் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை - லங்கா ஜெமோலாஜிக்கல் லேபரட்டரி (பிரைவட்) லிமிடட் | 346 |
| | 4.58 | GSMB டெக்னிக்கல் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் | 348 |
| | 4.59 | லங்கா சால்ட் லிமிடெட் | 354 |
| | 4.60 | தொலைதூரக் கல்வி மையம் | 373 |
| | 4.61 | எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி லிமிடெட் | 376 |
| | 4.62 | சிலாபம் பெருந்தோட்ட லிமிடெட் | 390 |
| | 4.63 | குருநாகல் பெருந்தோட்ட கம்பனி லிமிடெட் | 399 |
| | 4.64 | களுபோவிடியன தேயிலை தொழிற்சாலை லிமிடெட் | 402 |
| | 4.65 | இலங்கை ரப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபன லிமிடெட் | 416 |
| | 4.66 | கலோயா பிளான்டேஷன் லிமிடெட் | 423 |
| | 4.67 | ஹிங்குரானா சுகர் கம்பெனி லிமிடெட் | 438 |
| | 4.68 | லங்கா சுகர் கம்பெனி லிமிடெட் | 443 |
| | 4.69 | கந்தளாய் சுகர் இண்டஸ்ரீஸ் லிமிடெட் | 450 |
| | 4.70 | ஜெயா கன்டெய்னர் டெர்மினல்ஸ் லிமிடெட் | 463 |
| | 4.71 | மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனி | 476 |
| | 4.72 | சிலோன் ஷிப்பிங் கோப்பரேஷன் லிமிடெட் | 489 |
| | 4.73 | நார்த்சீ லிமிடெட் | 498 |
| | 4.74 | மாந்தை உப்பு லிமிடெட் | 504 |
| | 4.75 | இலங்கை துறைமுக முகாமைத்ணதுவ மற்றும் ஆலோசனை கம்பனி | 508 |
| | 4.76 | லங்கா நிலக்கரி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | 514 |
| | 4.77 | கொலதெனிய ஹைட்ரோபவர் (பிரைவேட்) லிமிடெட் | 525 |
| | 4.78 | ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் | 526 |
| | 4.79 | ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (பிரைவேட்) லிமிடெட் | 534 |
| | 4.80 | கும்பல்கமுவ மினிஹைட்ரோ பவர் (பிரைவேட்) லிமிடெட் | 539 |
| | 4.81 | தாதுருஓய ஹைட்ரோ பவர் (பிரைவேட்) லிமிடெட் | 545 |
| | 4.82 | என்டெ லெகோ மீற்றரிங் கம்பனி(பிரைவேட்) லிமிடெட் | 549 |
| | 4.83 | லங்கா இலெக்ட்ரிசிட்டி (பிரைவேட்) லிமிடெட் | 553 |
| | 4.84 | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் | 577 |
| | 4.85 | திருகோணமலை பவர் கம்பெனி லிமிடெட் | 582 |

| | | | |
|---|---|---|---|
| | 4.86 | லெகோ ப்ராஜெக்ட் (பிரைவேட்) லிமிடெட் | 587 |
| | 4.87 | மகநகும எமல்சன் உற்பத்தி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | 590 |
| | 4.88 | மகநகும கன்சல்டன்சி என்ட் ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | 599 |
| | 4.89 | மகநகும வீதி நிர்மாண உபகரணங்கள் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | 604 |
| | 4.90 | யூத் சர்வீசஸ் லிமிடெட் | 610 |
| | 4.91 | கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடெட் | 617 |
| | 4.92 | லங்கா சதொச லிமிடெட் | 621 |
| | 4.93 | இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபன லிமிடெட் | 635 |
| | 4.94 | நெஷனல் வெல்த் கார்ப்பரேஷன் லிமிடெட் | 639 |
| | 4.95 | நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் | 641 |
| | 4.96 | லங்கா ஹாஸ்பிடல்ஸ் கார்ப்பரேஷன் பிஎல்சி | 646 |
| | 4.97 | லங்கா ஹாஸ்பிடல் டயக்னோசிஸ் (பிரைவேட்) லிமிடெட் | 650 |
| | 4.98 | ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி (ஹில்டன் ஹோட்டல்) | 653 |
| | 4.99 | கொழும்பு பைனான்சியல் சிடி பவுன்டிங் கரன்டி லிமிடெட் | 656 |
| | 4.100 | திறன் அபிவிருத்தி நிதிய லிமிடெட் | 661 |
| | 4.101 | ஸ்ரீலங்கா திரிபோஷா லிமிடெட் | 662 |
| | 4.102 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் | 664 |
| | 4.103 | நெஷனல் ஸ்கூல் ஆ∴ப் பிசினஸ் மேனேஜ்மென்ட் லிமிடெட் | 669 |

# 1. நிறேவேற்றுப் பொழிப்பு

அரசுக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனிகள், இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொது நிறுவனங்களாக நிறுவப்பட்டுள்ளதுடன் இந்த நிறுவனங்கள் முழுமையாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்களாகவோ அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான பங்கு மூலதனத்தின் குறிப்பிட்ட சதவீதத்துடன் பொது-தனியார் கூட்டு முயற்சிகளாக செயற்படுகின்றன. தனியார் துறையின் தலையீடு, முழுமையாக அரசுடைமை கொண்ட நிறுவனங்களுக்கு எழுகின்ற பல சிக்கல்களைத் தடுக்கும் ஒரு கட்டுப்பாட்டு பொறிமுறையாக செயல்படுகின்றது. திறைசேரியின் தலையீடு இல்லாமல் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பின்னர் தொடர்புடைய தனியார் நிறுவனங்களிலிருந்து மூலதனத்தை பெற்று முதலீடு செய்து அவற்றின் துணைக் கம்பனிகளாக செயற்படுகின்ற அரசுக்கு சொந்தமான கம்பனிகளும் உள்ளன.
அரசு அல்லது அரசுக்கு சொந்தமான நிறுவனமொன்று 100 சதவீத பங்குகளை வைத்திருக்கின்ற வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனிகளின் இயக்குநர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு முழுமையான அதிகாரம் உள்ளதுடன் அவற்றின் இலாபத்தில் எந்த ஒரு தனி நபரும் பங்கு பெற முடியாது. உண்மையில், இது ஒரு அரசுக்கு சொந்தமான நிறுவனத்தை பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் ஒரு எளிய ”தனியார் துறை” கம்பனியாக மாற்றுவதற்கு சமமானதாகும். 50 சதவீதத்துக்கும் குறைவான பங்குகளை விற்கும்போது கம்பனியின் இயக்குநர்களை நியமிக்கவும் அரசுக்கு அதிகாரம் உள்ளது. 50 சதவீதத்துக்கும் அதிகமான பங்குகளை விற்பனை செய்துள்ள வேளையிலும், கம்பனியின் கூட்டிணைப்புக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தும் அளவுக்கு அரசு வலுவான நிலையில் உள்ளது. எவ்வாறாயினும், துணை கம்பனிகளின் இயக்குநர்கள் குழுவில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தாய்க் கம்பனியின் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்த போதிலும், பல பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் துணை நிறுவனங்களின் மீது அவற்றின் ஆளுகை அதிகாரத்தை பிரயோகிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

பொதுத்துறை தொழில் முயற்சிகளின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக பொது முயற்சிகள் திணைக்களம் அவ்வப்போது பிஈடி சுற்றறிக்கைகளை வெளியிட்டுள்ளது. பொதுத் தொழில் முயற்சிகள் அவற்றின் சில தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக நிதி அமைச்சின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய ஒப்புதலைப் பெறாமல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 06 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி வரைவு ஆண்டு அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசயி கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் படி, அரசு அல்லது பொதுத்துறை நிறுவனமொன்று ஐம்பது சதவிகிதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்ற ஒரு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் கிடைத்ததன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அத்தகைய நிறுவனத்தின் தலைவருக்கு குறித்த கம்பனியின் வருடாந்த அறிக்கையில் வெளியிடுவதற்காக ஒரு அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

**நிதிசார் செயலாற்றல்**

கிடைத்த தகவல்களின்படி அரச கம்பனிகளின் செயற்பாட்டு விளைவுகளை ஆய்வு செய்ததில், பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இயங்குகின்ற பல கம்பனிகள் நட்டத்தில் இயங்குவதை அவதானிக்க முடிந்தது. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக பெறப்பட்ட தகவல்களின்படி 123 கம்பனிகளின் இலாப நட்ட நிலையின் பகுப்பாய்வு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| **கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை** | 123 | 123 | 123 |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்த நிதிக் கூற்றுக்கள்** | 99 | 94 | 79 |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கப்பெறாத நிதிக் கூற்றுக்கள்** | 24 | 29 | 44 |
| **மொத்த தேறிய இலாபம் (ரூபா)** | 58,193,225,299 | 69,378,042,263 | 44,077,356,416 |
| **மொத்த் தேறிய நட்டம் (ரூபா)** | 53,914,318,305 | 61,920,797,632 | 52,873,985,274 |
| **இலாபத்தில் இயங்கிய கம்பனிகளின் எண்ணிக்கை** | 59 | 59 | 46 |
| **நட்டத்தில் இயங்கிய கம்பனிகளின் எண்ணிக்கை** | 37 | 32 | 31 |

மேற்கூறித்த தகவல்களின்படி, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்த கம்பனிகளின் மொத்த தேறிய நட்டம் ரூ. 53 பில்லியன், ரூ. 61 பில்லியன், ரூ. 52 பில்லியன் ஆனதுடன் மொத்த தேறிய இலாபம் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூ. 58 பில்லியன், ரூ. 69 பில்லியன், ரூ. 44 பில்லியன் ஆகும். அதன்படி, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்காக தகவல்களைச் சமர்ப்பித்திருந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், லங்கா சதொச லிமிடெட், சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட், இன்டிபென்டன்ட் டெலிவிஷன் நெட்வோர்க் லிமிடெட், சினோலங்கா ஹோட்டல் என்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடெட் என்பன உள்ளிட்ட முறையே 13, 15, மற்றும் 10 கம்பனிகள் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ரூ. 100 மில்லியனுக்கும் அதிகமான பற்றாக்குறையைக் காண்பித்திருந்தன.

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்த முறையே 99, 94 மற்றும் 79 கம்பனிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட மொத்த சொத்துக்கள் முறையே ரூ. 1,028 பில்லியன், ரூ. 1,164 பில்லியன் மற்றும் ரூ. 1,111 பில்லியன் ஆக இருந்தது.

**நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்**

அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் குறித்த ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள ஆண்டுதோறும் நிதிக்கூற்றுக்கள் என்ற வடிவில் தயாரிக்கின்றன. இந்த நிதிக்கூற்றுக்கள் குறித்த நிறுவனங்களின் விவகாரங்கள் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபளிக்கின்றனவா என்பது குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பாராளுமன்றத்திற்கு சுயாதீனமான உத்தரவாதத்தை வழங்குகின்றார். இந்த உத்தரவாதம் நிதிக்கூற்றுக்கள் மீது ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் வடிவத்தில் வழங்கப்படுகின்றது. கம்பனிகளின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று ஆகியன நியாயமான நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றனவா என்றும், நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவினை இந்த அபிப்பிராயம் எளிமையாக குறிப்பிடுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் பொருட்படுத்தக்கூடிய தவறுகள் அல்லது இணக்கமின்மை மற்றும் நோக்கெல்லை வரையறைகளும் கணக்காய்வின் போது முகாமைத்துவத்திற்கும் கணக்காய்வாளருக்கும் இடையே எழுகின்ற இனக்கமிண்மைகளைக் கருத்திற்கொண்ட பின்னர் நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன

**முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படாதவிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (தவிர்த்த அபிப்பிராயம்)**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படுமிடத்தும் அவை நிறுவனத்தின் நிதி விளைவினை திரிவுபடுத்தப்படுமளவிற்கு தாக்கம் செலுத்தாதிருப்பின் வழங்கப்படுகின்றது.

**பாதகமான அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு முடியாதவாறு நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருப்பின் இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

**மறுப்பு அபிப்பிராயம்**

தெரிவிசெய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், அவை கையாளப்பட்ட முறை அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் இடையே பொருண்மையான / புருடத்துவ இனக்கமின்மை மற்றும் தவறான கூற்றுக்கள் காணப்படுமிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கையில் அது மிகவும் நியாயமானதாக காணப்படுவதற்காக கணக்காய்வின் போது பயன்படுத்த முடியுமான

கணனிமுறைக் கணக்காய்வு மென்பொருளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கணக்குகளை பரிசோதித்து பெற்றுக்கொள்ளடுகின்ற மாதிரிகளின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த பொருண்மையான விடயங்களின் சதவீதமாக திருத்தப்படாதுள்ள தவறான கூற்றுக்களின் கூட்டுத்தொகை சீராக்கப்பட்டு அதன் விளைவின் அடிப்படையிலும் கணக்காய்வு அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுகின்றது.

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்காக 123 அரசாங்க கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| முனைப்பழியற்ற | 43 | 38 | 36 |
| முனைப்பழியுள்ள | 43 | 45 | 36 |
| மறுப்பு | 11 | 9 | 2 |
| பாதகமான | 1 | 1 | 0 |
| இதுவரை அபிப்பிராயம் தீர்மானிக்கப்படாதவை | 1 | 1 | 5 |
| நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாதவை | 24 | 29 | 44 |

## 2. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்த கம்பனிகளின் விபரங்கள்

பின்வரும் கம்பனிகள் 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

| | கம்பனியின் பெயர் |
|---|---|
| **1.** | மிஹின் லங்கா லிமிடெட் |
| **2.** | ஜனதா உர லிமிடெட் |
| **3.** | நிர்மாணப் பொருட்கள் கூட்டுத்தாபனம் |
| **4.** | இலங்கை ஊடகப் பயிற்சி கம்பனி லிமிடெட் |
| **5.** | செலண்டிவா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் |
| **6.** | நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடெட் |
| **7.** | ரக்னா அரக்ஷன லங்கா லிமிடெட் |
| **8.** | ஹெலிடுவர்ஸ் (பிரைவட்) லிமிடட் |
| **9.** | மில்கோ (பிரைவேட்) லிமிடெட் |
| **10.** | மஹாவலி லைவ்ஸ்டாக் எண்டர்பிரைசஸ் லிமிடெட் |
| **11.** | பேலியகொட களஞ்சிய வளாக கம்பனி லிமிடெட் |
| **12.** | லங்கா சிமெண்ட் கம்பனி |
| **13.** | இலங்கை பயோடெக்னாலஜி நிறுவனம் - புதியது |
| **14.** | லங்கா ஜெமலாஜிகல் லேபரட்டரி (பிரைவேட்) லிமிடெட் |
| **15.** | இலங்கை ரப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபன லிமிடெட் |
| **16.** | ஹிங்குரான சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் |
| **17.** | லங்கா எரிவாயு நிறுவனம் |
| **18.** | எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் |
| **19.** | எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போர்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் |

| | |
|---|---|
| **20.** | கிரிக்கெட் எய்ட் கெரண்டி லிமிடெட் |
| **21.** | யூத் சர்வீசஸ் லிமிடெட் |
| **22.** | லங்கா சலுசல லிமிடெட் |
| **23.** | சீடபிள்யூஈ - நிர்மாண மற்றும் பொறியியல் கம்பனி |
| **24.** | சதொச செக்யூரிட்டி என்ட் ஜெனரல் (பிரைவேட்) லிமிடெட் |

பின்வரும் கம்பனிகள் 2019 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

| | கம்பனியின் பெயர் |
|---|---|
| **1.** | மிஹின் லங்கா லிமிடெட் |
| **2.** | ஜனதா உர லிமிடெட் |
| **3.** | நிர்மாணப் பொருட்கள் கூட்டுத்ததானம் |
| **4.** | இலங்கை ஊடகப் பயிற்சி கம்பனி லிமிடெட் |
| **5.** | செலண்டிவா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் |
| **6.** | நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடெட் |
| **7.** | ரக்னா அரக்ஷன லங்கா லிமிடெட் |
| **8.** | ஹெலிடுவர்ஸ் (பிரைவட்) லிமிடட் |
| **9.** | மில்கோ (பிரைவேட்) லிமிடெட். |
| **10.** | ஸ்ரீ லங்கா கால்நடைகள் அபிவிருத்தி கம்பனி (பிரைவட்) லிமிடட் |
| **11.** | மஹாவலி லைவ்ஸ்டாக் எண்டர்பிரைசஸ் லிமிடெட் |
| **12.** | பேலியகொட களஞ்சிய வளாக கம்பனி லிமிடெட் |
| **13.** | லங்கா சிமெண்ட் நிறுவனம் |
| **14.** | இலங்கை பயோடெக்னாலஜி நிறுவனம் - புதியது |
| **15.** | மஹாவலி வென்ச்சர் கேபிடல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட். |

| | |
|---|---|
| **16.** | லங்கா ஜெமலாஜிகல் லேபரட்டரி (பிரைவேட்) லிமிடெட் |
| **17.** | இலங்கை ரப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபன லிமிடெட் |
| **18.** | கந்தளாய் சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் |
| **19.** | ஹிங்குரான சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். |
| **20.** | லங்கா எரிவாயு நிறுவனம் |
| **21.** | எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் |
| **22.** | எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போர்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் |
| **23.** | மகநெகும எமல்சன் உற்பத்தி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் |
| **24.** | கிரிக்கெட் எய்ட் கிரண்டி லிமிடெட் |
| **25.** | யூத் சர்வீசஸ் லிமிடெட் |
| **26.** | லங்கா சலுசல லிமிடெட் |
| **27.** | கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடட் |
| **28.** | சீடபிள்யூஈ - நிர்மாண மற்றும் பொறியியல் கம்பனி |
| **29.** | சதொச செக்யூரிட்டி என்ட் ஜெனரல் (பிரைவேட்) லிமிடெட் |

பின்வரும் கம்பனிகள் 2020 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

| | **கம்பனியின் பெயர்** |
|---|---|
| 1. | மிஹின் லங்கா லிமிடெட் |
| 2. | ஜனதா உர லிமிடெட் |
| 3. | ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிடெட் |
| 4. | பீப்பிள்ஸ் டிராவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் |
| 5. | நிர்மாணப் பொருட்கள் கூட்டுத்தாபனம் |

| | |
|---|---|
| 6. | இலங்கை ஊடகப் பயிற்சி கம்பனி லிமிடெட் |
| 7. | நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடெட் |
| 8. | இலங்கை CERT (பிரைவேட்) லிமிடெட் |
| 9. | லங்கா அரசாங்க தகவல் உட்கட்டமைப்பு (பிரைவேட்) லிமிடெட் |
| 10. | இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் |
| 11. | ரக்னா அரக்ஷன லங்கா லிமிடெட் |
| 12. | ஹெலிடுவர்ஸ் (பிரைவட்) லிமிடட் |
| 13. | மில்கோ (பிரைவேட்) லிமிடெட். |
| 14. | இலங்கை கால்நடைகள் அபிவிருத்தி கம்பனி (பிரைவட்) லிமிடட் |
| 15. | மஹாவலி லைவ்ஸ்டாக் எண்டர்பிரைசஸ் லிமிடெட் |
| 16. | லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் |
| 17. | பேலியகொட களஞ்சிய வளாக நிறுவனம் லிமிடெட் |
| 18. | லங்கா சிமெண்ட் கம்பனி |
| 19. | இலங்கை பயோடெக்னாலஜி நிறுவனம் - புதியது |
| 20. | லிட்ரோ எரிவாயு |
| 21. | லிட்ரோ கேஸ் டெர்மினல் |
| 22. | மஹாவலி வென்ச்சர் கேபிடல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட். |
| 23. | மகாவலி இயற்கை வள முகாமைத்துவ (பிரைவேட்) லிமிடெட். |
| 24. | லங்கா ஜெமலாஜிகல் லேபரட்டரி (பிரைவேட்) லிமிடெட் |
| 25. | தொலைதூரக் கல்வி மையம் |
| 26. | எல்கடுவ பிளான்டேஷன்ஸ் லிமிடெட் |
| 27. | இலங்கை ரப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபன லிமிடெட் |

| | |
|---|---|
| 28. | லங்கா சுகர் கம்பனி (பிரைவட்) லிமிடெட். |
| 29. | கந்தளாய் சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் |
| 30. | ஹிங்குரான சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். |
| 31. | லங்கா எரிவாயு நிறுவனம் |
| 32. | நார்த்சீ லிமிடெட் |
| 33. | எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் |
| 34. | மகநெகும வீதி நிர்மாண உபகரண கம்பனி (பிரைவட்) லிமிடட் |
| 35. | எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போர்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் |
| 36. | மகநெகும வீதி எமல்சன் உற்பத்தி கம்பனி (பிரைவட்) லிமிடட் |
| 37. | கிரிக்கெட் எய்ட் கெரண்டி லிமிடெட் |
| 38. | யூத் சர்வீசஸ் லிமிடெட் |
| 39. | லங்கா சலுசல லிமிடெட் |
| 40. | கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடட் |
| 41. | சீடபிள்யூஈ - நிர்மாண மற்றும் பொறியியல் கம்பனி |
| 42. | சதொச செக்யூரிட்டி என்ட் ஜெனரல் (பிரைவேட்) லிமிடெட் |
| 43. | லங்கா சதொச லிமிடெட் |
| 44. | கொழும்பு பைனான்சியல் சிடி பவுன்டிங் கெரண்டி லிமிடட் |

## 3. ஒட்டுமொத்த புள்ளிவிபரங்கள்

| | | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|
| **கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை** | | 123 | 123 | 123 |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்த நிதிக் கூற்றுக்கள்** | | 99 | 94 | 79 |
| | | | | |
| **மொத்த வருவாய் (ரூ.)** | | 585,802,232,563 | 603,364,659,173 | 354,132,969,573 |
| **மொத்த செலவு (ரூ.)** | | 585,716,229,666 | 598,067,624,347 | 366,220,691,166 |
| **மொத்த சொத்துக்கள் (ரூ.)** | | 1,028,703,093,452 | 1,164,763,247,558 | 1,111,345,868,339 |
| **மொத்த பொறுப்புகள் (ரூ.)** | | 832,888,695,991 | 1,047,019,894,607 | 1,006,051,740,946 |
| **மொத்த இலாபம் (ரூ.)** | | 58,193,225,299 | 69,378,042,263 | 44,077,356,416 |
| **மொத்த நட்டம் (ரூ.)** | | 53,914,318,305 | 61,920,797,632 | 52,873,985,274 |
| | | | | |
| **இலாபம் ஈட்டிய கம்பனிகளின் எண்ணிக்கை** | | 59 | 59 | 46 |
| **நட்டம் ஈட்டிய கம்பனிகளின் எண்ணிக்கை** | | 37 | 32 | 31 |
| | | | | |
| **அபிப்பிராயம்** | முனைப்பழியற்ற | 43 | 36 | 36 |
| | முனைப்பழியுள்ள | 43 | 36 | 35 |
| | மறுப்பு | 11 | 2 | 2 |
| | பாதகம் | 1 | 0 | 0 |
| | இதுவரை அபிப்பிராயம் தீர்மானிக்கப்படாதவை | 1 | 5 | 5 |
| | | | | |
| **கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்காதவை** | | 24 | 29 | 44 |
| | | | | |

**அதிக இலாபம் ஈட்டிய முதல் 10 கம்பனிகள்**

| ஆண்டு | | கம்பனியின் பெயர் | வரிக்கு முந்திய இலாபம் ரூபா |
|---|---|---|---|
| 2018 | 1. | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் | 12,103,450,641 |
| | 2. | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவட்) லிமிடட் | 10,458,408,140 |
| | 3. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ∴பைனான்ஸ் பிஎல்சி | 8,672,467,000 |
| | 4. | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 7,150,600,000 |
| | 5. | இலங்கை கேட்டரிங் லிமிடெட் | 5,675,913,393 |
| | 6. | லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | 3,217,302,000 |
| | 7. | லிட்ரோ கேஸ் டெர்மினல் | 2,026,051,819 |
| | 8. | சிலோன் பெற்றோலியம் களஞ்சிய டெர்மினல்ஸ் லிமிடெட் | 1,522,230,109 |
| | 9. | லங்கா ஹொஸ்பிடல்ஸ் கார்ப்பரேஷன் பிஎல்சி | 1,056,061,640 |
| | 10 | பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | 847,015,921 |
| | | | |
| 2019 | 1. | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவட்) லிமிடட் | 15,221,993,419 |
| | 2. | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் | 11,563,043,364 |
| | 3. | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 8,205,007,000 |
| | 4. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ∴பைனான்ஸ் பிஎல்சி | 6,554,285,000 |
| | 5. | லிட்ரோ எரிவாயு | 4,927,261,736 |
| | 6. | இலங்கை கேட்டரிங் லிமிடெட் | 4,799,690,965 |
| | 7. | லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | 3,927,792,158 |
| | 8. | சிலோன் பெற்றோலியம் களஞ்சிய டெர்மினல்ஸ் லிமிடெட் | 2,927,856,033 |
| | 9. | லங்கா மினரல் சாண்ட்ஸ் லிமிடெட் | 2,277,746,050 |
| | 10. | லிட்ரோ கேஸ் டெர்மினல் | 2,016,745,364 |
| | | | |
| 2020 | 1. | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் | 15,574,865,318 |
| | 2. | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 7,971,782,000 |
| | 3. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ∴பைனான்ஸ் பிஎல்சி | 7,095,216,000 |
| | 4. | லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | 2,308,992,614 |
| | 5. | சிலோன் பெற்றோலியம் களஞ்சிய டெர்மினல்ஸ் லிமிடெட் | 2,138,236,881 |
| | 6. | பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | 1,667,521,268 |
| | 7. | NSB நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட் | 901,087,467 |
| | 8. | கல்லோயா பிளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிடெட். | 749,367,009 |
| | 9. | நெஷனல் ஸ்கூல் ஆ∴ப் பிசினஸ் மேனேஜ்மென்ட் லிமிடெட் | 584,750,798 |
| | 10. | ஆதன அபிவிருத்தி பிஎல்சி | 518,284,059 |

**அதிக நட்டம் ஈட்டிய முதல் 10 கம்பனிகள்**

| ஆண்டு | | கம்பனியின் பெயர் | வரிக்கு முந்திய நட்டம் ரூபா |
|---|---|---|---|
| 2018 | 1. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | 44,022,670,000 |
| | 2. | லங்கா சதொச லிமிடெட் | 2,888,463,272 |
| | 3. | குல்லோயா பிளான்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | 1,814,145,920 |
| | 4. | சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் 'லிமிடெட் | 1,523,141,091 |
| | 5. | மாகம்புரா போர்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | 801,559,524 |
| | 6. | ஐ.டி.என் | 622,461,949 |
| | 7. | லங்கா லேலண்ட் (பிரைவேட்) லிமிடெட் | 502,041,856 |
| | 8. | நெஷனல் ஸ்கூல் ஆ∴ப் பிசினஸ் மேனேஜ்மென்ட் லிமிடெட் | 341,526,610 |
| | 9. | நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் | 243,412,073 |
| | 10 | சினோலங்கா ஹோட்டல் என்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிடெட் | 202,725,525 |
| | | | |
| 2019 | 1. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | 47,197,860,000 |
| | 2. | சினோலங்கா ஹோட்டல் என்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிடெட் | 5,133,182,782 |
| | 3. | லங்கா சதொச லிமிடெட் | 3,158,544,037 |
| | 4. | கல்லோயா பிளான்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | 1,430,139,698 |
| | 5. | லங்கா சுகர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட். | 1,312,212,893 |
| | 6. | சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் | 1,085,215,556 |
| | 7. | ஐ.டி.என் | 597,468,619 |
| | 8. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் | 365,514,611 |
| | 9. | லங்கா சால்ட் லிமிடெட் | 349,200,431 |
| | 10. | ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி (ஹில்டன் ஹோட்டல்) | 312,448,000 |
| | | | |
| 2020 | 1. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | 45,231,460,000 |
| | 2. | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் | 3,732,754,673 |
| | 3. | இலங்கை கேட்டரிங் லிமிடெட் | 960,462,499 |
| | 4. | ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி (ஹில்டன் ஹோட்டல்) | 877,343,000 |
| | 5. | சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் | 527,125,027 |
| | 6. | ஐ.டி.என் | 249,681,673 |
| | 7. | மகம்புரா போர்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | 246,874,417 |
| | 8. | அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆ∴ப் சிலோன் லிமிடெட் | 217,840,000 |
| | 9. | சினோலங்கா ஹோட்டல் என்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிடெட் | 193,289,884 |
| | 10. | இலங்கை நெனோ டெக்னொலொஜி (பிரைவேட்) லிமிடெட் | 100,148,607 |

## அதிக எதிர்மறை சொத்துப் பெறுமதி கொண்ட முதல் 10 கம்பனிகள்

| ஆண்டு | | கம்பனியின் பெயர் | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| **2018** | 1. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | -177,556,230,000 |
| | 2. | லங்கா சதொச லிமிடெட் | -13,848,877,057 |
| | 3. | கல்லோயா பிளான்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | -6,234,978,110 |
| | 4. | மகம்புரா போர்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | -2,795,997,871 |
| | 5. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் | -1,525,628,005 |
| | 6. | சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் | -55,663,307 |
| | 7. | லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் | -27,634,268 |
| | 8. | முகாமைத்துவ சேவைகள் ரக்ஷன பிரைவேட் லிமிடெட் | -20,500,567 |
| | 9. | SLINTEC அகாடமி | -10,819,070 |
| | 10 | லெகோ ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | -1,150,056 |
| | | | |
| **2019** | 1. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | -273,369,080,000 |
| | 2. | லங்கா சதொச லிமிடெட் | -16,431,930,926 |
| | 3. | கல்லோயா பிளான்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | -7,521,543,412 |
| | 4. | மகம்புரா போர்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | -2,924,501,623 |
| | 5. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் | -1,887,834,007 |
| | 6. | சிலோன் ஷிப்பிங் கார்ப்ரேஷன் லிமிடெட் | -1,275,502,116 |
| | 7. | நார்த்சீ லிமிடெட் | -104,461,439 |
| | 8. | முகாமைத்துவ சேவைகள் ரக்ஷன பிரைவேட் லிமிடெட் | -54,371,621 |
| | 9. | லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் | -19,018,389 |
| | 10. | SLINTEC அகாடமி | -8,944,970 |
| | | | |
| **2020** | 1. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | -289,265,270,000 |
| | 2. | கல்லோயா பிளான்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | -6,817,654,771 |
| | 3. | மகம்புரா போர்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | -3,171,376,039 |
| | 4. | சிலோன் ஷிப்பிங் கார்ப்ரேஷன் லிமிடெட் | -2,041,613,494 |
| | 5. | முகாமைத்துவ சேவைகள் ரக்ஷனா பிரைவேட் லிமிடெட் | -88,727,179 |
| | 6. | சீபேங் ஹொலிடே ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | -38,416,101 |
| | 7. | காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனி | -28,855,233 |
| | 8. | SLINTEC அகாடமி | -8,314,523 |
| | 9. | லெகோ ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | -632,704 |
| | 10. | செலண்டிவா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் | -423,315 |

## கணக்காய்வு அபிப்பிராயம்

| | கம்பனியின் பெயர் | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|
| 1. | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 2. | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 3. | இலங்கை கேட்டரிங் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 4. | மிஹின் லங்கா லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| 5. | கொழும்பு கொமர்ஷல் உர லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | தீர்மானிக்கப் படவில்லை |
| 6. | சிலோன் பெர்டிலைசர் கம்பெனி லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | தீர்மானிக்கப் படவில்லை |
| 7. | ஜனதா உர லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| 8. | NSB நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 9. | சீபேங் ஹொலிடே ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 10. | BOC டிராவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 11. | ஆதன அபிவிருத்தி பிஎல்சி | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 12. | BOC ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 13. | BOC முகாமைத்துவ மற்றும் ஆதரவு சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 14. | ஹோட்டல்ஸ் கொழும்பு (1963) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| 15. | பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |

| | | | | |
|---|---|---|---|---|
| **16.** | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ∴பைனான்ஸ் பிஎல்சி | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **17.** | பீப்பிள்ஸ் லீசிங் ∴ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **18.** | பீப்பிள்ஸ் லீசிங் ஹேவ்லாக் பிராப்பர்டீஸ் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **19.** | பீப்பிள்ஸ் லீசிங் பிராப்பர்ட்டி டெவலப்மெண்ட் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **20.** | பீப்பிள்ஸ் மைக்ரோ-காமர்ஸ் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **21.** | பீப்பிள்ஸ் டிராவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **22.** | நிர்மாணப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **23.** | சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **24.** | இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவன லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **25.** | ஐ.டி.என் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **26.** | லேக் ஹவுஸ் பிராப்பர்ட்டி டெவலப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **27.** | செலண்டிவா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | முனைப்பழியற்ற |
| **28.** | அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆ∴ப் சிலோன் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **29.** | நேஷனல் பேப்பர் கம்பெனி லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **30.** | ஸ்ரீ லங்கா CERT (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **31.** | லங்கா அரசு தகவல் உட்கட்டமைப்பு (பிரைவேட்) லிமிடெட் | மறுப்பு | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| **32.** | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் | மறுப்பு | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **33.** | லக்திவா பொறியியல் கம்பனி | மறுப்பு | மறுப்பு | முனைப்பழியுள்ள |
| **34.** | லங்கா லேலண்ட் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| **35.** | ரக்னா அரக்ஷன லங்கா லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **36.** | அகாடமி ஆ.்.ப் ஃபைனான்சியல் ஸ்டடீஸ் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற |
| **37.** | ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **38.** | சிலோன் பெற்றோலியம் களஞ்சிய டெர்மினல்ஸ் லிமிடெட் | மறுப்பு | மறுப்பு | முனைப்பழியுள்ள |
| **39.** | சீ-நோர் பவுன்டேசன் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **40.** | மில்கோ (பிரைவேட்) லிமிடெட். | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **41.** | இலங்கை கால்நடைகள் அபிவிருத்தி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **42.** | மஹாவலி லைவ்ஸ்டாக் எண்டர்பிரைசஸ் லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **43.** | ஓஷன் வியூ டெவலப்மெண்ட் நிறுவனம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **44.** | நகர்ப்புற முதலீட்டு மற்றும் மேம்பாட்டு கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | மறுப்பு |
| **45.** | லங்கா ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் | மறுப்பு | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **46.** | வாட்டர்ஸ் எட்ஜ் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **47.** | பேலியகொட களஞ்சிய வளாக கம்பனி லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| **48.** | காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **49.** | எல்ஆர்டி சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **50.** | லங்கா மினரல் சாண்ட்ஸ் லிமிடெட் | மறுப்பு | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **51.** | லங்கா பொசுபேட் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **52.** | பரந்தன் கெமிக்கல்ஸ் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **53.** | BCC லங்கா லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **54.** | லங்கா சிமெண்ட் கம்பனி | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **55.** | SLINTEC அகாடமி | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **56.** | இலங்கை நெனோ டெக்னொலொஜி நிறுவன (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **57.** | இலங்கை பயோடெக்னாலஜி நிறுவனம் - புதியது | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **58.** | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **59.** | முகாமைத்துவ சேவைகள் ரக்ஷன பிரைவேட் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **60.** | கொன்வின் ஹொட்டேல் என்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **61.** | கொன்வின் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **62.** | சினோலங்கா ஹோட்டல் என்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **63.** | ஹெலன்கோ ஹொட்டேல் என்ட் ஸ்பா (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **64.** | லிட்ரோ எரிவாயு | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| **65.** | லிட்ரோ கேஸ் டெர்மினல் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **66.** | மஹாவலி வென்ச்சர் கேபிடல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட். | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **67.** | மஹாவலி கன்சல்டன்சி பீரோ (பிரைவேட்) லிமிடெட். | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **68.** | மஹாவலி லைவ் ஸ்டாக் அன்ட் அக்ரோ என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட். | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **69.** | மகாவலி இயற்கை வள முகாமைத்துவ (பிரைவேட்) லிமிடெட். | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **70.** | லங்கா ஜெமலாஜிகல் லேபரட்டரி (பிரைவேட்) லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **71.** | GSMB டெக்னிக்கல் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **72.** | லங்கா சால்ட் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **73.** | தொலைதூரக் கல்வி மையம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **74.** | குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **75.** | சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **76.** | எல்கடுவ பிளான்டேஷன்ஸ் லிமிடெட் | பாதகம் | தீர்மானிக்கப் படவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **77.** | களுபோவிடியன தேயிலை தொழிற்சாலை லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **78.** | இலங்கை ரப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபன லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **79.** | லங்கா சுகர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **80.** | கலோயா பிளான்டேஷன்ஸ் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | தீர்மானிக்கப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | (பிரைவேட்) லிமிடெட் | | | படவில்லை |
| **81.** | கந்தளாய் சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **82.** | ஹிங்குரான சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **83.** | ஜெயா கொனடைய்னர் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| **84.** | மகம்புர போர்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | மறுப்பு | மறுப்பு | மறுப்பு |
| **85.** | லங்கா எரிவாயு நிறுவனம் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **86.** | சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் 'லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | தீர்மானிக்கப் படவில்லை |
| **87.** | நார்த்சீ லிமிடெட் | முனைப்பழியுள்ள | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **88.** | மாந்தை சால்ட் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | தீர்மானிக்கப் படவில்லை |
| **89.** | ஸ்ரீலங்கா போர்ட் மேனேஜ்மென்ட் கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **90.** | லங்கா நிலக்கரி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **91.** | ஸ்ரீலங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **92.** | கும்பல்கமுவ மினி ஹைட்ரோ (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **93.** | ஸ்ரீலங்கா எனர்ஜிஸ் எச்ஆர் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **94.** | தாதுருஓயா மினி ஹைட்ரோ (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற |
| **95.** | கொலதெனிய ஹைட்ரோபவர் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |


| | | | | |
|---|---|---|---|---|
| | (பிரைவேட்) லிமிடெட் | | | |
| **96.** | லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| **97.** | என்டெ லெகோ மீற்றரிங் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **98.** | லெகோ ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | தீர்மானிக்கப் படவில்லை | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **99.** | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **100.** | திருகோணமலை பவர் கம்பெனி லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **101.** | எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **102.** | மாக நெகுமா கன்சல்டன்சி என்ட் ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் கம்பனி (பிரைவேட்) லிமிடெட். | முனைப்பழியுள்ள | மறுப்பு | முனைப்பழியுள்ள |
| **103.** | மகநெகும வீதி நிர்மாண உபகரண கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | மறுப்பு | மறுப்பு | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **104.** | எக்ஸ்பிரஸ்வே டிரான்ஸ்போர்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **105.** | மகநெகும எமல்சன் உற்பத்தி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **106.** | கிரிக்கெட் எய்ட் கெரண்டி லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **107.** | யூத் சர்வீசஸ் லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **108.** | லங்கா சலுசல லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **109.** | கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடட் | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| **110.** | CWE – நிர்மாண மற்றும் பொறியியல் நிறுவனம் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **111.** | சதொச செக்யூரிட்டி மற்றும் ஜெனரல் (பிரைவேட்) லிமிடெட் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **112.** | லங்கா சதொச லிமிடெட் | மறுப்பு | பாதகம் | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **113.** | இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **114.** | நேஷனல் வெல்த் கார்ப்பரேஷன் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **115.** | நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| **116.** | லங்கா ஹாஸ்பிடல்ஸ் கார்ப்பரேஷன் பிஎல்சி | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **117.** | லங்கா ஹாஸ்பிடல்ஸ் டயக்னொஸ்ரிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **118.** | ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி (ஹில்டன் ஹோட்டல்) | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| **119.** | கொழும்பு பைனான்சியல் சிடி பவுன்டிங் கெரன்டி லிமிடட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கவில்லை |
| **120.** | திறன் அபிவிருத்தி நிதிய லிமிடெட். | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற |
| **121.** | ஶ்ரீலங்கா திரிபோஷா லிமிடெட் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **122.** | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **123.** | நேஷனல் ஸ்கூல் ஆ.ஃ.ப் பிசினஸ் மேனேஜ்மென்ட் லிமிடெட் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |

## 4. அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு கம்பனியினதும் அவதானிப்புகள்

### 4.1 ஸ்ரீ லங்கா கேடரிங் லிமிடெட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 10,872,057,854 | 5,196,144,461 | 12,589,673,559 | 3,102,947,095 | 5,675,913,393 | முனைப்பழியற்ற |
| **2019** | 9,936,212,101 | 5,136,521,136 | 15,911,843,401 | 3,674,299,060 | 4,799,690,965 | முனைப்பழியற்ற |
| **2020** | 1,286,059,738 | 2,246,522,237 | 9,675,089,145 | 1,858,668,279 | (960,462,499) | முனைப்பழியற்ற |





| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (அ) 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபார பெறவேண்டியவை ரூபா 11,347 மில்லியன் ஆகும். அதில் 94 சதவீதத்திற்குச் சமமான ரூபா 10,686 மில்லியன் தொகை ஸ்ரீலங்கன் | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டிய தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டிய தொகையை வசூலிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கின்றது. | 2021 மார்ச் 31 இல் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கணக்கு நிலுவை ரூபா 6,258 மில்லியன் ஆகும். அந்த நிலுவையில் 99 சதவீதத்திற்கு சமமான ரூபா 6,200 மில்லியன் |

ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டியதாகும்.
மேலும், மேற்கூறிய மீதியில் ரூபா 4,980 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்படாமல் உள்ளது. 2020 மார்ச் 31 இல் உளள்வாறு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய மீதியானது, கம்பனியின் மொத்த சொத்துக்களில் 67 சதவீ தத்தை பிரதிநிதித்துவப்ப டுத்தியது. எவ்வாறாயினும், மேற்படி நிலுவைத் தொகை இருந்த போதிலும், கம்பனி ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூபா 1,701 மில்லியன் பங்கிலாபத்தை செலுத்தியு ள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லை ன்ஸ் இடமிருந்து பெற வேண்டியுள்ளது.

## 4.2 எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேவிஸஸ் (ஸ்ரீ லங்கா) (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்தச் சொத்துக்கள் | மொத்தப் பொறுப்புகள் | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 31,873,433,895 | 21,415,025,755 | 100,834,949,387 | 72,355,770,721 | 10,458,408,140 | முனைப்பழி |
| **2019** | 29,880,766,508 | 14,658,773,089 | 108,274,708,980 | 69,044,051,730 | 15,221,993,419 | முனைப்பழி |
| **2020** | 11,453,496,443 | 15,186,251,116 | 103,216,071,222 | 66,233,169,665 | (3,732,754,673) | முனைப்பழி |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 ஏப்ரல் 28 ஆம் திகதிய பிஈ/சீஓஎம்சீ/33/02 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதத்தின் பணிப்புரைக்கு முரணாக அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி கட்டிடங்கள் மற்றும் | சாத்தியமானளவு விரைவாக மீள்மதிப்பீட்டு செயன் முறையை பூர்த்தி செய்வதற்கும் திறை சேரி செயலாளரால் பணிப்புரை வழங்கப் பட்டவாறு | கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள கட்டிடங்களை விலை மதிப்புத் திணைக்களம் ஏற்கனவே மதிப்பீடு செய்துள்ளதுடன் ஏனைய கட்டிடங்களை மதிப்பீடு செய்யுமாறு விலை மதிப்புத் திணைக்கள | ஏனைய கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் மதிப்பீடு செய்யப் பட்டு வருவதுடன் மற்ற சொத்துக்கள் எதுவும் இதுவரை மதிப்பிடப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏனைய அசையக்கூடிய மற்றும் அசையமுடியாத சொத்துக்களை பெறுமதியிட்டு கணக்குகளில் பதிவு செய்யாமலும் தேறிய சொத்து மாற்றத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்காமலும் கம்பனியானது பொறுப்புக்களை மாத்திரமே பொறுப்பேற்றிருந்தது. | தேறிய சொத்துக்கள் மீது இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்குவதற்கும் பரிந்துரை செய்யப்படுகின்றது. | த்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | ல. |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானச் சேவைகள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் விமான நிலையங் களை நிறுவுதல் அல்லது விரிவாக்கம் செய்வதற் கான ஒரு பிரதான திட்டம் கம்பனியால் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | ஒரு பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1983 ஆம் ஆண்டில், நெதர்லாந்து விமான நிலைய ஆலோசகர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான பிரதான திட்டத்தை தயாரித்திருந்த போதிலும் அது புதுப்பிக்கப்பட வில்லை. மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திற்கான பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு, இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையால் அங்கீகரிக்கப் பட்டது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான பிரதான திட்டம் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான பிரதான திட்டத்தை தயாரிப்பதற்கு பொருத்தமான சர்வதேச ஆலோசனை நிறுவனத்தை தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளுக் கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |


| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக மொத்தம் ரூபா 218 மில்லியன் செலவில் யாழ் சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வோ அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டோ மேற்கொள்ளப்படவில்லை. மேலும், யாழ் சர்வதேச விமான நிலையம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் முறையே ரூபா 46.5 மில்லியன் மற்றும் ரூபா 61.1 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை அறிவித்தது. | செயற்திட்டத்தின் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப் படுத்துவதற்காக எந்தவொரு அபிவிருத்திச் செயற்திட்டமும் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வோ அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீடோ மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | வரிசை அமைச்சு மற்றும் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் வழிகாட்டுதலின் கீழ் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்தத் தேவைகள் உருவாக்கப்பட்ட போதிலும் கொடுக்கப்பட்ட குறுகிய காலத்தில் செயல்படுத்த முடியவில்லை. | பலாலி சர்வதேச விமான நிலையம் தற்போது இயங்கவில்லை. |
| (ஈ) | 2012 மார்ச் 28 மற்றும் 2016 மார்ச் 24 ஆகிய திககளில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஐஐ தொகுதி வேலைகளிற்காக 74,397 ஜப்பானிய யென் மில்லியன் நிதியுதவிக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்துடன் கம்பனி இரண்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. நிதி மதிப்பீட்டில் 82 சதவீதம், 2020 மார்ச் 04 அன்று பெரும் தாமதத்துடன் வழங்கப்பட்டது. மேலும், நிதிகளை பயன்படுத்தாமைக்காக 2013 ஏப்ரல் 20 | ஒப்பந்த உடன்படிக்கையின் படி ஆபொதியின் கீழான கட்டுமானத்தை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் காலதாமதத்தைத் தவிர்க்க அவ்வப்போது கட்டுமான முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும். | நிதி மதிப்பில் 81.68% க்கு சமமான ஒப்பந்தத் தொகை, 2020 மார்ச் 04 அன்று வழங்கப்பட்டது.<br>இருப்பினும், கோவிட் 19 தொற்றுநோய் வெடித்ததால், ஒப்பந்தக்காரரின் வெளிநாட்டு ஊழியர்களை அணிதிரட்டுவதில் தாமதம் ஏற்பட்டது, இறுதியாக, 2020 டிசம்பர் 15 அன்று பணிகள் தொடங்கப்பட்டன. மேலும், 2021 பெப்ரவரி 14 நிலவரப்படி திட்டத்தின் முன்னேற்றம் திட்டமிட்ட 0.03% முன்னேற்றத்திற்கு எதிராக 0.06% ஆக இருந்தது. | இந்த திட்டத்தின் உண்மையான முன்னேற்றம் 2021 நவம்பர் 23 நிலவரப்படி திட்டமிடப்பட்ட 4.0% முன்னேற்றத்திற்கு எதிராக 2.3% ஆகும். மேலும், நிதிகளை பயன்படுத்தாமைக்காக 2013 ஏப்ரல் 20 முதல் 2021 அக்டோபர் 20 வரை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்திற்கு கம்பனி ரூபா 341 மில்லியன் தொகை |

முதல் 2021 ஏப்ரல் 20 வரை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்திற்கு கம்பனி ரூபா 328 மில்லியன் தொகையை கடப்பாட்டுக் கட்டணமாக செலுத்தியது. புதிய முனைய கட்டிட த்தின் கூரை வடிவமை ப்பை மாற்றியமையே செயற்திட்டத்தில் தாமதம் ஏற்பட்டமைக்கு காரணமாகும்.

யை கடப்பாட்டுக் கட்டணமாக செலுத்தியது.

## 4.3 ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 184,652,780,000 | 228,675,450,000 | 77,339,000,000 | 254,895,230,000 | (44,022,670,000) | முனைப்பபழியற்ற |
| **2019** | 183,514,430,000 | 230,712,290,000 | 181,189,600,000 | 454,558,680,000 | (47,197,860,000) | முனைப்பபழியற்ற |
| **2020** | 71,847,360,000 | 117,078,820,000 | 154,381,410,000 | 443,646,680,000 | (45,231,460,000) | முனைப்பபழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா 47,197.86 மில்லியன் தேறிய நட்டத்துடன் கம்பனி ரூபா 326,341.48 மில்லியன் திரட்டிய தேறிய நட்டத்தை அடைந்துள்ளது, மேலும் அந்த தேதியின் படி, கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை விட ரூபா | கபனியின் நட்டத் தைக் குறைப்பத ற்கும் அதற்கேற்ப செயல்படுவதற்கும் முறையான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 யூன் 17 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) ஆதரவை உறுதிப்படுத்தி 2020 யூன் 29 அன்று திறைசேரி | 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா 45,231.46 மில்லியன் தேறிய நட்டத்துடன் கம்பனி ரூபா 371,733.52 மில்லியன் திரட்டிய தேறிய நட்டத்தை அடைந்துள்ளது, மேலும் அந்த |

211,645.13 மில்லியன் அதிகமாகவும் மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை விட ரூபா 273,369.08 மில்லியனைத் தாண்டியும் காணப்பட்டது. மேலும், 2020 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் ரூபா 44,139.40 மில்லியன் தேறிய நட்டத்துடன் ரூபா 316,477.65 மில்லியன் திரட்டிய நட்டத்தை குழுமம் அடைந்துள்ளதுடன் அந்த திகதியில் உள்ளவாறு குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புகள் அதன் நடைமுறைச் சொத்துக் களைக் காட்டிலும் ரூபா 200,878.32 மில்லியனை தாண்டியுள்ளது. மேலும், மொத்த பொறுப்புகள் அதன் மொத்த சொத்துக்களை விட ரூபா 261,173.54 மில்லியனை தாண்டியுள்ளது. 2020 இன் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்த நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள், குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களுடன், குழு மத்தின்/கம்பனியின் தொடர்ந்து இயங்கும் ஆற்றலில் குறிப்பிடத் தக்க ஐயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையைக் குறிக்கின்றது.

நாட்டில் கோவிட்-19 பரவியதைத் தொடர்ந்து,

செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்துடன் இணைந்த வகையில், 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற் கான நியதிச்சட்ட கணக் காய்வு நோக்கத்திற்காக கம்பனி தனது செயற்பாடுகளை ”தொடரும் என்ற எண்ணக்கரு” இற்கு அமைய இந்த நிதிக் கூற்றுக்கள் தொர்ந்திய ங்கும் எண்ணக்கருவை பிரயோகித்து தயாரிக்கப் பட்டுள்ளன.

தேதியின் படி, கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை விட ரூபா 221,308.99 மில்லியன் அதிகமாகவும் மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை விட ரூபா 289,265.27 மில்லியனைத் தாண்டியும் காணப்பட்டது. மேலும், 2021 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் குழுமம் ரூபா 49,704.51 மில்லியன் தேறிய நட்டத்துடன் ரூபா 366,284.57 மில்லியன் திரட்டிய நட்டத்தை அடைந்துள்ளதுடன் அந்த திகதியில் உள்ளவாறு குழுமத்தின் நடைமுறைப் பொறுப்புகள் அதன் நடைமுறைச் சொத்துக் களைக் காட்டிலும் ரூபா 214,635.95 மில்லியனை தாண்டியுள்ளதுடன், மொத்த பொறுப்புகள் அதன் மொத்த

பயணக் கட்டுப்பாடு களை அரசாங்கம் விதித்ததன் காரணமாக, குழுமம்/கம்பனியின் வருவாய் இழப்பு, தீர்ப்பனவுகளில் தாமதம், கடன் மற்றும் திரவத்தன்மை இடர்கள் உள்ளிட்ட தாக்கங்களை குழுமம்/கம்பனி எதிர்கொண்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு 2.1 இல் குழுமம்/கம்பனியின் எதிர்கால வாய்ப்புகள், செயலாற்றல் மற்றும் காசோட்டத்தில் கோவிட்-19 பரவலின் தாக்கம் விவரிக்கப்படு ன்றது. இந்த நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யும் நேரத்தில் நோய்பரவல் நிலவி வருவதால், இந்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை எவ்வாறு சமாளிக்க திட்டமிட்டுள்ளனர் என்பதை முகாமைத்துவம் விவரித்துள்ளது.

2020 யூன் 17 ஆந் திகதிய அமைச்சரவையின் ஒப்புதலுடன் இணைந்ததாக குறிப்பு 3 இல் வெளியிடப்பட்டுள்ள சரிசெய்தல் காரணிகளையும், 2020 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நியதிச்சட்ட கணக்காய்விற்காக பெறப்பட்ட 2020 யூன் 29 ஆந் திகதிய திறைசேரிச் செயலாளரால்

சொத்துக்களை விட ரூபா 281,490.87 மில்லியனை தாண்டியுள்ளது.

வழங்கப்பட்ட கடிதத்தையும் கருத்திற்கொண்டு, கம்பனிக்கு அதன் செயற்பாடுகளை ‘‘தொடர்ந்தியங்குதல் எண்ணக் கருவின்’’ படி தொடர்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் (GOSL) ஆதரவை உறுதிப்படுத்தும் வகையில், இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆறு (06) A 330-300 ரக விமானங்கள் மற்றும் நான்கு (04) A 350-900 ரக விமானங்களை கொள்வனவு செய்வதற்கான தீர்மானமும் மேலும் நான்கு (04) A 350-900 ரக விமானங்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஆறு (06) A 330-300 ரக விமானங்களை விற்பனை செய்து மீண்டும் குத்தகைக்கு பெறும் தீர்மானமும் 2013 இல் கம்பனியின் பணிப்பாளர் சபையால் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறாமலும் சரியான கிரய நலப் பகுப்பாய்வு செய்யப்படாமலும் எடுக்கப்பட்டிருந் தது.

அதேவேளை, A321 NEOs மற்றும்/அல்லது A330 NEOs களுக்குப் பதிலாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விநியோகப்பட வுள்ள A350-900 ரக நான்கு

இந்தளவு பாரிய முதலீட்டை மேற்கொள்வதற்கு முன்னர் விரிவான மற்றும் யதார்த் தமான கிரய-பயன் பகுப்பாய்வு செய்ய ப்பட்டு அதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இதுபோன்ற பொருளாதார நலன ற்ற கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்ப்பதற்காக, சரியான கிரய-பயன் பகுப்பாய்வு செய்ய ப்பட்ட பின்னர் கொள்வனவு

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள தீவிர மோசடி அலுவலகத்திற்கும் ஏர்பஸ் SE க்கும் இடையிலான ஒத்திவைக்கப்பட்ட வழக்கு விசாரணை உடன்படிக் கையை அங்கீகரித்து ஐக்கிய இராச்சியத்தில் உள்ள கிரவுன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், ஆறு (6) A330-300 ரக மற்றும் நான்கு (4) A350-900 ரக விமானங்களை கொள்வனவு செய்வதிலும் நான்கு (4) யு350-900 ரக விமானங்களை SLA மூலம் குத்தகைக்கு வழங்குவதிலும்

2020 மற்றும் 2021 இல் தருவிக்கப்பட இருக்கும் நான்கு A350 900 விமானங் கள் குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை. சட்ட ஆலோசனையின் அடிப்படையில், ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் A350-900 ரக விமானங்களை முற்பணம் செலுத்தி வாங்குவதை நிறுத்துவது தொடர்பாக 2020 செப்டம்பர் 29 தேதியிட்ட கடிதத்தில் (நடவடிக்கைக்கு முந்திய கடிதம்) SAS ஏர்பஸ் நிறுவனத்தி ற்குத் தெரிவிக்கப்பட் டுள்ளது. ஏர்பஸ் நிறுவனம் இந்த


| | | | | |
|---|---|---|---|---|
| | (04) விமானங்களின் கொள்வனவு ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய ஏர்பஸ் எஸ்ஏஎஸ் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை கம்பனி பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. அத்துடன், இந்த அறிக்கையின் திகதியில் உள்ளவாறு ரூபா 2,528.12 மில்லியன் (USD 19.21 மில்லியன்) ஏர்பஸ் நிறுவனத்திற்கு விநியோகத் திற்கு முந்திய கட்டணமாக செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த அறிக்கை வெளியிடப்படும் திகதி வரை இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.<br><br>மேலும், 2016/2017 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நான்கு (04) A350-900 ரக விமானங்களை குத்தகைக்கு பெறுவதற்கான குத்தகை ஒப்பந்தங்களை இரத்து செய்யும் செயல்பாட்டில் ரூபா 16,924.36 மில்லியன் இழப்பீடாக செலுத்தப்பட்டது. | செய்ய ப்பட வேண்டிய விமானங்களின் கலவையை கம்பனி தீர்மானிக்க வேண்டும். | செல்வாக்கு செலுத்துவதற் காக ஏர்பஸ் SE இன் ஊழியர்கள் முன்னாள் SLA இன் நிறைவேற்று முகாமையாளரின் மனை விக்கு சொந்தமான கம்பனிக்கு பணம் செலுத்த ஒப்புக்கொண்ட தாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெறப்பட்ட சட்ட ஆலோச னையின் அடிப்படையில், 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதியிட்ட கடிதம் (நடவடிக்கைக்கு முந்திய கடிதம்) மூலம் A350-900 ரக விமானங்களின் கொள்வனவு ஒப்பந்தத்தை இரத்து செய்து இழப்பீடு டன் செலுத்தப்பட்ட PDP களை மீள அறவிட வேண்டும் என்ற கோரிக்கையை ஏர்பஸ் S.A.S க்கு SLA தெரிவித்துள்ளது. | விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், இழப்பீடு பெற கம்பனி நிர்வாக த்தை நாடியுள்ளது. |
| (இ) | கம்பனி கடந்த இரண்டு ஆண்டுகளில் 200 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூபா 37,950 மில்லியன்) மற்றும் 2017/18 இல் அரசு | கம்பனியின் கட னைக் குறைக்கும் வகையில் உரிமை யாளர்களின் உதவியுடன் வணிகத்தை | கம்பனி குறைவான மூலதனத்தைக் கொண்டுள்ளதுடன் 2020-2022 கால கட்டத்தில் கம்பனியை 500 மில்லியன் | இந்த அறிக்கையின் திகதி வரை, இந்தக் கடன்கள் எதுவும் திருப்பிச் செலுத்தப் படவில்லை என்பதுடன் 2019/20 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கிகளில் இருந்து ரூபா 26,250 மில்லியன் தொகையினை கடனாக பெற்று அதன் கடன் மூலதனத்தை அதிகரித்திருந்தது.<br>2019/2020 ஆம் ஆண்டில், இந்த யு.எஸ்.டொ. 200 மில்லியன் கடன்களுக்கான வட்டியாக யு.எஸ்.டொ. 14.63 மில்லியன் ஏறத்தாழ ரூபா 2,776.77 மில்லியன் செலுத்தப்பட்டது. | சிக்கனமாகவும் இலாபகரமாகவும் நடத்தும் பொறுப்பு முகாமைக்கு உள்ளது. | அமெரிக்க டாலர்கள் வரை மீள் மூலதனமாக்குவதற்கு திறைசேரி அமைச் சரவை அனுமதியைப் பெற்றுள்ளது. 2020 நவம்பர் 18 அன்று யூஎஸ்டொலர் 150 மில்லியனுக்கு சமமான இலங்கை ரூபா பெறப்பட்டது. இரு அரசாங்க வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வசதிக ளைத் திருப்பிச் செலுத்துவது, கம்பனியின் ஒட்டு மொத்த மறுசீரமை ப்பின் ஒரு பகுதியா கும். மேலும் கோவிட் 19-ன் கம்பனியின் செயல்பாடுகளில் கடுமையான தாக்கம் செலுத்தியதால், தொழில்துறை மீண்டு சீரடையும் வரை அல்லது மீள் நிதியளிப்பு கிடைக்கும் வரை அதனைத் திருப்பிச் செலுத்துவது தாமதமாகும். | ஆம் ஆண்டில் ரூபா 6,563.88 மில்லியன் தொகையும் 2020/21 ஆம் ஆண்டில் ரூபா 6,253.04 மில்லியன் தொகையும் கடன் வட்டியாக செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | நிறுவனத்தின் சாதகமற்ற நிதி நிலைமை காரணமாக அரசாங்க உத்தரவாதத்தின் கீழ் 2019 ஜூன் மாதத்தில் முதிர்ச்சி யடைந்த பிணைமுறிகளை செலுத்துவதற் காக, | கம்பனியின் கடன் மூலதனத்தைக் குறைக்கும் வகையில் உரிமை யாளர்களின் உதவியுடன் | பிணை முறியை திருப்பிச் செலுத்து தல் 2024 யூன் ஆக காணப்படுவதால் ஸ்ரீ லங்கன் விமான சேவையின் மறு சீரமைப்பு இதைத் | பிணை பத்திரத்தை 2024 இல் திருப்பிச் செலுத்துவதற்கு பட்டியலிடப்பட் டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுக்கு 7 சதவீத வட்டி விகிதத்துடன் 175 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ஏறத்தாழ ரூபா 33,215 மில்லியனுக்கு சமமான) பெறுமதியான ஐந்தாண்டு சர்வதேச பிணைமுறிகளை 2019 ஜூன் இல் கம்பனி மீண்டும் வழங்கியது. | வணிகத்தை சிக்கனமாகவும் இலாபகரமாகவும் நடத்தும் பொறுப்பு முகாமைக்கு உள்ளது. | தீர்த்து வைக்கும். | |
| (உ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பந்தியின் படி கூட்டுணைந்த திட்டம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படாது தொடர்ச்சியான திட்டமொன்றாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | கூட்டுணைந்த திட்டம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்பட்டு ஒரு தொடர்ச்சியான திட்டமாக பயன்படு த்தப்பட வேண்டும். | தொற்றுநோயின் விளைவாக புதிய வணிகச் சூழலைக் கருத்தில் கொண்டு புதுப்பிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்படும். | 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 08 கூட்டிணைந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்ந்தேற்சியான திட்டங்களாக ஒன்றோடொன்று ஒருங்கிணைக்க ப்படவில்லை. |

### 4.4 கொழும்பு கொமேர்ஷல் பேர்டிலைசர் லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 8,209,068,934 | 7,902,622,176 | 15,330,801,728 | 12,788,210,246 | 306,446,758 | முனைப்பழியுள்ள |
| **2019** | 1,605,960,444 | 1,344,373,600 | 16,201,901,050 | 13,423,781,798 | 261,586,844 | முனைப்பழியுள்ள |
| **2020** | 1,786,329,158 | 1,472,694,189 | 20,418,328,166 | 17,407,884,294 | 313,634,969 | தீர்மானிக்கவில்லை |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் அமைந்துள்ள காணி களனி பிரதேச செயலகத்திற்கு சொந்தமானதாக இருந்த போதிலும், காணியின் பெறுமதியான ரூபா 9,000,000 தொகை கம்பனியின் சொத்தாகக் கருதி | நிலத்தின் உரிமையை கம்பனிக்கு சாதகமாக மாற்றியமைத்த பின்னர் அந்த நிலத்தை கம்பனிக்குச் சொந்த மான | அந்த நிலத்தின் உரிமையை கம்பனிக்குச் சாதகமாக மாற்றுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. | நிலத்தின் உரிமை கம்பனிக்கு மாற்றப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையால் அதிகமாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. | சொத்தாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| (ஆ) | ரூபா 89,021,859 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | இந்த கடன்பட்டோர்களிடமிருந்து மீதி உறுதிப் படுத்தல் பெறுவதற்காக கம்பனி கடிதங்களை அனுப்பியுள்ளது. | வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெறப்படவில்லை |
| (இ) | திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகை யான ரூபா 11,404,282,749 மீதிக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | இந்த நிலுவைகள் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்களை வழங்குமாறு பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் உரிய பதில் இன்னும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது | இது தொடர்பில் பொது திறைசேரியுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்ட போதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை. |
| (ஈ) | ரூபா 159,897,018 கடன்பட்டோர் நிலுவைகளுக்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | இந்த கடன்பட்டோர்களிடமிருந்து மீதி உறுதிப் படுத்தல் பெறுவதற்காக கம்பனி கடிதங்களை அனுப்பியுள்ளது. | வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெறப்படவில்லை |
| (உ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது | குறித்த நோக்கம் முடிந்தவுடன் | எதிர்காலத்தில் சிக்கலைத் | அது முழுமையாக சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிச் சுற்றறிக்கை ஆல் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் படி, பெறப்பட்ட தற்காலிக குறித்த நோக்க கட்டுநிதிகள், அந்த நோக்கம் முடிந்த உடனேயே 10 நாட்களுக்குள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இருப்பினும், கம்பனியின் 14 உத்தியோகத்தர்களால் 43 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 795,565 கட்டுநிதிகள் நோக்கங் களை நிறைவு செய்ததில் இருந்து 10 நாட்கள் முதல் 89 நாட்கள் வரையிலான காலதாமதத்திற்குப் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. | பெறப்பட்ட முன்பணங்களை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை யை வலுப்படுத்த நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | பெர்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்காக திறக்கப்பட்ட நாணயக் கடிதங்கள் தொடர்பான தாமதம் காரணமாக வங்கியால் வசூலிக்கப்படும் வட்டியினை தீர்த்தல் வேண்டுமென 2018 அக்டோபர் 05 ஆந் தேதியிட்ட நிதி அபிவிருத்தி திணைக்கள த்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட் டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் கம்பனி வங்கிக்கு செலுத்த வேண்டிய ரூபா 101,801,619 வட்டித் தொகையினை பொதுக் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து கழித்துக் கொண்டு மீதித் தொகையைச் செலுத்தியிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் முறையாக | நாணயக் கடிதங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்ப டி செய்யப்பட வேண்டு மென்பதுடன் அரசாங்க த்தின் பணத்தை வினைத்திறனாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை. | அது சரி செய்யப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணம் செலுத்துவது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களின் பொறுப்பாக இருந்த போதிலும், உத்தியோகத்தர் களின் அலட்சியத்தால் கம்பனி அதிக தொகையை வட்டியாக செலுத்த வேண்டியிருந்தது. | | | |
| (எ) | குறைந்த பட்சம் 03 ஆண்டுகளுக்கு ஒரு கூட்டிணை ந்த திட்டத்தை தயாரித்து முன்மொழியப்பட்ட இலக்குகளை அடைவதற்காக வணிகத்தை நடத்துவது இயக்குநர்கள் குழுவின் பொறுப்பாகும், ஏனெனில் பொது முயற்சிகளின் வணிக நடவடிக்கைகள் குறுகிய கால மற்றும் நீண்டகால தூரநோக்குடன் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். இருப்பினும், கம்பனி அத்தகைய கூட்டிணை ந்த திட்டத்தை தயாரித்திருக்கவி ல்லை. | கம்பனி கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து, அதன்படி செயற்படு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசின் கொள்கை மாற்றம் காரணமாக புதிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின் றது. | அரசாங்கக் கொள்கை மாற்றிய பின்னர் புதிய கூட்டிணைந்த திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஏ) | கம்பனி உரங்களை இறக்குமதி செய்வதற்காக திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களை உரிய தேதியில் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கா மையால் ரூபா 2,229,079 தரகுப் பணத்தை சம்பந்தப்பட்ட வங்கி களின் கடனாக மாற்றியமைத்து குறித்த வங்கிகளிற்கு செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | அரச நிதியை வினைத் திறனாகவும் பயனுறு தியாகவும் செலவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை. | தற்போதும் அதே நிலை நீடிக்கிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 1997 ஆம் ஆண்டு முதல் முன்னோக்கி கொண்டு வரப்பட்ட ரூபா 61,016,519 தொகையான இனங்காணப்படாத வருமான ஒதுக்கம் காணப்பட்ட போதிலும், அதைக் கண்டறிந்து மீளாயவா ண்டின் இறுதிக்குள் கூட அதைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | இனங்காணப்படாத வருமான ஒதுக்கங்க ளைக் கண்டறிந்து, அத்தகைய ஒதுக்கங் களைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும். | அடையாளம் காணப் படாத வருமானத்தின் ஒரு பகுதியை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலும் அடையாளம் காணப்படாத வருமா னங்கள் உள்ளன. |
| (ஒ) | 2016 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக உள்ள சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிக்கு தகுதியான அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யாமல் 2016 ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவியில் செயற்படுவதற்காக பதிற்கடமை அடிப்படையில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களு டன் இணங்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய சந்தைப்படுத்தல் முகாமையாளரை நியமிப்பதற்கான பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்ட போதிலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் முன்வராமையால் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆனால் புதிய சந்தைப் படுத்தல் முகாமையா ளரை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அழைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிக்கு தகுதியான அதிகாரி நியமிக்கப்படவில்லை. |
| (ஓ) | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல. 02 இன் படி, கையிருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டு, | குறித்த இலங்கை கணக்கீட்டு நியமங் களுடன் இணங்குதல் | ஹுனுப்பிட்டிய களஞ்சிய வளாகத்தில் சேமித்து | 2021.03.31 இல் உள்ள பௌதீக இருப்பைச் சரிபார்க்கும் போது இந்தப் பிரச்சனை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் குறைவாக உள்ள பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், ஹுனுபிட்டிய களஞ்சிய வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள சில உரங்களின் இருப்புக்களை பௌதீக ரீதியாக மெய்மை யாய்வு செய்திருக்காமை காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 278,323,718 பெறுமதியான இரசாயன உரக் கையிருப்பின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. | வேண்டும். | வைக்கப்பட்டுள்ள சில உரங்களின் இருப்புக் களை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய முடியாத காரணத்தினால் உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவி ல்லை. | அப்படியே உள்ளது. |
| (ஔ) | நிறுவனத்தால் நேரடியாக கொள்வனவு செய்யப்படுகி ன்ற உரங்கள், நிறுவனத்தி ற்குள் சந்தைப்படுத்துதல், கலவை செய்தல், சிறிய பாக்கட்டுக்களில் அடைத்தல், மீள் பொதியிடல் மற்றும் ஒவ்வொரு வகைக்கும் மாற்றுதல் போன்ற பல்வேறு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. நிதியாண்டில் நேரடியாக கொள்வனவு செய்யப்பட்ட உரங்கள் மேற்கூறிய செயன்முறைகளுக்கு உட் படுத்தப்பட்டு அதனுடன் தொடர்புடைய பெறுமதிகள் சேர்க்கப்பட்டு இறுதிக் கையிருப்பின் பெறுமதி கணக்கிடப்பட்டிருந்த போதி லும், கையிருப்பு எண்ணிக் கையில் இனங்காணப்பட்ட ஒரு கையிருப் பின் 41.891 மெற்றிக் தொன் உரப் | விற்பனை கிரயத்தை கணக்கிடும் போது இருப்பு பற்றாக்கு றையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. | அது சரி செய்யப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பற்றாக்குறையானது ரூபா 1,182 மில்லியன் விற்பனைக் கிரயத்தில் சீராக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் சுமார் ரூபா 2,094,550 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. | | | |
| (ஃ) | நிறுவனத்தின் ஊழியர்களால் சேமிக்கப்பட்ட குறுகிய விடுமுறைகள் மற்றும் மருத்துவ விடுப்புகளுக்காக நிறுவன ஊழியர்களுக்கு விடுமுறை கொடுப்பனவாக ரூபா 4,926,394 தொகையும நிறைவேற்றுத் தர அலுவலர்களுக்கான நிறைவேற்றுக் கொடுப்பனவாக ரூபா 847,427 தொகையும் திறைசேரியின் அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தன. | இந்த கொடுப்பனவுகள் சட்ட ரீதியற்ற கொடுப்பனவுகளாக கருதப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. | அது சரி செய்யப்படவில்லை. |
| (க) | கம்பனியின் உர வழங்குனர்களிற்கு உரிய நேரத்தில் பணம் செலுத்துவதற்கு பொது திறைசேரியில் இருந்து நிதி கிடைக்காததால் வங்கியில் இருந்து பெறப்பட்ட குறுகிய கால கடன் மூலம் பணம் செலுத்தப்பட்டது. குறுகிய கால கடனுக்கான வட்டியை வசூலிக்க திறைசேரியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளாமையால், திறைரேியின் பொறுப்புக்கு உட்பட்டு குறுங்கால கடனாக வரிசைப்படுத்தப்பட்ட கடன் பின்னர் நீண்ட கால கடனாக மாற்றப்பட்டது. அத்துடன், குறுகிய கால வட்டியை நீண்டகால கடனாக இணைக்கத் தவறியதால், திறைசேரியால் | பொது திறைசேரியில் இருந்து பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கம்பனி இந்த விடயம் குறித்து பொது திறைசேரியுடன் எழுத்துப் பூர்வமாகவும் வாய்மொழியாகவும் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறது. | அது சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தரவாதமளிக்கப்படாத ரூபா 158,498,393 குறுங்கால கடன் வட்டியானது திறைசேரியிலிருந்து பெறப்பட வேண்டிய மீதியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (கா) | முன்னைய ஆண்டிலிருந்து நடைமுறைச் சொத்தாக காட்டப்பட்டுள்ள சிலோன் பெர்டிலைசர் கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 4,993,147 வியாபாரக் கடன்பட் டோர் மீதி மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது குறித்து சிலோன் உர நிறுவனத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள் ளது. | இந்த வியாபாரக் கடன்பட்டோர் மீதி அறவிடப்பட்டிரு க்கவில்லை. |
| (கி) | 2014/2015 முதல் நடைமுறைச் சொத்தாக காணப்பட்ட சில்லறைக் கடன்பட்டோர் மீதியான ரூபா 5,047,893 தொகையை மீளாய்வாண்டி லேனும் அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது. | சில்லறைக் கடன்பட்டோர் நிலுவை தொகையை சரியாக கண்டறிந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சில கடன்பட்டோர்களுக் கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த மீதி அறவிடப்பட் டிருக்கவில்லை. |
| (கீ) | முந்தைய ஆண்டுகளில் அட்டுறு செலவினமாகக் கணக்கிடப்பட்ட மொத்தம் ரூபா 3,600,816 பெறுமதியான தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவுகள் முறையாகக் கணக்கிடப்பட்டு உரிய காலத்திற்குள் தீக்கப்பட வேண்டும். | இதில் ரூபா 728,003.19 தொகை நாளேட்டுப் பதிவு மூலம் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டது. J/MAR/AQ - mD (07). | அது முழுமையாக சரி செய்யப்படவில்லை. |
| (கு) | 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப் புதல் வரிச் சட்டத்துடன் இணங்காததன் காரணமாக உள்நாட்டு இறைவரி வரி மதிப்பீட்டின்படி 2016 ஆம் ஆண்டின் கடைசி | சம்பந்தப்பட்ட சட்டத் தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வா றான பிரச்சினைகள் ஏற்படாதிருக்க முன்னெ ச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா | ஏற்பட்ட இழப்பு அப்படி யே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலாண்டிற் கும் 2017 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளிற்கும் என மீளாய்வாண்டில் ரூபா 675,558 தண்டப்பணம் செலுத்தப்பட் டிருந்தது. | | க தெரிவிக்கப்பட்டுள் ளது. | |
| (கூ) | பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட PED/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான சுற்றறிக் கையின் 06 ஆம் அத்தியாயத்தின் 5.1 ஆம் பந்தியின் படி அனைத்து அரசாங்க கம்பனிகளும் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தமது நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், நிதியாண்டு முடிவடைந்து 200 நாட்களுக்குப் பிறகே நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | சுற்றறிக்கையின் விதிக ளின்படி நிதிக் கூற்றுக் களைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த சிக்கலை தீர்க்க கணினி மென்பொருள் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. | 2021.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற் கான நிதிக் கூற்றுக்கள் 2022.03.03 அன்றே சமர்ப்பிக்கப்பட்டன. |
| (கெ) | பணிப்பாளர் சபையின் தீர்மானத் தின் பேரில், PED/1/2015 ஆம் இலக்க 2015 மே 25 மற்றும் PED/1/2015(i) ஆம் இலக்க 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் 3 ஆம் பந்தியிலுள்ள விதிகளை மீறி சுற்றறிக்கையில் உள்ளடக்க ப்படாத 05 நடுத்தர மட்ட முகாமையாளர்களுக்கு, ஒவ்வொ ருக்கும் ரூபா 10,000 வீதம் வாகனக் | இந்த கொடுப்பனவுகள் சட்டப்பூர்வமற்ற செலவுகளாக கருதப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எது வும் எடுக்கப்படவில்லை. | அது சரிசெய்யப் படவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவாக மொத்தம் ரூபா 600,000 செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (கே) | நிதியாண்டில் முறையான தொழிற்படு மூலதன முகாமைத்துவம் காணப்படாமை காரணமாக, ரூபா 78,269,924 வங்கி மேலதிகப்பற்றின் மீது ரூபா 2,109,634 தவிர்க்க முடியாத கடன் வட்டி ஏற்பட்டிருந்தது. | கடனுக்கான வட்டியை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எது வும் எடுக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் வங்கி மேலதிகப்பற்று பராமரிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான மேலதிகப்பற்று வட்டி யாக 15,876,049 செலுத்தப்பட்டது. |
| (கொ) | வழங்குனர்கள் கட்டளை யினைக் காட்டிலும் ரூபா 6,642,835 பெறுமதியான உரத்தை குறைவாக வழங்கியிருந்ததுடன், அந்த தொகை வழங்குனர்க ளிடமிருந்து மீளப் பெற வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன், இதன் காரணமாக குறுகிய கால வங்கிக் கடன் பெற்று வழங்குனர்களிற்குச் செலுத்த வேண்டியிருந்ததுடன் மேலதிக கடன் வட்டிச் செலவும் ஏற்பட்டிருந்தது. | பெறப்பட்ட உரத்தின் அளவை மட்டுமே கணக்கிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எது வும் எடுக்கப்படவில்லை. | அது சரிசெய்யப் படவில்லை. |
| (கோ) | குறைந்த விலை விநியோக முறையை நிறுவப்படாமலும் களஞ்சியங்களின் தேவையை உணராமலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 13 களஞ்சியங்களை கம்பனி பராமரித்து வருவதால் தவிர்க்கப்படக்கூடிய நிர்வாக, செயற்பாட்டு மற்றும் போக்குவரத்து செலவுகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயனுள்ள மற்றும் வினைத்திறமையான விநியோக முறையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. | அது சரிசெய்யப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ச) | இந்த நிதியாண்டில் விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 06 நாணயக் கடிதங்களுடன் தொடர்புடைய 3,575 மெட்ரிக் டன் TPS உரத்தை (ஆய்வக அறிக்கை தோல்வியடைந்தமையால்) வழங்குவதற்கு தேசிய உர செயலகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆனால், ஆய்வக அறிக்கைகள் வெளியாவதற்கு முன்பே, மேற்குறித்த உர இருப்புகளை அந்த அங்கீகாரமின்றி விவசாயிகளுக்கு கம்பனி விநியோகித்திருந்தது. கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத் தினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மேற்கூறிய தரமற்ற உர இருப்புகளுக்காக உர மானியத்தை வழங்குவதற்கு தேசிய உர செயலகம் சிபாரிசு செய்யாதிருந்த போதிலும், குறுகிய கால வங்கிக் கடனின் மூலம் உரத்திற்கான கொடுப்பனவை உரிய தேதியில் செலுத்துவதற்கும் அதை திறைசேரியின் பொறுப்பாக நீண்ட கால கடனாக மாற்றுவதற்கும் முறையான அனுமதியின்றி மானியத்தைப் பெறுவதற்கும் கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | தேசிய உரச் செயலகத்தின் அனுமதியின்றி விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்கக் கூடாது. | மேற்குறித்த உர இருப்பு களை உர செயலகத்தின் அங்கீகாரமின்றி விவசாயி களுக்கு விநியோகித்தி ருந்தமை தொடர்பில் தடுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை. | செய்யப்பட்ட தவறு இது வரை திருத்தப்படவில்லை. |
| (சா) | முறையான முகாமைத்துவத்தின் மூலம் | அரசின் மானிய உர இருப்புகளை | தடுப்பு நடவடிக்கை எது வும் | ஏற்பட்ட இழப்பு இது வரை அறவிடப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | மானிய விலை உர இருப்புகளை விநியோகிக்கத் தவறியமையால் 369 மெட்ரிக் தொன் சேதமான உரம் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டமையால், கம்பனிக்கு ரூபா 22,140,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | முறை யான நிர்வாகத்துடன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப்படவில்லை. | வில்லை. |
| (சி) | கடந்த வருடங்களில் ஏற்பட்ட ரூபா 3,534,711 தொகையும் மீளாய்வாண்டில் ஏற்பட்ட ரூபா 198,190 உள்ளடங்கலாக அம்பாந்தோட்டை மாவட்டத்தின் குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியில் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கான ஆலோச னைக் கட்டணமாக ரூபா 3,732,901 தொகை ஆரம்பச் செலவினமாக செய்யப்பட்டு அது மூலதன முடிவுறா வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த நிலத்தில் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட் டிருக்காமையால் குறித்த செலவினம் பயனற்ற செலவாகியி ருந்தது. | செயற்திட்டமொன்டை ற தொடங்குவதற்கு முன் ஒரு சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப் பட வேண்டும். | செயற்திட்டம் இடைநிறுத் தப்பட்டுள்ளது. | இந்த இடத்தில் களஞ் சியம் நிர்மாணிக்கப்பட வில்லை. |

## 4.5 சிலோன் பேர்டிலைசர் கம்பனி லிமிடெட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,411,526,585 | 2,291,744,540 | 27,082,981,082 | 21,551,797,069 | 119,782,045 | முனைப்பழியுள்ள |
| **2019** | 2,656,153,207 | 2,467,709,278 | 25,366,775,513 | 19,225,532,823 | 188,443,929 | முனைப்பழியுள்ள |
| **2020** | 2,588,654,849 | 2,426,064,433 | 32,098,651,854 | 25,752,673,374 | 162,590,416 | தீர்மானிக்கவில்லை |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியால் உரம் சேமித்து வைக்கப்பட்டுள்ள அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள காணிக்கு 2015 ஏப்ரல் 01 முதல் 2019 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு ரூபா 6,460,000 தொகை தவணை மற்றும் அபராதமாக செலுத்தப்பட வேண்டிய | நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,460,000 தொகை இனை தவணை மற்றும் அபராதத் தொகையாக காட்டுவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் எவ்வித வெளிப்படு த்தலும் செய்யப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், அந்த தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட் டிருக்கவில்லை. அறிக்கைகள். | | | |
| (ஆ) | ரூபா 105,534,809 நிலுவைத் தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெறுவத ற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | மீதிகளுக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் சமர்ப்பிக்குமாறு கடன்பட்டோர் அறிவுறுத்தப்பட்டு ள்ளனர். | கடன்பட்டோர் மீதிகளுக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை. |
| (இ) | பொது திறைசேரியிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 19,159,274,649 இற்கான தொகைக்கு மீதி உறுதிப்படுத் தல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெறுவத ற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | பொது முயற்சிகள் திணைக்களம் எழுத்துருவில் உறுதிப்படுத்தி யிருக்கவில்லை. | மீதிகளுக்கான உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை. |
| (ஈ) | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அம்பாறை விவசாயப் பணிப்பாளர் மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா 86,408,870 நிலுவை, மூன்று விநியோக முகவர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கும் மேலாக பெற வேண்டிய ரூபா 47,385,977 நிலுவைகள், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக வாடிக்கை யாளர் ஒருவரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 10,230,000 நிலுவைத் தொகை மற்றும் மஹியங்கனை கமநல சேவைகள் நிலையத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 1,839,321 நிலுவை ஆகியவற்றை மீளப் பெறுவதற்குத் தேவையான | உரிய கடன் நிலுவை களை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன்மீதியை அறவிடுதல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தை கம்பனி நாடியுள்ளது. | இந்தச் சிக்கல் இன்னும் தீர்க்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 05 ஆண்டுகளுக்கும் மேலான மற்றொரு பெற வேண்டிய ரூபா 6,644,781 தொகை மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் பொத்துவில் களஞ்சியசாலை யில் நிலவும் உரப் பற்றாக்குறை தொடர்பில் களஞ்சியப் பொறுப்பாளர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,694,938 தொகை என்பவற்றை, 2018 ஆம் ஆண்டுவரையிலும் மீளப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த சம்பந்தப்பட்ட கடன்பட்டோர் நிலுவை களை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | இருப்பு பற்றாக் குறை தொடர் பில் மாவட்ட நீதி மன்றத்தில் வழக் குத் தொடரப்பட் டுள்ளது. | பெறவேண்டிய மீதி இன்னும் அறவிடப் படவில்லை. |
| (உ) | 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதிய அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின்படி உர இறக்குமதிக்காக திறக்கப்பட்ட நாணயக் கடிதங்கள் தொடர்பில் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுமாயின் அதற்காக வங்கியினால் அறவிடப்படும் வட்டியைத் தீர்ப்பது உர கம்பனியுடைய பொறுப்பாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், உர கம்பனி ஒரு பில்லியன் ரூபாய்க்கு மேல் காலமுறை வைப்புத் தொகையை வைத்திருந்த போதிலும், 2018/19 ஆம் ஆண்டில் நாணயக் கடிதத்தின் முதிர்ச்சியின் போது தீர்க்கப் படாதுள்ள தொகையை | நாணயக் கடிதங்கள் தொடர்பான கொடுப்பன வுகள் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின்படி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அரசாங்க நிதியை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக் கைகள் எடுக்கப் படவில்லை. | இந்தச் சிக்கல் இன்னும் தீர்க்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறுகிய கால கடனாக மாற்றி யமைத்து ரூபா 36,267,366 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இவ்வாறான கொடுப்பனவுகளை மீளாய்வாண்டில் செலுத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாக இருந்த போதிலும், அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக பெருந்தொகையான வட்டியை கம்பனி செலுத்த வேண்டியிருந்தது. | | | |
| (ஊ) | கம்பனி ரூபா 18,557,867 பெறுமதியான ஆய்வக உபகரணங்களுடன் கூடியதும் இலங்கை அங்கீகார சபையில் பதிவு செய்யப்பட்டு வருமான த்தை ஈட்டக்கூடியதுமான ஆய்வகத்தை வைத்துள்ள போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 380,750 வருமானம் மாத்திரமே ஈட்டப்பட்டிருந்தது டன், வருவாயை ஈட்டக்கூடிய ஒரு தந்துரோபாயத் திட்டத்தை வகுத்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படா மையால் ஆய்வகத்தின் வளங் கள் குறைவாகப் பயன்படுத்தப்ப ட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | ஆய்வகத்தில் காணப்படுகின்ற உபகர ணங்களின் மூலம் அதிகபட்ச செயலாற் றலை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக் கைகள் எடுக்கப் படவில்லை. | ஆய்வகத்தில் காணப்படுகின்ற உபகரணங்களில் இருந்து அதிகபட்ச செயலாற்றல் பெறப்படவில்லை. |
| (எ) | கம்பனியின் ஊழியர்களை பதவி உயர்வு செய்யும் போது ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி பொருத்தமான தகுதித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், | ஆட்ரேப்பு நடைமுறை இன் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | தடுப்பு நடவடிக் கைகள் எடுக்கப் படவில்லை. | முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) ஓய்வு பெற்றுள்ளார். இந்தத் தவறு திருத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் கம்பனி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) மற்றும் உதவி முகாமையாளர் (நிதி) ஆகிய இரு உத்தியோகத்தர்கள் உரிய தகுதிகளை பூர்த்தி செய்யா திருந்த போதிலும் பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் பேரில் அவர்கள் பதவி உயர்வு செய்யப்பட்டிருந்தனர். | | | |
| (ஏ) | முகாமையார் (கொள்வனவுகள்) பதவிக்கு பதில் கடமை அடிப்படையில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | புதவிக்கு நிரந்தர ஆட் சேர்ப்பு செய்ய நடவடி க்கை எடுக்க வேண்டும். | தொழில் நீதி மன்றத்தில் வழக் குத் தொடரப்பட் டுள்ளதாக அறிவிக்கப்ப ட்டுள்ளது. | பதவி வெற்றிடத்தை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (ஐ) | நிறுவனத்தால் நேரடியாக கொள்வனவு செய்யப்படுகின்ற உரங்கள், நிறுவனத்திற்குள் சந்தைப்படுத்துதல், கலவை செய்தல், சிறிய பாக்கட்டுக் களில் அடைத்தல், மீள் பொதியிடல் மற்றும் ஒவ்வொரு வகைக்கும் மாற்றுதல் போன்ற பல்வேறு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. நிதியாண்டில் நேரடியாக கொள்வனவு செய்யப்பட்ட உரங்கள் மேற்கூறிய செயன் முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதனுடன் தொடர்புடைய பெறுமதிகள் சேர்க்கப்பட்டு இறுதிக் கையிருப்பின் பெறுமதி கணக்கிடப்பட்டிருந்த போதிலும், கையிருப்பு | விற்பனைக் கிரயத்தை கணிப்பிடுகையில் இருப்புப் பற்றாக் குறையை சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பில் புலனாய்வை செய்வ தற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தலைவருக்கு அறிவுத் துள்ளதாகவும் எழுத்துருவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | இது இதுவரை திருத்தப்படவில்லை. . |

| | | | | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கையில் இனங்காணப்பட்ட ஒரு கையிரு ப்பின் 101.7 மெற்றிக் தொன் உரப் பற்றாக்குறையானது விற்பனைக் கிரயத்தில் சீராக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் சுமார் ரூபா 5,085,500 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டு ள்ளது. | | | |
| (ஓ) | நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து பொருட்களும் நுகர்வோர் பொருட்கள் எனும் ஒரு கணக்கில் பதிவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு வழங்கப்படுவதுடன், களஞ்சியத் திலிருந்து தொடர்புடைய பிரிவுகளிற்கு பொருட்கள் வழங்கப்படுகையில் சொத்துக் கள் அல்லது செலவுகள் என அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதனை கம்பனி நடைமுறையொன்றாக பின்பற்றுகின்றது. நிதியாண்டில் நுகர்பொருள் கணக்கில் ரூபா 1,978,401 பற்றாக்குறை காணப்பட்ட போதிலும், அந்த பற்றாக்குறைக்குப் பொறுப் பான தரப்பினரிடம் இருந்து அப் பெறுமதியை அறவிடுவதற்கு புலானாய்வு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக சொத்து க்கள் மற்றும் செலவு கணக்குகளுக்கு அத்தொகை பதியப்பட்டிருந்தது. | பற்றாக்குறைக்கு காரணமான உத்தியோகத்தர் இனங்காணப்பட்டு அவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனை திருத்துவ தற்கு பௌதீக மெய் வாய்வு மேற்கொள்ள ப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் செலவுகள் கணக்கிலுள்ள குறைவு இதுவரை சீராக்கப்படவில்லை. அத்துடன், பொறுப்பு டைய தரப்பிடமிருந்து குறைவை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | கம்பனியின் உர வழங்குனர் களுக்கு உரிய நேரத்தில் பணத்தை செலுத்துவதற்கு பொது திறைசேரியில் இருந்து நிதி கிடைக்காததால் வங்கியில் இருந்து பெறப்பட்ட குறுகிய கால கடன் மூலம் பணம் செலுத்தப்பட்டது. குறுகிய கால கடனுக்கான வட்டியை வசூலி க்க திறைசேரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளாமையாலும், குறுகிய கால வட்டியை கூட்டிணைக்கத் தவறியமை யாலும், திறைசேரியால் உத்தரவாதம் அளிக்கப்படாத ரூபா 268,732,450 தொகையான அந்தக் குறுங்காலக் கடன், திறைசேரியின் பொறுப்புக்கு உட்பட்ட நீண்ட கால கடனாக பின்னர் மாற்றப்பட்டு திறைசேரியிடமிருந்து பெற வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரியின் வகை கூறலை உறுதிப்ப டுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படிருக்கவி ல்லை. | இந்த வட்டி திறைசேரியால் செலுத்தப்படுமென்பது உறுதிப்படுத்தப்படவில்லை. |
| (ஔ) | உர இறக்குமதியில் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட தொகையை விட குறைவாக வழங்குனர் உரத்தை வழங்கிய சந்தர்ப்பங்களில், உரத்தின் உரிய இருப்பு குறைபாட்டின் பெறுமதியை வழங்குனரின் விலைப்பட்டியலில் இருந்து கழித்த பின்னரே கணக்குகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வழங்குனரின் விலைப்பட்டியல் பெறுமதி கொள்வனவு என கணக்கீடு செய்யப்பட்டதுடன் அனுப்பப்பி | கிடைத்த உரத்தின் பெறுமதி மாத்திரம் கணக்குகளிற்கு எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் கிடைத்த இருப்பு க்காக மாத்திரம் கம்பனி பணத்தை செலுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை. செய்யப்பட்ட தவறு அவ்விதமே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைக்கப்பட்ட இருப்பின் பெறுமதி பெற வேண்டிய தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. விலைப்பட்டியல் பெறுமதியை விட குறைவாக பெறப்பட்ட உரத்தின் மொத்த பெறுமதி ரூபா 16,861,511 ஆனது பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டதுடன் அவ்வாறு பெறவேண்டிய நிலுவைத் தொகை ரூபா 6,398,762 ஆகும். மேற்கூறிய நிலுவைத் தொகையானது சம்பந்தப்பட்ட வழங்குனர்களிற்குச் செலுத்தப் பட வேண்டிய நிலுவைத் தொகையிலிருந்து கழிக்கப்படாமையால், இந்த மீதியானது குறுகிய கால வங்கிக் கடன் பெற்று வழங்குனருக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் இதற்காக கடன் வட்டிச் செலவு ஏற்பட்டுள்ள அதேவேளை போலியான பெற வேண்டியவை கணக்குகளில் காட்டப்பட்டு ள்ளது. | | | |
| (ஃ) | ரூபா 72,102,543 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் தொடர்பில் மீதி உறுதிப்படுத் தல் கடிதங்கள் கணக்காய்விற் குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்கா ய்விற்குச் சமர்ப்பிக்க ப்படுதல் வேண்டும். | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை சமர்ப்பிக் குமாறு கடன்பட்டோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (க) | ரூபா 4,636,187,820 மற்றும் ரூபா 59,421,950 தொகைக்குரிய முறையே வியாபாரக் கடன்கொடுத்தோர் மற்றும் நானாவித சென்மதியாளர் களுடன் தொடர்புடையன மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்கா ய்விற்குச் சமர்ப்பிக்க ப்படுதல் வேண்டும். | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை சமர்ப்பிக் குமாறு கடன்கொடுத் தோர் அறிவுறுத்தப்பட் டுள்ளனர். | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்விற்குச் சமர்ப்பிக் கப்படவில்லை. | | | |
| (கா) | பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட PED/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான சுற்றறிக் கையின் 06 ஆம் அத்தியாயத்தின் 5.1 ஆம் பந்யின் படி அனைத்து அரசாங்க கம்பனிகளும் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தமது நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், நிதியாண்டு முடிவடைந்து 210 நாட்களுக்குப் பிறகே நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | சுற்றறிக்கை விதிக ளின்படி நிதிக் கூற்றுக்களை கணக் காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப் பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020/2021 இற்கான நிதிக் கூற்றுக்கள் 2021.11.15 அன்றே சமர்ப்பிக்கப்ப ட்டிருந்தன. |
| (கி) | 2015 மே 25 ஆம் தேதியிட்ட PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 ஆம் தேதியிட்ட PED/1/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கை இன் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பேரில், ரூபா 11,400.00 பெறுமதியான 120 லிட்டர் எரிபொருளானது எரிபொருள் கொடுப்பனவுக்கு உரித்தற்ற முகாமையாளருக்கு (கொள்வனவு மற்றும் இறக்கு மதி) வழங்கப்பட்டிருந்தது. | இந்தக் கொடுப்பனவு களை சட்ட விரோதக் கொடுப்பனவுகளாக கருதுதல் வேண்டும். | தடுத்தல் நடவபடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | இந்தச் சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும், சுற்றறிக்கை விதிகளை மீறி தலா ரூபா 10,000 வீதம் எரிபொருள் கொடுப்பனவாக 9 நடுத்தர மட்ட முகாமையாளர் களுக்கு மொத்தம் ரூபா 1,160,000 செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (கீ) | நெல் பயிரிடுவதற்காக தேசிய உரச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கமநலச் சேவை நிலையங்களுக்கு மானியத் திட்டத்தில் உரம் வழங்குவதைத் தவிர, உர சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு தற்போதைய உர விநியோக முறைமையில் கம்பனிக்கு சந்தர்ப்பம் காணப்படாத போதிலும், சிலோன் ∴பெர்டிலைசர் என்ற பெயரில் 1000 எண்ணிக்கையிலான பெரிய மற்றும் சிறிய குடைகளை அச்சிடுவதற்காக சிக்கனமற்ற செலவாக ரூபா 470,000 செலவிடப்பட்டிருநது. சுந்தைப்படுத்தல் மேம்பாட்டிற்காக அச்சிடப்பட்ட இந்த குடைகளின் ஒரு பகுதி நிறுவனத்தின் ஊழியர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்துடன், மீதமுள்ள 455 குடைகள் நுகர்வோர் பொருட் களஞ்சியத்தில் 16 மாதங்களாக வைக்கப்பட்டுள்ளன. | மானியத் திட்டத்தில் விற்பனை மேம்படுத்தல் செலவுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுத்தல் நடவபடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | இந்தச் சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. |
| (கு) | மானிய உர இருப்புகளை முறையான நிர்வாகத்துடன் விநியோகம் செய்யத் தவறிய மையால், கடந்த | கம்பனிக்கு நட்டமேற்படாதவாறு செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | தடுத்தல் நடவபடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | இந்த இருப்பின் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டு ள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியாண்டின் ரூபா 40,288,200 பெறுமதியான 671.47 மெட்ரிக் தொன் உரமும், மீளாய்வாண்டில் ரூபா 13,526,400 பெறுமதியான 225.44 மெட்ரிக் தொன் மானிய உரமும் விவசாயிகளுக்கு விநியோகிக்க முடியாது போனமையால் சேதமடைந்துள்ளதுடன் இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 53,814,600 ஆகும். | வேண்டும். | | |
| (கூ) | இந்த நிதியாண்டில் விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 04 நாணயக் கடிதங்களுடன் தொடர்புடைய 11,024.25 மெட்ரிக் டன் TPS உரத்தை (ஆய்வக அறிக்கை தோல்வியடைந்தமையால்) வழங்குவதற்கு தேசிய உர செயலகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆனால், ஆய்வக அறிக்கைகள் வெளியாவதற்கு முன்பே, மேற்குறித்த உர இருப்புகளை அந்த அங்கீகாரமின்றி விவசாயிகளுக்கு கம்பனி விநியோகித்திருந்தது. சிலோன் பேர்டிலைசர் கம்பனியால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மேற்கூறிய தரமற்ற உர இருப்புகளுக்காக உர மானியத்தை வழங்குவதற்கு தேசிய உர செயலகம் சிபாரிசு செய்யாதிருந்த போதிலும், குறுகிய கால வங்கிக் கடனின் மூலம் உரத்திற்கான கொடுப்பனவை உரிய தேதியில் | தேசிய உர செயலகத்தின் அங்கீகாரம் பெறப்படாது விவசாயிகள் மத்தியில் உரம் விநியோகிக்கப்படக் கூடாது | தேசிய உர செயலகத்தின் அங்கீகாரம் பெறப்படாது விவசாயிகள் மத்தியில் உரம் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் எவ்வித தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இந்தத் தவறு இன்னும் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்துவதற்கும் அதை திறைசேரியின் பொறுப்பாக நீண்ட கால கடனாக மாற்றுவதற்கும் முறையான அனுமதியின்றி மானியத்தைப் பெறுவதற்கும் கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | | | |
| (கெ) | MV Alby Meloty கப்பலில் இருந்து 2019/MOA/CRC/UR (G)/04/01 ஆம் இலக்க கப்பலேற்றல் மற்றும் 814 ஆம் இலக்க கொள்வனவுக் கட்டளை ஆகியவற்றின் கீழ் 14,250 மெட்ரிக் தொன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டது. கப்பலில் இருந்த உரம் கல்லெறிவு நிறமாற்றம் ஏற்பட்டதன் காரணமாக வழங்குனரின் உள்ளூர் முகவருடன் ஒப்பந்தம் செய்து, களனி பெத்தியகொடையில் உள்ள கிடங்கில் இது களஞ்சியப்படுத்தப்பட்டதுடன், இருதரப்பு ஒப்பந்தத்தின் மூலம் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பரிந்துரையின் பேரில், பின்னர் இந்த உரம் சிலோன் பேர்டிலைசர் கம்பனிக்குச் சொந்தமான ஹுனுப்பிட்டிய களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டு, அதன்பின்னர் விவசாயிகளுக்கு விநியோகிக் கப்பட்டது. இரு தரப்பினருக்கு மிடையில் செய்து கொள்ளப் பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிபந்தனை பூர்த்தி செய்யப்படாவிடின் உர இருப்பு நிராகரிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்பட்ட | நியமத்திற்கு அமை வுறாத இறக்குமதி செய்யவோ, இறக்க வோ, சேமித்து வைக் கவோ, விநியோகிக் கவோ கூடாது. | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவிலல்லை. | கவனயீனமாக செய்யப் பட்ட முகாமைத்துவத் தீர்மானம் மாற்றமின்றி உள்ளது. தற்போது இரசாயன உரம் இறக்கு மதி செய்யப்படுவதில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் குறித்து தேசிய உரச் செயலகத்திற்குத் தெரிவிக்கத் தவறியமையாலும், தேசிய உரச் செயலகத்தால் இரசாயன ஆய்வுகூடப் பரிசோதனை நடத்தப்படாமை யாலும் உரம் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய அத்தியாவசிய நடைமு றைகளை கவனத்தில் கொள்ளாமல் கம்பனி நிர்வாகம் செயற்பட்டுள்ளமை அவதானிக் கப்பட்டது. உரம் கல்லெறிவு நிறமாற்றம் ஏற்பட்டது தொடர்பில் தேசிய உரச் செயலகத்தால் களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | | | |
| (கே) | களஞ்சியப் பணியாளருக்கு ரூபா 10,530 ஆகவும், அலுவலகப் பணியாளருக்கு ரூபா 7,938 ஆகவும் மொத்தப் பெறுமதியான ரூபா 4,813,131 தொகை வருடாந்த சீருடைக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட் டிருந்த போதிலும், மேற்கூறிய கொடுப்பனவுகளிற்குரிய சட்ட விதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | காணப்படும் விதிகள் மற்றும் பிரமாணங்க ளிற்கு முரணாக கொடுப்பனவுகள் செய்யப்படக் கூடாது | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது இதுவரை திருத்தப்பட வில்லை. |
| (கொ) | குறைந்த கிரயம் கொண்ட விநியோக முறையை நிறுவாமலும், களஞ்சியங்களின் தேவையை உணராமலும், தீவின் பல்வேறு பகுதிகளில் 46 களஞ்சியங்களை கம்பனி பராமரித்து வருவதால் | குறைந்த கிரயம் கொண்ட விநியோக முறையை கம்பனி நிறுவுதல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறைந்த கிரயம் கொண்ட விநியோக முறையை கம்பனி இதுவரை நிறுவியிருக்கவில்லை. தற்போது இரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுவ தில்லை என்பதால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சம்பளம், நிர்வாகம் மற்றும் போக்கு வரத்து செலவுகள காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் அத்தியாவசியமற்ற அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால் கம்பனிக்கு தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டங்கள் ஏற்பட்டுள்ளன. | | | செயற்பாட்டு நட்டம் மேலும் அதிகரிக்கும். |
| (கோ) | இறக்குமதி செய்யப்பட்ட உரங்களின் கையிருப்பு தொடர்பாக பெறப்பட்ட ஆய்வக சோதனை அறிக்கைகள் தோல்வியடைந்ததன் காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட 02 உர நிறுவனங்களுக்காக 589,587.5 அமெரிக்க டொலர் பெறுமதியான 03 செயலாற்றல் பிணைமுறிகளை மீளப்பெற நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் வழங்குனர்கள் அதற்கு எதிராக நடுவர் மன்றத்தை நாடியிருந்ததுடன், தீர்வுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உடன்படிக்கை நிபந்தனைகளுடன் இணங்கவில்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர், தரமற்ற உரங்களை வழங்கியமைக்கான இழப்பை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, கம்பனி அது அறவிட்டிருந்த செயலாற்றல் பிணைமுறிகளை திருப்பிச் செலுத்தியிருந்தது. இது சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக அவதானிக்கப்படுகின்றது. | தீர்வுக்கு முன்னர் கொடுப்பனவை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்வுக்கு முன்னர் கொடுப்பனவை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ச) | இலங்கை அங்கீகார சபையில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 19,130,944 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களைக் கொண்ட ஆய்வுகூடம் கம்பனிக்குச் சொந்தமாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் நடத்தப்பட்ட மாதிரி பரிசோதனைகளின் எண்ணிக்கை 69 ஆகவும், வருடத்தில் ஈட்டிய வருமானம் ரூபா 278,730 ஆகவும் மாத்திரம் காணப்பட்டது. இந்த ஆய்வக த்திலிருந்து மேலதிக வருவாயை ஈட்டுவதற்கான எந்தவொரு மூலோபாயத் திட்டமும் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட் டிருக்காததன் விளைவாக, ஆய்வகத்தில் உள்ள வளங்கள் குறைவாகப் பயன்படுத்தப்ப டுவதை அவதானிக்க முடிந்தது. | ஆய்வகத்தில் உள்ள உபகரணங்களில் இருந்து உச்ச பயனை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது இரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுவ தில்லை என்பதால் ஆய்வகத்தில் உள்ள வளங்கள் குறைவாக பயன்படுத்தப்படுகின்றன. |
| (சா) | உர வழங்குனர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி, கொள்கல இறங்குதுறை வரை இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்புக்கான அனைத்து செலவுகளும் வழங்குனரால் வழங்கிய விலையில் உள்ளடங்கும். கோப்பு கட்டணம், கொள்கலன் சலவை கட்டணம், வரி மற்றும் முத்திரை கட்டணம் ஆகியன வழங்குநரின் உள்ளூர் முகவரால் ஏற்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறிய பொறுப்புகள் வழங்குனரால் கப்பல் முகவருக்கு மாற்றப்பட் | வழங்குனர்களுடன் செய்து கொள்ளப் பட்ட உடன்படிக்கை யின் படி கொடுப்பன வுகள் செய்யப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது இரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுவ தில்லை என்பதால் கம்பனியால் செய்யப்பட்ட செல்லுபடியாகாத கொடுப் பனவுகள் அவ்வாறே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | டதால், கடந்த இரண்டு ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட மொத்தம் ரூபா 4,222,578 தொகை பொருத்தமற்ற செலவு களுக்காக செலுத்தப்பட்டுள் ளது. | | | |
| (சி) | 2020/2021 பெரும் போகத்தில் நெல் விவசாயத்திற்கு விநியோகிப்பதற்காக போதிய மானிய உரம் கிடைக்காத காரணத்தினால், அந்தக் குறையைப் போக்க 3500 மெற்றிக் தொன் யூரியா உரம் ஏனைய பயிர்களுக்கு உரம் வழங்கும் வழங்குனர்களிடம் இருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்டது. மேலும், மேற்கூறிய உர இருப்பு, அரசாங்கத்தால் வழங்கப்படும் மானிய உரம் என குறிப்பிடப்படாமல், இலங்கை உரக் கம்பனியின் பெயரால், கம்பனி பொதிகளின் கீழ் கமநல சேவை நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டமையினால், அரச உரம் முறைகேடாக பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. | வெற்றிகரமான புலனாய்வை மேற் கொண்டு அவ்வா றான மோசடி இடம் பெறாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது இரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுவ தில்லை. |
| (சீ) | கொள்வனவு வழிகாட்டல் ஏற்பாடுகள் மற்றும் திரவ உரம் வழங்குவது தொடர்பாக உள்ளூர் வழங்குனர்களிற்கும் இலங்கை உரக் கம்பனிக்கும் இடையே செய்து கொள்ளப்பட் டுள்ள உடன்படிக்கையின் படி இணங்கி ஒழுகாமையால், 2018 ஆம் ஆண்டில் ரூபா 94,438,766 தொகையான இரண்டு நிலையான வைப்புத் | அவ்வாறான இழப்பு ஏற்படாதிருக்க நடவ டிக்கை எடுப்பதுடன், இந்த இழப்புக்கள் தொடர்பில் புலனா ய்வு செய்யப்பட்ட பின்னர் தீர்மானம் மேற்கொள்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகைகளை பிணையாக வைத்து வங்கி மேலதிகப்பற்றை பெறுவதற்கான வாய்ப்பை கம்பனியின் முகாமைத்துவம் உர வழங்குனர்களிற்கு வழங்கியிருந்தது. இந்த பிணை உத்தரவாதத்தைப் பயன்படுத்தி, உள்ளூர் வழங்குனர்கள் 2019 பெப்ரவரி 12 வரை ரூபா 75,980,000 வங்கி மேலதிகப் பற்று வசதியைப் பெற்றுள்ளனர், மேலும், அன்றைய தேதியில் திரட்டப்பட்ட வட்டியுடன் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 80,502,290 ஆகும். மேற்கூறிய வங்கி மேலதிகப் பற்று வசதியை தீர்ப்பதற்கு உள்ளூர் வழங்குனர் நிறுவனம் நடவடிக்கை எடுக்காததால், வங்கி உத்தரவாதமாக கம்பனி வைத்திருக்கும் இரண்டு நிலையான வைப்புகளில் இருந்து நிலுவையாக உள்ள கடன் மீதிகளை செலுத்தித் தீர்ப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த முறைசாரா மற்றும் சட்டவிரோத கொடுக்கல் வாங்கல் காரணமாக இலங்கை உர நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 17 மில்லியன் வட்டி வருமானம் அடங்கலாக ரூபா 97.5 மில்லியன் ஆகும். | | | |
| (சு) | 2017 ஏப்ரல் 17 ஆம் திகதி இலங்கை உரக் கம்பனிக்கும் உள்ளூர் வழங்குனர் நிறுவனம் ஒன்றிற்கும் | அவ்வாறான இழப்பு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுப்பதுடன், இந்த இழப்புக்கள் | சட்டரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்ப டவில்லை. | இந்த சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட திரவ உரத்தில் ரூபா 79,716,652 பெறுமதியான 109,408 லீற்றர் காலாவதியான உரம் ஹுன்பிட்டியவில் உள்ள பிரதான களஞ்சியசாலையில் 2021 மார்ச் வரை இன்னும் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தொடர்பில் புலானாய்வு செய்யப்பட்ட பின்னர் தீர்மானம் மேற்கொள்தல் வேண்டும். | | |
| (சூ) | கம்பனியின் பொது விளம்பரங்களை லேக் ஹவுஸ் மூலம் வெளியிடும் முறையிலி ருந்து விலகி, தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றாது ஒரு தனியார் விளம்பர நிறுவனத்தின் மூலம் பத்திரிகை விளம்பரங்களை வெளியிட அனுமதித்திருந்தமையால், முன்னைய காலத்தில் லேக் ஹவுஸில் மூலம் விளம்பரங்களை வெளியிடுவதற்கான செலவுடன் ஒப்பிடுகையில் கம்பனிக்கு இரண்டு மடங்குக்கு மேல் செலவு ஏற்பட்டிருந்தது. பொது விளம்பரங்களிற்காக மேற்கூறிய தனியார் நிறுவனத்திற்கு நிதியாண்டில் செலுத்தப்பட்ட தொகை ரூபா 2,243,376 ஆகும். | கோள்வனவு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். | உரிய சேவைகள் தற்போது லேக்ஹவுஸ் ஊடாக இடம்பெறுகின்றன. | மேலதிகக் கொடுப்பனவு மாற்றமின்றி உள்ளது. |
| (செ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் | உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இழைக்கப்பட்ட அநீதி | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விசாரரணை மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் சேர்க்கப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறையை மாற்றுவதன் மூலம், நேர்முகப் பரீட்சையின் போது செயலாற்றலக்காக அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கலை 25 புள்ளிகளில் இருந்து 60 ஆக அதிகரிப்பதன் மூலமும் பதவிக்கு மிக முக்கியமாக காணப்படுகின்ற தொடர்புடைய துறையில் அனுபவத்திற்கான புள்ளிகளை 30 முதல் 5 புள்ளிகள் வரை குறைப்பதன் மூலமும், நேர்முகத் தேர்விற்குத் தகுதி பெற்ற தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரருக்கு மிகவும் அநீதி இழைக்கும் வகையிலும், 2019 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு, தகுதி குறைந்த மற்றும் அனுபவம் குறைந்த 28 நபர்களை கம்பனியின் முகாமைத்துவம் பாரபட்சமாக நியமித்துள்ளது. | திருத்தப்படுதல் வேண்டும். | | |
| (சே) | முன் மானியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து நெல் பயிர்ச் செய்கைக்கான உரங்களை வழங்கும் அரசாங்க முகவராக இலங்கை உரக் கம்பனி செயற்பட்டு வருவதுடன், அன்றிலிருந்து விற்பனை ஊக்குவிப்பு மற்றும் ஏனைய சந்தைப்படுத்தல் நடவடிக்கை கள் வெகுவாகக் குறைக்கப் பட்டுள்ளன. தேசிய | தேவைக்கேற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்ப டுவதுடன் சம்பளம் மற்றும் படிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரித்த பதவிய ணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த விடயம் இன்னும் தீர்க்கப்படவில்லை. |


உரச் செயலகத்தின் அறிவுறுத்தலின் பேரில் பிராந்திய உரக் களஞ்சியங்களால் உரம் வழங்கப்படுவதுடன் வயல்களில் மேற்கொள்ளப்படுகின்ற சந்தை ப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் புதிய சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல் அல்லது சந்தைப்படுத்தல் மேற்பார்வை போன்ற செயற்பாடுகள் விநியோக செயற்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, அங்கீகரிக்கப் பட்ட பதவியணியைத் திருத்து வதற்குப் பதிலாக, அங்கீகரிக் கப்பட்ட சந்தைப்படுத்தல் பதவியணியிலுள்ள மாவட்ட சந்தைப்படுத்தல் ஊக்குவிப் பாளர்கள், பிராந்திய சந்தைப் படுத்தல் ஊக்குவிப் பாளர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு அலுவலர்கள் ஆகிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களை கம்பனி தொடர்ந்து நிரப்பி வருவதுடன், 2021 ஆம் ஆண்டில் 03 பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிகளுக்கு பதிற்கடமை அடிப்படையில் ஆட்சேர்த்தல் செய்யப்பட்டிருந் தது. இதன் விளைவாக, கம்பனி சம்பளம் மற்றும் கொடுப்பனவு களுக்கு பயனற்ற விதத்தில் செலவழிக்க வேண்டியிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| (சொ) | மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக் கப்பட்ட நிரந்தரப் பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர் களை ஆட்சேர்ப்பு செய்யாமல், 12 அமைய ஊழியர்களின் சேவைகள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மீள வேலைக்கமர்த் தல் அடிப்படையில் பெறப்பட்டு ரூபா 1,362,691 செலுத்தப்பட் டிருந்தது. அத்துடன் நிறுவனத் தின் தலைவரின் ஒப்புதலுடன், 04 பயிற்சியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மீளாய்வாண்டில் ரூபா 274,850 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட் டுள்ளன. | அங்கீகரித்த பதவிய ணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடி க்கை எடுக்க வேண்டும். | நிரந்தரமாகன நியமங் களை செய்ய நடவடி க்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிரந்தரப் பதவிகள் இது வரை நிரப்பப்படவில்லை. |
| (சோ) | தோழில்முயற்சி வளத் திட்டமிடல் முறைமையை (ஈஆர்பி சிஸ்டம்) நிறுவுவதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் நிதியாண்டு வரை ரூபா 38,176,014 செலவிடப்பட்டிருந்த போதிலும், மேற்கூறிய முறைமை முழு நிறுவனம் மற்றும் முழு செயல்முறை இனை உள்ளடக்கும் வகையில் நிறுவப்படாமையாலும், நிறுவப் பட்ட முறைமை வலுவான கட்டுப்பாடுகள் இல்லாமல் இயங்குகின்றமையாலும், நிறுவப்பட்ட செலவிலிருந்து கம்பனி எதிர்பார்த்த பெறு பேற்றை அடைந்திருக்காததுடன் ஆண்டொன்றிற்கு பராமரிப்பு செலவாக சுமார் ரூபா 1,580,000 தொகை | முழு நிறுவனத்தை யும், அனைத்து செயல்முறையையும் உள்ளடக்கியதாக முறைமை உருவாக்க ப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முழு நிறுவனத்தையும், அனைத்து செயல்முறை யையும் உள்ளடக்கியதாக முறைமை உருவாக்க ப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறைமையை தாபித்த நிறுவனத்திற்கு செலுத்தப் படுகின்றது. | | | |
| (ட) | உரத்தைப் பெறுதல், வழங்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் உள்ளிட்ட உரமிடுதல் செயற்பாடு முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டிருந்த போதிலும், எவரொருவரும் கணினி முறைமைக்கு தரவை உள்ளீடு செய்யக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாலும், அத்தியாவசிய பொது கட்டுப்பாடுகள் மற்றும் கணினி கட்டுப்பாடுகள் செயற்படுத்தப் படாமையாலும் இந்த இருப்புக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய கணினி முறைமை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை. | தேவையான பொது கட்டுப்பாடுகளும் முறைமைக் கட்டுப் பாடுகளும் அமுல்படு த்தப்பட வேண்டும் | கணனிக்கு தரவுகளை உள்ளீர்த்தல் முறைமை நாளதுவரையாக்கப்பட் டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | இந்த சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. |

## 4.6 NSB நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 1,316,195,863 | 1,313,317,282 | 16,171,543,209 | 13,448,722,051 | 2,878,581 | முனைப்பழியற்ற |
| **2019** | 1,979,912,319 | 1,211,906,432 | 15,986,045,693 | 12,648,922,388 | 768,005,887 | முனைப்பழியற்ற |
| **2020** | 2,025,721,166 | 1,124,633,699 | 16,881,766,060 | 13,048,694,869 | 901,087,467 | முனைப்பழியற்ற |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 1,316.20 | 1,313.32 | 16,171.54 | 13,448.72 | 2.88 |
| 2019 | 1,979.91 | 1,211.91 | 15,986.05 | 12,648.92 | 768.01 |
| 2020 | 2,025.72 | 1,124.63 | 16,881.77 | 13,048.69 | 901.09 |

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டு அமைச்சரவையால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திட்டத்தை மறுசீரமைப்பதற்கான முன்னணி முகாமையாளராக நிறுவனம் நியமிக்கப்பட்டது. இதற்கான கட்டணம் மற்றும் | திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய நிலுவையை கம்பனி அறவிடுதல் வேண்டும். | இதுவரை பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சமீபத்திய கோரிக்கை 2021.07.20 அன்று அனுப்பப்பட்டது. | ரூபா 88,939,587 தொகை இன்னும் நிலுவையாக உள்ளதுடன் நிதி அமைச்சிற்கு பல நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. |


| | | | | |
|---|---|---|---|---|
| | செலவுகள் பொது திறைசேரியில் இருந்து மீளப் பெறப்படுதல் வேண்டும். அதன்படி, திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய நிலுவை ரூபா 246,939,587 ஆக இருந்தது. 2020 இன் இறுதியில் ரூபா 88,939,587 நிலுவையில் உள்ளது. | | | |
| (ஆ) | 2018 மார்ச் 02 முதல் ஒப்பந்த அடிப்படையில் செயலாளர் பதவிக்கு NSB நிதி முகாமைத்துவ கம்பனிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கியின் கிளைக்கு இணைக்கப்பட்டுள்ளார். | கம்பனியில் சேவை யாற்றுகின்ற ஊழியர் களிற்கு மாத்திரமே கம்பனி கொடுப்பனவு செய்தல் வேண்டும். | கூறப்பட்ட ஊழியர் NSB நிதி முகாமைத் துவக் கம்பனியின் தலைமை அலுவலக த்திற்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார் | கருத்து தெரிவித்த படி சிக்கல் சரிசெய் யப்பட்டுள்ளது. |
| (இ) | 2015 யூன் 17 ஆந் தேதியிட்ட PED 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை இன் பந்தி 2.8 இன் படி, தலைவருக்கான மாதாந்த கொடுப்பனவு, கூட்ட அமர்வுக்கான கொடுப்பனவு அல்லது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகளைத் தவிர வேறு ஏதேனும் கொடுப்பன வுகளை செலுத்துவதாயின் நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் மாத்திரமே செலுத்த முடியும்.<br><br>எவ்வாறாயினும், மேற்படி | கம்பனி பொது முயற்சிகள் சுற்றறி க்கையுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். | மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகள் கவனத் திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் 2019 இல் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை.<br>KMP இற்காக ஊதியக் கொள்கை தயாரிக்கப்பட்டு, அது ஒப்புதலுக்காக BHRRC மற்றும் கம்பனியின் பணிப்பா ளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | வழங்கிய கருத்துத் தெரிவிப்பில் எந்த மாற்றமும் இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் படி முன்கூட்டிய எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெறாது, 2015 சனவரி முதல் 2018 நவம்பர் வரையிலான காலப்பகுதிக்கான தொழில்முறை கொடுப்பனவாக NSB நிதி முகாமைத்துவ கம்பனியின் தலைவருக்கு ரூபா 53,195,450 செலுத்தப்பட்டு ள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அதிகாரபூ ர்வமாக கம்பனியின் தலைவ ராகவும் செயற்படுகின்றார். | | | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டுக்கான இலாபம் ரூபா 35,500 ஆக இருந்த போதிலும், 2018 நவம்பர் 02 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் ரூபா 2,543,546 தொகை உபகாரச்சம்பளமாக அங்கீகரிக் கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிற்குப் அறிக்கைகளுக்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | உபகாரச்சம்பளத்தை செலுத்துவதற்கு முன்னர் கம்பனி அதன் இலாபம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். | வங்கியின் செயலா ற்றல் மீது உபகாரச் சம்பளம் செலுத்தும் முறையின்படி கம்பனியும் அதன் ஊழியர்களுக்கு உபகாரச்சம்பளத்தை செலுத்தியிருந்தது. இருப்பினும், கம்பனி யின் செயலாற்றலின் அடிப்படையில் உபகாரச்சம்பளம் வழங்குவதற்கு கம்பனி BHRRC இல் முன்மொழிந்துள்ளது. | முன்மொழியப்பட்ட செயலாற்றல் அடிப்படையிலான உபகாரச்சம்பளத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்படாததால், வங்கியின் உபகாரச் சம்பளம் செலுத்தும் நடைமுறையை நிறுவனம் இன்னும் பின்பற்றுகிறது. |
| (உ) | 2019 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் வசதிக்காக மொபைல் செயலியை அறிமுக ப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த நோக்கத்தை | கம்பனியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கம்பனி திட்டமிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த | வாடிக்கையாளர் முகாமைத்துவ முறை மையை செயல்படுத் துதல் செயல்பாட்டில் உள்ளதுடன் அடுத்த ஆண்டில் இது மொபைல் செயலியா | அதே நிலையிலேயே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்காக கம்பனி இதுவரை அந்த மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | வேண்டும். | கப் பயன்படுத்தப்படும். | |
| (ஊ) | உள்ளக செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன், கம்பனி 2019 க்குள் ஒரு புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையை பெற்று, 2020 க்குள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவை உருவாக்க திட்டமிட்டிருந்தது. இருப்பினும், 2021 செப்தெம்பர் வரை மேற்குறித்த நோக்கங்களை கம்பனியால் நிறைவேற்ற முடிந்திருக்கவில்லை. | கம்பனியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கம்பனி திட்டமிட்ட வருடாந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். | புதிய திறைசேரி முறைமையை அமுல்படுத்தும் செயற்பாட்டில் கம்பனி ஈடுபட்டுள்ளது. தொலைநிலை ஆதரவுடன் நேரலைக்குச் செல்வதற்கு முன் சில மேம்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனால், தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், இப்போது UAT கையொப்பத்தை முடித்துவிட்டு நேரலைக்கு வருவதற்கான கட்டத்தில் கம்பனி உள்ளது.<br><br>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவை உருவாக்கும் செயல்பாட்டில் கம்பனி ஈடுபட்டுள்ளதுடன் அந்த பிரிவை அமைப்பதற்காக பிணைகள் மற்றும் பரிமாற்ற ஆணைக் குழுவின் ஒப்புதலைக் கோரியுள்ளது. | வழங்கப்பட்ட கருத்துரையில் எந்த மாற்றமும் இல்லை. |

## 4.7 சீபேங் ஹொலிடே ஹோம் (பிரைவட்) லிமிடட்.

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த ச் சொத்துக்க ள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம் ) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 140,996,616 | 143,402,211 | 36,517,021 | 36,277,384 | (2,405,595) | முனைப்பழியற்ற |
| **2019** | 122,806,633 | 128,083,056 | 65,853,452 | 70,890,238 | (5,276,423) | முனைப்பழியற்ற |
| **2020** | 65,141,105 | 98,153,365 | 52,784,487 | 91,200,588 | (33,012,264) | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அநுராதபுர குத்தகைக் கட்டிடத்திற்காக கம்பனிக்கும் (குத்தகைதாரர்) இலங்கை வங்கிக்கும் (குத்தகைய ளிப்போர்) இடையே எழுத்துப்பூர்வ உடன்படி க்கை எதுவும் இல்லை என்பது | குத்தகைதாரருடன் எழுத்துப்பூர்வ ஒப்பந் தத்தில் கைச்சாத்திட பரிந்துரைக்கப்படுகி றது. | நாங்கள் வங்கியுடன் கலந்துரையாடி வருகிே றாம். இது 2022 யூன் 30 க்குள் முடிவடையும் | குறித்துக் கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | இட ஒதுக்கீட்டை ஏற்கவும் கையாளவும் மையப்படுத்த ப்பட்ட இடம் ஒன்று இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br>உதாரணமாக: இலங்கை வங்கி நலன்புரி திணைக்களம் (கதிர்காமம், அனுராதபுரம், - ஓல்ட்விங் நுவரெலியா)<br>உதாரணமாக: கம்பனியின் தலைமை அலுவலகம் (அநுராதபுரம்- பினாக்கிள் டிக்கோயா - மேல் - கீழ்) | வாடிக்கையாளர்களி ன் முன்பதிவுகளை ஒரே இடத்தில் பெற பரிந்துரைக்கப்படுகிற து. | ஒரு விரிவான மென் பொருள் அமைப்பை அறிமுகப்படுத்தி செயல் படுத்துவது குறிப்பி டத்தக்கதாக உள்ளது. | இலங்கை வங்கி ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட சகல முன்பதிவு வசதிகளும் இலங்கை வங்கியின் நலன்புரித் துறையால் நிர்வகிக்கப்படுகிறது. ஆனால் வெளி வாடிக்கையாளர்களு க்கு வழங்கப்படும் வசதிகளின் முன்பதிவு கம்பனியால் நிர்வகிக் கப்படுகிறது. இந்த இரண்டுக்கும் இடையே தெளிவான எல்லைகள் காணப் படுவதால் சிக்கல் ஏற்படுவதில்லை. |
| (இ) | நிலையான சொத்துகள் பதிவேட்டில் ரூபா 10,693,132 பெறுமதியான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் உள்ளடக்கப் பட்டுள்ளமை அவதானிக்க ப்பட்டது. கம்பனியால் பயன்படுத்தக்கூடிய நிலை யில் உள்ள சொத்துக்களை மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படா ததுடன் பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு அவற்றை நிதிக் கூற்றுக்களிற்கு எடுக்கவோ அல்லது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள | முழுமையாக தேய்மா னம் செய்யப்பட்ட சொத்துக்களை மறுமதிப்பீடு செய்ய அல்லது பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த விடயத்தை கடந்த காலத்தில் பூரணப்படுத்த முடிந்திருக்கவில்லை என்பதால் 2021 இன் இருப்பு சரிபார்ப்புடன் முடிக்க திட்டமிடப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதமுள்ள சொத்துக்களை பதிவழிக்கவோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (ஈ) | மாதாந்த பொழிப்பாக ஓய்வு இல்லங்களிலிருந்து பெறப் பட்ட வருமானம், விலைப் பட்டியலைப் பராமரிக்காமல் மொத்தமாக கணக்கீட்டு முறைமைக்கு எடுக்கப்பட் டுள்ளது. | விலைப்பட்டியல் பட்டியலைப் பராமரிக்க பரிந்துரைக்கப்படுகிற து, மேலும் விலைப்பட்டியலில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து நகலெடுக்க அங்கீகரிக்கப்பட்ட நபரால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. | நீண்ட கால தீர்வாக தற்போது ஒரு விரிவான மென்பொருள் அமை ப்பை வாங்குவதற்கான சாத்தியத்தை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். | தன்னியக்க அமைப்பு இல்லாத நிலையில் ஒவ்வொரு ஓய்வகத்தி லிருந்தும் பெறப்பட்ட மாதாந்த அறிக்கை களை ஒத்திசைத்த பின்னரே நாங்கள் கணக்கு வைக்கி றோம். கணக்குப் பதிவானது ஒரு மாதாந்த புள்ளிவிவர மாக காணப்பட்ட போதிலும், நாங்கள் தினசரி கொடுக்கல் வாங்கல்களை கை முறையாகப் பராமரி த்து வருகிறோம். |
| (உ) | நிறுவனம் ஒரு ‘‘எக்செல்’’ வேலைத்தாளில் கைமுறை யாக இருப்புப் பதிவுகளை பராமரித்து வருவதுடன், காலப்பகுப்பாய்வு அறிக்கை இல்லை என்பதால் இது முறைகேடுகள், முரண்பாடு கள், நிதி பதிவுகளில் வழுக்கள் மற்றும் மெதுவாக நகரும் மற்றும் காலாவ தியான இருப்புக்களின் பெறுமதிகளை அங்கீகரிப் பதில் சிரமங்களை ஏற்படுத்துவதாக உள்ளது. | சரக்கு நகர்வுகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் ஒரு சரக்கு தொகுதியை செயல்படுத்த பரிந்துரைக்கப்படுகிற து. | நீண்ட கால தீர்வாக தற்போது ஒரு விரிவான மென்பொருள் அமை ப்பை வாங்குவதற்கான சாத்தியத்தை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். | விரிவான தன்னியக்க அமைப்பு இல்லாத நிலையில், இருப்பு பராமரிப்புக்காக எக்செல் ஷீட்களை நாங்கள் பராமரித்து வருகிறோம் என்பது சரியானது. |
| (ஊ) | கீழே உள்ள இடங்களுக்கு அசல் மற்றும் கையொப்ப மிடப்பட்ட முகாமைத்துவக் கட்டண ஒப்பந்தங்கள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முறையான ஒப்பந்தங்களைப் பேணுவது பரிந்துரைக்கப்படுகிற | CTI மஹரகமவுக்கான ஒப்பந்தங்களை புதுப் பிப்பதற்கான ஏற்பாடு களை செய்துள்ளோம். நிர்வாக தேநீர் | அனுராதபுரம், கதிர் காமம் மற்றும் டிக்கோயா ஆகிய மூன்று இடங்களு க்கும் கையொப்ப மிடப்பட்ட ஒப்பந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | து. | சேவைக்கான புதிய ஒப்பந்தம் கையெழுத்திடப்படும். | ங்கள் 2024 திசெம்பர் 31 வரை செல்லுபடியாகும். |
| வகை | இடம் | | கிராந்துருகோட்டே மற்றும் நுவரெலியாவில் உள்ள இரண்டு கிளை ஊழியர் குடியிருப்புகளையும் தற்போதுள்ள ஒப்பந்தத்துடன் சேர்த்துக்கொள்வோம். | அனைத்து ஓய்வு இல்லங்களுக்கான ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது. கிளை ஊழியர் குடியிருப்பு ஒப்பந்தமும் கையெழுத்தானது (கிராந்துருகோட்டை மற்றும் நுவரெலியாவைத் தவிர). |
| ---------- | ---------- | | | |
| சீபேங் ஓய்வகம் | அனுராதபுரம், கதிர்காமம், டிக்கோயா | | | |
| ஓய்வு இல்லங்கள் | பண்டாரவளை, ஹப்புத்தளை, லிந்துலை, திருகோணமலை, ஊர்காவற்துறை, நாவல | | | |
| நிர்வாக தேநீர் சேவை | - | | | தலைமை அலுவலக உணவக செயல்பாடுகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. |
| CTI மஹரகம | - | | | CTI மஹரகமவுக்கான முகாமைத்துவ ஒப்பந்தம் காலாவதியானது. |
| தலைமை அலுவலகம் | கொழும்பு உணவகம் | | | |
| பணியாளர் குடியிருப்பு | - | | | |

## 4.8 BOC டிரவல்ஸ் (பிரைவட்) லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 267,307,000 | 237,156,000 | 338,187,000 | 90,431,000 | 30,151,000 | முனைப்பழியற்ற |
| **2019** | 300,315,000 | 270,659,000 | 402,370,000 | 143,932,000 | 29,656,000 | முனைப்பழியற்ற |
| **2020** | 79,465,000 | 141,383,000 | 309,775,000 | 110,873,000 | (61,918,000) | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கையாளுதல் அதிகாரிகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் காலம் மற்றும் பெறுமதியைக் கட்டுப்படுத்த கம்பனியிடம் சரியான கடன் கொள்கை ஒன்று இல்லை. இதன் விளைவாக, தனிநபர் கையாளுதல் அலுவலரின் கணக்குகளின் கீழுள்ள நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்பட்டோர் மீதிகள் அதிகரித்துள்ளன. அவற்றில் சில பின்வருமாறு: | கடன் விற்பனை மற்றும் கடன்களை மீளப்பெறும் நடைமுறைகள் மீதான சரியான கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. | கணக்குப் பிரிவிலிருந்து ஒரு குழு அமைக்கப்பட்டு, வாரந்தோறும் சேகரிப்பு நிலை குறித்து விற்பனை ஊழியர்களைக் கொண்ட குழுவுடன் கலந்துரையாடப்படுகின்றது. நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்பட்டோருக்கு எதிராக செயற்பாட்டு | |

| கையாளுதல் அலுவலரின் பெயர் | 2018.12.31 இலுள்ள மொத்த நிலுவை | 270 நாட்களுக்கும் மேலாக நிலுவையிலுள்ள தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கசுன் | 3,518,020 | 1,681,791 |
| ரோமேஷ் | 6,531,429 | 2,782,792 |
| முத்துமாலி | 660,700 | 294,500 |

சிக்கல்கள் சம்பந்தப்படாத சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) செலுத்த வேண்டிய ஏனைய எட்டு கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 1,441,777 தொகையான மொத்த நிலுவைகள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக அதே கணக்கில் வைத்திருக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. உண்மையான பொறுப்பை மீள் மதிப்பீடு செய்ய நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் உண்மையான பொறுப்பு எதுவும் இல்லையாயின், தொடர்புடைய ஒப்புதல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் நீண்டகால நிலுவைத் தொகையை பதிவழிப்புச் செய்தல் வேண்டும். நீண்ட கால நிலுவைத் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2019 திசெம்பர் 31 இல் மீதி | நீண்டகால நிலுவை (05 ஆண்டுகளிற்கும் மேல் நிலுவையில் உள்ளவை) |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| மீளிக்கப்பட வேண்டியவை | 9,157,714 | 676,284 |
| வாடிக்கையாளரிடமிருந்து கிடைத்த முற்பணம் | 4,246,486 | 617,799 |
| வங்கியால் இனங்காணப் படாத செலவு | 1,974,514 | 95,850 |

நீண்ட கால நிலுவைத் தொகைகளை மதிப்பிட்டு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது.


நீண்ட காலமாக நிலுவையிலுள்ள கடன்பட்டோருக்கு தொடர் கடிதங்கள் மற்றும் கோரிக்கை கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் முடிவுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வைத்தல்கள் | | |
| DAM டூர்ஸ் இலிருந்து பெறப்பட்ட முற்பணம் | 5,899,189 | 22,370 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணம் - வெள்ளவத்தை | 2,208,521 | 10,000 |
| வெளிச்செல்லும் பயணங்களுக்கான முற்பணம் | 3,679,947 | 19,474 |
| **மொத்தம்** | **27,166,371** | **1,441,777** |

| | | |
|---|---|---|
| (இ) | வாடிக்கையாளர்களுடன் வணிகத்தைக் கையாளும் அதிகாரியால் டிக்கெட் மற்றும் சுற்றுலா வருமானத்திற்கான இலாப எல்லை முடிவு செய்யப்படுவதால் அவை குறித்து சரியான கட்டுப்பாடு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இலாப எல்லையை அமைக்க கொள்கை ஒன்று பரிந்துரைக்கப் படுவதுடன் அந்தக் கொள்கையிலிருந்து ஏதேனும் விலகல் இருந்தால், அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் ஒப்புதல் பெற பரிந்துரைக்கப்படுகிறது. |

## 4.9 ஆதன அபிவிருத்தி பிஎல்சி

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 1,040,710,662 | 367,498,212 | 3,900,467,138 | 569,347,895 | 673,212,450 | முனைப்பழியற்ற |
| **2019** | 1,290,746,282 | 394,056,701 | 4,443,630,389 | 706,556,730 | 896,689,581 | முனைப்பழியற்ற |
| **2020** | 944,475,161 | 426,191,102 | 4,934,358,171 | 781,228,213 | 518,284,059 | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு ஆயுள் காலம் முழுவதற்கும் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் இருப்பில் உள்ளடக்கப் | நீண்டகாலமாக பொருள் உருப்படிகளிலுள்ள மூலதனமாக்கக்கூடிய சொத்துக்களை முகாமைத்துவம் சரியாகக் கண்டறிய வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. | தயவுசெய்து தற்போதைய நிலைமையில் வழங்கப்பட்டுள்ள விளக்கத்தை பார்க்கவும். | BOC தலைமையக கட்டிடத்தின் கட்டிட சேவைகளுக்கு தேவையான நீண்ட கால பொருள் இருப்பை கம்பனி கொண்டுள்ளது. உள்ளூர் சந்தையில் இவை கிடைக்காததாலும், இறக்குமதி மற்றும் விநியோகத்திற்கான காலம் பொதுவாக 2-4 மாதங்களுக்கும் மேலாக இருப்பதாலும், தடையின்றி கட்டிட |


| | | | | |
|---|---|---|---|---|
| | பட்டுள்ள. | மேலும், அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுள் காலத்தை மதிப்பீடுசெய்து, அதற்கேற்ப தேய்மானம் செய்ய வேண்டும். | | சேவைகளை பராமரிக்க இந்த பொருட்களை எமது இருப்பாக முன்கொண்டு செல்லப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த பொருள் உருப்படிகள் மூலதனமாக்கலுக்கான அளவுகோல்களை பூர்த்தி செய்தால், அவை வழங்கப்படுகையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக மாற்றப்பட்டு தொடர்புடைய தேய்மானக் கொள்கை பயன்படுத்தப்படும். எவ்வாறாயினும், காலாவதியான பொருள் இருப்பை சரிபார்ப்பதற்கும், காலாவதியான இருப்புகளை கண்டுபிடிப்பதற்கும், கம்பனி வருடாந்த அடிப்படையில் இருப்புச் சரிபார்ப்பையும், காலாண்டு அடிப்படையில் தெரிவு சரிபார்ப்பையும் மேற்கொள்கிறது. அதன்படி, காலாவதியான இருப்புக்களை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) | ஆகக்குறைந்தது 20 சதவீதம் பொது மக்களிற்கு உரித்தாக காணப்பட வேண்டுமென்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் (சீஎஸ்ஈ) பட்டியலிடல் விதிகளின் கீழுள்ள 7.13 ஆம் விதியுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. | சீஎஸ்ஈ விதிகளுக்கு இணங்குவதற்கு அல்லது நீக்குதல் செயல்முறையை ஆரம்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தயவுசெய்து தற்போதைய நிலைமையில் வழங்கப்பட்டுள்ள விளக்கத்தை பார்க்கவும். | சணிப்பாளர் சபை தற்போது சிறுபான்மை பங்குதாரர்களுக்கான வெளியேறும் சலுகை விலையை அங்கீகரித்துள்ளதுடன் 2022 பெப்ரவரி 14 அன்று நடைபெறவிருக்கும் சபைக் கூட்டத்தில் CSE இன் அதிகாரப்பூர்வ பட்டியலில் இருந்து PDL நீக்குவதற்கான சபை தீர்மானம் சமர்ப்பிக்கப்படும். சபை பரிந்துரைக்கும் பங்குகளை மீளக் கொள்வனவு செய்வதன் மூலம் கம்பனியை பட்டியலிடலிருந்து நீக்கப்படுவதுடன் 2022 மார்ச் 3 ஆவது வாரத்தில் நடைபெறவிருக்கும் அசாதாரண பொதுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கூட்டத்தில் இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் (SEC) விதி 5 இன் கீழ் பங்குதாரர்கள் மேற்படி தீர்மானத்தை அங்கீகரித்தால், SEC இன் கூறப்பட்ட விதியில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி கம்பனியை பட்டியலிடலில் இருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை கம்பனி மேற்கொள்ளும். |
| (இ) | நேர வருகை மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ முறைமைக்கான பாதுகாப்பு கணக்காய்வு பதிவேடு காணப்படவில்லை. எனவே, அவ்வப்போது பாதுகாப்புப் பதிவேடுகளின் பரிசோதனை மேற்கொள்ளப் படவில்லை. | பாதுகாப்பு கணக்காய்வுப் பதிவுகள் பயனர் செயல்பாடுகள் மற்றும் சலுகை பெற்ற பணிகளை பதிவு செய்ய உள்ளமைக்கப்பட வேண்டுமென்பதுடன் பதிவுகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். | டீஎம்எஸ்-நேர வருகை மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ முறைமைக்கு அறிக்கை சேர்க்கப்பட்டுள்ளது. | பூரணப்படுத்தப்பட்டது. |
| (ஈ) | ஒரு விரிவான கடவுச்சொல் கொள்கை நடைமுறையில் இருந்த போதிலும், அதற்கான கடவுச்சொல் அளவுருக்கள் அந்தந்த முறைமைகளில் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. | கம்பனியின் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளிலுள்ள ஆவணப்படுத்தப்பட்ட கடவுச்சொல்லானது பயன்பாட்டிலுள்ள கொள்கை முறைமைகளில் நடைமுறை ரீதியாக செயல்படுத்தப்பட வேண்டும். | கடவுச்சொல் அளவுருக்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. | பூரணப்படுத்தப்பட்டது. |
| (உ) | கொழும்பு பங்குச் சந்தையின் 7.13.1 ஆம் பட்டியலிடுதல் விதிகளுக்கு இணங்காததன் | நீக்குதல் செயல்முறையை விரைவுபடுத்த பரிந்துரைக்கப்படுகிறது. | | தயவுசெய்து கணக்காய்வு அவதானிப்பு 02 இல் தரப்பட்டுள்ள விளக்கத்தை பார்க்கவும். |

காரணமாக, கம்பனி 2014 மார்ச் 21 இல் அதன் பட்டியலிடுதல் நீக்கும் செயல்முறை யைத் தொடங்கியது. இது ஏற்கனவே ஆறு வருட காலப்பகுதியைக் கடந்துவிட்டதுடன் நீக்குதல் செயல்முறை இன்னும் இடம்பெற்று வருகின்றது.

## 4.10 BOC ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ (பிரைவட்) லிமிடட்.

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 399,736,762 | 134,172,721 | 1,814,317,466 | 93,909,696 | 265,564,041 | முனைப்பழியற்ற |
| **2019** | 450,532,152 | 138,250,288 | 1,927,313,990 | 98,966,066 | 312,281,864 | முனைப்பழியற்ற |
| **2020** | 421,185,820 | 129,694,732 | 2,050,867,865 | 111,488,029 | 291,491,088 | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியின் கடந்த மூன்று ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் முக்கியமான சில கணக்கீட்டு விகிதங்கள் வருமாறு.<br>**ஆண்டு** **2018** **2017** **2016** **2015**<br>தேறிய இலாப விகிதம் (சதவீதம்) 67 66 56 39 | திரவத்தன்மைக்கும் இலாபத் தன்மைக் கும் இடையே ஒரு சமநிலையை பேணு வதற்கு பரிந்துரைக் கப்படுகின்றது. | 2021 ஆம் ஆண்டி ல் சபை ஒப்புத லுடன், (i) Merchant Bank of Sri Lanka & Finance PLC இன் மேலதிக பங்கு | 2021 ஆம் ஆண் டில் கம்பனி திரவத்தன்மைக் கும் இலாபத் தன்மைக் கும் இடையே ஒரு சமநிலையை பேணியிருந்ததுட |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>நடைமுறை விகிதம் (தடவைகள்)</td><td>32.31</td><td>14.62</td><td>23.55</td><td>20.17</td></tr>
<tr><td>மொத்தச் சொத்துக்கு தேறிய நடைமுறை ச் சொத்து (தடவைகள்)</td><td>0.48</td><td>0.44</td><td>0.35</td><td>0.32</td></tr>
</table>
கம்பனியின் திருப்தியற்ற தொழிற்படு மூலதன முகாமைத்துவம் காரணமாக கம்பனி உயர்வான நடைமுறைச் சொத்து விகிதத்தை வைத்துள்ளது. மேலும், குறுங்கால முதலீட்டுடன் ஒப்பிடுகையில் நீண்டகால முதலீடுகளில் அதன் மேலதிக நிதியை முதலீடு செய்வதற்கு கம்பனி கவனம் செலுத்தியிருக்கவில்லை.
</td>
<td></td>
<td>வழங்கலின் போது ரூபா 249,999,996 முதலீடு செய்யப் பட்டதுடன்,<br>(ii) ரூ. 250,000,000 இலங்கை வங்கி யின் 5 வருட தொகுதிக்கடன் பத்திரத்தில் முதலீடு செய்யப் பட்டது.</td>
<td>ன், அதன் தேறிய இலாப விகிதம் 64 சதவீதமாகவும் நடப்பு விகிதம் 18.26 தடவை யாகவும் மொத்த சொத்துக்கு தேறிய நடைமு றைச் சொத்து விகிதம் 0.42 தடவையாகவும் முன்னேற்றமடை ந்திருந்தது.</td>
</tr>
<tr>
<td>(ஆ)</td>
<td>அனைத்து குத்தகை தாரர்களுடனான குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் மாதத்தின் முதலாம் நாளன்று குத்தகை வாடகை செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், கீழேயுள்ள கடன்பட்டோர் போக்கின் படி அவ்வாறு இணங்கிய விதத்தில் குத்தகை வாடகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.
<table>
<tr><th>காலம்</th><th>1-30 நாட்கள்</th><th>31-60 நாட்கள்</th><th>61-90 நாட்கள்</th><th>90 இற்கு மேற்பட்ட நாட்கள்</th></tr>
<tr><td>நிலுவைகள் (ரூ.)</td><td>5,560,543</td><td>2,249,146</td><td>2,199,488</td><td>9,519,849</td></tr>
</table>
</td>
<td>குத்தகை உடன்படிக் கையில் இணங்கிய வாறு வாடகை சேகரிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.</td>
<td>குத்தகை ஒப்பந் தங்கள் மற்றும் நடைமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்படுகின் றன.</td>
<td>குறித்த வாடகை நிலுவை முழு மையாக அறிவி டப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>(இ)</td>
<td>அனைத்து குத்தகைதாரர்களுடனான குத்தகை ஒப்பந்தங்களின்படி, ஒவ்வொரு மாதமும் முதல் நாளிலிருந்து 14 நாட்களுக்கு முன் மாதாந்த வாடகையை செலுத்தாதிருப்பின், குத்தகைதாரரிடம் இருந்து மாத வாடகையில் 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்படும். இருப்பினும், 08 குத்தகைதாரர்கள் ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கான கொடுப்பனவை 03 மாதங்களுக்கும் மேலாக தாமதப்படுத்தி</td>
<td>குத்தகை உடன்படிக் கையில் இணங்கிய வாறு வாடகை செலுத்துவதை தாமதிக்கின்ற நபர்க ளிற்கு தண்டப்பணம் விதிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.</td>
<td>இந்த விவகாரம் சபையில் விவா திக்கப்பட்ட பின்னர் முடிவு செய்யப்படும்.</td>
<td>முகாமைத்துவச் சபையில் கலந் துரையாடப்பட்டு வருகின்றது.</td>
</tr>
</table>

யமை அவதானிக்கப்பட்டதுடன், தாமதமாக பணம் செலுத்தியதற்காக அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

(ஈ) குத்தகைக் காலம் தொடங்குவதற்கு முன்னர் குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும், குறிப்பிட்ட குத்தகைக் காலம் தொடங்கிய பின்னர் குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்த ஐந்து சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. எனவே, புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் சந்தர்ப்பம் வரை குத்தகைதாரருக்கும் குத்தகை வழங்குனரு க்கும் இடையே செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தம் இல்லாத நிலை அவதானிக்கப்பட்டது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **குத்தகை உடன்படிக்கை இல.** | **குத்தகை தாரர் பெயர்** | **குத்தகைக் காலம்** | **புதிய உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதி** |
|---|---|---|---|
| 270 | ஒருங்கிணைந்த சொத்து முகாமைத்துவ சேவைகள் | 16/04/2020 – 15/04/2021 | 30/07/2020 |
| 242 | இலங்கை வங்கி மேல் மாகாணம் - வடக்கு | 01/01/2019 – 31/12/2020 | 22/05/2019 |
| 236 | என்கியுடி (பிரைவட்) லிமிடட் | 01/01/2019 – 31/12/2021 | 03/04/2019 |
| 147 | டயலொக் | 30/05/2016 – 29/05/2021 | 05/08/2016 |
| 7 | குயிஸ் குரூப் (பிரைவட்) லிமிடட் | 01/03/2019 – 28/02/2021 | 12/06/2019 |

குத்தகைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் தொடர்புகள் விரைவுபடுத்தப்படும்.

இக்காலம் குறைக்கப்பட்டுள்ளது.

(உ) ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்ட பிறகு, குறிப்பிட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் மூன்று

குத்தகை ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்ட பின்னர்,

இது முடிந்த வரை குத்தகை தாரர்களுக்கு

எதிர்காலத்தில் இது குறித்து ஒவ்வொரு புதுப்

| | | | |
|---|---|---|---|
| மாதங்களுக்குள் அவை பதிவு செய்யப்பட வேண்டும். இருப்பினும், பின்வரும் குத்தகை ஒப்பந்தங்கள் 2021 ஒக்தோபர் 21 ஆந் தேதி வரை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | காணிப் பதிவாளர் அலுவலகத்தில் மூன்று மாதங்களுக்குள் அவற்றை பதிவு செய்வதற்கு பரிந்துர்ரைக்கப்படுகின்றது. | தெரியப்படுத்தப்படும். | பித்தலின் போதும் தெரியப் படுத்தப்படும. |


| **குத்தகை உடன்படிக்கை இல.** | **குத்தகை** | **குத்தகை காலம்** | **குத்தகை கைச்சாத்திட்ட திகதி** |
|---|---|---|---|
| 147 | டயலொக் | 30/05/2016 – 29/05/2021 | 05/09/2016 |
| 168 | இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு | 01/07/2017 – 30/06/2019 | 08/08/2017 |
| 179 | MBSL – மேர்சன்டடவர் | 01/05/2017 – 30/04/2022 | 13/10/2017 |
| 180 | MBSL – மேர்சன்டடவர் | 01/04/2017 – 31/03/2022 | 13/10/2017 |
| 186 | MBSL – மேர்சன்டடவர் | 01/10/2017 – 30/09/2022 | 16/01/2018 |
| 203 | MBSL – மேர்சன்டடவர் | 01/01/2018 – 31/12/2021 | 25/06/2018 |
| 205 | MBSL – மேர்சன்டடவர் | 01/01/2018 – 31/12/2022 | 25/06/2018 |
| 236 | என்கியுனிடி (பிரைவட்) லிமிடட் | 01/01/2019 _ 31/12/2021 | 03/04/2019 |
| 242 | இலங்கை வங்கி மேல் மாகாணம் - வடக்கு | 01/01/2019 _ 01/01/2021 | 19/05/2019 |
| 244 | குயிஸ் குரூப் லங்கா (பிரைவட்) லிமிடட் (ரன்ஸ்டட் லங்கா (பிரைவட்) | 01/03/2019 _ 28/02/2021 | 12/06/2019 |

| | | | |
|---|---|---|---|
| | லிமிடட்) | | |
| 256 | சீபேங் ஆதன முகாமைத்துவ (பிரைவட்) லிமிடட் | 01/06/2019 – 31/05/2021 | 06/09/2019 |
| 257 | SLIIT | 01/01/2019 – 31/12/2021 | 20/09/2019 |
| 261 | SLIIT அகடாமி லிமிடட் | 01/01/2019 – 31/12/2021 | 28/10/2019 |
| 266 | BOC சுபர் கிரேட் - கண்டி | 01/01/2019 – 31/12/2020 | 04/03/2020 |
| 267 | BOC மத்திய மாகாணம் | 01/01/2019 – 31/12/2019 | 04/03/2020 |
| 273 | சமீர கேடர்ஸ் உணவகம் | 11/07/2019 – 10/07/2021 | 27/08/2019 |
| 296/20 | கொழும்பு பங்கு பரிவர்த்தனை | 01/01/2021 – 30/06/2021 | 09/02/2021 |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை இன் பிரிவு 5.1.1 இன் படி, கூட்டிணைந்த திட்டம் என்பது மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு செயல்படும் திட்டமாக இருக்க வேண்டும். அத்துடன், நிறுவனத்தின் பயனுள்ள செயல்பாட்டை உறுதி செய்வதற்காக இது தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மூன்றாண்டு காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் கம்பனியால் தயாரிக்கப்படவில்லை. | மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கும் பயனுள்ள செயல்பாட்டை உறுதி செய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகின்றது. | கம்பனி அதன் கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து அதன் பிரதியொன்று உங்களிற்கு சமர்ப்பிக்கப்படும். |

### 4.11 BOC முகாமைத்துவ மற்றும் ஆதாரச் சேவைகள் (பிரைவட்) லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2 | 17,050 | 1,342,405 | 357,756 | (17,048) | முனைப்பழியற்ற |
| **2019** | 2 | 53,729 | 933,632 | 360,266 | (53,727) | முனைப்பழியற்ற |
| **2020** | 340,258 | 387,948 | 933,632 | 50,400 | (47,690) | முனைப்பழியற்ற |




| | Total Revenue Rs. | Total Expenditure Rs. | Total Assets Rs. | Total Liabilities Rs. | Profit /Loss Before Tax Rs. |
|---|---|---|---|---|---|
| 2018 | 2.00 | 17,050.00 | 1,342,405.00 | 357,756.00 | (17,048.00) |
| 2019 | 2.00 | 53,729.00 | 933,632.00 | 360,266.00 | (53,727.00) |
| 2020 | 340,258.00 | 387,948.00 | 933,632.00 | 50,400.00 | (47,690.00) |


| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியின் மனிதவளத் தேவைகளை எளிதாக்கும் வகை யில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதே இக்கம்பனியின் முக்கிய வணிகச் செயற்பாடா கும். எவ்வாறாயினும், கம்பனி 2007 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கொள்கை நடவடிக் கையில் ஈடுபடவில்லை. 2017 | கம்பனி அதன் பிரதான வணிகச் செயற்பாட்டை மேற் கொள்ள வேண்டும். | - | 2017 ஆம் ஆண்டில் கம்பனியின் பணிப்பாளர் சபை, கம்பனியின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று தீர்மானித்திருந்த போதிலும், 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை பின்வருவனவற்றிற்கு ஒப்புதல் |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 01 இல் நடைபெற்ற கூட்டத்தில் கம்பனியை கலைப்பதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்தது. | | அளித்திருந்தது;<br>• வங்கியின் செயற்பாடற்ற முற்பண நிலையை நிர்வகிப்ப தற்கு BOC முகாமைத்துவ மற்றும் ஆதாரச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட்டை கடன் அறவிடுதல் சேவை வழங்கு நராக மாற்றுதல்.<br>• 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 17 இன் படி BOC முகாமைத்துவ மற்றும் ஆதாரச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட்டை கடன் அறிவிடுதல் சேவை வழங்குனராக மாற்றும் முன்மொழிவுக்கு இலங்கை மத்திய வங்கி நாணய சபையின் ஒப்புதலைப் பெறுதல்.<br>• BOC முகாமைத்துவ மற்றும் ஆதாரச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் இன் அகவிதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் கூட்டிணைப்பு அகவிதியை திருத்துவதற்கு ஒரு சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றுதல்.<br>"நிதி நிறுவனங்களுக்கு கடன் சேகரிப்பு முகவராக செயல்படுவதுடன் ஒவ்வொரு கடன் வகைக்கும் கடன் சேகரிப்பு மீட்பு சேவைகளை வழங்குதல்." |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 2.1.3 இன் படி, கம்பனியின் பணிப்பாளர் சபை அதன் 2017 ஆகஸ்ட் 01 இல் நடைபெற்ற கூட்டத்தில், கம்பனி எதிர்கால த்தில் அதன் செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமென்று தீர்மானித்துள்ளது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 320(1) இன் படி, கம்பனி சுயமாக முன்வைத்துள்ள கலைத்தல் தீர்மானத்தை நிறைவேற்றியதும், அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட திலிருந்து பதினான்கு நாட்களுக்குள், தீர்மானத்தை வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் அறிவிப்பை வழங்க வேண்டும். எவ்வாறாயினும், வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் தீர்மானத்தை கம்பனி அறிவிக்கவில்லை. | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தின் பிரிவு 320(1) உடன் கம்பனி இணங்குதல் வேண்டும். | - |

## 4.12 ஹொட்டேல் கொழும்பு (1963) லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 303,346,379 | 329,289,479 | 290,695,975 | 145,953,829 | (25,943,100) | முனைப்பழியற்ற |
| **2019** | 257,329,091 | 309,505,478 | 390,267,938 | 292,247,600 | (52,176,388) | முனைப்பழியுள்ள |

**2020** நிதிக்கூற்றுக்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | எக்செல் கோவையொன்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விரிவான பதிவேடானது போதுமான விவரங்கள், முறையான கட்டுப்பாடு மற்றும் கண்கா ணிப்புச் செயல்முறையுடன் பராமரிக்கப்படவில்லை என்பது | நிலையான சொத்து க்களின் அனைத்து வகைகளுக்குமாக விரிவான மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டைப் பராம ரிக்க பரிந்துரைக்க ப்படுகிறது. | அடிப்படையில் நாங்கள் ஏற்கனவே அனைத்து உருப்படிகளின் பட்டியலையும் வெளி தரப்பினருடன் சரியான அடையாளத்துடன் எடுத்துள்ளோம். மேலும் அவர்கள் தங்கள் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். | வெளி நிறுவனத்தால் அறிக்கை இறுதி செய்யப்பட்டவுடன், நிலையான சொத்துகள் பதிவேட்டை நாம் பராமரிக்க முடியும். |


| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | பொதுப் பேரேட்டின் படியான பெறுமதிசேர் வரி பெறத்தக்க மீதிக்கும் பெறுமதிசேர் வரி வருமானத்தின் படியான மீதிக்கும் இடையே ரூபா 2,452,116 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டை சரி செய்யவும், தொடர் புடைய நாளேட்டுப் பதிவுகளை மேற் கொள்ளவும் பரிந்து ரைக்கப்படுகிறது. | பேரேட்டுக் கணக்கு மீதி ஏற்கனவே சீராக்கப் பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்கு மீதி ஏற்கனவே சீராக்கப் பட்டுள்ளது. |
| (இ) | பொதுப் பேரேட்டின் படியான செலுத்த வேண்டிய தே.க.எ. வரித் தொகைக்கும் வருமானத்தின் படியான செலுத்த வேண்டிய தே.க.எ. வரித் தொகைக்கும் இடையே ரூபா 2,255,914 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டை சரி செய்யவும், தொடர் புடைய நாளேட்டுப் பதிவுகளை மேற் கொள்ளவும் பரிந்து ரைக்கப்படுகிறது. | பேரேட்டுக் கணக்கு மீதி ஏற்கனவே சீராக்கப் பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்கு மீதி ஏற்கனவே சீராக்கப் பட்டுள்ளது. |
| (ஈ) | இருப்புகளை வினைத்திற னாகவும் மற்றும் பயனுறுதி யாகவும் நிர்வகிப்பதற்கான தகவல்கள் முகாமைக்குக் கிடைக்காமை, அதிக கிரயம், இருப்புப் பதிவேட்டை கை முறை மூலம் பராமரிப்பத ற்காக முயற்சி எடுத்தல் மற்றும் கைமுறைப் பதிவுகள் மூலம் உருவாக்கப்படும் தகவல்களின் நம்பகத்தன்மை குறைவாக காணப்படுதல், என்பன முறைகேடுகள், முரண்பாடுகள் மற்றும் நிதி கையாளுதல் ஆகியவற்றின் இடரை அதிகரிக்கின்றன. அத்துடன், காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கு மேற்கொள் ளப்பட்ட ஏற்பாட்டின் போதுமான தன்மையைக் கண்டறிவதில் சிரமம் காணப்ப டுதல் அவதானிக்கப்பட் டமையானது கம்பனியின் இருப்பு முகாமைத்துவ முறைமை தொடர்பான | இருப்பு முகாமைத் துவம் தொடர்பாக தற்போதுள்ள முறை மைகள் மற்றும் நடைமுறைகளை மறுபரிசீலனை செய்ய பரிந்துரைக் கப்படுவதுடன், இருப்பு நகர்வுகளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் இருப்பு வைத்தல் முறைகளை செயல் படுத்த பரிந்துரைக் கப்படுகிறது. | தற்போதும் அதே முறைமையே காணப்ப டுவதுடன் சில நிலுவைத் தொகைகள் அதன்படி புதுப்பிக்கப்படு கின்றன. | தற்போது கூட உரிய முறைமைக்கு மாறுவத ற்கு கோருகிறோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பலவீனங்களாகும். | | | |
| (உ) | ஒரே நேரத்தில் வங்கியில் வைப்புச் செய்யாமல் அறிக்கையிடும் தேதிக்குப் பின்னர் பலமுறை வங்கியில் வைப்புச் செய்திருந்தமையால், பணத்தை வைப்புச் செய்வதில் கணிசமான தாமதம் மற்றும் முக்கிய நடவடிக்கைகளுக்கு வங்கியிலிருந்து பணத்தை எடுக்காது சேகரிப்பில் இருந்து சில்லறைக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்தல் ஆகியவை நிறுவனத்தின் வங்கி செயல்பாடுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்களாக அவதானிக்கப்பட்டன. | வங்கி செயல்பாடுகள் மீதான உள்ளக கட்டுப்பாட்டை வலுப் படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. | பிரதான காசாளரால் வைப்புச் செய்யப்பட்ட விற்பனை பண வைப்புகளை சரிபார்ப்பது வருமான கணக்காய்வாளரின் பொறுப்பாகும். | தற்போது நாங்கள் விற்பனை பணத்தை அடுத்துவரும் நாளன்று வங்கியில் வைப்புச் செய்கிறோம். |
| (ஊ) | பே.சே.வரி மற்றும் தே.க.எ. வரி தொடர்பான வருமான மீதிக்கும் பேரேட்டு மீதிக்கும் இடையே முறையே ரூபா 8,869,357 மற்றும் ரூபா 1,612,426 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானத்துடன் பெ.சே.வரி மற்றும் தே.க.எ. வரி ஆகியவற்றின் பேரேட்டு மீதிகளின் சரியான தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு கம்பனியால் ஆதாரப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | வருமான மற்றும் பொதுப் பேரேடு ஆகியவற்றுக்கு இடையே உள்ள நிலுவைகளை கணக்கிணக்கம் செய்வதற்கும், அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான அறவிடக்கூடிய தொகைகளை மதிப்பிடுவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் (ஐஆர்டி) விசாரணை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. | ஐஆர்டிக்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் பணி இன்னும் இடம் பெற்று வருகின்றது. | 10 காலாண்டுகளில் 7 காலாண்டுகளின் ஆவணங்களை நாங்கள் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம். மீதமுள்ளவற்றை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது. |
| (எ) | ரூபா 12,146,965 தொகையான பெறத்தக்க பெ.சே.வரி மீதி இருப்பதை மெய்மையர்வு செய்தற்கு கம்பனியால் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடக்கூடிய தொகைகளை மதிப் | ஐஆர்டிக்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் பணி இன்னும் இடம் பெற்று வருகின்றது. | 10 காலாண்டுகளில் 7 காலாண்டுகளின் ஆவணங்களை நாங்கள் ஏற்கனவே சமர்ப்பித்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருப்திகரமான சான்றுகள் வழங்கப்படவில்லை. | பிடுவதற்காக உள் நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் (ஐஆர்டி) விசாரணை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. | | ள்ளோம். மீதமுள்ளவற்றை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது. |
| (ஏ) | 2019 திசெம்பர் 31 நிலவரப்படி டீமுஊ - பெருநகரக் கிளையின் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் அடையாளம் காணப்படாத வைப்புத் தொகையாக ரூபா 6,116,285 காட்டப்பட்டுள்ளதுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ள வங்கி மீதியைக் குறைத்து மதிப்பிடக்கூடிய மேற்குறித்த நிலுவைகளை தொடர்ச்சியாக இனங்காண்பதற்கு திருப்திகரமான சான்றுகள் வழங்கப்படவில்லை. | அறிக்கையிடல் தேதியிலுள்ள இனங் காணப்படாத வைப்புகளை இனங் காண தேவையான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. | வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களை தயாரிப்பதற்காக கொடுப்பனவு உத்தியோகத்தருக்கு ஏற்கனவே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களை தயாரிப்பதற்காக கொடுப்பனவு உத்தியோகத்தருக்கு ஏற்கனவே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 9,515,998 காசு மீதி இருப்பதைச் மெய்மையாய்வு செய்வதற்கு திருப்திகரமான சான்றுகள் அல்லது விளக்கங்கள் வழங்கப்படவில்லை.<br>அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் நிகழ்த்தப்பட்ட திடீர் காசு மீதி மெய்மையாய்வின் போது, கணினியில் தோன்றிய காசு மீதிக்கும் பௌதீக ரீதியாக காணப்பட்ட காசு மீதிக்கும் இடையே ரூபா 4,208,976 வேறுபாடு வெளிப்ப டுத்தப்பட்டது. | அறிக்கையில் திகதியில் காணப்படுகின்ற காசு மீதியை மெய்மையாய்வு செய்வதற்கு திருப்திகரமான சான்றுகளை சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்படுகின்றது. | ரூபா 9,515,998 காசு மீதி ஏற்கனவே வைப்புச் செய்யப்பட்டு வைப்புச் சீட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காசு மீதி ஏற்கனவே வைப்புச் செய்யப்பட்டு வைப்புச் சீட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 4.13 பீபள்ஸ் டிரவல்ஸ் (பிரைவட்) லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 263,302,515 | 254,670,192 | 148,866,845 | 54,564,230 | 11,976,442 | முனைப்பழியற்ற |
| **2019** | 126,137,216 | 135,289,596 | 113,054,758 | 26,575,509 | (9,152,378) | முனைப்பழியற்ற |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | | |





| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 263.30 | 254.67 | 148.87 | 54.56 | 11.98 |
| 2019 | 126.14 | 135.29 | 113.05 | 26.58 | (9.15) |
| 2020 | - | - | - | - | - |

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| பின்வரும் எடுத்துக்காட் டுகளின் படி, எந்தவொரு காப்புறுதிப் பாதுகாப்பும் இல்லாமல் கம்பனி கணிச மான காசுத் தொகையை கையில் வைத்திருக்கிறது. எனவே, காப்புறுதிப் பாதுகாப்பின்றி நாளாந்தம் பாரிய காசுத் தொகையை கையில் வைத்திருப்பது கம்பனிக்கு ஆபத்தானதாகும்.<br><br>i. 17/04/2018 அன்று ரூ.537,000<br>ii 22/08/2018 அன்று ரூ.682,500<br>iii 30/08/2018 அன்று ரூ.549,800<br>iv. 26/02/2019 அன்று ரூ.534,000<br>v. 27/03/2019 அன்று ரூ.822,800. | ஆபத்தை குறைப் பதற்குத் தேவை யான நடவடிக்கை களை எடுக்க வேண்டும். | | குறிப்பிட்டுள்ளபடி, காப்புறுதிப் பாதுகா ப்பை செய்வதன் மூலம் அல்லது உங்கள் அறிக்கை யில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளபடி கையில் உள்ள பணத்தைக் குறைப் பதன் மூலம் அதிகப் படியான பணத்தை கையில் வைத்திருப் பதால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க நிறுவனம் பரிசீலிக்கும். |

## 4.14 People's Leasing & Finance PLC

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 17,089,540,000 | 12,673,419,000 | 172,541,277,000 | 143,937,922,000 | 8,672,467,000 | முனைப்பழியற்ற |
| **2019** | 17,812,728,000 | 14,870,220,000 | 171,660,193,000 | 141,413,561,000 | 6,554,285,000 | முனைப்பழியற்ற |
| **2020** | 14,039,488,000 | 10,006,468,000 | 164,546,109,000 | 130,204,678,000 | 7,095,216,000 | முனைப்பழியற்ற |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது, இராஜினாமா செய்திருந்த ஊழியர்களின் சில பயனர் கணக்குகள் "இன் பேங்க்" மற்றும் மைக்ரோ.ஃபின் முறைமைகளில் உரிய நேரத்தில் செயலிழக்கப் பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | பயனர் கணக்குகளை சரியான நேரத்தில் செயலிழக்கச் செய்வதை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். | அனைத்து அணுகல் தொடர்பான விடயங்களையும் நெறிப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பத் துறை (ஐரீ) இன் கீழ் அணுகல் முகாமைத்துவ அலகு" நிறுவப்பட்டுள்ளது. | உரிய நேரத்தில் அனைத்து அணுகல் தொடர்பான விடயங்களும் அணுகல் முகாமைத்துவ அலகால் நெறிப்படுத்தப் படுகின்றது. |
| (ஆ) | தனிப்பட்ட ரீதியாக நிலுவையிலுள்ள கணிசமான வாடிக்கையாள மீதிகளை | கம்பனி நம்பகரமான ஆதாரத்துடன் | தனிநபர் கடன் நட்டங்களை கணக்கிடும் போது பிணைகளை | கம்பனி இந்த அனுமானங்கள் மற்றும் தீர்ப்புகளை |

| | | | |
|---|---|---|---|
| அறவிடுவதற்காக எடுக்கப் படுகின்ற மதிப்பிடப்பட்ட நேரம்/காலத்தை நியாயப் படுத்த போதுமான செயல் முறை காணப்படவில்லை. | மதிப்பீடுகளை நியாயப்படுத்த வேண்டும். | புரிந்து கொள்வதற்காக நிபுணத்துவ மற்றும் துறைசார் அறிவின் (சட்ட மற்றும் அறவீட்டு நிபுணர்கள்) அடிப்படை யில் முகாமைத்துவ அனுமானங்கள் மற்றும் தீர்ப்புகளை கம்பனி பயன்படுத்துகிறது. | காலாண்டு அடிப்ப டையில் மதிப்பீடு செய்கிறது. |

## 4.15 பீபள்ஸ் லீசிங் பிலீட் மெனேஜ்மென்ட் லிமிடட்


| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | வரிக்கு முந்திய இலாபம்(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 251,429,004 | 219,147,917 | 412,548,265 | 112,798,203 | 47,137,636 | முனைப்பழியற்ற |
| **2019** | 242,637,214 | 220,337,997 | 441,053,408 | 154,090,864 | 32,559,436 | முனைப்பழியற்ற |
| **2020** | 249,170,238 | 203,511,509 | 444,980,963 | 111,438,805 | 55,652,020 | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட திருத்தும் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | சில வாடிக்கையாளர் களின் மீதி நீண்ட காலமாக நிலுவையில் காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இந்த மீதிகளிற்காக கம்பனி ஐயக்கடன் ஏற்பாடு செய்துள்ள போதிலும், அவற்றை சேகரிப்பது தொடர்பில் கம்பனி கவனம் செலுத்த வேண்டும். | கடன் வாடிக்கை யாளர் மதிப்பீட்டு முறையை பலப்ப டுத்த வேண்டும். | மீளாய்வு செய்யப் பட்டதுடன், அறவி டுதல் தொடர்பில் மீதிகளில் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை. |
| (ஆ) | 2204010209“ என்ற ஏனைய பொதுப் பேரேட்டுக் கணக்கின் கீழ் “முற்பண பெறுவனவு – சுயமாக வாகனம் செலுத்துதல்” என்ற வகையில் ரூபா 311,907 நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. | பொருத்தமான முறையில் மெய்மையாய்வு செய்வத ற்காக நீண்டகால நிலுவை களை பின்தொடர்பதல் வேண்டும். | நிதிக் கூற்றுக்களின் கண்காணித்தல் செயல் முறை மேம்படுத்தப் படுகின்றது. | திருத்திச் சரிசெய்யப் பட்டுள்ளது. |

## 4.16 பீப்பல்ஸ் லீசிங் புறொப்பர்டி டெவலப்மென்ட் லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 385,251,775 | 205,042,096 | 2,362,997,596 | 900,009,114 | 227,584,532 | முனைப்பழியற்றது |
| **2019** | 444,860,461 | 201,938,925 | 2,661,615,630 | 1,065,797,950 | 312,873,944 | முனைப்பழியற்றது |
| **2020** | 332,256,000 | 149,757,210 | 2,596,942,396 | 928,369,410 | 218,026,751 | முனைப்பழியற்றது |





| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 385.25 | 205.04 | 2,363.00 | 900.01 | 227.58 |
| 2019 | 444.86 | 201.94 | 2,661.62 | 1,065.80 | 312.87 |
| 2020 | 332.26 | 149.76 | 2,596.94 | 928.37 | 218.03 |

- பொருண்மையான விடயங்கள் எதுவும் காணப்படவில்லை.

## 4.17 பீப்பல்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 5,432,668,375 | 4,703,606,068 | 8,417,567,849 | 5,042,420,581 | 847,015,921 | முனைப்பழியற்றது |
| **2019** | 6,108,525,950 | 5,460,871,970 | 9,580,499,268 | 5,937,850,296 | 912,029,738 | முனைப்பழியற்றது |
| **2020** | 6,162,735,846 | 4,967,421,494 | 10,595,863,039 | 5,976,677,697 | 1,667,521,268 | முனைப்பழியற்றது |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஏற்கனவே கம்பனியில் இருந்து இராஜினாமா செய்த ஊழியர்களிடமிருந்து பெற வேண்டிய தொகை ஊழியர்களின் கடன் மீதியில் சேர்க்கப்டப்படுள்ளது. இதன் விளைவாக அவ்வாறு இராஜினாமா செய்த ஊழியர்களிடமிருந்து உரிய தொகையை கம்பனி அறவீடு செய்ய முடியாதுள்ளது. மேலும் இராஜினாமா செய்த ஊழியர்களால் துவிச்சக்கரவண்டிகள் ஒப்படைக்கப்பட்ட போதிலும் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் வாகனக்கடன் கணக்கில் | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | | உரிய தொகைகளின் அறவீடு மத்தியஸ்த சபை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஆதனமானது பதிவு புத்தகத்துடன் கம்பனியின் கட்டுக்காப்பின் கீழ் காணப்படும். அத்துடன் ஆதனத்தை மாற்றுவதற்கு சரியான மதிப்பீடு மேற்கொள்ளப்படும். உரிய கடன் தொகையை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை மீதிகள் தொடர்ந்து காணப்பட்டன. | | எதிர்காலத்தில் எடுக்கப்படும். |
| (ஆ) | கம்பனி மனித வளத் துறையால் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு பதவிக்கும் தொழில் முறை தேர்ச்சி தேவைப்பாட்டு பட்டியலை ஆட்சேர்ப்பு திட்டமாக (SOR) பயன்படுத்துகின்றது. மேலும் முகாமையாளர் மட்டத்திற்கு மேமலான பதவிகள் மற்றும் சில முக்கிய துறைகள் (உதாரணம் தகவல் தொழில்நுட்பம், உள்ளக கணக்காய்வு, கடல், இடர் மற்றும் இணக்கப்பாடு) அத்தகைய பட்டியல் மூலம் மேவுகை செய்யப்படாதமை அவதானிக்கப்பட்டது. | அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். | 2020/21 ஆம் ஆண்டிற்கான புதிய மனிதவள முன்முயற்சிகளாக திறன் அடிப்படையிலான அபிவிருத்தி மற்றும் ஆட்சேர்ப்புக்கள் இன்னும் அபிவிருத்தி மற்றும் கலந்துரையாடலின் கீழ் உள்ளன. |
| (இ) | நிறுவனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் ஒரு அமைப்பு வரைபடத்தை ஒவ்வொரு நிறுவனமும் கொண்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனிக்கான சபை அங்கீகரித்த பதவியணி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டில் ஏற்கனவே உள்ள பதவியணியை காண்பிப்பதை தவிர கம்பனியின் பதவியணி மதிப்பீட்டிற்கு பின்னர் தயாரிக்கப்பட்ட தனியான சபை அங்கீகரித்த பதவியணி காணப்பட வேண்டும். | கம்பனியின் 2019 பாதீட்டின் கீழ் சபை அங்கீகரித்த பதவியணியொன்று காணப்படுகின்றது. |

## 4.18 பீப்பல்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட்

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 713,297,820 | 663,534,286 | 2,245,817,743 | 2,037,190,900 | 122,413,771 | முனைப்பழியற்றது |
| **2019** | 841,852,866 | 816,360,816 | 2,876,112,751 | 2,641,931,040 | 80,475,123 | முனைப்பழியற்றது |
| **2020** | 867,994,483 | 735,315,557 | 2,684,428,134 | 2,316,839,454 | 253,439,849 | முனைப்பழியற்றது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வசதிகள் தொடர்பான DPD<br>-----------------------------------------<br>நிறுவனமானது தற்போது DPD (Days Past Due) ஐ கைமுறையாகவே கணிப்பிடுகின்றது. | எந்த ஒரு கைமுறையான தலையீடும் இல்லாமல் மாத இறுதி அறிக்கையில் வசதிகளின் DPD ஐ முறைமையினால் கணப்பிட முடியும். இது சரியான தன்மையை பலப்படுத்தும். | | கம்பனி கட்டமைப்பு மாற்றங்களைச் செய்யும் செயன்முறையில் உள்ளது. எனவே கட்டமைப்பு மாற்றங்களுக்குப் பின்னர் முறைமையில் DPD கணிப்பீட்டை அமுல்ப்படுத்துவோம். |
| (ஆ) | கம்பனியின் நட்டக்கழிவு செயன்முறை கைமுறை பயிற்சியொன்றாக உள்ளது. இந்த செயன்முறையின் போது நட்டக்கழிவு கணிப்பீட்டிற்காக | நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையை போதுமான அளவிற்கு தானியக்கமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை | | நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையின் சிக்கலான தன்மை காரணமாக, முழுமையான தானியங்கு முறைமையை |


தேவையான தரவை பிரித்தெடுப்பதற்கு முகாமைத்துவம் பல உள்ளக அறிக்கைகளை உருவாக்குகின்றது. மேலும் அதிகப்படியான கைமுறை பணித்தொகுப்பு மற்றும் பல அறிக்கைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த செயன்முறை தவறவிடுதல்கள், தவறான விளக்கங்கள் மற்றும் மனித பிழைகளுக்கு வழிவகுக்கும்.

எடுப்பதற்கும் தரவை தவறாக கையாளுதல் மற்றும் தவிர்க்கப்படுதலின் சாத்தியமான இடரை தவிர்ப்பதற்கு கைமுறையான தலையீட்டைக் குறைப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் இது வெவ்வேறு மூலங்களிலிருந்து தரவைப் பிரித்தெடுப்பதற்கும் அதைத் தொகுப்பதற்கும் செலவிடும் நேரத்தை மிச்சப்படுத்தும்.

உருவாக்குதல் கடினமாக உள்ளது. எவ்வாறாயினும், கணிப்பீடுகளிற்கு உதவுவதற்கு தகவல் தொழில்நுட்ப துறையின் ஆதரவுடன் முறைமை உருவாக்கும் அறிக்கைகளை உருவாக்குவோம் என்று நம்புகிறோம்.

### 4.19 பீப்பள்ஸ் லீசிங் ஹவ்லொக் புறொப்பர்டீஸ் லிமிட்டட்

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 221,571,445 | 180,303,423 | 2,660,137,414 | 1,550,098,679 | 41,268,022 | முனைப்பழியற்றது |
| **2019** | 221,407,466 | 171,090,821 | 2,681,675,960 | 1,521,295,161 | 50,316,645 | முனைப்பழியற்றது |
| **2020** | 205,376,300 | 124,509,180 | 2,659,956,084 | 1,418,708,165 | 80,867,120 | முனைப்பழியற்றது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 221.57 | 180.30 | 2,660.14 | 1,550.10 | 41.27 |
| 2019 | 221.41 | 171.09 | 2,681.68 | 1,521.30 | 50.32 |
| 2020 | 205.38 | 124.51 | 2,659.96 | 1,418.71 | 80.87 |

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி கணிப்பீடுகளிற்கிடையே எழும் தற்காலிக வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்வதற்கு கம்பனி சரியான செயன்முறை ஒன்றை கொண்டிருக்கவில்லை. | கம்பனி வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி கணிப்பீடுகளிற்கிடையே ஏற்படும் தற்காலிக வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்வதற்கு முறையான செயன்முறையைக் கொண்டிருக்க வேண்டும். இது பிற்போடப்பட்ட வரி கணிப்பீட்டின் சரியான தன்மையை வலுப்படுத்தும். | கம்பனி ஏற்கனவே சரியான தற்காலிக வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்யும் செயன்முறையை அமுல்ப்படுத்தியுள்ளது. | கம்பனி 2021 சனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சரியான தற்காலிக வேறுபாட்டை கணக்கிணக்கம் செய்யும் செயன்முறையை அமுல்ப்படுத்தியுள்ளது. |

### 4.20 சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 11,443,538,013 | 11,270,447,507 | 12,616,600,780 | 12,195,487,617 | 173,090,506 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 10,772,487,645 | 10,565,635,599 | 12,681,031,711 | 12,076,166,217 | 206,852,046 | முனைப்பழியுள்ளது |
| **2020** | 6,913,380,906 | 6,842,981,663 | 12,558,010,997 | 11,701,116,721 | 70,399,243 | முனைப்பழியுள்ளது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 11,443.54 | 11,270.45 | 12,616.60 | 12,195.49 | 173.09 |
| 2019 | 10,772.49 | 10,565.64 | 12,681.03 | 12,076.17 | 206.85 |
| 2020 | 6,913.38 | 6,842.98 | 12,558.01 | 11,701.12 | 70.40 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | முழுமையான PPE கணக்கீடு செய்யப்பட்டு, போதுமான அளவு பாதுகாக்கப்பட்டுள்ளமை மற்றும் காணாமல் போன பொருட்களைக் கண்டறிதல் என்பவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு சரியான மற்றும் உரிய நேர குறியீட்டு முறைமை அவசியமானதாகும், எவ்வாறாயினும், கம்பனி அதனது நிலையான சொத்துக்களை சரியாக குறியீடு | நிறுவன வளத் திட்டம் (ERP) முறைமையை உருவாக்கும் போதும், PPE மீதான சரியான மற்றும் போதுமான கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் சரியான குறியீட்டு முறை தேவைப்படுகிறது. | கம்பனி ERP முறைமையைப் பயன்படுத்தி ஒரு புதிய குறியீட்டு முறையை உருவாக்குகிறது. இந்த ஆண்டுக்குள் அந்த முறைமை அறிமுகப்படுத்தப்படும். | Southern Base ஆனது ERP முறைமைக்குள் PPE குறியீட்டு முறைமையைத் தொடங்கியுள்ளது, ஆனால் அது இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை, இந்த செயன்முறை இன்னும் தொடக்க நிலையில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள PPE சரியானது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப வருடாந்த சொத்து மெய்மையாய்வை மேற்கொள்ளக்கூடியவாறு அந்த குறியீடுகள் நிலையான சொத்து பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | எல்கேஏஎஸ். 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்ற நியமத்தின் 51 ஆவது பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஏறத்தாழ ரூபா 301.68 மில்லியன் கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களானது அவ்வாறான சொத்துக்களின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலம் மீளமதிப்பீடு செய்யப்படாமலும் எல்கேஏஎஸ் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறு சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சரியான முன்கொண்டு செல்லும் பெறுமதி காண்பிக்கப்படாமலும் கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | எல்கேஏஎஸ் 16 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனி முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் எல்கேஏஎஸ் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். | 2020 இல் கம்பனி மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்து மீள்மதிப்பீட்டு தொகை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டுள்ளது. | சமீபத்தில் நடைபெற்ற கணக்காய்வு அறிக்கை கலந்துரையாடல் கூட்டத்தின் போது ஆதனம், பொறி மற்றும் இயந்திரங்களுக்கான மீள்மதிப்பீட்டு செயன்முறையைத் தொடங்குமாறு தலைமை CEO அறிவுறுத்தினார், ஆனால் கம்பனியால் 2021 நிதிக்கூற்றுக்களிற்கு அதைச் செய்ய முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அதைச் செய்வோம் என நம்புகிறோம். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் என்பதன் 32 ஆம் பந்திக்கு முரணாக முறையே ரூபா 44.46 மில்லியன் மற்றும் ரூபா 34.69 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோர் செலவு மீதிகள் மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பணங்களின் வரவு மீதிகள் 30 | செலவு மீதிகள் மற்றும் வரவு மீதிகளிற்குரிய முறையே கடன்பட்டோர் மீதிகள் மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பண மீதிகளை உரிய கணக்கீட்டுப் பரிகாரங்களை மேற்கொண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 இன் இறுதிக் கணக்குகளில், கடன்பட்டோர் மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பணங்களின் முறையே செலவு மீதிகள் மற்றும் வரவு மீதிகள் முறையாக வகைப்படுத்தப்படும். | அனைத்து அடிப்படைக் கணக்குகளின் உத்தியோகத்தர்களும் குறித்த மீதிகள் தொடர்பாக முறையான கணக்கீட்டு பரிகாரங்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் அவ்வாறான கணக்குகளின் வரவு மீதிகளிற்கும் செலவு மீதிகளிற்கும் எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | | |
| (ஈ) | கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் பிரகாரம் ரூபா 15.42 மில்லியன் தொகைக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள காணியொன்றை பெற்றுக்கொள்வதற்காக கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் (UDA) நீண்டகால குத்தகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. கம்பனி இத்தொகையினை குத்தகை ஆதனமாக காண்பித்திருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடும் செயன்முறை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குத்தகை ஆதனத்தின் பெறுமதி மற்றும் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை உடன்படிக்கை அல்லது வேறு எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். | கம்பனி தேவையான அனைத்து கொடுப்பனவுகளையும் செய்துள்ளதுடன் ஏற்கனவே நினைவூட்டல் கடிதங்களையும் அனுப்பியுள்ளது. | குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பணி இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,175.71 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியில், ரூபா 375.42 மில்லியன் தொகையான கடன்பட்டோர் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டிருந்ததுடன் அக் கடன்பட்டோரில் | நிலுவையாகவுள்ள மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அறவீட்டு செயன்முறையை விரைவுபடுத்துவதற்காக கம்பனி கடன்பட்டோர் மற்றும் பிடிகாசு சேகரிப்பு பிரிவை செயற்படுத்தியுள்ளது. | 2021 ஆம் ஆண்டில், கம்பனியால் 5 ஆண்டுகளுக்கும் மேலான கடன்பட்டோர் மீதிகளிலிருந்து ரூபா 99 மில்லியன் தொகையை அறவீடு செய்ய முடிந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 116.82 மில்லியன் கூட்டுமொத்த தொகை 5 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது. அதேநேரம் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 397.88 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்பட்டோர் 2020 திசெம்பர் 31 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பிடிகாசு ரூபா 2,672.63 மில்லியன் ஆகும். அதில் ரூபா 358.81 மில்லியன் மற்றும் ரூபா 293.24 மில்லியன் தொகைகள் பூரணப்படுத்திய செயற்திட்டங்கள் தொடர்பில் முறையே 3 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் அறவிப்படாதுள்ளதுடன், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் உரிய அறவிடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது தொடர்ந்தும் நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவையாகவுள்ள மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீட்டு செயன்முறையை விரைவுபடுத்துவதற்காக கம்பனி கடன்பட்டோர் மற்றும் பிடிகாசு சேகரிப்பு பிரிவை செயற்படுத்தியுள்ளது. | கடன்பட்டோர் மற்றும் பிடிகாசு சேகரிப்பு பிரிவு மற்றும் அனைத்து தளங்களிலும் உள்ள பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் பெறவேண்டிய பிடிகாசு மீதிகளை அறவீடு செய்வதற்கு உரிய தரப்பினரிற்கு நினைவூட்டல் கடிதங்களை தொடர்ந்து அனுப்புகின்றன. |
| (எ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 261.98 மில்லியன் தொகையான கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 230.52 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய பிடிகாசு என்பன 2 முதல் 5 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்படாது | நீண்டகாலமாக நிலுவையாகவுள்ள கடன்கொடுத்தோர் மீதிகளை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கும் ஏனையவற்றை வருமானமாக கருதுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எமது வாடிக்கையாளர்களிடம் இருந்து அந்தப் பணத்தைச் சேகரிக்காமல், வழங்குநர்களுடன் இணங்கப்பட்ட கடன் விதிமுறைகளின் பிரகாரம் இந்த நிலுவைத் தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு எந்தவொரு வழியும் இல்லை. எனவே, | நாட்டில் நிலவுகின்ற நிலைமை காரணமாக கம்பனி எதிர்கொள்ளும் நிதிச் சிக்கல்களால் கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய பிடிகாசு மீதிகளைத் தீர்க்கும் செயன்முறையை விரைவுபடுத்துவது கடினமாக உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்குகளில் காணப்பட்டன. | | கம்பனி கடன்பட்டோர் மற்றும் பிடிகாசு சேகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்தும் செயற்பாட்டில் உள்ளது. | |
| (ஏ) | செயற்திட்ட வேலைகள் 90 சதவீத பூர்த்தி நிலையை அடையும் போது வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் முழுமையாக தீர்க்கப்படுதல் வேண்டும். எனினும், கம்பனியின் 05 தள அலுவலகங்களிற்குரிய முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட மற்றும் 90 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பில் கிடைத்திருந்த ரூபா 222.95 மில்லியன் தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் தொடர்ந்தும் வைத்திருக்கப்பட்டுள்ளது. | முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில், ரூபா 23,511,130 வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் தீர்க்கப்பட்டுள்ளன. | வழங்கப்பட்ட இறுதி விலைப்பட்டியல்களை உடனடியாக சான்றுறுதிப்படுத்துவதற்கு பொறியியலாளர்கள் பணிபுரிவார்கள். அவை சான்றுறுதிப்படுத்தப்பட்டவுடன், அந்த செயற்திட்டங்களுக்கு தொடர்புடைய வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் தீர்க்கப்படும். |
| (ஐ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,652.54 மில்லியன் மீதியொன்று தாய்க் கம்பனியான மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்குச் (CECB) செலுத்த வேண்டிய மீதியொன்றாக கம்பனி காண்பித்திருந்ததுடன், இத் தொகை வாகன வாடகைக் கட்டணங்கள், நிலையான சொத்துக்களினதும் இருப்புக்களினதும் கைமாற்றல் பெறுமதிகள் | கம்பனிக்கும் தாய்க் கம்பனிக்கும் இடையே தெளிவான இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கும் செலுத்த வேண்டிய தொடர்புடைய தரப்பு மீதி தொடர்ச்சியாக அதிகரிப்பதனை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பங்குகளை வழங்கும் முறை மூலம் CECB உடனான பேச்சுவார்த்தை மீதியை மூலதனமாக்குவதற்கான வழியை இனங்காண்பதற்கு நீண்டகால நிலுவை மீதிகளை மீளாய்வு செய்யும் செயன்முறையில் கம்பனி ஈடுபட்டுள்ளது. | இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான முன்மொழிவைத் தயாரிக்குமாறு CESL இன் CFO மற்றும் CECB முகாமைத்துவத்தின் சமீபத்திய சபைக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இது இன்னும் ஆரம்ப நிலையில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் தற்காலிக கடன்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. எவ்வாறாயினும், இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இரு தரப்பிற்கும் இடையே பொருத்தமான மற்றும் நாளதுவரையான உடன்படிக்கை ஒன்று காணப்படவில்லை. இந்த மீதியை தீர்ப்பதற்கு பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது 2017 ஆம் ஆண்டு முதல் இந்த மீதி தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த செலுத்த வேண்டிய மீதிக்காக இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கம்பனி வட்டி எதனையும் கணிப்பிட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | கம்பனி அதன் ஈஆர்பி முறைமையிலிருந்து இருப்பு காலப்பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. ஆகையால், இருப்புக் காலப்பகுப்பாய்வின் அடிப்படையில் மெதுவாக நகர்கின்ற, அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்களை கண்டறிவதில் கம்பனி சிரமத்தை எதிர்கொண்டுள்ளது. | அறிக்கையிடுதல் திகதியில் உள்ளவாறான இருப்புக்களின் சரியானதன்மை, இருக்கும் தன்மை மற்றும் பூரணத்துவத் தன்மை ஆகியவற்றை மெய்மையாய்வு செய்வதற்காக ஈஆர்பி முறைமையிலிருந்து இருப்பு காலப்பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்குவதற்கு ஏற்ற விதத்தில் முறைமையை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்னும் CESL முகாமைத்துவம் இந்த பிரச்சனை தொடர்பாக முறைமை அபிவிருத்திக் குழுவுடன் கலந்துரையாடி வருகிறதுடன் இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையிலிருந்து 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கி.மீ. தூரம் பயணித்த பின்னர் அல்லது என்ஜின் மீது பாரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் என்ற | சிக்கனமான விதத்தில் எரிபொருள் நுகரப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் காலக்கிரமத்தில் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்படுதல் | இன்னும் CESL சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்கவில்லை. | CECB ஆல் பயன்படுத்தப்படும் ஆனால் CESL இற்கு சொந்தமான வாகனத்திற்கான எரிபொருள் சோதனையை ஆறு மாதங்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிகழ்வுகளில் எது முதலில் நிகழ்கின்றதோ அந்த நிகழ்வின் போது மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், கம்பனிக்குச் சொந்தமான 82 வாகனங்களில் 12 வாகனங்களிற்காக மாத்திரமே இந்த பரிசோதனை 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வேண்டும். | | ஒருமுறை கம்பனி மேற்கொள்ள தொடங்கியுள்ளது. ஆனால் CESL இற்கு சொந்தமான ஏனைய வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. |
| (ஔ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், கம்பனி அதன் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களிலிருந்து 2020, 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 973.3 மில்லியன், ரூபா 722.8 மில்லியன் மற்றும் ரூபா 724.2 மில்லியன் மொத்த நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. அத்துடன், 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்று வருகின்ற மேலும் 04 நிர்மாண செயற்திட்டங்களிலிருந்து ரூபா 43.03 மில்லியன் நட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண செயற்திட்ட நட்டங்களை தவிர்ப்பதற்காக கம்பனியால் பயனுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | தற்போது நடைபெற்று வரும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கும், நட்டமடைந்து வரும் செயற்திட்டங்களைக் கண்டறிந்து, நட்டத்தைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்திட்டக் கண்காணிப்பு பிரிவை கம்பனி செயற்படுத்தியுள்ளது. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களை குறிப்பாக நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களையும் நட்டங்களை குறைப்பதற்கு தளங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கண்காணிக்கிறது. |
| (க) | கம்பனி அதன் ரூபா 12,558 மில்லியன், ரூபா 12,681 மில்லியன், ரூபா 12,890 மில்லியன் மொத்த சொத்து அடிப்படையை பயன்படுத்தியதன் மூலம் முறையே 2020, 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 70 மில்லியன், ரூபா 206 மில்லியன் மற்றும் ரூபா 152 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை | நிர்மாண செயற்திட்டங்களின் நட்டங்களை குறைப்பதற்கும், கம்பனியின் சொத்து அடிப்படையை திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் அதிகபட்ச நலனைப் பெற்றுக்கொள்வதற்கும் கம்பனி பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | தற்போது நடைபெற்று வரும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கும், நட்டமடைந்து வரும் செயற்திட்டங்களைக் கண்டறிந்து, நட்டத்தைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்திட்டக் கண்காணிப்பு பிரிவை கம்பனி | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களை குறிப்பாக நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களையும் நட்டங்களை குறைப்பதற்கு தளங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கண்காணிக்கிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உழைத்திருந்தது. ஆகையினால், மொத்தச் சொத்துக்கள் மீதான சராசரித் திரும்பல் விகிதம் 0.56 சதவீதம், 1.62 சதவீதம், 1.17 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. இந்த விகிதத்தை ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் மிகவும் குறைவான மட்டத்தில் இது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் 2.18 சதவீத விகிதத்தில் தேறிய இலாப எல்லையை பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கம்பனி அதனை அடைந்திருக்கவில்லை. | | செயற்படுத்தியுள்ளது . | |
| (கா) | கலாநிதி ஏ.என்.எஸ். குலசிங்க அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்காக இலங்கை கோள்மண்டல வளாகத்தில் ஒரு தொழில்நுட்ப பூங்காவை நிர்மாணிப்பதற்காக ரூபா 6.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.<br><br>இந்த பூங்காவிற்காக வழங்கி பொருத்தப்பட்ட உபகரணங்கள் தேவையான நியமங்களிற்கு அமைவாக உரியவாறு பொருத்தப்பட்டுள்ளமை குறித்து சுயாதீன தரப்பினரிடம் இருந்து வேலை பூரணப்படுத்தல் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாமல் உபகரணங்களை வழங்குதல், மற்றும் பொருத்துதல் (கொள்வனவைத் தவிர்த்து) ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட கம்பனியின் | இவ்வகையான CSR செயற்திட்டங்கள் நிதி ரீதியாக மிகவும் அனுகூலத்தைப் பெறுவதற்கும், பொதுமக்களுக்கு தரமான முறையில் சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | மாற்றம் எதுவும் காணப்படவில்லை. |

உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் அடிப்படையில் நேரடியாக குறித்த உத்தியோகத்தர்களிற்கு கம்பனி பணம் செலுத்தியிருந்தது. அத்துடன், மேற்படி பூங்காவில் வழங்கிப் பொருத்தப்பட்டுள்ள சில பொருட்களுக்கான கொள்வனவு மற்றும் பொருத்துதல் கிரயங்கள் மிகவும் அதிகமாக இருந்ததுடன் தற்போதைய சந்தை விலைகளுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சாத்தியமற்றவையாகவும் காணப்பட்டது. எனவே, இப்பூங்காவை நிர்மாணிப்பதற்கான செலவினத்தின் சரியான மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து கணக்காய்வு செய்வதில் கடும் சிக்கல் ஏற்பட்டிருந்தது.


அதேநேரம், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் எந்தவித முறையான ஒப்பந்தமும் இன்றி பூங்கா நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்டிருந்தமை எமது பௌதீக பரிசோதனையில் தெரியவந்துள்ளதுள்ளமையால், பூங்காவை பராமரிப்பதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தில் பூங்காவில் உள்ள சில உபகரணங்கள் பயன்படுத்த முடியாமல் அழியும் நிலையில் உள்ளது. மேற்கூறிய காரணங்களால், இந்தப் பூங்காவை

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்கான நோக்கங்கள் எதுவும் அடையப்பட்டிருக்காததுடன், மேற்குறிப்பிட்ட பூங்காவிற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 6.37 மில்லியன் பயனற்றதாகியிருந்தது. | | | |
| (கி) | கம்பனி ரூபா 2,291.21 மில்லியன் தொகையினை Repo, சேமிப்பு கணக்கு மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீட்டு மூலங்களில் முதலீடு செய்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 132,85 மில்லியன் தேறிய வட்டி வருமானமொன்றை உழைத்திருந்தது. கம்பனி இந்த வட்டி வருமானத்தை 2020 ஆம் ஆண்டில் உழைத்திருக்காதிருப்பின், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 70.40 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமானது ரூபா 62.45 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை காண்பித்திருக்கும். அத்துடன், இந்த வட்டி வருமானம் 2020 ஆம் ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபத்தில் 188.7 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | கம்பனியின் செயற்பாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக கம்பனியின் முகாமைத்துவம் அதன் மனித, நிதி மற்றும் பௌதீக வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | கம்பனியின் செயற்பாட்டு இலாபத்தினை முன்னேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறதுடன் நிர்மாண தொழிலைப் பாதிக்கின்ற பணவீக்கம், இறக்குமதி கட்டுப்பாடுகள், கொவிட்-19 தொற்றுநோய் போன்றன காரணமாக எமது செயற்பாட்டு விளைவுகள் பின்னடைந்துள்ளன. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களை குறிப்பாக நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களையும் நட்டங்களை குறைப்பதற்கு தளங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் கண்காணிக்கிறது. |
| (கீ) | கம்பனியின் 04 தள அலுவலகங்கள் அதாவது பொலன்னறுவை, ஊவா, COE தெற்கு மற்றும் அனுராதபுரம் ஆகியவை 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 490.77 மில்லியன் தேறிய நட்டத்தில் இயங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதேநேரம், | கம்பனியின் செயற்பாட்டு நட்டத்தை குறைப்பதற்காக கம்பனியின் முகாமைத்துவம் அதன் நிதி, மனித மற்றும் ஏனைய பௌதீக வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | தற்போது நடைபெற்று வரும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கும், நட்டமடைந்து வரும் செயற்திட்டங்களைக் கண்டறிந்து, நட்டத்தைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்திட்டக் | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களை குறிப்பாக நட்டத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களையும் நட்டங்களை குறைப்பதற்கு தளங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உன்னிப்பாகக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனுராதபுரம் மற்றும் ஊவா தள அலுவலகங்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 163.87 மில்லியன் மற்றும் ரூபா 196.88 மில்லியன் நட்டத்தை அடைந்திருந்தன. | | கண்காணிப்பு பிரிவை கம்பனி செயற்படுத்தியுள்ளது. | கண்காணிக்கிறது. |
| (கு) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 1,599.05 மில்லியன் மற்றும் ரூபா 1,929.33 மில்லியன் ஆகும். அதில் பூர்த்தியாக்கப்பட்ட 50 செயற்திட்டங்களுடன் தொடர்புயை ரூபா 325.05 மில்லியன் மீதிகள், அந்தக் கணக்கு மீதிகளை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளாது கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. முக்கியமாக பொருத்தமான மற்றும் காலரீதியான பட்டியலிடல் முறைமையொன்று இன்மை காரணமாக இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | காலப் பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டு, பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் நீண்டகாலமாக நிலுவையாகக் காணப்படும் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் கணக்குகளில் உரிய சீராக்கல்களை மேற்கொள்வதற்கும் மேலும் தாமதிக்காது பயனுள்ள வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். | இறுதி விலைப்பட்டியல்களை சான்றுறுதிப்படுத்தும் செயன்முறையில் அதிக அக்கறை செலுத்துமாறு அனைத்து தளங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்ட இறுதி விலைப்பட்டியல்களை உடனடியாக சான்றுறுதிப்படுத்துவதற்கு பொறியியலாளர்கள் பணியாற்றுவார்கள். அவை சான்றுறுதிப்படுத்தப்பட்டவுடன், பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் புறக்கணிக்கப்படலாம். |

## 4.21 வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 1,376,472,384 | 1,998,934,332 | 3,070,053,703 | 928,932,018 | (622,461,949) | முனைப்பழியுள்ளது |
| **2019** | 1,297,065,499 | 1,894,534,118 | 2,461,894,011 | 903,333,321 | (597,468,619) | முனைப்பழியுள்ளது |
| **2020** | 1,545,710,313 | 1,795,391,986 | 2,365,143,615 | 1,033,443,885 | (249,681,673) | முனைப்பழியுள்ளது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------------------- | ----------------------- | ----------------------- | ----------------------- |
| (அ) | வலையமைப்பின் உரிமை மூலதனம் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. 2020 ஆம் ஆண்டிற்கான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் நட்டம் ரூபா 210,623,700 ஆக காணப்பட்டதுடன் சுயாதீன | நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்ந்து வரும் ஆண்டுகளில் வருமான இலக்குகளை அடைந்துகொள்வதற்கும், நட்ட நிலைமையை இலாபகரமான சூழ்நிலையாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. | 2021 ஆம் ஆண்டிற்கான வருமானம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 250 மில்லியனாலும் தேறிய நட்டம் 17.6 சதவீதத்தாலும் குறைவடைந்துள்ளது என மதிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொலைக்காட்சி வலையமைப்பின் கீழ் ITN FM, வசந்தம் FM ஆகியவற்றால் ஏற்பட்ட நட்டங்கள் முறையே ரூபா 52,557,304 மற்றும் ரூபா 13,177,729 ஆக காணப்பட்டன. எனினும் வசந்தம் தொலைக்காட்சியால் ஈட்டப்பட்ட இலாபம் ரூபா 62,384,227 ஆகும். அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் மொத்த நட்டம் ரூபா 213,974,507 ஆக காணப்பட்டது. | | | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான எதிர் வணிக கடன்பட்டோர் மீதி ரூபா 26,102,280 ஆக காணப்பட்டதுடன் வலையமைப்பால் தொடர்புடைய சேவை பெற்றுக்கொள்ளப்படாததன் விளைவாக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எதிர் வணிக கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 14,641,728 ஆக காணப்பட்டதுடன் நட்டக்கழிவு சீராக்கம் முழுத் தொகைக்கும் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர் வணிக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான ஆவணங்களைப் பேணுவதற்கும் உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர் வணிக கடன்பட்டோர் மீதிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை முறையாக மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சீர்செய்வதற்கு நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 5 ஆண்டுகளுக்கு குறைவான ரூபா 18,866,794 மீதி, 05 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 16,108,606 மீதி மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 28,954,081 மீதி என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 63,929,480 பிற்போடப்பட்ட வருமானத்தில் | பிற்போடப்பட்ட வருமான மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டிலும் அம் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 137,772,746 சேவைநாடுநர் முற்பண மீதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 33,620,223 மீதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிலும் குறித்த மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைநாடுநரின் முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த சேவைநாடுநரின் முற்பணங்கள் தொடர்பாக சேவைநாடுநர்கள் இனங்காணப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 05 வருட காலப்பகுதிக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 4,541,250 தொகையான 554 காசோலைகளின் பெறுமதி மற்றும் 02 முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 6,602,258 தொகையான 570 காசோலைகளின் பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 11,898,232 தொகையான இரத்து செய்யப்பட்ட காசோலைகளின் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிலும் குறித்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் கணக்கின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் 2017.12.31 இல் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்ட காசோலை கணக்கின் மீதிகள் தொடர்பான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,268,386 தொகையான உரிமை கோரப்படாத கொடுப்பனவில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,208,728 உரிமை கோரப்படாத மீதி தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்திய பின்னர் மீளளிப்பதற்கு அல்லது ஏனைய முறையான கணக்கீட்டு நடவடிக்கையை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் உரிமை கோரப்படாத மீதிகளின் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | ரூபா 50,628,651 தொகையான 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்ட மீதியை இனங்காண்பதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு 2020 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய மீதிகளை இனங்காணப்தற்கு நடவடிக்கைகளை எடுத்தல். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,687,956 தொகையான மீளளிக்கத்தக்க வைப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 855,707 தொகையான 112 மீளளிக்கத்தக்க வைப்புக்களின் கூட்டுமொத்தம் தொடர்பாக 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளளிப்பதற்கோ அல்லது ஏனைய முறையான கணக்கீட்டு நடவடிக்கையை எடுப்பதற்கோ நடவடிக்கைகள் | மீளளிக்கத்தக்க வைப்பு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மீளளிக்கத்தக்க வைப்புக் கணக்கில் உள்ள மீதியில் 2017.12.31 இற்கு முன்னர் முன்கொண்டுவரப்பட்ட மீதிகளிற்கான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 1,253,409 ஆக காணப்பட்டதுடன் இது சேவைநாடுநரை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இனங்காணப்படாத கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கடன் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனங்காணப்படாத மீதிகளை முறையாகப் பகுப்பாய்வு செய்த பின்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2018 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது நட்டம் குறைக்கப்பட்டிருந்த அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளில் நபர் ஒருவரிற்கு ரூபா 5000 தொகை செலுத்தப்பட முடியும் எனினும் 2019 ஆம் ஆண்டில் நட்டத்தை அறிக்கையிட்டிருந்த போதிலும் குறித்த தேவைப்பாட்டிற்கு முரணாக 2020 திசெம்பரில் நபரொருவரிற்கு ரூபா 13,000 படி 696 ஊழியர்களுக்கு ரூபா 9,046,000 தொகை வலையமைப்பு மூலம் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் நடவடிக்கைகளை எடுத்தல். | உரிமை கோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2011 ஆம் ஆண்டின் போது வலையமைப்பின் முன்னாள் ஊழியர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மோசடியில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,210,620 தொகையை | தாமதமின்றி அறவீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சாத்தியமான மோசடிகளைக் குறைக்கும் வகையில் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளைத் தயாரித்தல். | இந்த மீதியை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் முழுப் பெறுமதிக்கும் நட்டக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (ஔ) | 2020 ஆம் ஆண்டின் போது ITN அலைவரிசையால் இருபது தொலைக்காட்சி நாடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 13 தொலைக்காட்சி நாடகங்களில் இருந்து ரூபா 60,965,986 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்யும் போது அத்தியாயமொன்றிற்கு செலுத்த வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதங்களை விஞ்சி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது 6 நாடகங்களுக்கு ரூபா 15,565,000 தொகை மேலதிகமாக லுத்தப்பட்டிருந்தது. | தொலைக்காட்சி நாடகங்களை கொள்வனவு செய்வதற்கு முறையான மற்றும் வெளிப்படையான வழி பின்பற்றப்பட வேண்டும். | இயன்றவரை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | இதுவரை தொலைக்காட்சி நதடகங்களை கொள்வனவு செய்யும் நடைமுறையை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (க) | 2018 மே 8 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டிஎம்எஸ்/1590/வீஓஎல் II ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பிற்கான பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 | ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சம்பள வகைப்படுத்தல்களின் ஒரு பகுதி தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டம் 2021 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் ஏனைய வகைப்படுத்தல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் JM 1-1 | பதவிகளின் ஒரு பகுதி தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டங்கள் நாளதுவரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையிலும் அதனை அங்கீகரித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லைல. | | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் நாளதுவரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (கா) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் படிகளாக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 550,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டமின்றி 7 பதவிகளிற்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இரண்டு பதவிகளிற்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 75,000 தொகையும், 327/09 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் உபசரணைப் படிகளாக ரூபா 25,000 தொகையும் தொலைபேசி படிகளாக ரூபா 10,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. | நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளுக்கு உரித்தற்ற 337 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 21,639,349 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அமைப்பு அகவிதி மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் என்பவற்றின் பிரகாரம் ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | நாளதுவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | வான் காலத்தின் விற்பனைக்காக அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 9,869,852 தொகையை அறவீடு செய்வதற்காக சேவைநாடும் கடன்பட்டோரிற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | சேவைநாடும் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஒளிபரப்புச் சிக்கல்கள் காரணமாக இப் பெறவேண்டிய தொகை அப்படியே காணப்பட்டது.. ஏறத்தாழ 98 சதவீத கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் | இதுவரை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனியால் ஏழு வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 6,652,442 பெறுமதியான 4 வழக்குகள் அழைப்பாணைகளை ஒப்படைக்க முடியாதிருந்ததன் காரணமாக முடிவுறுத்தப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 266,926,032 ஆக காணப்பட்டது, அதில் 4 சதவீதம் மாத்திரமே அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | | எடுக்கப்படுகின்றது, மீதமுள்ளவை சட்ட நடவடிக்கைகளின் மூலம் அறவீடு செய்வதற்கு சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்டன. | |
| (கு) | 2015 ஆம் ஆண்டின் போது வலையமைப்பால் ரூபா 1,588,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட Hot Swappable Power Distribution Rack கொள்வனவு திகதியிலிருந்தும் 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,218,274 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட Arose Flexus FT- 30, 30KVA UPS முறைமைகள் 3 வருட காலப்பகுதியிலிருந்தும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | சொத்துக்கள் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். | தேவையானவாறு பிரதான கட்டிடத்தின் ஒரு பகுதி தயார்செய்யப்பட்ட பின்னர் சிவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு Hot Swappable Power Distribution Rack நிறுவப்பட்டது. உரிய உபகரணங்கள் கிடைத்தவுடன் மின்சார இணைப்பை வழங்க முடியும். | நாளதுவரை விளைவற்றுள்ளது. |
| (கூ) | நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் வலையமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் | நிரந்தர பதவியணியின் பதவிகளிற்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | எம்ஈடி/பீ/ஜரீஎன்/2020/ பீ/ஷ.ஷ 04 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவின் இல. 7(அ) மற்றும் (ஆ) இன் கீழ் விபரங்கள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் நிரந்தர பதவியணியின் பதவிகளிற்கு |

| | | |
|---|---|---|
| உள்ளடங்கிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 34 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படாத 4 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்டுள்ளன. | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 84 ஆகும். |

### 4.22 லேக் ஹவுஸ் புரொப்பெட்டி டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | - | 15,000 | 19,079,497 | 45,000 | (15,000) | முனைப்பழியற்றது |
| **2019** | - | 352,430 | 18,702,067 | 20,000 | (352,430) | முனைப்பழியற்றது |
| **2020** | - | 9,600 | 18,692,467 | 20,000 | (9,600) | முனைப்பழியற்றது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஆதன அபிவிருத்தி வணிகத்தில் ஈடுபடுவதற்காக ஆரம்பத்தில் கம்பனி 1985 இல் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் 2007 இல் மோடார் கார்கள், லொறிகள், பேருந்துகள், வான்கள், டக்சி, கெப்கள், ஒமினி பஸ் அல்லது ஏனைய ஏதேனும் மோட்டார் வாகனங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல்/ குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் எடுத்தல் ஆகிய புதிய நடவடிக்கைகளிற்கு அதன் நோக்கங்கள் மாற்றப்பட்டிருந்தன. எனினும் கம்பனி அந்த அத்தகைய வணிக நடவடிக்கைகள் எதிலும் நாளதுவரை ஈடுபட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கம்பனிக்கு அதன் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு வழிகாட்டுதல் வேண்டும். | லேக் ஹவுஸ் புரொப்பெட்டி டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து ANCL இற்கு 2013 ஆம் ஆண்டில் மாற்றப்பட்ட ஹோகந்தரா காணியின் உரிமைத்துவம் மற்றும் 2016 ஆம் ஆண்டில் VRS இற்கான கடனைப் பெற்றுக்கொள்வதற்கும், தொழிற்படு மூலதனத்திற்கும் கொமர்ஷல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளது. | ஒரு தொடர் பிரச்சினையாகும். இதற்கு இன்னும் தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. |

## 4.23 அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட்

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 3,085,621,000 | 3,251,848,000 | 2,406,141,000 | 1,810,124,000 | (166,227,000) | முனைப்பழியுள்ளது |
| **2019** | 3,092,361,000 | 3,308,465,000 | 2,109,369,000 | 1,717,092,000 | (216,105,000) | முனைப்பழியுள்ளது |
| **2020** | 2,072,985,000 | 2,290,825,000 | 2,030,669,000 | 1,824,916,000 | (217,840,000) | முனைப்பழியுள்ளது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு திறைசேரி பிரதிநிதி அல்லது நிதி முகாமைத்துவத் திறன் கொண்ட நபர் தலைமையில் ஆகக்குறைந்தது மூன்று நிறைவேற்று தரமல்லாத சபை உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டிய போதிலும் திறைசேரி பிரதிநிதிகள் எவரும் பங்குபற்றியிருக்காததுடன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் கூட்டங்களுக்கு தலைமை தாங்கினார். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இடம்பெற வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி அரச உடமையாக்கப்பட்ட முயற்சி ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் பணிப்புரைகளை கம்பனி பின்பற்றியிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். | ANCL இற்கு பிஈடி சுற்றறிக்கையின் பொருந்தக்கூடிய தன்மை தொடர்பான நிலைமை இன்னும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாகும். மேலும் பல முன்னைய கோரிக்கைகள் இருந்தபோதிலும் பிஈடி இது குறித்து ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கவில்லை. | இப் பிரச்சனை இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2014 இல் கம்பனி திவிநெகும திணைக்களத்திற்கு ரூபா 2,209,560 பெறுமதியான 192,665 எண்ணிக்கையான "புதுசரண" பருவகால சஞ்சிகை பிரதிகளை வழங்கியிருந்தது. எனினும், எந்தவித அறவீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் 2015 தொடக்கம் நாளதுவரையிலும் கம்பனியால் இத்தொகை முழுவதற்கும் ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிலுவை மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தால் கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திவிநெகும திணைக்களம் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ளதுடன் இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ஓய்வுபெறுதல், சேவையை முடிவுறுத்துதல் அல்லது மரணம் காரணமாக சேவையிலிருந்து ஏற்கனவே விலகியிருந்த கம்பனியின் ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 6,881,484 தொகை 01 வருடத்திலிருந்து 20 வருடங்கள் வரையான காலமாக நிலுவையாக உள்ளது. | கடன் வழங்கப்படும் போது அவர்களின் வயது, திருப்பிச் செலுத்துதல் மற்றும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். விலகிய ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியை தீர்ப்பனவு செய்யுமாறு கோரி நினைவூட்டல்கள் அனுப்பப்படல். | உரிய பிணைதாரர்களிடமிருந்து தீர்க்கப்படாத இடர் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | முழுத் தொகையும் இன்னும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | கம்பனி அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு கம்பனியின் வெளியீட்டிற்காக பங்களிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்களிப்பு கணக்கில் ரூபா 14,899,522 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது. அதில் ரூபா 2,171,715 தொகை 2011 தொடக்கம் 2020 வரை நிலுவையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பங்களிப்பின் அடிப்படையில் செய்திப் பத்திரிகை விநியோகிக்கப்படும் போது அறவீடுகளும் கண்காணிக்கப்பட வேண்டும். | பகுப்பாய்வின் கீழ், பிரதான நிலுவை விடயங்கள் 06 மாத கடன் காலப்பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதுடன் கடன் இடரைக் குறைப்பதற்காக மாதாந்தம் விலைப்பட்டியல்கள் அனுப்பப்படுகின்றன. | தொடர் பிரச்சினை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளிலிருந்து விலகியிக்க வேண்டிய தேவை இருந்தால், வழிகாட்டல் ஒன்றை பெற்றுகொள்ளுதல் வேண்டும். | முகாமைத்துவத்தால் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | இப் பிரச்சனை இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது அரசாங்க நிறுவனங்களிற்காக ஒன்பது பத்திரிகையாளர்கள் நான்கு பதிப்பாசிரியர்கள், உதவி முகாமையாளர், புகைப்பட கலைஞர், சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி மற்றும் காசாளர் உள்ளடங்கலாக பதினேழு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் கம்பனி அவர்களின் சம்பளம், வேதனங்கள், மற்றும் படிகளாக ரூபா 5,476,800 தொகையை செலவிட்டிருந்தது. ஒன்பது பத்திரிகையாளர்கள் மற்றும் நான்கு பதிப்பாசிரியர்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குள் இருபத்தாறு பத்திரிகையாளர்கள் மற்றும் இருபத்து மூன்று பதிப்பாசிரியர்கள் | கம்பனிக்கு பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளிலிருந்து விலகியிக்க வேண்டிய தேவை இருந்தால், வழிகாட்டல் ஒன்றை பெற்றுகொள்ளுதல் வேண்டும். | ஊழியர்களை விடுவிப்பது தொடர்பாக 2020/08/26 ஆம் திகதிய சபை தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்ட கம்பனியின் கொள்கையின் பிரகாரம் அத்தகைய விடுவித்தல்களை சனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் ஊடக அமைச்சகத்திற்கு மாத்திரமே செய்ய முடியும். | இப் பிரச்சனை இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்த அடிப்படையில் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | | | |
| (ஏ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26,800,895 பெறுமதியான 263 காசோலைகள் மதிப்பிழந்து காணப்பட்டது. அதில் ரூபா 2,155,046 பெறுமதியான 60 காசோலைகள் மற்றும் ரூபா 216,802 பெறுமதியான 10 காசோலைகள் முறையே 5 வருடங்கள் மற்றும் 3 வருடங்களை விட அதிக காலம் நிலுவையாக காணப்படுகின்றது. | காணப்படுகின்ற முறைமை கவனமாக கண்காணிக்கப்பட வேண்டும். | எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக கணக்காய்விற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட மதிப்பிழந்த காசோலை பட்டியலை தயவுசெய்து பார்க்கவும். | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | கம்பனி 1200 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக 2008 திசெம்பர் மாதத்தில் ரூபா 1,200,000 தொகையை இடைக்கால கொடுப்பனவொன்றாக லங்கா புவத் லிமிட்ட் - இலங்கை தேசிய பத்திரிகை முகவர் நிறுவனத்திற்கு செலுத்தியிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. மேலும் 2017 ஆம் ஆண்டிலே லங்கா புவத் லிமிட்டட்டின் மூன்று ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் வேதனங்களாக செலுத்தப்பட்ட ரூபா 2,194,637 தொகை 2020 திசெம்பர் 31 வரையிலும் பெற வேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. | வருமானத்தை ஈட்டுவதற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | சபைத் தீர்மானம் எல்கேபிபீ 202.17 இன் அடிப்படையில் லங்கா புவத் (பிறைவேட்) லிமிட்டட்டின் 1200 பங்குகளில் ANCL முதலீடு செய்திருந்தது. | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 720 தினங்களுக்கு அதிக காலம் நிலுவையாக காணப்பட்ட ரூபா 7,673,033 தொகையான எட்டு கடன்பட்டோர்களுக்கு எதிராக கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அண்மைய இரண்டு ஆண்டுகளில் அவர்களோடு மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் தவறியிருந்தமை இதற்கு காரணமாகும். | ஆவணங்களின் பாதுகாப்பு தொடர்பாக பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட வேண்டும். | இதனை சீர்செய்வதற்கும் எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகளை தவிர்ப்பதற்கும் கடன் கட்டுப்பாட்டு செயன்முறையை கடுமையாக்குவதன் மூலம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | கம்பனிக்காக தோற்றுகின்ற வழக்கறிஞர் நீதிமன்றத்தின் உரிய அறைக்கு சமூகமளித்திருக்காததால் வழக்குத் தீர்ப்பை வாதிக்கு சாதகமாக பெற்றுக் கொடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. வாதி கம்பனியிடம் இருந்து ரூபா 500 மில்லியன் கோரியிருந்தார். கம்பனி | கம்பனிக்கு எதிராக காணப்படுகின்ற அவதூறு வழக்குகளை குறைத்துக் கொள்வதற்கு கம்பனி | முகாமைத்துவத்தால் கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2019 இல் மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. கம்பனிக்கு சட்டக் கட்டணமாக ரூபா 18,230,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வழக்கிற்காக தவறான நீதிமன்ற அறையில் ஆஜராகிய வழக்கறிஞர் 2020 ஏப்ரல் 08 இல் ஓய்வுபெற்று பின்னர் மீண்டும் 2020 மே 15 இல் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டார். அந்த உத்தியோகத்தரிற்கு எதிராக இதுவரை எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | | |
| (ஔ) | வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஹோகந்தர பிரதேசத்தின் 8 ஏக்கர் நிலப்பரப்பு 1985 ஆம் ஆண்டு தொடக்கம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | கம்பனி வருமானமொன்றை ஈட்டுவதற்காக இச் சொத்தை பயன்படுத்த வேண்டும். | 2013 ஆம் ஆண்டில் லேக் ஹவுஸ் புறப்பர்ட்டி டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டினால் ஹோகந்தர காணியின் உரிமைத்துவம் ANCL இற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் VRS மற்றும் தொழிற்படு மூலதனத்திற்காக கடன் பெற்றுக்கொள்வதற்காக கொமர்ஷல் வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ளது. | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (க) | 2017 யூன் 06 இல் தயாரிக்கப்பட்ட பதவியணிக்காக 2021 மார்ச் 26 ஆந் திகதி வரையிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அப் பதவியணியின் பிரகாரம், பொது மற்றும் பதிப்பாசிரியர் பிரிவுகளிற்கான பதவியணியினரின் எண்ணிக்கை முறையே 658 மற்றும் 327 ஆகும். எவ்வாறாயினும், பொது மற்றும் பதிப்பாசிரியர் பிரிவின் உண்மையான பதவியணியினர் முறையே 964 மற்றும் 483 ஆக காணப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிக பதவியணியினர் 462 ஆக | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | முகாமைத்தவத்தால் கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் அதில் 434 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் காணப்பட்டனர். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது வருமானத்தின் சதவீதமாக பதவியணியினர் கிரயம் முறையே 62 சதவீதம் மற்றும் 53 சதவீதமாக காணப்பட்டது. | | | |
| (கா) | 2017 ஆம் ஆண்டிலே ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 2,250,000 செலுத்தி தயாரிக்கப்பட்டிருந்த திறமைகளை கைப்பற்றிக்கொள்ளல், பதவியுயர்வு, விடுமுறைக் கொள்கை, செயலாற்றல் முகாமைத்துவம் போன்ற 7 கொள்கைகள் கம்பனியினால் பாவனைக்குட்படுத்தப்படுகின்ற போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் முகாமைத்துவக் கொள்கைக்கு மாத்திரமே பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது, | அனைத்து கொள்கைகளுக்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | முகாமைத்தவத்தால் கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தொடர் பிரச்சனை ஒன்றாகும். இது இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

**4.24 ஸ்ரீ லங்கா கொம்பியூற்றர் எமேர்ஜன்சி றெடினெஸ் ரீம்/ கோர்டினேசன் ரீம் (சீஈஆர்ரீ)**

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 73,028,310 | 60,514,040 | 72,910,689 | 25,525,245 | 12,514,270 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 87,075,386 | 71,169,633 | 105,402,768 | 22,160,247 | 15,905,753 | முனைப்பழியுள்ளது |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | | |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 73.03 | 60.51 | 72.91 | 25.53 | 12.51 |
| 2019 | 87.08 | 71.17 | 105.40 | 22.16 | 15.91 |
| 2020 | - | - | - | - | - |


| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் வழிகாட்டல் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை கொண்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. | கம்பனி நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் தேவைப்பாட்டுடன் இணங்க வேண்டும். | பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பை மேற்கொள்ளுதல். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் | கம்பனி நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் தேவைப்பாட்டுடன் | கம்பனிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் வழிகாட்டல் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள். கம்பனி ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தை கொண்டிருக்கவில்லை. | இணங்க வேண்டும். | தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான Acnetix Web Valnerabyly Scanning மென்பொருள் புதுப்பித்தல் கட்டணமாக ரூபா 1,382,800 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இரு தரப்பினருக்கும் இடையிலான உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கை மூலம் மென்பொருளைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கையைப் பெறுதல். | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

## 4.25 வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க தகவல் உட்கட்டமைப்பு தனியார் நிறுவனம்

| | மொத்த வருமானம் | மொதத் செலவுகள் | மொத்த கொத்துக்கள் | மொத்தப் பொறுப்புக்கள் | வரிக்கு முனனர் இலாபம் (நட்டம் ) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2018 | 33,112,670 | 35,245,997 | 52,742,788 | 2,603,929 | (2,133,327) | மறுப்பு அபிப்பிராயம் |
| 2019 | 34,680,250 | 41,997,214 | 50,395,871 | 5,574,071 | (7,316,964 | மறுப்பு அபிப்பிராயம் |

2020 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 33.11 | 35.25 | 52.74 | 2.60 | (2.13) |
| 2019 | 34.68 | 42.00 | 50.40 | 5.57 | (7.32) |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள தவிர்த்தல் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் கம்பனியின் அனைத்து சொத்துக்களும் ரூபா 11,601,568 தொகைக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்டதுடன் ரூபா 2,307,807 தொகையான மீள் மதிப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள் ரூபா 461,561 தொகையான திரண்ட பெறுமானத் | நிலையான சொத்துக்கள் முறையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பராமரித்தல். | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தகவலின் உண்மைத் தன்மையை தெரிந்து கொள்ள முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேய்வும் முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும் தொடர்புபட்ட ரூபா 1,846,245 தொகையான சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதி மீளாய்வாண்டின் போது இலாப நட்ட கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட ரூபா 2,033,673 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் ரூபா 406,735 தொகையான அதன் திரண்ட பெறுமானத் தேய்வு 2017 ஆம் ஆண்டில் செம்மையாக்கல் செய்யப்படாது மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. மேலும் சொத்துக்களின் விற்பனை மீதான நட்டமாக இலாப நட்டக் கணக்கிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,269,838 தொகையினைச் சாட்டுவதற்கு பதிலாக பிழையாக ரூபா 1,626,938 தொகை சாட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான தேறிய மிகை ரூபா 357,100 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் பிழையின்றி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும் | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | மதிப்பீட்டினை திட்டமிடுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும் விற்கப்பட்ட சொத்துக்கள் மீதான ரூபா 357,100 தொகையான பெறுவனவுகள் 2017 ஆம் ஆண்டில் பிழையாக சில்லறை வருமானமாக கொண்டுவரப்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 901,673 பெறுமதியான சொத்துக்களும் ரூபா 180,335 தொகையான தொடர்புட்ட பெறமானத் தேய்வும் 2019 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஒரு மதிப்பீட்டினை நடாத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது. | மதிப்பீட்டினை திட்டமிடுதல். |
| (ஈ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133 (1) ஆம் பிரிவின் பிரகாரம் 2011 யூலை 18 இல் கம்பனியை தாபித்ததனை தொடர்ந்து கம்பனியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க வருடாந்த பொதுக் கூட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. |
| (உ) | 2003 யூன் 12 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை. | | | |
| (i) | உறுப்புரை 3 மற்றும் 4 | | | |
| | பணிப்பாளர்கள் சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணிபாளர்கள் சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை. |

(ii) உறுப்புரை 5.1

| | | | |
|---|---|---|---|
| கம்பனி ஒரு கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்திருக்க வில்லை. | கம்பனி ஒரு கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்தல் வேண்டும் | ICTA இன் கீழ் LG11 இன் நோக்கெல்லையை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது | கூட்டடிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

(iii) உறுப்புரை 9.2

| | | | |
|---|---|---|---|
| மனிதவளங்கள பாதீட்டுடன் ஒன்றித்து மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். பொதுத் திறைசேரியின் முயற்ச்சிகள் திணைக்களத்தில் அங்கீகரித்த பதவியணியினர் பதிவு செய்யப்படுதல் வேண்டும். எனினும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இன்னும் மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

(iv) உறுப்புரை 9.3(1)

| | | | |
|---|---|---|---|
| கம்பனி ஆட்சேர்ப்புத் திணைக்களத்தினையும் ஒவ்வொரு பதவிக்கான பதவியுயர்வினையும் தயாரித்திருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | ஈ-சிறீ லங்கா செயற்திட்டத்தின் நிதி வழங்குனரான உலக | அரசாங்கத்தின் திரண்ட நிதியினால் நிதியளிக்கப்படுகின்ற | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி மற்றும் நிருவாகச் சுதந்திரமானது |

வங்கியானது இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் சுதந்திரத்தின் தேவைப்பாட்டினை சுட்டிக்காட்டியுள்ளதனால், 2003 யூலை 16 ஆந்திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவாண்மையினால் நிதி மற்றும் நிர்வாகத் துறைக்கான முழுமையான சுதந்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அதன் துணைக்கம்பனி என்பதனால் கம்பனி தற்பொழுது முழுமையாக திரண்ட நிதியில் தங்கியுள்ளது. எனினும் அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நிலவிய முன்னைய நிதி மற்றும் நிருவாக சுதந்திரமானது இன்னும் மாற்றமின்றிக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

சந்தர்ப்பத்தில் நிதி நிருவாகச் சுதந்திரமானது அது தொடர்பாக மேலும் பிரயோகிக்கக் கூடியதா என்பதனை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.


மாற்றமின்றிக் காணப்பட்டது.

4.26 வரையறுக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (தனியார்) நிறுவனம் (ICTA)

……………………………………………………………………………………………...

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவுகள் ரூபா | மொத்த செத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னைய இலாபம்(நட்டம் ) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 3,006,711,680 | 2,676,933,580 | 314,204,847 | 1,839,832,582 | 329,778,080 | மறுப்பு அபிப்பிராயம் முனைப்பழியுள்ளது |
| 2019 | 1,631,910,961 | 1,997,425,571 | 321,168,542 | 2,209,002,549 | (365,514,611) | |

2020 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.




| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஆதனம் பொறி, உபகரணங்கள் என்பன மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மீள் பதிவு அடிப்படை என்பன | மீள்மதிப்புப் பெறுமதிகளை உள்ளடக்கி ஒரு நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும் அத்துடன் சொத்துக்களின் மீள்மதிப்பு | நிலையான சொத்து பதிவேட்டினைப் பேணுதல் | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தகவல்களின் உண்மைத் தனமையை அறிந்து கொள்ளமுடியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல்லாததன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் சரியான தன்மையை கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது. | அடிப்படையினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | | |
| (ஆ) | கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,525,628,004 ஆக இருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த மொத்த பொறுப்புக்கள் ரூபா 1,527,245,089 ஆகும். அதற்கிணங்க கம்பனியின் தொடர்ந்து இயங்கும் தன்மையானது நிச்சயமற்றதாக இருந்தது. ஆனால் கம்பனியின் முகாமைத்துவமானது அவ்வாறான நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைததுவம் அவ்வாறான நிலைமையைத் தவிர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய நிலைமையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். | இதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எ டுக்கப்படவில்லை. | இந்நிலைமையானது 2019 இலும் அவ்வாறே காணப்பட்டது. |
| (இ) | சம்பளப் பட்டியல், உணவு வழங்குதல், பாதுகாப்புச் சேவைகள் போன்ற சேவைகளை வழங்குவது | உரிய உடன்படிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை |


| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக இரு தரப்பினர்களுக்குமிடையே உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. | | | |
| (ஈ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133(1) ஆம் பரிவின் பிரகாரம் கம்பனி தனது வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்தியிருக்கவில்லை. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்படவில்லை. |
| (உ) | 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் அதிகாரச் சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் படி 2010-2012 காலத்திற்கான முதலாவது டிஜிடல் அரசாங்க கொள்கையானது தயாரிக்கப்பட்டு கொள்கையை மீளமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | அதிகார் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | டிஜிடல் அரசாங்கக் கொள்கையானது தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (ஊ) | ஈ-சிறீ லங்கா செயற்திட்டத்தின் பிரதான அனுசரணையாளர் என்பதனால் உலக வங்கியின் வேண்டுதலின் படி இந்த நிறுவனமானது அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் நிதி மற்றும் நிருவாகப் பிரிவுகளுக்கு முழுமையான சுதந்திரம் | அரசாங்கத்தின் திரண்ட நிதியிலிருந்து பணத்தைப் பெறுகின்ற ஒரு நிறுவனம் என்பதனால் மேலும் நிதி மற்றும் நிருவாகச் சுதந்திரம் தேவைப்படுகின்றதா இல்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். | அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | நிதி மற்றும் நிருவாகச் சுதந்திரம் மாற்றமின்றிக் காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டது. தற்பொழுது இக்கம்பனியானது திரண்ட நிதியில் முழுமையாகத் தங்கியுள்ளது . ஆனால் அந்த நிதி மற்றும் நிருவாகச் சுதந்திரமானது மேலும் தொடர்ந்து செல்கின்றது. | | | |
| (எ) | பில் என்ட் மெலின்டா கேட் பவுன்டேசன் இன் கீழ் 3 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 32,085,570 தொகையானது கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மீது செலவு செய்யப்பட்டதன் காரணமாக அச்செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. | செயற்திட்டங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அச்செயற்திட்டங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவில்லை. |
| (ஏ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிசிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தியின் படி நல்லாட்சிக்கான வழிகாட்டிகள் மனிதவளங்கள் பாதீடு, ஒருங்கிணைந்த மனித வளங்கள், திட்டம் என்பன தயாரிக்கப்பட்டடு பொது முயற்ச்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையுடன் இணங்கியிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2003 யூன் 02 ஆந்திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின், வழிகாட்டல் 9.3.1 இன்படி கம்பனி ஆட்சேர்ப்புத் திட்டத்தினையும் ஒவ்வொரு பதவியுயர்வினையும் தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்களுக்கிணங்க ஆட்சேர்ப்புத் திட்டமும் பதவியுயர்வும் தயாரிக்கப்படுதல் வேண்டும். | அதற்கிணங்க செயற்படவில்லை. | சுற்றறிக்கையுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந்திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களும் வருடாந்த வரைபு அறிக்கையும் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆனால் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 21 மாதங்கள் தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கிணங்க நிதிக்கூற்றுக்களும் வருடாந்த வரைபு அறிக்கையும் கணக்காகய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | அதற்கிணங்க சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019ஆம் ஆண்டில் ஒரு தாமதம் காணப்பட்டது. |

4.27 வரையறுத்த லக்திவ பொறியில் (தனியார் ) நிறுவனம்

| | மொத்த வருமானம் | மொத்த செலவுகள் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னைய இலாபம்(நட்டம் ) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2018 | 133,673,206 | 31,933,865 | 71,754,545 | 15,587,411 | 23,778,392 | மறுப்பு அபிப்பிராயம் |
| 2019 | 193,783,770 | 40,248,431 | 116,624,664 | 27,448,674 | 23,956,337 | மறுப்பு அபிப்பிராயம் |
| 2020 | 131,721,818 | 33,884,474 | 95,161,076 | 30,961,369 | (26,326,283) | முனைப்பழியுள்ளது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 133.67 | 31.93 | 71.75 | 15.59 | 23.78 |
| 2019 | 193.78 | 40.25 | 116.62 | 27.45 | 23.96 |
| 2020 | 131.72 | 33.88 | 95.16 | 30.96 | (26.33) |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 27,075,878 மொத்த தொகையான நிலையான சொத்துக்களின் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,290,423 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக கொள்வனவு செய்த ஆண்டு குறிப்பிடப்படவில்லை. கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் அச்சொத்துக்கள் மீது | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பெறுமானத் தேய்விற்கு சரியாக ஏற்பாடு செய்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய நடவடிக்கை எடுத்து சரிசெய்யவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டு வரை பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்காததினால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 60 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு கம்பனி வருமான வரியினைச் செலுத்துவதற்கு பொறுப்பாக உள்ளது. ஆனால் அந்த வேண்தலை நிறைவேற்றுவதற்கு 2020 திசெம்பர் 31 ஆந் திகதிய கணக்காய்வுத் திகதி வரையும் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரிக்கான பொறுப்பு நிறைவேற்றப்படுதல் வேண்டும். | காலக்கிரமத்தில் உரிய சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி மற்றும் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஊக்குவிப்புத் திட்டத்தினைப் பின்பற்றாது ஊக்குவிப்பு படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,839,840 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் காலத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கினை நிறைவுற்றுவதற்குத் தவறியமையை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 795,600 தொகையானது தொழிற்சாலையின் உத்தியோகத்தர்களுக்குச் | முறையான மதிப்பீட்டினூடாக திறைசேரியின் அங்கிகாரத்தின் கீழ் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்படல் வேண்டும் | காலக்கிரமத்தில் உரிய சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படும். | உரிய சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஈ) | பெறுகைப் பிரிவில் பேணப்பட்ட பிரதான பின்காட்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்காதது டன் வழக்கமாக பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்காக இருப்புக்களைப் பேணுதல் அலட்ச்சியப்படுத்தப்பட்டமை மயானது பாதுகாப்பு இருப்புக்கள் இல்லாமைக்கு வழிவகுத்திருந்தது. இதன் விளைவாக ரூபா 38,348,373 பெறுமதியான உடனடிக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது மொத்த கொள்வனவுகளில் 80 சதவீத அதிகரிப்பிற்கு வழி வகுத்திருந்தது. மேலும் பயன்படுததப்படாத 90 இருப்பு விடயங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. என்பது பின்காட்களை பரீட்ச்சிக்கையில் அவதானிக்கப்பட்டது. | இருப்புக் கட்டுப்பாடுகள் முறையாகச் செய்யப்பட வேண்டியதுடன் பின்காட்கள் சரியாக பேணப்படுதல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் தொற்றுநோய் பரவியதன் காரணமாக போதியளவு பாதுகாப்பு இருப்புக்களுடன் உற்பத்திச் செயற்பாடுகளை முறையாகத் தொடர முடியாதிருந்தது. எனினும் காலக்கிரமத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரித் பதவியணியினர் 121 ஆக இருந்ததுடன் அவர்களில் 96 ஊழியர்கள் நிரந்தரமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த அதேவேளை 12 பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. பொது முகாமையாளரின் பிரதம முகாமைத்துவ பதவியானது கம்பனியின் அங்கீகரித்த பதவியணியினுள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காததுடன் தொழிற்சாலை பொறியியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு | வெற்றிடங்கள் பொருத்தமான முறையில் நிரப்பப்படல் வேண்டும். | கம்பனிக்கான ஆட்சேர்ப்புத்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட உடன் கம்பனியின் நிதி நிலைமைக்கு இணங்க தேவையான ஆட்சேர்பபுக்கள் மேற்கொள்ளப்படும். | சரி செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்த அடிப்படையில் ரேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பனிக்கு 06 போமன் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அவற்றில் 03 பதவிகள் 2001 பெப்ரவரி வரையும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | | | |
| (ஊ) | 2018 ஒக்டோபர் 03 ஆந் திகதிய DMS/1623 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தினூடக புதிய ஊழியகட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்து அங்கீகரிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஆட் சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபடும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (எ) | ஜா-எலவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 23 ஏக்கர் பரப்பளவான காணியில் கம்பனி செயற்பட்டது. எவ்வாறாயினும் காணியைக் பயன்படுத்துவது தொடர்பாக காணியின் சொந்தக்காரருடன் எழுத்து மூலமான உடன்படிக்கை செய்துகொள்ளப்படவில்லை. | காணியின் சொந்தக்காரருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஏ) | பஸ்களை திருத்தம் செய்வதற்காக 2018 இல் கம்பனியுடன் 12 கம்பனிகள் பதிவுசெய்திருந்த போதிலும் அவ்வாறான கம்பனிகளின் அனுபவத்தையும் அவர்கள் சார்ந்திருந்த துறையினையும் | 4.2 அம் பிரிவின் படி சரியான நடைமுறைகளைப் பின்பற்றி வேலையின் ஒப்பந்தங்களை வழங்குதலை முகாமை செய்தல். | எதிர்காலத்தில் சரியான நடைமுறை பின்பற்றப்படும். | சரியான நடைமுறை பிரயோகிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்ணயிப்பதற்கு வேண்டப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் 2018 இல் பஸ்களை திருத்தம் செய்வதற்காக எதுவித பெறுகை நடைமுறைகளையும் பின்பற்றாது ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 4.82 மில்லியன் செலுத்தப்பட்டது. | | | |
| (ஐ) | புத்தக மீதிக்கு மிகையாக ரூபா 1,400,559 பெறுமதியான 86 பொருட்கள் காட்டப்பட்டிருந்த அதே வேளை ரூபா 244,631 பெறுமதியான 51 பொருட்கள் குறைத்து காட்டப்பட்டிருந்தமை 2020 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வருடாந்த மெய்மையாய்வில் கண்டுகொள்ளப்பட்டது. | களஞ்சியப் பொருட்களின் வருடாந்த மெய்மையாாய்வினை நடாத்தி புத்தகங்களில் செம்மையாக்கல்களைச் செய்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நடாத்திய களஞ்சிய பொருட்களின் வருடாந்த மெய்மையாய்வானது ஏடுகளுக்கு கொண்டுவந்தது அவை உரிய காலத்தில் விற்றுத் தீர்க்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஒ) | 1988 இன் 56 ஆம் இலக்க 2000 இன் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1980 இல் 47 ஆம் இலக்கத் தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23(அ) பிரிவின் பிரகாரம் வாகனங்களை சேவைக்கு உட்படுத்துகின்ற நிறுவனங்கள் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற போதிலும் கம்பனி அவ்வாறான உத்தரவுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2020 | சுற்றாடல் தொடர்பான சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படுதல் வேண்டும். | உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் தொடர்பான சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (ஓ) | 2000 இன் 33 ஆம் இலக்க தொழிற்சாலைகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற நபர்களுக்கு தீக்காப்பு உடைகள் வழங்கப்படவேண்டிய போதிலும் இது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | உரிய சட்டங்களும் விதிகளும் காலக்கிரமத்தில் பின்பற்றப்படும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஔ) | வழிகாட்டி 3.2 (பெறுகை வழிகாட்டிகள் 2006) இன் பிரகாரம் தேசிய போட்டி விலை மனுக்கோரலினுடாக விலை மனுக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது பஸ்களை திருத்தம் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது தனியார் கம்பனியிலிருந்து ரூபா 74,935,429 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுதல். | உரிய சட்டங்களும் விதிகளும் காலக்கிரமத்தில் பின்பற்றப்படும். | சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படவில்லை. |
| (க்) | வழிகாட்டி 4.2 (பெறுகை வழிகாட்டிகள் 2006) இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டத்தையும் பெறுகை கால அட்டவணையையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | உரிய சட்டங்களும் விதிகளும் காலக் கிரமத்தில் பின்பற்றப்படும். | சட்டங்களும் விதிகளும் பின்பற்றப்படவில்லை. |

4.28 வரையறுக்கப்பட்ட இலங்கை லேலன்ட் (தனியார்) நிறுவனம்

| | மொத்த வருமானம் | மொத்த செலவுகள் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னைய இலாபம்/நட்டம் ) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2018 | 51,767,838 | 553,809,695 | 1,017,828,751 | 50,000 | (502,041,865) | முனைப்பழியற்றது |
| 2019 | 122,144,176 | 6,174,862 | 1,121,665,369 | 1,294,787 | 115,969,314 | முனைப்பழியற்றது |
| 2020 | 291,896,507 | 6,478,598 | 1,405,289,860 | 2,501,818 | 285,417,909 | முனைப்பழியற்றது |





| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 626,473 பெறுமதியான காணிகள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதன் ஒரு பகுதியின் உரிமையாண்மையானது கம்பனியிடம் காணப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கூறப்பட்ட காணிகளின் அதிகாரம் உள்ளமை உரிமையாண்மை என்பவற்றை தேற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உறுதிக்கு இணங்க உரிமையாண்மையில் உள்ளடக்கப்படாத கம்பனிக்குச் சொந்தமான காணிகளை ஏடுகளிலிருந்து நீக்குவதற்காக அவ்வாறான காணிகளின் உரிய எழுத்து மூலச் சான்றுகள் கம்பனியிடம் | காணிகள், அதிகாரம், உள்ளமை, உரிமையாண்மை என்பவற்றை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணப்படவில்லை. | |
| (ஆ) | கம்பனியின் மனித வளங்கள் தொடர்பாக ஒரு ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை இல்லாதிருந்ததுடன் 2020/2021 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர்கள் சபைக்கான கொடுப்பனவுகளை உள்ளடக்கி ரூபா 6,465,067 தொகை நிருவாகச் செலவுகளாக செலவு செய்யப்பட்டிருந்தமையானது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஏதாவது செயற்பாட்டு நடவடிக்கைகள் இல்லாது ரூபா 6 மில்லியனுக்கு மேற்பட்ட நிருவாகச் செலவுகளை மேற்கொண்டமை ஒரு சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | போதியளவு செயற்பாட்டு நடவடிக்கைகள் இல்லாததனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நிருவாகச் செலவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. | நிருவாகச் செயற்பாடுகள் இல்லாது நிருவாகச் செலவுகள் இடம்பெற்றிருந்தது. |
| (இ) | கம்பனியிடன் முறையான வணிகத் திட்டமோ அல்லது கூட்டிணைந்த திட்டமோ காணப்படவில்லை. | முறையான வணிகத் திட்டத்தினையும் கூட்டிணைந்த திட்டத்தினையும் தயாரிப்பதற்கும் அதற்கிணங்க முயற்சிகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முதலீட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏனைய செயற்பாடுகளோ வணிகத்திட்டமோ காணப்படவில்லை. | வணிகத்திட்டம் அல்லது கூட்டிணைந்த திட்டம் இருக்கவில்லை. |
| (ஈ) | கம்பனியிடம் எழுத்திலான மனித வளங்கள் திட்டம் இருக்கவில்லை. | வணிகத் திட்டத்திற்கு இணங்க நிரந்தர ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். | மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | எழுத்திலான மனித வளங்கள் திட்டம் இருக்கவில்லை. |

4.29 வரையறுக்கப்பட்ட நிதிசார் கற்கைகள் (உத்தரவாதமளிக்கப்பட்டது) நிறுவனம்.

| | மொத்த வருமானம் | மொத்த செலவுகள் | மொத்த செத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னைய இலாபம்(நட்டம் ) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2018 | 214,100,654 | 78,327,066 | 324,042,712 | 54,465,797 | 61,131,633 | முனைப்பழிளுன்னது |
| 2019 | 157,886,847 | 82,861,412 | 320,390,536 | 40,648,052 | 30,137,234 | முனைப்பழிளுன்னது |
| 2020 | 74,143,605 | 59,675,485 | 305,520,982 | 46,722,007 | (90,945) | முனைப்பழிளுன்னது |





| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 214.10 | 78.33 | 324.04 | 54.47 | 61.13 |
| 2019 | 157.89 | 82.86 | 320.39 | 40.65 | 30.14 |
| 2020 | 74.14 | 59.68 | 305.52 | 46.72 | (0.09) |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | உரிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உயர் முகாமைத்துவத்திலுள்ள மாற்றங்களின் காரணமாக உரிய ஆண்டுகளுக்காக பட்டியல்படுத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவது சாத்தியமற்றதாக இருந்தது. | இவ்விடயத்தை சரி செய்வதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்ச்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு முரணாக கழிவு செய்யக்கூடிய நடைமுறைப் பெறுமதியின் அடிப்படையில் விசேட நலன் பொறுப்பு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க விசேட நலன் பொறுப்பு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விடயத்தினைத் திருத்துவதற்கு உரிய வேளையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தவறான கணிப்பீட்டின் காரணமாக 2019 /2020 மதிப்பீட்டு ஆண்டிற்காக ரூபா 2,241,192 தொகையான வருமான வரி மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருமான வரி மிகைக் கொடுப்பனவானது வரித்திரட்டுக்களில் மீளளிக்க வேண்டிய தொகையாகக் குறிப்பிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வருமான வரி மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணைந்து இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

4.30 இலங்கை பெற்றோலியக் களஞ்சியப்படுத்தல் நிலையம்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவுகள் ரூபா | மொத்த செத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னைய இலாபம்(நட்டம் ) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 13,952,435,115 | 12,430,205,006 | 30,321,966,787 | 2,106,107,929 | 1,522,230,109 | மறுப்பு |
| 2019 | 16,515,254,612 | 13,587,398,579 | 32,205,354,378 | 2,204,531,398 | 2,927,856,033 | மறுப்பு |
| 2020 | 14,450,477,900 | 12,312,241,019 | 32,576,788,664 | 1,709,065,251 | 2,138,236,881 | முனைப்பழியுள்ள |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 13,952.44 | 12,430.21 | 30,321.97 | 2,106.11 | 1,522.23 |
| 2019 | 16,515.25 | 13,587.40 | 32,205.35 | 2,204.53 | 2,927.86 |
| 2020 | 14,450.48 | 12,312.24 | 32,576.79 | 1,709.07 | 2,138.24 |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள தவிர்த்தல் நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 1. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் அண்ணளவாக ரூபா 7,727.6 மில்லியன் கிரயமான 15,148 விடயங்களை உள்ளடக்கிய முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பிரயோசனமான சிக்கன ஆயுள் காலம் மீள்மதிப்புச் செய்யப்படாது கம்பனியினால் அச்சொத்துக்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வந்தன. | நியமங்களின் வேண்டுதலுடன் கம்பனி இணங்கி இருத்தல் வேண்டும். | இந்த இலக்கினை பூர்த்தி செய்து 2022 நிதி ஆண்டின் போது நிலையான சொத்துக்களை சந்தை நிலைமைக்கு கொண்டு வருவதற்காக அச்சொத்துக்களின் பெறுமதியை மீளத்தெரிவிப்பதற் | செத்துக்களின் மீள் மதிப்பானது நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலும் கம்பனி, 2003 இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்கு முறையான ஒரு கொள்கையை தோற்றுவித்திருக்கவில்லை. | | கு முகாமைத்துவம் திட்டமிட்டு வருகிறது. | |
| 2. | செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 6 மோட்டார் வாகனங்கள் தொடர்பாக சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் தொடர்புபட்ட குத்தகை பொறுப்பினை SLFRS 16 இன் 47 ஆம் பந்திக்கு இணங்க கம்பனி 2020 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டியிருக்கவில்லை. | நியமங்களின் வேண்டுதலுடன் கம்பனி இணங்கி இருத்தல் வேண்டும். | வரையறுக்கப்பட்ட இராஜகிரிய டுவர்ஸ் (தனியார்) நிறுவனத்திடமிருந்து வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 மோட்டார் வாகனங்கள் செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டவைகளாகும். இவ்வாகனங்களின் உரிமையாண்மையானது ஒப்பந்த காலத்தின் இறுதியில் கம்பனிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | நியமங்களின் பிரகாரம் சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமையானது அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 3. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரி, செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT), செலுத்த வேண்டிய பிடித்து வைத்தல் வரி, செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE), செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணம் (ESC) என்பவற்றின் மீதிகளின் மொத்தத் தொகைக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேடுகளில் உள்ளவாறான | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான இவ் வித்தியாசங்களை சரிசெய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | பேரேட்டு மீதிகளுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மீதிகளுக்குமிடையே கணக்கிணக்கத்தை தயாரிக்கும் நோக்கத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து விபரமான விளக்கத்தினை நாங்கள் கோரி இருந்தோம். அது | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மீதிகளுக்கும் பேரேட்டின் மீதிகளுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட கணக்கிணக்கம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதிகளின் மொத்தத் தொகைக்குமிடையே முறையே ரூபா 199.8 மில்லியன் ரூபா 437.53 மில்லியன் மற்றும் ரூபா 409.50 மில்லின் கணக்கிணக்கம் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | இன்னும் கிடைக்கவில்லை. | |
| 4. | 2019 ஆம் ஆண்டின் மற்றும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 8.8 மில்லியன் மற்றும் ரூபா 7.2 மில்லியன் தொகையான ஏனைய பெற வேண்டியவைகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டன. எனினும் அத்தொகைகளின் அறவிடக்கூடிய தன்மை தொடர்பாக போதியளவு உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளப்படவில்லை. | நீண்ட காலம் நிலுவையாக உள்ள பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | 2010 ஆம் ஆண்டில் SAP மற்றும் ERP அமுல்ப்படுத்துவதற்கு முன்பிலிருந்து இம் மீதிகளில் பல முன் கொண்டுவரப்படுகின்றன. இம் மீதிகளை அறவீடு செய்யக்கூடிய சாத்தியமானது மிகவும் அரிதாகும். பணிபாளர்கள் சபையின் முன் அங்கீகாரத்துடன் அறவிட வேண்டிய இந்த நீண்ட கால நிலுவை மீதிகளை பதிவழிப்பதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு சிபாரிசு செய்திருந்தது. | ஏனைய பெறவேண்டிய தொகைகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டன. |
| 5. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 07 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 2.7 மில்லியன் தொகையான வரவு மீதிகள் காணப்பட்டன. இது 05 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்படும் ரூபா 0.18 மில்லியன் கூட்டு மொத்தமான 02 வரவு மீதிகளை உள்ளடக்கியுள்ளது.மேலும் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக தீர்த்து வைக்கப்படாது | அனைத்து கணக்கிணக்கம் செய்யப்பட்ட மீதிகளையும் தீர்வு செய்வதற்கு பெருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீதிகளை தீர்வு செய்யாது SAP (MIRO) இலுள்ள தவறான இன்வொயிஸ் மெய்மையாய்வுகளை மாற்றியதன் காரணமாக வியாபாரிகளின் கணக்குகளில் பல வரவு மீதிகள் பிரதிபலிக்கின்றன. | தற்பொழுது வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளில் வரவு மீதிகள் காணப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்ட ரூபா 2.5 மில்லியன் மொத்தத் தொகையான 05 வரவு மீதிகள் காணப்பட்டன. 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 48 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 38.96 மில்லியன் தொகையான வரவு மீதிகள் காணப்பட்டன. 2010 அல்லது அதற்கு முன்பிலிருந்து ரூபா 2.98 மில்லியன் தொகையான 14 வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள், 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 0.55 மில்லியன் மொத்தத் தொகையான 03 வரவு மீதிகள், 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 35.42 மில்லியன் மொத்த தொகையான 31 வரவு மீதிகள் ஆகிய தீர்த்து வைக்கப்படாத மீதிகளைக் காட்டின.<br><br>எனினும் வியாரிகளின் வரவு மீதிகளை தீர்த்து வைக்காது அந்த வியாபாரிகளுடன் கம்பனி சில தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருந்தன. ஆகவே அந்த வரவு மீதிகளின் உள்ளமை மற்றும் சரியான தன்மையானது கணக்காய்வில் கேள்விக்குரியதாக இருந்தன. | | | |
| 6. | 2018 ,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு முறையே ரூபா 333.3 மில்லியன், ரூபா 86.81 மில்லியன் மற்றும் ரூபா 72.32 மில்லியன் நிலுவையான வியாபார செலுத்த வேண்டிய மீதிகள் காணப்பட்டன. எனினும் CPSTL இன் முகாமைத்துவமானது அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.அதற்கிணங் | அனைத்து கணக்கிணக்கம் செய்யப்பட்ட மீதிகளையும் தீர்வு செய்வதற்கு பெருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கம்பனியினால் செலுத்துவதற்கு வேண்டப்படாததாக இருந்த நீண்ட கால நிலுவையான செலுத்த வேண்டியவைகளாக குறித்த சில வியாபாரிகளின் பொறுப்புக்கள் காணப்பட்டன. ஏதாவது செலுத்த | நீண்டகாலம் நிலுவையாக உள்ள வணிக செலுத்தவேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | க, அம் மீதிகளின் உள்ளமையும் சரியான தன்மையும் ஐயத்துக்குரியதாக இருந்தது. | | வேண்டிய கணக்குகளை பதிவழிப்பதற்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டிய வரையறைகளின் பட்டியலினை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) அல்லது IFRS-9 வழங்குகின்றது.<br><br>வழி காட்டல்களின் பிரகாரம் செலுத்துவதற்கான கடப்பாடுகள், காலாவதியாகிய, இரத்துச் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட வேளையில் நிதிப் பொறுப்புக்கள் மாத்திரம் கம்பனியால் நீக்கப்படுதல் வேண்டும். எனவே கால ஒழுங்கின் அடிப்படையில் அவை பதிவழிக்கப்படுவதில்லை. | |
| 7. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு கம்பனிக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குமிடையே முறையே ரூபா 2,475.8 மில்லியன் ரூபா 1,623.13 மில்லியன் மற்றும் ரூபா 993.89 மில்லியன் தொகையான கம்பனிகளுக்கிடையிலான பெறவேண்டிய மற்றும் | அனைத்து கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது CPC உடனான மிகுதியாவுள்ள நிலுவையான பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | CPC உடனான கம்பனிகளுக்குகிடையிலான மீதிகளில் கணக்கிணக்கம் செய்யப்படாத வித்தியாசம் இன்னும் தொடர்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தவேண்டிய மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்படாத தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. எனினும் ரூபா 637.04 மில்லியன் தொகையான பிணக்காகவுள்ள நிலுவைக் கடன் வட்டியை CPSTL இற்குச் செலுத்துவதற்கு CPC அதனது 2021 யூலை 22 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தில் தீர்மானித்திருந்தது. | | | |
| 8. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியிலுள்ளவாறு கம்பனிக்கும் LIOC க்கும் இடையே கம்பனிகளுக்கிடையிலான மீதிகளில் முறையே ரூபா 55.1 மில்லியன் ரூபா 5.1 மில்லியன் மற்றும் ரூபா 40.18 மில்லியன் கணக்கிணுக்கம் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கம்பனி வழிகாட்டல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | ரூபா 43,458,458 கடன் வட்டியினை மீளளித்தல்<br><br>மின்சக்தி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கிணங்க ரூபா 37,057,076 தொகையுடன் சேர்த்து வரியினையும் பதிவழிப்பதற்கு CPSTL AMC தீர்மானித்தது. இதற்கிணங்க 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு LIOC யின் பெறவேண்டிய தொகைகளிலிருந்து ரூபா 43,458,458 மொத்தத் தொகையினைப் பதிவழிப்பதற்கு CPSTL தீர்மானித்திருந்தது எஞ்சியுள்ள ரூபா 3,308,922 தொகையான நிலுவையிலான | கம்பனிகளுக்கிடையிலான மீதிகளிலுள்ள கணக்கிணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் இன்னும் தொடர்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிணக்குகளை 2021 ஆம் ஆண்டின் போது LIOC தீர்த்து வைத்தது. | |
| 9. | பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாட்ச்சிக்கான வழிகாட்டல்களுக்கு இணங்க ரூபா 10 மில்லியனுக்கு மிகையான மூலதனச் செலவுகளுக்காக அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். | அனைத்து மூலதன அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாகவும் CPSTL யின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட முகவர்களிடமிருந்து இணை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு CPSTL இன் பணிப்பாளர் சபைக்கு திறை சேரி, அமைச்சு CPC மற்றும் LIOC என்பவற்றிலிருந்து பணிப்பாளர் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் | வேண்டப்பட்ட முன் அங்கீகாரம் இன்னும் பெற்றுக்கொள்ளப் படவில்லை. |
| 10. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களை உள்ளடக்கிய உரிய அமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டு பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் புதிய பதவியணியினை உருவாக்கும் சந்தர்ப்பத்தில் மிகை பதவியணியினர் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து கம்பனி | கம்பனி வழிகாட்டல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். | 2016-2021 காலப்பகுதிக்கான பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களானது DGM (HR-07) ஆம் இலக்க 2016 யூலை 22 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு | அங்கீகரித்த பதவியணியினர்களை உள்ளடக்கிய அமைப்பு வரைபடம் இன்னும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>அதற்கிணங்க பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களுக்கு முரணாக கம்பனி செயற்பட்டிருந்தது. | | சமர்ப்பிக்கப்பட்டது. இது பொது முயற்சிகள் திணைக்களத்தினால் புறக்குறிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இது அங்கீகரிக்கப்பட்டதா இல்லையா என்று கூறும் எந்த ஆவணத்தையும் நாங்கள் பெற்றுக்கொள்ளவில்லை. புதிய பதவியணியினர்களை அறிமுகப்படுத்திய தன் பின்னர் நாங்கள் எந்த புதிய பதவியணியினர் நிலைமையையும் தோற்றியிருக்கவில்லை. | |
| 11 | பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தினை (SORAP) தயாரிப்பதற்கும் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சம்மதத்துடன் அமைச்சிடமிருந்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கும் கம்பனி பெருத்தமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டல்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். | ஆரம்ப கட்டமாக நிறைவேற்றுத் தரங்களுக்கு SORAP யினை மீளாய்வு செய்வதற்கும் B மற்றும் C தரங்களுக்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் மீளாய்வு செய்யப்பட்டு பணிப்பாளர்கள் சபை, அமைச்சு பொது திறைசேரியின் பொது முயற்சிகள் | கம்பனிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் (SORAP) வேண்டப்பட்ட அங்கீகாரத்துடன் இன்னும் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களம் என்பவற்றின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 12 | PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாட்சிக்கான வழிகாட்டிகளின் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் நியமனத்திற்காக கம்பனியினால் திறைசேரி செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 50, 29 மற்றும் 30 ஆக இருந்தன. | வழிகாட்டல்களுடன் கம்பனி இணங்கியிருத்தல் வேண்டும். | பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி கம்பனி திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்று இந்த ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை நிரந்தர பதவியணிக்குள் உள்ளீர்த்திருந்தது. | வேண்டப்பட்ட அங்கீகாரம் கம்பனியால் இன்னும் பெற்றுக்கொள்ளப் படவில்லை. |
| 13 | கம்பனியால் பின்பற்றப்பட்ட நலன்புரித்திட்டத்திற்காக திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் கம்பனியால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது பதவியினர் நலன்புரிச் செலவுகளாக முறையே ரூபா 239.29 மில்லியன் மற்றும் ரூபா 222.28 மில்லியன் தொகைகள் செலுத்தப்பட்டன. அதற்கிணங்க PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களுக்கு முரணாக கம்பனி செயற்பட்டிருந்தது. | வழிகாட்டிகளை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | 2003 ஆம் ஆண்டில் கையொப்பமிட்ட CUF உடன்படிக்கையின் படி இலங்கை பெற்றேறாலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சமாந்திரமாக கம்பனி அதன் ஊழியர்களுக்கு பரந்த அளவிலான நலன்புரித் திட்டங்களை வழங்குகின்றது. இந்த வசதிகளானது CPSTL யின் ஊழியர்களால் கடந்த 18 ஆண்டுகள் காலத்தின் போது | கம்பனியால் பின்பற்றப்படுகின்ற நலன்புரித் திட்டங்களுக்காக இன்னும் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுபவிக்கப்பட்டு வந்தன. எதிர்காலத்தில் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 14 | அரசாங்க பெறுகை வழிகாட்டிகள் - 2006 இற்கு முரணாக வெளிபோக்குவரத்தாளர்களை (பவுஸர்கள்) தெரிவு செய்கையில் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இதற்காக சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | போக்குவரத்துக் கட்டணங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனத்தில் நிர்ணயிக்கப்படுவதுடன் வாடகைக்கு அமர்த்தப்பட்ட பவுஸர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் CPC மற்றும் LIOC ஆல் மீளளிப்புச் செய்யப்படுகின்றன. கொடுப்பனவுகளுக்காக ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் பயன்படுத்தப்படுவதனால் வாடகைக்கு அமர்த்தப்படுகின்ற பவுஸர்களைத் தெரிவு செய்வதற்காக வழக்கப்படியான நடைமுறை காணப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட விநியோகங்களை மேற்கொள்வதற்காக மொத்தமாக எரிபொருள் போக்குவரத்தினை வழங்குவதற்கு ஒரு முன்னோடி | வெளிப்போக்குவரத்தாளர்களைத் தெரிவுசெய்கையில் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயற்திட்டமாக போட்டி விலை மனுக்களைக் கோருவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்திருந்தது. தொற்றுநோய் காலத்தின் போது எரிபொருளுக்கான கேள்வியில் தளம்பல் நிலை ஏற்பட்டதன் காரணமாக மேற்கூறிய தீர்மானத்தை அமுல்ப்படுத்துதல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | |
| 15 | நிதி திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்தோபர் 24 ஆந்திகதிய 124 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு வெற்றிடமான பதவிகளில் 3 மாதங்களுக்கு மிகையாக பதிற்கடமையாற்றுவதற்காக முறையே 07, 27 மற்றும் 5 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். | கம்பனி வழிகாட்டல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | உள்ளகரீதியாகவும் வெளியகரீதியாகவும் விளம்பரப்படுத்தப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ள களஞ்சிய மற்றும் ஆய்வுகூட செயற்பாடுகளைத் தவிர்த்து இளைப்பாறல்கள் மற்றும் வெற்றிடமான பதவிகளுக்கு விளம்பரப்படுத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் காரணமாக அனைத்து தற்காலிகமான பதிற்கடமை பதவிகளும் | வெற்றிடமான பதவிகளுக்கான பதிற்கடமைகள் இன்னும் காணப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டன. | |
| 16 | இலங்கை அரசாங்கத்திற்கும் LIOC இற்குமிடையே 2007 சனவரி 05 ஆந் திகதியிடப்பட்ட தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் 03 ஆம் பிரிவிற்கு இணங்க நாட்டின் மொத்த பெற்றோலிய உற்பத்திப் பொருட்களில் ஆகக் கூடியது 5 சதவீதமான பெற்றோலிய உற்பத்தி பொருட்களை LIOC ஆனது அதன் சீனக்குடா நிலையத்திலிருந்து வழங்குவதற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வழங்குவதனைத் தவிர்த்து உச்ச அளவாக 5 சதவீதத்தினை வழங்குவதற்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் இணங்கி நடக்கப்படுவதனை கண்காணிப்பதற்காக ஒரு ஒழுங்கு முறையான நடைமுறை ஸ்தாபிக்கப்படவில்லை. இதன் விளைவாக கம்பனியின் மொத்த வருமானத்தில் குறிப்பிடத்தக்க அளவான தொகை இழக்கப்படும் சாத்தியம் காணப்பட்டது. | நிபந்தனையுடன் இணங்குவதனை கண்காணிப்பதற்கு ஒரு முறைசார்ந்த நடைமுறை தாபிக்கப்படுதல் வேண்டும். | 2003 ஆம் ஆண்டில் CPSTL தாபிக்கப்பட்டதன் பின்னர் LIOC ஆனது இலங்கையில் தனது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. இலங்கையில் பெற்றோலிய பொருள் கைத்தொழில் தாராளமயப்படுத்தப்பட்டதுடன் இலங்கையில் பெற்றோலியப் பொருள் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கமானது இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவினை (PUCSL) ஆரம்பித்திருந்தது.<br><br>தற்பொழுது இலங்கையில் பெற்றோலியப் பொருள் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்துதல் பொறிமுறை இல்லாததன் காரணமாக பெற்றோலியப் பொருள் கைத்தொழில் | தொடர்புபட்ட இணங்கி நடத்தல்களையும் இன்னும் தொடர்ந்து செல்கின்ற மொத்த வருமானம் இழக்கப்படும் சாத்தியத்தினையும் கண்காணிப்பதற்கு ஒரு ஒழுங்கான செயன்முறை இன்னும் தாபிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்காக கௌரவ மின்சக்தி அமைச்சர் ஒரு ஒழுங்குபடுத்துனராகச் செயற்படுவார். | |
| 17 | CPL/LIOC மற்றும் CPSTL களுக்கிடையிலான பங்குதாரர்கள் உடன்படிக்கையும் பங்கு விற்பனை கொள்வனவு உடன்படிக்கையும் 2008 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், குறித்த ஒரு காலத்திற்கு உடன்படிக்கையை விஸ்தரிப்பதற்கு அல்லது முறையான மதிப்பீட்டுடனும் சபையின் அங்கீகாரத்துடனும் தொடர்புபட்ட அனைத்து தரப்பினர்களதும் பங்குபற்றுதலுடன் புதிய உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு கம்பனி எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக தொடர்புபட்ட அனைத்து தரப்பினர்களினதும் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு கம்பனி எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக தொடர்புபட்ட அனைத்து தரப்பினர்களினதும் உடன்பாட்டுடன் கடினமான அறவீடுகளை உள்ளடக்கி மொத்த கட்டணங்கள், போக்குவரத்துக் கட்டணங்களை நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட விலையிடல் சூத்திரமானது 2011 ஆம் ஆண்டிலிருந்து திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிபந்தனைகள் இணங்கி நடப்பதனை கண்காணிப்பதற்கு ஒரு முறைசார்ந்த நடைமுறை ஸ்தாபிக்கப்படுதல், வேண்டும். | CPC மற்றும் CPSTL இற்கான பொது பாவனையாளர் வசதி சேவைகளை வழங்குனராக செயற்படுவதற்கு CPSTL இன் செயற்பாட்டு ரீதியான, நிதி ரீதியான வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்கு CPC/CPSTL மற்றும் CPSTL/LIOC என்பவற்றுடன் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ அமைச்சர் மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளரிடம் நாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தோம். | தொடர்புபட்ட அனைத்து தரப்பினர்களினதும் உடன்பாட்டுடன் உடன்படிக்கை இன்னும் புதுப்பிக்கப்படவில்லை அல்லது கால நீடிப்புச் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | வியாபாரத்தை சுமுகமாக செயற்படுத்துவதற்கும் செலவுகளைக் குறைப்பதற்குமாக ஒரு நிறுவனத்திற்கு ஏதாவது ஆதரவளிக்கும் சேவைகளை வழங்குகின்ற தரப்பினர்களுக்கிடையே முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தொடர்புப்ட்ட அனைத்து வணிக நடவடிக்கைகளையும் உள்ளடக்கி ஏதாவது உடன்படிக்கை அல்லது ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையேனும் (MOU) கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஒவ்வொரு தரப்பினர்களதும் நடைமுறைகள், வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் முறையாக வரையறுக்கப்படவில்லை. | நிபந்தனைகளுடன் இணங்கி நடப்பதனைக் கண்காணிப்பதற்கு முறைப்படியான ஒரு நடைமுறை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தொடர்புபட்ட அனைத்து வியாபார நடவடிக்கைகளையும் உள்ளடக்கி CPC மற்றும் LIOC உடன் இன்னும் ஒரு உடன்படிக்கை அல்லது MOU மேற்கொள்ளப்படவில்லை. |
| 19. | உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அல்லது சாத்தியமான ஏதாவது தவறுகள் மற்றும் நிகழக்கூடிய ஒழுங்கீனங்களை தவிர்ப்பதற்கும் கண்டுபிடிப்பதற்குமாக நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளைக் காட்டும் எழுத்து மூலமான ஒரு நடைமுறைக் கையேடு இருக்கவில்லை. முகாமைத்துவத்தின் விபரிக்கப்பட்ட/ வடிவமைக்கப்பட்ட செயன்முறைகள் விதிவிலக்கில்லாது செயற்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கம்பனியின் ஒவ்வொரு செயன்முறைக்காகவும் கட்டுப்பாடுகளின் பதிவேடுகளை | வேண்டப்பட்ட அங்கீகாரத்துடன் நடைமுறைக் கையேட்டினை முறையாக ஸ்தாபித்து அமுல்ப்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சில நடைமுறைக்கையேடுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிப்பிரிவில் தற்பொழுது காணப்படுகின்ற நடைமுறைக்கையேட்டினை மீளாய்வு செய்து அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>இணைய தளக்கொள்கை, பாவனையாளர் விளைவுக் கொள்கை, | கம்பனியால் ஒரு முழுமையான நடைமுறைக்கையேடு இன்றுவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேணுவது கம்பனிக்கு முக்கியமானதும் நலன் அளிக்கக்கூடியதுமாகும். மேலும் நடைமுறைக்கையேடு வடிவமைக்கப்பட்ட உடன் அதன் பொருத்தத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான கால இடைவேளையில் காலரீதியாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | | மென்பொருளை அபிவிருத்தி செய்தல்கொள்கை, மின்னஞ்சல் கொள்கை, கடினப்பொருள் பராமரிப்புக்கொள் கை முதலியவற்றை தகவல்தொழிநுட்ப ப் பிரிவு அபிவிருத்தி செய்துள்ளது. | |
| 20. | PED/ 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றிக்கையின் வழிகாட்டிகள் 5.2.2 இன் பிரகாரம் (நல்லாட்ச்சிக்கான வழிகாட்டல்கள்) வருடாந்த பாதீட்டிற்கு மூலதனச் செயற்திட்டங்களை உள்ளடக்குவதற்காக முறையான சாத்திய வள ஆய்வு நடாத்தப்படவில்லை. | வழிகாட்டிகளுடன் கம்பனி இணங்கி நடத்தல் வேண்டும். | சாத்தியவள ஆய்வானது அறிக்கைகளாகச் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும் பொருத்தமான வேண்டுதல்களின் சாத்தியமான நிலைமைகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. எனினும் வழிகாட்டிகளின்படி எதிர்காலசெயற்திட்டங்களுக்காக சாத்திய வள அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | சாத்தியவள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்படவில்லை. |
| 21. | மூலதன பாதீட்டிலுள்ள ரூபா 3,662 மில்லியன் பெறுமதியான 52 மூலதன செயற்திட்டங்களின் முறையான மற்றும் நாளது வரையாக்கிய பதிவேடுகள் (நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றங்களை உள்ளடக்கி) பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே அவ்வாறான செயற்திட்டங்களை தொடங்குதல் மற்றும் பூர்த்தி செய்தல் கணக்காய்வில் | மூலதன செயற்திட்டங்களின் முறையான மற்றும் நாளது வரையாக்கிய பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுதல் வேண்டும். | 22 செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றங்கள் பொறியியல் செயற்பாட்டின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டன. | மூலதனச் செயற்திட்டங்களின் நிதிசார் செயல் முன்னேற்றமும் அவற்றில் 26 செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றமும் இன்னும் கணக்காய்விற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஐயத்திற்குரியதாக இருந்தது. | | | கிடைக்கவில்லை. |
| 22. | கம்பனியின் 2020 ஆம் ஆண்டிற்கான முன்கொண்டு செல்லப்பட்ட பாதீட்டின் கீழ் 33 செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க அளவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் சில செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவைகளாகும். | தாமதமடைந்த செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | சில வேலைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. ஆனால் செயற்பாட்டு ரீதியான வேண்டுதல்களின் காரணமாக கட்டம் கட்டமாக மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதேவேளை சில வேலைகள் ஒப்பந்தக்காரரின் மிகவும் குறைந்த செயலாற்றலினால் பாதிக்கப்பட்டிருந்த துடன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் படி பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சில செயற்திட்டங்களின் செயல்முன்னேற்ற மானது COVID-19 இன் காரணமாக மேலும் பாதிக்கப்பட்டன. | சிர செயற்திட்டங்கள் இன்னும் தொடரப்படாதிருந் ததுடன் மேலும் தாமதமடைந்திருந் தது. |
| 23 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக கம்பனி 2018 இல் 01 வாகனத்தையும் 2020 இல் 05 வாகனங்களையும் (தொழிற்சங்கங்களுக்கான 03 வாகனங்களை உள்ளடக்கி) விடுவித்திருந்தது. மேலும் கம்பனி 2018 இல் 04 நபர்களையும். 2019 இல் 03 நபர்களையும், 2020 இல் 01 | கம்பனி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுட ன் இணங்கி நடத்தல் வேண்டும். | பின்வரும் ஒவ்வொரு வாகனமும் தலைவர்/MD CPSTL இன் அங்கீகாரத்துடன் விடுவிக்கப்பட்டது.<br><br>• மின்சக்தி | வாகனங்களும் பதவியணியினர்க ளும் இன்னும் விடுவிக்கப்படுகின் றார்கள் |

நபரையும் விடுவித்திருந்ததுடன் அவர்களின் ஊதியம் மற்றும் படிகளுக்காகச் செலவு செய்திருந்தது.

அமைச்சின் பயன்பாட்டிற்காக (KV-4078) (திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு)

- பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் MD CPC இன் பயன்பாட்டிற்காக (KI-0786)
- அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் SLNSS இன் (PH-3385) தொழில் சங்க நடவடிக்கைகளின் பயன்பாட்டிற்காக

இந்த இரண்டு வாகனங்களும் (PH-7530 மற்றும் KF 5256) அங்கீகாரமில்லாது தொழிற்சங்க தலைவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. எழுத்து மூலமும் வாய் மொழி மூலமும் முறையான அங்கீகாரத்தினைச் சமர்ப்பிப்பதற்கு அவர்களுக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அவர்களிடமிருந்து

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இன்றுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. | |
| 24 | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரித்த பதவியணியில் முறையே 263 பதவிகள், 343 பதவிகள் மற்றும் 746 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது அப்பதவிகளில் 62 பதவிகள்,44 பதவிகள் மற்றும் 58 பதவிகள் சிரேஷ்ட மட்ட பதவிகளில் காணப்பட்டன. எனினும், அங்கீகரித்த பதவியணியில் 2018 ஆம் ஆண்டின் போது 944 நபர்கள் , 2019 ஆம் ஆண்டின் போது 833 நபர்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது 1148 நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கம்பனியின் செயற்திறனான மற்றும் விளைதிறனான செயற்பாடுகளுக்காக பொருத்தமான பதவியணி மட்டத்தினை கம்பனி தீவிரமாக மீளாய்வு செய்து தீர்மானித்தல் வேண்டும். | 154 பதவிகளுக்காக உள்ளக விளம்பரங்கள் வழங்கப்பட்டதுடன் இந்த 150 பதவிகளில் 95 பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.<br><br>கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட சிரே’ட பதவிகளில் பல ஏற்கனவே நிரப்பப்பட்டு விட்டன. எனினும் AI-A7 தரங்களில் (14 சிரேஷ்ட பதவிகளும் 41 கனிஸ்ட நிறைவேற்றுத்த தரங்களும்) இன்னும் 55 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் இப் பதவிகளில் பல பதவிகளுக்கு அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற உள்ளன. | வெற்றிடங்கள் இன்னும் தொடர்கின்றன. |
| 25 | உத்தியோகத்தர்களுக்கான வாகன ஒதுக்கீடு மற்றும் எரிபொருள் படிகள் அல்லது | கம்பனிக்குள் வாகனங்களின் நிருவாகத்திற்கான | உத்தியோகத்தர்களுக்கான வாகனங்களின் | உத்தியோகத்தர்களுக்கான வாகனங்களின் |


| | | | |
|---|---|---|---|
| பாவனைகளுக்காக வழக்கமான முறைமை ஒன்று கம்பனியால் ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி அனுமதியளிக்கப்படாத நபர்கள்/ தரப்பினர்களுக்கு வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டதுடன் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு உத்தியோகத்தருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வாகனம் ஓட்டுதல் தொடர்பான பதிவேடுகள் கம்பனியால் முறையாகப் பேணப்படாததுடன் கண்காணிக்கப்படவில்லை. அனுமதிக்கப்படாது வாகன ஓட்டுதல் அறிக்கைகளை வைத்திருத்தல், வாகனங்களின் எரிபொருள் பாவனை பெற்றுக்கொள்ள முடியாமை, உரிய கோவைகளில் வாகன ஓட்டுதல் அறிக்கைகள் நாளதுவரையாக்கப்படாமை முதலியன அவ்வாறானவைகளாகும். எரிபொருள் கூப்பன்களிலும் ERP (SAP) முறைமைகளிலும் காட்டப்பட்ட விபரங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. ஒவ்வொரு வாகனத்திற்குமான தனியான சம்பவ குறிப்பு புத்தங்கள் (சாரதி பதிவேடுகள்) பெற்றுக் கொள்ள முடியாமையின் காரணமாக ஓடும் நிலைமை வாகனங்களின் பராமரிப்பு மற்றும் ஏனைய தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பான தகவல்களை கணக்காய்வில் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. ஆகவே கம்பனியின் வாகன நிருவாகம், பராமரிப்பு, எரிபொருள் பாவனை | வழக்கமான முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். | ஒதுக்கீடு, எரிபொருள் படி அல்லது பாவனை என்பவற்றிற்கு வழக்கமான ஒரு முறைமை கம்பனியால் தேற்றுவிக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வாகனங்களுக்காக ஒரு கொள்கையினை கம்பனி வலியுறுத்தியிருந்தது.<br><br>(அ) அனைத்து பிரதிபொது முகாமையாளர்களுக்கும் 140 லீற்றர் எரிபொருள் படியுடன் ஒரு கம்பனி வாகனத்தை ஒதுக்கீடு செய்தல்.<br><br>(ஆ) HOF களுக்கு 120 லீற்றர் எரிபொருள் படியுடன் ஒரு கம்பனி வாகனத்தை ஒதுக்கீடு செய்தல்.<br><br>(இ) HOF கள் தங்களின் சொந்த வாகனங்களை உத்தியோகபூர்வ | ஒதுக்கீடு மற்றும் எரிபொருள்படி அல்லது பாவனைக்காக வழக்கமான முறைமை ஒன்று கம்பனியால் இன்னும் தோற்றுவிக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பவை மீதான உள்ளகக் கட்டுப்பட்டு நியம தரத்தில் இல்லாததுடன் அரசாங்கத்தின் பொதுவான நடைமுறைகளுடன் இணங்கி இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | கடமைகளுக்காக பயன்படுத்துவார் களாயிருந்தால் அவர்கள் 120 லீற்றர் எரிபொருள் படிக்கு மேலதிகமாக ரூபா 50,000 தொகையான வாகனப் படிக்கு தகமை பெறுகின்றார்கள்.<br>(ஈ) பிரதி முகாமையாளர் 100 லீற்றர் எரிபொருள் படிக்கு மாத்திரம் தகமை பெறுவதுடன் வாகனங்கள் வழங்கப்படு வதில்லை.<br>(உ)தற்போதைய எரிபொருள் விலையின்படி தங்களின் தொடர்புபட்ட எல்லை வரையும் உத்தியோகத்தர் களின் மாதாந்த சம்பளத்திற்கு எரிபொருள் படிகள் சேர்க்கப்படுகி ன்றது. | |
| 26 | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையும் கம்பனியால் 17 வாகனங்கள் உபயோகமற்றது என ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. எனினும் உபயோகமற்றது என | உபயோகமற்றது என ஒதுக்கிவைக்கப்பட்ட வாகனங்களுக்காக பொருத்தமான நடவடிக்கைகள் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இவ்வாகனங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கிவைக்கப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக கம்பனியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | எடுத்தல் வேண்டும். | | கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. |
| 27 | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் வழிகாட்டி 5.1.1– நல்லாட்சிக்கான வழிகாட்டிகளின் பிரகாரம் கம்பனி ஒரு கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. | வழிகாட்டிகளுடன் கம்பனி இணங்கியிருத்தல் வேண்டும். | கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் கேள்வி வழங்கப்பட்டதுடன் வரைபு கூட்டிணைந்த திட்டமானது ஆலோசகர் Ernst and young நிறுவனத்தினால் 2018 ஒக்தோபர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 2020 இல் அரசாங்க மாற்றத்தின் பின்னர் கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிக்கும் நோக்கெல்லையானது மாற்றப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் திருத்திய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டது. | வழிகாட்டிகளின் பிரகாரம் ஒரு கூட்டிணைந்த திட்டம் இன்னும் தயாரிக்கப்படவில்லை. |

## 4.31 வரையறுக்கப்பட்ட சீ–நோர் மன்றம்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 244,188,595 | 294,040,322 | 502,356,689 | 147,840,721 | (49,851,727) | முனைப்பழியுள்ளது |
| **2019** | 126,717,300 | 149,615,433 | 638,954,914 | 313,048,497 | (22,898,133) | முனைப்பழியுள்ளது |
| **2020** | 82,314,422 | 104,285,450 | 613,326,613 | 309,396,224 | (21,971,028) | முனைப்பழியுள்ளது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 244.19 | 294.04 | 502.36 | 147.84 | (49.85) |
| 2019 | 126.72 | 149.62 | 638.95 | 313.05 | (22.90) |
| 2020 | 82.31 | 104.29 | 613.33 | 309.40 | (21.97) |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நோர்த் சீ தனியார் கம்பனியின் பெயரில் 2011 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா 9,204,498 நிலுவை மீதிக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 இன் 5.5 ஆம் | நியமத்தின் பிரகாரம் நட்டச் சேதத்திற்கு உட்பட்ட சொத்துக்களின் முன் கொண்டு செல்லும் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தியின் பிரகாரம் நட்டக்கழிவு இழப்புக்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 02 - கையிருப்பு நியமம் தொடர்பான 28 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் காணப்படுகின்ற கையிருப்பின் தேறக்கூடிய நிகரப் பெறுமதி மீது புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு அதற்கமைய கையிருப்பின் பெறுமதி சீராக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் கையிருப்பின் தேறக்கூடிய நிகரப் பெறுமதி மீது புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அசைவற்ற மற்றும் சேதமடைந்த ரூபா 8,803,275 தொகையான இருப்புக்கள் தொடர்பில் நட்டங்களிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் தேறக் கூடிய நிகரப் பெறுமதி மீது புதிதாக மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கடற்றொழில் அமைச்சு 2018 ஆகஸ்ட் 10 இல் வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 146,952,561 பெறுமதியான கட்டிடத்தை நிர்மாணித்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பதன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் காணியின் பெறுமதி சரியாக மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் காணியின் பெறுமதி சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இது மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் | நியமத்தின் பிரகாரம் மன்றத்தின் பயன்பாட்டிலுள்ள | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவி | மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மன்றத்தின் பயன்பாட்டிலுள்ள காணி மற்றும் கட்டிடங்கள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான வியாபார பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். | ல்லை. | |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்துமகல காணியின் முதலீட்டு வருமானம் ரூபா 2,700,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றில் அத்தகைய முதலீட்டுச் சொத்து எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மன்றத்திற்கும் பிறொண்டியர் ஓட்டோமோட்டிவ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கும் இடையிலான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் இந்த காணியின் உரிமைத்துவம் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது என கூறப்பட்ட போதிலும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் இந்த காணி சீநோர் மன்றத்திற்கு மாற்றப்பட்டது தொடர்பாக எழுத்துமூல ஆதாரம் மற்றும் அதனை மூன்றாம் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் மாற்றுவதற்கான அங்கீகாரம் என்பன காணப்படவில்லை. | முதலீடு வருமானங்களிலிருந்து சொத்துக்களின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (எ) | 2008 மற்றும் 2014 ஆம் ஆண்டு முதல் கொடுக்கல் வாங்கல்கள் இல்லாததும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோரின் ரூபா 57,275,179 தொகையான | நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்காத மீதிகளிற்காக அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளபடியான மீதியில் அறவிடப்பட முடியாதிருந்ததுமான கடன் மீதிகளின் ரூபா 345,413 மொத்தத் தொகைக்கு அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ரூபா 3,653,360 கூட்டுத்தொகையான 77 கடன்கொடுத்தோர் மீதிகள் நானாவித வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்குகளை பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 இல் நட்டம் குறைவடைந்திருந்தது. |
| (ஐ) | ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதும் கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட திக்ஓவிட மீன்பிடி துறைமுக செயற்திட்டத்திற்குரிய பணிகளிற்காக 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பிடித்துவைக்கப்பட்டிருந்த முறையே ரூபா 1,757,057 மற்றும் ரூபா 1,770,766 ஆக ரூபா 3,527,824 கூட்டுமொத்த தொகையினை அறவீடு செய்தற்கு நிறுவனத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (ஔ) | 2008 முதல் 2017 வரை காணப்பட்ட ரூபா 3,103,068 கூட்டுமொத்த செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலம் நிலுவையாகவுள்ள தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |


| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 14,140,125 தொகையான முற்பணத்தில் 2003 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 8,878,264 தொகையான நிலுவை மீதியை அறவிடுவதற்காக இதுவரை சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பண மீதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (ஔ) | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு உப ஒப்பந்த அடிப்படையின் கீழ் 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த மூலப்பொருள் பெறுமதியில் ரூபா 4,909,775 தொகை நிதிக்கூற்றுக்களில் 09 ஆண்டுகளாக காணப்பட்ட போதிலும், அந்த மீதியை அறவிடுவதற்கு மன்றத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (க) | அமைப்பு புறவிதியின் 3.3 மற்றும் 3.5 ஆம் பந்திகளின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றமானது ஐஸ் உற்பத்தி, கடல் உற்பத்திகளை பொதியிடுதல், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி செய்தல், மீன்பிடி வலை களை உற்பத்தி செய்தல், படகுகளை நிர்மாணித்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும், அதிலிருந்து விலகி படகு உற்பத்தியில் மாத்திரம் | மன்றம் தாபிக்கப்பட்ட குறிக்கோளிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஈடுபட்டிருந்தமையால் மன்றம் தாபிக்கப்பட்ட குறிக்கோளிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (கா) | அமைப்பு அகவிதியின் 58 ஆம் உறுப்புரையின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், தலைவரை நியமித்தல் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | அமைப்பு அகவிதியின் பிரகாரம் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (கி) | சீ-நோர் மன்றத்திற்குச் சொந்தமான இல. 335 டிஆர் விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியில் அமைந்துள்ள வெற்றுக் காணி 1998 யூலை 04 ஆந் திகதி முதல் 20 ஆண்டுகளிற்கு உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக ஓரியன்ட் பேர்ல் ஹோட்டல் லிமிட்டட் எனும் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் மன்றத்தால் அரசாங்க பெறுகை செயன்முறையிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தமையால் எழுந்திருந்த முரண்பாடுகள் காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான இரண்டு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அந்த ஆதனத்திலிருந்து எந்தவொரு பொருளாதார நலனும் கிடைத்திருக்கவில்லை. | அரசாங்க பெறுகை செயன்முறையின் பிரகாரம் முகாமைத்துவம் செயற்பட வேண்டியதுடன் இலாப பங்கை அறவிடுவதற்கும் காணியை சுவீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை மீளப் பெற்றுக்கொள்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் பொருளாதார நலன்கள் இது வரை கிடைத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கீ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி.‌.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்தினால் 2019/2023 ஆம் ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (கு) | 2020 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 16,680.91 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு 15 செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு வெளியேயான சில நடவடிக்கைகளிற்காக ரூபா 57.33 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

## 4.32 வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 76,989,669 | 93,202,373 | 312,435,417 | 88,449,800 | (16,212,705) | முனைப்பழியுள்ளது |
| **2019** | நிதிக்கூற்றுக்கள் கிடைத்திருக்கவில்லை. | | | | | |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் கிடைத்திருக்கவில்லை. | | | | | |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 76.99 | 93.20 | 312.44 | 88.45 | (16.21) |
| 2019 | - | - | - | - | - |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 33 மில்லியன் கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் இன்னும் கம்பனியால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் படி குறித்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் | நிதிக்கூற்றுக்கள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்கால நிதிக்கூற்றுக்களின் மூலம் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தங்களை செய்வதற்கும் நியமத்தின் 79 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளுக்குத் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | |
| (ஆ) | கம்பனிக்கு உரித்தான விலங்கு உணவு அரைக்கும் இயந்திரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,853,490 கிரயத்தில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 யூன் வரையிலும் அது விளைவற்றிருந்தது. | செயற்திட்டம் ஒன்றுக்காக நிதி செலவு செய்யப்பட முன்னர் சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். குறித்த இயந்திரத்தின் பாவனையை நீக்குவதற்கு முன்னர் அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவுகளுக்கான செலவு உயர்ந்ததா எனவும் அத்தகைய உணவுகளின் தரம் பற்றியும் பரிசீலனை செய்யப்பட வேண்டும். | விலங்கு உணவு உற்பத்திச் செலவு அதிகம் என்பதாலும் சந்தையில் கொள்வனவு செய்யப்படும் விலங்குணவு குறைந்த விலை என்பதாலும் குறித்த இயந்திரத்தினால் விலங்குணவு தயாரிக்கப்படுவதில்லை. இந்த இயந்திரத்தால் காசுப்பாய்ச்சல் உருவாக்கப்பட்டிருக்காத போதிலும் வருடாந்தம் ரூபா 578,024 (15%) பெறுமானத்தேய்விடப்படுகிறது. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |
| (இ) | செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை, எனவே, செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதா என்பதை மதிப்பிட முடியாதிருந்ததுடன் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான பின்னணி வழங்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் செயலாற்றல் அறிக்கைகளைத் தயாரித்து இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 330 ஏக்கர் நிலப்பரப்பில் பிரதான தென்னைச் செய்கைக்கு மேலதிகமாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்காதமையும் இதனால் குறிப்பிட்ட சில | கம்பனியின் சொத்துக்களிலிருந்து ஆகக்கூடிய உற்பத்தித்திறனை பெற்றுக்கொள்ளும் பொருட்டு முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | தென்னைச் செய்கை 330 ஏக்கரில் பரந்து காணப்படுகின்ற போதிலும் நிலத்தை துப்பரவு செய்வதற்கு 02 உழவு இயந்திரங்கள் மாத்திரமே எம்மிடம் | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரதேசங்களில் பயிரிடுதல் மூலம் பெறக்கூடிய வருமானத்தை கம்பனி இழந்திருந்தமையும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. காணி சுத்தம் செய்யப்பட்டிருக்காததுடன் தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு செல்ல முடியவில்லை. எனவே, கம்பனிக்குச் சொந்தமான சொத்துக்கள் அதிகபட்ச வருமானம் ஈட்டும் வகையில் நிர்வகிக்கப்பட்டிருக்கதமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | உள்ளன. தற்போதுள்ள தொழிலாளர் சக்தியும் வளர்ப்பு செயற்திட்டத்திற்கு போதுமானதாக காணப்படவில்லை, எனவே, காணியை சுத்தம் செய்வதற்கு ஏற்கனவேயுள்ள தொழிலாளர்களை பயன்படுத்த முடியாதுள்ளது. | |
| (உ) | 2005 யூன் 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், ஆலோசகர்களுக்கு நியமனங்களை வழங்கும் போது குறிப்பிட்ட பணி நியமனம் மற்றும் காலப்பகுதி குறித்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், ஆலோசனை சேவைகளின் பெறுகை தொடர்பாக 2017 நவம்பரில் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் 4.3 மற்றும் 4.4 ஆம் பிரிவுகளிற்கு முரணாக/ நடவடிக்கை எடுக்காமல் ஒரு வருடத்திற்கு மேலாக 02 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆலோசகர் நியமனக் கடிதத்தின் மூலம் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை பூர்த்திசெய்தாரா என்பதற்கான எந்த உறுதிப்படுத்தலும் | 2005 யூன் 16 ஆம் திகதிய CP/05/Mis /(026) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய கால்நடை அபிவிருத்தி சபை இலங்கை கோழி அபிவிருத்தி கம்பனி பிரைவேட் லிமிடெட்டின் தாய் நிறுவனமாகும். மேற்படி சபையின் ஆலோசகர்கள் எமது கம்பனியின் ஆலோசகர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறப்படாமல் 2015 யூன் 01 ஆம் திகதி முதல் பொறியியலாளர் ஆலோசகருக்கு 03 வருடங்கள் 06 மாதங்களுக்கு மாதாந்தம் ரூபா 20,000 வீதம் ரூபா 840,000 தொகை வழங்கப்பட்டுள்ளது, | | | |
| (ஊ) | பண்ணையின் பௌதிகப் பரிசீலனையின் போது 50 இளநீர் மரங்கள் மாத்திரம் அவதானிக்கப்பட்டதுடன் ஆண்டின் போது இளநீரினால் ஈட்டிய வருமானம் ரூபா 5,070 தொகையாக காணப்பட்டது. அதற்கிணங்க ஒரு மரத்தின் வருடாந்த வருமானம் ரூபா 101 ஆக காணப்பட்டது. இதனால் இளநீர் வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. | கம்பனிக்கு சொந்தமான சொத்துக்கள் ஆகக்கூடிய உற்பத்தித்திறனை பெறும் பொருட்டு பேணப்பட வேண்டும். | பண்ணையில் 50 இளநீர் மரங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றுக்கு நீண்ட நாட்களாக பசளை இடாமையால் உச்ச விளைச்சலைப் பெற முடியவில்லை. தற்போது பசளை முழுமையாக இடப்பட்டுள்ளது. | பௌதீக பரீட்சிப்பு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் காலாண்டுக்குக் குறைந்தது ஒரு கணக்காய்வுக் குழு கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வுக் குழுக் கூட்டம் நாளதுவரை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய நிலைமை மாற்றமடையாதுள்ளது. |

## 4.33 ஓசியன் வியூ டெவலொப்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 309,873,947 | 201,768,207 | 2,680,541,946 | 177,447,032 | 108,105,741 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 149,327,560 | 138,396,098 | 2,698,823,872 | 189,618,576 | 10,931,462 | முனைப்பழியுள்ளது |
| **2020** | 408,515,302 | 102,338,641 | 3,001,292,476 | 192,585,690 | 306,176,658 | முனைப்பழியுள்ளது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.8 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அதிகாரக் கையளிப்பு ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் சபையால் நாளதுவரையாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் கம்பனி 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 | கம்பனி உரிய சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். | கம்பனியின் கையேட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | சபை ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் அதிகார கையளிப்பை நாளதுவரையாக்கி அங்கீகரித்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் ஆண்டு வரை அதிகாரக் கையளிப்பை நாளதுவரையாக்கியிருக்க வில்லை. | | | |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/01/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளரிற்கான 200 லீற்றர் எரிபொருள் படியும் தலைவரிற்கான மட்டுப்படுத்தப்படாத எரிபொருள் படியும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | கம்பனி உரிய சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். | தலைவரின் வாகனம் தவிர்ந்த அனைத்து வாகனங்களிற்கும் 200 லீற்றர் எரிபொருள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதிகமான சந்தர்ப்பங்களில் நுகரப்பட்ட உண்மையான எரிபொருள் 140 லீற்றர்களை விடக் குறைவாக காணப்பட்டது. | இப் பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பணிப்பாளர் படிகள் மற்றும் மிகையூதியம் மீது பிரயோககிக்கக்கூடிய உழைக்கும் போதே செலுத்தும் வரி 2018 தொடக்கம் 2020 வரை கழிக்கப்படாமல் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. | பொருத்தமான வரிப் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். | சபை தீர்மானத்தின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரியும் பணிப்பாளர் படிகளின் ஒரு பகுதியாகும். | கம்பனி தொடர்புடைய வரி பிரமாணங்களுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஈ) | தரைத் தளத்தின் ஐந்து பிரிவுகள் தற்போதைய சந்தை வாடகைப் பெறுமதியை விட குறைவாக வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் தரைத் தளத்தின் ஏனைய மூன்று பிரிவுகள் முறையான வாடகை மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படாமல் 2018 முதல் 2020 வரை வாடகைக்கு விடப்பட்டிருந்தன. | வாடகை தொகை தற்போதைய மதிப்பீட்டின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். | சாதாரண நடைமுறையில் வாடகை மதிப்பீடு வாடகையுடன் சேர்ந்த சேவைக் கட்டணங்களுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றதுடன் 2012 ஆம் ஆண்டு அறிக்கையில் வாடகை மதிப்பீடு காணப்படுகின்றது. | வாடகை தொகை தற்போதைய மதிப்பீட்டின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | ரூபா 3.2 மில்லியன் தொகையான ஏனைய செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டு 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் செலவினங்களும் | சாத்தியமான பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | இவை வழக்கு கட்டணமாகும். 2020 ஆம் ஆண்டிற்காக ரூபா 1.025 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 1.65 மில்லியனாகும். | 2020 ஆம் ஆண்டுக்காக ரூபா 1,025 மில்லியன் ஏற்பாடு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி/03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 2.2 ஆம் பந்தி<br>வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ளாமல் கம்பனியின் தலைவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 250,000, ரூபா 256,250 மற்றும் ரூபா 100,000 இற்குள் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாதாந்த படியை கம்பனி செலுத்தியிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேலதிக படிகள் செலுத்தப்படல் வேண்டும். | பிஈடி 1/2020 இன் பிரகாரம் தலைவரின் படி மற்றும் பணிப்பாளர்களின் படி என்பன செலுத்தப்பட்டிருந்தன. | கம்பனி பிஈடி 1/2020 உடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ii) 2.8 ஆம் பந்தி<br>பொது திறைச்சேரியின் அங்கீகாரமின்றி கம்பனி சபை உறுப்பினர்களுக்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 850,000 மற்றும் ரூபா 450,000 தொகையான வெகுமதியை செலுத்தியிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரத்துடன் மிகையூதியம் செலுத்தப்பட வேண்டும். | கம்பனியின் சபை கையேட்டை அங்கீகரிக்கும் போது கம்பனி எந்த வரிசை அமைச்சின் கீழும் காணப்படவில்லை. இது குறித்த கையேட்டைப் பின்பற்றுகிறது. | திறைசேரியில் இருந்து அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளாமல் மிகையூதியம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | | | |
| (i) 03 மற்றும் 04 (ஆ) பந்தி<br>விசேட மதிப்பீட்டுச் சபை நியமனம் செய்யப்படாமலும் தேவையான அங்கீகாரமின்றியும் | சுற்றிக்கையால் வேண்டப்பட்டவாறு மெய்மையாய்வு சபை ஒன்றை நியமனம் செய்வதற்கும் | வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டது. | சுற்றிக்கையால் வேண்டப்பட்டவாறு மெய்மையாய்வு சபை ஒன்றை நியமனம் செய்வதற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனி 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு வாகனங்களை தொழில்நுட்பக் கோளாறுகள் காணப்படாத போதிலும் கைதவிர்ப்பு செய்து ரூபா 12,300,000 தொகைக்கு 2019 ஆம் ஆண்டில் விற்பனை செய்திருந்தது. | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 05 ஆம் பந்தி | | | |
| | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவருடனான குழுவொன்று நியமிக்கப்படாமல் தனிப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஆகக்குறைந்த விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்படி மதிப்பீட்டை விட விற்பனை விலைகள் குறைவாக காணப்பட்டன. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் மோட்டார் வாகனங்ளை கைதவிர்ப்பு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மோட்டார் வாகனங்களின் புகழ்பெற்ற மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளரால் வாகன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. விற்பனை விலை திறந்த கேள்வியில் இருந்து தீர்மானிக்கப்பட்டு, அதிக விலையை வழங்கிய கேள்விதாரரிற்கு வாகனம் விற்கப்பட்டது. | குழுவை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கை | | | |
| (i) | 04 ஆம் பந்தி | | | |
| (ii) | 8.9 ஆம் பந்தி | | | |
| | குத்தகைதாரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் 2018 ஆம் ஆண்டு முதல் 2 தொகுதிகள் வாடகைக்கு | சட்ட தேவைப்பாட்டுடன் இணங்கும் பொருட்டு பொறுப்பான தரப்பினருடன் எழுத்து மூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படுதல் | புதுப்பித்தல் உடன்படிக்கை காணப்படாத போது அதே விலைவிகிதத்தை தொடர்வதற்கு இபணிப்பாளர் சபை | குத்தகைதாரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விடப்பட்டன. எனவே, வருடாந்த வாடகையை அதிகரிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | வேண்டும். | அங்கீகாரம் அளித்துள்ளது. | |
| (ஐ) | ரூபா 25,183,741 தொகையான இருப்பின் கீழ் காட்டப்பட்டிருந்த பூங்கா வீதி செயற்திட்டம் தொடர்பான ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான மற்றும் பொருத்தமானதுமான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனியால் உரிய ஆவணங்களை கண்டறிய முடியாதிருந்தது. | கம்பனி உரிய ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஒ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 672,301 தொகை காட்டப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றில் ரூபா 5,613,836 தொகை பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | UDA இற்கு பெறவேண்டிய ரூபா 5,013,830 தொகையை OVDC மெய்மையாய்வு செய்திருக்கவில்லை. | இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 4,738,004 தொகையான பெறவேண்டிய வாடகையை 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனி தொடர்ந்து கலந்துரையாடல்கள், சேவைகளை குறைத்தல், வாடகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் தொடர்ந்து எடுத்து வருகிறது. | 2021 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை ரூபா 1.4 மில்லியனாகும். |
| (ஔ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 மற்றும் 6.5.3 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் | பொருத்தமான பிரமாணங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுடன் வரைவு வருடாந்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்து மற்றும் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, ஓஷன் வியூ டெவலப்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் என்பன நிதிக்கூற்றுக்களை பல ஆண்டுகளாக தமது | வரைவு ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனியின் வரைவு ஆண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்க தவறிவிட்டதுடன் இச் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 முதல் 2020 வரையான ஆண்டுகளிற்குரிய ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆண்டறிக்கையில் ஒருங்கிணைத்து வருகிறது. எனவே, நிதித் தகவல்கள் பிரதிசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, கம்பனி தனியாக ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | |
| (க) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஆராமய வீதி மற்றும் மஹவத்தை வீடமைப்பு செயற்திட்டங்களுக்காக செலுத்தப்பட்ட ஆலோசனை கட்டணம் முறையே ரூபா 700,000 மற்றும் ரூபா 1,050,000 தொகைகளாகும். எனினும் அந்த வீட்டு செயற்திட்டங்கள் கைவிடப்பட்டதன் காரணமாக மேற்கூறப்பட்ட செலவினங்கள் 2020 ஆம் ஆண்டிற்காக முறையான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டன. | முறையான அங்கீகாரத்துடன் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆராமய வீதி மற்றும் மஹவத்தை வீடமைப்பு செயற்திட்டங்களுக்காக ஏற்பட்ட செலவினங்கள் மூலதனமாக்கப்பட்ட வெற்றிகரமான வியாபார செயற்திட்டங்களிற்கு ஏற்பட்ட கிரயம் அல்லது வியாபார ஊக்குவிப்புக்கு செலவினங்களிற்கு ஒத்தவையாகும். எவ்வாறாயினும், உண்மையான மற்றும் நியாயமான முறையில் கணக்குகளை சமர்ப்பிப்பதற்காக இந்த இரண்டு செயற்திட்டங்களும் கம்பனிக்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்காது என்ற அடிப்படையில் மூலதன செலவுகள் P & L கணக்கிற்கு மாற்றப்பட்டன. | கம்பனி P & L கணக்கிற்கு மாற்றியிருந்தது. |


| | | | | |
|---|---|---|---|---|
| (கா) | 44 வாடகை வீடுகளில் 22 வீடுகள் உடன்படிக்கையின்றி வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் மேற்படி வீடுகள் 2015 ஆம் ஆண்டு மதிப்பீட்டாளர் ஒருவரால் மதிப்பிடப்பட்டு வருடாந்தம் 5 சதவீதத்தால் வாடகை பெறுமதியை அதிகரிப்பதற்கு முகாமைத்துவலம் தீர்மானமொன்றை எடுத்திருந்தது. ஆனால், அதற்கு முரணாக வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2020 ஆம் ஆண்டிற்காக 11 வாடகை வீடுகளிலிருந்து கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2,980,010 தொகையாகும். | உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு கம்பனி தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறதுடன் திருத்தப்பட்ட கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொறுப்புள்ள தரப்பினருடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் OVDC எதிர்கால குத்தகைதாரர்களுடன் வாடகை பெறுமதிக்காக பேச்சுவார்த்தையை நடாத்த வேண்டும். (உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு மற்றும் தற்போதைய தொற்றுநோய் நிலைமைக்கு பின்னர் அடுக்குமாடி குடியிருப்புகளின் வாடகை மோசமாக பாதிக்கப்படுகிறது.)<br><br>மேலும் வாடகையை மதிப்பீட்டுத் தொகையுடன் ஒப்பிடும்போது, அது சேவைக் கட்டணத்துடன் சேர்க்கப்பட வேண்டும். ஏனெனில் சந்தை பெறுமதிகளை தீர்மானிக்கும் போது மதிப்பீட்டாளர்கள் பொதுவாக வருடாந்த பராமரிப்பு கிரயம், புதுப்பித்தல் கிரயம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்கின்றனர். | 15 வாடகை தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக் காததுடன் திருத்தப்பட்ட கட்டணத்தை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. |
| (கி) | உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது குத்தகைக்கு பெற்றவர்களிடமிருந்து மீளளிக்கக்கூடிய வைப்புக்களை அறவிடுவதற்கான கொள்கையொன்று கம்பனியால் குறித்துரைக்கப்பட்டிருக்க வில்லை. | மீளளிக்கத்தக்க வைப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளளிக்கத்தக்க வைப்பிற்காக சபை அங்கீகரித்திருந்தது. | மீளளிக்கத்தக்க வைப்புக்களை கம்பனி குறித்துரைத்திருக்கவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கீ) | பார்க் வீதி வீடமைப்பு செயற்திட்டத்தில் ரூபா 25,183,741 பெறுமதியான இருப்த்தியொரு (21) கடைகள் வழக்கு காரணமாக விற்பனை செய்யப்பட முடியாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து கஹதுடுவ வீடமைப்பு செயற்திட்டத்திற்கு சொந்தமான ரூபா 75,719,339 பெறுமதியான 11 வீடுகளும் ரூபா 19,558,200 பெறுமதியான 25 காணித்துண்டுகளும் மற்றும் மத்தேகொட வீடமைப்பு செயற்திட்டத்திற்கு சொந்தமான ரூபா 10,343,909 பெறுமதியான ஒரு வீடும் ரூபா 2,919,158 பெறுமதியான 3 காணித்துண்டுகளும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தெல்கொடவில் அமைந்துள்ள ரூபா 106,345,401 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்படட் 100 பேர்ச் பரப்பளவிலான காணி 2018 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | பார்க் வீதி வீடமைப்பு செயற்திட்டத்தில் உள்ள 21 கடைகளின் விற்பனை அதே வளாகத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளரால் வழக்கு பதிவு செய்யப்பட்டதால் தாமதமானது. எனவே நடவடிக்கை எடுக்கவில்லை என கூறுவது சரியற்றது.<br><br>கஹதுடுவ வீடமைப்பு செயற்திட்டத்தில் உள்ள 11 வீடுகளில் 4 வீடுகள் 2021 ஆம் ஆண்டில் முழுமையாக விற்பனை செய்யப்பட்டதுடன் மேலும் 3 வீடுகளை விற்பனை செய்வதற்காக முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>முன்மொழியப்பட்ட (REF) இற்கான தெல்கந்த கோரிக்கைகக்காக அடுக்கு மாடி செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் அழைக்கப்படும். | இப் பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | குடியிருப்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,314,563 தொகையான மீளளிக்கத்தக்க வைப்புக்கள் உரிய வீடுகளிலிருந்து குடியிருப்பவர்கள் வெளியேறிய பின்னர் 5 தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலம் கடந்திரந்த போதிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளளிக்கத்தக்க வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார கடன்பட்டோரிற்கு எதிராக 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீளளிக்கத்தக்க வைப்பு ஈடுசெய்யப்பட்டுள்ளது. | வியாபார கடன்பட்டோரிற்கு எதிராக 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீளளிக்கத்தக்க வைப்பு ஈடுசெய்யப்பட்டுள்ளதுடன் 5 ஆண்டுகளிற்கு மேலான மீதிகள் தீர்மானத்தை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கூ) | மாளிகாவத்தை வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 876,625 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நுவரெலியா வீடமைப்பு செயற்திட்டத்திற்காக 2017 முதல் 2019 வரையான காலப்பகுதியின் போது ரூபா 10,954,477 வேறொரு தொகை செலவிடப்பட்டு நடைமுறை வேலை கணக்கின் கீழ் காட்டப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | உரிய காணியை கையேற்பதற்கு தொடர் நடவடிக்கை எடுத்தல். | இப் பிரச்சனையை தீர்ப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கெ) | கம்பனியால் சட்ட விரோதமாக வீடுகளை ஆக்கிரமித்திருந்த 4 குத்தகைக்கு பெற்றவர்களிற்கு எதிராக சட்ட வழக்கு தொடரப்பட்டதுடன் இரண்டு குடியிருப்பாளர்கள் மற்றும் கம்பனியின் இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்கள் கம்பனிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு ரூபா 1,075,000 தொகை சட்ட செலவினங்களாக ஏற்பட்டிருந்தது. | வழக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழக்குகளுக்கு தீர்வு காண தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இப்பிரச்னையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.34 வரையறுக்கப்பட்ட நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 649,744,947 | 392,763,781 | 3,989,966,601 | 2,763,641,842 | 256,981,166 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 684,655,983 | 364,529,675 | 3,936,552,819 | 2,387,054,110 | 320,126,307 | முனைப்பழியுள்ளது |
| **2020** | 665,970,836 | 303,028,874 | 3,844,120,237 | 1,946,859,336 | 362,941,962 | மறுப்பு |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 649.74 | 392.76 | 3,989.97 | 2,763.64 | 256.98 |
| 2019 | 684.66 | 364.53 | 3,936.55 | 2,387.05 | 320.13 |
| 2020 | 665.97 | 303.03 | 3,844.12 | 1,946.86 | 362.94 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 (LKAS 16) இன் பிரகாரம், முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன். LKAS | கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். | 2022 மார்ச் 14 ஆந் திகதியளவிலும் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 08 இற்கு இணங்க அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 22.1 மில்லியன் தொகையான சொத்துக்கள் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | ரூபா 1,901,559,252 தொகையான நடைமுறையல்லாத பொறுப்புக்களிற்கான விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பேரேட்டின் நகல் கணக்காய்வு நோக்கத்திற்காக பட்டோலையொன்றாக சமர்ப்பிக்கப்படக்கூடாது மேலும் அது விரிவான பட்டோலையாக இருக்க வேண்டும். கம்பனி உரிய பட்டோலைகளை கணக்காய்வுப் பிரிவில் சமர்ப்பிப்பதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட நகர முதலீடு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியால் செலுத்த வேண்டிய ரூபா 1,903,019,550 மீதிக்கான விரிவான பட்டோலை 2021 நவம்பரில் அரசாங்க கணக்காய்வுப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்டது. | 2022 மார்ச் 14 ஆம் திகதியளவில் இந்தப் பொறுப்புக்கான விரிவான பட்டோலை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான ரூபா 263,447,550 தொகையான கடன்பட்டோருக்காக காலப் பகுப்பாய்வினை சமர்ப்பிக்கும் போது முறையே 1 மாதத்திலும் குறைவானது மற்றும் 1 முதல் 2 மாதங்களுக்கு இடைப்பட்டது மற்றும் 3 மாதங்களிற்கு மேற்பட்டது என மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்படும் கடன் மீதிகளை இனங்காண முடியாதுள்ளது. | அபாயகரமான கடன் மீதிகளை அடையாளம் காணும் வகையில் கடன்பட்டோரின் காலப் பகுப்பாய்வை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அந்த காலப் பகுப்பாய்வை மாற்றுவது அவசியமா என்பதை கம்பனி ஆராயும். | 2022 மார்ச் 14 ஆம் திகதியளில் இப் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கம்பனியால் வாடகைக்கு வழங்கப்பட்ட அலுவலக | பெறவேண்டிய மீதிகளை விரைவாக | மின்சார கட்டணமாக காண்பிக்கப்பட்டுள்ள | 2021 திசெம்பர் 31 வரையிலும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வளாகங்களில் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் 32 அரசாங்க நிறுவனங்கள் மற்றும் 3 தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ஒரு வருடத்தை விஞ்சிய நிலுவை மின்சாரப் பட்டியல்களின் மீதி ரூபா 15,058,727 ஆகும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீதியான ரூபா 18,860,828 இல் ரூபா 9,450,760 தொகை ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் மீதி தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | நிலுவையாகவுள்ள மின்சார கட்டண மீதி ரூபா 20.7 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் கம்பனியால் இப் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்படும் ரூபா 1,960,987 ஆன நிலுவை மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | இந் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், தேவையான அங்கீகாரங்களுக்கு உட்பட்டு பொறுப்பற்ற மீதிகளை வருமானத்திற்கு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புத்தகங்களில் இருந்து இம்மீதியை நீக்குவதற்கு கம்பனியின் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் 2021 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | 2022 மார்ச் 14 அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நிதி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் கம்பனி 2014 யூன் 27 இல் ரூபா 17,965,769 கிரயத்திற்கு டொயோட்டா லேண்ட் க்ரூஷர் (Toyota Land Cruiser) ரகத்திலான ஜீப் வண்டியொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் இது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2019 ஆகஸ்ட் மாதம் முதல் ரூபா 100,000 மாதாந்த வாடகைக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் நிதி கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | இந்த ஜீப் அப்போதைய தலைவரின் உத்தியோகபூர்வ தேவையின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டதுடன், பின்னர் 2016 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய தலைவருக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது. ஆனால், அவர் ஜீப்பை பயன்படுத்தாததால், 2019 சனவரி 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இக் கம்பனியின் தாய் கம்பனியான நகர | தற்போது UDA இன் தலைவர் UNIDEP இன் தலைவராக செயல்படுகிறார், எனவே வாகன வாடகையான UNIDEP இற்கான மாதாந்த கொடுப்பனவு 2021 திசெம்பர் முதல் நிறுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அபிவிருத்தி அதிகாரசபையின் அப்போதைய தலைவருக்கு நியாயமான குத்தகை அடிப்படையில் பயன்படுத்த வழங்கப்பட்டது. | |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,471,978 ஆன பெறுமதிக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனி, பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | ஒனாலி ஹோல்டிங்ஸ் கம்பனியின் முகாமைத்துவ உரித்தினை பெற்றுக் கொள்வதற்காக ஏனைய பொது கம்பனியொன்றினால் பங்குச்சந்தை பங்குகளை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டதுடன் அந்த அபாயத்தினை குறைத்துக் கொள்வதற்காக வரையறுக்கப்பட்ட நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியால் ஒனாலி ஹோல்டிங்ஸ் கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்தல் இடம்பெற்றது. | 2022 மார்ச் 14 அளவில் நிதி அமைச்சிடமிருந்து அங்கீகாரம் எதுவும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2013/14 மற்றும் 2014/15 ஆகிய மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு உரிய கணக்கு வைக்கப்பட்டிராத செலுத்த வேண்டிய பொருளாதார சேவை வரியின் பெறுமதி ரூபா 2,668,338 ஆக இருந்ததுடன் அது பெற வேண்டிய பெறுமதி சேர் வரி பெறுமதியிலிருந்து ஈடு செய்யப்படுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்த போதிலும் அதற்கான தீர்மானமொன்றை வழங்கியிராத போது அந்தப் பெறுமதி பெற வேண்டிய பொருளதார சேவை வரி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு | கம்பனி வருமான வரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் விதத்தில் செயற்பட வேண்டும். | 2013/14 மற்றும் 2014/15 ஆகிய வருடங்களுக்காக இலங்கை முதலீட்டு சபையின் இணக்கப்பாட்டுடன் அந்த ஆண்டுகளுக்காக கம்பனியின் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தமையால் அந்த அடிப்படையில் பொருளாதார சேவைகள் வரி செலுத்த வேண்டிய வருமான வரியிலிருந்து கழிக்கப்படுவதற்காக நடைமுறைச் சொத்தொன்றாக | 2022 மார்ச் 13 வரையிலும் இப் பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்த வேண்டிய வருமான வரி கணக்கிற்கு சீராக்கப்பட்டு 2020 இன் நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டது. | |
| (ஐ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 85,409,990 ஆன பெறுமதி சேர் வரி பல வருடங்களாக நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வரவு மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால மீதிகளை பகுப்பாய்வு செய்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை மீள பெற்றுக்கொள்ளல் தொடர்பிலான கலந்துரையாடலை துரிதப்படுத்தி பணத்தை மீள அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2022 மார்ச் 31 வரையிலும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கவில் லை. |
| (ஒ) | நகர அபிவிருத்தி அதிகாரசபை 44 முன்மொழியப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக பணிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குவதற்காக கம்பனியுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்ததுடன் அச் செயற்பாட்டின் சார்பில் அதிகாரசபைக்கு உரிய மதியுரைகள் மற்றும் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் அதிகாரசபையிடமிருந்து ரூபா 17,082,061 தொகை முகாமைத்துவ சேவைகள் கட்டணமாக கம்பனியால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | கம்பனியால் நிறைவேற்றக் கூடிய பணிகளுக்காக மாத்திரம் கம்பனி உடன்படிக்கைகளை கைச்சாத்திட வேண்டியதுடன் குறித்த பணிகளை நிறைவேற்றி கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அந்தச் செயல்பாட்டின் சார்பாக அதிகாரசபைக்கு உரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டல் 11 சேவைகள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருக்கவில் லை. கம்பனிக்கு ரூபா 17,082,061 தொகை முகாமைத்துவ சேவை வருமானமாக அதிகாரசபையிடம் இருந்து பெறப்பட்டது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில் லை. | 2021 ஆம் ஆண்டிற்காக UDA இடமிருந்து 12 ஊழியர்கள் தொடர்பாக கம்பனி ரூபா 898,011 தொகையை முகாமைத்துவக் கட்டணமாகப் பெற்றுள்ளது. |
| (ஓ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது | கம்பனி அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவை மற்றும் | கம்பனியின் கொள்வனவுகளின் தன்மை மற்றும் | இக் கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 7.3 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கம்பனியினால் 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டு மற்றும் கடந்த நான்கு வருட காலப்பகுதியின் போது ரூபா 20,313,474 தொகை நடைமுறையல்லா சொத்துக்களின் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் 2020/2021 ஆம் ஆண்டுகளுக்காக 08 சேவை உடன்படிக்கைகள் தொடர்பாக ரூபா 28,786,980 தொகை செலவிடப்பட்டிருந்தது. | ஏனைய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | தேவைப்பாட்டின் அடிப்படையில் பிரதான மற்றும் சிறு பெறுகை நடவடிக்கைகள் தாய்க் கம்பனியான நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும். | துணைக் கம்பனியாகும், எனவே அவர்கள் கம்பனிக்காக ரூபா 1 மில்லியனுக்கும் அதிகமான பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்யும் போது அவை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகை பிரிவின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், 2022 மார்ச் 14 அளவில் கம்பனியால் பெறுகைத் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 9.2(ஆ) மற்றும் (ஈ) பிரிவுகள் மற்றும் 9.3.1(I) பிரிவு என்பவற்றின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தயாரிக்கப்பட்டு திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் கம்பனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றனை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கும் கம்பனியின் தற்போதுள்ள பதவியணியை அங்கீகரித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவியணியொன்று தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரங்களை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நாளதுவரையிலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 11 பேரைக் கொண்ட வரையறுக்கப்பட்ட பதவியணி மூலம் வரையறுக்கப்பட்ட நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் பணிகள் இடம்பெறுகின்றமையால் எதிர்காலத்தில் நிறுவனத்தின் விடயப் பரப்பு வியாபித்தால் | கம்பனி தற்போது 11 உறுப்பினர்களைக் கொண்ட வரையறுக்கப்பட்ட பதவியணி மூலம் முகாமை செய்யப்படுகிறதுடன் இந்த உறுப்பினர்களில் 9 பேர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களாகவும் இருவர் மாத்திரமே கம்பனியின் ஊழியர்களாகவும் உள்ளனர். ஆனால், 2020 ஆம் ஆண்டில், கம்பனியின் பதினான்கு ஊழியர்கள் UDA இற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர், மேலும் 2022 மார்ச் 14 |


| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றோம். | ஆம் திகதியிலும் பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்கான அங்கீகாரம் பொதுமுயற்சிகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. |
| (க) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 09 உத்தியோகத்தர்கள் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். 2020 ஆம் ஆண்டின் போது இந்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 9.1 மில்லியன் தொகை செலுத்தப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் எட்டு உத்தியோகத்தர்களிற்காக ரூபா 8.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் எட்டு உத்தியொகத்தர்களிற்கு ரூபா 8.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. சபை படிக்கு மேலாதிகமாக கம்பனியின் கடமைகளை ஆற்றுவதற்காக பணிப்பாளர் சபையில் உள்ள மூன்று உத்தியோகத்தர்களுக்கு படிகளாக ரூபா 1,150,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனிக்கு தேவையான பதவியணியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறைவேற்று தரத்திலான இரு பணிப்பாளர்கள் மூலம் கம்பனியின் நிர்வாகம் மற்றும் நிதி தொடர்பிலான அனைத்து பணிகளுக்குமான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படுகிறது. அதற்காக அவர்களுக்கு படியொன்று செலுத்தப்படுகிறது. இதுவரையிலும் அவ் இரு பணிப்பாளர்களுக்கான கடமைகள் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனிக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள 09 ஊழியர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் முழு நேரம் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டுள்ளமையால் கம்பனியில் அவர்களின் சேவைக்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செலுத்தப்படும் சம்பளத்தை மீள்நிரப்பு செய்வதற்கும் அதனை கம்பனியின் சம்பள கிரயத்தில் உள்ளடக்குவதற்கும் கம்பனியால் நடவடிக்கை | 2022 மார்ச் 14 வரையிலும் கம்பனியால் அத்தகைய அங்கீகாரம் எதுவும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (கா) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்திக்கமைய கம்பனியால் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் வரைபு ஆண்டறிக்கையொன்று கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் இறுதி ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ஆண்டறிக்கைகள் அல்லது வரைபு ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கைகளை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கம்பனியின் ஆண்டறிக்கைகளும் பாராளுமன்றத்தில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கம்பனியால் 2022 மார்ச் 14 வரையிலும் ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை வரிசை அமைச்சு, பொதுமுயற்சிகள் திணைக்களம் மற்றும் பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். | எதிர்காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 14 அளவில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கீ) | கம்பனி செயற்பாடுகளின் செயலாற்றலை அளவிடக்கூடியவாறு பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை (KPIS) | முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPIS) கம்பனியின் எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளின் | செயலாற்றல் குறிகாட்டிகள் தற்போது முழுநேர ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்டு வருகிறதுடன் | முழு நேர ஊழியர்களுக்காக அவர்கள் ஏற்கனவே (KPIS) தயாரித்துள்ளதாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனி தயாரித்திருக்காததுடன் இதன் காரணமாக கம்பனியின் எண்மையான மற்றும் எதிர்பார்த்த செயலாற்றல்களை கணக்காய்வின் போது மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | செயலாற்றலை அளவிடும் வகையில் அமைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்தம் செயலாற்றலை அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | கம்பனி தெரிவித்துள்ளது. ஆனால் 2022 மார்ச் 14 வரையிலும் ஊழியர்களின் செயலாற்றலை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | ஆரம்பத்திலிருந்தே கம்பனிக்கான உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டிருக்காததுடன், தாய்க் கம்பனியான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கம்பனி கணக்காய்வு செய்யப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் 2020 ஆம் ஆண்டுக்காக ஒரு கணக்காய்வு ஐயவினாவேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு பகுதியாக உள்ளக கணக்காய்வுப் பணிகள் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்தத் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளக கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | UDA இன் உள்ளக கணக்காய்வுப் பிரிவு 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வை மேற்கொண்டுள்ளது. ஆனால் 2022 மார்ச் 14 வரையிலும் கம்பனிக்கான உள்ளக கணக்காய்வுப் பிரிவு எதுவும் நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (கூ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, வருடத்திற்கு நான்கு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனி அதன் தொடக்கத்திலிருந்து கணக்காய்வு திகதி வரை எந்தவொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தையும் நடாத்தியிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வுக் குழுக்கள் கூட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுக்களை நிறுவி நடாத்துவதற்கு முகாமைத்துவ பதவியணியினரிற்கு முகாமைத்துவ பத்திரமொன்று அனுப்பப்படும். எனினும், கம்பனியின் எதிர்காலச் செயற்பாட்டின் தன்மை மற்றும் சட்டத் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டும் திறைசேரி திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவரின் பங்கேற்புடன் கணக்காய்வுக் குழுவொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியால் 2022 மார்ச் 31 வரையிலும் கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 4.35 லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 30,961,535 | 22,585,675 | 62,558,133 | 90,192,402 | 8,375,861 | மறுப்பு |
| **2019** | 33,934,120 | 23,727,143 | 69,177,280 | 88,195,669 | 10,206,977 | மறுப்பு |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | | | | |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 30.96 | 22.59 | 62.56 | 90.19 | 8.38 |
| 2019 | 33.93 | 23.73 | 69.18 | 88.20 | 10.21 |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இன் 81 ஆம் பந்தியின் பிரகாரம், குத்தகை வாங்குபவரிடமிருந்து செயற்பாட்டு குத்தகைக்காக பெறப்படுகின்ற வருமானம் இலகு வழி அடிப்படை அல்லது ஏனைய முறையான அடிப்படையினைக் கொண்டு அடையாளப்படுத்தப்படல் | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் பிரகாரம் குத்தகை வருமானத்தினை அடையாளப்படுத்தல் வேண்டும். | இது 10 ஆண்டுகளுக்கும் காலக்கழிவு மேற்கொள்ளப்பட வேண்டியமையினால் 2019 ஆம் ஆண்டிற்கு மட்டும் நாளேட்டில் உள்ளடக்கப்படல் திருத்தப்பட்டு | அவர்கள் பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டு விட்டதாக கம்பனிக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கான நிக்கூற்றுக்கள் 16 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டும். அவ்வாறாயினும் 10 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 3 விடுதிகளுக்காக மீள செலுத்தாமை அடிப்படையில் 2019 யூலை 10 ஆம் திகதி அறவிடப்பட்டிருந்த ரூபா.2,787,000 ஆன தொகை முறையான அடிப்படையொன்றில் குத்தகை காலத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின் வருமானமாக அடையாளப்படுத்தியமையினால் மீளாய்வாண்டின் இலாபம் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | காண்பிப்போம். | மார்ச் 2022 ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படவில்லை . |
| (ஆ) | நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நிகழ்வுகள் இலங்கை கணக்கீட்டு நியயம் 37 இற்கு அமைவாக நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் வெலிகம விடுதி 2009 நவம்பர் தொடக்கம் 2017 நவம்பர் வரை குத்தகைக்கு பெற்றுக் கொடுத்த நபருக்கு எதிராக கம்பனியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் நீர்கொழும்பு (பழைய) விடுதி 2009 நவம்பர் தொடக்கம் 2017 நவம்பர் வரை குத்தகைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நபரினால் கம்பனிக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைவாக சட்டரீதியான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் தேவையான விதத்தில் வெளிப்படுத்தப்படல் அல்லது சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அவர்கள் பிரச்சினைகள் சீர்செய்யப்பட்டு விட்டதாக கம்பனிக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கான நிக்கூற்றுக்கள் 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களாக ரூபா.10,289,128 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருப்பினும் இதன் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது 2011 ஆம் ஆண்டின் முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மட்டுமாகும். 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட சொத்துக்களின் உரித்து கம்பனிக்குரியதென மற்றும் விடுதிகள் உள்ளடங்கலாக ஏனைய சொத்துக்கள் காண்படுகின்றமையும் கம்பனியின் முகாமைத்துவம் ஏற்றுக்கொண்டிருப்பினும் அச் சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 இற்கு கம்பனிக்கு சொந்தமாகவிருந்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு மற்றும் முழுமையாக பேணப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்குரிய அனைத்துச் சொத்துக்களும் தொடர்பாக பரிசோதிக்கப்பட்டு அவ் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டு சொத்து தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு மற்றும் முழுமையாக பேணிச் செல்லல் வேண்டும். | கம்பனி நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காத துடன் 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடர்புடைய தகவல்கள் வழங்க முடியாதுள்ளது | அவர்கள் பிரச்சினைகள் சீர்செய்யப்பட்டு விட்டதாக கம்பனிக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், நிலையான சொத்துப் பதிவேடுகள் 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்படவில் லை. |
| (ஈ) | மஹியங்கனை விடுதியில் மேற்கொள்ளப்பட்ட மீள்கட்டுமானத்திற்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா.3,194,655 தொகை 2019 ஆம் அண்டின் செலவினமாக மற்றும் செலுத்தப்பட வேண்டிய | மீளாய்வாண்டிற்குரிய செலவு மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். | நாளேட்டு குறிப்பு ஊடாக கிரயம் மூலதனமாக்கப்படல் வேண்டும். 2019 ஆம் ஆண்டில் அப் பெறுமதி நடைமுறை வேலையின் கீழ் | பிரச்சினையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவினமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | | திருத்தப்பட்டு காண்பிப்போம். | |
| (உ) | விடுதிகளிலிருந்து பெறப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,499,047 அதிகமாக 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக ஆண்டின் இலாபம் மற்றும் வியாபார கடன்பட்டோர் அப் பெறுமதியினால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறப்பட வேண்டிய வருமானம் குறித்த வண்ணம் அடையாளப்படுத்தப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன்பட்டோர் பேரேடு கம்பனியினால் பேணப்படவில்லை. எனினும் சரியான தகவலை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு நாங்கள் அதற்காக நடவடிக்கை எடுக்கின்றோம். | சரிசெய்தல் நடவடிக்கை நடைபெற்று வருவதாக கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டிருந் தாலும், 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில் லை. |
| (ஊ) | உள்ளூராட்சி அதிகாரசபைக்குரிய, கம்பனி ஊடாக கட்டுப்படுத்தப்படுகின்ற விடுதிகள் ஊடாக ஈட்டப்பட்டிருந்த வருமானத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மீண்டும் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 3,668,269 ஆன பெறுமதி சேர் வரி 2019 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | பெறப்படுகின்ற வருமானங்களில் குறித்த பொறுப்பு குறைக்கப்பட்டு நிகர வருமானம் மட்டும் கம்பனியின் வருமானமாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும். | கணக்கிலிருந்து முழுமையாக கைவிடப்பட்டிருந்தமையினால் நாளேட்டு குறிப்பின் ஊடாக திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுப்போம். | சரிசெய்தல் நடவடிக்கை நடைபெற்று வருவதாக கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டிருந் தாலும், 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் எதுவும் வழங்கப்படவில்லை . |
| (எ) | கதிர்காமம் விடுதியில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் அகற்றப்பட்டமை தெரிவிக்கப்பட்டிருப்பினும் பொருள் ஆய்வு குழுவொன்று நியமிக்கப்பட்டு அவ் அறிக்கை பிரகாரம் அகற்றலுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் (அகற்றப்பட்ட பொருட்கள் | அகற்றல் நிறுவனத்திற்கு உச்ச நன்மை தரும் விதத்தில் மேற்கொள்வதற்கு தேவையான வண்ணம் அமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமை முகாமைத்துவத்தினால் ஏற்படுத்தப்படல் வேண்டும். | பல சொத்துக்கள் மஹியங்கனை விடுதிக்கு முறையாக கையளித்தல் மேற்கொள்ளப்பட்டிரு ந்ததுடன் அதற்கு பின்னர் அச் சொத்துக்கள் ஏலமிடப்பட்டது. | சரிசெய்தல் நடவடிக்கை நடைபெற்று வருவதாக கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டிருந் தாலும், 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 16 மார்ச் 2022 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு பெறப்படவில்லை) நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய சீராக்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஏ) | அறவிட முடியாக் கடன் கணக்கிடல் தொகை ரூபா.4,152,161 மற்றும் வருமானவரி கணக்கிடல் தொடர்பான தகவல்கள் மற்றும் அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்கிடப்படுவதற்கு பதிவேடொன்று வழங்கப்படாதிருப்பினும் அது 2019 ஆம் ஆண்டிற்காக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம் | 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை எந்த விபரங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டில் வியாபார கடன்பட்டோர் ரூபா. 4,836,103 மற்றும் 2019 ஆம் ஆண்டில் ரூபா.10,352,823 மற்றும் ஏனைய கடன்பட்டோர் ரூபா.6,673,529 பெறுமதிகளை 01 தொடக்கம் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | கடன்பட்டோரிடமிருந்த மீள அறவிட்டுக் கொள்வதற்கான செயற்பாடுகள் குறித்து எந்தவிதமான விபரங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஒ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளூராட்சி அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா.21,125,835 இற்குரிய உள்ளூராட்சி அதிகார சபைக்கு குறித்த காலத்தினுள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | உள்ளூராட்சி அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் குறித்த விதிக்கமைய செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | கம்பனி தெரிவித்ததின் படி, 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை தீர்வு செய்வது வருவது தொடர்பான விபரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பீஈடீ/12 மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 7.3 பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள், பொது கம்பனிகளும் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் ஆலோசனைகள் அவ்வண்ணமே பின்பற்ற வேண்டும். அவ்வாறாயினும் கம்பனியினால் 2019 ஆண்டிற்காக ரூபா 8,761,999 ஆன மொத்த பெறுமதியிலான வேலை, பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் 2019 ஆண்டிற்காக பெறுகை திட்டம் தயரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியினால் பொது திறைச்சேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை ஒழுங்குகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக் கவில்லை. | 2022 மார்ச் 16 ஆம் திகதி வரை பெறுகைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஔ) | 1980 செப்தெம்பர் 09 மற்றும் 1981 திசெம்பர் 11 ஆன வர்த்தமானியின் ஊடாக உள்ளுராட்சி நிறுவனங்களுக்குரியதாக காணப்பட்ட 38 விடுதிகள் மற்றும் சுற்றுலா பங்களாக்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2006 யூலை 17 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அவ் விடுதிகளின் நிர்வாகம் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக சொத்துக்களின் பெறுமதியுடன் நன்மதிப்பு (goodwill) பெறுமதி ஆரம்ப இருப்பு நிலைக்கு உள்ளடக்கப்படுவதற்கும் வரி | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக் கவில்லை. | கம்பனி அறிவுறுத்தியிருந்தாலும், அவர்கள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியதாகத் தெரிவித்தாலும், எந்த சான்றாதாரங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்களும் அதற்கு உள்ளடக்கப்படுவதற்கும், தனியார் பிரிவில் முகாமைத்துவ முகவரொருவர் நியமிப்பதற்கு மற்றும் முகாமைத்துவ முகவரிற்கு 49 சதவீதம் வரையான பங்குகள் பெற்றுக் கொடுப்பதற்கும், அதற்காக அனைத்து சொத்துக்களும் மற்றும் நன்மதிப்பு (good will) மீள் மதிப்பிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பினும் அத் தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (க) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் தனியார் கம்பனி பெயரில் அரச கம்பனியொன்று உருவாக்கப்பட்டு விடுதி முகாமைத்துவம் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் அக் கம்பனியினால் குறித்த கொள்கையொன்று அடிப்படையாகக் கொண்டு நீண்ட காலமாக விடுதிகள் குத்தகைக்கு வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. விசேடமாக விடுதிகள் குத்தகைக்கு கொடுத்தல் பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டு விலைக்கேள்வி கோரப்பட்டு உயர்வான கேள்வியை சமர்ப்பித்த மற்றும் விடுதி நடாத்துவதில் அனுபவம் மற்றும் நிதிபலம் உள்ள தரப்பினர் அடையாளப்படுத்தப்பட்டு விடுதிகள் குத்தகைக்கு | முகாமைத்திவத்தினால் தேவையான அமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமை அடைளாயப்படுத்தப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் வினைத்திறனாக்கப்படுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக் கவில்லை. | விடுதிகளை வாடகைக்கு விடவத தொடர்பாக எந்தவிதமான விசேட கொள்கைகளும் முன்வைக்கப்படவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கா) | நிறுவனத்தினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2019 ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று இருப்பினும் செயலாற்றல் அறிக்கையொன்று தாயரிக்கப்பட்டிராமையினால் ஆண்டினுள் நிறுவனத்தினுள் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து செயற்பாடுகள் அவ் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருப்பினும், கையகப்படுத்தப்பட்ட பெறுபேறுகள் எவை செயற்படுத்தப்படாத செயற்பாடுகள் உண்டா மற்றும் அவ்வாறு செயற்படுத்தப்படாத மற்றும் குறைவான பெறபேறுகளை கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கு தாக்கமளித்திருந்த காரணங்கள் அவதானிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு இயலாதிருந்தது. | செயலாற்றல அறிக்கை தயாரிக்கப்பட்டு அதவானிக்கப்படுகின்ற பாதகமான பெறுபேறுகளுக்காக திருத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படல வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மார்ச் 16 ஆம் திகதி வரை செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் 43 விடுதிகள் காணப்பட்டன. நிகழ்காலத்தில் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியின் கீழான 40 விடுதிகளில் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இறுதியில் வருமானம் உழைக்கும் விடுதிகள் எண்ணிக்கை முறையாக 30 மற்றும் 26 ஆக குறைவடைந்திருந்ததுடன் விடுதிகள் முறையாக 10 மற்றும் 14 விளைவற்றதாக | விடுதிகள் மற்றும் அவ் விடுதிகளுக்குரிய பொறுப்புக்கள தொடர்பாக முறையான பதிவேடுகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | செயலற்ற நிலையில் உள்ள ஓய்வு விடுதிகள் தொடர்பாக கம்பனி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் 2022 மார்ச் 16 ஆம் திகதி வரையிலும் தெரிவிக்கப்படவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | காணப்பட்டன. | | | |
| (கீ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பீஈடீ/12 இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 9.2 பந்தியின் பிரகாரம் கம்பனியின் பதவியணி தகவல் தயாரிக்கப்பட்டு அது பொது திறைச்சேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் 9.3.1 பந்தியின் பிரகாரம் கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு அவையும் குறித்த அமைச்சின் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ் அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே, 30 ஆம் இலக்க 2006 செப்தெம்பர் 22 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பதவியணிக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதற்காக சுற்றறிக்கை ஒழுங்கு பிரகாரம் அங்கீகாரங்கள் பெற்றுக் கொள-்-ளப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விபரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் 16 மார்ச் 2022 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (கு) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் கம்பனியினால் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் | குறித்த திகதிக்கு வரைவு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை வரைவு வருடாந்த அறிக்கையை வழங்குவதற்கு கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (கூ) | பீஈடீ/12 இலக்க மற்றும் 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி தொடர்பாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | கருத்து முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. | கம்பனியின் கூட்டிணைந்த திட்டம் 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை வழங்கப்படவில்லை. |
| (கெ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 01/2014 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை 5(2) பந்தியின் பிரகாரம் கம்பனி கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டு திட்டமொன்று தாயரிக்கப்பட வேண்டியிருந்தது. அச் செயல் நடவடிக்கைத் திட்டம் 2003 யூன் 02ஆம் திகதியிட்ட பீஈடீ/12 இன் பொது முயற்சி சுற்றறிக்கையின் 5.1.3 பிரிவின் பிரகாரம், நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வரிசை அமைச்சு, அரச தொழில் முயற்சி திணைக்களம், பொது திறைச்சேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் சபையினாலாவது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. | 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை எந்த செயற்பாட்டு திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கே) | கம்பனியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிராததுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கம்பனியின் பணிகளை கணக்காய்வு செய்ய இயலுமான போதிலும், அந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த காரணத்தால் லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் தொடர்பில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிராததுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கம்பனியின் பணிகளை கணக்காய்வு செய்ய தேவையான வசதிகள் கம்பனியினால் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு தொடர்பில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) உள்ளகக் கணக்காய்வு பிரிவால் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ளகக் கணக்காய்வு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 16 மார்ச் 2022 ஆம் திகதி வரை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவப்படவில்லை |
| (கை) | கம்பனியினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆணண்டுகளுக்கான கணக்காய்வு குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | 2022 மார்ச் 10 ஆம் திகதி வரை கம்பனியால் எந்த கணக்காய்வுக் குழுவும் நடத்தப்படவில்லை. |
| (கொ) | பொது திறைச்சேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பீஈடீ/12 மற்றும் 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 பந்தியின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த பாதீடு குறித்த நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பாதீடு அவ்வாறு அங்கீகரித்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அப் பாதீட்டிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும். | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அவர்கள் சரி செய்திருந்தாலும், அடுத்த ஆண்டுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீடு எதுவும் 2022 மார்ச் 16 ஆம் திகதி வரை வழங்கப்படவில்லை என்று கம்பனி தெரிவித்தது. |

## 4.36 வோட்டர்ஸ் ஏஜ் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 1,402,717,851 | 1,233,490,377 | 2,553,466,276 | 1,360,907,505 | 169,227,474 | முனைப்பழியுள்ள |
| **2019** | 1,360,473,507 | 1,200,060,820 | 6,191,065,009 | 4,863,350,663 | 160,412,687 | முனைப்பழியுள்ள |
| **2020** | 901,404,772 | 964,067,215 | 6,189,965,038 | 4,933,625,754 | (62,662,443) | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியானது 2019 ஆம் ஆண்டில் ரூபா 14.7 மில்லியன் கிரயமுடைய ஓக்கிட் தாவரங்களை கொள்வனவு செய்து வணிக நோக்கத்துடன் கம்பனி வளாகத்தினுள் நட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த ஓக்கிட் தாவரங்களினால் எந்தவொரு வருமானமும் உழைக்கப்படாததோடு | எல்கேஏஎஸ் 41 இன் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஓக்கிட் செயற்றிட்டத்தின் ஆரம்பித்தில் இத் திட்டத்தின் கீழ் வளரும் சில தாவரங்களை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட | 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து இருப்புக்கள் வியாபார ஆயட்காலத்திற்கு மேலாக இலாப |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாவரங்கள் ஒழுங்காக பராமரிக்கப்படவில்லை. இதனால் சில தாவரங்கள் நல்ல நிலையில் காணப்படவில்லை. எவ்வாறாயினும் இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 41 இற்கமைய வெளிப்படுத்தப் படவில்லை. | | போதிலும் அது நடைபெறவில்லை. இத் தாவரங்கள் அலங்கார தேவைக்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. அலங்காரப்படுத்தலானது குறிப்பிடத்தக்களவு மறைமுக பெறமதியினையே அதிகரிக்கின்றது. மேற்குறிப்பிட்டவற்றினால் இத்தகைய செயற்றிட்டத்தினை தனிப்பட்ட ஜீவனோபாய சொத்தாக இனங்காண வேண்டிய அவசியமில்லை. | நட்ட கணக்கிற்கு எதிராக இருப்புக்களின் கட்டணங்கள் காணப்பட்டதாக கம்பனி தெரிவித்திருந்தது. |
| (ஆ) | இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் (SLLDC) நிர்மாணிக்கப்பட்ட புகையிரத சிற்றுண்டிச்சாலையின் செயற்பாட்டு நடவடிக்கைக்காக 2018 பெப்ரவரி 28 ஆம் திகதி தொடக்கம் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. SLLDC இன் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடிய பொருத்தமான ஆவணங்களின் அடிப்படையில் கம்பனியின் மீளாய்வாண்டில் SLLDC இற்கு கொடுப்பனவு செய்ய வேண்டி தொகை முறையே ரூபா. 40.4 மில்லியன், 130.8 மில்லியன் மற்றும் ரூபா.122.1 மில்லியன் போன்றன 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும் இது தொடர்பான ஏற்பாடுகள் கம்பனியினால் நிதிக்கூற்றுக்களில் | சென்மதி தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது சிற்றுண்டிச்சாலை தொடர்பாக சட்டபூர்வ உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு கொடுப்பனவுப் பெறுமதியானது சமரச முறையில் செலுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. அதன்படி முறையான உடன்படிக்கையின் பின்னர் இப் பொறுப்பானது கணக்கிலிடப்படும். | 2021 மார்ச் 14 ஆம் திகதியில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

மேற்கொள்ளப்படவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கம்பனியானது ஆறு மாதத்திற்குள் சிறுவர் பூங்கா ஒன்றினை அமைப்பதற்காக 2017 திசெம்பர் 21 ஆம் திகதியன்று வெளிநாட்டுத் தனியார் கம்பனி ஒன்றுடன் அபிவிருத்தி உடன்படிக்கையினை செய்திருந்தது. கட்டுமான பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் தொடர்ந்து வருகின்ற 15 வருட காலப்பகுதிக்கான சிறுவர் பூங்காவின் முகாமையினை ஏற்க அபிவிருத்தியாளர் உடன்பட்டதோடு சிறுவர் பூங்காவின் பராமரிப்பு மற்றும் முகாமையினை அவரே செயற்படுத்துவார். அபிவிருத்தி உடன்படிக்கையின் 4.1 இன் பிரகாரமும் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரமும் முகாமைத்துவ காலத்தின் போது அபிவிருத்தியாளரால் மாதாந்தம் ரூபா. 600,000 வாடகையாக கம்பனிக்கும் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதிவரை எத்தொகையும் செலுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அபிவிருத்தியாளரால் கம்பனிக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா.10.8 மில்லியன் நிதிக்கூற்றுகளில் காட்டப்படவுமில்லை. | அட்டுறு அடிப்படையில் குறிப்பிட்ட தொகையானது கடன்பட்டோரின் கீழ் நிதிக்கூற்றுகளில் கணக்கிடப்பட வேண்டும். | குறித்த நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய வருமானத்தினை மீளப் பெறுவதற்கு எமது கம்பனி தேவையான செயற்பாட்டு நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டுவரை மேற்கொண்டமையை குறிப்பிட விரும்புகின்றேன். இரு தரப்பினர்களிடையில் செயல்திறன் கடப்பாடு தொடர்பான உடன்படிக்கை உருவாக்கப்பட்டதன் பின்னர் கணக்குகள் முறையாக அறிக்கையிடப்படும். | ரூபா. 10.8 மில்லியன் நிலுவைத் தொகையை தள்ளுபடி செய்ய தீர்மானம் செய்துள்ளதாக கம்பனி தெரிவித்திருந்தது . ஆனால் பொது முயற்சி திணைக்களத்திடம் இருந்து அனுமதி பெறப்படவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 03 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையில் பிரகாரம் திறைசேரி அங்கீகாரமில்லாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே 2018 ஆம் ஆண்டின் போது ரூபா. 7,541,733 அறவிட முடியாக்கடனாக பதிவளிக்கப்பட்டிருந்தது. | இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அறவிட முடியாக்கடன் பதிவளிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 31 மார்ச் 2022 ஆம் திகதி வரை பொது முயற்சி திணைக்களத்திடமிருந்து எந்த அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பதிவளிப்பு தொடர்பான கடன்பட்டோர் | அறவிட முடியாக் | ஆண்டின் மீதியானது | 2022 மார்ச் 14 |

| | | | |
|---|---|---|---|
| ரீதியான தரவுகளின் தொகை ரூபா.22,078,073 கணக்காய்விற்கு சமார்ப்பிக்கப்படவில்லை. | கடனினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 22,078,073 ஆகும். அதன் பெரும்பகுதி இரு அரசாங்கம் சார்ந்த தரப்பினர்களை உள்ளடக்குகின்றது. அதில் ரூபா 10,805,048 பெறுமதியானது ஆயுர்வேத திணைக்களத்திற்கும் ரூபா. 4,159,986 பெறுமதியானது இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் உரியதாகும். இதன் மொத்த பெறுமதி ரூபா.14,965,035 ஆனது வருடத்தின் கடன்பட்டோர் மீதியில் 68% ஆகும். கடன் மீட்பு தொடர்பாக இந்த தரப்பினர்களின் பதில் நிச்சயமற்றது. ஆகவே இதற்காக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிலிருந்து ஐஎப்ஆர்எஸ்(IFRS) -09 இன் படி கடன்பட்டோர் மீதிகளுக்கான நட்ட பதிவழிப்பு ஏற்பாடுகள் கணிக்கப்படுவதோடு 365 நாட்களினை விடக்கூடிய கடன்பட்டோர்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது ஆகவே 73% ஆன | ஆம் திகதி வரை கம்பனியினால் எந்த விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கடன்பட்டோர் 365 நாட்களினை விடக்கூடியதாக இருப்பதனால் இது கூடிய சதவீதமாக காணப்படுவதோடு 31.12.2020 இல் முடிவுவடைந்த ஆண்டில் மொத்த கடன்பட்டோர் மீதியானது ரூபா.27,842,273 ஆகும். | |
| (ஊ) | கம்பனியினால் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த சேவையொன்றிற்காக அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 1,561,148 ஆன தொகை உட்பட ரூபா.7,541,733 அறவிட முடியா கடனாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது 2019 மார்ச் 14 ஆம் திகதியிலாகும். காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு முறையான ஒப்பந்தத்தில் அல்லது முற்பணம் அறவிடலொன்று இன்றி சேவை வழங்கல் இதற்கான காரணமாகி காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிலும் மேலும் ரூபா 5,159,986 ஆன சேவை அக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பணத்தில் ரூபா 3,664,986, 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கம்பனியிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | வாடிக்கையாளர்களின் கடன் எல்லைகளுக்குள் முறையான ஒப்பந்தங்களுக்கு உட்பட்டதாக மட்டும் வேவை வழங்கப்படல் வேண்டும். அறவிட முடியா கடன் பதிவழிப்பதற்கு முன்னர் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் தேவையான அனுமதியைப் பெறுவதற்கு அவர்கள் எடுத்துச் செல்லப்படுவார்கள் என்று கம்பனி தெரிவித்திருந்தது. |
| (எ) | முறையான ஒப்பந்தத்திற்கு உடன்படாது வாய்மூல ஒப்புதலின் அடிப்படையில் லயன் பூரி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு | ஒப்பந்தமொன்றிற்கு உடன்படாது சேவை வழங்கல் தொடர்பாக | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | 2022 மார்ச் 14 ஆம் திகதி வரை எந்த நடவடிக்கையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா.3,440,904 பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி மற்றும் காரணங்கள் கூறப்படாது அறவிட முடியா கடனாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் அதில் ரூபா 2,000,000 இற்காக ஐயக் கடனாக ஒதுக்கிச் செலுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மற்றும் சேவையின் பெறுமதி விரைவாக அறவிடப்படுவதற்கு செயற்படாமை தொடர்பாக முறையாக பரீட்சித்து பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு 04 அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய தொகையாக 16.9 மில்லியன் மற்றும் ரூபா.16.6 மில்லியன் கம்பனியின் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுகளில் இத்தகைய மீதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு உரிய கடன்கொள்கை காணப்படுவதோடு உரிய காலப்பகுதியில் கடன்களை மீளப்பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். | அரசதுறை கடன்பட்டோரான ஆயுள்வேத திணைக்களத்திற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புகையிரத சிற்றுண்டிச்சாலை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளும் போது தொகையினை குறைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2022 மார்ச் 14 ஆம் திகதிக்குள் இந்த கம்பனியால் பெறப்பட வேண்டிய நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை |
| (ஐ) | 2016 நவம்பர் 06 இல் கம்பனியானது கிரீன் லீவ்ஸ் என்ரரெயின்மன்ட் (PVT) லிமிட்டெட் உடன் வெளியக திரையரங்கு அமைப்பதற்கான உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தக்காரர் மாதாந்தம் இழிவு வாடகையாக ரூபா.3,000,000 பெறுமதி | வருமானம் மற்றும் கடன்பட்டோர் என்பவற்றினை நிதிக்கூற்றுகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | கிரீன் லீவ்ஸ் என்ரரெயின்மன்ட் (PVT) லிமிட்டெட் தீர்மானத்திற்கு ஏற்பட்ட நிதிச்செலவுகளை வோட்டர்ஸ் ஏஜ் | கிரீன் லீவ்ஸ் என்ரரெயின்மன்ட் (PVT) லிமிட்டெட் தனது சொத்தை வோட்டர்ஸ் ஏஜ்க்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01 செப்டெம்பர் 2018 இலிருந்து செலுத்த வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை மொத்த வாடகையாக வருமானமாக ரூபா.84,000,000 கம்பனியினால் பெறப்படவில்லை. இத்தொகை கம்பனியினால் வருமானம் மற்றும் கடன்பட்டோராக நிதிக்கூற்றுகளில் காட்டப்படவில்லை. | வேண்டும். | கம்பனியினர் வாடகை வருமானத்திலிருந்து ஈடுசெய்ய முன்மாதிரிகள் சமர்ப்பித்துள்ளது. சரியான மதிப்பீடுகளை பெற்றுக்கொளவதற்காக அம்முன்மொழிவு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கணிப்புகளின் படி, எதிர்காலத்தில் கணக்குகள் பேணப்படுவது நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் மற்றும் இறுதி முடிவுக்கு உட்படும். | மாற்றுவதற்கான திட்டத்தை சமர்ப்பித்திருந்தது. இந்த முன்மொழிவு இப்போது தாய்க் கம்பனிக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அவர்களின் அவதானிப்புகள் மற்றும் கருத்துரைகளும் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஒ) | வோட்டர்ஸ் ஏஜ் ஆனது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முற்றிலும் சொந்தமாக்கப்பட்ட துணை நிறுவனமாகும். வோட்டர்ஸ் ஏஜ் ரீகிரியேசன் லிமிடட் ஆனது 12 நவம்பர் 2020 இல் வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் துணைக்கம்பனியாக உருவாக்கப்பட்டதுடன் வோட்டர்ஸ் ஏஜ் இன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் ஒட்டர் அக்குவாட்டிக் கிளப் ஆனது வோட்டர்ஸ் ஏஜ் ரீகிரியேசன் கம்பனியினால் 20 நவம்பர் 2020ஆம் திகதியில் சுவீகரிக்கப்பட்டது. ஒட்டர் கிளப் அமைந்திருக்கும் காணியானது மாவட்ட செயலகத்திற்கு சொந்தமானதுடன் வோட்டர்ஸ் ஏஜ் ரீகிரியேசன் லிமிடட் இனை சுவீகரிக்கும் போது நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வோட்டர்ஸ் ஏஜ் லிமிடட் ஆகியன நிலத்துக்கான குத்தகை ஒப்பந்தத்தில் ஈடுபட | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க கம்பனி செயற்பட வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகார சபையானது ஒட்டர் அக்குவாட்டிக் கிளப் இன் செயற்பாடு மற்றும் நிர்வாகம் தொடர்பான உதவிகளைச் செய்வதற்கான இயலுமையினைக் கொண்டிருக்கவில்லை. ஒட்டர் அக்குவாட்டிக் கிளப் அமைந்நிருக்கும் காணியானது UDA இனால் சுவீகரிக்கப்பட்டது. ஆகவே ஒட்டர் அக்குவாட்டிக் கிளப் இன் செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தினை மேற்பார்வை | 14 மார்ச் 2022 ஆம் திகதி வரை கூட துணைக் கம்பனியினை அமைப்பதற்கான பொது முயற்சி திணைக்களத்திடமிருந்து கம்பனி அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்மொழியப்பட்டன. மேலும், ஓட்டர் கிளப் இன் சொத்துக்கள் மற்றுும் பொறுப்புக்கள் வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியால் சுவீகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2003 யூன் 02 ஆம் திகதியிட்ட பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பிரிவிற்கு மாறாக வரிசை அமைச்சு மற்றும் நிதி அமைச்சகத்தின் அனுமதி மற்றும் பரிந்துரையைப் பெறுவதற்குப் பதிலாக, புதிய நிறுவனம் நிறுவப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த புதிய நிறுவனம் ஓட்டர் கிளப்பை அந்த நிறுவனத்திடம் கையளித்திருந்தது. | | செய்வதற்காக வோட்டர்ஸ் ஏஜ் ரீகிரியேசன் லிமிடட் கம்பனியினை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நகர அபிவிருத்தி அதிகார சபை வோட்டர்ஸ் ஏஜ் ரீகிரியேசன் லிமிடட் மற்றும் வோட்டர் அக்குவாட்டிக் கிளப் ஆகியவற்றுக்கிடையில் மூன்று தரப்பினரை உள்ளடக்கிய உடன்படிக்கையானது ஒட்டர் அக்குவாட்டிக் கிளப் இன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிர்கால முகாமைத்துவம் நிதி திரட்டுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஓ) | 2003 யூன் 2 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம், வோட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நிறுவனத்தின் கடன் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் கடனிற்கு விற்பனை தொடர்பான கொள ˙கையொன்று தயாரித்து அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் கடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை | பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் கணக்காய்விற்கு கடன் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கக் கூடிய எல்லை, கடன் அறவிடல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் நிச்சமற்றதன் காரணத்தினால் முறையற்றதாக கடன் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்வதற்கு வசதி அளிக்கப்பட்டிருந்தது. கடன் அறவிடப்படுவதற்கு பெரிதாக தாமதங்கள் ஏற்பட்டிருத்தல் மற்றும் அறவிட முடியா கடனாக அசாதாரண பெறுமதி பதிவழிக்கப்பட்டிருத்தல் போன்ற பாதகமான நிலைமைகள் இவ்வாறான கொள்கையொன்று இல்லாமையினால் விசேடமாக ஏற்பட்டிருந்தது. | | | |
| (ஔ) | 2014 சனவரி 11 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 5(2) ஆம் இலக்க பந்தி மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறுக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம், ஏதிர்பார்த்த வணிக இலக்கை உள்ளடக்கிய வகையில் கம்பனியின் வணிகத்திட்டத்தின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | கம்பனியின் வணிகத் திட்டத்தின் அடிப்படையில் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப அமுல்படுத்தப்படும்.. | 2022 மார்ச் 14 ஆம் திகதி வரை செயற்பாட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (க) | 2003 யூன் 2 ஆம் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.3 ஆம் பந்தியின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 109,254,182 பெறுமதியான சொத்துக்கள் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாமல் கொள்வனவு | சேவைகள், பொருள்கள் ஆலோசனை என்பவற்றுக்கு பெறுகைத் திட்டம் கம்பனியினால் தயாரிக்கப்பட்ட | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து ஆதனம் பொறி உபகரணங்களுக்கென தனியான பெறுகைத் திட்டத்தினை | 2022 மார்ச் 14 ஆம் திகதி வரை கம்பனி பெறுகைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | தயாரிப்பதற்கான வேலைகள் தயார்நிலையில் உள்ளன. | |
| (கா) | 2003 யூன் 02 ஆம் திகதி பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தின் பிரகாரம், மீளாய்வாண்டில் கம்பனி ஆரம்பித்ததிலிருந்து அமைப்பு வரைபடம் மற்றும் கம்பனியின் பதவியணி என்பவற்றுக்கு திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் பெறப்படவில்லை. | அமைப்பு வரைபடம் மற்றும் கம்பனியின் பதவியணி என்பவற்றுக்கு திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்ட வேண்டும். | 2022 ஆம் ஆண்டிலிருந்து மனிதவளத் திட்டமிடலுக்கு வரிசை அமைச்சினதும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 மார்ச் 14 ஆம் திகதி வரை பதவியணிக்கான திறைசேரியின் பொது முயற்சி திணைக்களத்திடம் அங்கீகாரம் பெற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | Flora Park Island இற்காக ஓக்கீட் கன்றுகள் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு வீட்டுத்தோட்ட முகாமையாளர் தாய்லாந்திற்கு சென்று ரூபா. 8.55 மில்லியன் ஆன 16,000 ஓக்கீட் கன்றுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தார். ஆதற்கு மேலதிகமாக தேசிய ரீதியாக 3,900 ஓக்கீட் கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.24 மில்லியன் மற்றும் 6180 ஓக்கீட் விதைகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 744,250 ஆக இந்த ஓக்கீட் கன்றுகளுக்காக மொத்தம் ரூபா 10.53 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.<br>ஏவ்வாறயினும், 2018 திசெம்பர் மாதம் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 10 வகைகளிலான 1161 ஓக்கீட் கன்றுகள் அழிந்திருந்ததுடன் ரூபா 1.7 | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின் பின்னர் மற்றும் அத்தியாவசிய தீர்மானத்தின் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் சிறந்த முகாமைத்துவத்துடன் பேணிச் செல்லப்படல் வேண்டும். | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | 2022 மார்ச் 14 ஆம் திகதி வரை திரும்பல்கள் ஏற்பட்டிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் கிரயம் ஏற்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்த 4250 கன்றுகளில் ஒரு பூவேனும் பூத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த ஓக்கீட் கன்றுகள் பராமரித்து பேணிச்செல்வதற்காக தினசரி செலவொன்று ஏற்கப்பட்டிருப்பினும் ஆரோக்கியமான நிலையில் ஓக்கீட் பயிர்சேய்கை பேணிச்செல்வதற்கு முடியாததன் காரணத்தினால் சாத்தியக்கூறு ஆய்வின்றி பயிர்சேய்கைக்காக செலவிடப்பட்டிருந்த பணம் பலனற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | | | |
| (கீ) | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் மற்றும் முறையான பெறுகை நடைமுறைகளை பின்பற்றாது பல கன்டேனர் பெட்டிகள் சேர்க்கப்பட்டு ஸ்பொட் பார் உணவு விடுதி கட்டுமானத்திற்காக ரூபா.52,890,111 செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு பணம் செலவிடப்பட்டதன் பின்னர் சுற்றியுள்ள குடியிருப்பாளர்களிடமிருந்து எதிர்ப்பு வரக்கூடும் என கருத்து முன்வைக்கப்பட்டு அக் கட்டுமானம் வேறு மாற்று பாவணைகளுக்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது என 2021 செப்தெம்பர் 03 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 மார்ச் வரையிலும் இது செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன் அதற்காக கொள்வனவு | முறையான சாத்தியக்கூறு ஆய்வின் பின்னர் மட்டும் செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை | இப்பிரச்னையை சரி செய்வதற்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த மரப் பொருட்கள் மழை நீர் கசிவினால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு மாறியமை 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரீசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | | |
| (கு) | கம்பனியானது 20 ஆண்டு குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார அதிகார சபையிடமிருந்து 1 ஏக்கர் 3 றூட் 34.02 பர்ச்சஸ் உடைய காணியை ரூபாய் 80,000,000 செலவில் 2018 செப்ரெம்பர் 21 ஆம் திகதி பெற்றிருந்ததோடு கம்பனி காணி அபிவிருத்திக்காக வெளிநாட்டுத் தனியார் கம்பனி ஒன்றுடன் 2018 சனவரி 26 ஆம் திகதி நிர்மாண அபிவிருத்தி உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தது. எவ்வாறாயினும் தற்பொழுது காணியின் எல்லை தொடர்பாக அபிவிருத்தியாளருடன் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அபிவிருத்தி வேலைகள் கைவிடப்பட்டுள்ளன. அதற்கமைய அபிவிருத்தி உடன்படிக்கையின் 8.1 மற்றும் 8.2.1 பந்திகளின் பிரகாரம் அபிவிருத்தியாளரிடமிருந்து வருமதியான தொகையானது 2021 ஏப்ரல் 30 வரை கம்பனியினால் பெறப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் பிரச்சினைகளைத் தீர்வு செய்து பெற வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகைப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக வாடகைப் பெறுமதியானது கம்பனியின் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. இத்தகைய பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கிறேன். | வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் வளாகத்தில் இந்த வசதியை உருவாக்க அபிவிருத்தியாளர் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும், அறிக்கையிடும் திகதியில் கூட பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்றும் தெரிவித்தது.<br>. |
| (கூ) | கடந்த 3 வருடங்களாக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் கம்பனியின் உண்மை வருமானம் மற்றும் செலவுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் சில வேறுபாடுகள் 1,082 சதவீதம் முதல் 210 சதவீதத்திற்கு இடைப்பட்டவை. மேலும் மூலதனச் செயற்றிட்டங்களுக்காக மூலதனச் | வரவு செலவுத்திட்டமானது நம்பகத்தன்மையான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். | வரவு செலவுத்திட்டத்தில் மூலதனச் செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவீனங்கள் ஒதுக்கப்படவில்லை. எவ்வாறாயினும் | 2020 மார்ச் 14 ஆம் திகதி வரை கம்பனியினால் மூலதனப் பாதீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவீனங்கள் ஒதுக்கீடு செய்யப்படாததோடு வரவு செலவுத் திட்டமானது ஆக்கபூர்வ முகாமைத்துவ சாதனமாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | | நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள மூலதனச் செயற்றிட்டங்களுக்கான மூலதனச் செலவீனங்களினை ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (கெ) | ஹோட்டல் கட்டடம் ஒன்றை 48 அறைகளுடன் நிர்மாணிப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு 2019 செப்ரெம்பர் 18 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 1,288 மில்லியன் கிரயத்தில் பணிப்பாளர் சபையினால் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் வழங்கப்பட்டதோடு முற்பணக் கொடுப்பனவாக ரூபா.71 மில்லியன் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் தொடர்ந்து வரும் கொடுப்பனவுகள் போதிய பணமின்மையால் செலுத்தப்படாததோடு அரச பொருட் கொள்வனவு வழிகாட்டியின் பகுதி 2.5.1 (அ) இன் பிரகாரம் வேலையினை ஆரம்பிக்க முன்னர் காணப்படுகின்ற நிதி தொடர்பான உறுதிப்படுத்தல் இல்லாமையினால் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டது. இதனால் கம்பனிக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பில் கணக்காய்விற்கு விபரிக்கப்படவில்லை. | நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க முன்னர் பெறுகை வழிகாட்டியின் நிபந்தனைகளை பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 48 அறை செயற்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளன மற்றும் 2021 நவம்பர் 10 ஆம் திகதி முன்னைய ஒப்பந்தகாரரான எம்/எஸ் சத்துடா வில்டொஸ்க்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. |

## 4.37 வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 302,945,489 | 297,904,848 | 475,443,700 | 373,132,570 | 5,040,642 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 234,419,965 | 283,394,104 | 804,229,379 | 747,144,004 | (48,974,138) | முனைப்பழியுள்ளது |
| **2020** | 151,658,790 | 242,682,525 | 738,781,158 | 767,636,391 | (91,023,735) | முனைப்பழியுள்ளது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிர்மாண ஒப்பந்த வருமானம் மற்றும் செலவினம் எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 23.17 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும் முறையை அடிப்படையாகக் கொண்டு | எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரகாரம் சேவைநாடுநரால் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த வருமானம் இனங்காணப்பட வேண்டும். | ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும் முறையின் அடிப்படையில் நிர்மாண வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் கம்பனியால் நிர்மாண வருமானம் இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்காணப்பட வேண்டிய போதிலும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் கம்பனியின் ஒப்பந்த வருமானமான முறையே ரூபா 221.95 மில்லியன், ரூபா 127.46 மில்லியன் மற்றும் ரூபா 72.40 மில்லியன் அதற்கிணங்க இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறக்கூடிய நிகரப் பெறுமதி (NRV) என்பவற்றில் குறைந்த பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட கம்பனியின் இருப்பு முறையே ரூபா 13.13 மில்லியன், ரூபா 13.63 மில்லியன் மற்றும் ரூபா 13.23 மில்லியனிற்கு கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்தன. | எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரகாரம் இருப்பு மதிப்பிடப்பட வேண்டும். | கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதி (NRV) என்பன ஒப்பிடப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகரப் பெறுமதியை (NRV) கருத்தில் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 2.26 (ஆ) பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட்ட நட்டங்கள் விரைவில் நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் 2012-2016 காலப்பகுதியில் கம்பனியால் நிறைவேற்றப்பட்ட தோல்வியடைந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 24.39 மில்லியன் தொகையான நட்டம் அவ்வாறு நட்டமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக | எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரகாரம் ஒப்பந்தம் தொடர்பான நட்டங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில், அத்தகைய 6 தோல்வியுற்ற ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 6.57 மில்லியன் தொகையான ஒப்பந்தங்கள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களில் நட்டங்களாக இனங்காணப்பட்டன. | நட்டங்களாக இனங்காணப்பட வேண்டிய ஏழு தோல்வியுற்ற ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 24.3 மில்லியன் தொகையான பணி நிதிக்கூற்றுக்களில் இன்னும் நட்டங்களாக இனங்காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டதன் விளைவாக மீளாய்வாண்டின் இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | | |
| (ஈ) | நாவல precast கொங்கிறீட் தொழிற்சாலை நீங்கலாக ஏனைய 7 தொழிற்சாலைகள் ரூபா 62.25 மில்லியனான மறைப் பெறுமதியை பங்களித்திருந்தன. விற்பனைகள் வீழ்ச்சியடைந்தமை, சந்தையை இலக்காகக் கொண்ட சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள் பயன்படுத்தப்படாமை மற்றும் முகாமைத்துவ செயற்திறனின்மைகள் போன்ற விடயங்கள் இந்த நட்டத்திற்கு பங்களித்திருந்தன. மேலும் மேற்படி பிரிவுகளிலிருந்து 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கம்பனி எதிர்பார்த்த வருமானம் முறையே ரூபா 184.78 மில்லியன் மற்றும் ரூபா 230.78 மில்லியனாக காணப்பட்டதுடன், உள்ளபடியான வருமானம் முறையே ரூபா 87.62 மில்லியன் மற்றும் ரூபா 14.26 மில்லியன் ஆக காணப்பட்டன. | இவ் வேலைத்தளங்கள் இலாபமீட்டும் அலகுகளிற்கு மாற்றப்பட வேண்டும். | உற்பத்திக்கான தேவை எதிர்பார்த்த அளவு காணப்படாதமை, உற்பத்திச் செலவுகள் அதிகரித்திருந்தமை, நாட்டில் நிலவும் பாதகமான சூழல்கள், சந்தையை முறையாக ஆய்வு செய்யாமல் வணிக தீர்மானங்கள் எடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் இந்நிலையைத் தவிர்க்குமாறு கம்பனிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில், கம்பனி அதிக மூலப்பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை அளவை அதிகரித்திருந்ததுடன் நாவல தொழிற்சாலையிலிருந்து ரூபா 18 மில்லியன் பங்களிப்பை அடைந்திருந்தது. ஆனால் ஹிங்குராங்கொட தொழிற்சாலை மூடப்பட்டதுடன் நேரடி பங்களிப்புடன் நான்கு தொழிற்சாலைகளின் மொத்த பங்களிப்பு ரூபா 2 மில்லியன் மாத்திரமேயாகும். |
| (உ) | கம்பனியினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பொது முகாமையாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அடிப்படையில் உயர் முகாமைத்துவ பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உயர் முகாமைத்துவ பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மூலம் மேற்கொள்ளப்பட | 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில், கம்பனி ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்திருந்த போதிலும் பொது முகாமையாளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | ல்லை. எனினும் அந்த பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | | வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறு செய்திருக்கவில்லை. | வில்லை. ஆனால் அந்த பதவிக்கான அங்கீகாரமின்றி நியமனம் மேற்கொள்ளப்பட்டது. |
| (ஊ) | ரூபா 13.90 மில்லியன் கிரயத்தில் முண்டிகல மடாலயத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2016 யூலை 20 ஆம் திகதி கம்பனியால் பெறப்பட்டிருந்ததுடன் 120 நாட்களினுள் ஒப்பந்தம் நிறைவு செயப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக மற்றும் நிதி செயன் முன்னேற்றம் முறையே 40 சதவீதம் மற்றும் 32 சதவீதம் ஆக காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட நட்டம் ரூபா 4.79 மில்லியன் ஆகும். | உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை நிறைவு செய்வதற்கும் விலைப்பட்டியல்கள் மூலம் பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவைநாடுநர் செயற்திட்டங்களை முறையாக கம்பனி முகாமை செய்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில், இந்த ஒப்பந்தத்தின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 40 சதவீதம் மற்றும் 32 சதவீதம் ஆக காணப்பட்டதுடன் இந்த ஒப்பந்தத்தால் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4.79 மில்லியனாகும். |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரயோகிக்கக்கூடிய விதிமுறைகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் ஆகியன கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**4.38 வரையறுக்கப்பட்ட எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனி**

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,025,132,493 | 1,963,502,425 | 917,045,617 | 673,635,244 | 61,630,069 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 2,188,280,130 | 2,112,017,496 | 1,010,640,643 | 712,221,497 | 76,262,634 | முனைப்பழியுள்ளது |
| **2020** | 2,096,768,814 | 2,056,791,802 | 1,169,442,522 | 843,207,995 | 39,977,011 | முனைப்பழியுள்ளது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 2,025.13 | 1,963.50 | 917.05 | 673.64 | 61.63 |
| 2019 | 2,188.28 | 2,112.02 | 1,010.64 | 712.22 | 76.26 |
| 2020 | 2,096.77 | 2,056.79 | 1,169.44 | 843.21 | 39.98 |


| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 1-2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன்பட்டோரிற்கு 50 சதவீதமும், 2-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன்பட்டோரிற்கு 75 சதவீதமும், 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோருக்கு 100 சதவீதமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூபா 63.25 மில்லியன், ரூபா 33.24 மில்லியன் மற்றும் ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட சதவீதங்களை இனங்காணும் | அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் ஐயக்கடன்களிற்காக ஏற்பாடு:கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பகுப்பாய்வு ரீதியாக, ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு எதிர்காலத்தில் மிகவும் யதார்த்தமான அடிப்படையில் ஒதுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறை பிரசசனைக்குரிய விடயமாக கணக்காய்வின் போது காணப்பட்டது. | | | |
| (ஆ) | கம்பனியின் வருமானத்தை இனங்காணும் கொள்கையின் பிரகாரம் கம்பனியின் வருமானம் நம்பகத்தன்மையுடையதாக அளவிடப்பட்ட தொடர்புபட்ட கிரயங்களை கழிப்பதன் மூலம் இனங்காணப்பட வேண்டிய போதிலும் நம்பகத்தன்மையுடைய சான்றுகளை கருத்தில் கொள்ளாமல் விலைப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக சேவைநாடுநர்களால் கொடுப்பனவுகள் மறுக்கப்பட்டதன் காரணமாக 2018, 2019, 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூபா 100.84 மில்லியன், ரூபா 71.10 மில்லியன் மற்றும் ரூபா 40.31 மில்லியன் மொத்த தொகை கம்பனியால் இழக்கப்பட்டிருந்தது. | சேவைநாடுநர்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை விதிமுறைகளுக்கு இணங்க, பாதுகாப்புப் பணியாளர்களை பணிக்கமர்த்துவதற்கான மேலதிக கட்டணம்/ தண்டப்பணங்களை குறைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவைநாடுநர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது, மேலதிகக் கட்டணம் போன்ற பாதகமான விதிமுறைகளை நீக்கி புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 முதல் 2020 வரையிலான விலைப்பட்டியல் பெறுமதிகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் மூலம் கம்பனி இனங்கண்டு குறைத்துள்ளது. |
| (இ) | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல், பாதுகாப்பு விசாரணைகள் மற்றும் ஏனைய விசாரணை சேவைகளை வழங்குதல் ஆகியவை கம்பனியின் பிரதான செயற்பாடுகளாகும். எனினும், பிரதான செயற்பாடுகளுக்கு கம்பனியின் பௌதீக மற்றும் நிதி இலக்குகளைக் குறிக்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. மேலும், கம்பனியின் பிரதான செயற்பாடுகளுக்கான செயலாற்றல் குறிகாட்டிகளும் மீளாய்வாண்டிற்காக உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கம்பனியின் செயலாற்றலை கணக்காய்வின் போது மதிப்பிட முடியவில்லை. | செயற்பாடுகளை அதிக செயற்திறனாக மேற்கொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயலாற்றல் அளவீட்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காதமை ஏற்றுக்கொள்ளப்படுகிறதுடன் அதை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் KPIs என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கம்பனி அதனது தலைமை அலுவலக கட்டிடத்தினை ரூபா 200 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிப்பதற்காக அத்திடியவில் அமைந்துள்ள 120 பேர்ச்சஸ் பரப்பளவிலான காணியொன்றை தாய்கம்பனியிடமிருந்து 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் ரூபா 16.52 மில்லியனிற்கு 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட போதிலும் இது அதனது எல்ஆர்டிசீ பரஸ்பர உதவி சங்கத்தால் உணவு | கம்பனி அதனது தலைமை அலுவலகத்தை நடாத்துவதற்கு அதற்குச் சொந்தமான கட்டிடத்தை கம்பனி கொண்டிருக்காததால் திட்டமிட்டவாறு நிர்மாண பணிகளை மேற்கொள்ள வேண்டும். | கம்பனியின் நிதி நம்பகத்தன்மை காரணமாக இந்த திட்டங்களை அமுல்ப்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் பூர்வாங்கப் பணிகளைத் தொடங்குவதற்காக 2022 ஆம் ஆண்டு நிறுவன பாதீட்டில் ஏறத்தாழ ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதனிடும் நிலையமொன்றாக தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. | | | து. |
| (உ) | 2017 இல் வணிக பல்வகைப்படுத்துதலுக்கான புதிய முயற்சியாக CCTV கமரா நிறுவுதல் செயற்திட்டத்தில் இருந்து ரூபா 75 மில்லியன் வருமானத்தை கம்பனி எதிர்பார்த்திருந்த போதிலும் உண்மையான வருமானம் ரூபா 8.5 மில்லியனாக இருந்ததுடன் 2018 இன் இறுதியில் தேறியலாபம் ரூபா 2.64 மில்லியனாக காணப்பட்டது. 2019 மற்றும் 2020 இல் வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை மேலும் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 20.93 மில்லியன் கிரயமான மிகுதி இருப்பு காணப்பட்டது. | புதிய செயற்திட்டங்கள் குறித்து முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னரே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு புதிய முகாமைத்துவம் இதுவரை சில தீர்மானங்களை எடுத்துள்ளது. இந்த பெறுகையின் போது ஏதேனும் முறைகேடுகள் நடந்துள்ளதா என்பதை விசாரிப்பதற்கு சிஐடிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. | 2020 அளவில் கம்பனி CCTV பிரிவில் மேற்கொள்வதற்கு எந்த வேலையையும் கொண்டிருக்கவில்லை, மீதமுள்ள இருப்பு வழக்கற்றுப் போகும் அபாயத்தில் உள்ளது. |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட தேறிய இலாபத்தை உள்ளவாறான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது 2018, 2019 மற்றும் 2020 இன் இறுதில் 54 சதவீதம், 160 சதவீதம் மற்றும் 31 சதவீதமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாடு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாடு கருவியொன்றாக பயன்படுத்தப்படல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் தயாரிக்கப்படும் பாதீட்டில் யதார்த்தமாக பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கம்பனியின் பாதீடானது கட்டுப்பாட்டு யுக்தியாக பயன்படுத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | கணக்காய்வு மூலம் நடாத்தப்பட்ட மாதிரி சோதனையின் போது விபைப்பட்டியலிடப்பட்ட சேவை மாற்றங்களின் எண்ணிக்கையை விட மாதத்தின் போது விலைப்பட்டியலிடப்பட்ட சேவை மாறுதல்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட சேவை மாற்றங்களின் எண்ணிக்கை என்பன உயர்வாக உள்ளது. உதாரணமாக ஆகஸ்ட் மாதத்தில் கம்பனி ரூபா 3.52 மில்லியனை செலுத்தியிருந்ததுடன் கம்பனி 6,008 மேலதிக வேலை நாட்களுக்கு அதே மாதத்தில் வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாக ரூபா 6.89 மில்லியன் தொகையை விலைப்பட்டியலிட்டிருந்தது. | விலைப்பட்டியல்கள் தயாரிக்கப்படும் நேரத்தில் முறையாக சரிபார்க்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிலைமையை குறைக்கும் பொருட்டு விலைப்பட்டியல்களை தயாரிப்பதற்கு சேவை அறிக்கைகளின் பிரகாரம் ஒப்பீடு செய்வதன் மூலம் சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைமையை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 4.39 பீசீசீ லங்கா லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 266,637,729 | 248,153,342 | 8,431,359,113 | 262,156,521 | 18,484,387 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 263,478,393 | 232,820,104 | 8,472,091,580 | 272,886,241 | 30,658,289 | முனைப்பழியுள்ளது |
| **2020** | 316,189,149 | 72,693,881 | 8,526,349,986 | 286,277,607 | 43,600,867 | முனைப்பழியுள்ளது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 266.64 | 248.15 | 8,431.36 | 262.16 | 18.48 |
| 2019 | 263.48 | 232.82 | 8,472.09 | 272.89 | 30.66 |
| 2020 | 316.19 | 72.69 | 8,526.35 | 286.28 | 43.60 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான கொள்வனவு முற்பண மீதி ரூபா 2,503,673 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 11 வருடங்களை விட பழைய ரூபா 1,420,474 கூட்டுமொத்தமான 32 மீதிகள் காணப்பட்ட போதிலும் இந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 1.420,474.00 முற்பண மீதியை தீர்ப்பனவு செய்வதற்காக உரிய நிறுவனங்களிற்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | அந்தக் கடிதங்களுக்கான பதில்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் குறித்த மீதி தொடர்பாக மேலதிக நடவடிக்கையை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது . |


| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த களஞ்சியங்களிலிருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 14,968,317 தொகையானதுடன் அவற்றுள் ரூபா 2,834,261 மீதி 10 வருடங்களிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டது. இந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு கம்பனி போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | களஞ்சியங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 2,834,261.00 மீதி 10 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளதுடன் அந்த நிறுவனங்களில் பெரும்பாலானவை அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களாகும். மேலும், அந்த நிறுவனங்களுக்கு அம் மீதிகளின் தீர்ப்பனவிற்காக பலமுறை நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டு, அந்த பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்ட நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. | அந்த நிறுவனங்கள் இன்னும் அதற்கு பதிலளித்திருக்காதது டன் நினைவூட்டல்கள் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளன. |
| (இ) | 1985, 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளின் போது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 58,265,037 தொகையான மற்றும் 2003 ஆம் ஆண்டில் களுபோவிற்றியான ரீ பக்ரறி லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்ட ரூபா 10,000,000 தொகையான கடன்களிற்காக மீளாய்வாண்டு அளவில் செலுத்த வேண்டிய வட்டி முறையே 53,153,819 மற்றும் ரூபா 48,382,429 ஆக காணப்பட்டன. வருடாந்தம் 6,747,521 தொகையான செலுத்த வேண்டிய வட்டிக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 169,801,285 தொகையான மிகுதிக் கடன் தொகை அது தொடர்பான வட்டித் தொகையை தீர்ப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் மற்றும் அது தொடர்பான வட்டியை தீர்ப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள காணிக்காக பெறவேண்டிய நட்டஈட்டில் இருந்து தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கும் களுபோவிற்றியான ரீ பக்றரி லிமிட்டட்டிற்கும் செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் அது தொடர்பான வட்டியை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. களுபோவிற்றியான ரீ பக்றரி லிமிட்டட்டிற்கு செலுத்த வேண்டிய கடனை தவணை முறையில் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும் குறித்த கம்பனி அதற்கு இணங்கியிருக்கவில்லை. | நீதி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள காணியின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றதுடன் நட்டஈடு கிடைத்தவுடன் குறித்த நிலுவை பணத்தை விரைவில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 14 வருடங்களுக்கு மேலாக செலுத்த வேண்டிய ரூபா 58,296,534 கூட்டுமொத்தமான வீதவரி, புரள்வு வரி, பாதுகாப்பு வரி, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, பெறுமதி சேர் வரி மீதிகளையும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 12,976,524 கூட்டுமொத்தமான கடன்கொடுத்தோர் மீதிகளையும் தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | நீண்டகாலமாக தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகளை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிக்காக பெறப்பட்ட நட்டஈட்டில் இருந்து செலுத்த வேண்டிய அனைத்து கடன்கொடுத்தோர் மீதிகள், வீத வரி மற்றும் ஏனைய வரிகளை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நீதி அமைச்சு கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வீத வரியை எமது கம்பனியின் சார்பாக செலுத்தியுள்ளது. |
| (உ) | கட்டிடத்தினை வாடகைக்கு வழங்கும் போது பெற்றுக் கொள்ளப்பட்ட ஆரம்ப வைப்பான 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 1,949,142 தொகையான வைப்புக்களை விடுவிப்பதற்கு அல்லது உரிய வைப்புக்கள் கோரப்படாது என்பதற்கான உறுதிப்படுத்தலை தொடர்ந்து கம்பனியின் வருமானத்திற்கு அதனை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கை கிடைக்காத விடயத்தில் இதனை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 1,949,142 தொகையான வைப்பு அந்த நிறுவனங்களால் கோரப்படாது என்பதை உறுதிசெய்த பின்னர் சம்பந்தப்பட்ட வைப்புக்களை கம்பனியின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு அனுப்பி அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | கம்பனியினால் தேங்காய் எண்ணெய் வழங்குநர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சிறிய தாங்கிகள் சிலவற்றில் களஞ்சியப்படுத்தி வடிகட்டலுக்கு உள்ளாக்கப்பட்ட வெள்ளைத் தேங்காய் எண்ணெய்யாக போத்தலில் அடைத்தல் இடம்பெறும் (Cooks Joy) எண்ணெய் மாத்திரம் சுத்திகரித்தல் நடைமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றது. மீளாய்வாண்டின் போது இவ்வாறு வெள்ளை தேங்காய் எண்ணெய் மற்றும் Cooks Joy தேங்காய் | ஆகக்கூடியளவு நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வருமானத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பீசீசீ லங்கா லிமிட்டட்டில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு சட்டரீதியான தடைகள் இருப்பதால் உற்பத்தி நடவடிக்கைகள் அவ்வாறான தற்போதைய நிலைமையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. | சுத்திகரிப்பு பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு அதிக கிரயம் ஏற்படும் என்பதால் நீதி அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ள காணிக்காக பெறப்பட்ட நட்டஈட்டைப் பயன்படுத்தி, நவீனமயமாக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம் மற்றும் சுத்திகரிப்புப் பிரிவை ஏனைய இடங்களில் நிர்மாணிப்பது குறித்து பணிப்பாளர் சபையின் கவனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | எண்ணெய் 311.50 மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் வருமானம் ரூபா 193,856,378 ஆகும். தற்போது கம்பனியால் மட்டுப்படுத்தப்பட்ட சில வழங்குனர்களிடமிருந்து தேங்காய் எண்ணெய் பெற்றுக் கொள்ளப்பட்டு போத்தலில் அடைத்தல் மாத்திரம் இடம்பெறுகின்றது. எனினும் ஆரம்ப கட்டமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி முதல் விற்பனை வரை ஒரு பரந்த செயன்முறையை அமுல்ப்படுத்துவதில் கம்பனியின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | செலுத்தப்பட்டுள்ளது. |
| (எ) | பிசீசீ கம்பனிக்கு உரிய 12 ஏக்கர் 3 றூட் 8.77 பேர்ச் பரப்பளவான காணி 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 8,195 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 17 ஆந் திகதிய 15/1874/702/010-VII ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலமும் 2016 ஏப்ரல் 20 ஆந் திகதிய 16/0597/731/009-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்தக் காணியின் 6 ஏக்கர் அளவான பகுதி கொழும்பு நீதிமன்ற தொகுதியை நிர்மாணிப்பதற்காக நீதிமன்ற அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க காணிகளை சுவீகரிக்கும் செயன்முறையின் பிரகாரம் காணிகளை கையளிக்கும் மற்றும் நட்டஈட்டை பெற்றுக் கொள்ளும் பணிகள் இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நட்டஈட்டின் அறவீட்டினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொழும்பு நீதிமன்ற வளாகத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள 06 ஏக்கர் காணிக்கான நட்டஈட்டைப் பெற்றுத் தருவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுப்பார்.<br><br>குறித்த 06 ஏக்கர் காணிக்கான மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கான நோக்கம், பிரதேச செயலாளரினால் விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. | குறித்த மதிப்பீட்டுப் பணி நடைபெற்று வருகிறது. |

## 4.40 லங்கா பொஸ்பேட் லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 564,935,103 | 536,271,853 | 891,637,547 | 117,077,974 | 28,663,250 | முனைப்பழியற்றது |
| **2019** | 546,327,194 | 532,847,032 | 948,648,519 | 117,270,430 | 13,480,162 | முனைப்பழியற்றது |
| **2020** | 780,000,404 | 629,417,936 | 1,099,694,171 | 155,821,863 | 150,582,468 | முனைப்பழியற்றது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 564.94 | 536.27 | 891.64 | 117.08 | 28.66 |
| 2019 | 546.33 | 532.85 | 948.65 | 117.27 | 13.48 |
| 2020 | 780.00 | 629.42 | 1,099.69 | 155.82 | 150.58 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 71,447,853 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியினுள் வாரியபொல தெங்கு உர செயற்திட்டத்தில் 3 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும், எப்பாவல பொஸ்பேட் கம்பனி 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் | நீண்டகாலமாக காணப்படும் செலவு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் குறித்த கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். | குத்தகை அடிப்படையில் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசித்துள்ள வாடிக்கையாளரால் அனைத்து விற்பனைப் பணத்தையும் பெற்ற பின்னர் அமுல்ப்படுத்துவதை கட்டாயமாக்குவதுடன் இதே போன்ற | ரூபா 1.4 மில்லியன் தொகையை படிப்படியாக அறவிடுவதற்கும், கொடுப்பனவுகளை மேற்கொள்வதை தவிர்க்கும் வாடிக்கையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும், நிலுவையாகவுள்ள ரூபா 8.7 மில்லியன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்கொண்டுவரப்படும் முறையே ரூபா 1,487,567 மற்றும் ரூபா 10,100,566 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் காணப்பட்டதுடன், இந்த கடனபட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு கம்பனியால் முடியாதிருந்தது. இந்த கடன்பட்டோர் மீதியில் பல வருடங்களாக காணப்படுகின்ற ரூபா 550,000 தொகையான வரவு மீதிகளும் 2005 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 2,475,958 தொகையான காசு விற்பனைகள் தொடர்பான மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த செலவு மீதிகள் மற்றும் மேற்குறித்த காசு விற்பனைகள் தொடர்பிலான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | | நற்பெயருக்கு வங்கி பிணை அல்லது பண வைப்பை வழங்குதல். | தொகையான கடன்பட்டோர் பெறுமதியை பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் கலந்துரையாடி பல கட்டங்களின் கீழ் கடன்பட்டோர் பெறுமதிகளின் தன்மை மற்றும் அளவைக் கருத்தில் கொண்டு கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட தெங்கு உர செயற்திட்டத்திற்காக ரூபா 21,226,633 ஆன மூலதன செலவினமொன்றினை மேற்கொண்டு வருடாந்தம் ரூபா 72 மில்லியன் தெங்கு உர வருமானம், ரூபா 10 மில்லியனான தேறிய இலாபம் மற்றும் வருடாந்த வருமானத்தை 10 | ரூபா 21 மில்லியனுக்கும் அதிகமான மூலதனச் செலவில் ஆரம்பிக்கப்பட்ட தெங்கு உரச் செயற்திட்டத்தை செயற்படும் மற்றும் பயனுள்ள நிலைக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். | கம்பனியை ஒரு செயற்படும் மற்றும் பயனுள்ள நிலைக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்க உரக் கம்பனி மூலம் ERP, யூரியா மற்றும் MOP போன்றவற்றை சலுகை விலையில் பெற்றுக்கொள்ளல். | தெங்கு உரக் கலவைகளுக்குத் தேவையான யூரியா, MOP ஐப் பெறுவதில் உள்ள சிரமம் காரணமாக இந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலும், தெங்கு உர சந்தையிலிருந்து 10 சதவீதமான சந்தை பங்கினைக் கைப்பற்றல் நீண்ட கால நோக்கமாக காணப்பட்டது. எனினும் 2020 மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை செயற்திட்டத்திற்கு மூலப்பொருட்கள் வழங்கப்படாததன் காரணமாக தெங்கு உர உற்பத்தி இடம்பெற்றிருக்கவில்லை. | | | |
| (இ) | 2011 ஆம் ஆண்டின் போது சீன தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 6 Roller (TGM 160) Mill அரைக்கும் இயந்திரத்திற்கு தேவையான உதிரிப்பாகங்களை வழங்கும் பொருட்டு ரூபா 43,435,115 பெறுமதியுடைய புதிய 6 Roller (TGM 160) Mill அரைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் சீனாவில் உள்ள மற்றொரு தனியார் நிறுவனத்திடம் இருந்து 2014 இல் கொள்வனவு செய்யப்பட்ட புதிய Mill இயந்திரத்தின் ரூபா 11,513,434 பெறுமதியான basal part, 2014-2016 | இயந்திர உதிரிபாகங்களை பொருத்தும் இயலுமை தொடர்பில் கருத்தில் கொள்ளாமல் உரிய இயந்திர உதிரிபாகங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், உரிய இயந்திர பாகங்களை பொருத்தி விரைவில் செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். | உண்மையான தேவைப்பாடு மற்றும் சந்தை தேவைப்பாடுகளின் அடிப்படையில் மாத்திரமே கொள்வனவு செய்தல் அல்லது நிறுவுதல் மற்றும் சரியான சாத்தியவள ஆய்வு செய்த பின்னர் இயந்திரங்களின் அனைத்து கொள்வனவுகளையும் மேற்கொள்ளல். | பொஸ்பேட் கம்பனி ஊழியர்களின் பங்களிப்புடன் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் ஏறத்தாழ 85% இல் நிறுவல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதியில் Mill இயந்திரங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14,290,237 பெறுமதியான உதிரிப்பாகங்கள் மற்றும் இந்த Mill இயந்திரத்தை நிறுவுவதற்கு நடைமுறை வேலையாக காட்டப்பட்டுள்ள ரூபா 7,440,000 தொகையான நிர்மாணப் பணி என்பன 2021 யூலை 30 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாமல் இருந்தன. | | | |
| (ஈ) | அதிகரித்து வரும் உரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உர இறக்குமதி செலவினத்தைக் குறைப்பதற்கும் உரங்களை வழங்கும் நோக்கத்துடன் ரூபா 34,654,178 கிரயத்தில் பயன்படுத்திய Crusher இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த இயந்திரத்தின் எந்தப் பகுதியிலும் இயந்திரத்தின் வகை, மாதிரி, உற்பத்தி கம்பனி அல்லது உற்பத்தி செய்யும் நாடு பற்றிய தகவல்கள் உள்ளடங்கியிருக்கவில்லை என்று முன்னாள் உற்பத்தி முகாமையாளர் புகைப்பட ஆதாரங்களுடன் பொது முகாமையாளருக்கு | ரூபா 34 மில்லியனுக்கும் அதிகமான செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இயந்திரத்தை பயனுள்ள உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். | உண்மையான தேவைப்பாடு மற்றும் சந்தை தேவைப்பாடுகளின் அடிப்படையில் மாத்திரமே கொள்வனவு செய்தல் அல்லது நிறுவுதல் மற்றும் சரியான சாத்தியவள ஆய்வு செய்த பின்னர் இயந்திரங்களின் அனைத்து கொள்வனவுகளையும் மேற்கொள்ளல். | இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிக்கும் பொருட்டு வடமத்திய மாகாண சபையின் இயந்திரப் பொறியியலாளர்களின் பங்களிப்புடன் அறிக்கையொன்றைக் கோருவதன் மூலம் மூலப்பொருட்களின் உற்பத்திக்கு இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கும் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான புதுப்பித்தல்களைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |


| | | | | |
|---|---|---|---|---|
| | எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்தார். இயந்திரம் நிறுவப்பட்ட நாளிலிருந்து 2021 யூலை 30 வரை எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், புதிய crusher இயந்திரத்தை மாற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தை கொள்வனவு செய்ததன் மூலம் பொஸ்பேட் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தையும் உரிய இயந்திரம் பயன்படுத்தப்படாதமைக்கு பொறுப்பனவாகளையும் கம்பனியின் அதிகாரிகள் இனங்கண்டிருக்காததுடன் அத்தகைய நபர்களிற்கு எதிராக நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. மேலும் 2014 ஆம் ஆண்டு முதல் இந்த இயந்திரம் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டுள்ளமையால் அழிவடைந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (உ) | 2019 சனவரி 07 முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு ஏலத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட டபிள் கெப் வண்டி 2021 நவம்பர் 10 வரையிலும் ஏலத்தில் விடப்பட்டிருக்கவில்லை அல்லது ஓட்டத்தில் | மோட்டார் வாகனம் பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதற்கு அல்லது பொருத்தமான அங்கீகாரங்களுடன் மோட்டார் வாகனத்தை கைதவிர்ப்பு செய்வதற்கு | மீண்டும் பத்திரிகை விளம்பரத்தை பிரசுரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இந்த மோட்டார் வாகனம் ஏலத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட | அண்மையில் புதிய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருந்ததுடன் பத்திரிகை விளம்பரம் ஒன்றை பிரசுரிப்பதற்கும், அண்மைய எதிர்வரும் காலங்களில் மோட்டார் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போதிலும், மதிப்பீட்டு அறிக்கையை விட கூறுவிலை கோரல்கள் மிகக் குறைவாக இருந்ததால் மீள ஏலம் விடுவதற்கு முகாமைத்துவத்தால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | வாகனத்தை ஏலம் விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 3,808,331 தொகையான காலாவதியான இருப்பினை அகற்றுவதற்காக கணக்காய்வுத் திகதி வரையிலும் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | நிறுவனத்திற்குச் சொந்தமான காலாவதியான பழைய பொருட்களை வருடாந்த குழு மூலம் அகற்றுவாற்கு நடவடிக்கை எடுத்தல். | 03 Roller Mill இயந்திரம் தொடர்பான இயந்திர பாகங்களை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமைச்சின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையிலும் புத்தக பெறுமதியின் அடிப்படையில் இந்த இயந்திர பாகங்களை சம்பந்தப்பட்ட கம்பனிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | பல வருடங்களாக அகற்றப்பட்ட பழைய இரும்புகள் மற்றும் ஏனைய இயந்திர பாகங்கள் தொழிற்சாலை வளாகத்தில் பாதுகாப்பற்ற இடங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் | அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பழைய உலோகங்களை வருடாந்தம் ஏலம் விடுவதற்கும் அல்லது அவற்றின் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு முறையான செய்தித்தாள் விளம்பரத்தை பிரசுரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது நிறுவனத்தில் எஞ்சியிருக்கும் பழைய உலோகத்தை பத்திரிகை விளம்பரம் மூலம் தெரிவுசெய்யப்பட்ட கொள்வனவாளர் ஒருவரிற்கு விற்பனை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | லை. | | | ளன. |
| (ஏ) | கம்பனியால் ஆரம்ப மட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஒரு தொழிலாளர் பதவியும், நாளாந்த அடிப்படையில் 29 ஊழியர்களும், தோட்ட உதவியாளர் பதவிகளில் 03 பேரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி நியமனங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. | பொஸ்பேட் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், பொஸ்பேட் உற்பத்தியை தொடர்ந்து பேணுவதற்கும் 29 ஊழியர்களின் சேவை நாளாந்தக் கொடுப்பனவின் அடிப்படையில் அவ்வப்போது பெறப்பட்டது. ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இணையாக துப்புரவு நடவடிக்கைகள் அதிகரித்ததன் காரணமாக துப்புரவு சேவைகளுக்காக ஒரு ஊழியர் இணைக்கப்பட்டுள்ளார். உற்பத்திப் பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் சில நோய்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களின் போது மருத்துவப் பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்களை இலகுவான கடமைகளில் அமர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தோட்டப் பிரிவில் ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்படுதல் தொடர்பாக இந்த நிலைமைகள் சாதாரணமாகத் தோன்றின. | எதிர்காலத்தில் பதவியணியினரை திருத்தம் செய்வதன் மூலம் சராசரி ஊழியர் மட்டத்தை பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

## 4.41 வரையறுக்கப்பட்ட லங்கா மினரல் சான்ட்ஸ் கம்பனி

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2018** | 1,665,267,796 | 1,043,538,000 | 3,945,079,381 | 933,069,942 | 621,729,796 | பாதகமானது |
| **2019** | 4,045,059,827 | 1,767,313,777 | 5,294,501,665 | 1,940,208,932 | 2,277,746,050 | முனைப்பழியுள்ளது |
| **2020** | 1,009,819,732 | 1,060,617,060 | 5,421,813,644 | 2,034,453,482 | (50,797,328) | முனைப்பழியுள்ளது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------------------- | ----------------------- | ----------------------- | ----------------------- |
| (அ) | 2011 ஜனவரி 09 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனியினால் ரூபா 500 மில்லியன் தொகையொன்று மட்பாண்ட கூட்டுத்தாபன ஊழியர் நட்டஈடு வழங்குவதற்காக அரச மூல வளங்கல் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு 2012 ஜனவரி 10 திகதி வழங்கப்பட்டிருந்தது. | கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு தற்போது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதுடன் இதனை தீர்க்கும் பொருட்டு எதிர்காலத்தில் நிறுவனத்தினால் பொது திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய பங்கிலாபத்திற்காக ஆண்டொன்றிற்கு ரூபா 50 மில்லியன் தொகை | 2022.01.25 ஆம் திகதிய பிஈடி1/எல்எம்எஸ்எல்/03/1 1(i) ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நட்டத்தை பதிவழிப்பதன் கீழ் இந்தத் தொகையை படிப்படியாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டின் போது இந்த கடன் தொகைக்காக ரூபா 103,484,290 இற்கான ஐயக்கடன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 517,421,448 தொகையான கடன் தொகை மற்றும் வட்டி 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | வீதம் பங்கிலாபத்தை ஈடுசெய்வதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீக்குவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியது. அதன் பிரகாரம் இது எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2012 முதல் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன்களில் ரூபா 25,000,000 தொகை மற்றும் ரூபா 5,000,000 தொகையினை அறவீடு செய்வதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் போதியளவு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிட இயலாதமையை வரிசை அமைச்சு மற்றும் பணிப்பாளர் சபை அறிந்திருக்கிறது. எதிர்காலத்தில் இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பில் உரிய தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய தரப்பினரின் கவனத்தை ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 25 மில்லியன் தொகைக்கு பொருத்தமாக காணி ஒன்றை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய 50 மில்லியன் தொடர்பில் சாத்தியமான விருப்ப நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) | 2015 யூலை 10 திகதிய 02/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சிதைவடந்துள்ள மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த கம்பனிக்கு சொந்தமான 08 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அப்புறப்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் கம்பனியின் பிரதான உற்பத்தியான இல்மனைட் முழுமையாகவும் ஏனைய பிரதான உற்பத்திகளின் 49 முதல் 70 சதவீதம் வரையிலான அளவு கம்பனியின் பகுதியளவு உற்பத்தியான non-magnetic heavy minerals இன் 39,775 மெற்றிக் தொன் இலங்கையின் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த கம்பனி வரையறுக்கப்பட்ட மினரல் சான்ட்ஸ் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கனிமத்தினை மேலும் செயன்முறைக்கு உட்படுத்தும் மூலப்பொருளாக பெறுமதி சேர்க்கப்படாமல் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. | உச்ச போட்டியினுள் உயர் விலையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கனிம பொருட்களுக்கான பெறுமதி சேர்க்கும் நடைமுறையொன்று தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | தற்போதைக்கு உப தயாரிப்புகளை விற்பனை செய்வதில்லை என்ற கொள்கை தீர்மானத்தை கம்பனி எடுத்துள்ளது. | தொழில்துறை அமைச்சின் ஈடுபாட்டுடன், பெறுமதி சேர்த்தல் செயன்முறைக்கு EOIs அழைக்கப்பட்டுள்ளனர். இதனை நிறுவுவதற்கு திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் 200 ஏக்கர் வரையான காணியை வழங்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட குழுவின் ஊடாக RFPs ஐ அழைப்பதற்கு கைத்தொழில் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. |
| (உ) | இல்மனைட் 85,000 மெட்ரிக் தொண்களுக்கான கேள்விக்காக 04 விலைமனுக்கள் கிடைத்திருந்ததுடன், 01 மெட்ரிக் தொண் இற்காக ஐ.அ.டொலர் 165.20 ஆன கூடிய விலைமனுவை முறையான பொறுப்புக்களுடனான விலைமனு பாதுகாப்பு முறியொன்று காணப்படவில்லை என குறிப்பிட்டும், ஐ.அ.டொலர் 163 ஆன இரண்டாவது விலைமனுவிற்கு 5,000 | பெறுகை வழிகாட்டல் கோவையை கடைபிடித்து உச்ச மட்ட போட்டி அடிப்படையில் கூடிய விலை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் நிறுவனத்திற்கு அனுகூலமான முறையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | கனிய மணல் விற்பனையில் தற்போதுள்ள பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றுவதால் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக புதிய விற்பனை முறைமையை உருவாக்கும் நோக்கத்திற்காக, பொது திறைசேரியானது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குழுவொன்றை நியமித்துள்ளது. அந்தக் குழு, தற்போதுள்ள நடைமுறையை ஆய்வு | அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் உருவாக்கப்பட்ட புதிய முறைமையின் பிரகாரம் கனிய மணல் விற்பனைக்கான ஆரம்ப செயற்திட்டம் பொது திறசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்டது. அதில், சர்வதேச சந்தையுடன் ஒப்பிடும் போது அதிக விலை கிடைத்துடன் நிர்ணயிக்கப்பட்ட காலப் |

மெட்ரிக் தொண்கள் மாத்திரம் என குறிப்பிட்டும் இரத்துச் செய்திருந்தது. கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும் ஐ.அ.டொலர் 147 இற்கு இணங்கியிருந்த மூன்றாவது விலைமனுதாரர்களுக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கூடிய விலை சமர்ப்பித்திருந்த விலைமனுதாரருக்கு கேள்வியினை வழங்குவதற்கு இணங்கியிருக்காமையால் மெட்ரிக் தொன் 01 இற்கு ஐ.அ.டொலர் 18.20 வீதம் 85,000 மெட்ரிக் தொண்களுக்காக ஐ.அ.டொலர் 1,547,000 தொகையான நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. ஐ.அ.டொலர் 147 வீதம் 85,000 மெட்ரிக் தொண்கள் 130 நாட்களுக்குள் விடுவிப்பதற்கு இணங்கி 2020 ஒக்தோபர் 28 இல் இல்மனைட் விற்பனை செய்வதற்கான கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் ஐ.அ.டொலர் 3,675,000 செலுத்தி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 5,032.86 மெட்ரிக் தொண்களும் 2021 மார்ச் இறுதியளவில் மேலும் ஐ.அ.டொலர் 2,940,000 செலுத்தி 30,000 மெட்ரிக் தொண்களும் மாத்திரம் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. ஐ.அ.டொலர் 5,880,000 தொகையான மீதி 2021 மார்ச் இறுதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்

செய்து புதிய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறதுடன் புதிய முறைமையின் கீழ் சோதனை ஒன்றாக 2021 ஆம் ஆண்டில் ஒரு விற்பனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெறப்பட்ட நடைமுறை அனுபவத்தைக் கொண்டு உரிய குழுவினால் முறைமையில் பொருத்தமான மாற்றங்களைச் செய்து, கைத்தொழில் அமைச்சின் ஊடாக பொதுத் திறைசேரி மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சனை தவிர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பகுதிக்குள் கேள்வி வழங்கல் பூர்த்தி செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட குழுவினால் உருவாக்கப்படும் புதிய விற்பனை முறைமையில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றதுடன், அந்த முறைமைக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் புதிய விற்பனை முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| | லை. | | | |
| (ஊ) | 2020 ஆண்டின் போது கம்பனி எதிர்பார்த்த மொத்த கனிய விற்பனை 113,996 மெட்ரிக் தொண்கள் ஆக காணப்பட்டதுடன் அவற்றின் விற்பனை பெறுமதி ரூபா 4,660,524,000 தொகையான போதிலும் உள்ளபடியான விற்பனை தொகை 14,955 மெட்ரிக் தொண்களாக காணப்பட்டதுடன் அவற்றின் விற்பனைப் பெறுமதி ரூபா 696,597,134 ஆகும். சர்வதேச போட்டி கேள்வியின் கீழ் முன்வரக்கூடிய கொள்வனவாளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை, பல்வேறு காரணங்களினால் கேள்விகள் இரத்துச் செய்யப்படுதல், ஒரே தடவையில் பாரிய இருப்பொன்றினை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற காரணங்களினால் இவ்வாறு எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. இவ்வாறு மீளாய்வாண்டின் போது விற்பனகள் இடம்பெறாமையால் நிறுவனத்தின் நிதி நிலைமை மோசமடைந்து திரவத்தன்மை குறைந்ததனால் நாளாந்த தேவைகளுக்காக பல சந்தர்ப்பங்களில் ரூபா 450,000,000 தொகையான 6 நிலையான வைப்புக்கள் முதிர்வடைவதற்கு முன்னர் முன்கூட்டியே | வருமானத்தை அதிகரிப்பதற்கும், புதிய கொள்வனவாளர்களை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் கேள்வி நடைமுறையை முறையாக பின்பற்றி இரத்துச்செய்தல்களை தடுப்பதற்கும் கம்பனி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | தற்போதுள்ள முறைமைக்கான பரிந்துரைகளை மேற்கொள்வதன் மூலம் விற்பனை முறையை மாற்றுவதற்கு அமைச்சரவையால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து அவை தொடர்பாக அமைச்சரவையால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவினால் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் விலைமனுக்களை பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட புதிய விற்பனை முறைமையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் கனிம உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கேள்வி கோரப்படுகின்றதுடன் கேள்விக் குழு அல்லது அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் கேள்விகளை வழங்குவது மற்றும் இரத்து செய்வது தீர்மானிக்கப்படுகிறது. தொடர்புடைய ஆண்டின் விற்பனை பாதீடு வருடாந்த உற்பத்தி மதிப்பீட்டின் பிரகாரம் தயாரிக்கப்படுகிறதுடன் பெரும்பாலும் உண்மையான உற்பத்தி மதிப்பிடப்பட்ட | உற்பத்தி பொறிமுறையை நாளதுவரையாக்குவதற்கும் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய முறைமையின் பிரகாரம் கொள்வனவாளர்கள் தமது வருமான நிலைக்கு ஏற்ப விலைமனுக்களை சமர்ப்பித்து தேவையான உற்பத்திக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக உள்ளது. அதன் பிரகாரம் கொள்வனவாளர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணம் மீளப்பெறப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 7,573,770 எதிர்பார்த்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்திருந்தது டன், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை எதிர்கொள்ளப்பட்டதால் எதிர்பார்த்த விற்பனை இடம்பெற்றிருக்காததுடன் இருப்புக்கள் அகற்றப்படாமையால் களஞ்சிய வசதிகள் போதியளவாக காணப்படாமை மற்றும் இருப்புப் பாதுகாப்பு பலவீனமடைதல் போன்ற பல்வேறு சிக்கல்களுக்கு கம்பனி முகம் கொடுத்திருந்தது. | | உற்பத்தியை விட குறைவாக இருக்கும். 2020 ஆம் ஆண்டில், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மெட்ரிக் தொண் உற்பத்திகள் விற்பனைக்காக வழங்கப்பட்டன, அதில் 89,450 மெட்ரிக் தொண் விற்பனை செய்யப்பட்டது. இதன் விற்பனை பெறுமதி ஐ.அ.டொலர் 14.814 (இலங்கை ரூபாவில் 2.7 பில்லியன்) ஆக காணப்பட்டது. கொவிட் தொற்றுநோயை எதிர்கொண்டு, உயர் முகாமைத்துவம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் இருப்புக்களை மீளப்பெறுவதற்கும் நீடிப்பை வழங்கியது, அதன் பிரகாரம் பணம் செலுத்துவதிலும் இருப்புக்களை அகற்றுவதிலும் தாமதம் ஏற்பட்டது. புதிய விற்பனை முறைமையின் பிரகாரம் கொள்வனவாளர்களிற்கு 50 மெட்ரிக் தொண் முதல் 5000 மெட்ரிக் தொண் வரை தேவையான அளவின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (எ) | மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு சொந்தமான இல்மனைட்டின் ஆரம்ப இருப்பு மற்றும் ஆண்டின் போதான உற்பத்தி முறையே 77,247 மெட்ரிக் தொண்கள் மற்றும் 15,419 மெட்ரிக் தொண்களாக காணப்பட்டதுடன் அவற்றில் சனவரி மாதத்தில் 5,436 மெட்ரிக் தொண்கள் திசெம்பர் | இருப்புகளை விற்பனை செய்தவுடன் அவற்றை அகற்றிக் கொள்ளும் படி வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதுடன், தாமத காலம் தொடர்பாக கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய விற்பனை முறைமையினுள் 40 நாட்களுக்கு ஒருமுறை இருக்கும் இருப்புக்களுக்கு வரையறுக்கப்பட்ட விற்பனை கேள்விகளை கோருவதற்கும் 3 நாட்களான குறுகிய காலப்பகுதிக்குள் கேள்விகளை திறந்து கேள்விகளை வழங்குவதற்கும், | புதிய விற்பனை முறைமையை உருவாக்கும் போது இந்த விடயமும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது , அதன்படி, இப் பிரச்சனை புதிய முறைமைக்குள் தீர்க்கப்படும். |

மாதத்தில் 5,053 மெட்ரிக் தொண்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. கம்பனி 2020 ஒக்தோபர் மாதத்தில் 85,000 மெட்ரிக் தொண்களை விற்பனை செய்திருந்த போதிலும் உரிய முறையில் பணம் செலுத்தி கொள்வனவாளரினால் அவை அகற்றப்பட்டிருக்காதமை யால் 60,000 மெட்ரிக் தொண் இல்மனைட் களஞ்சியப்படுத்தக் கூடிய இரண்டு களஞ்சியங்களின் மொத்தக் கொள்ளளவினை இது மிகைத்திருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டு சனவரி முதல் மே வரை கணிசமான எண்ணிக்கையான நாட்கள் இல்மனைட் உற்பத்தி இடைநிறுத்தப்பட்டிருந்தது டன், 2020 யூன் 01 முதல் 2021 மார்ச் 18 வரை Block B இயந்திர அறையின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தமையா ல் Block C உட்பட ஏனைய இயந்திர அறைகள் போலவே அனைத்து வளங்களும் அக்காலம் வரை விளைவற்று காணப்பட்டது.

உற்பத்திகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Block B இல் உள்ள இயந்திரத்தின் உற்பத்தி 2020 யூன் 01 முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. Block C இயந்திரத்தில் ஈரமான இல்மனைட்டை உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் Block C இயந்திரத்தில் உலர்த்தப்பட்ட இல்மனைட்டை சேமிப்பதற்கான இடவசதியின் பற்றாக்குறையே உற்பத்தி நிறுத்தப்படுவதற்கு முக்கிய காரணமாகும். ஏற்கனவே, இல்மனைட் களஞ்சியத்தில் அதன் மொத்த கொள்ளளவை விட அதிகமாக சேமித்து வைக்கப்பட்டிருந்தது. கொள்வனவாளர் 2020 திசெம்பர் முதல் செயற்படும் வகையில் இணங்கியதால் இல்மனைட் விற்பனையின் 85000 மெட்ரிக் தொண் கையிருப்பை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததால். Block B இயந்திரத்தின் உற்பத்தி 2021.03.12 இல் உலர்ந்த மணல் களஞ்சியத்தின் இட வசதியுடன் மீண்டும் தொடங்கப்பட்டது. அதன் பிரகாரம் Block C இயந்திரத்தின் உற்பத்தி 2021 ஏப்ரலில் தொடங்கப்பட்டது.

Block B இயந்திரத்தின் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இயந்திரத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன் பராமரிப்பின் பின்னர் 06 நாட்களுக்கு செயற்படுத்தப்பட்டது. இந்த பராமரிப்புக்குப் பின்னர் இல்மனைட் மீட்பை 60 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாக அதிகரிக்க முடிந்தது. அதன் பிரகாரம் Block B இயந்திரத்தில் இல்மனைட் உற்பத்தியில் அதன் மாதாந்த உற்பத்தியான 5000 மெட்ரிக் தொண்ணை விட அதிக செயலாற்றலை பதிவு செய்ய முடிந்தது. Block A இயந்திரம் செயற்பாட்டில் இருந்ததால், Block B இயந்திரத்திற்கு தேவையான உள்ளீடுகளின் உற்பத்தி அந்த நேரத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, இயந்திரம் அதன் செயற்பாட்டிற்கு பின்னர் தடையின்றி இயங்க முடிந்துள்ளது. | |
| (ஏ) | Block A பழைய இயந்திரத்தின் உற்பத்தி இயலளவு ஒரு மணித்தியாளத்திற்கு 100 மெட்ரிக் தொண்களாக காணப்பட்ட போதிலும் தற்போதைய இயலளவு ஒரு மணித்தியாளத்திற்கு 40 மெட்ரிக் தொன்கள் மற்றும் 50 மெட்ரிக் தொன்கள் ஆகிய குறைவான பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. முழுமையான இயலளவுக்கு ஏற்றவாறு | கூடிய இணைவினை உடைய புதிய கனிய மணல் படிவினை கண்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | Block A இயந்திரத்தின் பழைய கட்டிடத்தில் இருந்த இயந்திரங்களை புதிய கட்டிடத்திற்கு மாற்றுதல் மற்றும் நிறுவுதல் 2021.07.15 இல் தொடங்கப்பட்டது. இந்த செயற்பாடுகள் 2021.10.01 இல் நிறைவடைந்து இயந்திரத்தின் உற்பத்தி 2021.10.02 இல் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்த இயந்திரங்கள் நிறுவப்பட்ட பின்னர் இயந்திரத்தில் | கடல் ஆய்வு அனுமதிப்பத்திரங்களைப் (கட்டம் 63) பெறுதல் - புதிய கனிமப் படிவுகளைக் கண்டறிவதற்கான ஒரு படிமுறையாக, கடல் ஆய்வு அனுமதிப்பத்திரங்களிற்காக (கட்டம் 63). விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான செயற்திட்ட முன்மொழிவு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு |

உள்ளீடுகள் வழங்கப்படாததன் காரணமாக கிடைக்கக் கூடிய குறைந்த வெளியீடுகள் ஒட்டுமொத்த இயந்திரத்தின் செயலாற்றலை பிரதிகூலமாக தாக்கியிருந்தது. இந்த இயந்திரத்தில் குறைந்த பார கனிய மணல் 40 சதவீதம் முதல் 80 சதவீதம் தனித்தனியாக்குவதற்காக Spiral வடிவமைக்கப்பட்டிருந்தது எனினும், 2019 மார்ச், ஏப்ரல், செப்தம்பர் மற்றும் 2020 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களின் போது எடுக்கப்பட்ட மாதிரிகளிற்கான மாதிரிப் பரிசோதனைகள் சில நாட்கள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் உள்ளீட்டு பார மணலின் சதவீதம் 40 சதவீதத்தை விட குறைவாக இருந்தது.

உள்ளீட்டு உற்பத்தி மணித்தியாலம் ஒன்றிற்கு 40 மெட்ரிக் தொண்ணிலிருந்து 60 மெட்ரிக் தொண் வரை அதிகரிக்கப்பட முடியும். எதிர்காலத்தில் 80 மெட்ரிக் தொண்ணிற்கு மேல் அந்த இயலளவை பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கரடுமுரடான மணலில் கனிய மணல் செறிவு ஆரம்ப கட்டத்தில் 40 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை இருந்த போதிலும் தற்போது 20 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. தீர்வுகளாக, பின்வரும் நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

**<u>மொபைல் சுத்திகரிப்பு இயந்திரத்திற்கு கட்டளையொன்றை இடுதல்</u>**

எடை குறைந்த கனிய மணல் செறிவு உள்ள பகுதியை தெரிவு செய்து, அந்த பகுதியில் உள்ள கரடுமுரடான மணலை இந்த இயந்திரத்தை பயன்படுத்தி சுத்திகரிப்பதன் மூலம் கனரக கனிய மணல் செறிவு அளவை 60 சதவீதம் வரை அதிகரிக்க முடியும். இதன் மூலம் கரடுமுரடான மணலில் போக்குவரத்து கிரயம் குறையும்.

அனுப்பப்பட்டு,இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகளும் அளிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இது தொடர்பான 4 கண்காணிப்பு அனுமதிப்பத்திரங்களை அண்மையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், ஆய்வுகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமல்லாமல் பின்வரும் நிலப்பகுதிகள் கண்டறியப்பட்டு ஆய்வு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இவ்வருடத்தின் முதல் அரையாண்டுக்குள் அகழ்வாராய்ச்சி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இவ்வருடத்தில் குறித்த பகுதிகளில் ஆய்வுகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1. பனாமா -(கட்டம் 8)
2. அம்பாந்தோட்டை -(கட்டம் 11)
3. நிலாவெளி -(கட்டம் 15)
4. மூதூர்- (கட்டம் 18)

**<u>அகழ்வாராய்ச்சி வரம்பை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல் - 100 மீற்றர் வரம்பை 300 மீற்றர் வரை விரிவாக்குதல்</u>**

கரையோர பாதுகாப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 100 மீற்றர் வரம்பை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன. அதன் இறுதி கட்டத்தில் தொடர்புடைய ஆரம்ப சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு.<br><br>**<u>புதிய அகழ்வாராய்ச்சி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கான திட்டங்களை உருவாக்குதல்</u>**<br><br>பொடவகட்டு பகுதியில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு சொந்தமான 2500 ஏக்கர் நிலப்பகுதிக்கான அகழ்வாராய்ச்சி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு சுற்றாடல் தாக்க மதிப்பீடு EIA மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான முதல் சுற்று கலந்துரையாடல் 2022 பெப்ரவரி 01 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி ஒன்று 30 வருட குத்தகைக்கு ரூபா 24,220,118 தொகை செலுத்தி மினரல் சான்ட்ஸ் கம்பனியின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2013 ஆண்டின் போது | பிரதான விபரக் குறிப்புரைகள் உட்பட முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு தலைமை அலுவலக கட்டட நிர்மாண வேலை விரைவுபடுத்தப்பட வேண்டும். | கேள்வி தெரிவு செய்யப்பட்டவுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியவில்லை. CIDA ஆல் அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கைப் படிவத்தின் (SBD 02 ஐப் பார்க்கவும்) பிரகாரம் நிர்மாணங்களை | தலைமை அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன, மேலும் 2022 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

பெறப்பட்டிருந்தது. 15,325 சதுர அடிகளைக் கொண்ட 06 மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 171,453,486 இற்கு (பெறுமதி சேர் வரி இன்றி) 2018 மார்ச் மாதத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.6 ஆம் பிரிவானது விலைமனுதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உடனடியாக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரருடன் 2020 பெப்ரவரி 26 இல் அதாவது ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு 02 வருடங்கள் கடந்த பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் இந்த உடன்படிக்கையில் ஒப்பந்தக் கிரயம், கொடுப்பனவு நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தக் காலம் போன்ற பிரதான விபரக் குறிப்புரைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2020 மார்ச்சில் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 07 வருட காலம் இந்தக் காணி செயற்பாடற்று காணப்பட்டது. 30 வருட குத்தகைக் காலத்தில் 2020 மார்ச் இறுதியளவில் 08 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் 06

தொடங்குவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | மாடிகளைக் கொண்ட இந்த கட்டடத்தின் 04 மாடிகள் வரை உயர்த்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (ஒ) | பொடுவக்கட்டுவில் இருந்து பார கனிய மணல் புல்மோட்டை இயந்திர அறைக்கு எடுத்துச் செல்லல் மற்றும் காணியை மீள் நிரப்புதல் மற்றும் மணல் எடுத்துச்செல்வதற்காக மெட்ரிக் தொண் ஒன்றிற்கு ரூபா 234 கிரயத்தில் கூறுவிலைக்கான கேள்வியை சமர்ப்பித்திருந்த 06 விலைமனுதாரர்களில் ஒருவரை தெரிவு செய்து 2020 மே 27 இல் கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த விலைக்கு விலைமனுதாரர் கனிய மணல் எடுத்துச் சென்றிருக்கவில்லை.<br><br>இணங்கியிருந்த தொகைக்கு கனிய மணல் எடுத்துச் சென்றிருக்காத விலைமனுதாரருக்கு எதிராக கம்பனி எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன், மிகுதியாக உள்ள விலைமனுதாரர்களுக்கு மணல் எடுத்துச்செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் 2020 யூலை 11 இல் கம்பனியினால் மெட்ரிக் தொண் ஒன்றிற்கு ரூபா 320 வீதம் செலுத்துவதற்கு இணங்கி முதலாவது விலைமனுதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. ஆரம்ப விலைமனுவின் | பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்து நிறுவனத்திற்கு அனுகூலமான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கியிருக்கவில்லை. | இப் பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த தொகை ரூபா 20,439,258 ஆன போதிலும் விலை மாற்றம் செய்யப்பட்ட ரூபா 27,836,420 தொகை வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தமையால் கம்பனிக்கு ரூபா 7,397,161 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | | | |
| (ஓ) | 1990 மார்ச் 12 இல் கைத்தொழில் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த மிகையூதியக் கொடுப்பனவு நடைமுறையின் 6—ஆ பந்தியானது மிகையூதியக் கொடுப்பனவு ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும் அந்த நடைமுறைக்கு புறம்பாக மீளாய்வாண்டின் போது இலாபம் ஒன்று ஈட்டியிருக்காத போதிலும் தலைமை அலுவலகத்தின் ஊழியர்களுக்கு ரூபா 10,300,000 தொகை மற்றும் புல்மோட்டை இயந்திர அறை ஊழியர்களுக்காக ரூபா 49,200,000 தொகையுமாக ரூபா 59,500,000 கூட்டுமொத்த தொகையான மிகையூதியக் கொடுப்பனவு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையினதும், அமைச்சினதும் அல்லது திறைச்சேரியினதும் | மிகையூதியக் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டம் பின்பற்றப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நிறுவனம் இலாபம் ஈட்டாததால், ஊழியர்களுக்கு மிகையூதியத்தை செலுத்த முடியவில்லை. 2020 ஒக்தோபரில் கேள்வி வழங்கப்பட்ட 85,000 மெட்ரிக் தொண் இல்மனைட் தொகையை 2020 திசெம்பர் 31 வரை நிறுவனத்திலிருந்து வாடிக்கையாளரால் எடுத்துச் செல்ல முடியவில்லை என்பதே இதற்குபங்களித்துள்ள முக்கியக் காரணமாகும்.<br><br>இதனால், 2021 ஆம் ஆண்டில் நடைபெறும் குறித்த விற்பனையின் அடிப்படையில் மிகையூதிய முற்பணமாக ரூபா 100,000 வழங்கக் கோரி ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வேலைநிறுத்தம் புல்முடை தொழிற்சாலையின் செயற்திறனை பாதிக்கும் என்பதால், முகாமைத்துவமானது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் ஒத்திசைவின் கீழ் வரிசை அமைச்சு (தொழில்துறை அமைச்சு) மூலம் இது | இப்பிரச்னையை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | | தொடர்பாக திறைசேரி அங்கீகாரத்தை கோரியது. அந்தத் தொகையில் 50 சதவீதத்தை செலுத்துவதற்காக திறைசேரி அங்கீகாரம் அளித்தது. எனவே, 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டு செயன்முறைக்குப் பின்னர் அந்த தொகை ஈட்டப்பட்ட இலாபத்திற்கு சரிசெய்யப்படும் என்ற உண்மைக்கு உட்பட்டு, கூறப்பட்ட மிகையூதிய முற்பணம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.<br><br>தடுப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, நிறுவனத்தால் இலாபத்தின் அடிப்படையில் மாத்திரமே மிகையூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இலாபம் இன்றி முற்பணமாக ஊக்குவிப்பு படி வழங்கப்படாது. | |
| (ஔ) | மீளாய்வாண்டின் இலாபத்தின் அடிப்படையிலான மிகையூதியங்களிலிருந்து 2019 சனவரி முதல் மார்ச் வரையான மொத்த விற்பனை வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 30,300,767 ஆன மிகையூதியத்தை கழிப்பதன் மூலம் ஒரு ஊழியருக்காக ஈட்டப்பட்ட புள்ளிகளின் (Point) அளவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018/12/31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட மிகையூதிய தொகை குறைவாக இருந்ததால கேள்விக்கு விடப்பட்ட பின்னர் நிதி பெறப்பட்ட காந்தம் அல்லாத கனரக கனிம செறிவூட்டலின் இருப்பை அடிப்படையாகக் கொண்டு மிகையூதியம் 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முற்பணமாக | பதில் வழங்கப்படவில்லை. (இதுவரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை) |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் முன்னர் செலுத்தப்பட்ட இடைக்கால மிகையூதியத்தை சேர்த்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் இதனால் மிகையூதியமாக ரூபா 26,990,437 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும்,இலாபத்தின் அடிப்படையிலான மிகையூதிய கொடுப்பனவு தொடர்பாக கைத்தொழில் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2019 மார்ச் 12 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு முரணாகவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாமலும் இக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | செலுத்தப்பட வேண்டும் என நிறுவனத்தின் ஊழியர்கள் முகாமைத்துவத்திடம் கோரிக்கை விடுத்தனர். அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ரூபா 30,300,767.74 கூட்டுமொத்த தொகை இடைக்கால மிகையூதியமாக செலுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது அவ்வாறு செலுத்தப்பட்ட முற்பணம் செலவினமாகக் கருதப்பட்டு, மீதி இலாபத்திற்குத் தனித்தனியாகச் சீராக்கம் செய்யப்பட்டது. இருப்பினும், தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட தொகை தவறாக உள்ளதுடன் நாங்கள் மிகையூதியத்தை மீண்டும் கணிப்பிட்டுள்ளோம். அதன் பிரகாரம் காலக்கிரமத்தில் மேலதிக மிகையூதியத்தில் சீராக்கங்களை செய்வதற்கு மேலும் குறித்துக் கொள்ளப்பட்டது.<br><br>தொடர்ந்துவரும் வருடங்களில் மிகையூதியம் முற்பணமாக வழங்கப்பட மாட்டாது என்பது மேலும் குறித்துக் கொள்ளப்படுகிறது. | |
| (க) | கொக்கிளாய் செயற்திட்டத்திற்காக கனிமங்கள் பெருமளவில் காணப்படுகின்ற 17.6 ஹெக்டேயர் நிலப்பரப்பு கொக்கிளாய் பிரதேசத்தில் 2013 ஆம் | கொக்கிளாய் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். உற்பத்தி செயன்முறையில் இயந்திரத்தை ஈடுபடுத்தி | கருத்துரை வழங்கப்படவில்லை. | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் இருந்து சுற்றாடல் தொடர்பான பரிந்துரைகள் பெறப்பட்ட நிலையில், |

ஆண்டில் கம்பனியினால் சுவீகரிக்கப்பட்டு அதற்காக ரூபா 2.25 மில்லியன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதே ஆண்டில் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 39,339,473 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. அகழ்வுகளுக்கு தேவையான அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததால் மீளாய்வாண்டு வரையிலும் அந்த பிரதேசத்தில் எவ்வித அகழ்வுப் பணிகளும் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த அனைத்து சொத்துக்களும் புல்மோட்டை இயந்திரக் கூடத்தில் ஏனைய இடங்களில் நிறுவப்பட்டு விளைவற்று காணப்பட்டதுடன் சில இயந்திரங்கள் களஞ்சியத்தில் செயற்பாடற்று குவிக்கப்பட்டிருந்தன. இந்த இயந்திரங்களின் 24 spirals பழைய Block A இயந்திரக் கூடத்தில் பொருத்தப்பட்டிருந்த போதிலும், செயற்படு நிலைமையில் காணப்படவில்லை. அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் போது கொக்கிளாய் செயற்திட்டத்திற்காக 117 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அவர்கள் புல்மோட்டை இயந்திரக்

செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கொக்கிளாய் - கொக்குதுடுவாய் பகுதிக்கான சுரங்க அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. கொக்கிளாயில் இயந்திர கூடத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடத்தின் பல்வேறு இடங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். அதற்கிணங்க அதிகப்படியான பணியாளர்கள் இருப்பதும் உற்பத்திக் கிரய அதிகரிப்பிற்கு பங்களிப்பு செய்தது. | | | |
| (கா) | எரிபொருள் செலவினத்தை ஐம்பது சதவீதத்தினால் சேமிப்பதற்காக கம்பனி 2016 யூன் 30 இல் ரூபா 62,370,234 பெறுமதியான dryers ஐ இறக்குமதி செய்து 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவற்றிற்காக ரூபா 1,164,350 தாமதக் கட்டணம் உள்ளடங்களலாக 2020 திசெம்பர் 31 அளவில் ரூபா 43,838,767 தொகை செலுத்தப்பட்டுள்ளது. இயந்திரத்தினை செயற்படு நிலைக்கு உட்படுத்தி உற்பத்திப் பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு 2021 மார்ச் 21 வரையிலும் கம்பனியினால் முடியாதிருந்த போதிலும் கம்பனி பொறுப்பான அதிகாரிகளை இனங்கண்டு அவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இயந்திரத்தை செயற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதை செயற்படுத்துவதற்கான 75% பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. கடவுச்சொல் கிடைக்காததால், பணியை பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. மேலும் பூர்த்தி செய்ய இயலாததன் காரணமாக, மென்பொருள் எதிர்காலத்தில் மீண்டும் உருவாக்கப்பட்டு மாற்றியமைக்கப்படும். | இப்பிரச்னையை சீர்செயவதற்குய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (கி) | கம்பனியின் உற்பத்தி செயற்பாடுகளை அதிகரிப்பதற்காக அவசரமானது மற்றும் அத்தியாவசதியமான கொள்வனவொன்றாக கருதி ஈரமணல் இயந்திரக் கூடத்திற்கு புதிய Hydroziser இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக கம்பனியினால் | இயந்திரத்தை உற்பத்தி பணிக்கு பயன்படுத்துவதற்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | அதன் செயற்பாட்டை தொடர்ந்து Hyarosizer இயந்திரம் தொடங்கப்பட்டது. மேலும் 21/2 நாட்களுக்குப் பின்னர் அது மீண்டும் செயலிழந்தது. இதற்கு முக்கிய காரணம், மின்சார முறைமையில் ஏற்பட்ட திடீர் மின்தடையால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவுஸ்ரேவியாவின் மினரல் ரெக்னோலஜீஸ் இன் இலங்கை பிரதிநிதித்துவ கம்பனியின் மூலம் இறக்குமதி செய்வதற்கு 2014 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டு 2016 சனவரி மாதம் ரூபா 15,426,302 பெறுமதிக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்த இயந்திரம் உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்படாது 2021 மார்ச் 21 வரையிலும் கம்பனியினால் செயற்பாடற்று வைக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரம் அவசர தேவைக்காக கொள்வனவு செய்யப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்த போதிலும், இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு பொறுப்பான அதிகாரிகளிற்கு எதிராக கம்பனி நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | | சுற்றுவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்பாகும். இயந்திரத்தை கொள்வனவு செய்த கம்பனியிடம் கலந்துரையாடல்களை நடாத்தி பழுதடைந்த பகுதியை கீழே இறக்குவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. பாகம் கிடைத்தவுடன், இயந்திரம் மீண்டும் இயங்கி, உற்பத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும். |
| (கீ) | 2004 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த சுனாமி பேரழிவினால் புல்மோட்டை படகுக்களம் அழிவடைந்த பின்னர் கொட்வே படகுக் களமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவற்றில் காணப்பட்ட இழுவைப் படகுகள் மற்றும் விசைப்படகுகள் பயன்படுத்தப்படாமல் 16 வருடங்களை விட மிகையான காலம் உக்கிய நிலையில் காணப்பட்ட போதிலும் | கப்பல்களை விற்பனை செய்யவோ, இடம்மாற்றவோ அல்லது அப்புறப்படுத்தவோ விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இழுவை மற்றும் விசைப்படகுகளை மதிப்பிடுவதற்கு தற்போது அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது . அதேநேரம், மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததும் அவற்றை பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | இப்பிரச்னையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உரிய கப்பல்கள் மற்றும் உபகரணங்களை இடம்மாற்றவோ அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (கு) | இயந்திர அறைகளில் இருந்து வெளியேற்றப்படும் (வெள்ளை மணல்) இருப்பு குவியலிற்கு மேலதிகமாக மேற்குறிப்பிட்ட மணல் இருப்பு குவியல் கம்பனியின் விசாலமான தரைப்பகுதி ஒன்றில் பல்வேறு இடங்களில் பாதுகாப்பற்ற முறையில் பல வருட காலம் முதல் குவிக்கப்பட்டு காணப்படுவதுடன் அந்த மணல் இருப்பு குவியலினை விற்பனை செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் தரைப் பிரதேசத்தில் இடவசதிகள் அடைபட்டு காணப்பட்டது. | மணல் இருப்பினை விற்பனை செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இல்மனைட், Rutile, Zircon மற்றும் Hi-Ti இல்மனைட் போன்ற முக்கிய தயாரிப்புகள் முக்கியமாக திறந்த களஞ்சியங்களில் சேமிக்கப்படும் போது Low Geade Zircon,Cude<Final Taillings Lot - 02,Hydrosizer Fines ஆகிய உபஉற்பத்திப் பொருட்கள் ஏற்பட்டுள்ளன. இந்த உப உற்பத்திப் பொருட்களின் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள் ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்படுவதால், சில மணல் இருப்புகளில் அதிக மதிப்புள்ள கனமான கனிய மணல் வெளியேறுவதால், அத்தகைய மணல் சுத்திகரிப்பு நோக்கத்திற்காக மீண்டும் பயன்படுத்தப்படுகிறதுடன் அதிலிருந்து அகற்றப்படும் Tallings மீண்டும் சேமிக்கப்படாமல் சுரங்க வலயங்களை மீண்டும் நிரப்ப பயன்படுத்தப்படுகிறது. Low Geade Zircon Crude தயாரிப்பு இப்போது சுத்திகரிக்கப்பட்டுள்ளது. Hi-Ti இல்மனைட் விற்பனைக்கு கேள்வி கோரப்பட்டுள்ளது. ஏறத்தாழ 40000 மெட்ரிக் தொண் Hi-Ti இல்மனைட் தற்போது | இப்பிரச்னையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. Final Tallings Lot -02 ஐ மீண்டும் சுத்திகரிப்பதற்கு புதிய இயந்திரகூடங்களை நிறுவுவதற்கு பணிப்பாளர் சபை யின் அங்கீகாரம் தேவைப்படுகின்றது. அதற்காக சபை பத்திரம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | |
| (கூ) | 1997 திசெம்பர் 02 முதல் நிர்வாக உத்தியோகத்தர் பதவியை கொண்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் ஒழுக்காற்று விசாரணையின் படி 11 குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு 2017 செப்தம்பர் 15 முதல் கம்பனியின் சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அவர் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2020 ஏப்ரல் 01 முதல் 2020 ஒக்தோபர் 12 வரை ரூபா 120,000 மாதாந்த படிக்கு தலைவரினால் புல்மோட்டை இயந்திர கூடத்தின் பிரதிப் பொது முகாமையாளராக (HM1 -3) நியமனம் செய்யப்பட்டிருந்தார். குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை படியாக ரூபா 2,052,898 தொகை கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது. இந்த முறையற்ற நியமனத்தை சீர்செய்வதற்கும் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகளை | முறைகேடான நியமனங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | இந்த நியமனம் தொடர்பான விசாரணை அறிக்கை 2021.05.31 ஆம் திகதிய MI/CIA/LMSL/APP/ DGMAdmin/2020 ஆம் இலக்க புலனாய்வு அறிக்கை தொழில்துறை அமைச்சிடம் இருந்து சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பாக அந்த நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபை தொடர்புடைய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளுடன் இணங்கியிருக்காததுடன் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் தொடர்புடைய கணக்காய்வு அறிக்கைக்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடு செய்வதற்கும் கம்பனியைப் போலவே அமைச்சும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (கெ) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் ஒன்று இன்றி தலைவரின் பிரத்தியேக உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு கம்பனியில் இருந்து 2020 மார்ச் முதல் 2021 பெப்ரவரி வரை படியாக ரூபா 646,749 தொகையும், மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 500,000 தொகையும் புல்மோட்டைக்கு பிரயாணம் செய்வதற்காக ஒரு நாளைக்கு ரூபா 1,000 வீதம் ரூபா 60,000 தொகையும் ஆக மொத்தம் ரூபா 1,206,749 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பதவி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்படாத பதவியொன்றாக இருந்ததுடன், முறையற்ற விதமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அதற்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளங்கள் மற்றும் படிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைகேடான நியமனங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. (2021.06.30 இல் இருந்து இந் நியமனம் முடிவுறுத்தப்பட்டுள்ளது) | இப் பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிரக்கவில்லை. |
| (கே) | கம்பனிக்கான பதவி உயர்வு மாதிரி பரீட்சையின் போது, கம்பனியின் தலைவர், | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | இப்பிரச்னையை சீர்செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி, உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட முறையில் என சம்பளக் குறியீட்டை மாற்றியமைத்து சம்பளத்தை வழங்கியிருந்தார். | | | ல. |
| (கை) | கம்பனியின் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் பதவியாகிய பிரதான பகுப்பாய்வாளர் பதவி 10 வருடங்களாகவும் மருத்துவ உத்தியோகத்தர் பதவி 05 வருடங்களாகவும் சிரேஷ்ட பொது முகாமையாளர் (நிதி) மற்றும் சிரேஷ்ட பொது முகாமையாளர் (மனித வளங்கள்) ஆகிய பதவிகள் 2019 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. இது வரை நிரந்தர உத்தியோகத்தர்கள் இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு கம்பனிக்கு முடியாமல் இருந்தது. | பிரதான பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் விரைவாக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. (ஆய்வுகூடத்திற்குரிய கடமைகளில் தற்போது இரண்டு பகுப்பாய்வாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்) | இப்பிரச்னையை சீர்செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கொ) | ஒட்டுமொத்த நிறுவனத்தின் உற்பத்தி, நிர்வாகம், கணக்குகள் மற்றும் ஏனைய கருமங்கள் தொடர்பாக எடுக்கப்படும் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக 2015 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படும் பொது முகாமையாளர் பதவி நிரந்தரமாக நிரப்பப்பட வேண்டியிருந்த போதிலும் | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020.11.05 இல் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 19 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர், அவர்களில் ஒரு விண்ணப்பம் மாத்திரமே தேவையான தகுதிகளை பூர்த்தி செய்திருந்தது. இது தொடர்பான நேர்முகப்பரீட்சையை நடாத்துவது குறித்த | 2021.09.28 முதல் 2022.09.27 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பொது முகாமையாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் இப்போது நியமிக்கப்பட்டுள்ளார். |


| | | | | |
|---|---|---|---|---|
| | அப்பதவிகளுக்காக இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் முதல் ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். | | அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு வரிசை அமைச்சிற்கு பரிந்துரைக்கப்பட்டது. விண்ணப்பதாரருக்கு நிதித்துறை தொடர்பான தகுதிகள் இருந்ததால், வரிசை அமைச்சு அது தொடர்பாக எந்த தீர்மானத்தையும் எடுத்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (கோ) | இரண்டு சிரேஷ்ட முகாமைத்துவ மட்ட உத்தியோகத்தர்கள் உட்பட ஐந்து உத்தியோகத்தர்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் இணைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் போதுமான கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017.06.05 ஆம் திகதிய தகுதிவாய்ந்த அதிகாரசபையின் கடிதத்தின் மூலம் கம்பனியின் அனைத்து கொடுப்பனவு மற்றும் பெறுகை நடவடிக்கைகளும் முன் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டதாக கட்டளையிடப்பட்டது. அதன் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் அனைத்து பெறுகைக் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளுக்கு முன் கணக்காய்வு செய்வதற்கு பணியாளர்களால் கணிசமான நேரத்தை ஒதுக்க வேண்டியிருந்தது. உள்ளக கணக்காய்வு கிளை 2018/2019/2020 காலப்பகுதிக்குள் கணிசமான அளவு வேலைகளைச் செய்துள்ளது.<br><br>எவ்வாறாயினும், இந்த பணியில் தேவையற்ற கொள்வனவுகளை தடுக்கவும், சிக்கனமற்ற நடவடிக்கைகளை முன்கூட்டியே அடையாளம் காணவும், தவறான கொடுப்பனவுகளை முன்கூட்டியே | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவும் கொரோனா தொற்றுநோய் காரணமாக நாடு மூடப்பட்டு/ வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான அலுவலர்கள் கடமைகளுக்கு அழைக்கப்பட்ட பின்னணியில 2021 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து பணிகளையும் தணிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2022.03.31 இற்கு முன்னர் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |

கண்டறிந்து, அத்தகைய கொடுப்பனவுகளைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பெருமளவிலான முன் கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய சில விடயப் பகுதிகள் மேற்கொள்ளப்பட முடியாமல் இருந்ததுடன், தற்போது முன் கணக்காய்வு பெறுகை நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள பின்னணியில், 2021 முதல் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4.42 பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 335,906,171 | 261,642,255 | 723,035,747 | 673,635,143 | 74,263,916 | முனைப்பழியற்ற |
| **2019** | 325,646,375 | 252,265,648 | 793,890,376 | 131,730,114 | 73,380,727 | முனைப்பழியுள்ள |
| **2020** | 339,618,072 | 257,588,332 | 863,720,313 | 184,500,513 | 82,029,740 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மூடப்பட்டிருந்த 05 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.4,579,926 ஆன கடன் மிகுதிகள் அறவிடுவதற்கு அல்லது அங்கீகாரம் பெறப்பட்டு புத்தகங்களில் நீக்கப்படுவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான அங்கீகாரம் பெறப்பட்டுக் கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். | மூடப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைகள் குறித்து தீர்மானமெடுப்பதற்கும் பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை | மூடப்பட்ட இரண்டு கம்பனிகளிடமிருந்து பெற வேண்டிய ரூபா.3,669,987.50 தொகையை புத்தகங்களில் இருந்து நீக்க பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிறுவனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த 10 வருடங்கள் பழைமை வாய்ந்த ரூபா 5,052,627 ஆன நிலுவையை அறவிடுவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந் நிறுவனத்திற்கு BCC Lanka Ltd இலிருந்து செலுத்தப்பட வேண்டிய ரூபா.3,631,896 தொகைக்காக பலமுறை எழுத்துப்பூர்வமாக அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது டன், அதற்கான கடன் தொகையை மீட்பதற்கு அமைச்சின் தலையீட்டுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | BCC இன் பொது முகாமையாளர் 11.02.2022 அஆம் திகதி தொலைபேசியில் முழுத் தொகையும் பரந்தன் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அடுத்த மூன்று மாதங்களுக்குள். இதற்கான பணிப்பாளர் சபையின் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கொஸ்டிக் சோடா லையிற்கான தேவையை கருத்திற் கொண்டு, கொஸ்டிக் சோடாக்களுக்கு பெறுமதியொன்று சேர்த்த் மற்றும் பரந்தன் கெமிக்க் நிறுவனத்திற்கு தற்போது பெறப்பட முடியாத கெமிக்கல் நிறுவனத்திற்கு தற்போது பெறப்பட முடியாத சந்தைக்கு அண்மித்தல் என்ற நோக்கத்தில் கொஸ்டிக் சோடா திரவமாக்கல் செயற்திட்டம் 2015 திசெம்பர் 30 இல் களுத்துறை நாகொட தொழிற்பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஏப்ரல் 25 இல் பேணிகள் | ஏற்பட்ட நட்டமானது பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த திட்டம் ”ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி” என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது மற்றும் அது இற்றைவரை செயல்பாட்டில் உள்ளது. | ➢ அரிப்பை மேலும் குறைக்க மேலே உள்ள இரும்பு கொள்கலனை வெள்ளை இரும்பு கொள்கலனுக்கு மாற்றவும்.<br>➢ இச் செயற்திட்டம் இற்றைவரையிலும் எந்த |


| | | | | |
|---|---|---|---|---|
| | முடிக்கப்பட்டிருந்தன. எனினும் இந்தக் கொஸ்டிக் சோடாத் திரவமாக்கல் இயந்திரம் இரும்பினால் செய்யப்பட்டிருந்தமையால் இரும்பு மற்றும் கொஸ்டிக் சோடா திரவங்களுடன் வினை புரிந்து இரும்பு கொஸ்டிக் சோடா லையுடன் கலந்து அவை சந்தைப்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இந்த கொஸ்டிக் சோடா திரவமாக்கல் இயந்திரத்தினை தயாரிப்பதற்கு முன்னர் கொஸ்டிக் சோடா செதில்களுடன் இரும்பு கலப்பதை கவனத்திற் கொள்ளாமையால் நிறுவனத்திற்கு ரூபா.2,089,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டது. இந்த இயந்திரம் பயன்படுத்தப்படாமையால் துருப்பிடித்திருந்ததுடன் சில பகுதிகள் அக்காணியில் அழுகிய நிலையில் களைகள் வளர்ந்துள்ளன. அத்துடன் இவ்வியந்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கட்டிடமும் எவ்வித பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | | | வகையிலும் கைவிடப்படவில்லை, மற்றொரு கொள்கலனின் உதவியுடன் உற்பத்தி தொடரும். |
| (ஈ) | 1986 ஆம் ஆண்டிலிருந்து பரந்தன் உற்பத்திச்சாலையில் குளோரின் உற்பத்தி நிறுத்தப்பட்டமையால் இந்நாட்டிற்குத் தேவையான கொஸ்டிக் சோடா மற்றும் குளோரின் முழுமையாக இறக்குமதிகளின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பரந்தனில் அமைந்துள்ள 227 ஏக்கர் | பரந்தன் ஆலையில் குளோரின் உற்பத்தியை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரந்தனில் இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான பூர்வாங்க பணிகள் கம்பனியால் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுகள் EML கன்சல்டன்ட் (பிரைவேட்) லிமிடெட் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது மற்றும் நிறுவனம் செயற்திட்டத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காணியில் குளோரின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக இயந்திர ஆலையொன்று நிறுவப்படுவதற்கு 2016 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் சுற்றாடல் பாதிப்புக்கள் மதிப்பீடொன்று செய்யப்பட்டு அதற்காக முறையே ரூபா.7,611,111 மற்றும் ரூபா.2,116,750 ஆன செலவுகள் செய்யப்பட்ட போதிலும் இயந்திர ஆலையின் நிர்மாண நடவடிக்கைகள் இற்றைவரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டையும் நடத்தி வருகிறது. இதன்படி, மேற்படி ஆய்வு 31.07.2022 ஆம் திகதியில் நிறைவடையத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கான மேலதிக நடவடிக்கைகள் பொது திறைசேரியின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (உ) | பரந்தன் கெமிக்கல் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 70 என்பதுடன் உள்ளபடியான பதவியணி 55 ஆகும். அதில் உள்ளடங்குகின்ற பிரதி பொது முகாமையாளர் மற்றும் கணக்காய்வாளர் போன்ற பதவிகள் 2019 ஆம் ஆண்டிலிருந்தும், உதவி பொது முகாமையாளர் (நிதி) பதவியானது 2013 ஆம் ஆண்டிலிருந்தும், வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2021 ஒக்டோபர் 30 வரையில் குறிப்பிட்ட பதவிகள் நிரப்புவதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்கவில்லை. | வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்த பதிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. | சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விரைவான அனுமதி கோரி பொது முயற்சி திணைக்களத்திற்கும் மற்றும் கைத்தொழில்துறை அமைச்சகத்திற்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br><br>07.02.2022 ஆம் திகதியிட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம் இதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், அதன்படி ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஊ) | 2015 இலிருந்து 2019 வரையான வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் பராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு வருடங்களுக்காகவும் அறிக்கை பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டது மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்படவில்லை. பணிப்பாளர் சபைக் கூட்டத்தையும் வருடாந்த பொதுக் கூட்டங்களையும் நடத்த முடியாத காரணத்தினால், வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியவில்லை. இது தொடர்பில் பொது திறைசேரிக்கும் அமைச்சிற்கும் பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. | 2022 மார்சில் புதிய பணிப்பாளர் சபையின் கீழ் பொதுக்கூட்டம் நடைபெறும் மற்றும் 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். |

4.43 ஸ்லின்டெக் அக்கெடமி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 9,493,334 | 20,292,944 | 8,722,170 | 19,541,240 | (10,799,610) | முனைப்பழியற்ற |
| **2019** | 7,758,331 | 5,910,320 | 9,496,137 | 18,441,107 | 1,848,011 | முனைப்பழியுள்ள |
| **2020** | 2,616,661 | 1,988,842 | 5,542,498 | 13,857,021 | 627,819 | முனைப்பழியுள்ள |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 9.49 | 20.29 | 8.72 | 19.54 | (10.80) |
| 2019 | 7.76 | 5.91 | 9.50 | 18.44 | 1.85 |
| 2020 | 2.62 | 1.99 | 5.54 | 13.86 | 0.63 |


| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டெட் பட்டம் வழங்கும் நிறுவனமாக இருக்கும் போது, ஸ்லின்டெக் அகெடமி தனிப்பட்டம் வழங்கும் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் | இலங்கை இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டெட்டின் மூலம் பட்டங்கள் வழங்குவதற்கான சாத்தியத்தினை பரிசீலிப்பதற்கு | உங்கள் விசாரைணயில் சிறப்பிக்கப்பட்டுள்ள அனைத்து உண்மைகளையும் பணிப்பாளர் சபை அறிந்திருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய | இலங்கை இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டெட் மூலம் பட்டம் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை மீளாய்வு செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | அகெடமியால் தொடங்கப்பட்ட Phd மற்றும் Mphil கற்கை நெறிகளுக்காக கம்பனி ரூபா.20,293,000 ஆன தொகையைச் செலவிட்டுள்ளது. அவற்றுள் இரு அதிகாரிகளின் சம்பளத்திற்காக ஏற்பட்ட தொகை மற்றும் இலங்கை இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலஜி (பிரைவேட்) லிமிடெட்டின் மனிதவள மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்தியமைக்காச் செலுத்தப்பட்ட தொகை என்பன முறையே ரூபா.9,612,750 மற்றும் ரூபா. 7,285,239 ஆகும். எனவே நனோ ரெக்னோலஜி (பிரைவேட்) லிமிட்டட் மூலம் அக் கற்கை நெறிகளை வழங்க முடிந்த போதிலும் ஸ்லின்டெக் அகெடமியை ஒரு தனிப்பட்டம் வழங்கும் நிறுவனமாக கொண்டு நடாத்துதல் பயனற்றது என கணக்காய்வு மூலம் தெரிய வந்துள்ளது. | பரிந்துரைக்கப்படுகின்றது. | பொருத்தமான விடயங்களை மதிப்பீடு செய்யும் பணியில் செயற்படுகின்றது. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் ஆண்டுகளுக்கான வருமானம் மற்றும் செலவுகள் ஒப்பிடப்பட்டபோது மூன்று ஆண்டுகளுக்கான திரண்ட வருமானம் மற்றும் | செலவுகளை செய்வதற்கு ஆகக் குறைந்த போதுமானளவு வருமானம் உருவாக்கப்படல் வேண்டும | ஆராய்ச்சிகள் மற்றும் உதவித் தொகைக்கு நிதியிடுவதற்கு ஸ்லின்டெக் இற்கு நிதிச் சிக்கல்கள் காணப்பட்டதால் மாணவர்களைச் சேர்த்தல் 2018 இல் | இப்பிரச்னைக்கு தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவுகள் முறையே ரூபா.16,891,665 மற்றும் ரூபா.28,115,764 ஆகும். எனவே அகெடமி செலவுகளை செய்வதற்காகப் போதியளவு வருமானத்தை உருவாக்குவதற்கு தவறியிருந்ததுடன் இது தொடர்பாக முகாமைத்துவத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிறுத்தப்பட்டது. 2022 பெப்ரவரியில் மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் ஸ்லின்டென் அகெடமிக்கு முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு வழி வகுக்கப்படும். | |
| (a) | கம்பனியின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்தப் பொறுப்புக்கள் முறையே ரூபா 5,542,498 மற்றும் ரூபா 13,857,021 ஆக இருந்ததுடன் பொறுப்புக்கள் சொத்துக்களை விட ரூபா.8,314,523 ஆல் விஞ்சப்பட்டுள்ளது. எனவே வணிக நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு தொடர்பாக கம்பனி ஒரு ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது | கம்பனியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | இடரைக் குறைக்க எந்த நடவடிக்கையயும் எடுக்கப்படவில்லை. |

## 4.44 ஸ்ரீ லங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலஜி (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 110,717,975 | 101,980,053 | 2,731,731,923 | 2,560,423,893 | (165,205,857) | முனைப்பழியற்ற |
| **2019** | 83,323,479 | 104,230,652 | 3,132,890,936 | 3,026,154,036 | (150,335,139) | முனைப்பழியுள்ள |
| **2020** | 85,549,401 | 90,163,505 | 3,870,959,655 | 3,863,232,080 | (100,148,607) | முனைப்பழியுள்ள |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 110.72 | 101.98 | 2இ731.73 | 2இ560.42 | (165.21) |
| 2019 | 83.32 | 104.23 | 3இ132.89 | 3இ026.15 | (150.34) |
| 2020 | 85.55 | 90.16 | 3இ870.96 | 3இ863.23 | (100.15) |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி மாதத்தில் Synthetic Bio Lab இற்காக ரூபா 73,596,384 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2019 செப்தெம்பர் இறுதி வரையிலும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. | குறித்துரைக்கப்பட்ட நோக்கம் இனங்காணப்பட்ட பின்னர் உபகரணங்களின் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவற்றை பயன்படுத்தாமல் விடாது குறிப்பிட்ட நோக்கங்களிற்கு அவற்றை பயன்படுத்த வேண்டும். | அவதானிப்பு தெளிவாக காணப்படவில்லை. பதிலளிப்பதற்கு அதிக தகவல்கள் தேவைப்படுகின்றன. | அவதானிப்புக்கள் போன்றே காணப்படுகின்றது. |
| (ஆ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் (17 ஆம் பிரிவி) சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு முன்னைய மதிப்பீட்டிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது வேறுபட்டால் 10.15-10.18 ஆம் பந்திகளின் பிரகாரம் வேறுபாடு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா. 235,016,653 தொகை முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கம்பனியால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீட்டுக் கொள கைகளுடன் இணங்க வேண்டும். | ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமதி கிரய அடிப்படையில் காணப்படுகின்றமை கம்பனியின் கொள்கையாக உள்ள போதிலும் மீள்மதிப்பீட்டு அடிப்படையில் அல்ல. மிகுதி சொத்துக்கள் தொழிற்பாட்டு நிலைமையின் கீழ் உள்ளதுடன் அகற்றுவதற்கு இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. | அவதானிப்புக்கள் போன்றே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிறுவனத்திற்கு 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா.1,255,772,577 திரண்ட நட்டம் ஏற்பட்டிருந்தது. அத்துடன் தேறிய சொத்துக்கள் ரூபா.106,736,899 வரை குறைவடைந்திருந்த அதேநேரம் நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் ரூபா.1,362,509,477 ஆக காணப்பட்டது. ஆகையால் திரண்ட நட்டம் ஏற்பட்டமை காரணமாக முதலீடு செய்யப்பட்ட மூலதனம் 92.2% ஆல் நட்டக்கழிவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2007 இன் 24 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் தேறிய சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியை விட குறைவாக இருந்தமை வணிக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கான முக்கியமான பிரச்சனையாக உள்ளது. 2017 இன் 14 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக 2020 ஆகஸ்ட் 10 இல் சபைக் கூட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 5 pillars இற்கு விஞ்ஞான குழு ஒதுக்கப்படும் என குறிப்பிட்டிருந்ததுடன் | வருமானத்தை அதிகரித்து தேவையற்ற செலவினங்களை குறைப்பதன் மூலம் நட்டத்தை இழிவுபடுத்துவதற்கு கம்பனி முயற்சி செய்ய வேண்டும். | நாட்டிலுள்ள பிரதான தொழில்துறைகளிற்கு கொவிட்-19 காரணமாக ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை. ஆகையால் எஸ்எல்ஐஎன்ரீ 5 வேறுபட்ட **pillars** இன் கீழ் எதிர்வுகூறப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.<br><br>எனினும் எஸ்எல்ஐஎன்ரீ தொற்றுநோய் நிலைமையில் வணிக வாய்ப்புக்களை கைப்பற்றியிருந்ததுடன் SWAB உற்பத்தியிலிருந்து ரூபா.86 மில்லியனிற்கு மேல் எதிர்வுகூறப்படாத வருமானத்தை உருவாக்க முடிந்திருந்தது. புதிய mask சோதனை வசதி பகுப்பாய்வு சேவை வருமானத்தை அதிகரிப்பதற்கு பங்களித்திருந்தது. மேலும் எஸ்எல்ஐஎன்ரீ LAMP PCR பரிசோதனை கருவித்தொகுதியை உருவாக்கியிருந்ததுடன் இது என்எம்ஆர்ஏ அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் உள்ளது. அங்கீகாரம் பெறப்பட்டதும் உற்பத்திப் | SWAB உற்பத்தித் தொழில்நுட்பம் வெற்றிகரமாக தனியார் துறைக்கு மாற்றப்பட்டது, ஆனால் அவற்றின் விலையில் கூர்மையான சரிவு காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட ஸ்வாப்களை வாங்க சுகாதார அமைச்சு தீர்மானம் மேற்கொண்டதால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், தொற்றுநோயின் ஆரம்ப கட்டங்களில், உலகளாவிய வர்த்தகம் ஸ்தம்பிதமடைந்திருந்த போதும், கொவிட் 19 சோதனைக்கு நாட்டில் ஸ்வாப்கள் இல்லாதபோதும், நாடு முழுவதுமாக பூட்டப்பட்டிருந்த போது, SLINTEC, அயராது உழைத்தது என்பதை வலியுறுத்த வேண்டும். ஒரு மாதத்திற்குள் NMRA அங்கீகரிக்கப்பட்ட துடைப்பான்களை வெற்றிகரமாக தயாரித்து அரசாங்கத்திற்கு வழங்கியது. |

ஒவ்வொரு pillars இற்கும் நிறுவனத்தின் குறுங்கால வருமான மூலோபாயமாக அடுத்த 9 மாதத்தில் ரூபா 4 மில்லியனை உழைப்பதற்கு 02 செயற்திட்டத்தை உருவாக்குவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு திகதியான 2020 சனவரி 06 இல் உள்ளவாறு அத்தகைய செயற்திட்டத்தின் ஊடாக வருமானம் எதுவும் ஈட்டப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் 9 மாதத்திலிருந்து 6 மாதங்கள் ஏற்கனவே காலாவதியாகியிருந்தது.

பொருளை வணிகமயப்படுத்த தனியார் துறையுடன் புதிய கூட்டுமுயற்சி உருவாக்கப்படும்.

SLINTEC இன் இந்த தலையீட்டால் நாட்டுக்கு கிடைத்த சமூக நன்மையை ரூபாய் மற்றும் சதங்களில் அளவிட முடியாது.

NMRA இல் வெற்றிகரமாகப் பதிவுசெய்த பிறகு, SLINTEC LAMP PCR சோதனைக் கருவியின் உள்ளூர் உற்பத்திக்காக ஒரு கூட்டு முயற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. NMRA ஆனது தயாரிப்பைப் பதிவுசெய்து, எங்கள் உற்பத்தி வசதிக்காக GMP அந்தஸ்தையும் வழங்கியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட PCR சோதனைக் கருவிகளின் விலைகள் கடுமையாகக் குறைந்துள்ளதால், எதிர்பார்க்கப்பட்ட வருமானம் வரவில்லை. கூடுதலாக, பூர்வாங்க ஸ்கிரீனிங்கிற்கான மலிவான ஆனால் குறைந்த நம்பகமான முறையான ஆன்டிஜென் சோதனைக்

கருவியைப் பயன்படுத்தவும் அரசாங்கம் அனுமதி அளித்தது. உரங்கள் மற்றும் வேளாண் இரசாயனங்களின் இறக்குமதி/பயன்பாட்டின் தடைக்கு இணங்க, SLINTEC பல உயிர் உரங்கள்/உயிர் பூச்சிக்கொல்லி திட்டங்களை விவசாய அமைச்சகம், LPL, SAPP, Lakpohara மற்றும் வேளாண் இரசாயன நிறுவனங்களுக்கு விதை நிதியுதவி பெறுவதற்கு முக்கிய பங்குதாரர்களுக்கு வழங்கியது. பெறப்பட்ட நேர்மறையான பின்னூட்டத்தின் அடிப்படையில், POC நிலையை முடிக்க உள்நாட்டில் நிதியுதவியுடன் பல திட்டங்களைத் தொடங்கினார். துரதிர்ஷ்டவசமாக, தடை நீக்கப்பட்டதால், ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலானவர்கள் ஆர்வத்தை இழந்தனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 6 ஆண்டுகளிற்கு மேலாக தவணை தவறியிருந்த இரண்டு இந்திய | கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு | மேற்படி விடயம் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையாக உள்ளதுடன் ஒட்டுமொத்த | அவதானிப்புக்கள் போன்றே |

| | | | |
|---|---|---|---|
| கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா.170,006,139 கூட்டுமொத்தமான இரண்டு மீதிகளை கடன்பட்டோர் உள்ளடக்கியிருந்தது. கம்பனி அது தொடர்பாக ஏற்பாடொன்றை மேற்கொண்டிருந்ததுடன் அறவீட்டு நடவடிக்கைகள் திருப்திகரமான மட்டத்தில் எடுக்கப்படாதமை அவதானிக்கப்பட்டது | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | கடன்பட்டோர் ஒவ்வொரு மாதமும் விடாமுயற்சியுடன் பின்தொடரப்படுகின்றதுடன் சீஈஓ/சீஓஓ (CEO/COO) ஒழுங்கான பின்தொடர் நடவடிக்கையாக வாடிக்கையாளருடன் அல்லது ஈ-மெயில் இல் தொடர்பினை கொண்டுள்ளார் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். விபரமாக விளக்கமளிப்பதாயின் நாகர்ஜுனா உரத்தை மெதுவாக விடுவிப்பதற்குரிய உரிமைகளை வாங்கியுள்ளதுடன் ஐ.அ.டொலர் 1.0 மில்லியன் தொகையை செலுத்தியுள்ளார். தனியுரிமையை (Patent) மாற்றி எஸ்எல்ஐஎன்ரீ உடன் சேர்ந்து இரண்டாவது பகுதியை (Second tranche) செலுத்த வேண்டியிருந்தது. எனினும் நிதி சவால்கள் காரணமாக வாடிக்கையாளரால் செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. நாங்கள் விடாமுயற்சியுடன் பின்தொடர்ந்ததுடன் சீஈஓ மற்றும் ஆராய்ச்சி தலைவருடன் (Chief of | காணப்படுகின்றது. |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | Research) சேர்ந்து எமது தலைவர் மேற்படி தீர்ப்பனவை கோருவதற்கு வாடிக்கையாளரிடம் சென்றிருந்தார். எமது பெயரிலுள்ள தனியுரிமைகளையும் நாங்கள் விடுவித்திருக்காததுடன் பெறவேண்டிய மீதி தொகையை நாங்கள் பெற்றுக்கொள்ளாத நிலையில் எமது தனியுரிமையை பணமாக்குவதற்கு நாங்கள் செயற்படுவோம் என சுட்டிக்காட்டி வாடிக்கையாளரிற்கு கடிதமொன்றை வழங்கியிருந்தோம். | |
| (உ) | கம்பனியானது 2017 செப்தெம்பர் தொடக்கம் 2020 ஆகஸ்ட் வரை எஸ்எல்ஐஎன்ரீ அக்கடமியில் PhD கற்பதற்கு முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த நான்கு உத்தியோகத்தர்களின் சம்பளமாக ரூபா.14,730,754 தொகையை செலுத்தியிருந்தது. எனினும் கம்பனியானது PhD பட்டக் கற்கைநெறியை பூர்த்தி செய்த பின்னர் குறித்துரைக்கப்பட்ட சேவைக் காலத்தை பெற்றுக்கொள்வதற்கு ஊழியர்களுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட தவறியிருந்தது. | ஊழியர்களிற்கு கற்பதற்கான வசதிகளை வழங்கும் போது கம்பனியானது ஊழியர்களுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட வேண்டும். | கிழமை நாட்களில் பி.ப 5.00 மணியின் பின்னர் அனைத்து விரிவுரைகளும் நடாத்தப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூட செய்முறை வகுப்புக்கள் சனிக்கிழமைகளில் நடாத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் கல்வி நடவடிக்கைகள் எஸ்எல்ஐஎன்ரீ கடமைகளுடன் குறுக்கிடவில்லை. | அவதானிப்புக்கள் போன்றே காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | கிலோகிராம் அளவுகளில் செயற்பாட்டிலுள்ள மருந்து மூலப்பொருட்களை தயாரிக்கும் பொருட்டு செயற்பாட்டிலுள்ள மருந்து மூலப்பொருள் ஆரம்ப ஆலை (pilot plant) மூலோபாய செயற்திட்டம் 3 ஆண்டுகளுக்கு (2017 இல் தொடங்கப்பட்டது) பட்டியலிடப்பட்டிருந்தது. கம்பனியானது 2020 திசெம்பர் 31 வரை இச் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 27,315,188 தொகையை செலவிட்டிருந்தது. அச் செலவினம் தவிர 2017 ஆம் ஆண்டு முதல் இச் செயற்திட்டத்திற்காக ரூபா.88,307,858 கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் 2021 மார்ச் மாத இறுதி வரையிலும் குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் இருந்தன. வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்ட 2 ஆராய்ச்சிகளின் குறைந்த ஒட்டுமொத்த வருமானம் மற்றும் பொருளாதார செயற்திறன் குறைவடைதல் என குறிப்பிட்டு ஆரம்ப ஆலை ஆய்வுகளை நிறுத்துவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. ஆகையால் இச் செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்படாதமை அவதானிக்கப்பட்டது. | சமூக பொருளாதார நலன்களை நோக்கமாக கொண்ட அரசாங்க மானியங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து சமூக பொருளாதார நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | தைரொக்ஸினுக்காக முன்மொழியப்பட்ட செயற்கை பாதை மிகக் குறைந்த வருமானத்தை கொடுத்ததனால் அது கைவிடப்பட்டது- ஆராய்ச்சி செய்யும் போது, குறிப்பாக செயற்கை இரசாயனவியலில் இத்தகைய தோல்விகள் எதிர்பார்க்கப்படுகின்றன. Beclamethazone மற்றும் Betamethasone இரண்டும் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்த போதிலும், ஒட்டுமொத்த வருமானம் குறைவாகவும் பொருளாதார ரீதியாக லாபகரமில்லாததாகவும் பல பாதைகளைக் இம் முறை கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது. ஆகையால் ஆரம்ப அளவிலான கற்கையை தொடராமலிருப்பதற்கு முகாமைத்துவம் தீவிரமான தீர்மானத்தை எடுத்தது. ஏபிஐ ஆரம்ப ஆலை அலகுகளான உலைகள், கரைப்பான் ஆவியாக்கி, உறைவிப்பான், சேமிப்பு பெட்டிகள் போன்றவை, (அவை பொது நோக்கப் பொருட்கள்) மேற்படி காரணங்களால் விளைவற்று இருந்ததால் அவை செயற்திறனான எஸ்எல்ஐஎன்ரீ graphene ஆராய்ச்சிக்காகப் | எச்ஏ யூரியா திட்டத்திற்காக சில சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன , பைலட் ஆலை ஆய்வு முடிந்ததும் இந்தத் தொழில்நுட்பம் அமைச்சிற்கு மாற்றப்படும்.<br><br>டொலரின் நெருக்கடியின் காரணமாக கரிம தொகுப்புத் திட்டத்தின் முன்னேற்றம் மீண்டும் பாதிக்கப்பட்டது, ஏனெனில் செயற்கை வேலைகளுக்குத் தேவையான பெரும்பாலான எதிர்வினைகள் இறக்குமதி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பயன்படுத்தப்பட்டன. வணிகரீதியாக பொருத்தமான விண்ணப்பதாரர்கள் இனங்காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டாலும் உறுதிப்படுத்தப்படும் போதும் இந்த பொது நோக்க ஆரம்ப ஆலை அலகுகள் எந்த நேரத்திலும் கரிமத் தொகுப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படலாம் என்பது குறிப்பிடப்பட வேண்டும். | |
| (எ) | வணிகமயமாக்கும் முதன்மை நோக்கத்துடன் 2019 ஆம் ஆண்டில் அரசாங்க மானியத்தின் கீழ் ரூபா.27,712,850 கிரயத்தில் உலர் சுழலக்கூடியதும் செங்குத்தாக சிறப்பாக சீரமைக்கப்பட்டதுமான பல சுவர்கள் கொண்ட கார்பன் நானோ குழாய் வரிசைகளின் தொகுப்பானது இரசாயன நீராவி படிவு (CVD) செயற்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. 2021 மார்ச் மாதமளவில் அச் செயற்திட்டங்களை வணிகமயமாக்க கம்பனி தவறியிருந்தது. | அரசாங்க மானியங்கள் சமூக பொருளாதார நன்மைகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | குறைந்த வணிக திறன் மற்றும் உயர் காப்புரிமை கிரயம் காரணமாக சிஎன்ரீ உற்பத்தி செயன்முறையின் போது சில புதுமை காணப்படுகின்ற போதிலும் செயன்முறைக்கு காப்புரிமை பெறுவதில லை என தீர்மானிக்கப்பட்டது. எனினும் உயர்தர வெளியீடு தயாராகி வருகின்றதுடன் விரைவில் சமர்ப்பிக்கப்படும். | இந்த திட்டத்தின் கீழ் SLINTEC விஞ்ஞானி ஒருவர் தனது PhD படிப்பை வெற்றிகரமாக முடிக்க முடிந்தது. இது இந்த விஞ்ஞானி பிஎச்டிக்காக வெளிநாடு சென்று வெளிநாட்டில் குடியேறுவதைத் தடுப்பது மட்டுமல்லாமல் மதிப்புமிக்க அந்நியச் செலாவணியைச் சேமிக்கவும் உதவுகிறது. மேற்பார்வையாளர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டவுடன் இரண்டு முழு ஆய்வுகள் வெளியிடப்பட உள்ளன. |

## 4.45 மனேஜ்மென்ட் சேர்விஸஸ் றக்ஷன (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 491,112,502 | 489,043,777 | 98,463,069 | 118,963,636 | 2,068,725 | முனைப்பழியற்ற |
| **2019** | 583,689,301 | 583,133,628 | 126,289,280 | 180,660,901 | 555,673 | முனைப்பழியற்ற |
| **2020** | 700,921,898 | 697,459,039 | 146,579,314 | 235,306,493 | 3,462,859 | முனைப்பழியற்ற |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 491.11 | 489.04 | 98.46 | 118.96 | 2.07 |
| 2019 | 583.69 | 583.13 | 126.29 | 180.66 | 0.56 |
| 2020 | 700.92 | 697.46 | 146.58 | 235.31 | 3.46 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நிறுவனம் நாட்குறிப்பு பதிவுகளை மென் வடிவத்தில் பராமரித்து இருந்தது (எக்செல் தாள்) அத்துடன் பௌதீக நாட்குறிப்புக் கைச்சாத்துக்களும் பொறுப்பான அதிகாரியின் முறையான ஒப்புதலுடன் சீரான வரிசை தொடர் இலக்கத்திலும் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படவில்லை. | முகாமைத்துவமானது பொருத்தமான அதிகாரத்துடன் கூடிய நாட்குறிப்பு பதிவுகளை அனுப்புவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டின் உறுதியான | கணக்காய்வாளரின் பரிந்துரைப்படி உரிய ஒப்புதலுடன் தொடர்புடைய நாட்குறிப்பு பதிவுகளின் வன் பிரதிகளை கோப்பு செய்வதற்கு தேவையான | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறைமை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிறுவனத்தின் எல்லாக் கொடுப்பனவுகளுக்கும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினுடைய (தாய் நிறுவனம்) கொடுப்பனவு கைச்சாத்தே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சுயாதீன நிறுவனம் என்ற வகையில் கம்பனிக்காக ஒரு தனிப்பட்ட கொடுப்பனவு கைச்சாத்துச் செயல்முறை உருவாக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | முகாமைத்துவமானது உள்ளகக் கட்டுப்பாட்டின் உறுதியான முறைமையுடன் கூடிய தனித்துவமான கொடுப்பனவு கைச்சாத்து முறைமையை கம்பனிக்கு அறிமுகப்படுத்த வேண்டும். | தற்போது அனைத்து கொடுப்பனவுகளும் SLIC வங்கிக் கணக்கின் ஊடாகவே கையாளப்படுகிறது. எவ்வாறாயினும்இ MSRPL க்கு ஒரு நிதி அதிகாரியை ஆட்சேர்ப்பு செய்த பிறகு அனைத்துக் கொடுப்பனவுகளும் MSRPL இன் வங்கிக் கணக்கின் ஊடாகவே கையாளப்படும். அந்த நேரத்தில் MSRPL இன் கைச்சாத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (இ) | கம்பனியின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட கடன்கள் மற்றும் அதன் பெறுவனவுகள் என்பன கம்பனியின் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக அந்த மீதிகள் தாய் நிறுவனத்தின் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. 31 திசெம்பர் 2020 இல் ஊழியர் கடன் மீதி ரூபா.134,742,311. | ஊழியர கடனும் ஊழியர் நலனின் ஒரு பகுதியாகவே உள்ளது. ஆகவே முகாமைத்துவமானது கம்பனியின் ஏடுகளில் ஊழியர் கடன்களை பதிவு செய்வதற்கு தேவையான படிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். | இது தனி நிறுவனமாக இருந்தாலும், ஊழியர்கள் நேரடியாக SLIC இற்கு இரண்டாம் பட்சமாக உள்ளனர். இதன்படி ஆரம்பத்திலிருந்தே SLIC இலிருந்து ஊழியர் கடன்கள் வழங்கப்படுகின்றன. | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | எஸ்எல்ஏஜசீ உடனான நடைமுறைக் கணக்கில் இணக்கம் செய்யப்படாத ரூபா. 882,729 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | முகாமைத்துவமானது வேறுபார்ட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து | நாங்கள் ஏற்கனவே இணக்கத்தை குறிப்பிட்டுள்ளோம். மற்றும் 2021 நிதி | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வப்போது இணக்கம் செய்ய வேண்டும். | அறிக்கையின் இறுதியாக்கத்திற்கு முன் இதனை பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். | |
| (உ) | அங்கீகரிக்கப்பட்ட கொள்கை மற்றும் மருத்துவ விடுமுறை படி ரூபா.20,789,305 செலுத்துவதற்கான சபையின் ஒப்புதல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனி முறையான கொள்கையை உருவாக்கி சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலை பெற வேண்டும். | இது ஆரம்பத்திலிருந்தே கம்பனியின் நடைமுறைகளாகும். அத்துடன் எஸ்எல்ஏஜசீ இன் மனிதவளப் பிரிவுடன் இதைச் சேர்த்துக் கொள்ள நாங்கள் தொடர்பு கொள்வோம். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (ஊ) | அங்கீகரிக்கப்பட்ட கொள்கை மற்றும் புத்தாண்டு பரிசு படி ரூபா.1,215,000 இனை செலுத்துவதற்கான சபையின் ஒப்புதல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனி முறையான கொள்கையை உருவாக்கி சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலை பெற வேண்டும். | இந்த சட்டணத்திற்கு சபையின் ஒப்புதல் உள்ளது. | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (எ) | 1935 தொழிற்சங்க ஆணை (சட்டம்) இன் உறுப்புரை 8(1),8(2) மற்றும் வர்த்தகமானி இல.8160/25-10-1935 இன் பிரகாரம் நிறைவேற்றுத்தர சம்பளம் மீதான கூட்டு ஒப்பந்தத்தில் உள்ள ஆறு(06) தொழிற்சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளதா மற்றும் செல்லுபடியானதா என்பதை நிருபிக்கக்கூடிய ஆவணச்சான்று கணக்காய்வுக்கு கிடைப்பனவு அற்றதாக இருந்தது. | கூட்டு ஒப்பந்தத்திற்கு முன் தொழிற்சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளதா மற்றும் செல்லுபடியானகும் தொழிற்சங்கங்களா என்பதை சரிபாக்கும். | மனிதவளத்துறை இந்த விடயத்தில் EFC உடன் ஒருங்கிணைகிறது. மற்றும் தீர்க்கப்பட்ட பிறகு அவர்களின் தெளிவுரையுடன் கொண்டு வரப்படும். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (ஏ) | 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின் | கம்பனி சட்டத்தின் விதிகளுக்கு இணங்க | இந்த தொகையானது EPF இற்கு | இவ் விடயம் இற்றைவரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் முன்னைய வருடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ரூபா.47,545 மீதியானது நிதியத்திற்கு அனுப்பப்படவில்லை. | வேண்டும். | கொடுமதியாக இருக்கவில்லை. ஆதலால் இதனை திருப்புவதற்கான தேவையான நடவடிக்கைகள் அடுத்த வருடத்தில் எடுக்கப்படும். | நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (ஐ) | 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச்சட்டத்தின் பிரகாரம் முன்னைய வருடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ரூபா. 5,706 மீதியானது நிதியத்திற்கு அனுப்பப்படவில்லை. | கம்பனி சட்டத்தின் விதிகளுக்கு இணங்க வேண்டும். | இந்த தொகையானது EPF இற்கு கொடுமதியாக இருக்கவில்லை. ஆதலால் இதனை திருப்புவதற்கான தேவையான நடவடிக்கைகள் அடுத்த வருடத்தில் எடுக்கப்படும். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (ஒ) | கம்பனியானது இலங்கை வங்கி கோப்பரேட் கிளையில் பேணி வரும் நடைமுறை வங்கிக்கணக்கில் ரூபா.356,677 சாதக மீதியை கொண்டுள்ளது. இக் கணக்கானது 2018 ஆம் ஆண்டிலிருந்து செயலில் உள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்பட்டு இருந்திருக்கவில்லை. | வங்கிக் கணக்கை பராமரிப்பதன் நோக்கத்தை மதிப்பாய்வு செய்தல் மற்றும் பயன்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்தலும் அல்லது தேவையில்லா விட்டால் மூடுதலும். | இது எஸ்எல்ஏஜசீ க்கு வழங்கப்பட்ட சேவையால் பெறப்பட்டு இருந்தது. எம்எஸ்ஆர்பீஎல் க்கு புதிய கணக்கீட்டு அதிகாரியை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், எம்எஸ்ஆர்பீஎல் இற்குள் பணம் செலுத்தும் முறையை தொடங்குவதற்கும் நாங்கள் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றோம். அந்நேரத்தில் நிதி பயன்படுத்தப்படும். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (ஓ) | ரூபா.1,000,000 ஆனது 2018 ஆம் ஆண்டிலிருந்து நிலையான வைப்பாக உள்ளது. இதன் மீதியானது | நிலையான வைப்பை பராமரிப்பதன் நோக்கத்தை | இது எஸ்எல்ஜசீ க்கு வழங்கப்பட்ட சேவையால் | இவ் விடயம் இற்றைவரை நிறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 31 திசெம்பர் 2020 இல் ரூபா.1,213,750 ஆகும். கம்பனியின் குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில், இந்த நிலையான வைப்புத் தொகையை பராமரிப்பதற்கு போதுமான காரணங்களோ அல்லது பகுத்தறிவோ இருந்திருக்கவில்லை. | மதிப்பாய்வு செய்தல் மற்றும் அதனை சிறப்பாக பயன்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்தல் | பெறப்பட்டு இருந்தது. எம்எஸ்ஆர்பீஎல் இற்கு புதிய கணக்கீட்டு அதிகாரியை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், எம்எஸ்ஆர்பீஎல் க்குள் பணம் செலுத்தும் முறையை தொடங்குவதற்கும் நாங்கள் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றோம். அந்நேரத்தில் நிதி பயன்படுத்தப்படும். | பெற்றிருக்கவில்லை. |
| (ஔ) | 01 சனவரி 2020 முதல் ஈஎஸ்சீ ரத்து செய்யப்பட்டிருந்தாலும் கம்பனியானது ஈஎஸ்சீ செலுத்த வேண்டிய நிலுவையாக ரூபா.1,940,901 இனையும் மற்றும் ஈஎஸ்சீ பெற வேண்டிய நிலுவையாக ரூபா.4,346,862 இனையும் 31 திசம்பர் 2020 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்து கொண்டிருந்தது. | கம்பனியானது வரிச்சட்ட மாற்றங்களுக்கு இணங்க வேண்டும். | நாங்கள் இணக்கம் செய்து முடித்தவுடன் இது குறிப்பிடப்படும். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |
| (∴) | 31 திசெம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டிருந்திருக்கவில்லை. | அவ்வப்போது உள்ளகக் கணக்காய்வு மற்றும் மீளாய்வுகளைச் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது. | காலாண்டு அடிப்படையில் கணக்காய்வினை நடாத்த உள்ளகக் கணக்காய்ளாளரை நியமித்துள்ளோம். | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |

## 4.46 ஹெலன்கோ ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்


| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 0 | 6,415,872 | 648,026,090 | 7,233,477 | 40,704,220 | முனைப்பழியற்ற |
| 2019 | 39,142,280 | 4,003,549 | 683,974,038 | 17,881,539 | 35,138,732 | முனைப்பழியற்ற |
| 2020 | 21,624,281 | 3,918,547 | 684,681,298 | 5,132,441 | 17,705,734 | முனைப்பழியற்ற |




| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| கம்பனியின் 3.8 ஹெக்டெயர் நிலத்தை ரூபா. 177.97 மில்லியன் முதலீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றது. எவ்வாறாயினும் கொள்வனவு செய்யப்பட்ட நிலம் எந்த பயனுள்ள நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை. | முகாமைத்துவம் இந்தச் சொத்தை உத்தேசித்த நோக்கத்திற்காகவோ அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள நோக்கத்திற்காகவோ பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | தற்போதைய நிர்வாகமானது திட்டம் மற்றும் கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் தெடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான உத்தரவுகளை பெறுகின்றது. | முகாமைத்துவத்தினால் எந்த விதமான செயற்பாடுகளும் மேற்கொள்ளவில்லை. |

## 4.47 கனோவின் ஹோட்டல் ரு ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 97,835,928 | 163,950,973 | 1,085,441,236 | 96,096,328 | 44,853,064 | முனைப்பழியற்ற |
| 2019 | 137,630,774 | 101,032,665 | 1,173,897,099 | 157,059,219 | 79,426,574 | முனைப்பழியற்ற |
| 2020 | 130,152,100 | 96,693,193 | 1,225,121,193 | 157,059,218 | 49,716,495 | முனைப்பழியற்ற |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு பிரிவு 2018 ஏப்ரல மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு பதவியணியினரிற்கு கனோவின் ஹோட்டல் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுகள் இற்றைவரை நடைமுறைப்படுத்தப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொழிற்பாடுகளை கையளிப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. | |
| (ஆ) | ஆர்கேட்டின் மேல் தளம் ”A” பக்கமும் ”B” பக்கமும் 2012 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை பயன்படுத்தப்படவில்லை, இது ஒவ்வொரு பக்கத்திற்கும் அண்ணளவாக 3004 சதுர அடிகளைக் கொண்டுள்ளது. | மேல் தளத்தில் உள்ள இடத்தை பயன்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிறுவனத்தால் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | தடுப்பு நடவடிக்கை இற்றைவரை எடுக்கப்படவில்லை. |
| (இ) | கம்பனியினால் 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வுக் குழு கூட்டம் நடத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழு தவறாமல் கூடி நிறுவனத்தின் விவகாரங்களை மேற்பார்வையிடுவதை இயக்குனர் சபை உறுதி செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடத்துவதற்காக கம்பனி கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்துள்ளது. | 2019 இலிருந்து கணக்காய்வு குழுக் கூட்டடம் நடத்தப்படவில்லை. |
| (ஈ) | வருடாந்த நிலையான சொத்துக்கள் சரிபார்ப்பதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | முகாமைத்துவத்தினால் வருடாந்த சொத்துக்களை சரிபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனத்தினால் தடுப்பதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெப்ரவரி 2022 வரை நிலையான சொத்துக்களை சரிபார்க்க நிறுவனம் இருப்பு கணக்கெடுப்பு சபையினை நடைமுறைப் படுத்தவில்லை. |
| (உ) | நிறுவப்பட்ட குழாய் கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், ஆர்கேட் நுகர்வுக்காக நிறுவனம் வாடகை அடிப்படையில் தண்ணீரை வாங்கியது. இந்த நோக்கத்திற்காக மீளாய்வாண்டில் நிறுவனத்தால் ரூபா.5,526,589 | நிலையான மற்றும் தொடர்ந்து நீர் விநியோகத்தை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். | வெலிபென்ன சேவை வலயத்திற்கு நீர் பற்றாக்குறை காரணமாக குழாய் மூலம் நீர் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் | தேசிய நீர் வழங்கல் சபையுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடுதலாகச் செலுத்தப்பட்டது. வளாகத்திற்கு போதுமான நிலையான நீர் வழங்கல் இல்லாதது, ஆர்கேட்டின் விவகாரங்கள் மற்றும் ஆர்கேட் வழங்கும் சேவையின் திறம்படச் செயல்பாட்டை மோசமாக பாதிக்கும். | | மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் நிறுவனம் கோரிக்கை விடுத்திருந்தது. | |
| (ஊ) | கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயற்திட்டம் கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கான வருடாந்த செயற்திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதன் மூலம் நிறுவனத்தின் தந்திரோபாய செயற்பாட்டை சபை அமைக்க வேண்டும். | எதிர்காலத்தில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தினால் கூட்டிணைந்ததிட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 4.48 சினோலங்கா ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 11,845,254 | 214,570,779 | 21,049,376,711 | 2,658,856,918 | (202,725,525) | முனைப்பழியற்ற |
| **2019** | 12,582,592 | 5,145,765,374 | 22,887,517,789 | 5,577,874,954 | (5,133,182,782) | முனைப்பழியற்ற |
| **2020** | 17,160,417 | 210,450,301 | 22,364,877,039 | 5,247,733,550 | (193,289,884) | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்க்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் | முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு பங்கு மற்றும் கடன் மூலம் யூஎஸ்டி 175 மில்லியன் உட்செலுத்துவதற்கான திட்டத்தில் நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. | திட்டத்தைத் தொடர்வதற்கான நிதியைத் திரட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைக்கும் பணியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாகம் அறிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதிப்பற்றாக்குறையின் காரணமாக கிராண்ட் ஹயாட் கொழும்பு திட்டத்தின் நிர்மாண பணிகளை தொடர்வதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இறுதி தாய் நிறுவனம்) அல்லது அரசாங்கத்தின் நிதி உதவி தேவைப்படும். | | | |
| (ஆ) | மூன்று ஓப்பந்த உடன்படிக்கை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக திட்ட நீடிப்புக்காக ரூபா. 913,174,853 தொகையை கம்பனி செலவிட்டிருந்தது. | ஓப்பந்தங்களை வழங்குவதற்கு முன் முகாமைத்துவமானது போதுமான அளவு நிதி வருவதை உறுதி செய்ய வேண்டும். இது இந்த தன்மையான தேவையற்ற செலவைத் தவிர்க்க இயலுவாக இருக்கும். | கம்பனி அனுபவிக்கும் நிதி நெருக்கடிகளால் திட்டத்தை முடிப்பது தாமதமாக இருக்கிறது அத்துடன் இதன் விளைவாக நீடித்த செலவுகள் ஏற்படுகின்றன இது இந்த தன்மையுடைய திட்டத்தில் தவிர்க்க முடியாதது. | காலதாமத கட்டணத்தை வசூலிக்க ஒப்பந்ததாரர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. |
| (இ) | 15 ஆகஸ்ட் 2012 இன் அசாதாரண வர்த்தமானி இலக்க 1771/18 கீழ் கம்பனி யூஎஸ்டி 158,890,000 (ரூபா.18.5 பில்லியன்) மொத்த முதலீட்டில் இல.116, காலி வீதி, கொழும்பு 03 இல் 90 சேவைக் குடியிருப்புக்களுடன் 475 அறைகள் கொண்ட நகர ஹோட்டலை நிர்மாணித்து செயல்படுத்தும் திட்டத்தை தொடங்கியிருக்கிறது. மேற்கூறிய வர்த்தமானியின் படி செயற்திட்டத்தின் தொடக்க திகதி 19 யூலை 2012 ஆக இருந்தது மற்றும் வணிக நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் தொடங்குதல் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 24 | முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டிலிருந்து எதிர்பார்த்த வருவாயைப் பெறவும் திட்டச் செலவு அதிகரிப்பதைத் தடுக்கவும் கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் முகாமைத்துவம் திட்டத்தை முடிக்க வேண்டும். | தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இது அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளைச் சார்ந்து இயங்கும் கம்பனி என்பதால், முகாமைத்துவம் முன்னோக்கிச் செல்லும் வழியில் தொடர்புடைய அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது. | 31 திசெம்பர் 2021 வரை நிதி முன்னேற்றம் 50% மற்றும் பௌதீக முன்னேற்றம் 52% ஆக காணப்படுகின்றது. |


| | | | | |
|---|---|---|---|---|
| | மாதங்களுக்குள் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் அந்தத் செயற்திட்டம் இன்னும் நிறைவடைந்திருக்கவில்லை. 10 யூலை 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இலக்கம் 20/1042/204/050-I இன் படி, இந்த திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு சுமார் ரூபா. 60 பில்லியன் ஆகும். 458 அறைகளில் 236 அறைகளைக் கொண்ட ஒரு முழுமையான ஹோட்டலாக செயல்பட 31 ஆம் நிலையுடன் 16 நிலைகளை பகுதியளவில் நிறைவு செய்ய அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.<br><br>கட்டம் 2, மீதமுள்ள 236 அறைகள் மற்றும் 100 சேவை அடுக்குமாடி குடியிருப்புக்களை நிறைவு செய்யும். முதல் கட்ட நிறைவு திகதியின் இலக்கு ஆகஸ்ட் 2021 ஆகும்.<br><br>எவ்வாறாயினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான தாமதமாக உண்மையான செயற்திட்ட நிறைவு திகதியான 19 யூலை 2014 இலிருந்து ஐந்து (05) ஆண்டுகள் மற்றும் ஐந்து (05) மாதங்கள் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1 இற்கு அமைய நிறுவனமானது பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | கம்பனி அதன் மூலோபாய நோக்கங்களை அடைய ஒரு பெருநிறுவனத் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். | திட்டத்தின் கட்டுமானத்தை முடிக்க கம்பனிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் செயற்றிட்ட நிறைவுத்திட்டம் நடைமுறையிலுள்ளது இது தேவைக்கேற்ப | 31 சனவரி 2022 வரை கூட்டிணைந்த திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெருநிறுவனத் திட்டமாக நீடிக்கப்பட உள்ளது. | |
| (உ) | மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | கம்பனி அதன் வருடாந்த இலக்குகளை அடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். | திட்டத்தை முடிப்பது தொடர்பான செயல் திட்டம் உள்ளன. | 31 சனவரி 2022 வரை வருடாந்த செயற்திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில் லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.7.5 இற்கு அமைய செயற்பாடுகள் உண்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அமைப்பு முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளக கணக்காய்வு முகாமையாளரின் பொறுப்பாகும். ஆனால் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரின் பங்கு கொடுப்பனவுகளின் மீது முன் கணக்காய்வினை நடாத்துவதும் கொடுப்பனவு கைச்சாத்துக்களை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. | பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவ கருவியாக கம்பனிக்கான உள்ளக கணக்காய்வின் வினைத்திறனான தொழிற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். | 2015 இலிருந்து முறையாகப் பின்பற்றும் கொள்முதல் செயல்முறையின் மூலம் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்திற்கு கால இடைவெளியில் உள்ளக கணக்காய்வு செயற்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. அவர்கள் 30 யூன் 2018 வரை காலாண்டு அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு அவர்களை பரிந்துரைக்கப்பட்டும் கட்டுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாலும் கோவிட்19 கட்டுப்பாடுகளாலும் உள்ளக கணக்காய்விற்கு அழைக்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டிலிருந்து | நடைமுறையில் உள்ள தொழில்முறை நிறுவனத்திற்கு வெளிவாரியாக 2022 ஆம் ஆண்டிற்கான உளளகக் கணக்காய்வு செயல்பாட்டை மேற்கொள்ள கணக்காய்வு குழுவினால் தீர்மானம் செய்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உள்ளகக் கணக்காய்விற்கு வெளிக்களம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். உள்ளக கணக்காய்வு முகாமையாளர் மூலம் முக்கிய விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. | |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.1 இற்கு அமைய இந்தக் குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது வழக்கமான அடிப்படையில் கூட வேண்டும். எவ்வாறாயினும் மதிப்பாய்வில் உள்ள நிதியாண்டில் ஒரு முறை மாத்திரமே கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. | பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் படி கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். | பொது முடக்கம் காரணமாக கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் கணக்காய்வு குழுக் கூட்டங்களை வழக்கமான அடிப்படையில் நடத்த முடியவில்லை. | கணக்காய்வுக் குழு கூட்டங்கள் வழக்கமான அடிப்படையில் நடத்தப்படவில்லை . |
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொத முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இற்கு அமைய கம்பனிக்கான வருடாந்த பாதீட்டை நிறுவனம் தயாரித்திருக்கவில்லை அத்துடன் அந்த பாதீடு வழக்கமான அடிப்படையில் கண்காணிக்கப்பட்டிருக்கவுமில்லை. | கம்பனியின் செலவினங்களை முறையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முகாமைத்துவத்தை செயல்படுத்துவதற்காக வினைத்திறனான பாதீட்டு கட்டுப்பாடு கம்பனியில் இருப்பதை சபை உறுதி செய்ய வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | முகாமைத்துவத்தின் கூற்றுப்படி, கட்டமானச் செயற்திட்டத்திற்கான வருடாந்த பாதீடு 2022 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டது. எனினும், அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் நகல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 4.49 கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 34,397,900 | 8,725,269 | 18,886,743,754 | 34,792,015 | 25,672,631 | முனைப்பழியற்ற |
| **2019** | 9,435,080 | 9,931,740 | 18.883,814,642 | 32,110,007 | (496,660) | முனைப்பழியற்ற |
| **2020** | 1,225,668 | 6,540,696 | 18,881,828,851 | 18,347,461 | (5,315.028) | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (துணைக்கம்பனி) இயக்குனர் சபையானது ஹம்பாந்தோட்டையில் கட்டுமானம் செய்யப்படுகின்ற ஹோட்டலினுடைய திட்டத்தை | முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் | நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகமானது திட்டம் மற்றும் கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் | இவ் விடயம் இற்றைவரை நிறைவு பெற்றிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. மேலும் பொது நிர்வாக மேம்பாட்டு அமைச்சினால் கம்பனியினுடைய பங்குகளை கம்பனியில் அவர்களின் பங்குகள் உள்ள விகிதத்தில் அதன் பங்குதாரர்களுக்கு மாற்றுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. எனவே கம்பனியை கலக்க முடிவு செய்திருக்கவில்லை. | ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | தொடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான உத்தரவுகளை பெறுகின்றது. | |
| (ஆ) | கம்பனியின் முகாமைத்துவமானது கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கான வளம் தன்னிடம் இருப்பதாக திருப்தியடைந்துள்ளது. மேலும் கம்பனியின் தொடர்ந்தியங்கும் திறனைப்பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருண்மையான நிச்சயமற்ற தன்மையையும் நிர்வாகம் அறிந்திருக்கவில்லை.இதன்படி, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2020 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டு அறிக்கை திகதியில் நடைபெற்று வருகின்றது. எவ்வாறாயினும் நிதிப்பற்றாக்குறையின் காரணமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இறுதி தாய் நிறுவனம்) அல்லது அரசாங்கத்தின் நிதி உதவி தேவைப்படுகின்றது. | முகாமைத்துவமானது திட்டத்தின் எதிர்கால வழிகாட்டுதலுக்கு உரிய அதிகாரியுடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு பங்கு மற்றும் கடன் மூலம் யூஎஸ்டி 175 மில்லியன் உட்செலுத்துவதற்கான திட்டத்தில் நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது | திட்டத்தைத் தொடர்வதற்கான நிதியைத் திரட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைக்கும் பணியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. |
| (இ) | 2003 யூன் 02 திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1 இற்கு அமைய | கம்பனி அதன் நோக்கங்களை அடைய ஒரு கூட்டிணைந்த | திட்டத்தின் கட்டுமானத்தை முடிக்க கம்பனிக்கு தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது | 31 சனவரி 2022 வரை கூட்டிணைந்த திட்டம் எதுவும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனமானது கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து இருக்கவில்லை. | திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். | மற்றும் செயற்றிட்ட நிறைவுத்திட்டம் நடைமுறையிலுள்ளது இது தேவைக்கேற்ப கூட்டிணைந்த திட்டமாக நீடிக்கப்பட உள்ளது. | தயாரிக்கப்படவில்லை. |
| (ஈ) | மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | கம்பனி அதன் வருடாந்த இலக்குகளை அடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். | திட்டத்தை முடிப்பது தொடர்பான செயல் திட்டம் உள்ளது. | 31 சனவரி 2022 வரை வருடாந்த செயற்திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 3.7.5 இற்கு அமைய செயற்பாடுகள் உண்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக அமைப்பு முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வது உள்ளக கணக்காய்வு முகாமையாளரின் பொறுப்பாகும். ஆனால் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரின் பங்கு கொடுப்பனவுகளின் மீது முன் கணக்காய்வினை நடாத்துவதும் கொடுப்பனவு கைச்சாத்துக்களை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. | கூட்டடிணைந்த திட்ட நோக்கங்களை அடைவதற்கான வினைத்திறனுள்ள முகாமைத்துவ கருவியாக கம்பனிக்கான உள்ளக கணக்காய்வின் வினைத்திறனான தொழிற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். | 2015 இலிருந்து முறையாகப் பின்பற்றும் கொள்முதல் செயல்முறையின் மூலம் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்திற்கு கால இடைவெளியில் உள்ளக கணக்காய்வு செயற்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. அவர்கள் 30 யூன் 2018 வரை காலாண்டு அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு அவர்களை பரிந்துரைக்கப்பட்டும் கட்டுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதாலும் கோவிட்19 கட்டுப்பாடுகளாலும் உள்ளக | 2022 ஆம் ஆண்டிற்கான உளளகக் கணக்காய்வு செயற்பாட்டை நடைமுறையில் உள்ள தொழில்முறை நிறுவனத்திற்கு வெளிவாரியாக செய்ய கணக்காய்வுக் குழுவினால் தீர்மானம் செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கணக்காய்விற்கு அழைக்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டிலிருந்து உள் கணக்காய்விற்கு வெளிக்களம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். உள்ளக கணக்காய்வு முகாமையாளர் மூலம் முக்கிய விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. | |
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.1 இற்கு அமைய இந்தக் குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது வழக்கமான அடிப்படையில் கூட வேண்டும். எவ்வாறாயினும் மதிப்பாய்வில் உள்ள நிதியாண்டில் ஒரு முறை மாத்திரமே கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. | பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் படி கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயற்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். | பொது முடக்கம் காரணமாக கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் கணக்காய்வு குழுக் கூட்டங்களை வழக்கமான அடிப்படையில் நடத்த முடியவில்லை. 2022 ஆம் ஆண்டில் இதனை கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும். | கணக்காய்வுக் குழு கூட்டங்கள் வழக்கமான அடிப்படையில் நடத்தப்படவில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இற்கு அமைய மதிப்பாய்வில் உள்ள நிதியாண்டிற்கான வருடாந்த பாதீட்டை நிறுவனம் தயாரித்திருக்கவில்லை. | கம்பனியின் செலவினங்களை முறையான கட்டுப்பாட்டிற்குள கொண்டு வருவதற்கு முகாமைத்துவத்தை செயல்படுத்துவதற்காக வினைத்திறனான பாதீட்டு கட்டுப்பாடு கம்பனியில் இருப்பதை சபை உறுதி செய்ய வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4.50 இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 44,379,869,000 | 37,229,269,000 | 198,658,277,000 | 137,574,392,000 | 7,150,600,000 | முனைப்பழியுள்ள |
| **2019** | 48,608,572,000 | 40,403,565,000 | 211,699,744,000 | 149,426,747,000 | 8,205,007,000 | முனைப்பழியுள்ள |
| **2020** | 52,614,494,000 | 44,642,712,000 | 235,630,350,000 | 172,508,826,000 | 7,971,782,000 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை உயர் நீதிமன்றத்தால் 04 யூன் 2009 இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் தனியார் உடமை காலப்பகுதியின் போது கம்பனியின் இலாபங்களை ஏற்படுத்துமாறு திறைசேரி செயலாளரிற்கு பணிக்கப்பட்டது, முன்னைய தாய்ககம்பனிக்கு பங்களிக்ககூடிய இலாபங்கள் | உயர் நீதிமன்றத் தீர்ப்பை கடைபிடிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. | முன்னைய தாய்ககம்பனிக்கு பங்களிக்ககூடிய இலாபங்கள் கணிப்பிடப்பட்டு தீர்ப்பனவு செய்யுமாறு உயர் நீதிமன்றத்தால் திறைசேரி செயலாளரிற்கு பணிக்கப்பட்டது. எனவே இபாபத்தை கணிப்பிடுவதில் கம்பனிக்கு நேரடியான ஈடுபாடுகள் இருக்கவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணிப்பிடப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட பங்களிக்கக்கூடிய இலாபங்களின் நிலுவையாகவுள்ள தீர்ப்பனவு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | இலங்கை டிஸ்ரில்லறீஸ் பிஎல்சீ கம்பனியிடமிருந்து பெற வேண்டிய தொகை ரூபா.168,763,399 மீதியை உறுதிப்படுத்துதல் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | மீதிகளை வசூலிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. | டிஸ்ரில்லறீஸ் தொகுதிக் கம்பனிகளிடமிருந்து பெற வேண்டியவைகளை இம் மீதி உள்ளடக்கப்பட்டுள்ளது. 04 யூன் 2009 இல் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் கொடுப்பனவு இறுதிப்படுத்தப்பட்டதும் இத் தொகை சீராக்கம் செய்யப்படும். | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (இ) | 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறையின் (திருத்தப்பட்டது) சட்டத்தின் 53 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி நீண்டகால காப்புறுதி வணிகம் மற்றும் பொது காப்புறுதி வணிகம் என இரண் தனித்தனி கம்பனிகளாக பிரித்திருக்கவில்லை. | ஐஆர்சீஎஸ்எல் இன் விதி முறைகள் மற்றும் தேவைப்பாடுகளை பின்பற்ற பரிந்துரைக்கப்படுகிறது. | எங்கள் கோரிக்கையின் பேரில் 31 திசெம்பர் 2020 வரை வணிகத்தைப் பிரிப்பதற்கான தேவையை பூர்த்தி செய்வதற்காக 2020 யூன் 15 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் ஐஆர்சீஎஸ்எல் நீடிப்பை வழங்கியிருக்கிறது. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஈ) | 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை பிரமாணங்களின் 31(1) ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தபட்ச கடன் மற்றும் நிதி வலிமை மதிப்பீடுகளைக் கொண்ட மறுகாப்புறுதி நிறுவனத்துடன் மட்டுமே காப்பீட்டாளர்கள் மறுகாப்புறுதியை மேற்க்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் | மறுகாப்பீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதில் ஐஆர்சீஎஸ்எல் இன் விதி வழிகாட்டுதல்களை பின்பற்ற பரிந்துரைக்கப்படுகிறது. | உலகளாவிய தொற்றுநோய் காரணமாக அதிக மதிப்பீட்டைக் கொண்ட மறுகாப்பீட்டாளர்களிடமிருந்து இடர்களுக்கான மறுகாப்பீட்டைக் கண்டறிவது மிகவும் கடினமாகி வருகிறது. ஏனெனில் பல மறுகாப்பீட்டாளர்கள் குறிப்பிட்ட | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனம் தான் விரும்பிய மறுகாப்புறுதி ஏற்பாடுகளைஇ மறுகாப்பீட்டாளரின் மதிப்பீட்டுக் காப்பறுதி மேற்கொள்வதற்காக குறிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் தொடர்புடைய மதிப்பீட்டுத் தேவைப்பாடுகளுடன் இணங்காத மறுகாப்பீட்டாளருடன் செய்திருப்பது என்பது அவதானிக்கப்பட்டது. | | பிராந்தியங்களிலிருந்து வணிகத்தை எழுதுவதை நிறுத்திவிட்டனர் அல்லது ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் கடுமையான வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ளனர். அந்த காரணத்திற்காக இந்த மறுகாப்பீட்டாளரிடம் 3% சிறு பங்கை வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அடுத்த புதுப்பித்தலின் போது இந்த மறுகாபீட்டை மற்றுமொரு மறுகாப்பீட்டாளருடன் மாற்ற எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம். | |
| (உ) | 42 செயல்படுத்தப்படாத வங்கிக்கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. | முகாமைத்துவம் செயல்படாத கணக்குகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் பொருத்தமாக இருந்தால், செயல்படாத வங்கிக்கணக்குகளை மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் வங்கிக்கணக்கு இணக்க கூற்றுகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் தேவையில்லாமல் அதிகரித்து வருவதைக் குறைக்க சில வங்கிக்கணக்குகளை கிளஸ்டர் செய்யும் முன்னோடித் திட்டத்தை கம்பனி செயல்படுத்தியிருந்தது. எதிர்காலத்தில் புதிதாக திறக்கப்படும் கிளைகளினால் எஸ்எல்ஜசீ பயன்படுத்தப்படும். | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஊ) | காப்புறுதி வணிகத்திற்காக எஸ்எல்ஜசீ ஒரே ஒரு மறுகாப்பீட்டாளருடன் மட்டுமே ஒப்பந்தமாகியிருக்கிறது. | மேற்கூறிய விடயத்தில் அதிக அக்கறையுடன் இருக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. | அந்த மறுகாப்பீட்டாளர் பல தசாப்தங்களாக எங்களின் மறுகாப்பீட்டாளராக இருந்திருக்கின்றார் மற்றும் SLIC க்கு ஒத்துப்போகும் இயல்புடையவராக இருந்து | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருகின்றார். மேலும் இலங்கையிலுள்ள அனைத்து காப்புறுதி நிறுவனங்களிலும் AA- (தர மற்றும் வறுமை வீதம்) மதிப்பீட்டைக் கொண்ட மிகப் பெரிய மற்றும் உறுதியான மறுகாப்பீட்டாளராவார். ஆகவே முடிவுறுத்தல் ஆபத்து மிகக் குறைவாகும். மறுகாப்பீட்டாளரால் வழங்கப்படும் காப்பீடு போர்ட்போலியோ முடியும் வரை இருக்கும். | |
| (எ) | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனியான ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டடானது ஹம்பாந்தோட்டை ஹயாட் ரீஜென்சி ஹோட்டலை கட்டுமானம் செய்ய 3.8 ஹெக்டெயர் நிலத்தை ரூபா.177.97 மில்லியன் முதலீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றது. எவ்வாறாயினும் எந்த ஒரு செயற்பாடும் ஆரம்பித்திருக்கவில்லை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நிலம் எந்த பயனுள்ள நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படவுமில்லை. | மூலோபாய முடிவுகளைக் கருத்தில் கொண்டு அதன் மூலம் எதிர்பார்த்தபடி நேர்மறையான முடிவுகளைப் பெறுவதன் மூலம் சொத்தைப் பயன்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கம்பனியின் நிர்வாகமானது கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் தொடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான உத்தரவுகளை நாடுகின்றது. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஏ) | கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் துணைநிறுவனமான | மூலோபாய முடிவுகளைக் கருத்தில் கொண்டு | கம்பனியின் நிர்வாகமானது கம்பனியை முன்னெடுத்துச் செல்லும் வழியில் | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் மூலம் செயல்படுத்தப்பட்ட கிராண்ட் ஹயாட் பிரஞ்சைஸ் ஹோட்டல் திட்டத்தில் தொகுதி ரூபா. 13.5 பில்லியனை முதலீட்டிருந்தது. இத் திட்டத்தை ரூபா. 20 பில்லியன் செலவில் 2014 ஆம் ஆண்டில் முடிக்க ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. அதேபோல் இத்திட்டத்தின் கட்டுமானங்கள் 2018 இலிருந்து ஓரளவு நிறுத்தப்பட்டு 2019 இல் முழுமையாக நிறுத்தப்பட்டது. மேலும், தற்போது திட்டத்தை முடிக்க மதிப்படப்பட்ட செலவு ரூபா.60 பில்லியன் ஆகும்.


திட்டத்தை செயல்படுத்தி முடிப்பதற்கும் மற்றும் அதன் மூலம் முன் கணிப்புச் செய்த காசுப்பாய்ச்சலில் எதிர்பார்த்தபடி நேர்மறையான முடிவுகளைப் பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தொடர்புடைய அமைச்சகத்திடமிருந்து தேவையான உத்தரவுகளை நாடுகின்றது.

## 4.51 லிற்றோ காஸ் லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 40,326,428,839 | 39,870,041,675 | 25,429,770,636 | 11,848,587,127 | 456,387,163 | முனைப்பழியற்ற |
| **2019** | 44,719,625,153 | 39,792,363,416 | 30,043,978,698 | 14,110,122,789 | 4,927,261,736 | முனைப்பழியற்ற |

**2020** நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2013, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இரத்துச் செய்யப்பட்ட நகர்வுக்காக எல்பி காஸ் இறக்குமதிக்காக துறைமுகம் மற்றும் விமான நிலையம் அபிவிருத்தி தீர்வை முறையே ரூபா.15.5 மில்லியன், ரூபா. 15.1 மில்லியன மற்றும் ரூபா. 29.8 | நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | கூறப்பட்ட நிலுவையை வசூலிப்பதற்கு கம்பனி இந்த சிக்கலை இலங்கை சுங்கத்திற்கு வழங்கியுள்ளது. | ரூபா. 15.1 மில்லின் மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியது. எவ்வாறாயினும், கம்பனி நிலுவையை மீள அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை இற்றைவரை எடுத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 31 திசெம்பர் 2019 திகதியிலுள்ளவாறு, மொத்த கொள்கலன் வைப்பு வருமதிகளில் ரூபா 5.2 மில்லியன் காணப்பட்டது. அதில் ரூபா. 4.55 மில்லியன் 2006 தொடக்கம் 2014 காலப்பகுதியுடன் தொடர்புடையது. எவ்வாறாயினும்,முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையுடன் ஒப்பிடும் போது, கம்பனியானது அந்தத் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை இற்றைவரை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை மீட்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கம்பனி மீள் அறவீட்டு செயற்பாட்டினை தொடர்கின்றன. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (இ) | பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் செயற்பாட்டு திட்டத்துடன் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினங்கள் பாதீட்டில் உள்ளடங்கப்பட்டுள்ளது. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஏற்பாடுகளுக்கு முரணாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா. 2,269,737 தொகையானது தலைவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | இப்பிரச்சினைக்கு எந்தவிதமான நடவடிக்கையும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடைமுறை ஆண்டில் சிரேஸ்ட அலுவலக அதிகாரிக்கு பதிலாக ஊக்குவிப்ப கொடுப்பனவு தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலையுடன் | கம்பனி வழிகாட்டலில் உள்ள | 19 செப்ரெம்பர் 2019 ஆம் திகதியில் முகாமைத்துவ | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவுசெய்யப்பட்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு கம்பனியால் அனுப்பிய கடிதத்தில் நிறுவன அமைப்பு வரைபடம், அனைத்து பதவியணி கட்டமைப்பு, சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்த பதில்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | |
| (ஊ) | சபை மற்றும் அமைச்சுடன் பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | 19 செப்ரெம்பர் 2019 ஆம் திகதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு கம்பனியால் அனுப்பிய கடிதத்தில் நிறுவன அமைப்பு வரைபடம், அனைத்து பதவியணி கட்டமைப்பு, சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்த பதில்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |


| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | சம்பளங்களும் மற்றும் படிகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் பொது திறைசேரி செயலாளரினுடைய அங்கீகாரமின்றி திருத்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருந்திருக்கவில்லை. எவ்வாறாயினும், நிறுவனம் மேலே கூறப்பட்ட விதிமுறைக்கு இணங்கவில்லை. இதன் விளைவாக, நிர்வாக ஊதியத்தின் ஒரு மாதத்திற்கான மொத்த சம்பளம் ரூபா. 38,000 முதல் ரூபா. 1,000,000 வரை நிறுவப்பட்டது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | 19 செப்ரம்பர் 2019 ஆம் திகதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு கம்பனியால் அனுப்பிய கடிதத்தில் நிறுவன அமைப்பு வரைபடம், அனைத்து பதவியணி கட்டமைப்பு, சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்த பதில்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஏ) | தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக் குழுவின் கொடுப்பனவுகளை தீர்மானிப்பதற்கு முன்னர், வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையையும் நிதி அமைச்சரின் ஒப்புதலையும் நிறுவனம் பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை குழுவின் கொடுப்பனவுகளை தீர்மானிப்பதற்கான குழுவின் அங்கீகரத்தினை மட்டுமே கம்பனி பெற்றுக்கொண்டுள்ளது. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஐ) | கம்பனி சுற்றறிக்கையின் விதிக்கு மாறாக தலைவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளில் ஈபீஎவ் மற்றும் ஈரீஎவ் செலுத்தப்பட்டிருந்தன. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | இப்பிரச்சினைக்கு எந்தவிதமான நடவடிக்கையும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடப்பு ஆண்டில் சிரேஸ்ட அலுவலக உத்தியோகத்தருக்கான கொடுப்பனவைச் செய்வதற்குப் பதிலாக தலைவரின் கொடுப்பனவுகள் தொடர்பான சட்டரீதியான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை. |
| (ஒ) | 100 வழிபாட்டுத் தலங்களுக்கு ரூபா.8,070,000 மதிப்பீட்டில் எல்பீஜீ குழாய்கள் மற்றும் கனரக எரிவாயு அடுப்புகளை இலவசமாக வழங்குவதற்கான திட்டம், முறையான சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல் நிறுவனத்தால் சீஎஸ்ஆர் நடவடிக்கையாக தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த உபகரணங்களை 82 வழிபாட்டுத் தலங்களுக்கு மட்டுமே பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளது மற்றும் 317 இல் 192 கனரக எரிவாயு அடுப்புகளுடன் உள்நாட்டு ரப்பர் குழாய் மற்றும் 89 இல் 18 பன்மடங்கு பொருட்கள் மபிமா கடைகளில் நீண்ட காலத்திற்கு செயலற்ற நிலையில் இருந்தன. சபையினால் குறிப்பிடப்பட்ட மத இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதா என்பதையும், விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து உபகரணங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட மத இடங்களில் உடனடியாக நிறுவப்பட்டதா என்பதையும் கணக்காய்வு செய்ய சான்றுகள் கிடைக்கவில்லை. சபையின் தீர்மானத்திற்கு மாறாக, விலைமனுகோரல் நடைமுறை மூலம் சேவை வழங்குநர்கள் தேர்வு செய்யப்படவில்லை, மேலும் சேவை வழங்குநர்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. | திட்டப்பணிகள் முறையான சாத்தியக்கூறு ஆய்வுடன் தொடங்கப்பட்டு, விலைமனுகோரல் முறை மூலம் சேவை வழங்குநர்களைத் தேர்வு செய்ய வேண்டும். | தற்போது, கம்பனி செயற்திட்டத்தைத் தொடர்கின்றது. | தற்போது, கம்பனி செயற்திட்டத்தைத் தொடர்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | காஸ் கம்பனியின் முன்னால் நிர்வாக நிறுவுனரினால் 1986 ஆம் ஆண்டில் ரூபா. 13 மில்லியன் பெறுமதியில் உருகொடவத்த என அழைக்கப்பட்ட நிலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிலத்தின் உறுதி வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் கம்பனியின் பெயரின் கீழ் மாற்றி பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் கம்பனியினால் அந்த நிலம் கொள்வனவு செய்யயப்பட்ட திகதியிலிருந்து உபயோகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரிமையை கம்பனிக்கு மாற்ற கம்பனி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சிரேஸ்ட சட்ட முகாமையாளர் என்ற முறையில், காணி கையகப்படுத்துதல் சட்டத்தின் விதிகளின் கீழ் இந்த சொத்தின் உரிமையாளரை நிறுவனம் கொண்டுள்ளது மற்றும் 2006 முதல் தம்வசம் உள்ளது. காணியின் முழு உரிமையும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால்பரிமாற்றப் பத்திரத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் காணப்படவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

## 4.52 லிற்றோ காஸ் ரேமினல் லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,651,460,692 | 625,408,873 | 11,501,468,451 | 2,576,847,707 | 2,026,051,819 | முனைப்பழியுள்ள |
| **2019** | 2,766,967,293 | 750,221,929 | 12,178,620,589 | 2,390,906,077 | 2,016,745,364 | முனைப்பழியுள்ள |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | | | | |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க காப்புறுதித்திருத்த சட்டத்திற்கமைய இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தை வேறுபடுத்தும் நோக்கத்திற்காக ரூபா. 100 மில்லியன் வட்டியற்ற முற்ப்பணத்தை சிறீலங்கா | கம்பனி முற்பணத்தை மீள அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டிற்கு (SLIHL) மாற்றுவதற்கு 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி சபையால் 2014 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க சுற்றிக்கை தீர்மானத்தின் பிரகாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டினால் (SLIHL) 31 ஆகஸ்ட் 2015 அல்லது அதற்கு முன்னர் காசாகவோ அல்லது பங்கு இலாபத்தினூடாகவோ மீளச்செலுத்தப்பட வேண்டும். சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டிணை (SLIHL) கூட்டிணைக்கும் போது தலா ஒரு சாதாரண பங்கை கொண்டுள்ள தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் ஆரம்பபங்காளர்களாக அடையாளப்படுத்தப்பட்டு இருந்தார்கள், ஏற்கனவே கூறப்பட்ட இரண்டு பங்குகளும் திறைசேறி செயலாளருக்கு சாத்தியமான வகையில் விரைவாக மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும் இதுவரையில் சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டினால் (SLIHL) முற்பணம் மீள செலுத்தப்பட்டிருக்கவில்லை. மற்றும் இங்கு முற்பண தீர்ப்பனவு தொடர்பாக கம்பனிக்கும் சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங்

லிமிடெட்டிற்கும் (SLIHL) இடையில் உடன்படிக்கை இருந்திருக்கவில்லை. மேலும், கம்பனிப் பதிவாளருடைய பதிவுகளின்படி சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டினது (SLIHL) மொத்த இரண்டு பங்குகளும் இதுவரை இரு தனிநபர்கள் சார்பாக திறைசேரி செயலாளருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆனால் நிறுவனத்திற்கு சொந்தமான அத்தகைய சொத்துகளை மற்றும் முற்பணத்தை மீட்டெடுப்பது கம்பனிக்கு சந்தேகமாக இருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிரப்பி நிலையங்கள், குழாய்வழிகள் மற்றும் சேமிப்புத்தொட்டிகள் பாவித்தமைக்காக வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா லிமிடெட்டிடமிருந்து செயல்திறன் கட்டணமாக மொத்தமான பகுதிகளுக்காக ஒரு மெட்ரிக்தொன்னுக்கு 51 யூஎஸ் டொலர் மற்றும் நுகர்வுப் பகுதிக்கு ஒரு மெட்ரிக்தொன்னுக்கு 31 யூஎஸ் டொலரும் வசூலிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அடிப்படை பொருத்துதலுக்கான செயல்திறன் கட்டண வீதம் நிர்ணயித்தல் தெளிவாக இருக்கவில்லை. மேலும், வணிகத்தின் எந்தவொரு | எல்ஜில் உடனான இருக்கின்ற ஒப்பந்தத்தை கம்பனி புதுப்பிக்க வேண்டும். | ஒரு மெட்ரிக்தொன்னுக்கு 51 யூஎஸ் டொலர்களுக்கு லிற்றோ காஸ் லங்கா லிமிடெட் (முறையாக ஷெல்) உடன் செயல்திறன் கட்டண ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டது மற்றும் நுகர்வோர் அலுவலல்கள் அதிகார சபையானது இதனை ஒரு மெட்ரிக்தொன்னுக்கு 31 யூஎஸ் டொலராக குறைத்தது, அதற்காக விலை ஒப்பந்தம் கிடைக்கப் பெற்றுள்ளது. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிபந்தனைகளையும் மற்றும் விதிமுறைகளையும் நிர்ணயிப்பதால் கம்பனி தனி வாடிக்கையாளர், எல்ஜிஎல் உடன் ஓர் ஒப்பந்தத்தை கொண்டிருக்கவில்லை. | | | |
| (இ) | பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் செயற்பாட்டு திட்டத்துடன் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஈ) | பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலையுடன் பதிவு செய்யப்பட்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | 19 செப்ரம்பர் 2019 ஆம் திகதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு கம்பனியால் அனுப்பிய கடிதத்தில் நிறுவன அமைப்பு வரைபடம், அனைத்து பதவியணி கட்டமைப்பு, சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்த பதில்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |


| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | சபை மற்றும் அமைச்சு, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | 19 செப்ரம்பர் 2019 ஆம் திகதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு கம்பனியால் அனுப்பிய கடிதத்தில் நிறுவன அமைப்பு வரைபடம், அனைத்து பதவியணி கட்டமைப்பு, சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்த பதில்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஊ) | சம்பளங்களும் மற்றும் படிகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் பொது திறைசேரி செயலாளரினுடைய அங்கீகாரமின்றி திருத்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருந்திருக்கவில்லை. இதன் விளைவாக, மாதத்திற்கான மொத்த சம்பளமானது ரூபா. 51,000 முதல் ரூபா. 641,000 வரை வீச்சுக்குள் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் | 19 செப்ரம்பர் 2019 ஆம் திகதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு கம்பனியால் அனுப்பிய கடிதத்தில் நிறுவன அமைப்பு வரைபடம், அனைத்து பதவியணி கட்டமைப்பு, சம்பளக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் படி முகாமைத்துவ | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உருவாக்கப்பட்டது. | | சேவைகள் திணைக்களத்திடமிருந்த பதில்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | |
| (எ) | தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக் குழுவின் கொடுப்பனவை தீர்மானிப்பதற்கு முன்னர், வரிசை அமைச்சகத்தின் செயலாளரின் பரிந்துரையும் நிதி அமைச்சரின் அங்கீகாரமும் கம்பனி பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்த சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும. | தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக் குழுவின் கொடுப்பனவுகளை தீர்மானிக்க கம்பனி சபையின் அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. | விடயம் இற்றைவரை காணப்படுகின்றது. |
| (ஏ) | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக தலைவருக்கு செலுத்தயப்பட்ட கொடுப்பனவுகளில் கம்பனியின ஈபீஎவ் மற்றும் ஈரீஎவ் செலுத்தப்பட்டிருந்தன. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும. | இந்த பிரச்சினைகளுக்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடப்பு ஆண்டில் சிரேஸ்ட நிர்வாக அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்துவதற்குப் பதிலாக தலைவரின் கொடுப்பனவுகள் தொடர்பாக சட்டரீதியான கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை. |

## 4.53 நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,555,284 | 3,822,354 | 9,213,402 | 1,167,856 | (1,267,070) | முனைப்பழியற்ற |
| **2019** | 717,910 | 2,306,952 | 7,509,648 | 1,053,143 | (1,589,042) | முனைப்பழியுள்ள |

**2020** நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.




| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2012 ஆம் ஆண்டில் கம்பனியை கலைக்க இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், கலைப்பு நடவடிக்கைகள் நிறுவனத்தால் தொடங்கப்படவில்லை. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனியை கலைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1. அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மான இல. ஏஎம்பீஏ/19/2250/104/076 இற்கு இணங்க இந்த கம்பனியை கலைக்க அமைச்சரவை அமைச்சர்களிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டது.<br><br>2. எனவே, இந்த கம்பனியின் கலைப்பு செயல்முறைக்கு ஒரு கலைப்பாளரை நியமிப்பதன் | கம்பனியின் கலைப்பு நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். |

மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், தேவையான காலகட்டத்தில் ஒரு கலைப்பாளர் செயல்படாமையினால் கலைப்பு செயற்பாடுகள் தோல்வியடைந்தது.


3. அதன்படி, இந்த கம்பனியின் கலைப்பு திறைசேரியின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரி நீர்ப்பாசன அமைச்சின் கௌரவ செயலாளரினால் நிதி அமைச்சின் செயலாளருக்கு 15 மார்ச் 2021 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டது.

4. மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனியின் கலைப்பு செயல்முறைக்கு ஒரு கலைப்பாளரைப் பரிந்துரைத்த பின்னர், இது தொடர்பாக பங்குதாரர்களின் முன்மொழிவு மற்றும் பணிப்பாளர்களின் முன்மொழிவு நிறைவேற்றப்பட வேண்டும்.

5. மேலே குறிப்பிட்டுள்ள கலைப்பாளரினால் நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் கலைப்புக்கு ஒப்புதல் அளிக்க 2022 பெப்ரவரி 28 ஆம் திகதியில் ஒரு சபையின் தீர்மான அறிக்கையினை பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## 4.54 மஹாவலி கென்ஷல்ரன்சி பியூரோ (பிறைவேட்) லிமிட்டட் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 98,152,361 | 93,461,482 | 129,582,010 | 49,696,403 | 4,690,879 | முனைப்பழியுள்ள |
| **2019** | 35,821,402 | 33,448,217 | 109,736,841 | 27,304,698 | 2,373,185 | முனைப்பழியுள்ள |
| **2020** | 4,083,465 | 18,007,675 | 94,287,676 | 16,788,156 | (13,924,210) | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் செயற்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 3,058,326 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த நேரத்தில் கம்பனியை கலைப்பதற்கான கொள்கை தீர்மானம் இருந்ததால், மதிப்பிடப்பட்ட தவறுகள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த கொள்கை தீர்மானம் மாற்றப்பட்டதிலிருந்து, அந்த தவறுகளை 2022 | சொத்துக்கள் மீள்மதிப்பீட செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையான சொத்துக்கள் மேலும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆம் நிதியாண்டில் திருத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,273,787 தொகை மற்றும் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான ரூபா 6,016,484 தொகையான பிடித்து வைத்தல் பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா.1,762,118 தொகையான ஏனைய நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | பிடித்து வைத்தல் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு தொடர்புடைய கட்சிகளுக்கு நினைவூட்டல்களை அனுப்ப்பட்டது. ரூபா.6,016,484 பெறுமதியில் ரூபா.3,058,057 பெறுமதியானது தீர்வு செய்யப்பட்டதுடன் மீதி 1-5 வருடங்களாக தொடர்ந்து வைப்பாக வைத்திருக்கப்பட்டுள்ளது. | 05 வருடங்களுக்க மேலாக ரூபா.1,273,787 பிடிப்பணம் மீதி தீர்க்கப்படவில்லை. ஏனைய மொத்த பெறவேண்டிய மீதி ரூபா. 1,762,118 மற்றும் பிடிப்பண மீதி ரூபா. 2,958,427 ஆகிய தொகைகயள் 1 தொடக்கம் 05 வருடங்களாக தொடர்ந்தும் 2020 பெப்ரவரியிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ரூபா 166,039 தொகையான 8 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டிய தேசிய பாதுகாப்பு வரி, ரூபா 8,410,207 தொகையான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வேலை தொடக்க முற்பணங்கள் மற்றும் ரூபா.2,454,530 தொகையான இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ஏனைய நிலுவை மீதிகள் என்பன தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | ரூபா. 2,454,530 தொகையான வேலை தொடக்க முற்பணங்கள் மற்றும் ஏனைய நிலுவை மீதிகள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய தேசிய பாதுகாப்பு வரி நிலுவை ரூபா. 166,039 தொகையானது 08 வருடங்களுக்கு மேலாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் காணப்படவில்லை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, கம்பனியின் ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் தகுதிகாண் காலம் போன்றன சரிபார்க்க முடியவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டில் புதிய முகாமைத்துவத்தின் கீழ் கம்பனி பெற்ற புதிய திட்டங்களுக்கு ஏற்ப நிறுவன கட்டமைப்பை மாற்ற தேவையான நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுகின்றன. | பெப்ரவரி 2022 இற்குள் கூட நிலைமை தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. |
| (உ) | மீடியிரிகிரியா பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள டிமுத்துவேவாவை புதுப்பிக்க கம்பனி ரூபா.11,998,130 இறுதிப் பட்டியலை சமர்ப்பித்திருந்தாலும், டிமுதுவேவா கீழ்நிலை அபிவிருத்திக்கு எல்லைக்கு வெளியே செய்யப்பட்டுள்ளதால், ஆரம்பத் தொகை செலுத்தப்படக்கூடாது என நியமிக்கப்பட்ட குழுவினால் டிமுத்துவாவைப் புதுப்பிக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த தொகை ரூபா. 4,840,515 மற்றும் ரூபா. 2,971,485 தொகையான முற்பணத்தை கழித்த பின்னர் நிறுவனத்திற்கு ரூபா. 1,869,030 மட்டுமே செலுத்தப்பட்டது. இதன் விளைவாக கம்பனிக்கு ரூபா.7,157,615 இழப்ப ஏற்பட்டது. | ஒப்பந்த எல்லைக்குள் மட்டுமே கட்டுமானம் வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் அங்கீகாரம் பெறாமல் மேலதிக வேலைகளைச் செய்வதால் கம்பனிக்கு இழப்பு ஏற்பட்டால் கம்பனி பொறுப்பான தரப்பினரிடமிருந்து இழப்பு அறவிடப்பட வேண்டும். | மேலதிக பணிக்கான அங்கீகாரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | ஏற்பட்ட இழப்புகள் அறவிடப்படவில்லை. |
| (ஊ) | கனேவேலா அனிகட் மறுவாழ்வு செய்வதற்கான ஒப்பந்த உடன்படிக்கை கம்பனியால் நிறுத்தப்பட்டது. அதன் படி, | பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | கம்பனியினுடைய ரூபா.419,421 தொகையான பிடிப்பணத்தினை | ரூபா.3,149,565 பெறுமதியான இழப்பு அறவிடப்பட்டிருக்கவி |


| | | | | |
|---|---|---|---|---|
| | பிடித்து வைத்த செயற்திறன் பங்கு ரூபா. 1,730,055, இதில் நிலுவை தொகையான ரூபா.1,000,089 முற்பணப்பங்கு திருப்பி செலுத்தப்படவில்லை. ரூபா.419,421 தொகையான பிடித்து வைத்தல உள்ளடங்கலாக கம்பனியின் இழப்பு ரூபா.3,149,565 காணப்படுகின்றது. மேலும், கட்டுமான முன்னேற்றம் 25 சதவீதம் மட்டுமாக இருந்தபோதிலும், ரூபா. 849,744 மதிப்புள்ள 10 வாயில்கள் மற்றும் ரூபா. 562,941 மதிப்புள்ள மீள்பார்கள் கொள்வனவு செய்ய்ப்பட்டிருந்தன. எனவே, அச் செலவு ஒரு விளைவற்ற செலவினமாக காணப்படுகின்றது. | | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | ல்லை |
| (எ) | கடன்பட்டோருக்கான வயதுப் பகுப்பாய்வின் படி, 31 திசெம்பர் 2019 இல் கம்பனியின பெறப்பட வேண்டிய மீதி ரூபா. 47,074,872 பெறுமதியாக காணப்பட்டது. மற்றும் இதில் ரூபா. 4,176,453 பெறுமதியான கணக்கு மீதி 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையாக காணப்படுகின்றமையானது அவதானிக்கப்பட்டது. | கம்பனிக்கு நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 31 திசெம்பர் 2021 இற்குள் பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா.8,511,509 ஆக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள ரூபா.4,176,453 தொகை பெப்ரவரி 2022 இற்குள் கூட அறவிடப்பட்ருக்கவில்லை. |
| (ஏ) | 2019 திசெம்பர் 31 இன் நிலையான சொத்துப் பதிவேட்டின் படி, மஹாவலி கென்ஷல்ரன்சி பியூரோவிடம் ரூபா. 16,749,105 மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. ஆனால், சம்பந்தப்பட்ட சொத்துக்களின் பௌதீக இருப்பை சரிபார்க்க பௌதீக சரிபார்ப்பு | சொத்துக்களின் பௌதீக இருப்பைக் கண்டறிய, பொருட்களின் பௌதீக சரிபார்ப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக் கணக்கெடுப்பு முறைமையின் படி நியமிக்கப்பட்ட சபையினால் கம்பனியினால் ஒவ்வொரு வருடமும் சொத்துக்களை பௌதீக ரீதியாக சரிபார்க்கப்படுகின்றது மற்றும் அத்தகைய சரிபார்த்தல் | பொருட்களின் பௌதீக சரிபார்த்தல் நடத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படவில்லை. | | நடத்தப்படவில்லை.<br><br>2022 ஆம் ஆண்டு முதல் புதிய முகாமைத்துவத்தின் கீழ் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | 2017 ஆம் ஆண்டின் போது மொரகஹகந்த சுற்றுலா விடுதி மற்றும் பார்வையாளர் மேடையை நிர்மாணிப்பதற்கான உப ஒப்பந்தத்தை வழங்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக செயற்பட்டமையினால் கம்பனிக்கு ரூபா 20,200,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் இது தொடர்பாக முறையாக பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் பொது முயற்சிகள் குழுவிற்கு அறிக்கையிட வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியான 2021 ஆகஸ்ட் 02 வரை உரிய பணத்தை அறவிடுவதற்கான சட்டரீதியான | பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணத்தை அறவிடுவதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. | பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஓ) | கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான ஆலோசனை சேவைகளை அமுல்படுத்துவதற்கு உரிய முகாமையாளர் (செயற்திட்டம்) பதவி மற்றும் பொறியியல் பிரிவில் பொறியியலாளர் பதவி என்பன 2019 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் 2021 செப்தெம்பர் வரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனியை கலைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையினால் உரிய அதிகாரிகளை நியமிக்க முடியவில்லை. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

## 4.55 மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 496,420 | 129,929 | 15,596,230 | 381,208 | 366,491 | மறுப்பு |
| **2019** | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | | | | |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | | | | |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 0.50 | 0.13 | 15.60 | 0.38 | 0.37 |
| 2019 | - | - | - | - | - |
| 2020 | - | - | - | - | - |

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2012 ஆகஸ்ட் 13 ஆந் திகதி இடம்பெற்ற பொது வியாபாரம் தொடர்பான குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் அந்த ஆண்டின் திசெம்பர் மாதத்தின் இறுதியில் கம்பனி தன்னிச்சையாக கணக்குகளை தீர்ப்பனவு செய்து மூடிவிடுவதற்கு 2012 செப்தெம்பர் 28 | கம்பனியை கலைப்பதற்கான பணிகள் நிறைவு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1. அமைச்சரவை தீர்மான இலக்கம். AMPA/19/2250/104/076 இற்கு இணங்க இந்த கம்பனியை கலைக்க அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது.<br>2. அதன்படி, கலைத்தல் செயல்முறைக்காக நிறுவனத்தால் ஒரு கலைப்பாளர் நியமிக்கப்பட்டார். கலைப்பாளரின் மரணத்துடன் கலைப்பு | கம்பனியை கலைத்தல் நிறைவு பெற்றிருக்கவில்லை. |

ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய 2014 நவம்பர் 20 ஆம் திகதிய விசேட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியை கலைப்பதற்காக கலைப்பவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கமைய 2014 ஒக்டோபர் 21 ஆந் திகதி கலைத்தல் நடவடிக்கைகள் மற்றும் கணக்குகளை தயாரிப்பதற்காக ரூபா.125,000 தொகை செலுத்துவதற்கு இணங்கி ரூபா. 62,500 தொகை 2015 சனவரி 10 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனி கணக்கு தீர்க்கப்பட்டு தன்னிச்சையாக மூடிவிடுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் கடன்கொடுத்தோரின் கணக்குகள் தீர்க்கப்பட்டு மூடிவிடுவதற்கான நிலை ஏற்பட்டிருந்ததாக கம்பனிகளை பதிவு செய்யும் திணைக்களத்தின் இலக்கம் பீடீ/9854 மற்றும் 2016 யூலை 25 ஆந் திகதிய கடிதத்தின் படி செயல்முறையை நிறைவேற்ற முடியவில்லை.

3. அதன்படி, இந்த கம்பனியின் கலைப்பு திறைசேரியின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரி நீர்ப்பாசன அமைச்சின் கௌரவ செயலாளரினால் நிதி அமைச்சின் செயலாளருக்கு 15 மார்ச் 2021 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டது.

4. மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனியின் கலைப்பு செயல்முறைக்கு ஒரு கலைப்பாளரைப் பரிந்துரைத்த பின்னர், இது தொடர்பாக பங்குதாரர்களின் முன்மொழிவு மற்றும் பணிப்பாளர்களின் முன்மொழிவு நிறைவேற்றப்பட வேண்டும்.
அங்கு, மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனியின், தலா ஒரு பங்குதாரர் என மொத்தம் மூன்று பங்குதாரர்களுக்கு 03 பங்குகளை பிரித்துள்ளது. இந்த பங்குதாரர்களை கண்டுபிடிக்க முடியவில்லை மற்றும் சில பங்குதாரர்கள் இறந்துவிட்டதாக கூறப்படுகிறது. அதன்படி, பங்குதாரர்களின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் பிரச்சனைகள் உள்ளன, மேலும், 1,039,800 பங்குகளைக் கொண்ட பிரதான பங்குதாரரான இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு பங்குதாரர்களின் பிரேரணையை மட்டும் நிறைவேற்றுவதற்கான சாத்தியம் உள்ளதா என்பது குறித்த சட்ட ஆலோசனை 06 யூலை 2021

கடன்பட்டோரின் கூட்டமொன்று நடாத்தப்பட்டு எஞ்சிய பணிகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு கூட்டம் நடாத்தப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன் 2019 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் கம்பனியை கலைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.


திகதியிட்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்டது.

5. கம்பனியின் கலைப்பு தொடர்பில் அரச நிதி அமைச்சின் அதிகாரி ஒருவரும் மகாவலி வலயங்களில் குடியேற்றங்களில் கால்வாய்கள் மற்றும் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான அரச அமைச்சின் அதிகாரியொருவரும் கலைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

6. மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனியினை கலைப்பதற்கான ஒப்புதலுக்காக 28 பெப்ரவரி 2022 திகதியிட்ட சபையின் ஆவணத்தை இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும் பணியில் மேற்கூறப்பட்ட கலைப்பாளர் ஈடுபட்டுள்ளனர்.

## 4.56 வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 57,207,407 | 61,636,307 | 93,888,135 | 40,265,713 | (4,428,900) | முனைப்பழியுள்ள |
| **2019** | 65,448,978 | 70,112,509 | 90,883,438 | 42,940,439 | (4,663,531) | முனைப்பழியுள்ள |
| **2020** | 63,348,925 | 69,141,931 | 80,658,665 | 49,873,176 | (5,793,006) | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த நீராவிய பண்ணைக்கு சொந்தமாக இருந்த ரூபா.5,820,430 தொகையான கால்நடை வள இருப்புக்களுக்காக பெறவேண்டிய | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிலுவையைத் தீர்ப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தன. | 2022 பெப்ரவரிக்குள் கூட தீர்வுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | தற்போது நட்டம் அடைந்துவரும் நிலையில் பேணிவரப்படுகின்ற மஹாவலி கால்நடை வள தொழில்முயற்சி தனியார் கம்பனியை, அரச தனியார் பங்குடைமையொன்றாக மறுசீரமைக்க தனியார் முதலீட்டாளர் ஒருவரை சம்பந்தப்படுத்திக் கொள்வதற்காக 2016 சனவரி 28 ஆம் திகதிய 16/0063/704/003 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2018 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 18/2083/803/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மூலம் தனியார் கம்பனியொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 29 ஆம் திகதி வரை அத்தீர்மானம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்த அல்லது அவ்வாறு செய்யாத பட்சத்தில், அமைச்சரவை தீர்மானத்தை திருத்தியமைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | அரச தனியார் பங்குடைமையொன்றாக மறுசீரமைப்பது அமைச்சரவையன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 25 சனவரி 2022 திகதியிட்ட அமைச்சரவை தீர்மான இல. CP/ 21/2229/317/025 (I) இன் படி, கம்பனியின் மறுசீரமைப்பு தொடர்பான முதலீட்டாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வணிக முன்மொழிவுகளை அரச பங்குடமைகளில் நிபுணத்துவம் பெற்ற குழுவினால் ஆய்வு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | முறையான எழுத்துமூல ஆவணப் பரிமாற்றமின்றி கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட நீராவிய, துங்கம, கந்தளாய், சித்தப்புர மற்றும் முத்துவெல்ல என்ற விவசாய பண்ணைகளில் 2005-2010 இடையிலான காலப்பகுதியில் மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும் அந்த பண்ணைகளுக்கு சொந்தமான கிரயம் ரூபா 25,073,083 ஆன 164 கட்டிடங்கள் மற்றும் பொருத்திகள், 26 வாகனங்கள், 45 அலுவலக உபகரணங்கள், 66 இயந்திர உபகரணங்கள் மற்றும் மின்பிறப்பாக்கிகள் மற்றும் 260 தளபாடங்களும் பொருத்திகளும் என்பன தொடர்ந்தும் கம்பனியின் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களுக்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 1,873,629 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பௌதீக இருப்பு தொடர்பான மெய்மையாய்வு மகாவலி அதிகார சபை அல்லது கம்பனியினால் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அந்த சொத்துக்களின் பௌதீகரீதியான இருப்பு கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த சொத்துக்களை மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு மாற்றுவது தொடர்பான தகவல்கள் மகாவலி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரிக்குள் கூட சொத்துக்கள் எழுத்துப்பூர்வமாக மாற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கடன்பட்டோர் மீதியின் கீழ் ரூபா.3,512,504 தொங்கல் கணக்கு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் | தொங்கல் கணக்கை தாமதமின்றி தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவையின் ஒரு பகுதி பகுப்பாய்வு செய்யப்பட்டு தீர்வு | மேலும், தீர்க்கப்பட வேண்டிய மீதிகள் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதில் ரூபா 2,047,972 மீதி 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | செய்யப்பட்டுள்ளது. | |
| (உ) | 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பள திருத்தங்களின் பிரகாரம் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,893,711 நிலுவை சம்பளமும், 2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் செலுத்த வேண்டிய ரூபா.18,927,439 மற்றும் ரூபா.611,083 தொகையான பங்களிப்பு பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மிகைக் கட்டணமாக ரூபா 11,830 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2021 ஆம் ஆண்டில் ரூபா.615,823 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | மேலும், சம்பள நிலுவைத் தொகை ரூபா 6,277,888, செலுத்த வேண்டிய பங்களிப்பு நிதி ரூபா.18,927,439 மற்றும் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதி ரூபா.611,083 செலுத்த வேண்டியுள்ளது. |
| (ஊ) | கம்பனியின் விஞ்ஞானபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளை உள்ளடக்கியிருந்ததுடன் ஆரம்ப பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய பங்குகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. விநியோகிக்கப்பட்ட 03 பங்குகள் ஏனைய தனியார் கம்பனியின் பணிப்பாளரகள் மூன்று பேருக்கு | இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பங்குகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழங்கப்பட்ட மூன்று பங்கம்பனிக்கு மீளப் பெற்று அவற்றை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள து. | 2022 பெப்ரவரிக்குள் கூட பங்குகள் வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் மகாவலி அதிகார சபையின் உரித்திற்காக கம்பனியின் எந்தவொரு பங்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (எ) | கம்பனி விஞ்ஞாபனத்தில் 12 ஆரம்ப நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பண்ணைகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இருப்பு மற்றும் சிறு பகுதிகளாக கோழிகளை பராமரித்தல், விவசாயிகளுக்கு கோழி பராமரிப்பிற்காக தேவையான உணவு உற்பத்தி பசு, பன்றி, கோழிகள் போன்ற உயிரினங்களை இனப்பெருக்கம் செய்தல் விற்பனை செய்தல் அபிவிருத்தி செய்தல், தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழ வகை, தானியவகை சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் எருமைமாடு, பசுமாடு, கோழி, பன்றி மற்றும் ஆடு பராமரிப்புகளில் சிறு அளவில் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கம்பனி விஞ்ஞாபனத்தில் காண்பிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கம்பனி விஞ்ஞாபனத்தில் காண்பிக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதற்காக கம்பனிக்குச் சொந்தமாக மூலதன இயலுமை காணப்படாதிருந்தமையால் அதற்காக அரசாங்க தனியார் கூட்டு முயற்சியொன்றாக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான பின்புலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்தியதன் பின்னர் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | நடைமுறை சூழல்நிலைகள் மாற்றப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | கம்பனியினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 3,162,812 தொகையான 04 வாகனங்கள் மற்றும் கம்பனியின் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான தெமட்டகொட பிரதேசத்தில் அமைந்துள்ள காணி கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 14,929,159 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருகின்ற ஆண்டில் சொத்துக்களைத் தீர்த்து வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரிக்குள் கூட வழங்கப்படவில்லை. |
| (ஐ) | கிராந்துருகோட்டை பண்ணையில் அமைந்துள்ள பால் தயாரிக்கும் ஆலை ஆரம்பிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்ட இயந்திர பொறிமுறைகளின் மூலம் பால்உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தொழிற்சாலையின் கட்டிடத்தில் தரை டயில் உடைந்து சென்றமை, கூரை உடைந்திருந்தமை மற்றும் மழைநீர் தொழிற்சாலைக்குள் கசிந்தமை, வடிகால் முறைமைகள் உடைந்திருந்தமை மற்றும் உள்ளக சுத்திகரிப்பு முறைமைகள் நலிவான | உற்பத்தியின் போது ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை சரி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைந்த மட்டத்திலேயே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையில் காணப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக உற்பத்திகளின் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகள் எழுந்திருந்தது. | | | |
| (ஓ) | 2020/21 பெரும்போக சோள பயிர்ச்செய்கைக்காக கம்பனியின் காணிகள் போக குத்தகை முறையின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கும் போது விவசாயிகளை தெரிவு செய்தல் மற்றும் குத்தகை பணத்தை தீர்மானித்தல் குழுவின் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன் இதன் மூலம் பெறப்படுகின்ற குத்தகைப் பண வருமானம் இறைச்சி களஞ்சியப்படுத்துவதற்காக குளிரூட்டி கொள்கலனொன்றை கொள்வனவு செய்வதற்கும், புறொயிலர் கூட்டினை பழுதுபார்ப்பதற்கும் ஈடுபடுத்துவதற்காக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் விவசாயிகளை தெரிவு செய்தல் மற்றும் குத்தகைப் பணத்தை தீர்மானித்தல் மேற்கூறப்பட்ட குழுவின் மூலம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உழைக்கப்பட்ட பணம் கணக்காய்வு திகதி வரையிலும் கம்பனியின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | விவசாயிகளை தேர்வு செய்து குழு மூலம் வரி நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த கட்டுமான வேலைகளை மேற்கொள்ள தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள் ளது. | 2022 பெப்ரவரிக்குள் கட்டுமானப் பணிகள் நடைபெறாமல், நடைமுறைக் கணக்கில் பணம் வைக்கப்பட்டுள்ளது. |
| (ஓ) | 1986 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கிராந்துருகோட்டை கால்நடை பண்ணைக்குச் சொந்தமான 57 | உடைந்த கட்டடங்களை திருத்துவதற்கு நடவடிக்கை | 2022 ஆம் ஆண்டில் பதிவழிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. | சொத்துக்கள் பதிவழிப்பு செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டிடங்கள் 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வந்திருந்த போதிலும் அதில் 7 கட்டிடங்கள் முழுமையாக உடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | | |
| (ஔ) | கம்பனிக்குச் சொந்தமான கிராந்துருகோட்டை பண்ணையின் கால்நடை பராமரிப்பு பயிற்சி நிலையமொன்றாக மாற்றும் நோக்கில் மகாவலி அதிகார சபையில் ''சீ'' வலயத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 12,501,900 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாட்டு பண்ணை, ஆட்டு பண்ணைகளை உள்ளடக்கிய நிர்மாணங்கள், பொருட்கள் ரூபா.8,967,600 தொகைக்கு பெறுமதியிடப்பட்டு 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக குறித்த திட்டமொன்று அல்லது முறைமையொன்று கம்பனியிடம் காணப்படாதிருந்தமையால் கையளிக்கப்பட்ட திகதி முதல் அந்த சொத்துக்கள் பயனற்றுக் காணப்பட்டது. | இந்த நிர்மாணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | கூட்டுமுயற்சி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. | 2022 பெப்ரவரி வரை அச் சொத்துக்கள் பயன்பாடற்றவையாக காணப்படுகின்றன. |

## 4.57 தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை - லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட

**2018** கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2019** கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.


**2020** கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2015, 2016, 2017, 2018, 2019,2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை. |
| (ஆ) | கம்பனியால் பேணப்பட வேண்டிய பின்வரும் புத்தகங்கள் மற்றுமு் பதிவேடுகள் 2014 ஏப்ரல் 01 முதல் 2021 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு கம்பனியால் பேணப்பட்டிருக்கவில்லை.<br>(i) காசேடு<br>(ii) பேரேட்டுக் கணக்குகள்<br>(iii) நாட்குறிப்புக்கள்<br>(iv)வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள்<br>(v) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | புத்தகங்கள் மற்றும் கணக்குகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை. |
| (இ) | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையால் கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளரின் சார்பில் தாய்லாந்து சுற்றுலாவிற்காக ரூபா. 369,440 தொகையும், ஜோ்மனிக்கான சுற்றுலாவிற்காக ரூபா 1,032,887 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. ஏனினும் அந்த பணம் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் கம்பனியால் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கணக்காய்வுத் திகதி வரையிலும் வருமான வரிக்காக பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் முறையே ரூபா 14,619,695 மற்றும் ரூபா 4,784,831 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமான வரிக்காக பதிவு செய்வதற்கும் வருமான வரி செலுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கம்பனி 2008 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு கம்பனியின் முகாமைத்துவம் தவறியிருந்தது. | கம்பனியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 4.58 ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 846,162,622 | 793,454,563 | 522,946,817 | 257,552,618 | 52,708,059 | முனைப்பழியுள்ள |
| **2019** | 871,399,061 | 817,864,289 | 504,660,454 | 202,687,861 | 53,534,772 | முனைப்பழியுள்ள |
| **2020** | 490,964,094 | 547,867,128 | 463,912,424 | 208,230,416 | (56,903,035) | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தில் காணப்பட்ட கொள்கலன் பாவனைக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதில் பொருத்தப்பட்டிருந்த வளிப்பதனாக்கி முறைமை ஏதோ ஒரு தரப்பினரால் எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. கணக்காய்வினால் 2020 செப்டம்பர் 10 ஆம் திகதி கம்பனிக்கு இந்த | பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொலைந்து போனமை தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 மே 17 ஆந் திகதி வரையும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | கம்பனியால் மணல் விநியோகிப்பதற்கு நியாயமான குறித்த திட்டமுறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன், செயற்திட்டத்தின் அகழ்வு செய்யப்பட்ட மணலில் 75 சதவீதம் பொலன்னறுவை மஹவலி எக்ஸத் டிப்பர் வாகன கம்பனியின் லொறி வாகனத்திற்காகவும் 10 சதவீதம் பொலன்னறுவை மாவட்டத்தில் ஏனைய லொறிகளுக்காகவும் 15 சதவீதம் மாவட்டத்தில் இருந்து வெளியிலுள்ள லொறிகளுக்குமாகவும் மணல் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அரசியல் கோரிக்கைகள் பொது மற்றும் சமய நடவடிக்கைகளுக்கான கோரிக்கைகள் மற்றும் ஏனைய விண்ணப்பங்களை உள்ளடக்கி முன்னுரிமை பட்டியலின் அடிப்படையில் தினந்தோறும் மணல் விநியோகிக்கப்பட்டிருந்தது. | மணல் விநியோகிப்பதற்குரிய குறித்த திட்ட முறைமையொன்று எழுத்து மூலம் தயாரிக்கப்பட வேண்டும். | ஒரு வழி முறைமைகள் தயாரிக்கப்பட்டதாக நினைத்தாலும் அது செயற்திட்ட அலுவலகங்களுக்கு உள்ளக சுற்றறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை. | ஒரு வழி முறைமைகள் தயாரிக்கப்பட்டதாக நினைத்தாலும் அது செயற்திட்ட அலுவலகங்களுக்கு உள்ளக சுற்றறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை |
| (இ) | மீளாய்வாண்டின் போது மணல் அகழ்வு மன்னம்பிட்டி செயற்திட்டத்தில் கட்டம் II இல் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பின்தொடர் நடவடிக்கைகள் குழு விரைவாக நியமிக்கப்பட்டு மீண்டும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | மன்னம்பிட்டி செயற்திட்ட கட்டம் II இற்றைவரை ஆரம்பிக்கப்பட வில்லை. | மன்னம்பிட்டி செயற்திட்ட கட்டம் II இற்றைவரை ஆரம்பிக்கப்பட்டிருக் கவில்லை |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் செயற்திட்ட | பொலிஸ் அறிக்கை | நடவடிக்கை | நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகத்தில் ஏற்பட்ட தீப்பிடித்தல் தொடர்பாக பொலிஸ் அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் இந்த தீப்பிடித்தல் எதிர்பாராத விதமாக ஏற்படாதிருந்ததாகவும், கொள்கலன் பெட்டிகளில் காணப்பட்ட ஆவணங்களில் பொற்றோல் இட்டு வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்டு தீ வைப்பதற்கு தீ வைக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலம் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தீ வைப்பாக அறிவித்திருந்தமையினால் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | எடுக்கப்பட்டிருக்க வில்லை | எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| (உ) | 2019 ஆம் ஆண்டின் போது ரூபா.8,883,520 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்ட லோடர் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா. 966,565 தொகை செலவிடப்பட்ட போதிலும், 2021 யூன் 10 ஆம் திகதி வரையிலும் அது எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாத நிலையில் காணப்பட்டது. | பழுதுபார்த்தல்கள் சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஊ) | **கொடிகம்பொக்க பளிங்கு செயற்திட்டம்**<br>அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த திருவான நிதிய அகழ்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு ஏற்றுமதி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) இற்கு பதிலாக மீண்டும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையொன்று (IEE) மேற்கொள்வதற்கு அமைச்சரவை | செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இன்னும் அங்கீகாரம் பெறப்படவில்லை. | செயற்திட்டம் இற்றைவரை ஆரம்பிக்கப்பட வில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைக்காக சுற்றாடல் பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் நீர்பாசன திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் ஏற்பட்டிருந்தமையினால் இந்த செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (எ) | சுற்றாடல் தாக்க மதிப்பீடு மேற்கொள்வதற்கு பதிலாக ஆரம்ப சுற்றாடல் அவதானிப்பு ஒன்று மேற்கொள்ளல் போதியளவாக உள்ளதா என்பது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும், வன பாதுகாப்பு திணைக்களத்தினதும் முதலாவது இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளுமாறு மீண்டும் 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்த போதும் மீளாய்வாண்டின் இது வரையிலும் அது தொடர்பான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி விரைவாக தீர்மானத்தை எடுத்து செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இன்னும் அங்கீகாரம் பெறப்படவில்லை. | செயற்திட்டம் இற்றைவரை ஆரம்பிக்கப்பட வில்லை. |
| (ஏ) | 2017 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்தில் இருந்து எந்தவொரு வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன், அகழ்வு செய்யப்பட்ட படிகைக் கற்களை களஞ்சியப்படுத்துவதற்காக காணியொன்றை வாடகைக்கு பெறல் அகழ்வு செய்யப்பட்ட படிகைக் கற்களின் நிறையை அளவிடுவதற்காக தராசொன்று கொள்வனவு செய்தல் மற்றும் அதன் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு ஊழியர்களை ஈடுபடுத்தல் உள்ளடங்கிய மீண்டெழும் செலவினங்களாகவும் மற்றும் மூலதனச் செலவினமாகவும் ரூபா. 20,942,314 தொகை 2017-2020 காலப்பகுதியில் செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | செயற்திட்டம் இற்றைவரை ஆரம்பிக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | கந்தளே சூரியபுர தும்மோதரப் பிரதேசத்தில் மணல் தோண்டுதல் சம்பந்தமாக மகாவலி அதிகார சபை மற்றும் கம்பனிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2020 சனவரி வரையில் 103,128 மணல் கியூப் தோண்டப்பட்டிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 19 வரையில் 41,297 மணல் கியூப் மட்டுமே தோண்டப்பட்டிருந்தன. மணல் தோண்டுதல் சம்பந்தமாக இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டபோது குறிப்பிட்ட கிரயத்தினைப் பொருட்படுத்தாது வங்கிப் பிணையொன்று வழங்கப்படுவதற்கு உடன்பட்ட காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா.900,000 ஆன தரகுப் பணம் கம்பனிக்கு பொருளாதாரமற்ற செலவாக காணப்பட்டது. | செயற்திட்டத்தினை வினைத்திறனுடன் செயற் படுத்துவதற்கு மற்றும் உடன்படிக்கை ஏற்படுத்தும் போது குறிப்பிடப்பட்ட கிரயத்தினைக் கவனத்திற் கொள்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை |
| (ஒ) | பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் செயற்திட்டங்களில் சேவை புரியும் மணல் அகழ்வாராய்ச்சியாளர்கள் பசுமை மணல் துறைமுகத்தின் கருத்துக்கு மாற்றியமைப்பதற்காக பணிப்பாளர் சபையின் ஒப்புதல் அனுமதியின் அடிப்படையில் ரூபா.2,893,340 செலவிடப்பட்டு 2020 யூன் 22 ஆந் திகதி வேலைத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் உத்தியோகத்தருக்காக தனிப்பட்ட நிறுவனமொன்று சம்பந்தப்படுத்தப்பட்டு ரூபா.235,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அகழ்வாராய்ச்சியாளர்கள் 1500 பேருக்கு பங்கிடுவதற்காக ரூபா.1,049,000 செலவிடப்பட்டு | குறிப்பிட்ட அனுமதியின் அடிப்படையில் மட்டுமே வேலைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கா ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்ட 1500 உலர் உணவுப் பைகளில் 934 ஆனது அத்தினத்தில் மணல் தோண்டுவோருக்கு பங்களிடப்பட்டமையுடன் ரூபா.396,000 ஆன மிகுதி 566 உலர் உணவுப் பைகள் பங்கிடப்பட்டதற்கான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் பல மணல் செயற்திட்டங்களின் தாழ்வாராங்களில் ஒரு பச்சை மணல் துறைமுகம் எனும் கருத்து முறையாக செயற்படுத்தப்படாமையுடன் மற்றும் வேலைத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | | | |
| (ஓ) | மனம்பிட்டிய செயற்திட்டத்திற்காக ரூபா.2,423,224 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 40 கிலோவாட் ஜெனரேட்டர் எவ்வித உறைகளுமின்றி மற்றும் பாதுகாப்பற்ற கொள்கலன் கூரையில் பொருத்தப்பட்டிருந்தது. | சொத்துக்களின் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |

## 4.59 லங்கா சோல்ட் லிமிடெட்

| | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| **2018** | 1,352,481,952 | 1,390,330,414 | 2,211,306,078 | 832,283,123 | 12,651,164 | முனைப்பழியுள்ள |
| **2019** | 1,567,174,191 | 1,916,374,623 | 1,842,185,807 | 800,324,878 | (349,200,431) | முனைப்பழியுள்ள |
| **2020** | 1,338,719,767 | 1,279,377,078 | 1,671,671,949 | 620,508,951 | 59,342,688 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம் தேறிய நிகரப் பெறுமதி அல்லது கிரயம் இந்த இரண்டு பெறுமதியில் குறைவான பெறுமதியில் இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் இருப்புக்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் கிரயம் | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேறிய தேறக்கூடிய பெறுமதி அல்லது கிரயம் இந்த இரண்டு பெறுமதியில் குறைவான | தேறிய நிகரப் பெறுமதியினைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 31 திசெம்பர் 2021 இல் இருப்புக்கான தேறிய நிகரப் பெறுமதி கணக்கிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 393,325,917 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமதியில் இருப்பு மதிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும். | | |
| (ஆ) | நியமத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 75,376,038 ஆகும். அந்த சொத்துக்களுக்கிடையே தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை இனங்கண்டு பயன்தரு ஆயுட்காலம் சரியாக மீளாய்வு செய்யப்படாமையால் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை நியமத்தின் 10.15 - 10.18 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சரிசெய்வதற்கும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறையல லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்க ளில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் மீதான பௌதீக சரிபார்த்தல் செயற்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது | இது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூ.38,360,509 நிலுவைத் தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ள நிலுவைகள் தொடர்பான உறுதிப்படுத்தும் சான்றுகள் போதுமான அளவு பராமரிக்கப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டு பழுதுபார்ப்பு திட்டமிடப்பட்டுள்ளதால், அந்தத் தொகையை உரிய கிரயத்தினை பதிவழிப்பு செய்ய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கூட திருத்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை. |
| (ஈ) | 2019 யூன் 11 முதல் 2020 நவம்பர் 13 வரையான காலப்பகுதியின் போது உப்பு போக்குவரத்திலிருந்து கிடைத்த வருமானத்தில் ரூபா.7,579,030 தொகை காணாமல் போயிருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு பதிலாக அந்த மொத்த வருமானத்திற்காகவும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வருமானத்தில் 2019 ஆம் ஆண்டிற்குரிய வருமானமும் 2020 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பெறுமதி கடன்பட்டோரின் இறுதி மீதியில் 18 சதவீதமான கணிசமான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது கம்பனியின் கடன்பட்டோரின் தோற்றத்தை மாற்றுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. | ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தொடர்புடைய வருமானம் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு, போதுமான அளவு வெளிப்படுத்தப்பட வேண்டும். இழந்த வருவாயை பொறுப்பான தரப்பினரிடமிருந்து வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. | விசாரணைகளை முடிப்பதன் மூலம் கம்பனிக்கு ஏற்பட்ட இழப்பு பொறுப்பான தரப்பினரிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. |
| (உ) | மேற்கூறிய "அ" இன் படி பொது நிறுவனங்களின் திணைக்களத்தின் இணக்கத்துடன் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, பணிப்பாளர் சபையினால் | பணியாளர்களின் தேவைகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட | மனிதவளத் தேவைகளை ஆண்டுதோறும் மதிப்பிட வேண்டும் என்று தீர்மானம் | மிகை ஊழியர்கள் இன்னும் உள்ளனர். ஊழியர்களிடம் திறைசேரியின் ஒப்புதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடாந்தம் புதிய ஊழியர்களை அங்கீகரித்துள்ளது. அதன்படி, 2016 திசெம்பர் 31 இல் 1036 ஆக இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 744 ஊழியர்களால் 2018 திசெம்பர் 31 இல் 1780 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் அதிகரிப்புக்கான காரணங்கள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், 31 திசெம்பர் 2018 இல் கம்பனியின் மனிதவள கட்டமைப்பின்படி, அதிகப்படியான பணியாளர்கள் 368 ஆகவும், வெற்றிடங்களின் எண்ணிக்கை 384 ஆகவும் உள்ளது. | வேண்டும், இதனால் தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களை அடையாளம் காண வேண்டும். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட பணியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டு, முறையான பணியாளர் நிர்வாகம் உறுதி செய்யப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதன் படி பராமரிக்க வேண்டும். | பெறப்படவில்லை. |
| (ஊ) | 2015 மே 25 ஆம் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தலைவருக்கு உரித்தான உச்ச மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 170 லீற்றர்கள் ஆகிய போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது 170 லீற்றரினை விஞ்சி எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்ட 5 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்காக பணிப்பாளர் சபையின் பரிந்துரையுடன் குறித்த வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து அரச கம்பனிகளுக்கு பொது முயற்சி சுற்றறிக்கையை பின்பற்ற வேண்டும். இதன்படி அதிகாரிகளுக்கு எரிபொருள் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு மாறாக சம்பந்தப்பட்ட தரப்பினரின் அனுமதி பெறாமல் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | கம்பனியினால் 2015 மே 25 ஆம் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் மற்றும் 03 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பதவியணியின் கட்டமைப்பினை தயாரித்து குறிப்புரைக்கப்பட்ட வாகன மற்றும் எரிபொருள் படிகளினை உரித்துடைய பதவிகள் இனங்காணப்பட்டு 13 உத்தியோகத்தர்களுக்கு கம்பனியின் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன். அவர்களுக்காக மாதாந்தம் 125 முதல் 250 லீற்றரகள் வரையிலான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.<br><br>மேலே குறிப்பிடப்பட்டுள்ள 13 உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கம்பனியின் முகாமையாளர் உதவி முகாமையாளர்கள், மற்றும் எழுதுவினைஞர்கள் உள்ளடங்கலாக பதவியணியினர் 20 பேர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களாக கம்பனியின் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் 8 முதல் 45 லீற்றர்கள் வரையிலான கம்பனியினால் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே தனியார் 2 தனியார் கார்கள் மற்றும் 25 தனியார் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்காக கம்பனியின் 27 பேர்களுக்கு மாதாந்தம் 8 முதல் 60 லீற்றர்கள் வரையிலான எரிபொருளும் கம்பனியினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மேற்படி 47 உத்தியோகத்தர்களுக்கு | அனைத்து நிறுவனங்களும் பொது முயற்சி சுற்றறிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்பதால், அதிகாரிகளுக்கு வாகனங்கள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளை வழங்கும்போது அந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புணிப்பாளர் சபையின் அனுமதிக்குட்பட்டு எரிபொருள் வழங்கப்படுகிறது | சுற்றறிக்கை பின்பற்றப்படுவதில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனங்கள் உள்ளடங்கலான எரிபொருள் கம்பனியினால் வழங்குவதற்குரிய அங்கீகாரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| (ஏ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய 8 சதவீத பங்களிப்பு பணத்தை அதிகரிப்பதற்காக தொழில் பெறுவோரினால் தொழில் ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியினால் அந்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் கம்பனியின் நிரந்தர ஊழியர்களின் உழைப்பின் அடிப்படையில் அந்த சதவீதம் 10 வீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | பங்களிப்பின் சதவீதத்தை அதிகரிப்பது தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் விதிகளைப் பின்பற்ற வேண்டும். | சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை | இது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை. |
| (ஐ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பீஈடீ 03/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பிரிவின் பிரகாரம் மிகையூதிய படி செலுத்துவதற்கு தேவையான தகைமை பெறுவதாயின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் அந்த நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 செப்தெம்பர் 10 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளை அரச கம்பனிகள் கடைபிடிக்க வேண்டும் என்பதால், ஏதேனும் விலகல்கள் இருந்தால் சம்பந்தப்பட்ட திணைக்களத்தி | பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வருடாந்த மிகையூதியப்படி வழங்கப்படுகின்றது. | திறைசேரியின் முன் அனுமதியைப் பெற்று மிகையூதியப் படி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது 2020 ஆம் ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 28,362,054 மிகையூதிய படியாக 2021 மே மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த கொடுப்பனவிற்காக திறைசேரியின் முன் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | ன் அனுமதி பெறப்பட வேண்டும். | | |
| (ஒ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2,9.3.1 மற்றும் 9.14 ஆம் பிரிவுகளின் பிரகாரம், கம்பனியின் நிறுவன கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கம்பனியால் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறை மற்றும் மனிதவள முகாமைத்துவத்திற்கான கைநூல் என்பன தயாரிக்கப்பட்டு அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் 2017 மே 03 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது கம்பனியின் ஊழியர் எண்ணிக்கையை தீர்மானிக்கும் போது திறைசேரியின அங்கீகாரம் பெறவேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் விதிகள் அனைத்தும் அரச கம்பனிகளுக்கும் பொருந்தும், எனவே, த்தகைய விதிகள் பின்பற்றப்பட வேண்டும். | அவ் நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்வதற்காக ஒரு வெளி நிறுவனத்தை நியமிக்க பணிப்பாளர் சபையின் அனுமதி செட்தெம்பர் 2021 இல் வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படி சபையின் தேவைகள் இற்றைவரை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. |
| (ஓ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது | நிதியாண்டு தொடங்கும் | அடுத்த ஆண்டு முதல் | இது தொடர்பாக இதுவரை எந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பிரிவின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | முன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு , சுற்றறிக்கையின் விதிகளின்படி தேவையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | நடைமுறைக்கு வரும் வகையில் முறையான வழிமுறையைப் பின்பற்ற ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. | நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஔ) | கம்பனியால் மஹலேவாய மற்றும் புந்தல என்ற உப்பளங்களில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றதுடன் அந்த பயிர்ச் செய்கைகளில் கடந்த 03 வருடங்கள் மற்றும் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் கிடைத்த வருமானத்தை கவனத்தில் கொள்ளும் போது தொடர்ச்சியாக தேறிய நட்டமொன்று பெறப்பட்டிருந்தது. 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட தேறிய நட்டம் முறையே ரூபா 7,517,387 தொகை, ரூபா 7,050,800 மற்றும் ரூபா 7,305,655 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது அது ரூபா.8,086,837 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் இந்த பயிர்ச் செய்கைக்காக செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருமானம் அதிகரிக்கும் போது பொருளாதார ரீதியாக செலவுகள் ஏற்படுவதை முகாமை உறுதி செய்ய வேண்டும் | தென்னை செய்கையுடன் தொடர்பான மேற்பார்வை அதிகாரி புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். | 2021 ஆம் ஆண்டில் தென்னைச் செய்கையில் ரூபா.2,566,170 நட்டம் ஏற்பட்டுள்ளது. |
| (க) | மேசை உப்பு உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது இந்திய | தேவைகளை சரியாகக் கண்டறிந்து | அந்த இயந்திரங்களை விற்பனை செய்ய | விவரக்குறிப்புகளின் படி கொள்வனவு தோல்வியடைந்ததால், |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனியிலிருந்து ரூபா.24,671,591 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு(04) இயந்திரங்கள் குறித்துரைத்த மாதிரிக்கு பொருத்தமானதாக கொள்வனவு செய்யப்படாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 09 வருட காலமாக தொழிற்சாலையில் விளைவற்றுக் காணப்பட்டது. | அவற்றை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் சொத்துக்களை கொள்வனவு செய்ய வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கூறப்பட்ட இயந்திரங்கள் இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளன. இயந்திரங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (கா) | கம்பனியினால் விற்பனை முகவர்கள் ஊடாக லக் உப்பு உற்பத்தி விற்பனை செய்யப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டின் போது ஒரு கிலோகிராம் லக் உப்பு விற்பனை முகவருக்கு விற்பனை செய்யப்படுகின்ற விலையான ரூபா 40 சில சந்தர்ப்பங்களின் போது ரூபா 12.50 இனாலும், ரூபா 15 இனாலும் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் 01 கிலோகிராம் விற்பனை விலை ரூபா 27.50 ஆகும். சந்தை விலை ரூபா 60 நிலையாக காணப்பட்ட போதும் இவ்வாறு விற்பனை விலை கவனத்தில் கொள்ளக் கூடிய சதவீதத்தில் அதாவது 31.25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கிரய நலன் பகுப்பாய்வு, சந்தைப் பகுப்பாய்வு, அடிப்படையாக கொள்ளப்பட்ட ஏனைய உரிய குறிகாட்டிகள் மற்றும் நிபுணர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் குழுவின் பரிந்துரை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கம்பனியின் வருவாயை அதிகரிப்பதற்காக விற்பனை தந்திரோபாயத்தை உருவாக்கி செயல்படுத்துவது முகாமைத்துவத்தின்பொறுப்பாகும் | 2020 மே 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 01 மெட்ரிக்தொன் லக் உப்புக்கான விலை ரூபா.32,000 ஆக குறைக்க தீர்மானம் செய்யப்பட்டது.<br><br>கடந்த 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் வழங்கப்பட்டு வந்த ரூபா.75 ஊக்கத்தொகையை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்த தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. | கம்பனியின் இலாப எல்லை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதன் பிரகாரம் உரிய முகவருக்கு விலையினை குறைத்ததன் அடிப்படையில் ரூபா.161,273,875 விற்பனை சலுகையும், ரூபா 42,786,475 தொகையான ஊக்குவிப்பு படியும் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு லக் உப்பு விற்பனை முகவர்கள் ஊடாக மேற்கொள்ளும் போது லக் உப்பு 01 கிலோகிராம் சந்தை விலை ரூபா 60 மற்றும் கம்பனியின் விற்பனை விலை ரூபா 27.50 ஆன சந்தர்ப்பங்களின் போது ரூபா 32.50 அதாவது சந்தை விற்பனை விலையில் 54.17 சதவீதம் கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்தது. | | | |
| (கி) | கம்பனியால் லக் உப்பு உற்பத்தி விற்பனையின் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கு ஊக்குவிப்பு படியொன்று செலுத்தப்படுவதுடன் அந்த ஊக்குவிப்பு படி கணிப்பீட்டின் போது உரிய இலக்கிடப்பட்ட விற்பனையை அடையாத விற்பனை முகவர்களுக்கும் ஊக்குவிப்பு படி வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது 08 விற்பனை முகவர்களுக்கு இவ்வாறு இலக்கிடப்பட்ட விற்பனையை அடையாதிருந்த போதிலும் ரூபா 981,875 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | விற்பனை இலக்குகளை அடைந்த விற்பனை பிரதிநிதிகளுக்கு மட்டுமே ஊக்கத்தொகை வழங்கப்படுவதை உறுதி செய்வது முகாமையின் பொறுப்பாகும். | 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்று காரணமாக விற்பனை நடவடிக்கைகளின் எதிர்நோக்கல்களினால், அப்போதைய தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டன. | ஊக்கத்தொகை செலுத்துவது தொடர்பான முறையான வழிமுறை எதுவுமில்லை. |
| (கீ) | விற்பனை இலக்கை அடைந்து கொள்வதன் அடிப்படையில் விற்பனை முகவர்கள் ஊக்குவிப்பு | பெறப்பட்ட ஊக்குவிப்பு படிக் | முறைமைகள் திருத்தப்படவில்லை. | முறைமைகள் திருத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | படிக்கு உரித்தைப் பெறுவதுடன் அந்த ஊக்குவிப்பு படி உப்பு இருப்பு இலவசமாக விநியோகிப்பதன் மூலம் செலுத்தப்படுகின்றது. விற்பனை பிரிவின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது விற்பனை இலக்கினை அடைவதன் அடிப்படையில் விற்பனை முகவர்கள் உழைத்த ஊக்குவிப்பு படி ரூபா.42,786,475 ஆக இருந்த போதிலும் விற்பனை பெறுமதி ரூபா 44,919,575 தொகையான உப்பு இருப்பு ஊக்குவிப்பு படியாக விற்பனை முகவர்களுக்கு இலவசமாக விநியோகித்ததன் காரணமாக உரிய அளவினை விட கூடுதலாக ரூபா 2,133,100 உப்பு இருப்பு கம்பனியால் ஊக்குவிப்பு படியாக விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொடுப்பனவு சரியான கணப்பீடுகள் மற்றும் அதன் அடிப்படையில் உப்பு இருப்புகளை வழங்குவதற்கு, அதிகாரம் முறையாக வழங்கப்பட வேண்டும். உயர்மட்ட முகாமையின் பரிந்துரைக்கப்ப டாமல் சுதந்திரமாக வழங்குவதை அங்கீகரிக்கக் கூடாது. | | |
| (கு) | கம்பனியால் 2020 ஆம் ஆண்டிற்காக விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,240,890 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த ஊக்குவிப்பு படி 2020 திசெம்பர் மாதம் முதல் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் உரித்தாக இருந்த போதும் 2020 சனவரி முதல் நவம்பர் வரை ரூபா.3,082,007 தொகை சரியான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த ஊக்குவிப்பு படி செலுத்தும் போது இலக்கிடப்பட்ட விற்பனை அளவை அடைந்து கொள்ளாத உத்தியோகத்தர்களுக் | முறையான அனுமதியின் கீழ் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். | முறைமைகள் திருத்தப்படவில்லை . | முறைமைகள் திருத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காகவும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2020 சனவரி மாதத்திலிருந்து விற்பனை இலக்கை அடையாதிருந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 125,012 தொகை செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | | |
| (கூ) | 12 கள உத்தியோகத்தர்கள் விற்பனை பிரிவில் சேவையாற்றியிருந்ததுடன் அந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் பதவிகளின் படி முறையான பிரகாரம் எழுத்து மூலமாக கடமைகள் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் மாதாந்த வேலைத் திட்டமொன்றை வழங்குதல், அதன் அடிப்படையில் செயலாற்றலை மதிப்பிடுதல் மற்றும் உரிய துறைகளில் கடமைகளை நிறைவேற்றுவதை முறையான பிரகாரம் உறுதிப்படுத்துதல் போன்றவைகள் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்படவில்லை. இந்த உத்தியோகத்தர்கள் நேரடியாக விற்பனை சந்தர்ப்பங்களில் கம்பனிக்கு வந்து செல்லாதிருந்ததுடன் விற்பனை முகவர்களின் பணிகளுக்காக ஒத்துழைப்பைக் காண்பிக்கின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு விற்பனையின் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கும் விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்களுக்கும் | ஒவ்வொரு அதிகாரிக்கும் எழுத்துப்பூர்வம ாக கடமைகள் ஒதுக்கப்பட வேண்டும். பணிப்பாளர் சபையின் அனுமதிக்குப் பிறகு செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஒரு முறையான வழிமுறை வகுக்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் கம்பனியின் செலவுகளைச் செய்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | எழுத்துப்பூர்வமாக கடமைகள் ஒதுக்கப்படும் என்றும், ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம் பணியை நிறைவேற்றுவது கண்காணிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. | கண்காணிப்பு செயல்முறை போதுமானதாக இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (கெ) | 1994 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலப்பகுதிக்காக நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்ட மஹலேவாய காணிக்காக 2021 நவம்பர் 15 ஆம் கணக்காய்வுத் திகதி வரையிலும் குத்தகை உரித்துறுதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்டிருந்த கொஹொலங்கல மற்றும் புந்தல உப்பளங்களின் காணிகளின் குத்தகை கால எல்லை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாதிருந்தது உ0டன் அந்தக் காணிகளுக்காகவும் குத்தகை உரித்துறுதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை பத்திரம் தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுத்து, தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குத்தகை உறுதிகள் இற்றைவரை தயாரிக்கப்படவில்லை. |
| (கே) | கம்பனியால் உப்பு போக்குவரத்து வருமானத்தின் அடிப்படையில் சாரதிகளுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும் மேலதிக படியொன்று செலுத்தப்படுவதுடன் ரூபா.7,579,030 வருமானமொன்று கம்பனிக்கு கிடைக்காதிருக்கும் போது அதன் அடிப்படையில் ரூபா.1,541,221 தொகை மேலதிகப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | அத்தகைய கொடுப்பனவுகளின் துல்லியம் மற்றும் நியாயத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின்னரே கட்டணங்கள் சான்றளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். | விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணையின் முதற்கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை . நிதி இழப்பை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (கை) | அரச பெறுகை வழிகாட்டுதல்களின் 4.3 இன் பிரிவின் அடிப்படையில் கம்பனியின் ஒவ்வொரு பெறுகை | கம்பனியின் ஒவ்வொரு பெறுகை நடைமுறைகள் | செலவு மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை | 2021ஆம் ஆண்டில் கூட தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறைகளுக்கான மொத்த செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்படவில்லை. | தொடர்பான மொத்த செலவு மதிப்பீடுகளை தயாரிக்க அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்படவில்லை. | |
| (கொ) | மஹலேவாய, பழட்டுப்பான மற்றும் புந்தல உப்பளங்களின் பிரதான களஞ்சியங்களில் பல்வேறு கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்களின் கீழ் ரூபா.2,183,924 பெறுமதியான இருப்பொன்று 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் ரூபா.10,001,126 பெறுமதியான மெதுவாக அசைவுறும் இருப்பொன்றும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் தேவைகளுக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட வேண்டும் மற்றும் சரியான இருப்பு கட்டுப்பாட்டை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் பரிந்துரையின் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அந்த இருப்புக்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| (கோ) | உபகட்டுநிதி வழங்கப்படுகின்ற பணிகள் நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை 14 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 231,980 கூட்டுத்தொகையான முற்பணமும், பல்வேறு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2021 செப்தெம்பர் வரை 55 சந்தர்ப்பங்களின் போது வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.4,423,277 கூட்டுத் தொகையான முற்பணமும் | முற்பணம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்க ளிடமிருந்து உரிய முற்பணம் தீர்க்கப்படாமை தொடர்பாக எழுத்து மூலம் விடயங்களை கோருதல் மற்றும் விரைவாக முற்பணத்தை தீர்த்து வைப்பதற்காக | பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் ஒரு புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது, இதனால் முற்பணங்களை முறையாக வழங்கவும் மற்றும் | நீடிக்கப்பட்ட காலகட்டங்களில் இற்றைவரை முற்பணங்கள் தீர்க்கப்படாமல் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2021 நவம்பர் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல வேண்டும். | தீர்ப்பனவு செய்யவும் அனுமதியளிக்கப்பட்டள்ளது. | |
| (கௌ) | 2006 இன் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிக்காக ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை விரிவாக காண்பிக்கின்ற வருடாந்த பெறுகைத் திட்டமொன்றும் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை | அரச பெறுகை நடைமுறை வழிகாட்டுதல் விதிகளை பின்பற்ற வேண்டும். | முதுநிலை பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கூறப்பட்ட திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. |
| (ச) | ஒவ்வொரு அரச நிறுவனமும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ''2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலின்'' படி செயல்பட வேண்டும் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு தொடர்பான அதன் நோக்கத்தின் கீழ் வரும் செயல்பாடுகளை செய்யும் விதம் குறித்து கம்பனி அறிந்திருக்கவில்லை. 2030 நிகழ்ச்சி நிரல் குறித்து நிறுவனம் அறிந்திருக்காததால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதில் உள்ள மைய புள்ளிகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதில் செயல்திறனை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் ஆகியவற்றை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நிலைபேறான வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ''2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலை'' கடைபிடிக்க வேண்டும். | இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (சா) | 2017 ஆம் ஆண்டின் போது கம்பனியின் பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், நிதி மற்றும் செயற்பாட்டு கண்காணிப்பு முகாமையாளர், சிரேஷ்ட கிரய முகாமையாளர், இரசாயனம் மற்றும் விற்பனை முகாமையாளர் ஆகிய சிரேஷ்ட முகாமையாளர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் உப்புக்கான பற்றாக்குறையொன்று காணப்படுகின்றமையால் வெளிவாரித் தரப்பினரடமிருந்து உப்பினை கொள்வனவு செய்வதற்கு முன்மொழிவொன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்போது கம்பனிக்கு சொந்தமானதாக காணப்பட்ட உப்பின் இருப்பானது எதிர்வரும் சந்தைத் தேவைப்பாடு, காலநிலை நிலைமைகள் உள்ளடங்கலான உற்பத்தி பிரச்சினைகள், உப்பின் விலைகள் ஆகிய விடயங்களை கருத்திற் கொண்டு உப்பின் பற்றாக்குறை தொடர்பில் அந்த இருப்பினைப் பெற்றுக்கொள்ளாமையால் கம்பனிக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பில் மதிப்பாய்வு அறிக்கையொன்று குறித்த உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், பணிப்பாளர் சபையினாலும் அந்த விடயம் தொடர்பில் கவனத்திற் கொள்ளாது குறித்த பரிந்துரையினை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதி தலைவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டினுள் | தேவைகளை சரியாகக் கண்டறிந்து, அவற்றைச் சரியாக முகாமை செய்ய இருப்புக்களை கொள்வனவு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசாரணைக் குழுவை நியமித்து அறிக்கை தயாரிக்குமாறு பணிப்பாளர் சபையின் 2021 ஆம் ஆண்டு அறிவுறுத்தியது. | மேற்படி இருப்பில் 4,562 மெட்ரிக் தொன் உப்பு ரூபா.90,529,003 தொழிற்சாலைக்கு உப்பு உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்டது, அதே நேரத்தில் 6,391 மெட்ரிகதொன் உப்பின் ரூபா.38,948,146 கிரயத்தினை ரூபா.29,590,139 பெறுமதியில் விற்கப்பட்டது. ரூபா.41,638,458 கிரயமான 2,584 மெட்ரிக் தொன் உப்பு தட்டுப்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது, மேலும், தேறிய நிகர பெறுமதியினை ரூபா.97,521,853 பெறுமதியான மதிப்பைக் கணக்கிடும்போது கழிக்கப்பட்டது. இதனால், இந்த உப்பு கையிருப்பு பெறுகை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கம்பனி நிதி இழப்பை எதிர்நோக்கியது. |


| | | | | |
|---|---|---|---|---|
| | 4 சந்தர்ப்பங்களில் ரூபா 268.64 மில்லியன் செலுத்தி 13,515 மெற்றிக்தொன் உப்பு கம்பனியினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இராசயன ஆய்வுகூட ஆராய்ச்சிகளின் பிரகாரம் குறைந்த தரத்திலானது என்பது சான்றுப்படுத்தப்பட்ட இந்த இருப்பினை விற்பனை செய்ய முடியாதுள்ளதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 141.59 மில்லியனான 7,136 மெற்றிக் தொன் அளவான உப்பு எஞ்சியிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இவ்வாறு எஞ்சியிருந்த உப்பின் இருப்பானது ஒரு மெற்றிக் தொன் ரூபா 6,177 படி ரூபா.44.07 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இருப்பிற்கான இருப்பு நட்டமாக ரூபா 117.62 மில்லியன் இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இந்த உப்பின் இருப்புக் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு குறித்த பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் எவ்வித நடவடிக்கையும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | |
| (சி) | கம்பனியால் நிதி முகாமையாளர், உள்ளக கணக்காய்வாளர் மற்றும் பெறுகைகள் மற்றும் வழங்கல் முகாமையாளர் போன்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை | அத்தியாவசிய பணியிடங்களில் வெற்றிடங்கள நிரப்ப அசாதாரண கால | பணிப்பாளர் சபையின் அனுமதியின் பின்னர் பெறப்பட்டது. | ஊழியர்களிடம் முறையான அனுமதி பெறப்படவில்லை. நியமனங்கள் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான |

| | | |
|---|---|---|
| ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப்பரீட்சை 2020 திசெம்பர் 04 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 22 மற்றும் 24 ஆந் திகதிகளின் போது தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. கம்பனியின் பதவியணியினர் பதவிகளுக்குரிய நியமன அதிகாரியாக கம்பனியின் பணிப்பாளர் சபை இருந்த போதிலும் இந்த பதவிகளுக்குரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2021 திசெம்பர் 23 ஆந் திகதி அதாவது நியமனம் வழங்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்த பின்னரே வழங்கப்பட்டிருந்தது. சிரேஷ்ட நிறைவேற்று நிலையின் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நீண்ட காலம் எடுத்திருந்ததுடன் அந்த நியமனங்கள் முறையான பிரகாரம் மேற்கொள்ளாமையின் மூலம் அந்த பிரிவுகளின் நடவடிக்கைகளை சரியாக நிறைவேற்றுவதற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்கூறப்பட்ட பதவிகளுக்குரிய நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட புள்ளிகளை உள்ளடக்கிய நேர்முகப் பரீட்சை கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் உரிய நியமனம் வெளிப்படையாக இருந்ததா என்பது தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அவகாசத்தை செலவிடக்கூடாது. இத்தகைய நியமனங்கள் வெளிப்படைத்தன்மையுடன் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். கணக்காய்விற்கான ஆவணத் தகவல்களை வழங்குவதில் ஏற்பட்ட தோல்வியைக் கவனிப்பது முகாமையின் பொறுப்பாகும். | பிரச்சினைகள் தொடர்ச்சியாக அவதானிக்கப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (சீ) | 2020 ஆம் ஆண்டின் போது கம்பனியினால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள், அமுல்படுத்தப்படுகின்ற கால அட்டவணை மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மற்றும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை காண்பிக்கும் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி எதிர்பார்த்த பணிப் பொறுப்புக்களின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது | உரிய நேரத்தில் அதற்கான திட்டத்தை முறையாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் கூட தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.60 வரையறுக்கப்பட்ட டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்டர்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 67,769,778 | 52,651,915 | 130,321,946 | 12,751,153 | 15,117,863 | முனைப்பழியுள்ள |
| **2019** | 73,388,537 | 57,676,699 | 139,394,473 | 7,273,986 | 15,711,838 | முனைப்பழியுள்ள |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | | |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 67.77 | 52.65 | 130.32 | 12.75 | 15.12 |
| 2019 | 73.39 | 57.68 | 139.39 | 7.27 | 15.71 |
| 2020 | - | - | - | - | - |


| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்டரினால் மேல்மாகாண கல்வி அமைச்சிற்கு 2018 திசெம்பர் 19 முதல் 25 வரை கல்விசார் சுற்றுலாவொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன் விமான பயணச்சீட்டு ஒதுக்குவதற்கு ரூபா 243,228 தொகை செலவிடப்பபட்டிருந்தது. எனினும் தலைவரின் அங்கீகாரம் | தேவையான அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | விளக்கமட கொடுக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | விமான டிக்கெட்டுகளுக்கு செலுத்தப்பட்ட தொகை பொருளாதாரமற்ற பரிவர்த்தனையாகவே உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிடைக்காமையினால் டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்டரினால் இந்த சுற்றுலா இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக விமானப் பயணச்சீட்டு ஒதுக்குவதற்காக செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | | | |
| (ஆ) | கம்பனியால் சிற்றுண்டிச்சாலை சேவையினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா.9,620,390 தொகை தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் சிற்றுண்டிச்சாலை சேவையினைப் தெரிவுசெய்து கொள்வதற்காக பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சிற்றுண்டிச்சாலை சேவை வழங்குனர்களை தெரிவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். | எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பெறுகை நடைமுறை வழிகாட்டுதலை கருத்தில் கொள்ளாமல் அதே சேவை வழங்குநரிடமிருந்து சிற்றுண்டிச் சேவை பெறப்படுகிறது. |
| (இ) | 02 யூன் 2003 இன் பிஈடீ/12 பொது முயற்சி சுற்றறிக்கையின் பிரிவு 8.3.3 இற்கு இணங்கவில்லை, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கம்பனி முறையே ஊக்குவிப்பு படியாக முறையே ரூபா.575,512 மற்றும் ரூபா.632,539 செலுத்தப்பட்டிருந்தன. | தேவையான அனுமதிகளைப் பெற்ற பிறகு ஊக்குவிப்புப் படி வழங்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | தேவையான அனுமதியின்றி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டது. ஆனால் 16.11.2021 ஆம் திகதியிட்ட பொது முயற்சியின் சுற்றறிக்கை இல. 01/2021 மூலம் ஊக்குவிப்பு படி திட்டத்திற்கான அத்தகைய அனுமதியினைப் பெறுவதில் இருந்து தொலைதூரக் கல்வி மையத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | தேசிய பெறுகை வழிகாட்டி வரிசையின் பிரிவு 4.2.1 இன் படி, குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு ஒரு முதன்மை பெறுகைத் திட்டம் நிறுவனத்தால் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின்படி தேவையான முதன்மை பெறுகைத் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | முதன்மை பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

## 4.61 எல்கடுவ பிளான்டேசன் லிமிட்டட் - 2018

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 423,507,872 | 457,130,131 | 1,203,985,035 | 656,988,376 | (33,622,258) | பாதகமானது |
| 2019 | 394,076,557 | 454,602,829 | 1,210,019,400 | 806,382,601 | (60,526,270) | தீர்மானிக்கப்படவில்லை |
| 2020 | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | | |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியின் தோட்டங்களுக்கும் தலைமை அலுவலகத்திற்குமிடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காக தலைமை அலுவலகம் மற்றும் ஒவ்வொரு கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதி எதிரீடு செய்யப்பட வேண்டிய | கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளுக்கிடையே காணப்படுகின்ற வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளுக்கிடையே காணப்படுகின்ற வித்தியாசத்தை இனங்காண்டு கணக்குகளைத்திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இணக்கஞ்செய்தலைத் தொடர்ந்து ரூபா 4,173,530 இற்கு வித்தியாசமானது கொண்டுவரப்பட்டது. இந்தமீதியும் 2021 ஆம் ஆண்டு கணக்குகளுடன் இணக்கஞ்செய்யப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தில் பேணப்பட்டு வருகின்ற கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 299,934,257 வரவு மீதியும் தோட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 327,247,677 வரவு மீதியும் காணப்பட்டதன் காரணமாக அக்கணக்குகளுக்கிடையே ரூபா 27,313,240 வித்தியாசம் காணப்பட்டது. | | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் 03 ஆண்டுகளுக்கு மேலாக வருமதியாகவிருந்த ரூபா 87,385,616 பெறுமதியான வியாபார மற்றும் ஏனைய கணக்கு வருமதி மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார மற்றும் ஏனைய கணக்கு வருமதி மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வியாபார மற்றும் ஏனைய கணக்கு வருமதி மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 31/12/2021 இல் உள்ளவாறான பல மீதிகள் தகவல்கள் இல்லாமையால் தீர்க்கப்படாதுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்படுதலானது நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் வரை தற்காலிக அடிப்படையிலானதாக இருந்த போதிலும், கம்பனியின் பொது முகாமையாளர் பதவிக்காக | பொது முகாமையாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும். | கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை திட்டத்தினை திருத்தஞ்செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எஸ்ஓஆர் அனுமதிக்கப்பட்ட பின்னர் உடனடியாக | வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது. ஆனால், பதவி நியமித்தலிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சந்தை வீதத்திற்கிடையிலுள்ள சம்பளப்பிரச்சனையால் நியமனத்தினை மேற்கொள்ளப்பட்டிருக்கமுடியவில்லை. கம்பனியின் சபையினால் எஸ்ஓஆர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிரந்தர அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்படாது பதிற் கடமை மற்றும் தற்காலிக அடிப்படையில் 03 உத்தியோகத்தர்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர். | | நிரந்தர பதவிக்கு உத்தியோகத்தரொருவரை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அனுமதிக்காக சபைக்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 16(1) ஆம் பிரிவு மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம், சேவை தருனர்களால் தமது ஊழியர்களின் மொத்த உழைப்புக்குரிய பங்களிப்பு பணத்தை கணித்து அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், 2002 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை செலுத்தப்படாத ரூபா 9,284,933 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பொறுப்புக்களும் ரூபா 113,681,008 தொகையான ஊழியர் சேமலாப நிதிய பொறுப்புக்களும் தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கான ரூபா 5,828,972 தொகையும் இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர்கள் சேமலாப நிதியத்திற்கான ரூபா 8,370,625 தொகையும் 2018 இன் இறுதிவரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்டவாறு பங்களிப்புக்கள் உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும். | தற்போதைய காலத்துடன் தொடர்புடைய பொறுப்புக்களைத் தீர்த்தல் மற்றும் நிலுவைகள் உரியகாலத்தில் தீர்க்கப்படும். | நிலுவைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் | பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தி | ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் தேவைப்பாடுகளிற் | 2021/12/31 இல் உள்ளவாறும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியர் எவரும் சேவையை முடிவுறுத்திய திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடையைச் செலுத்த வேண்டிய போதிலும், 1992 ஆம் ஆண்டிலிருந்து 2018 இன் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 116,127,708 தொகையான செலுத்த வேண்டிய பணிக்கொடைப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ல் குறிப்பிட்ட பணிப்புரையின் பிரகாரம் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிணங்க கொடுப்பனவுகளைத்தீர்ப்பதற்கும் பணங்களை தேவைகளுக்கு வைத்திருத்தலிற்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ளல். | நிலுவையிலுள்ளது. |
| (ஊ) | 2015 மே 25ஆந் திகதிய 01/2015ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2ஆம் பந்திக்கு முரணாக கம்பனியின் நிரந்தர பதவியணியினுள் உள்ளடங்கியுள்ள எம்எம் 1-1 சம்பள சம்பள படிமுறைக்குரிய இரு உத்தியோகத்தர்களுக்கு எவ்வித உரித்தும் இல்லாத போது, ரூபா 1,910,000 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகளும், 2019 இல் ஆட்சேர்க்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,729,679 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகளும், எரிபொருள் படிகளும், எம்எம் 1-1 சம்பள தொகுதியிலுள்ள தோட்ட அதிகாரியொருவருக்கு ரூபா 1,260,000 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. | அரச சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அத்தகைய கொடுப்பனவுகள் அல்லது படிகளிற்காக இயக்குனர் சபையிடமிருந்து அனுமதியை வழங்கல்.<br>கம்பனியின் எஸ்ஓஆர் அத்தகைய மாற்றங்களை உள்ளடக்கி மாற்றியமைக்கப்படும். | கம்பனியின் சபையால் எஸ்ஓஆர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு | செலுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படடாத கொடுப்பனவுகள் | பிரேரிக்கப்பட்ட (புதிய) ஆட்சேர்ப்புத் | கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக்கப்படுவதுடன் பிரேரிக்கப்பட்ட (புதிய) |

| | | | | |
|---|---|---|---|---|
| | முரணாக 2019 இன் போது கம்பனியின் உத்தியோகத்தர்களுக்காக சம்பளத்திற்கு மேலதிகமாக விசேட படிகள், களியாட்ட படிகள், தற்காலிக படிகள், உள்ளக படிகள் மற்றும் பதிற்கடமைப் படிகளாக ரூபா 331,980 கூட்டுத்தொகையான அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சட்டத்திற்கு இணங்காதவையாக கருதி செயற்படல் வேண்டும். | திட்டத்தில் இதனை கம்பனி உள்ளடக்கும். | ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்துடன் அத்தகைய படிகளினைச் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கையினை முகாமைத்துவம் எடுக்கும். கம்பனியின் சபையால் எஸ்ஓஆர் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஏ) | கம்பனி தோற்றுவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 1.8 ஹெக்டயர் காணியில் அமைந்துள்ள ஒரு கட்டிடம் 1996 யூலை 25 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1,756,912 இழப்பீட்டுப் பணத்தை பெற்றுக் கொள்ளும் இணக்கப்பாட்டின் பேரில் பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தும் உரிய இழப்பீட்டுப் பணத்தை 2018 இன் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை விடுவிப்பது சம்பந்தமான இழப்பீடுகளை அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணிகளிற்கான இழப்பீட்டினைப் பெறுவதற்கான முடிவுறுத்தல் செய்முறையினை ஆரம்பிக்கவேண்டியுள்ளது. | இழப்பீடுகள் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | கம்பனிக்குச் சொந்தமான 4.25 ஹெக்டேயர் காணி பல்லபொல பிரதேச செயலகத்திற்கு ரூபா 4,700,000 இழப்பீட்டுப் பணத்தை பெற்றுக் கொள்ளும் இணக்கப்பாட்டின் | காணிகளை விடுவிப்பதற்குரிய இழப்பீடுகளை அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை | காணிகளிற்கான இழப்பீட்டினைப் பெறுவதற்கான முடிவுறுத்தல் செய்முறையினை ஆரம்பிக்கவேண்டியு | இழப்பீடுகள் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேரில் வழங்கப்பட்டிருந்தும் உரிய இழப்பீட்டுப் பணத்தை 2018 இன் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். | ள்ளது. | |
| (ஒ) | கம்பனியினால் சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு தென்னைப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான காணி மற்றும் சுற்றாடல் காரணிகளுக்கு இணங்க தென்னைப் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்காக தென்னைப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான காணி இல்லாது ரத்வத்த தோட்டத்தில் 2007 ஆம் ஆண்டில் 10 ஹெக்டயரில் தென்னைப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து அதற்காக ரூபா 6,396,615 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய பயிர்ச்செய்கை 2018 இன் இறுதியளவில் முழுமையாக தோல்வியடைந்திருந்தது. | புதிய பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் மண்ணின் பொருத்த தன்மையையும் பயிர்ச் செய்கையை பராமரிக்கக் கூடிய இயலுமையையும் தொடர்பாக பரீட்சித்து தென்னைப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தல் வேண்டும். | பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவளக்கற்கையொன்று அமுல்படுத்தப்பட்டது. | துற்போது பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பயிர்செய்கை திட்டங்களின் சாத்தியவளத்தினை முகாமைத்துவம் தற்போது அவதானித்திருந்தது. |
| (ஓ) | கம்பனியின் மனித வள முகாமையாளர் பதவிக்காக இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஒரு உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் மனிதவள | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அங்கீகரிதத தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரர்களில் மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரரை | கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகைமையற்ற உத்தியோகத்தர் மனித வள முகாமையாளராக தற்போ்தும் பணி புரிகின்றார். |

| | | | |
|---|---|---|---|
| முகாமையாளர் பதவிக்காக 2019 ஆம் ஆண்டின் போது சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். | தெரிவு செய்தல் வேண்டும். | | |
| (ஔ) கம்பனியின் தலைவரின் பயன்பாட்டிற்காக 2018 சனவரி மாதம் முதல் 2019 மே மாதம் வரையிலும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தரப்பினரிடமிருந்து வாடகை அடிப்படையில் ஆறு வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 2,601,726 கூட்டுத்தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | | |
| (i) 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம், கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகள் மீறப்படக்கூடாது. | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii). பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) ஆம் பிரிவின் பிரகாரம், சட்டரீதியான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகள் பின்பற்றப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii). அந்த வாகனத்திற்காக மாதாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் பேணப்பட்டிராமையால், குறித்த காலப்பகுதியினுள் குறிப்பிட்ட | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் தயாரிக்கப்பட்டு | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| வாகனத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 993,022 எரிபொருள் செலவினத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | | |
| (iv). ஒட்டுமொத்த வாடகை வாகனங்களின் சராசரி ஓட்டக் கிரயம் கிலோ மீற்றருக்கு ரூபா 133 எனும் சந்தை விலைகளை விஞ்சிய பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை பின்பற்றி கம்பனிக்கு சாதகமான குறைந்த கிரயத்தின் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களின் ஈடுபட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v).இந்த வாடகை வாகனங்களுக்காக செலுத்த வேண்டிய வாடகைப் பணத்திற்காக ஒவ்வொரு மாதத்திலும் வாகனத்தின் உரிமையாளர்களின் பெயரில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 937,401 பெறுமதியான காசோலைகளுக்காக தலைவர், நிதி முகாமையாளர், மனிதவள முகாமையாளர், தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் | கம்பனியின் தலைவர் உள்ளடங்கலாக உயர் முகாமைத்துவம் கூட்டாக செயற்பட்டு கம்பனியின் நிதியை தவறான முறையில் பயன்படுத்தியுள்ளமையால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரச்சனைகள் தீர்க்கப்படாதிருந்தது. |

ஒருவரினால் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிரு ந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இந்த காசோலைகள் பெறுநர் தவிர்ந்த வேறு யாராலும் மாற்றும் வகையில் ‘‘பெறுநர் கணக்கிற்கு மாத்திரம்’’ எனும் அடிக்கோடு நிதி முகாமையாளர், தகவல் தொழில்நுட்ப முகாமையாளர், பொது முகாமையாளர் மற்றும் தலைவரின் பரிந்துரைக்கமைய இரத்துச்செய்யப்பட்டிருந் ததுடன், வங்கியினால் அதன் பிரகாரம் செயற்பட்டு அடிக்கோடுகள் இரத்துச்செய்யப்பட்டிருந் ததுடன், அதன் பின்னர் அந்த காசேலையை கொண்டு வருபவருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக காசோலைகள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்படுவதுடன், அந்த காசோலைகளை மாற்றிய உத்தியோகத்தர்கள் குறித்த பணத்தை தலைவருக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கியதாக கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகளை வழங்கியுள்ளனர். | | | |
| (vi). | நிதி மற்றும் வெகுசன ஊடகத்தின் செயலாளரின் 2019 சனவரி 30ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நியமிக்கப்பட்ட தலைவர் அத்திகதிக்கு முன்னர், அதாவது, 2018 திசெம்பர் 17 முதல் 2019 சனவரி 29ஆந் திகதி வரையிலும் நியமனமொன்றில்லாது கம்பனியின் தலைவராக கடமையாற்றி கம்பனியின் தோட்ட அதிகாரியொருவருக்கு சொந்தமான 32 ஸ்ரீ 4764 எனும் இலக்கமுடைய வாகனத்தினை தனது பயன்பாட்டிற்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்தார். மேலும், அந்த வாகனத்திற்காக குறித்த காலப்பகுதியினுள் வாடகையாக ரூபா 250,161 மற்றும் 615 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 60,150 தொகை கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. அந்த செலவினங்கள் அதிகாரமற்ற செலவினமொன்றாக | நிதி முறையற்ற வித்தில் பயன்படுத்தப்பட்டு ள்ளமை அவதானிக்கப்படு கின்றமையால் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | பிரச்சனைகள் தீர்க்கப்படாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்படுகின்றது. மேலும், குறித்த வாடகையினை குறித்த தோட்ட அதிகாரி பெற்றுக்கொள்ளவில்லை என கணக்காய்விற்கு எழுத்துமூலம் சான்றுபடுத்தியிருந்தார். | | | |
| (க) | கம்பனிக்கு சொந்தமான ரத்வத்த தேயிலைச் தொழிற்சாலை 2008ஆம் ஆண்டு முதல் தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2013ஆம் ஆண்டு முதல் 2019 இன் இறுதி வரையிலும் அந்த கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,468,900 நிலுவை குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் குத்தகை தொகை துரிதமாக அறவிடப்பட வேண்டும். | ஈபீஎல் ஆல் சொத்தானது சூவீகரிக்கப்படுமென் பதுடன் நிலுவை குத்தகை வாடகைகயை அறவிடுவதற்கான முடிவுறுத்தல் செய்முறையை தொடங்கவேண்டியு ள்ளது. . | சொத்தானது சுவீகரிக்கப்பட்டதுடன் நிலுவை குத்தகை வாடகைகயை அறவிடுவதற்கான முடிவுறுத்தல் செய்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டது. |
| (கா) | நிரந்தர பதவியொன்றில் ஏற்படும் வெற்றிடத்திற்காக நிரந்தர அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் வரையில், அதற்காக அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதிலிருந்து விலகியிருக்க வேண்டும் எனினும், அவசர தேவை காரணமாக அமைய அடிப்படையில் நியமனமொன்று வழங்கப்பட்டால், அதற்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடியளவு | நிரந்தர பதவியை மூன்று மாதங்களினுள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரச்சனைகள் தீர்க்கப்படாதிருந்தது. |


| | | | | |
|---|---|---|---|---|
| | விரைவாக அந்த பதவியை 03 மாதங்களினுள் நிரப்புவதங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2019 சனவரி 15ஆந் திகதி முதல் தகைமைகளை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் மனிதவள முகாமையாளர் பதவியில் இணைத்துக்கொள்ளப்பட்டு கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | | | |
| (கி) | 2019 இல் கம்பனியின் கைவிரலடையாள இயந்திரம் உரிய முறையில் பராமரிக்கப்பட்டிராததுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வருகைப் பதிவேடு மாத்திரம் பேணிச்செல்லப்டிட்டிருந்தது. | உத்தியோகத்தர் களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் பதிவு செய்யப்படல் வேண்டும். | நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைவிரலடையாள இயந்திரமெதுவும் தற்போது பேணப்படவில்லை. |
| (கீ) | 2006 ஆம் ஆண்டின் போது செலகம தேயிலை தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது, ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை குத்தகை வீதத்தினை மாற்றியமைப்பதற்குரிய பிரிவுகள் குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிராமையால், 2006 ஆம் ஆண்டு முதல் 2019 இறுதி வரையிலும், கம்பனிக்கு ரூபா 1,430,542 கூட்டுத்தொகையான வரி வருமானம் | குத்தகை உடன்படிக்கைக்கு திருத்தப்பட்ட பகுதிகளை உள்ளடக்குவதற்கும், நிலுவை குத்தகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய மாதாந்த வாடகையை இறுதியாக்குவதற்காக அரசமதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்ற பின்னர் குத்தகை உடன்படிக்கையை மாற்றியமைப்பதற்கு தற்போதுள்ள முகாமைத்துவம் பரிந்துரை செய்தது. | உடன்படிக்கைகள் இதுவரை மாற்றியமைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இழக்கப்பட்டிருந்தது. | | | |
| (கு) | ஹெக்டேயர் ஒன்றுக்கான வருடாந்த தேயிலை விளைச்சல் 550 கிலோ கிராமுக்கு குறைவான விளைச்சலுடைய சுமார் 379 ஹெக்டேயர்கள் வெளிவாரி பயிர்செய்கையாளர்களான ஓய்வூதியம் பெற்றோருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பெருந்தொட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளுக்கமைய அந்த நிலப்பிரதேசத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த நியமத்திற்கமைவான தேயிலை விளைச்சல் 2019 இல் 604,856 கிலோ கிராம்களாக காணப்பட்ட போதிலும், அவர்களால் வழங்கப்பட்ட தேயிலை விளைச்சலானது 8 சதவீதத்திற்குச் சமமான 50,495 கிலோ கிராம் தேயிலை மாத்திரமே ஆகும். | வெளிவாரி பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு பதிலாக விளைச்சலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிப்பயிர்ச்செய்கையாளர்கள் அவர்களுடைய பிரச்சனை இனங்காணப்படல் அவர்களுடைய உற்பத்தியினை முன்னேற்றுவதற்காக அவர்களை ஊக்குவித்தல் பட்டியலிடப்பட்டது. ஈபீஎல் அதன் செயற்பாட்டினை மேற்பார்வை செய்வதற்காகவும் வெளிப்பயிர்செய்கையாளர்களின் பத்து துறைகளின் உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கும் அர்ப்பணிப்புள்ள முகாமையாளர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். | மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (கூ) | பாரத்திற்கு இணங்க பளிங்கு கற்களை விற்பனை செய்யக்கூடியதாக இருந்தும் கம்பனியால் அளவின் பிரகாரம் பளிங்கு கற்களை விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக கம்பனிக்கு அதிக விலையைப் பெற்றுக் கொள்வதற்கு இருந்த வாய்ப்பு இல்லாமல் போயிருந்தது. மேலும், உடன்படிக்கையின் பிரகாரம் 01 கியூப் பளிங்கு கல் ரூபா 13,650 வீதம் கொள்வனவு | உடன்படிக்கை செய்த விலைக்கு குறைந்த விலையில் பளிங்கு கற்களை விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கி கம்பனிக்கு கிடைக்க கூடியதாக இருந்த வருமானத்தை | ஒவ்வொரு பளிங்கு கற்களுக்கும் விற்பனை விலை ரூபா 13,650 என குறிப்பிட்ட உடின்படிக்கையினை தற்போதுள்ள முகாமைத்துவம் திருத்தியமைத்தது. இந்த உடன்படிக்கை குறித்த காலத்தில் காலதாமதமடைவதுடன் தற்போதுள்ள ஒப்பந்த | பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்வதற்கு கொள்வனவாளர் இணங்கியிருந்தும் கம்பனியின் பொது முகாமையாளர் (பதில்) ரூபா 1,000 வீதம் 104.6 கீயூப்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்ததன் காரணமாக கம்பனிக்கு ரூபா 1,323,190 நட்டம் ஏற்பட்டிருந்தது. | இழக்கச் செய்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | காலப்பகுதியின் இறுதியினுள் புதிய முதலீட்டாளர்களை தெரிவுசெய்வதற்காக பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படும். | |
| (கெ) | கம்பனிக்குச் சொந்தமான 06 தொழிற்சாலைகளில் 03 தொழிற்சாலைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் செயற்பாடற்ற தொழிற்சாலையை தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு சொந்தமான செயற்பாடற்ற தொழிற்சாலைகளை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எல்கடுவ மற்றும் பிட்டகண்ட செயற்பாடற்ற தொழிற்சாலைகள் நீண்டகாலத்திற்கு பயன்படுத்தப்படாதிருந்தது. இந்தத் தொழிற்சாலைகள் ரூபா 1 பில்லியன் மூலதன பங்களிப்பில்லாமல் புதுப்பிக்கப்படமுடியாது. கம்பனியானது அத்தகைய தொகையினை முதலிடமுடியாதிருந்ததுடன் வருமான உருவாக்கல் செய்முறைக்கான மாற்று நடைமுறைகளை கண்டுபுடிக்கமுடியாமலுமிருந்தது. |
| (கே) | உற்பத்தி பணிகளை மேற்கொள்ளக்கூடிய நிலையிலுள்ள ரத்வத்த தேயிலைத் தொழிற்சாலை 2019 இன் யூலை மாதம் முதல் கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் 31 ஆம் கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டு பணிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முடிவுறுத்தல் செய்முறை ஆரம்பிக்கப்பட்டது. | தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.62 சிலாபம் பிளான்டேஷன் லிமிட்டட் (சீபீஎல்) - 2020

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 436,957,031 | 472,135,727 | 1,305,324,678 | 396,941,839 | (35,178,696) | முனைப்பழியுள்ள |
| **2019** | 553,045,334 | 489,034,730 | 1,428,470,323 | 464,505,238 | 64,010,604 | முனைப்பழியுள்ள |
| **2020** | 856,323,535 | 573,223,873 | 1,885,276,761 | 566,620,177 | 283,099,662 | முனைப்பழியுள்ள |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 436.96 | 472.14 | 1,305.32 | 396.94 | (35.18) |
| 2019 | 553.05 | 489.03 | 1,428.47 | 464.51 | 64.01 |
| 2020 | 856.32 | 573.22 | 1,885.28 | 566.62 | 283.10 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கள ஆய்வை மேற்கொள்ளாமல் கம்பனியால் ரூபா 4.45 மில்லியன் கிரயத்தில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புத்தளம் மங்கல எலிய தோட்டத்தில் 18.75 ஹெக்டெயர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்ட 3,850 மரமுந்திரிகை மரங்கள் உள்ளடங்கிய பெருந்தோட்டம் 2015 ஆம் ஆண்டளவில் முழுமையாக | கணக்குகளிலிருந்து பௌதீக ரீதியாக காணப்பட்டிருக்காத சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது இந்த விடயத்தை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டது. | உரிய பெறுமதிகளை பதிவழிப்புச் செய்வதற்கு அறிக்கையொன்று கொடுக்கப்பட்டிருந்தது டன் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் ஏனைய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அழிவடைந்திருந்த போதிலும் அது தொடர்பான சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2019 ஆம் ஆணடின் நிதிக்கூற்றுக்களில் இச்செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 1992 ஆம் ஆண்டில் கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒப்படைக்கப்பட்ட ரூபா 142,502,287 பெறுமதியான 5,733 ஹெக்டயர் காணிகளில் 187.44 ஹெக்டயர் காணிகள் 2018 இன் திசெம்பர் 31 ஆந் திகதி வரை வெளித்தரப்பினர்களால் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அக் காணிகளுக்குரிய திட்ட வரைபடங்கள் கம்பனியிடம் இல்லாததன் காரணமாக உரிமையை தெளிவாகச் சமர்பித்து அத்து மீறிய கைப்பற்றுதல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | கம்பனிக்குச் சொந்தமான அளவை செய்யப்படாத காணிகளை அளவை செய்து அதற்கிணங்க எல்லைகளை குறித்துக்கொள்ள வேண்டியதுடன் அத்துமீறிய கைப்பற்றுதல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.மேலும், குத்தகை செய்யப்பட்ட காணிகள் தொடர்பில் திட்டங்கள் தயார் செய்யப்பட வேண்டும். உறுதிகள் | கம்பனியானது காணிகளை அளவை செய்யும் மற்றும் குத்தகை காணிகளிற்கு திட்டங்களை தயாரிக்கும் செய்முறையிலுமுள்ளது. | கம்பனியானது மங்கலெலியா தோட்டத்தின் அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பின்கிறியா எல்லை தோட்டங்கள் மற்றும் ஏனைய தோட்டங்கின் அளவை மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றன. |
| (இ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் படிகளைத் தீர்மானிக்கும் போது தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் | படிகளைச் செலுத்துவதற்கு முன்னர் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் முகாமைத்துவ | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இயக்குனர்கள் சபையின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கொடுப்பனவு இப்பொழுதும் தொடருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாது ஜேம் மற்றும் அதற்கு மேற்பட்ட சம்பளத் தொகுதியின் 28 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 7,740,249 தொகை “வேலையாட்கள் படியாக” 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பபடுதல் வேண்டும். | | |
| (ஈ) | சிலாபம் மற்றும் பளுகஸ்வெவவிலுள்ள இரண்டு விற்பனை நிலையங்கள் மற்றும் பளுகஸ்வெவவிலுள்ள மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையம் என்பவற்றின் ஆவணப்படுத்தப்பட்ட இருப்பு மீதிக்கும் பௌதீக ரீதியான இருப்பு மீதிக்கும் இடையே ரூபா 551,581 பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்ட மரமுந்திரிகைகளில் 259 கிகி பற்றாக்குறையொன்று காணப்பட்டது. 2019 யூலை 30 அளவில் பளுகஸ்வெவ மற்றும் தலைமை அலுவலகத்தில் ரூபா 76,860 பெறுமதியான 200 தேங்காய் எண்ணெய் போத்தல்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. 2020 யூலை 31 வரையிலும் இப் பற்றாக்குறைகளிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்புக்களிலுள்ள பற்றாக்குறைகளிற்கு பொறுப்பான அதிகாரிகளிற்கு எதிராகவும் உரிய நட்டங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி வரை முறையான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் ஏற்பாடுகளிற்கு முரணாக கம்பனி 28 சிரேஷ்ட நிலை முகாமையாளர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1.72 மில்லியன் தொகையான பாதிடப்பட்ட படிகளை வழங்கியிருந்ததுடன் ஒன்பது இடைநிலை மற்றும் குறைந்த | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. . | இயக்குனர்கள் சபையின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கொடுப்பனவு இப்பொழுதும் தொடருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலை முகாமையாளர்களிற்கு ரூபா 2.12 மில்லியன் தொகையான சாரதிகளின் படிகளும் ரூபா 438,934 தொகையான போக்குவரத்துப் படிகளும் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன. | | | |
| (ஊ) | கம்பனிக்காக கடனளிப்பதற்கும் இதில் குறிப்பிடப்படும் கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் மற்றும் அமைச்சுக்களிற்காக கடனை பெறுவதற்கும் சட்டரீதியான அதிகாரம் காணப்படாத போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, எல்கடுவ பிளான்டேஷன் லிமிட்டட், இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம், அரச வளங்கள் மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு 2010 ஆம் ஆண்டில் கம்பனியால் கடனளிக்கப்பட்ட ரூபா 105 மில்லியன் கடன் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான தொகைக்குரிய வட்டி உள்ளடங்கிய ரூபா 164.5 மில்லியன் கூட்டுமொத்தத்தை அறவீடு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கடன் மீதிகளை அறவீடு செய்வதை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்தவொரு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஞாபகப்படுத்தல்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் திரட்டியவட்டியானது 2022 பெப்ரவரி வரையிலும் தீர்க்கபட்டிருக்கவில்லை. |
| (எ) | தென்னை பயிர் செய்கையின் போது ஒரு ஏக்கருக்கு சுமார் 70 எண்ணிக்கையான | தென்னைக் காணிகளில் கவர்ச்சிகரமான தேங்காய் மர | கம்பனியானது மீள்நிரப்பல் செய்முறையினை | பயிர்ச்செய்கைக்காக காணியை ஆகக்கூடிய முறையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தென்னை மரங்கள் காணப்படுவதுடன் அதன் படி ஹெக்டயர் ஒன்றிற்கு காணப்பட வேண்டிய தென்னை மரங்களின் எண்ணிக்கை 172 ஆகும். கம்பனிக்கு சொந்தமான மொத்த தென்னை பயிர் செய்யப்பட்டுள்ள ஹெக்டயர்கள் 3,099 ஆகக் காணப்பட்டதுடன் அதன் படி ஹெக்டயர் ஒன்றில் காணப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை 624,007 தொகை ஆக இருக்க வேண்டிய போதிலும் கம்பனி தற்போது பயிர் செய்துள்ள மொத்தத் தென்னை மரங்களின் எண்ணிக்கை 310,635 ஆகக் காணப்பட்டதுடன், அது சராசரி பெறுமதியை விட 313,372 மரங்கள் குறைவாக அதாவது 50 சதவீத தென்னங்காணிகள் குறை பயன்பாட்டுடன் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | எண்ணிக்கை ஒன்றினை பயிர்செய்து பராமரிக்க வேண்டும். | தொடருகின்றதுடன் பயிர்ச்செய்கையின் கீழ் 12% மொத்த பயிர்செய்கையின் காணி அளவில் பராமரிக்கப்படும். | பயன்படுத்துவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரகாரம் குறைந்த அளவு மூன்று வருடங்களுக்காக பிரதான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதனை ஆறு மாதங்களுக்கு உட்பட்ட காலப்பகுதியுள் தொடர்ச்சியாக நாளதுவரையாக்கி அதன் பின்னர் அடுத்த ஆண்டிற்கான விரிவான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கம்பனி செயற்பட வேண்டும். | கம்பனியின் வருடம் 2022 திட்டம் அதற்கிணங்க நாளதுவரையாக்கப்படும். | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் கம்பனியினால் பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | | | |
| (ஐ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.3 மற்றும் 2014 பெப்ரவரி 11 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 5(2) பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டுள்ள கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்து பகிரங்க தொழில் முயற்சிகள் தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018- 2022 கூட்டிணைந்த திட்டம் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு 2021 நவம்பர் 30 திகதி தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கூட்டிணைந்த திட்டம் உரிய காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கம்பனியின் வருடம் 2022 இற்கான திட்டம் அதற்கிணங்க நாளதுவரையாக்கப்படும். | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |
| (ஒ) | 2003 ஜுன் 02 திகதிய 12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.2 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் 2018 – | கூட்டிணைந்த திட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | கம்பனி 2022 திட்டத்துடன் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும். | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |

2022 கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) தற்போது நிறுவனத்தில் காணப்படும் வளங்கள்

- காணிகள் மற்றும் கட்டிடங்கள்
- உற்பத்தி மற்றும் செயற்பாட்டு வசதிகள்
- மனிதவள மற்றும் முகாமைத்துவ திறமைகள்
- தொழிநுட்ப அறிவு
- சந்தை மற்றும் வழங்குனர்கள்

(ii) அமைப்புக் கட்டமைப்பு

(iii)நிறுவனத்தில் காணப்படும் திறமைகள் மற்றும் பலவீனங்கள், நிறுவன சுற்றாடலின் மூலம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் (SWOT analysis) ஆகியவற்றுக்கான பகுப்பாய்வு

திட்டமிடப்பட்ட காலப் பகுதியுள் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ள முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 5(2) இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அடுத்த நிதியாண்டில் செயற்படுத்த எதிர்பார்த்துள்ள வர்த்தக செயற்பாடுகள் உள்ளடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய அட்டவணைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br><br>i. திட்டமிட்ட பிரதான முதலீடுகள், கொள்திறன் விரிவாக்கல், பிரதான பெறுகைகள் உள்ளடங்கிய வருடாந்த பெறுகைத் திட்டம்.<br>ii. மனித வள அபிவிருத்தித் திட்டம்<br>iii. கடன் திருப்பிச் செலுத்தும் திட்டம். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய அட்டவணைகளை சரியாக உள்ளடக்கி அதனை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கம்பனியின் 2022 திட்டமானது கொடுக்கப்பட்ட தகவல்களுடன் சமர்ப்பிக்கப்படும். | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |
| (ஔ) | கம்பனிக்குச் சொந்தமான பிங்கிரிய தோட்டத்தில் அமைந்துள்ள மாகாண மாரவில II குளத்தை புனரமைத்தல் மற்றும் அதன் மூலம் அகற்றப்படுகின்ற 35,000 கியூப் சேற்று மண்ணை ஒரு கியூப் ரூபா | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அகற்றப்பட்ட சேற்று மண்ணிற்காக பணத்தை அறவீடு செய்வதற்கு | கம்பனியால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சட்ட வழக்கானது செய்முறையிலுள்ளது. | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1,800 வீதம் கம்பனிக்குச் செலுத்தி அகற்றுவதற்காக 2018 இன் சனவரி 11 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தும் உடன்படிக்கை செய்துகொண்டவர் சேற்று மண்ணை அகற்றியிருந்தும் அதற்குரிய பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சேற்று மண் அகற்றுவதனை நிறுத்துவதற்கு கம்பனி சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அல்லது சேற்று மண் அகழ்வதனை நிறுத்துவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| (க) | சிலாபம் தோட்டத்திற்குச் சொந்தமான மாவத்தகம தோட்டத்தின் ஒரு பகுதியில் 40 ஏக்கர்கள் அளவில் அமைந்துள்ள கருங்கற்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரமற்ற நபர்களால் அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கம்பனியால் அந்த அதிகாரமற்ற அகழ்தலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து அதற்கிணங்க வேலி எல்லைகளைப் பேண வேண்டியதுடன் உத்தரவற்ற கைப்பற்றுதல்கள் மற்றும் செயற்பாடுகளை வெளிப்பளிப்படுத்தும் வகையில் தோட்ட மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | கம்பனியால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சட்ட வழக்கானது செய்முறையிலுள்ளது. | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |

## 4.63 குருநாகல் பிளான்டேசன் லிமிடெட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 731,419,015 | 510,007,212 | 2,455,590,043 | 468,138,351 | 221,411,803 | முனைப்பழியுள்ள |
| **2019** | 621,135,627 | 500,964,720 | 2,437,860,149 | 459,015,622 | 120,170,906 | முனைப்பழியுள்ள |
| **2020** | 750,511,013 | 535,564,262 | 2,801,888,968 | 523,263,772 | 214,946,751 | முனைப்பழியுள்ள |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | குருநாகல் பெருந்தோட்ட கம்பனிக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளில் அரசாங்கத்தின் பல்வேறு நோக்கங்களுக்காக விடுவிக்கப்பட்ட 1,751 ஹெக்டேயர் காணிகளுக்குரிய குத்தகை செலுத்துகைகள் 2009 ஆம் ஆண்டு முதல் நிறுத்துவதற்கு கம்பனி எடுத்திருந்த தீர்மானத்திற்கு பெருந்தோட்ட கைத்தொழில் | உரிய தீர்மானத்திற்கு வரிசை அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கம்பனியானது வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியின் அனுமதியைப்பெறும் செய்முறையிலுள்ளது. | திறைசேரி அல்லது வரிசை அமைச்சின் அனுமதி 2022 பெப்ரவரி வரை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், அதிலிருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அந்த காணிகளின் அளவுகளுக்குரிய குத்தகை வாடகையான ரூபா 221 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 139 மில்லியன் பெறுமதியான குத்தகைக்கு பெறப்பட்ட காணிகள் தொடர்பான திட்டங்கள் 2020 இல் கம்பனியிடம் இருக்கவில்லை. ஆகையால் காணியின் சட்டரீதியான உரிமைத்துவம் மற்றும் தெளிவான உரித்துறுதியை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி தவறிவிட்டது. | குத்தகை காணிகள் தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | கம்பனியானது காணிகளை அளவை செய்யும் செய்முறை மற்றும் குத்தகை காணிகளுக்கான திட்டங்களை தயாரிக்கும் செய்முறையிலுள்ளது. | 87 பிரிவிலுள்ள 70 பொறிகள் பெறப்பட்டிருந்தது டன் மீதி 17 பிரிவுகளின் அளவையானது செய்முறையிலுள் ளது. |
| (இ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியை மீறி மாதமொன்றிற்கு ரூபா 10,000 விலைவீதத்தில் ரூபா 1.08 மில்லியன் கூட்டுமொத்தமான சீராக்கல் படி என அழைக்கப்படும் படி மற்றும் ரூபா 1,418,894 மருத்துவ படி என்பன அதற்கான சுற்றறிக்கையின் மூலம் எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளப்படாத போதிலும் முறையே 09 நடுத்தர மட்ட முகாமையாளர்கள் மற்றும் நிறைவேற்று மட்ட உத்தியோகத்தர்களிற்கு கம்பனியால் 2020 ஆம் ஆணடில் செலுத்தப்பட்டிருந்தது. | இப் படிகள் முறையற்றவை எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில் லை. | கொடுப்பனவான து 2021 ஆம் ஆண்டிலும் தொடருகின்றது. |
| (ஈ) | 2009 மே 29 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் | இப் படிகள் முறையற்றவை | கணக்காய்வு அவதானிப்பு | கொடுப்பனவான து 2021 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்கள சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியினை மீறி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அல்லது பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி தோட்டத் தொழிலாளர்களை 2020 ஆம் ஆண்டில் சேவையில் ஈடுபடுத்தியதற்காக கம்பனியின் 09 சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியணி உத்தியோகத்தர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 5.4 மில்லியன் தொகையான ஊழியர்களின் சம்பளம் தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தாமல் பணமாக மாற்றக்கூடிய ஊழியர்களின் படிகளாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன. | வ எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிலும் தொடருகின்றது. |
| (உ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 செப்தெம்பர் 16 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் குருநாகல் பிளான்டேசன்ஸ் லிமிட்டட்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 268 ஆக காணப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் உண்மையான பதவியணியினர் 212 ஆக இருந்தது. ஆகையால் 2020 திசெம்பர் 31 அளவில் கம்பனியின் 56 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்த பின்னர் வெற்றிடங்களிற்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி கம்பனியால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. |

## 4.64 வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 996,054,982 | 1,049,003,013 | 611,782,270 | 205,826,033 | (52,948,031) | முனைப்பழியுள்ள |
| **2019** | 959,715,256 | 916,447,679 | 627,617,237 | 185,787,222 | 43,267,577 | முனைப்பழியுள்ள |
| **2020** | 1,202,465,377 | 1,217,610,337 | 618,356,191 | 198,529,380 | (15,144,959) | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பீ.சீ.சீ லங்கா கம்பனியிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்துக்காக ரூபா 750,000 செலுத்த வேண்டிய வாடகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் பீ.சீ.சீ லங்காற்கும் | குத்தகை அடிப்படையில் கட்டிடத்தைப் பெற்றுக் கொள்ளும் போது உரிய தரப்பினர்களுடன் செல்லுபடியான | குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பீ.சீ.சீ லங்காற்கும் கம்பனிக்குமிடையே முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனிக்குமிடையே முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 (ஊ) ஆம் பந்தியின் பிரகாரம், பதில் கடமைக்காக நியமிக்கப்பட வேண்டியதானது நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக அடிப்படையிலானதாக இருந்த போதிலும், கம்பனியின் தலைமை அலுவலகத்தின் உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிக்காக நிரந்தர நியமனம் செய்யப்படாது 2017 மார்ச் 22 ஆந் திகதியிலிருந்து ஒரு உத்தியோகத்தர் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். | உரிய அங்கீகாரத்துடன் உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது நிரந்தர நியமனமொன்று இந்தப்பதவிக்கு மேற்கொள்ளப்பட்டி ருந்தது. | தற்போது நிரந்தர நியமனமொன்று இந்தப்பதவிக்கு மேற்கொள்ளப்பட்டிருந் தது. தாபனவிதிக்கோவைக் கு முரணாக செலுத்தப்பட்ட படிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (இ) | ஏனைய ஒரு அரசாங்க நிறுவனத்தின் முகாமைத்துவத்துவத்தராக நிரந்தரப் பதவியில் முழு நேர கடமையை மேற்கொண்டு அப் பதவிக்குரிய சம்பளமும் படிகளும் பெற்றுக்கொள்ளும் ஒரு உத்தியோகத்தர் இக் கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளராக நியமிக்கப்பட்டு முழு நேர நிறைவேற்றுப் பணிப்பாளருக்குரிய படிகள் மற்றும் எரிபொருள் படியாக ரூபா 718,825 தொகை கம்பனியால் 2018/2019 இன் போது செலுத்தப்பட்டிருந்தது. | ஏனைய ஒரு அரசாங்க நிறுவனத்தின் முழுநேர சேவையில் ஈடுபட்ட ஒரு உத்தியோகத்தருக்கு நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியில் முழு நேர சம்பளம் வழங்கப்பட மாட்டாது. | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | பணிப்பாளர் 2019 திசெம்பர் 01 இல் ஏ ஓய்வூதியம் பெற்றிருந்தார். சுற்றறிக்கை முரணாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (ஈ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ 03/2018 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகையூதியத்தினை | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி | சுற்றறிக்கைகளுக்கு முரணாக செலுத்திய மிகையூதியங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் நிதி ஆண்டின் போது நட்ட நிலைமை அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் அந்த நட்ட தன்மை பற்றி 2017 நிதி ஆண்டின் போது கழித்துக்கொள்வதற்கு முடியாதிருந்த கம்பனிகளில் சேவையாற்றிய ஊழியர்கள் தொடர்பாக தயவினை கருத்தில் கொண்டு ஒரு ஊழியருக்கு ரூபா 3,000 வீதம் ரூபா 252,000 தொகை மாத்திரம் மிகையூதியமாகச் செலுத்தக் கூடியதாக இருந்தும் அத்தொகையை மிகைத்து ரூபா 559,719 மிகையூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் நிதி ஆண்டிற்காக செலுத்தவேண்டிய மிகையூதியமாக ரூபா 501,000 இருந்தது. உரிய வரையறையை விஞ்சி மிகையூதியமாக ரூபா 1,665,978 மேலதிக தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ருக்கவில்லை. | அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மெனிக்திவெல தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் உலர்த்தாத தேயிலைக் கொழுந்து மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018/2019 இன் போது தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு உலர்த்தாத தேயிலைக் கொழுந்து ஊக்குவிப்பு படியாக ரூபா 2,167,569 செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்நிகழ்ச்சித் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலர்ந்ததாக | இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடிய வகையில் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உலர்த்தாத தேயிலைக் கொழுந்து ஊக்குவிப்பு படி 2019/2020 இல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவமானது உயர்தரம் வாய்ந்த பச்சைத் தேயிலையை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தது. | உயர்தரம் வாய்ந்த பச்சை இலைகளை கொள்வனவு செய்வதற்கு தந்திரோபாயத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேயிலைக் கொழுந்துகளைக் கொள்வனவு செய்தல் 74,540 கிலோ கிராம்களால் குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | கினிதும தேயிலை தொழிற்சாலையின் உலர்த்தாத தேயிலைக் கொழுந்துகளைப் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துவதற்காக கம்பனியால் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு ரூபா 672,028 ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தும் 2017/2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018/2019 இல் உலர்த்தாத தேயிலைக் கொழுந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 349,704 கிலோ கிராம்களால் வீழ்ச்சியடைந்திருந்தும் அதற்காக தேவையான நடைமுறைகள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது அதன் மூலம் கம்பனியின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றது என்பதனை முகாமைத்துவம் கவனத்தித்துக் கொள்ளுதல் வேண்டும். | கொழுந்து ஊக்குவிப்பு படி இல் நிறுத்தப்பட்டிருந்தது டன் முகாமைத்துவமானது உயர்தரம் வாய்ந்த பச்சைத் தேயிலையை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தது. (மாற்று விகிதம்) | ஊக்குவிப்பு படிகளை செலுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கொழுந்து இலைகளை பெறமுடியாதிருந்தது. |
| (எ) | 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 இற்கு விற்பனை செய்யப்பட்ட தேயிலையை உலர்த்தும் இயந்திரத்தின் கிரயமும் திரண்ட பெறுமானத்தேய்வும் 2020/2021 இன் இறுதிவரை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | விற்பனை செய்யப்பட்ட தேயிலையை உலர்த்தும் இயந்திரத்தின் கிரயத்தையும் திரண்ட பெறுமானத் தேய்வையும் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேயிலையை உலர்த்தும் இயந்திரத்தின் கிரயத்தினை கண்டுபிடிப்பதற்கு போதிய ஆவணங்களின்மையால் இது அகற்றப்பட்டிருக்காததுடன் சொத்துக்களின் மீள்மதிப்பீடு இந்த | இது இதுவரை கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருடத்தில் ஏற்கனவே பூர்த்தியடைந்திருந்தமையால் சொல்லப்பட்ட பெறுமதி அதற்கிணங்க திருத்தப்படும். | |
| (ஏ) | 2019 மார்ச் 28 ஆம் திகதிய கேரீஎவ்எல்/1419/2019 ஆம் இலக்க பணப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் கீழ் காணப்படுகின்ற தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தியின் குறைபாடுகளை இனங்காண்பதற்கும் தற்போது இலாபம் பெறாத தேயிலை தொழிற்சாலைகளை இலாபகரமான நிலைக்கு கொண்டு வருவதற்கும் செயற்பாட்டு மதியுரையாளர் ஒருவர் ஒரு வருடத்திற்காக சேர்க்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் தொழில் மாதிரியில் குறிப்பிடப்பட்ட தேயிலை கொழுந்துகளை பெற்றுக்கொள்ளல், உற்பத்தி நடைமுறைகள், தேயிலை ஏலமிடல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தேயிலை சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் போன்ற பணிகளின் செயல்முன்னேற்றம் ஒன்று காண்பிக்கப்படாதிருந்ததுடன், 08 மாதங்களின் பின்னர் உரிய மதியுரையாளர் சேவையில் இருந்து நீங்கிச் செல்லும் சந்தர்ப்பம் வரையிலும் அவருக்காக ரூபா 1,602,040 தொகை செலவிடப்பட்டிருந்தது. | விசேட நோக்கத்திற்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களால் வேலை குறிப்புரையில் குறிப்பிடப்பட்ட வேலைகளைச் செய்விப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மதியுரையாளரின் சேவை கம்பனியால் பெறப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக புதிய கோரிக்கை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முன் மதியுரையாளர் கேட்டு விலகிச் சென்றமையால் 2019 நவம்பர் மாதம் முதல் அவரின் சேவை பெறப்பட்டிருக்கவில்லை. | ஊடன்படிக்கையின் கீழ் ஒதுக்கப்பட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | தேயிலை சபையின் நியதிகளின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட பச்சை தேயிலை கொழுந்து 100 கிலோகிராமில் இருந்து ஆகக் குறைந்தது பூர்த்தி தேயிலை 21.5 கிலோகிராம் உற்பத்தி மட்டத்தில் பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும் 2019/2020 இல் கம்பனிக்குரிய 04 தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தி அந்த மட்டத்தை அடையாதிருந்தமையின் காரணமாக பச்சை தேயிலை கொழுந்தின் அடிப்படையில் ரூபா 24,101,145 தொகை சிக்கனமற்றமாக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2019/2020 ஆம் ஆண்டின் போது தரமான ஆகக் கூடிய பச்சை தேயிலைக் கொழுந்துகளை பெற்றுக் கொள்ளுவதற்காக நவீன கொழுந்து எண்ணக்கருவின் கீழ் ரூபா 1,566,580 தொகை செலவிடப்பட்ட போதிலும் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | தேயிலை சபையின் நியதிகளின் பிரகாரம் உற்பத்தி மட்டத்தை பேணிச் செல்வதற்கும், பூர்த்தி தேயிலை குறைவடைவதற்கு தாக்கமளித்த ஏனைய காரணங்கள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதுள்ள நியதிகளின் பிரகாரம் உற்பத்தி மட்டத்தை பேணுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேயிலைக் கொழுந்தினை தொழிற்சாலைகளின் இயலுமைக்கேற்ப உயர்பெறுமதியில் பெறமுடிந்தபோதும் தேவையான இறுதித்தேயிலையினை பெறமுடியாதிருந்தது. |
| (ஒ) | கம்பனிக்குரிய தேயிலை தொழிற்சாலைகள் 2019/2020 ஆம் ஆண்டின் போது உற்பத்தி இயளலவினை விட கீழ் மட்டத்தில் செயற்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் ஹினிதும மற்றும் மெணிக்திவெல தொழிற்சாலைகளில் முறையே 71 சதவீதம் மற்றும் 72 சதவீதம் என குறைவான பயன்பாட்டு மட்டத்தில் காணப்பட்டது. ஹினிதும மற்றும் தேறங்கல தேயிலை | தொழிற்சாலைகளில் காணப்பட்ட உற்பத்தி இயலளவை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.. | மொத்த உற்பத்தி இயலுமையானது தனியார் தேயிலை தொழிற்சாலைகளுடன் ஏபாட்டி போடமுடியாமையினால் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழிற்சாலைகளுக்காக தேயிலை கொழுந்து வழங்கலை அதிகரிக்கும் நோக்கில் 2019/2020 ஆம் ஆண்டின் போது கொழுந்து வழங்குனர்களுக்கு பச்சைக் கொழுந்திற்கான ஊக்குவிப்பாக முறையே ரூபா 1,531,453 தொகை மற்றும் ரூபா 1,543,417 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஓ) | உள்நாட்டு விற்பனை வருமானத்தை மேம்படுத்ததும் நோக்குடன் 2019 ஏப்ரல் மாதத்தில் "நுவரெலிய வசந்த பூங்கா" களியாட்ட நிகழ்ச்சி மற்றும் ஏனைய வியாபார கண்காட்சிகளுக்காக ரூபா 966,860 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2018/2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019/2020 இன் போது விற்பனை வருமானம் ரூபா 10,577,492 இனால் குறைவடைந்திருந்தது. இவ்வாறான செலவினங்களை செய்தல் விற்பனை நிலையத்தின் உள்நாட்டு தேயிலை விற்பனை வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கவில்லை. | மேம்படுத்தல் செலவீனங்களை செய்யும் ஆக்கபூர்வமான மேம்படுத்தல் உபாய வழிகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | சந்தையில் வித்தியாசமான பெயர்குறியீட்டின் கீழ் அதிக எண்ணிக்கையான தேயிலை வகைகள் இருந்தமையால் களுபோற்றியான தேயிலை தொழிற்சாலைக் கம்பனியானது வாடிக்கையாளர்களிற்கிடையில் அதனுடைய தேயிலையினை மேம்படுத்தி கவனம் செலுத்துவதற்காக விளம்பர நடவடிக்கைகளை தொடங்கியது. | விளம்பர நடவடிக்கைகள் தொடங்கியிருந்தபோதிலும் தேயிலை விற்பனை வருமானம் குறிப்பிட்டளவு குறைவடைந்தது. |
| (ஔ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்திக்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் 2018 ஆம் ஆண்டளவில் முழுமையாக | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் மீள மதிப்பீடு செய்யப்பட்டு | சொத்து மீள்மதிப்பீடு 2021/2022 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்படுவதால் மதிப்பிடப்பட்ட வழுவானது அடுத்த நிதி ஆண்டில் | வழுவானது இதுவரை திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேய்விடப்பட்டுள்ள ரூபா 240,350,688 கிரயமான பொறிகள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அதன் மதிப்பிடப்பட்ட வலு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீள் திருத்தி சரியான கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு வைக்கப்பட வேண்டும். | திருத்தப்படும் அறிவிக்கப்பட்டது. | |
| (∴) | 1994 ஆம் ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்ட ரூபா 2,550,000 கூட்டுத்தொகையான களுபோவிட்டியான மற்றும் தேறுங்கல தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகள், இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்திக்கமைய இதுவரையிலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் காணிகளை மீள் மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். | களுபோவிட்டியான மற்றும் தேறுங்கல தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகள் மீதான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்து கணக்கிடப்பட்டிருக்கவில்லை. |
| (க) | மனிதவள முகாமைத்துவத்திற்காக சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்ப வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்வழிக் கையேட்டினை துரிதமாக தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | மனித வள முகாமைத்துவத்தின் சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | மனித வள முகாமைத்துவத்தின் சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழிக் கையேடொன்று இன்னமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கா) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் | தடுப்பு நடவடிக்கைகள் | நிலுவைகள் இதுவரை சேமலாப நிதியத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பினை கணக்கிடும் போது அடிப்படைச் சம்பளத்திற்கு வாழ்க்கை படிகளை சேர்க்கப்பட்டு அந்த உழைப்பின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் வாழ்க்கை செலவின படியினை கருத்தில் கொள்ளாது சேம நிதியத்தின் பங்களிப்பினை கணிப்பிட்ட காரணத்தால் 2012/2013 ஆம் ஆண்டு முதல் 2017/2018 ஆம் ஆண்டு வரையிலும் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய நிலுவை பங்களிப்பு ரூபா 1,695,177 ஆக காணப்பட்டதுடன் அதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய மிகை அறவீடு ரூபா 847,589 என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் கம்பனி இந்த செலவினங்களுக்காக 2020/2021 இன் நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் சேமலாப நிதியத்தற்கான பங்களிப்பு கணிப்பிடப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | முற்பண செலுத்தல்கள் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் ஏனைய முற்பணங்களாக ரூபா 1,408,881 வெளிப்படுத்தப் படுவதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் பட்டோலைகளின் பிரகாரம் இந்த மீதிகள் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் உருவாகிய மீதிகளாகும். நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் இந்த | சபையின் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களின் அல்லது உரிய நிறுவனங்களிட மிருந்து அறவிடப்பட வேண்டும். | இது கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுமெ ன்பதுடன் இது நீண்டகால நிலுவை மீதியாகவிருப்பதால் இதனைத் திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த மீதிகள் அறவிடப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீதிகளை சர்ச்சைக்குரிய விடயங்களாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன. | | | |
| (கீ) | புஸ்ஸல்ல பெருந்தோட்ட கம்பனிக்கு ஹிரகம தோட்ட கம்பனியால் செலுத்த வேண்டிய நிலுவை எதுவும் இல்லையென 2019/2020 மற்றும் 2020/2021 ஆம் வருடத்தின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 1,046,771 தொகை அந்த கம்பனியிலிருந்து பெற வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஹிரகம தோட்ட கம்பனியின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் மீதிகளுடன் பெற வேண்டிய மீதிகளை ஒப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டும். | கணக்குகளைத் திருத்துவதற்கு இயக்குனர் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் இது 2021/2022 நிதியாண்டில் திருத்தப்படும். | இது இதுவரை திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | 2003 ஆம் ஆண்டில் பீசீ லங்கா கம்பனிக்கு ரூபா 10,000,000 ஆன கடன் தொகை 22 சதவீத வட்டியின் அடிப்படையில் 12 தவணைகளில் அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் எந்தவொரு தவணையையும் அறவிட முடியாதிருந்தது. அதன் காரணமாக 2020/2021 இன் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகை ரூபா 58,382,429 ஆகும். | கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டியை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பீசீ லங்கா கம்பனிக்கு கொடுக்கவேண்டிய கடன் மற்றும் அதற்கான வட்டி தொடர்பில் நினைவூட்டல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 ஒக்தோபர் 21 இல் பீசீ லங்காவால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பீசீ லங்கா கம்பனிக்கு சொந்தமான 06 ஏக்கர் காணி நீதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட பின்னர் கம்பனிக்குரிய இழப்பீடு பெற்ற பின்னர் கடனை | ஆகையால் நிலுவை கடன் தொகையோ அல்லது வட்டியோ அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீளச்செலுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கூ) | 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் தேயிலை நிறுவனத்தில் இருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 798,461 தொகை காணப்பட்டதுடன், அதனை அறவிடுவதற்கோ அல்லது முறையான அங்கீகாரம் பெற்று புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ 2022 பெப்ரவரி 28 வரையிலும் முடியாதிருந்தது. | உரிய பணத்தை அறிவிடுவதற்கு முறையான அங்கீகாரத்தை பெற்று புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தத் தொகை தொடர்பில் முறைப்பாடு 2021 திசெம்பர் 17 இல் சீஐடி இற்கு முறைப்பாடு தொடுக்கப்பட்டிருந்ததுடன் இது சீஐடியின் அதிகாரத்தின் கீழ் இல்லாமையால் நுகேகொட விசேட குற்றவியல் விசாரணை பிரிவிற்கு இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்காக மாற்றப்பட்டிருந்ததது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கெ) | நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரீ சக்தி நிதியத்திற்கு மற்றும் மேலும் இரு தனியார் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,710,375 கூட்டுத்தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காசோலைகள் இரத்துச் செய்யப்படுதல் மற்றும் உழைக்கும் போதே செலுத்தல் மிகை அறவீடுகள் முறையே ரூபா 843,158 மற்றும் ரூபா 59,344 ஆகவிருந்ததுடன் வியாபார கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,582,797 | கடனை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கும அல்லது கோரிக்கைகள் மேலும் அதிகரிக்கவில்லையெயன உறுதிசெய்வதன் மூலம் வருமானத்தை செலவுசெய்வதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இதனை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கும் இது நீண்டகால நிலுவை என்பதால் எதிர்காலத்தில் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகள் இன்றுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆனது 2020/2021 இன் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கே) | கம்பனி 2015 ஆம் ஆண்டின் போது தேயிலை சக்தி நிதியத்திற்கு வருடாந்தம் 11 சதவீதமான வட்டி வீதத்தின் அடிப்படையில் ரூபா 50 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 59,532,264 செலவிடப்பட்டு தேயிலை சக்தி நிதியத்திற்குரிய மனிக்டிவல காணியின் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இலக்கம் 2019 மார்ச் 19 ஆந் திகதிய சீபி/19/0743/117/024 அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கடன் தொகை உரிய வட்டி மற்றும் கம்பனி செலவிட்ட அபிவிருத்தி செலவினங்களுக்காக ஹினிதும மற்றும் மனிக்டிவல தொழிற்சாலைகளின் உரித்தினை சட்டபூர்வமாக கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் உரித்து சுவீகரிக்கப்பட்டிராததுடன் வருடாந்தம் ரூபா 5,500,000 படியான பெற வேண்டிய வட்டித்தொகையும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலையின் உரித்தினை கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மனிக்டிவல தேயிலைத் தொழிற்சாலை அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிரு ந்ததுடன் காணியின் உரிமையினைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியின் உரிமையினை சுவீகரிப்பதற்கும் உரிய கடன் மற்றும் வட்டியினை அறவிடுவதற்கும் தவறியிருந்தது. இந்த நிலைமை கம்பனியின் நிதிப்பிரச்சனைகளுக்கு எடுத்துச்செல்லும். |
| (கை) | தேயிலை சக்தி நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஹினிதும ஹீல்ஸ் மற்றும் மனிக்டிவல தேயிலை தொழிற்சாலைகள் உற்பத்தி பணிகளுக்காக 2019 மார்ச் 19 ஆந் திகதிய சீபி/19/0743/117/024 ஆம் இலக்க அமைச்சரவை | பொதுத்திறை சேரிக்கு செலவின சுமையொன்றாக அல்லாது அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் இலாபமாக | தேயிலை இலை வழங்குனர்கள் தொழிற்சாலைகளி ன் இயலளவிற்கு ஏற்றவாறு தேயிலை இலையினைப் | பச்சை இலைகளின் பற்றாக்குறையால் அதிகூடிய பெறுமதியில் இலைகளை கொள்வனவு செய்வதமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தீர்மானத்தின் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த இரு கைத்தொழிற்சாலைகள் பொதுத்திறைசேரிக்கு செலவின சுமையொன்றாக இல்லாதவாறு இலாபமீட்டும் முறையில் பேணிச் செல்வதற்குரிய அனைத்து பணிகளும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு இந்த கைத்தொழிற்சாலைகள் வழங்கப்பட்ட பின்னர் 2020/2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தொடர்ச்சியாக நட்டமீட்டும் நிலையில் காணப்பட்டதுடன் 2020/2021 ஆம் ஆண்டின இறுதியில் உள்ளபடியான திரண்ட நட்டம் ரூபா 112,475,388 ஆகும். அவ்வாறே டாறுங்கல தேயிலை கைத்தொழிற்சாலையும் 2015 ஆம் ஆண்டு முதல் கருத்தில் கொள்ளும் போது தொடர்ச்சியாக நட்டமீட்டியவாறு காணப்பட்டது. | நடாத்திச் செல்வதற்குரிய அனைத்து பணிகளும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | பெற்றுக்கொள்வதற்கும் அதிகூடிய தேறிய விற்பனை சராசரியினை (என்எஸ்ஏ) பராமரிப்பதற்கும் மாற்றுவிகிதத்தினை வழங்கியிருந்தனர். | நட்டத்தை விளைவித்திருந்தது. |
| (கொ) | கம்பனி களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலைக்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 23,414,275 தொகையில் கொள்வனவுசெய்த நீர் சூடாக்கும் இயந்திரத்திற்காக வழங்கல் நிபந்தனையின் பிரகாரம் வழங்க வேண்டிய 02 ரேடியேட்டர் இயந்திரங்கள் வழங்ப்படாமையின் காரணமாக ரூபா 1,566,002 தொகையை செலுத்தாமல் இருப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும்,பணிப்பாளர் சபையால் நீர் சூடாக்கும் இயந்திரம் வினைத்திறனற்றரீதியில் ஸ்தாபிக்கப்பட்டமையால் 2016 திசெம்பர் 21 இல் இந்தக் | உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். | இந்தக் கொடுக்கல்வாங்கல்களிற்கான கணக்குகள் 2021/2022 நிதியாண்டில் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவை நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்தபோதும் மிகுதியானது 2020/2021 இறுதிவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கோ) | நிதியத்தினை முதலிடும் போது நிதி அமைச்சரின் அல்லது உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியினால் ரூபா 159,454,572 குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் உரிய அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.65 வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்.

**2018** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**2019** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**2020** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 யூலை 01 ஆந் திகதிய பீஈ/ஜிஓசீஓ/ரீஆர்9 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கு இணங்க வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அக்கடிதத் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தும் உரிய நியமனம் நீடிக்கப்படாது மீளாய்வாண்டில் தகுதிவாய்ந்த அதிகாரியாகச் செயற்பட்டிருந்தார். | தகுதிவாய்ந்த அதிகார சபையின் ஒரு வருட காலம் முடிவடைந்துள்ள நிலையில், உடனடியாக அந்தப் பதவியை வகிப்பதை சட்டபூர்வமாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகுதியான அதிகாரி பதவியை முறைப்படுத்த 2022 பெப்ரவரியில் நிதி அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 ஒக்டோபர் 07 ஆம் திகதி திறைசேரியின் தொழிற்பாட்டு பணிப்பாளர் நாயகம் அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்குள் ரூபா 773.34 மில்லியன் | திறைசேரியின் தொழிற்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலையில் பொருட்களை விற்பனை செய்வதற்கு பெருந்தோட்ட அமைச்சினால் குழுவொன்று | அதன்படி செயல்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் சிறிய ரப்பர் வைத்திருப்பவர்களுக்கு ரப்பர் தொடர்பான முடிவுப்பொருட்கள் வழங்குவதற்காக ஏற்பாடுகளுக்கு 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் பொதுத் திறைசேரியால் கம்பனிக்கு வழங்கப்பட்ட உபகடன்களில் இருந்து, அட்டுறு வட்டியாக ரூபா.612.80 மில்லியன் உரிய திகதியில் அறவிட வேண்டியிருந்தது. எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலையில தகுந்த முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்குமாறும் அதன் இயந்திரங்களை விற்பனை செய்து அந்தக் கடன் தொகையை செலுத்துமாறும் திறைசேரியின் தொழிற்பாட்டு பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்திருந்த போதிலும், அந்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மேற்கூறிய உபகடன் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | நியமிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மாவனல்லை சென்டேஜ், மாவனெல்லை டயர் டியூப் மற்றும் பதுரலிய க்ரீப் இறப்பர் தொழிற்சாலைகளை குத்தகைக்கு கொடுப்பது தொடர்பான குத்தகை ஒப்பந்தத்தின் குத்தகை கால இல.05 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி, குத்தகை காலத்தின் | குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவணைக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு மற்றும் நிலுவைத் தொகை வசூலிக்கப்படவில்லை. |

தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் குத்தகை தவணை 50% அதிகரிக்கப்பட வேண்டும். அதன்படி, முதல் ஐந்து வருடங்கள் 2017 மார்ச் 12 இல் முடிவடைந்தன. இருப்பினும், ஒப்பந்தத்தின்படி குத்தகைத் தவணை அதிகரிக்கப்படவில்லை. 2020 மார்ச் 31 இல் அந்த மூன்று தொழிற்சாலைகளிலிருந்தும் 36 மாதங்கள் மற்றும் 19 நாட்களுக்கான வாடகையாக ரூபா.11,033,847 அறவிடப்பட்டது.

(ஈ) குத்தகைக்கு விடப்பட்ட மாவனல்லையில் அமைந்துள்ள சென்டேஜ்/பிளாக் ரப்பர் தொழிற்சாலை தொடர்பான குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 5 இல் குத்தகைதாரரின் நிபந்தனைக்கு (xi) இணங்க, கட்டிடங்கள் மற்றும் பிற நிரந்தர கட்டுமானங்கள் உட்பட அனைத்து இடர்களுக்கும் எதிராக குத்தகைதாரர் காப்பீடு செய்தாலும். ”அரோமா” என்ற தனியார் நிறுவனத்திற்கு, அவ்வாறு செய்யப்படவில்லை மற்றும் சொத்துக்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை, இதன் விளைவாக,

| | | | |
|---|---|---|---|
| (i) தொழிற்சாலையின் பிரதான கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து | குத்தகை ஒப்பந்தத்தின்படி தொழிற்சாலையின் | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி | கூரை சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வீழ்ந்து 02 வருடங்களுக்கு மேலாகியும், மீண்டும் கூரை புனரமைக்கப்படவில்லை. | மேற்கூரையை விரைவாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ல்லை. | |
| | (ii) கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்தது குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. | சேதங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையான விசாரணை நடத்தப்படவில்லை |
| | (iii) இத்தொழிற்சாலையின் மூலம் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையான ரூபா.13,856,787 (ரூபா.659,847*21 மாதங்கள்) 2020 மார்ச் 31 ஆம் திகதி வரை கூரை இடிந்து விழுந்த போதும் 2018 யூலை மாத்தில் கூட வசூலிக்கப்படவில்லை. | ஒப்பந்தப்படி வாடகை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்னையை சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை |
| (உ) | கம்பனிக்குச் சொந்தமான மூன்று தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடும்போது குத்தகைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துகளின் பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால், அப்போது இருந்த சொத்துக்கள் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டதா | புதுப்பிக்கப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பட்டியல் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | என்பதை அறிய முடியவில்லை. | | | |
| (ஊ) | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீடு செய்யப்பட்ட ரூபா 52 மில்லியன் தொகையான முதலீடுகளின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திறைசரியின் தொழிற்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டின் தற்போதைய நிலை வெளிப்படுத்தப்படவில்லை |
| (எ) | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா.764,957,506 கூட்டு மொத்தமான மற்றும் ரூபா.56,133,035 கூட்டுமொத்தமான வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் சம்பந்தமாக 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி தொடர்பான துணைப் பதிவேடு வயதுப்பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய மீதிகள் மீதான பதிவுகள் முறையாக பேணப்பட வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகைக்கு வயது பகுப்பாய்வு தயாரிக்கப்படவில்லை |
| (ஏ) | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க | நிலையான சொத்துக்களை அகற்றுவது தொடர்பான | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை மற்றும் நிதி பெறப்பட்டதை உறுதிப்படுத்தும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 17,357,133 கிரயமான வாகனங்கள் மற்றும் ரூபா 23,530,433 கிரயமான இயந்திரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முதலீட்டாளருக்கு விற்கப்பட்டிருந்தும் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பணம் பெற்றுக் கொண்டதனை உறுதிப்படுத்தும் அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். | | அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஐ) | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,283,471 காசு மீதியையும் ரூபா 3,037,306 நிலையான வைப்பு பண மீதியையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான உரிய சொத்துக்கள் சம்பந்தமாக நாளதுவரையான பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்பட்டிருக்கவில்லை. | மீதியை உறுதிப்படுத்தல் செய்யப்படவில்லை. |
| (ஒ) | காணியை பிணையாக வைத்து நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா.901,610,000 தொகையான நீண்டகாலக்கடன், ரூபா.17,185,562 தொகையான வங்கி மேலதிகப்பற்று மற்றும் அந்த மீதிகளின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான நாளதுவரையான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | மக்கள் வங்கியின் பொரளைக் கிளையில் வங்கி மேலதிகப்பற்று முதலீட்டாளர்களின் முற்பணத்துடன் தீர்க்கப்பட்டது. | நீண்ட கால கடனை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஓ) | 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான கணக்காய்வு | 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | தடுப்பதற்கான நடவடிக்கைகள் | மீதி உறுதிப்படுத்தல் செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்த நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதி ரூபா 10,768,203 தொகையையும், நிலையான சொத்துக்களை அகற்றுதல் அடிப்படையில் இனங்காணப்படாத ரூபா.17,874,912 தொகையையும் உறுதிப்படுத்துவதற்குரிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக நாளதுவரையான அறிக்கை பேணப்படுதல் வேண்டும். | மேற்ப்பட்டிருக்கவில் லை. | |
| (ஔ) | எல்பிடிய போம் இறப்பர் தொழிற்சாலையில் இடம்பெற்ற ரூபா 500 மில்லியனுக்கு அண்ணளவாக அரசாங்க நிதியின் வீண் விரயம் தொடர்பாக இலஞ்சம் மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவில் தொடுக்கப்பட்ட வழக்கின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பண முறைகேடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை, புதுப்பிக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்பட வேண்டும். | நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்து வருகிறது. | அந்த வழக்கு இற்றைவரை முடிவடையவில்லை. |

**4.66 வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனி**

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,056,190,222 | 3,870,336,141 | 3,821,489,956 | 10,056,468,066 | (1,814,145,920) | முனைப்பழியுள்ள |
| **2019** | 3,790,122,454 | 5,220,262,153 | 3,844,074,341 | 11,365,617,753 | (1,430,139,698) | முனைப்பழியுள்ள |
| **2020** | 6,861,029,424 | 6,111,662,414 | 4,258,630,129 | 11,076,284,900 | 749,367,009 | தீர்மானிக்கப்படவில்லை |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்பக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா.மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 2056.19 | 3870.34 | 3821.49 | 10056.47 | (1814.15) |
| 2019 | 3790.12 | 5220.26 | 3844.07 | 11365.62 | (1430.14) |
| 2020 | 6861.03 | 6111.66 | 4258.63 | 11076.28 | 749.37 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியால் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வசதிகளுக்காக மீளாய்வாண்டின் போது | குத்தகை தவணைப் பணத்தினை உரிய திகதியில் செலுத்தாததால் மேலதிகமாக | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | குத்தகை தவணைப் பணத்தினை உரிய திகதியில் செலுத்தாமையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்த வேண்டிய குத்தகை தவணைப் பணத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளின் போது செலுத்தாமையின் காரணமாக அதற்காக மேலதிக வட்டியாக ரூபா 5,812,203 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | வட்டியினை செலுத்த வேண்டிய சாத்தியக்கூறுகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். | | காரணமாக ரூபா.13,875,476 தொகை 2020/2021 ஆம் ஆண்டிற்கான குத்தகை வட்டி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | கம்பனியின் மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர்களுக்கு வழங்கப்பட்ட 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான முறையே ரூபா 3,951,090 மற்றும் ரூபா.2,831,338 தொகைகளான முற்பணங்களை கணக்காய்வுத் திகதி வரை தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கம்பனிக்கு தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு காணப்படுகின்றது என்ற கருதுகோளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் கம்பனி தொடர்ச்சியாக நட்டத்தை பெற்று 2020 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 1,430,139,698 தேறிய நட்டமொன்றை பெற்றிருந்ததுடன் அத்திகதியில் ஒட்டுமொத்த நட்டம் ரூபா 8,677,402,641 ஆகும். அத்திகதியில் கம்பனியின் மொத்த சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்களின் அளவு ரூபா 7,521,543,411 ஆக காணப்பட்டது. மேலும் கம்பனியின் பங்கு மூலதனம் ரூபா 1,011,764,730 ஆக காணப்பட்ட போது பங்குதாரக் கம்பனி மற்றும் அந்தக் கம்பனி தொடர்பான ஏனைய கம்பனிகளில் பெறப்பட்டுள்ள ரூபா 6,092,272,225 கடன் தொகையை உள்ளடக்கிய மொத்தக் கடன் அளவு ரூபா 8,272,917,286 ஆனமையால் மூலதன கடன் விகிதம் 818 ஆக இருந்ததுடன் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 50,633,696 தொகையான வங்கி மீதி காணப்பட்ட போதிலும் அத்திகதியில் கம்பனியின் வங்கி மேலதிகப் பற்று ரூபா 62,844,095 ஆக | கடன் கிரயத்தை குறைத்து பங்குதாரர்களின் உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்க கம்பனி இலாபத்தை பெறும் நிலைக்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பொது திறைசேரியின் தலையீட்டினால் கம்பனியின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை உறுதிப்படுத்த எந்த தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை . | 2021 மார்ச் 31 இல் ரூபா.7,935,198,192 திரண்ட நட்டமாக உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்தது. இதன் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு கலைக்கப்படும் ஆபத்தொன்று உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கம்பனியில் 51 சதவீத பங்கு உரித்துள்ள அரசாங்கத்திற்காக இந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கின்ற பொதுத் திறைசேரி இந்த நிலைமையை மீளாய்வு செய்து அதற்கு தேவையான தீர்விற்கான பரிந்துரைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | | | |
| (ஈ) | கம்பனி பொதுத் திறைசேரியுடன் 2009 ஆம் ஆண்டின் போது கையொப்பமிட்ட பங்குதாரரின் உடன்படிக்கையின் 18.2.1(10) ஆம் பிரிவு மற்றும் கல்லோயா ஹோல்டிங் தனியார் கம்பனியுடன் 2010 ஆம் ஆண்டின் போது கையொப்பமிட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் 19.1.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி ஒவ்வொரு வருடத்தின் போதும் அந்த வருடத்தில் ஆரம்பத்தில் காணப்பட்ட ஆகக் குறைந்த திறைசேரி உண்டியல் வட்டி வீதத்திற்கு சமமான இலாப பங்கொன்று பொதுத்திறைசேரிக்கு செலுத்த வேண்டிய | பங்குதாரர்களின் உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு இலாபப் பங்கை செலுத்துவதற்கு முடியுமான வகையில் வருடாந்த வரிக்கு பின்னரான இலாபத்தை உழைப்பதற்கு இணங்கியிருந்த மையால் அந்த நிபந்தனைகளை மீறாதிருத்தல் வேண்டும். | பங்குதாரர்களின் உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரிவில் இலாபப் பங்கில் நேரடியாக கவனம் செலுத்தப்படவில்லை. தொடர்ந்து இயற்கும் தன்மையை உறுதி செய்ய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதாக கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை. | பங்குதாரர்களின் உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு எந்தவிதமான இலாபப் பங்கும் செலுத்தப்படவில்லை. |

வகையில் வருடாந்த வரிக்கு பின்னரான இலாபமொன்று பெறப்படாதிருக்குமாயின் அரசாங்கத்தின் பங்குதாரர் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. இக்கம்பனி உருவாக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நட்டம் பெற்றிருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட (அ) பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நட்டம் ரூபா 8,677,402,641 ஆக இருந்தது. அதன் பிரகாரம் திறைசேரிக்கு 2020 ஆம் ஆண்டு வரை எந்தவொரு இலாப பங்கும் செலுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் பங்குதாரர் உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ உடன்படிக்கை மீறியதன் மூலம் கம்பனியின் தொடர்ச்சியாக இயங்குவது கலைக்கப்படும் ஆபத்து உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | கம்பனி தொடர்ச்சியாக நட்டத்தை பெற்று சென்ற போதிலும் இரண்டு பங்குதாரர் தனியார் கம்பனி மற்றும் அந்தக் கம்பனியுடன் தொடர்பான கம்பனிகளில இருந்து 24 சதவீதமான ஆகக்கூடிய வட்டி வீதத்தின் கீழ் கடன் பெற்று வருடாந்தம் கவனத்தில் கொள்ளக் கூடிய வட்டித் தொகையொன்றை செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 5,220 மில்லியன் தொகையான மொத்த செலவினத்தில் ரூபா 1,673.6 மில்லியன் அதாவது 32 சதவீதம் அந்த தொடர்புடைய கம்பனிக்கான வட்டி செலவினமாக இருந்தது. | உயர்ந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் பெற்று கம்பனி நட்ட நிலைமைக்கு உட்பட்டமையால் அதனை தொடர்ந்து இயங்குதலில் தாக்கம் ஏற்பட்டிருந்தமையால் அசாதாரண வட்டி செலவினங்கள் குறைக்கப்படல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 ஆம் ஆண்டில் தொடர்புடைய தொகுதிக் கம்பனிகளுக்கு மொத்த செலவினத் தொகை ரூபா. 6,111 மில்லியனில் ரூபா.2,083.4 மில்லியன் அல்லது 34 சதவீதம் வட்டிச் செலவினமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2020 மார்ச் 31 ஆம் திகதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 782,388,545 பெறுமதியான இருப்பு, ரூபா. 3,580,142,292 பெறுமதி கிரயமான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் ரூபா.3,138,361 பெறுமதியான நடைமுறை வேலைகள் ஆகியவற்றின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாவில்லை. | கணக்காண்டு இறுதியில் பௌதீக மெய்மையாய்வை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இருப்புக்கள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி மற்றும் இருப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 மார்ச் 31 இல் சீனி, வெல்லப்பாகு மற்றும் பசளைகளின் இருப்பக்கள் தவிர ஏனைய பொருட்கள் மட்டுமே மெய்மையாய்வு செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் தேறிய சொத்துக்கள் அதில் வெளியிடப்பட்ட மூலதனத்தின் அரைவாசியை விட குறைவான சந்தர்ப்பத்தின் போது 60 நாட்களுக்குள் பங்குரிமையாளரின் பொதுக் கூட்டமொன்று கூட்டப்பட்டு நட்டத்தின் தன்மை மற்றும் அளவு, அதற்குரிய காரண விடயங்கள், தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும் கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா.7,521,543,411 மறைப் பெறுமதி வரை வீழ்ச்சியடைந்திருந்தமையால் கம்பனியின் முகாமைத்துவத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புங்குதாரர்களின் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கவில்லை. | பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஏ) | 2017/2018 ஆம் ஆண்டு முதல் 2019/2020 ஆம் ஆண்டு வரையான 03 வருட காலப்பகுதியில் கவனத்தில் கொள்ளும் போது ஒரு ஹெக்டயருக்கு சராசரியான வருடாந்த கரும்பு விளைச்சல் முறையே 65, 53 மற்றும் 54 மெற்றிக் தொன் ஆக படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2017/2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019/2020 | வருடாந்த கரும்பு விளைச்சல் குறைவடைவதற்கு தாக்கமளிக்கின்ற காரணங்களை இனங்கண்டு அதற்காக தேவையான வழிமுறைகள் எடுக்கப்பப்படல் வேண்டும். | கூாலநிலை, பல்வேறு நோய்கள் மற்றும் பூச்சிகள், நீர் ஓட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சிகளால் வெளிப்புற கரும்பு விவசாய துறையில் ஹெக்டயருக்கு விளைச்சல் குறைவடைந்துள்ளதாகவு மதடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. | 2020/2021 ஆம் அண்டில் ஹெக்டயருக்கு சராசரியாக வருடாந்த கரும்பு விளைச்சல் 55 மெற்றிக் தொன்களாக இருந்தது. அதை அதிகரிக்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் ஆண்டு வரையில் 11 மெற்றிக் தொன்னினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் இந்த நிலைமையை அதிகரித்துக் கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது. | | | |
| (ஐ) | தொழிற்சாலைக்கு தேவையான வலுசக்தி சீனி உற்பத்தியின் போது ஆற்றப்படுகின்ற கழிவுகளின் உதவியுடன் உற்பத்தி செய்யப்படுவதுடன் அது போதியளவில் இல்லாததன் பின்னர் தேசிய மின்சக்தி முறைமையுடன் தொடர்புபடுத்தும் இயந்திரம் செயற்படுத்தப்படுகின்றது. 2015/2016 ஆம் ஆண்டு வரையில் 2800 மணித்தியாலம் ஆன உள்ளக வலுசக்தி உற்பத்தி 2019/2020 ஆம் ஆண்டு வரையில் 766 மணித்தியால மெகாவோட் வரை தொடர்ச்சியாக 73 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சியை தடுப்பதற்காக நிறுவனத்தில் தற்போது பேணப்படுகின்ற வலுசக்தி உற்பத்தி இயலளவு 02 மெகாவாட் முதல் 10 மெகாவாட் வரை அதிகரிக்கும் செயற்திட்டமொன்று 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் அரைப்பகுதி வரையில் பூர்த்தி | உள்ளக வலுசக்தி உற்பத்தியை ஆகக் கூடிய மட்டத்தில் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கையிடப்படவில்லை . | 2020/2021 ஆம் ஆண்டில் உள்நாட்டு மின் உற்பத்தி 55 மணித்தியால மெகாவோட்க்கு குறைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை | | | |
| (ஓ) | கம்பனியின் உப உற்பத்தியாக 2019/2020 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுப் பசளை உற்பத்தி 5000 மெற்றிக் தொன் ஆக இருந்த போதிலும் உள்ளபடியான உற்பத்தியின் அளவு 1000 மெற்றிக்தொன் ஆக இருந்தமையால் அதாவது 20 சதவீதம் மாத்திரமாக இருந்தது. 2017/2018 ஆம் ஆண்டின் போது ரூபா.2,625,200 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப் பசளைத் தளத்திலிருந்து வருடாந்தம் 7,000 கூட்டுப் பசளை மெற்றிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டு அரசாங்க மற்றும் தனியார் என்ற இரு துறைகளின் வாடிக்கையாளர்களிற்கும் விற்பனை செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட போதும் 03 வருட காலம் கடக்கும் வரையிலும் போதியளவான பிரகாரம் வாடிக்கையாளர்களை கவர்ந்து கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் கூட்டுப் பசளை உற்பத்தி எதிர்பார்த்த | சாத்திய வளங்களை இனங்கண்டு மதிப்பீட்டினை தயாரித்து இலக்கை அடைதலை நோக்கிச் செல்லல் வேண்டும். | அதிக கேள்வி ஏற்பட்டால் 7000 தொன் உற்பத்தித் திறனை அடையமுடியும் என எதிர்பார்க்கப்படுவதாக அறிக்கையில் காணப்படுகின்றது. | 2020/2021 ஆம் ஆண்டில் உண்மையான உற்பத்தி 1,250 மெற்றிக்தொனாக காணப்பட்டது. எனினும் 6000 மெற்றிக்தொன் பசளைகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டத னால் பசளைகளை முழுமையாக பயன்படுத்த தவறியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மட்டத்தை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்ததுடன் கூட்டுப் பசளை தளத்தையும் முழுமையாக பயன்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது. | | | |
| (ஓ) | கம்பனியின் முகாமைத்துவத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கல்லோயா ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனிக்கு உரித்தாகவுள்ள கல்லோயா பெருந்தோட்டக் கம்பனியின் வரிக்கு பின்னரான இலாபத்தில் 02 வீதம் முகாமைத்துவக் கட்டணம் அறவிடல் மாத்திரமாக இருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் கல்லோயா ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனியிடமிருந்து பல வருட காலம் முதல் கிடைக்க வேண்டிய ரூபா.15,873,623 தொகையான அறவிடப்படாத மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதி ஏற்பட்டிருந்த முறை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் இதற்காக கம்பனி ரூபா 12,392,179 அறவிடமுடியாக் கடன் ஒதுக்கத்தை மேற்கொண்டிருந்தது. | இந்த பெற வேண்டிய மீதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடப்படமுடியாக் கடன் ஏற்பாடு ரூபா.12,392,179 தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை மற்றும் 2020/2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் வெளிப்டுத்தப்படாமல் பராமரிக்ககப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | ஐந்தொகை திகதியில் உள்ளவாறு விவசாயிகளிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.82,642,083 கடன் தொகையிலிருந்து முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா.47,214,354 தொகையை பதிவழித்தல் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்ததுடன் மிகுதி தொகையில் ரூபா22,953,208 தொகை 2021 மார்ச் மாதம் வரையிலும் மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | கம்பனிக்கு அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் கடன்பட்டோரின் தன்மை மற்றும் பதிவழிப்பதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப் படல் வேண்டும். | 04 வருடங்களுக்கு மேல் விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.82,642,083 கடன் தொகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் ரூபா 47,214,354 தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா.35,427,728 இல் ரூபா.12,474,521 தொகை (35%) தற்போது அறவிடப்பட்டுள்ளது. மிகுதி ரூபா. 22,953,207 தொகை இந்த குறுங்கால அரைக்கும் தவணையில் மற்றும் எதிர்வரும் நீண்டகால அரைத்தல் தவணையில் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2021 மார்ச் 31 இல் உள்ளவாறு விவசாயிகளிடமிருந்து 05 வருடங்களுக்கு மேலாக ரூபா.22,770,870 தொகையானது கடன் நிலுவையாக காணப்படுகின்றது. |
| (க) | 2020 மார்ச் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய ரூபா 8,272,917,286 தொகையான மொத்த கடன் அளவில் ரூபா 6,092,272,225 தொகை அதாவது 73.6 சதவீதம் கம்பனியின் பங்குதாரக் கம்பனி மற்றும் அந்தக் கம்பனிகளுடன் தொடர்புடைய கம்பனிகளிலிருந்து 15 சதவீதத்திற்கும் 24 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் தொழிற்படு மூலதன தேவைக்காக பெறப்பட்ட கடன் பணமாகும். அதன் பிரகாரம் | கடன் வட்டி செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் மீதான வட்டியினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020/2021 ஆம் ஆண்டிற்கான கடன் வட்டிச் செலவு ரூபா.2,119 மில்லியனாக இருந்தது, இதில் ரூபா. 2,083.4 மில்லியன் அல்லது 98 சதவீதம கம்பனியின் பங்குதாரர்களின் அல்லது தொகுதி கம்பனிகளின் வட்டி செலவினமாக உள்ளது. |

மீளாய்வாண்டில் ரூபா.2,093,733,282 தொகையான மொத்த கடன் வட்டி செலவினத்தில் ரூபா.1,673,581,209 தொகை அதாவது 79.9 சதவீதம் பங்குதாரர் கம்பனி மற்றும் அந்தக் கம்பனிகளுடன் தொடர்பான கம்பனிக்குரிய வட்டியாகும். மேலும் 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு அந்தக் கம்பனிகளுடன் தொடர்புடைய கம்பனிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா.746,679,237 தொகையான கடன் மற்றும் அதற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா.768,609,290 தொகையான வட்டி பணம் ஒன்று சேர்க்கப்பட்டு 20 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ரூபா 1,515,288,527 தொகை மீண்டும் பெறப்பட்ட கடனாக கருதி மாற்றப்பட்டிருந்தது. கம்பனியால் 2016/2017 மற்றும் 2018/2019 ஆம் ஆண்டுகளின் போது அரசாங்கத்திலிருந்தும் 02 தனியார் வங்களிலிருந்தும் 6.5 சதவீதம் வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகள் பெறப்பட்டிருந்தும் பணச் சந்தையில் மிகக் குறைவான வட்டி வீதம் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் பங்குதாரர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கம்பனிகளில் மிக உயர்ந்த வட்டி வீதத்தின் கீழ் கடன்

| | | | | |
|---|---|---|---|---|
| | பணத்தை பெற்றுக் கொண்டமை, செலுத்த வேண்டிய வட்டி, கடன் பணமாக மாற்றப்பட்டமை, நிதி தேவை தொடர்பாக திறைசேரிக்கு அறிவிக்காமையால் கம்பனி முக்கிய நிதி பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்தமை என்பன அவதானிக்கப்பட்டதுடன் இந்த சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக திறைசேரி கவனம் செலுத்தாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது | | | |
| (கா) | நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காக வழங்க முடியுமான 113 உத்தியோகபூர்வ இல்லங்கள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் குடியிருந்து வருகின்றமை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த வீடுகளை கைப்பற்றி கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாவட்ட செயலாளர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக இருந்தமையால் மாவட்ட செயலாளரின் உதவியினை பெற்று இந்த வீட்டினை கைப்பற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீண்டகால குத்தகை ஒப்பந்தத்தை வழங்க தவறியுள்ளது மற்றும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ காலாண்டு நிலுவையினை பெறுவதற்கான சட்டபூர்வ அடிப்படையை நிறுவனம் கொண்டிருக்கவில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் 207 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 05 விடுதிகள் அங்கீகரிக்கப்படாத குடியிருப்புக்களாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. |
| (கி) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல நிறுவனங்களுக்கும் உரிய | சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கம்பனிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை உருவாக்க எந்த நடவடிக்கையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதவியணியினர் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட வேண்டும். | | மேற்கொள்ளப்படவி ல்லை |
| (கீ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையுடன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் நிதிக் கூற்றுக்கள் 06 மாத தாமதத்தின் பின்னர் 2020 நவம்பர் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை யுடன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | 2021 மார்ச் 31 இல் நிதிக்கூற்றுக்கை ள 05 மாதங்கள் தாமதமாகவே சமர்ப்பிக்கப்பட்டி ருந்தன. மற்றும் இதனுடன் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆனால் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (கு) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக | சட்டத்தின் பிரகாரம் கம்பனியின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கம்பனியின் நிர்வாக சபைக்கு பொறுப்பு | தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள் உருவாக்கப்பட்டிருக் கவில்லை. |

| | |
|---|---|
| கம்பனியின் நிர்வாக சபையினால் சரியான பிரகாரம் நியமிக்கப்பட்ட தமது உள்ளக கணக்காய்வாளர் இருக்க வேண்டிய போதிலும் உள்ளகக் கணக்காய்வு பதவியொன்றை ஏற்படுத்தாமல் லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனியின் உள்ளக கணக்காய்வு பதவியணியினர்களினால் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வாய்ந்த உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றை ஏற்படுத்தி பதவியணியினர்கள் நியமிக்கப்பட வேண்டும். |

## 4.67 வரையறுத்த ஹிங்குரானை சீனித் தொழிற்சாலை.

**2018** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**2019** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**2020** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிப்பட்ட திகதியில் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 2015 ஆம் ஆண்டிற்கு பின்னர் கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்கவும், நிறுவனத்தை கலைக்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 2015 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்கள் மற்றும் கலைப்பு கணக்குகள் தயாரிக்கப்பட வில்லை. |
| (ஆ) | 1993 ஆம் ஆண்டில் தனியார்மயப்படுத்தலுக்கு உட்பட்ட இந்நிறுவனம் வெற்றியளிக்காமையின் காரணமாக மீண்டும் 1997 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தும் 1998 ஆம் ஆண்டிலிருந்து எதுவித உற்பத்தி நடவடிக்கையும் இடம்பெற்றிருக்காமையினால் 2001 ஆம் ஆண்டின் போது அனைத்து ஊழியர்களுக்கும் இழப்பீடு செலுத்தி அவர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் இத் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதியும் கட்டிடங்களும் 30 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் | இந்நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தற்பொழுது கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கலை முடிவுறுத்தி கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | நிறுவனத்தின் சொத்துக்களையும் மற்றும் நிர்வாக விடயங்களையும் பாதுகாப்பதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | தற்போது பணியாளர்களில்லை எனவும், கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைப்பதற்கும், கலைப்பதற்கும் அமைச்சரவை பத்திரத்தை தயாரிப்பதற்கு குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டு கல்லோயா பெருந்ததோட்ட தனியார் கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது 9 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தற்பொழுது தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பொது முகாமையாளர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார் அதற்கிணங்க இந்நிறுவனமாக மாறியுள்ளது. | | | ள்ளது. |
| (இ) | 2018 ஆம் ஆண்டிற்கான கொடுக்கல் வாங்களுக்குரிய வவுச்சர்கள், காசேடு, வங்கிக்கூற்று முதலிய கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்குமாறு பல தடவைகள் எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தும் அவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கயர்வு அதிகாரச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டிருந்த தகவல்களையும் விளக்கமளித்தல்களை யும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்கு புத்தகங்கள் பராமரிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. |
| (ஈ) | தொழிற்சாலைக்குச் சொந்தமான 277.73 ஹெக்டயர் காணியும் அது தொடர்பான தொழிற்சாலைக் 30 வருடங்கள் குத்தகை அடிப்படையில் வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. 2009 மார்ச் 06 ஆந் திகதிய 09/0398/329/003 ஆம் இலக்க மற்றும் 2009 மார்ச் 18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின ் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு | அமைசரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | குத்தகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | 4493 விவசாயிகளுக்கு மத்தியில் 2.5 ஏக்கர் வீதம் 11232 ஏக்கர் காணி குத்தகை உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்தும் அக்காணிகளிலிருந்து குத்தகை பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் அக்குத்தகை உடன்படிக்கைகளின் காலமும் காலாவதியாகியிருந்தது. அதற்கினங்க புதிதாக குத்தகை உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டு அவற்றினை ஒப்படைப்பதற்கும் குத்தகை பணத்தை அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையை மீண்டும் புதுப்பித்து உரிய குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | புதிய குத்தகை ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கும் அவற்றை மாற்றுவதற்கும் வரிப்பணத்தை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| (ஊ) | தொழிற்சாலைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் சம்பந்தமாக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பௌதீக மெய்மையாய்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | சொத்துக்களின் உள்ளமையையும் அவற்றின் சரியான தன்மையையும் பரீட்சிப்பதற்காக சொத்துக்கள் சம்பந்தமாக பௌதீகச் சரிபார்த்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை. |
| (எ) | நாரஹேன்பிட அலுவலகத்தில் போத்தல் உற்பத்தி சாலைக்குச் சொந்தமான இயந்திரங்களும் உபகரணங்களளும், 3 மோட்டார் சைக்கிள் ஒரு மோட்டார் வாகனம், ஹிங்குரானை தொழிற்சாலையில் காணப்பட்ட இயந்திர உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்து கைதவிர்ப்பு செய்வதற்கு தேவையான | தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கும் அவற்றை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் 1997 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டிருந்ததனால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்ததுடன் அவற்றினை கைதவிர்ப்பு செய்து அரசாங்கத்திற்கு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | லை |
| (ஏ) | தொழிற்சாலையில் காணப்பட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பாக அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கைத்தொழில் மற்றும் வணிக செயற்பாட்டு அமைச்சு செயலாளரின் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்துகின்றதுடனதொழிற்சாலையினை கலைப்பதற்காக சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இனங்கண்டு அவற்றினைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டுமென பணிப்புரை விடுவிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை. | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான செயற்பாடுகளை விரைவாக எடுத்தல் வேண்டும் | தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில் லை. |
| (ஐ) | ஹிங்குரானை சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய ரூபா 222 மில்லியன் பெறுமதியான சொத்துக்களும் இருப்புக்களும் கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அச்சொத்துக்களை ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையின் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடடிக்கைஎடுக்கப்பட்டிருக்க | உரிய பொறுப்பான நிறுவனத்தினால் தேவையான ஆலோசணையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வில்லை | | | |
| (ஒ) | ஊழியர்களை நீக்குவதற்கு முன்னர் ஹிங்குரானை சுற்றுப்புறத்திலும் நாரஹேன்பிட தலைமை அலுவலகத்திலும் காணப்பட்ட சொத்துக்களை முறைப்படி பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது ஊழியர்கள் நீக்கப்பட்டிருந்தனர். | ஊழியர்களின் பொறுப்பில் காணப்பட்ட சொத்துக்களை அவர்கள் சேவையிலிருந்து நீங்குவதற்கு முன்னர் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஒப்படைத்து சேவையிலிருந்து நீங்குவதற்கு முகாமைத்துவம் கவனித்தல் வேண்டும். | பொறுப்பான உத்தியோகத்தரிடம் சொத்துக்கள் முறையாக கையளிப்பு செய்யப்பட்டிரக்க வில்லை | சொத்துக்களை முறையாக கையேற்காமை யினால் ஊழியர்கள் நீக்கப்பட்டனர். |
| (ஓ) | 2017 மார்ச் மாதம் வரை நாரஹேன்பிட அலுவலகத்தின் 06 ஊழியர்களும் ஹிங்குறானை அலுவலகத்தின் 03 உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன 2017 மார்ச் 29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2017 பெப்ரவரி 28 ஆந் திததியிலிருந்து 05 ஊழியர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு இறுதிவரை 02 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் வரை உரிய புத்தகங்கள் ஆவணங்களையும் மற்றும் சொத்துக்களையும் புத்தகங்களையும் பாதுகாப்பது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | சொத்துக்களின் பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | தற்போது கம்பனியில் ஊழியர்கள் யாருமில்லை. |

## 4.68 இலங்கை சீனி தனியார் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 6,583,972,070 | 6,439,629,701 | 8,464,705,122 | 3,499,146,170 | 144,342,369 | முனைப்பழியுள்ள |
| **2019** | 7,844,580,613 | 9,156,793,506 | 6,789,204,509 | 3,178,038,995 | (1,312,212,893) | மறுப்பு |

**2020** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வரையறுக்கப்பட்ட இலங்கை தனியார் சீனிக்கம்பனியில் பெலவத்த சீனி நிறுவனம் மற்றும் செவன்கல சீனி தொழிற்சாலைகள் சுவீகரித்த பின்னர் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் சொத்துக்களின் உரிமையாண்மை மற்றும் சொத்துக்களை மீள்மதிப்பீடு | எதிர்காலத்தில் சொத்து மீள்மதிப்பீட்டினை சரியாக மேற்கொள்வதற்கும் உரிய சீராக்கங்களை மேற்கொள்வத | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| செவன்கல தொழிற்சாலையின் இயந்திரத்தின் பகுதியொன்றிற்காக தவிர்த்து கணக்குகளிலுள்ள ஏனைய சொத்துக்களின் மீள்மதிப்பீடு தொகையை சீராக்கஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீள்மதிப்பீட்டு வழுக்கள் மற்றும் சொத்துக்களின் உரிமையாண்மை தொடர்பிலான பிரச்சனைகள் அதற்கான காரணங்களாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், உரிய வழுக்களைத் திருத்தி இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் மீண்டும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, பெலவத்த தொழிற்சாலையால் சொந்தமாக்கப்பட்ட சொத்துக்களின் ரூபா 2,900,032,369 புத்தகப் பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, பின்பு கொள்வனவு செய்யப்பட்ட செவன்கல தொழிற்சாலையின் சொத்துக்களைத் தவிர்த்து ஏனைய சொத்துக்களை உரித்தாக்குவதற்கும் கணக்கிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், அத்தகைய சொத்துக்கள் மற்றும் அதற்குரிய பெறுமானத்தேய்வு பெறுமதிகள் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | செய்தல் போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் சரியான பெறுமதிகளில் கணக்குகளை சீராக்கஞ்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ற்கும் எதிர்பார்க்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 05 வருடங்களாக ஐந்து தொடர்புடைய தரப்பினரிடமிருந்து ரூபா 19,498,293 மொத்த தொகையான வருமதிகளை அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்த போதிலும், இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்குரிய நட்டங்களிற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொல்லப்பட்ட தொகையினை அறவிடுவதற்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்குரிய நட்டங்களிற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொல்லப்பட்ட தொகையினை அறவிடுவது சாத்தியமற்றதாக இருந்தமையால் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கோ அல்லது ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கம்பனியானது மதிப்பீட்டு மீளாய்வாண்டின் போது உழைத்த பெறுமதி சேர் வரியை உள்ளடக்கிய ரூபா 43,889,267 தொகையான ஏனைய சேவைகளிலிருந்தான வருமானம் மற்றும் ரூபா 25,800,321 தொகையான ஏனைய வருமானம் போன்றவற்றிற்கான ரூபா 10,453,438 தொகையான வெளிவாரி வரியினை கணிப்பிட்டிருக்கவில்லை. | வரிக்கணிப்பீடு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் குறித்த திகதியில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | செலுத்தவேண்டிய வரிப்பொறுப்புக்களைச் செலுத்துவதற்கு மேலதிக நடவடிகச்கைகள் எடுக்கப்படும். | செலுத்தவேண்டிய வரிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | ரூபா 4,074,404 முற்பணங்களுக்குரிய வழங்கல்களைப் பெறுவதற்கோ 2000 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுவரையிலும் பெலவத்த சீனிப்பிரிவின் தொழிற்சாலை உதிரிப்பாக வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட சொல்லப்பட்ட பணத்தினை அறவிடுவதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறாமைக்கான காரணத்தையும் பொறுப்பான உத்தியோகத்தர்களையும் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இயக்குனர் சபையின் அனுமதியுடன் நிதிக்கூற்றுக்களிலிருந்து அத்தகைய மீதிகளை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்க்பட்டிருந்தது. | அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பெலவத்த பிரிவு மற்றும் செவனகல பிரிவுகளில் விவசாயக் கடன்களாகவுள்ள ரூபா 326,014,262 மற்றும் ரூபா 6,475,123 தொகைகள் மற்றும் தனியார் கம்பனியிடமிருந்து செவனகல பிரிவிற்கு செலுத்தவேண்டியதாகவுள்ள ரூபா 7,741,248 தொகையானது 3 தொடக்கம் 5 வருடங்கள் காலப்பகுதிக்காக அறவிடப்படாமலிருந்தது. | நிலுவைக் கடன்களை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிக்கைளிடப்பட்டது. | அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டிலிருந்து 07 தனியான தரப்பினர்களிடமிருந்த பெலவத்தப்பிரிவிற்கு வருமதியாகவுள்ள ரூபா 1,202,124 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய அனைத்துக் கடன்களையும் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனியின் உத்தியோகபத்தர்கள் களிப்புக்கூடத்தினை புனரமைப்பதற்காக கொடுக்கப்பட்ட ரூபா 1,021,627 இனை அறவிடுவதற்கும் 06 தரப்பினர்களிடமிருந்து | அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருமதியாகவுள்ள ரூபா 180,467 மீதியினை புத்தகங்களிலிருந்து அறவிட்டு பதிவழிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. | |
| (எ) | பேலவத்த் பிரிவின் 04 வழங்குனர்களுக்கு செலுத்தவேண்டியுள்ள ரூபா 136,789,984 தொகையினை 05 வருடங்கள் தொடக்கம் 07 வருடங்கள் வருடங்களாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தவேண்டிய பணத்தினை தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்துவதற்கோ அல்லது கணக்குகளின் அறிக்கைகளிலிருந்து அகற்றவதற்கோ எதிர்பார்க்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 26(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தின் 04 (i) ஆம் பிரிவின் பிரகாரம், அடுத்துவரும் மாதத்தின் 20வது நாள் அல்லது அதற்கு முதல் வரியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், 2012 இலிருந்து 2017 வரை செலுத்தவேண்டிய ரூபா | உரிய அதிகாரச்சட்டங்களின் பிரகாரம் குறித்தகாலத்தில் வரிகள் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் நிலுவைகளிலுள்ள வரிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 35,054,595 தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் ரூபா 93,091,778 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி போன்றவற்றை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 17 மாதங்கள் காலதாமதத்துடன் 2020 யூலை 31 இல் சமரப்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய நிதிக்கூற்றுக்கள் 2019 ஒக்தோபர் 31 இல் மாத்திரமே இயக்குனர் சபையால் அனுமதிக்கப்பட்டிருந்தது. இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவித்தல்களின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள்18 மாதங்கள் காலதாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | அரசாங்கத்தில் பெலவத்தை பிரிவை சேர்க்கும் போது காலவாகதியிருந்த இருப்புக்களுக்கான ரூபா 9,251,437 பெறுமதியான ஏற்பாடு அதனைத் தீர்ப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மீளாய்வாண்டின் இறுதிவரை நிதிக்கூற்றுக்களில் எடுத்துவரப்பட்டிருந்தது. | கம்பனிக்கு பயன்தரக்கூடிய வகையில் காலவாகிய மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை அகற்ற வேண்டும். | இயக்குனர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் இது நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்படும். | தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | அரசாங்கத்தில் பெலவத்த பிரிவினை ஈடுபடுத்துவதற்கு முன்னர் ரூபா 37,410,797 இனை செலவழிப்பதன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் அரசாங்கத்தில் ஈடுபடுத்தியதற்குப் பின்னர ரூபா 53,701,955 ஐ செலவழிப்பதன் மூலம் தொடங்கப்பட்ட 05 ஏனைய செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தது. எனினும், இயக்குனர் சபையானது அதற்காக கவனஞ்செலுத்தாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் அது வேலைச்செயன்முறையாக காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டங்கள் காலதாமதத்திற்கான காரணங்களை நோக்குவதன் மூலம் காலதாமதமில்லாமல் பூர்த்திசெய்யப்பட வேண்டும். | இயக்குனர் சபையின் கவனத்தைப் பெற்ற பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |

**4.69 வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலை**

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 5,027,588 | 18,219,852 | 163,089,006 | 157,556,815 | (13,192,264) | பாதகமானது |

**2019** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டவில்லை.

**2020** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டவில்லை.




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 5.03 | 18.22 | 163.09 | 157.56 | (13.19) |
| 2019 | - | - | - | - | - |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி இருப்பானது கிரயம் மற்றும் தேறிய இற்றைப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதிக்கு அளவிடப்பட வேண்டிய போதிலும், 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு | தொழிற்சாலைக்குச் சொந்தமான களஞ்சியங்களில் காணப்படும் இருப்புக்கள் தொடர்பில் மதிப்பாய்வு ஒன்றினை மேற்கொண்டு சரியான இருப்பின் | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்படாத இருப்புக்கள் களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பின் கிரயத்தினை கணிப்பிட்டு ரூபா 47,440,818 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | | |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டு முதல் 2018 இன் இறுதி வரையிலும் நடைமுறை வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 840,774 தொகையான மீதி இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2005 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காணப்படும் நடைமுறை வேலைகள் தொடர்பில் சரியாக கணக்கு வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | பூர்த்தியடைந்த கட்டிடங்கள் பெறமுடியாமையி ருந்தமையால் 1994.04.01 ஆந் திகதி முதல் கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி ரூபா 73,849,491 ஆத இருந்த போதிலும், நேரொத்த அறிக்கைகளின் பிரகாரம் இது ரூபா 540,000,000 ஆக இருந்தது. இதனால் ரூபா 466,150,509 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | தொழிற்சாலைக்குச் சொந்தமாக காணப்படும் சொத்துக்களை மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். | அமைச்சானது 2007 மற்றும் 2017 இல் அரசம மதிப்பீட்டு திணைக்களத்துடன் சொத்துக்களை மதிப்பீடு செய்தது. | பிரச்சனை தீர்க்கப்படாமலிருந்தது. |
| (ஈ) | 2018 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 16,598,342 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் காண்பிக்கப்படும் மீதியினை உறுதிசெய்து கொள்தற்காக உரிய கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரும்பு விற்பனைக்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 16,598,342 மிகையான தொகையினை கம்பனி செலுத்த வேண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டது. | உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 1993 இலிருந்து இருக்கின்ற ரூபா 42,183,209 தொகையான பெறவேண்டிய மற்றும் முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தினை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டமா அதிபர் திணைக்களமானது 20 வருடங்களுக்கு மேலாகவுள்ள முன்னைய முதலீட்டாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 14,036,375 தொகையினை அறவிடுவதற்கு தொடரப்பட்ட வழக்கானது தொடரமுடியாதிருந்தெதன அறிவித்திருந்ததுடன் தொகையானது அறவிடப்படமுடியவில்லையெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மிகுதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 76,352,246 ஆன தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி தீர்க்கப்படாதிருந்தது. |
| (எ) | 25 வருடங்களான காலமாக எவ்வித உற்பத்தி பணிக்கும் பங்களிப்புச் செய்யாது மூடப்பட்டுள்ள கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை மீள ஆரம்பித்து உள்நாட்டு சீனி உற்பத்தியினை | உள்நாட்டு சீனி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக இந்த தொழிற்சாலையை கூடிய விரையில் மீள்கட்டமைத்து, | மீள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்கட்டமைத்து உற்பத்தியை தொடங்க முடியாதிருந்தது. |

அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மீள் கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களினால் ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு ஐந்து வருடங்களினுள் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அவ்வாறான எந்தவிதமான முதலீடும் 2020 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்காததுடன் கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான இருந்து அனைத்து இயந்திர உபகரணங்கள் உள்ளடங்கலான கட்டிடங்களின் உரித்தும் இலங்கை அரசிற்கு இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே எந்தவித உற்பத்தியும் மேற்கொள்ளப்படாத இந்த கைத்தொழிற்சாலையில் சேவையில் ஈடுபட்ட ஊழியர்களுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 40.329 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

உற்பத்தி பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | கந்தளாய் சீனி தொழிற்சாலையை மீள்கட்டமைப்பதற்காக முதலீட்டாளர் ஒருவருக்கு தெரிவுசெய்யும் போது திறந்த தேர்வு நடைமுறையினை பின்பற்றாது காணிகள் அமைச்சு மற்றும் முதலீட்டுச் சபை ஆகியவற்றுக்கு நேரடியாக கிடைத்த விண்ணப்பங்கள் 02 இன் அடிப்படையில் முதலீட்டினை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது முதலீட்டிற்கான முன்மொழிவுகளினை கோருதல் போதுமான வெளிப்படைத் தன்மையில் இடம்பெற்றது என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த நடைமுறைக்குரிய எந்தவொரு ஆவணமும் காணிகள் அமைச்சிடம் காணப்படவில்லை என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்ப நடைமுறையினை பின்பற்றி வெளிப்படைத்தன்மையுடன் பொருத்தமான மூதலீட்டாளரொருவரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருகக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | பொருந்தமான முதலீட்டாளர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை மீறி நிதி அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகரால் கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை மீள்கட்டமைக்கும் பங்குடமை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பிற்குரிய தொழில்நுட்ப மற்றும் வணிக | நிதி அமைச்சின் சட்ட ஆலோசகரால் சட்டமா அதிபரின் கூற்று தொடர்பில் அவதானிப்புக்களை முன்வைக்கும் போது நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து அது தொடர்பில் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் இறுதிபங்குதாரர் உடன்படிக்கையினை | இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விடயங்கள் தொடர்பில் மேற்கொண்டு ஆராயாது 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய தீர்ப்பினை முன்வைத்து அந்த உடன்படிய்கையை நன்முறைப்படுத்துவதற்கு சட்டரீதியான சிக்கல்கள் இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தமையை அவதானிக்ககூடியதாக இருந்தது. | கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பில் பரிசோதிக்க வேண்டியதாக இருந்தது. | | |
| (ஒ) | சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட கடிதத்திற்கு பதிலாக நிதி அமைச்சின் முன்னாள் சட்டஆலோசகரால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பதில் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் திறைசேரியின் செயலாளர் அல்லது மற்றுமொரு உத்தியோகத்தர் ஒருவருக்கு அறிவித்திருக்காதது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இறுதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சந்தர்ப்பத்திலும் மேற்படி 2016.08.01 ஆந் திகதிய சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் திறைசேரியின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இறுதி பங்குதாரர் உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சட்ட ஆலோசகரினால் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் தொடர்பில் உரிய தரப்பினரை அறிவுறுத்த வேண்டியதாக காணப்பட்டது. | தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருகக்கவி ல்லையென அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | முதலீட்டாளரினால் கைத்தொழிற்சாலைக்கு தேவையான இயந்திர உபகரணங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு முரணாக முதலீட்டாளருக்கு தற்போது காணப்படும் இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதற்கு இயலுமை உள்ளதாக குறிப்பிட்டு பந்தியொன்று நிதி அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகரினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த பிரிவினை அகற்றுவதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்ட இறுதிவரைபு பங்குதாரர் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்பது கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | சட்ட ஆலோசகரினால் அகற்றுவதற்கு அனுப்பப்பட்ட வரைபில் பங்குதாரர் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாத பந்தியொன்றினை கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கையில் உள்ளடக்கியமை தொடர்பில் விசாரணை யொன்றினை மேற்கொள்ள வேண்டும். | திருத்தத்தினை மேற்கொண்ட உத்தியோகத்தர் நிதி அமைச்சின் சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் வேலையாற்றவில்லை யென்பதுடன் தடுப்பு நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில் லையென அறிவிக்கப்பட்டது. | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாதிருந் தது. |
| (ஔ) | கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குரிய கட்டிடங்கள் உள்ளடங்கலான இயந்திர உபகரணங்களை கைதவிர்க்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் உடன்படிக்கையினை கைச்சாத்திட்ட பங்குதாரர் உடன்படிக்கை காரணமாக அமைந்துள்ளமை கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | கைச்சாத்திடப்பட்ட பங்குதாரர் உடன்படிக்கையில் அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியொன்று உள்ளடக்கப் படாமையினால் கைதவிர்க்கும் நடைமுறையினை மேற்கொள்ள முடியாதுள்ளது. அதன் காரணமாக | தடுப்பு நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில் லையென அறிவிக்கப்பட்டது. | இந்தப்பிரச்சனை தீர்க்கப்படாதிருந் தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்கு காரணமவற்றை இனங்கண்டு அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| (ஃ) | நிதி அமைச்சின் முன்னாள் ஆலோசகரால் கைச்சாத்திடப்பட்ட பங்குதாரர் உடன்படிக்கைக்கு ஒப்பாக இலங்கை அரசிற்கு தீங்கு ஏற்படும் வகையிலும் முதலீட்டாளருக்கு நன்மை பயக்கும் விதத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் சிங்கப்பூர் சர்வதேச தீர்ப்பனவு நிலையத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நட்டஈடாக 894,516.83 சிங்கப்பூர் டொலர் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 211,913.93 ஆன தொகை இலங்கை அரசினால் முதலீட்டாளருக்கு செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப் பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக செயற்திட்ட கிரயம் 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. | இலங்கை அரசிற்கு நட்டமேற்படும் வகையிலான நிபந்தனைகள் உடன்படிக்கைக்கு உள்ளடக்கப் பட்டமையினால் செலுத்துவதற்கு நேர்ந்துள்ள நட்டஈட்டுத் தொகை அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உடன்படிக்கை தொடர்பில் ஏற்பட்ட தீர்ப்பனவு தீர்ப்பு நீதிமன்ற தீர்ப்பினைப் போன்று மேன்முறையீட்டிற்கு உட்படுத்த முடியாது. அதனால் இந்த தீர்ப்பனவு சபையின் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடொன்றினை முன்வைப்பதற்கு சட்டத்தில் இடம்காணப்படவில்லை ல. | உரிய தரப்பினரிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (க) | வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலையினை மீள்கட்டமைப்பதற்கு உரியதான தொடர்புடைய நிறுவனங்களான நிதி அமைச்சு, காணி | சீனிக் கைத்தொழிற் சாலையினை மீள்கட்டமைக்கும் பணிகள் துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க | உரிய முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்கட்டமைப்பு தொடங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் முதலீட்டு சபை ஆகிய நிறுவனங்களிடையே சிறந்த இணைப்பொன்று இல்லாமை அமைச்சரவை பிரமாணம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் 1994 ஆம் ஆண்டு முதல் சீனி உற்பத்தி பணிகள் நிறுத்தப்பட்ட கந்தளாய் சீனி கைத்தொழிற்சாலை கணக்காய்வுத் திகதி வரையிலும் பொருத்தமான முதலீட்டாளரொவருக்கு ஒப்படைக்கப்பட முடியாத காரணத்தினால் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாது உள்ளது. | வேண்டும். | | |
| (கா) | பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் காணிகள் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் Jungle Cleaning எனும் பெயருடைய உயர் பெறுமதி வாய்ந்த சங்கிலி ஒன்று இதுவரையிலும் புற்கள் மண்டி காணப்படுகின்றமை கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | சொந்தமான இந்த சொத்துக்கள் சேதமடைவதற்கு இடமளிக்காது பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தச் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் அழிவடைவதிலிருந்து பாதுகாப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கி) | கைத்தொழிற்சாலையின் சூழலில் காணப்படும் வாகனங்கள் உரிய பாதுகாப்புடன் மற்றும் கவசத்துடன் இல்லாது சுமார் 25 வருட காலமாக துருப்பிடித்தவாறு காணப்படுகின்றமை கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டதுடன் கேள்வி நடைமுறைக்காக | இந்த சொத்துக்களை கைதவிர்க்கும் வரையில் அவற்றை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவற்றை துரிதமாக கைதவிர்ப்பதற்கு | தடுப்பு நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் அகற்றப்பட்டது என அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனங்களில் செஸி இலக்கம் வெட்டப்பட்டுள்ள போதும் இயந்திர உபகரணங்கள் உள்ளடங்கலான உரித்து முதலீட்டாளருக்கு சார்ந்துள்ளமையின் அடிப்படையில் கேள்வி நடைமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் செஸி இலக்கங்களை அகற்றியமையின் காரணமாக வாகனங்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. | உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | | |
| (கீ) | வருடாந்தம் சுமார் 16,320 மெற்றிக்தொன் சீனி, 9,000 மெலிசெஸ் மற்றும் எரிதிரவம் 3.9 லீற்றர் எனும் உற்பத்தி இயலுமையுடனான வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி கைத்தொழிற்சாலை தற்காலிகமாக 1993 செப்தெம்பர் 01 ஆந் திகதி அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 1994 ஏப்ரல் மாதம் முதல் சீனி உற்பத்தி பணிகள் இடம்பெறாமையினால் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்களின் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில்கள் இழக்கப்பட்டிருந்தது. மேலும், 1991 ஆம் ஆண்டு மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 125 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் மற்றும் கைத்தொழிற்சாலை | 1994 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டவாறு உள்ள இந்த நிறுவனத்தை மீள கட்டமைத்து பொருத்தமான முதலீட்டாளர் ஒருவருக்கு கையளிப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இயந்திரம் மற்றும் வாகனங்கள் ஏலத்திற்குப் போடப்பட வேண்டுமென அறிக்கையிடப்பட்டது. | பயன்தராத சொத்துக்களை பொருத்தமான முதலீட்டாளருக்கு மாற்றுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த தென அவதானிக்கப்பட் டிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | வளாகத்தில் காணப்படும் வாகனங்கள் உரிய பாதுகாப்பு மற்றும் கவசமின்றி காணப்பட்ட காரணத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. அவ்வாறே மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2012 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் கடந்த 5 வருட காலப்பகுதியில் வாகனங்களின் பெறுமதி ரூபா 12,463,500 இனால் குறைவடைந்திருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கு) | சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணிகளின் அளவான 8596 ஹேக்டயர்கள் காணப்படுவதுடன் அவற்றுள் 164 ஹேக்டயர் பரப்பளவில் சீனிக் கைத்தொழிற்சாலை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களின் தொகுதி தாபிக்கப்பட்டுள்ளது. சீனிக் கைத்தொழிற்சாலையினை செயற்படும் நிலையில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் 4,800 ஹேக்டயர்கள் பரப்பளவில் கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தற்போது எந்த காணியிலும் கரும்பு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இடம்பெறாததுடன், அத்துமீறிய | கைத்தொழிற்சாலைக்கு சொந்தமான காணிகளில் பலவருடங்களாக எந்தவித பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் அந்த காணிகளை அத்துமீறி கைப்பற்றுவதற்கு இடமுள்ளமையால் அவற்றினை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்பு நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்ட்டிருந்தபோதும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயிர்ச்செய்கையாளர்களினால் நெல் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைக்காக இந்த காணி அத்துமீறி கைப்பற்றப்பட்டிருந்த போதிலும், அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களை அகற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (கூ) | 2017 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 133,150,000 ஆன பெறுமதியுடனான கைத்தொழிற்சாலை வளாகத்திற்குரிய தலைமை அலுவலகக் கட்டிடம், களஞ்சிய அறை, ஆய்வுகூடம், சீனிக் களஞ்சிய சாலை, பாதுகாப்புக் கட்டிடம், உத்தியோகபூர்வ இல்லம் போன்ற கட்டிடங்களின் தொகுதியினை பேணுவதற்கு முடியாமை மற்றும் அவற்றிற்கு உரிய பாதுகாப்பு இல்லாமை ஆகிய காணரங்களினால் அந்த கட்டிடங்கள் பெரும்பாலனவற்றில் யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளினால் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், களஞ்சிய சாலைகளில் மற்றும் கைத்தொழிற்சாலையில் உள்ள தளபாடங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் பொறிகள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் | கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் ஏனைய சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்க வேண்டும். | கட்டிடங்களை காட்டு யாளைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு வனசீவராசி திணைக்களத்திற்கும் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்ததெனவும் சொத்துக்களைப் பாதுகாப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடங்கலான பெறுமதி வாய்ந்த இருப்புக்கள் சேதமடைந்தவாறு காணப்படுகின்றது. | | | |
| (கெ) | கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான பெறுமதியான கல்வனைஸ் குழாய்கள் எவ்வித கவசங்களுமின்றி பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும், இரும்புக் கம்பி இருப்பொன்று நிறுவனத்தின் அண்மையில் உள்ள இராணுவ முகாமிற்கு மற்றும் விகாரையின் பணிகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும், அவை மீள நிறுவனத்திற்கு மீள பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான களஞ்சியங்களில் காணப்படும் இருப்புக்களை பாதுகாப்பாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீள அந்த குழாய்களினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவதானிக்கப்பட்டது. | மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதற்கு தகவலெதுவுமிருக்கவில்லை. |

## 4.70 வரையறுக்கப்பட்ட ஜயா கென்டேனர் டேர்மினல்ஸ் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 337,434,783 | 246,140,155 | 633,982,773 | 42,759,596 | 112,616,660 | முனைப்பழியற்ற |
| **2019** | 329,561,000 | 236,675,352 | 428,834,353 | 43,891,892 | 98,466,635 | முனைப்பழியற்ற |
| **2020** | 235,051,947 | 222,456,068 | 448,005,375 | 52,617,485 | 19,772,978 | முனைப்பழியுள்ள |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 337.43 | 246.14 | 633.98 | 42.76 | 112.62 |
| 2019 | 329.56 | 236.68 | 428.83 | 43.89 | 98.47 |
| 2020 | 235.05 | 222.46 | 448.01 | 52.62 | 19.77 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதி கூற்றில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை இலக்கம் 2.3.8 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இறுதி பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் | சொத்துக்கள் மீளாய்வு சபையினால் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் தேவையான | மோட்டார் வாகனங்களின் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரை பொறியியலாளர் பிரிவின் தலைவரின் | 2021 இலிருந்து சொத்துக்களின் பயன்தருகாலம், இறுதிப்பெறுமதியை மீளாய்வு செய்வதற்காக ஏனைய துறைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்ற முறைமை மீளாய்வு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா 65,507,108 கிரயமான மோட்டார் வாகனங்களின் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரையான சொத்துக்கள் மீளாய்வுக் குழுவின் பரிந்துரை இன்றி அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், கம்பனிக்கு சொந்தமான ரூபா 58,432,733 கிரயமான ஏனைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீட்டு கொள்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் மீளாய்வு சபையினால் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பரிந்துரையின் அடிப்படையிலேயே அதிகரிக்கப்பட்டிருந்தது. இதில் சில வாகனங்கள் 05 வருடங்களை விஞ்சி இருந்ததுடன் எதிர்வரும் வருடங்களில் போதும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றமையினால் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சொத்துக்களை மீளாய்வு சபை ஒன்றை ஸ்தாபித்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்பாக பொறியியல் பிரிவின் தலைவர்,நிறைவேற்றுப் பொறியிலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுடனான தனியாட்களை கொண்ட குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 28,268,536 ஆக காண்பிக்கப்பட்ட இருந்த போதும் அதில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அதிகார சபையினால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 26,947,624 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைக்க | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் இந்த நிறுவனம் தொடர்பான அறிக்கை ஒன்று நிதி பிரிவின் தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்போது பணிப்பாளர் சபையின் தீர்மானமாக அந்தப் பணம் எவ்வளவோ அதனை உரிய கம்பனிகளில் இருந்து அறவிடுமாறு இருந்தது. மேலும் வியாபார | 2022 சனவரி அளவில் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத் முகாமைத்துவப் பணிப்பாளரால் ரூபா 544,684 தொகை செலுத்தப்படுமென உறுதிப்படுத்தியிருந்தார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய மீதியில் ரூபா 1,320,912 நிலுவையொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசத்தில் உள்ளடக்கியிருந்த 2014 ஆம் ஆண்டு முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 544,684 தொகையானது 2022 பெப்ரவரி 23 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் தலைவருக்கு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது பணிப்பாளர் சபையினால் நியதிச்சட்ட பொறுப்புகள் மேற்கொள்ளவேண்டி இருந்த போதிலும், ஜய கொள்கலன் இறங்குதுறை கம்பனியில் 2011 ஆகஸ்ட் 29 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது ஊழியர்களை சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல், ஓய்வுபெறச் செய்தல் மற்றும் ஊழியர்கள் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தலைவருக்கு கையளிக்கப்பட்டு இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி | கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக கட்டுப்பாட்டு சபை பொறுப்பு வகிக்க வேண்டி இருந்தமையினால் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2021.02.25 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தலைவருக்கு ஊழியர்களை சேர்த்தல், ஓய்வுபெறச் செய்தல், சேவையை முடிவுறுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக 2011.08.29 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது. அதன் போது அந்த அதிகாரத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மேற்கொள்ளப்படாத நடவடிக்கைகளின் அதிகாரம் பூச்சியமாக்குதல் மற்றும் இரத்துச் | அத்தகைய நடவடிக்கைகள் இயக்குனர் சபைக்கு அறிக்கையிடும் வகையில் அத்தகைய நடவடிக்கைள் எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய நடவடிக்கைகளுக்காக மேவுகை அதிகாரத்தை தலைவர் பெற்றுக் கொள்ளாவிட்டால் அவை இல்லாது செல்லுபடியற்றதாகிவிடும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையிலும் அந்த தீர்மானத்தை சரி செய்வதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்தல் தீர்மானமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் எதிர்கால நோக்கை காண்பிக்கும் வகையிலும், பொருத்தமானதாகவும் மற்றும் அடையக் கூடியதுமான இலக்குகளை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நீண்டகால நோக்குடன் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பக்கம் 20 - 21 இல் நிறுவனத்தினால் குறுங்கால மற்றும் நீண்டகால எதிர்வரும் 05 வருடங்களை உள்ளடக்கி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான திட்டம் ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை நிறுவனத்தின் எதிர்வரும் 05 வருடங்களில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் மற்றும் இலக்குகள் ஆகும். | சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவின் பிரகாரம்,<br><br>அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனி ஒன்றினால் குறுங்கால வைப்புக்கள், திறைசேரி | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கம்பனி ஒன்றின் மிகைப் பணத்தை முதலீடு செய்யும்போது உரிய இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். | நிறுவனத்தினால் சகல மிகைப் பணமும் இலங்கை வங்கியில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்புகள் யாவும் 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வைப்புகளாகும். | 2021 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிற்காக நிதி அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உண்டியல்கள், நிலையான வைப்புகள் அல்லது ஏனைய நிதி முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதாயின் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற வேண்டி இருந்தபோதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 185,420,331 தொகையான முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறவேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட ரூபா 185,420,331 தொகையான முதலீட்டுகளிற்காக நிதி அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வைப்புக்களுக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம், சகல அரசாங்க தொழில் முயற்சி ஒன்றினாலும் நிறுவன கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும், கம்பனி மேற்கூறப்பட்ட தேவையை நிறைவேற்றி வைக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வளம் தொடர்பாக இந்த தேவையினை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆலோசணையாளர் ஒருவரை தெரிவு செய்து நியமிப்பதற்காக நியமிக்கப்பட்ட பெறுகை குழு ஊடாக ஆலோசனையாளரை நியமித்து நிறுவன கட்டமைப்பு திட்டம் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை என்பன பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | உரிய ஆவணங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசனையாளரைத் தெரிவுசெய்வதற்காக பெறுகல் செய்முறை தொடங்கப்பட்டிருந்தது டன் விலைமனுக்கள் 2021.12.10 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்டிருந்த துடன் 06 விலைமனுக்ககள் பெற் பெறப்பட்டிருந்தது. |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் | முறையானதும் வெளிப்படையான தும் ஆன மனிதவள | ஆலோசணையாளர் ஒருவரை தெரிவு செய்து நியமிப்பதற்காக | உரிய ஆவணங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசனையாளரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றை தயாரித்து அதற்காக பணிப்பாளர் சபையினதும் வரிசை அமைச்சினதும் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்த ிற்காக ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்றை தயாரித்து பந்தியில் காண்பிக்கப்பட்டு ள்ள பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். | நியமிக்கப்பட்ட பெறுகை குழு ஊடாக ஆலோசனையாளரை நியமித்து முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கா ன நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | த் தெரிவுசெய்வதற்காக பெறுகல் செய்முறை தொடங்கப்பட்டிருந்தது டன் விலைமனுக்கள் 2021.12.10 இல் உள்ளவாறு அனுமதிக்கப்ட்டிருந்த துடன் 06 விலைமனுக்ககள் பெற் பெறப்பட்டிருந்தது |
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 9.9 ஆம் பிரிவின் பிரகாரம், மேவுகை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு மாதத்திலும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்குரிய சகல விபரங்களும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 26,915,745 தொகையான மேலதிக நேர கொடுப்பனவுகளுக்குரிய விரிவான தகவல்கள் மாதாந்தம் பணிப்பாளர் சபை | மேலதிக கொடுப்பனவுகளு க்கு உரிய விரிவான தகவல்களும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகக் கொடுப்பனவு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் 2021 ஆம் ஆண்டிலிருந்து இயக்குனர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | 1954 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 1954 இன் 19 ஆம் இலக்க மற்றும் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் I ஆம் பகுதியின் 3 மற்றும் 7 ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஏதாவது ஒரு நிறுவனத்தின் ஊழியரை சுழற்சி முறையில் சேவையில் ஈடுபடுத்துவதாயின் நாளொன்றுக்கு ஆகக்கூடியது 08 மணித்தியாலங்களுக்கும், வாரத்திற்கு 45 மணித்தியாலத்திற்கும் வரையறுக்க வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 46 ஊழியர்களுக்கு 24 மணித்தியாலங்கள் வேலை தவணைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கான தேவைகளை கண்டறிய வேண்டும். | கம்பனியின் சேவை தேவையின் பிரகாரம் 24 மணி சுழற்சி சேவை நடவடிக்கைகளை செயற்திறனாகவும் இடையூறு இன்றியும் மேற்கொள்ளவதற்காக அறிமுகப்படுத்தபட்டுள் ளது. அதில் 24 மணித்தியால சுழற்சி சேவை முறையை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக 2021.02.25 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. | கம்பனியின் சேவைத் தேவைப்பா டுகளிற்கிணங்க அறிமுகப்படுத்தபட்ட 24 மணித்தியால சுழற்சி முறைமையின் தொடர்ச்சியான பராமரிப்பிற்காக 2021.02.05 இல் இடம்பெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | 2014 சனவரி 06 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் பதவியணியினர் மற்றும் உரிய சம்பளம் தீர்மானிக்கப்படாத நிறுவனம் ஒன்றாக இருந்தமையினால் வாழ்க்கைச் செலவு படிகள் உரித்தற்ற நிறுவனமாக இருந்தபோதிலும் கம்பனி முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் ரூபா 7,800 வீதம் 95 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாழ்க்கைச் செலவு படி வழங்குவதற்காக 2018 மே 03 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளருக்கு 2018.02.23 ஆம் திகதி | இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியர்களுக்காக வாழ்க்கைச் செலவு படி செலுத்தப்பட்டிருந்தது. | | அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் உரிய வரிசை அமைச்சர் 2018.02.23 ஆம் திகதி பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி இதற்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | |
| (ஓ) | கம்பனி விஞ்ஞாபனத்தின் 4(i) மற்றும் (ii) ஆம் பிரிவுகளின் பிரகாரம், இலங்கை துறைமுக அதிகார சபையில் சேவையாற்றுகின்ற 06 உத்தியோகத்தர்களினால் கம்பனியில் இருந்து விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் ஒரு பங்கு வீதம் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. அவ்வாறே கம்பனியின் பங்குகளுக்கு உரித்துள்ள உத்யோகத்தர் அதிகார சபையின் சேவையில் இருந்து விலகிச் செல்கின்ற போது அதிகாரசபையினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு பங்கு உரித்து கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு பெற்றுச் சென்ற ஐந்து பேர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பங்குரிமை, அதிகாரசபையில் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்கள் ஐந்து பேர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை | அதிகார சபையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர் களின் பங்குகள் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு கையளிக்க வேண்டும். | ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் பங்குகள் உரித்தான உத்தியோகத்தருக்கு துறைமுக அதிகார சபையின் சேவையில் இருந்து விலகி செல்லும் போது அதிகார சபையினால் அது தொடர்பாக ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டிற்கு விரைவாக அறிவிக்கும் பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்துமாறு அதிகார சபைக்கு கோரிக்கை ஒன்று சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது . | இது தொடர்பில் துறைமுக அதிகார சபைக்கு . 2021.10.06 இல் வேண்டுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பங்கு கையளிக்கும் நடவடிக்கைகள் நாளதுவரையாக மற்றும் செல்லுபடித்தன்மை தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சனைகள் ஏற்படும் ஆபத்தை தவிர்க்க முடியாதிருந்தது. | | | |
| (ஔ) | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதற்கிணங்க நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகள் அடைந்து கொள்ளப்பட வேண்டிய முறைமைகள், இலக்குகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை இனங்காணல் இடம்பெற்றிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்கண்டு அதற்கிணங்க இலக்குகளைத் தோற்றுவித்து அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | இதனை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறுதகு அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்காததுடன் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (∴) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 1,540,551 ஆக இருந்ததுடன் அதற்குரிய நிறுத்தி வைத்தல் வரி சான்றிதழ் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக மேற்கூறப்பட்ட | வரி பொறுப்பை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த நிறுத்தி வைத்தல் வரிக்காக உரிய சான்றிதழை வைத்துக்கொள்வதற்கு | நிலையான வைப்பிற்கான வட்டி கணக்கு வைக்கும்போது நிறுவனத்தினால் அட்டுறு அடிப்படையில் வரி வருமானம் மற்றும் நிறுத்தி வைத்தல் வரி ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 31 | எதிர்காலத்தில் நிறுத்திவைத்தல் வரி மீது காலக்கழிவு ஒதுக்கீடு மேற்டிகாள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுத்தி வைத்தல் வரி பணம் வருமான வரி செலுத்தும் போது கழித்துக் கொள்ளல் தொடர்பாக நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | ஆம் திகதியில் கணக்கீடு செய்யப்படுகின்றது. (2020 இற்கு முன்னர்) எனினும் வங்கியினால் நிறுத்தி வைத்தல் வரிக்காக சான்றிதழ் ஒன்று உரிய காலாவதி திகதியின் பின்னரே விநியோகிக்கபடுகின்றது. வருமான வரி செலுத்தும் போது சான்றிதழ் பத்திரங்களில் காணப்படும் அளவே கழிக்கப்படுகின்றமையினால் 2014 முதல் 2019 வரை ஒவ்வொரு வருடமும் நிறுத்தி வைத்தல் வரி கணக்கில் ஏதோவொரு பண அளவு மீதியாகின்றது. | |
| (க) | 3200 மெட்ரிக் தொன் களஞ்சியப்படுத்த கூடிய புதிய எண்ணெய் தாங்கி ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் 10 எண்ணெய் தாங்கிகளை மேவுகைசெய்யும் வகையில் தீயணைப்பு முறைமை ஒன்றை பொருத்துவதற்காக இணங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதமான ரூபா 45,517,357 தொகையை ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்காக கம்பனியால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு மீளாய்வாண்டின் போது பணம் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரர் சமர்ப்பிக்கும் வரிப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உள்ளீட்டு வரியை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 3200 மெட்ரிக் தொன் களஞ்சியப்படுத்த கூடிய எண்ணெய் தாங்கி ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் எண்ணெய் தாங்கிக்கான தீயணைப்பு முறைமை ஒன்றை பொருத்துவதற்கு உரிய 20 சதவீத முற்பண தொகைக்குரியதாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ரூபா 45,517,357.58 தொகையொன்று 2020 | இது இலங்கை துறைமுக அதிகாரசபையால் முதல் தடவைக்காக பற்றுச்சீட்டுக்களை வழங்குவதில் பிழையொன்றிருந்தது. இது இப்போதைக்கு திருத்தப்பட்டு |

மேற்கூறப்பட்ட தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,371,656 பெறுமதி சேர் வரி (வற்) ஒப்பந்தகாரரினால் விநியோகிக்கப்படுகின்ற வரி பட்டியல்களை பெற்றுக்கொள்ளாமல் இலங்கை துறைமுக அதிகார சபையின் கடித தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட வரி சிட்டையினை அடிப்படையாகக்கொண்டு கம்பனியால் உள்ளீட்டு வரியாக 2020 ஒக்டோபர் மாதத்தின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி பொறுப்பாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஒக்டோபர் மாதம் 06 வருகின்றது. ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அந்த தொகை துறைமுகத்திற்கு செலுத்தப்பட்டதன் பின்னர் 2020 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி தலைவர் ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட் இனால் துறைமுக அதிகார சபைக்கு கடிதமொன்று அனுப்பி அந்த தொகையில் அடங்கியுள்ள ரூபா 3,371,656.11 வற் (வற்) வரி தொகை ஸேசீரீ நிறுவனத்திற்கு மீண்டும் வழங்குமாறு (மீள்நிதி) கோரியிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த மூலதன செலவினங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக வற் வரித் தொகை இலங்கை துறைமுக அதிகார சபையினாலும் செய்யப்பட்டு, உள்ளீட்டு வரியாக குறைப்பதற்கு (கோரிக்கை) நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் 2020.11.05 ஆம் திகதி இந்த

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலவினத்திற்கான வரிப் பட்டியல் எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வரிப் பட்டியலின் பிரகாரம் எமது நிறுவனத்தினால் உள்ளீட்டு வரியாக இது கழிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குறைக்கப்படாது இருக்குமாயின் இந்த வரி தொகையினால் எமது நிறுவனத்தின் செலவினம் மிகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கும். | |
| (கா) | நிறுவனத்திற்குச் சொந்தமான 13 எண்ணெய் தாங்கிகளில் 07 முகவர்களுக்கு சொந்தமான 03 வகையான எண்ணெய்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் முகவர்களினால் தாங்கிகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. தாங்கிகளில் பம்பி இடப்படுகின்ற எண்ணெயின் அளவு மற்றும் அகற்றப்பட்ட எண்ணெயின் அளவை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக சரியாக எண்ணெய் இருப்பை நிர்ணயிக்க முடியாதமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி நடைபெற்ற எண்ணெய் இருப்பு | புத்தக மீதிக்கும் பௌதிக இருப்பு மீதிக்கும் இடையே வேறுபாடுகளை குறைக்கும் வகையில் எண்ணெய் அளவிற்காக தொழில்நுட்ப ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமை ஒன்றை பயன்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | எண்ணெய் கைத்தொழிலுக்காக உலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற சகல அளவிடல் முறைகளும் 100 சதவீதம் சரியானதாக இல்லை. அது 0.05 சதவீத அளவினால் வேறுபாடு ஏற்படக்கூடியது. 557 மெட்ரிக் தொன் எண்ணெய் அளவு ஏற்பட்டிருந்தமையானது, அதன் வேறுபாட்டுக்கு மேலதிகமாக எச்எஸ்பீஓ தாங்கியை வெண்ணெய் குழாய்கள் எல்எஸ்பீஓ | உத்தரவாளர்களின் எண்ணெய் ஆனது கலவையில் சேமிக்கப்பட்டமையால் நாங்கள் உலகத்தில் காணப்படுகின்ற அதிகூடிய சரியான முறைமையை பயன்படுத்துவதுடன் இது இது எண்ணெய் துறையில் பயன்படுத்திய சரியான முறைமையாகும். உதாரணமாக, |

| | | |
|---|---|---|
| புத்தக மீதிக்கும், பௌதீக மீதிக்கும் இடையே 557 மெட்ரிக் தொன் எண்ணெய் மிகை ஒன்றும் அவதானிக்கப்பட்டது. | ஆக மாற்றப்பட்டமையின் விளைவாக ஏற்பட்டிருந்தது. | சீபீசீ மற்றும் சீபீஎஸ்ரீஎல் இந்த முறைமையை பயன்படுத்துகின்றன. |

## 4.71 மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 30,472,055 | 832,031,579 | 1,249,093,942 | 4,045,091,813 | (801,559,524) | மறுப்பு |
| **2019** | 67,625,610 | 196,129,361 | 1,275,834,471 | 4,200,336,094 | (128,503,752) | மறுப்பு |
| **2020** | 54,206,475 | 301,080,892 | 1,319,275,274 | 4,490,651,313 | (246,874,417) | மறுப்பு |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 12,430,943 தொகையான இருப்புக்கள், கொண்டுசெல்லும் பெறுமதி ரூபா 406,546 ஆக | முகாமைத்துவமானது கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நடவடிக்கை | நிறுவனத்திற்கு சொந்தமாக பௌதீகரீதியில் எந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தற்போது காணப்படவில்லைசொல்லப்பட்ட கம்பனியால் அம்பாந்தோட்டை | அதற்கு பொறுப்பாகவுள்ள தனிநபர்களை நிச்சயிப்பதற்கும் விசாரணைகள் மேற்கொள்ளப்படடிருக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்த நிலையான சொத்துக்கள், மற்றும் கையிலுள்ள காசு ரூபா 173,727 என்பன பௌதீக ரீதியில் காணப்படவில்லை. ரூபா 13,011,216 தொகையான இந்த நட்டத்திற்காக ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படாதிருந்தமையினால் வருடாந்த அல்லது ஒட்டுமொத்த நட்டங்கள் அந்த அளவினால் அதிகரிக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள் பௌதீக ரீதியில் காணப்படாமைக்கான காரணம் மற்றும் அதற்குப் பொறுப்புவாய்ந்த நபர்களை தீர்மானிப்பதற்கு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சொத்துக்களின் பாதுகாப்பிற்காக முகாமைத்துவத்தால் போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | எடுப்பதற்கும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக பொருத்தமான படிமுறைகள் எடுக்கவும் பொறுப்பாகவுள்ளது. | சர்வதேச துறைமுகக் குழுவால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களின் அடிப்படையில் சொல்லப்பட்ட பெறுமதியினை கம்பனிக்குச் செலுத்துவதற்கு எழுத்துமூலமாக உறுதிசெய்யப்பட்டது. அதற்காக காலக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இயக்குனர் சபையின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 173,727 தொகையான காசிற்காக ரூபா 12,430,943 பெறுமதியான இருப்புக்களிற்காக காலக்கழிவு ஏற்பாட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | காததுடன் கம்பனியில் பௌதிகரீதியிலிருக்காத சொத்துக்களுக்காக காலக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ள வேண்டியுள்ளது. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 3,246,376,040 ஆக இருந்ததுடன், அத்திகதியில் கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 3,171,376,040 மறைப் பெறுமதியைக் காட்டியது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளும் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2018 பெப்ரவரி 15 ஆம் திகதி கம்பனியை கலைப்பதற்காக | கம்பனியை கலைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளமையினால் அதனை விரைவாக அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோக | மாகம்புற துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பனி அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டமையினால் அதனை கலைப்பதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தது என கம்பனியால் தீர்மானிக்கப்பட்டிருந்து. அதனால் அதற்காக தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் | கம்பனியினை முடிவுறுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தலைமைக்கம்பனியாகவுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் விசேட பொது கூட்டமொன்றை மேற்கொள்வதன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், 2021 மார்ச் 15 ஆம் திகதி வரையும் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | த்தர்கள் விரைவாக செயற்பட வேண்டும். . | கொள்வதற்காக அமைச்சரவை பத்திரம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளின் பிரதிகள் அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் பெற்றப்பட்டதன் பின்னர் தேவையான ஏனைய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். | மூலம் (ஈஜீஎம்) கம்பனியை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக்கூற்றின் பிரகாரம், அரசாங்கத்திடமிருந்து வருமதியாகவுள்ள ரூபா 17,782,563 கப்பலிற்கான எரிபொருள் காப்புறுதிக்காக வருமதியாகவுள்ள ரூபா 280,040,453, வியாபார கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 3,589,879 மீதி மற்றும் அத்திகதியிலுள்ளவாறு கம்பனியால் செலுத்தவேண்டிய ரூபா 7,297,497 மீதிகள் தொடர்பான மூல ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல் கடிதம், வயதுப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் ஏனைய துணை ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலே குறிப்பிட்ட ரூபா 49,412,895 வருமதி மீதிகளை அறவிடுவது தொடர்பில் மீளாய்வாண்டின்போது முகாமைத்துவம் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இயக்குனர் சபை கவனஞ்செலுத்தியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 103,666,952 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 98,938,252 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியில் ரூபா 4,728,700 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான விடயங்கள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. மேலும், மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அறவிட வேண்டியிருந்த டக் கப்பலுக்கான இழப்பீட்டு பணம் ரூபா 25,719,981 தொகை, முகாமைத்துவ சேவைகள் கட்டணம் ரூபா 76,547,855 மற்றும் முகாமைத்துவ கம்பனியின் வளவில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய வாகனங்களுக்காக விநியோகிக்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் லீட்டர் 11,449 இற்கான ரூபா 1,399,116 தொகை | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அறவிடுவதற்காக 2021.01.25 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. எனினும், அந்த பணம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் இன்னும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்களிற்கான முன்னைய கடிதங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. பெறவேண்டிய மீதிகளை அறவிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இயக்குனர் சபை கவனஞ்செலுத்தியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2021 மே 15 ஆம் திகதி வரையிலும் உரிய பணம் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. | | | |
| (உ) | இலங்கை துறைமுக அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியிலிருந்து அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பணமாக ரூபா 5,800,921 காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியின் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மேற்கூறப்பட்ட தொகை செலுத்த வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய முகாமைத்துவ கட்டணம் மற்றும் கம்பனியின் நானாவித சிட்டைகளை தீர்ப்பதற்காக மேற்கூறப்பட்ட தொகை அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. | இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி உரிய பணம் செலுத்த வேண்டிய மீதியாக இருக்குமாயின் அதனை கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியை முடிவுறுத்தும் போது இந்தத் தொகையின் கொடுப்பனவு கவனத்தில் எடுக்கப்படும். |
| (ஊ) | கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு தனியார் வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட ரூபா 3,144,178,059 இற்கு சமமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 24,002,438 கடன் தொகைக்கு உரிய கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் போதும், அதன் பின்னனைய ஆண்டுகளின் போதும் கடன் தவணை அல்லது வட்டித் | கௌரவ நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்படுகின்ற தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனிக்கு எதிராக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியை முடிவுறுத்தும் போது சொல்லப்பட்ட தொகையானது கவனத்தில் எடுக்கப்படும். |

தொகை எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 180,268,282 தொகையான வட்டித் தொகையையும் உள்ளடக்கியதாக 2020 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித்தொகை ரூபா 971,528,124 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி ரூபா 4,480,972,700 இற்கு சமமமான ஐ.அ.டொலர் 24,038,495 ஆக இருந்தது. இந்த கடன் மீதி தொடர்பாக கம்பனியால் 2021 சனவரி 12 ஆம் திகதி மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், உரிய வங்கியினால் மீதி உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மேற்கூறப்பட்ட கடன் மீதியின் சரியான தன்மை தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. மேலும், இந்த கடன் பணத்தை மீள அறவிடுவதற்காக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடீ3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2. ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி எப் (F) வகையில் உள்ளடங்குகின்றமையினால் கம்பனியின் கட்டுப்பாட்டு சபை கூட்ட படி செலுத்துவதற்காக பரிந்துரை மற்றும் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். மேலும் சுற்றறிக்கையின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்ட ஏ (A) முதல் ஈ (E) வரையான வகைப்படுத்தலின் பிரகாரம் ஆகக்கூடிய கூட்டப்படியாக ரூபா 12,500 தொகை ஏ (A) தரத்திற்குரியதாக இருந்த போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இல்லாத எப் (F) வகையின் பொதுமுயற்சியான கம்பனி 2020 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 04 கூட்டங்களுக்காக பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்காகவும் வருகையின் போது ரூபா 25,000 வீதம் ரூபா 475,000 தொகையும், 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 15 கூட்டங்களை நடாத்தியதற்காக ரூபா 1,875,000 தொகையும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முடிவுறுத்துவதற்கிருந்த கம்பனிக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட சொல்லப்பட்ட செலவீனத்தின் பொருளாதாரம் சர்ச்சைக்குரியதாகவுள்ள அவதானிக்கப்பட்டது. | முறையான அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 சனவரி 13 ஆம் திகதிய சனாதிபதி சுற்றறிக்கை இலக்கம் பீஎஸ்/எஸ்பீ/சுற்றறிக்கை/02/2020 இன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவர் படி மாதம் ஒன்றுக்கு ரூபா 25,000 வரை செலுத்த முடியும். அதற்கு முன்னர் நடைபெற்ற 2019 மற்றும் 2018 இன் கூட்டங்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. | தேவையான பரிந்துரை மற்றும் அனுமதி சுற்றறிக்கைகளின் பிரகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி செயலாளரினால் பணிப்பாளர் சபை தீர்மானங்களின் செயல்முன்னேற்றங்களை ஆராய்ந்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் ஆண்டின் போது அவ்வாறு மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதற்காக கம்பனி செயலாளர் அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அது கம்பனியின் செயலாளரின் பொறுப்பாகும். | இது கம்பனியின் செயலாளரின் பொறுப்பாகவுள்ளதுடன் அந்த அறிவுறுத்தல்கள் அதற்காக கொடுக்கப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 5,037,187 ஆக இருந்த போதும் அதில் ரூபா 3,021,258 தொகைக்குரிய வரி சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் வரி சான்றிதழ் இன்மையின் காரணமாக மேற்கூறப்பட்ட கிடைக்க வேண்டிய மீதி கிடைத்தல் நிச்சியமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி இறுதி தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். | சகல வரிகள் தொடர்பான கொடுப்பனவுகள், முறைப்பாடு சமர்ப்பித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, காணப்பட்ட இந்த பெறுமதியையும் மிகவும் விரைவாக மீண்டும் கணிப்பிட்டதன் பின்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2017 மற்றும் 2018 தொடர்பான நிறுத்திவைத்தல் வரிச் சான்றிதழ்கள் சொல்லப்பட்ட காலப்பகுதியின் போது வங்கியால் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, 2019 இற்குப் பின்னர் கம்பனியின் வருமான வரிப் பொறுப்பு இருக்கவில்லையென்பதால், வருமானவரிப் பொறுப்பிற்கு எதிராக நிறுத்திலைத்தல் வரியை எதிரீடு செய்யமுடியாத நிலைமை ஒன்று காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | நிதியதிச் சட்ட கொடுப்பனவுகள் உரிய காலப்பகுதியின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,381,117 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி மீதியை தீர்த்து வைப்பதற்கு கம்பனியால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியதிச் சட்ட கொடுப்பனவான வருமான வரி மீதியை தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. | 2017 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 2,381,117 தொகையான செலுத்தவேண்டிய வருமான வரி மீதியை தீர்ப்பதற்காக அப்போதைய நிதி முகாமையாளரால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு எழுத்துமூல முறைப்பாடு அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஓ) | 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஊழியரினால் இழப்பீடு செலுத்தி நீக்கும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையினால் கொழும்பு தொழில் நீதிமன்றத்தில் தொழில்பிணக்குகள் தீர்த்தல் இலக்கம் A/37/2017 ஆம் தீர்மானம் மற்றும் 2018 பெப்ரவரி 02 ஆம் திகதிய தரப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த நிபந்தனைகளுக்கு இணங்கியதன் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது.<br>ஒட்டுமொத்த நிபந்தனையின் நிபந்தனை இலக்கம் 18(ஆ) இன் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திற்காக நிலுவை மேலதிக நேர படி மற்றும்/ அல்லது 2018 சனவரி வரை நிலுவை சம்பளம் செலுத்த வேண்டி இருக்குமாயின் அக்கொடுப்பனவுகள் 2018 பெப்பரவரி 28 ஆம் திகதிக்கு | இழப்பீட்டு பணம் செலுத்தும் போது உடன்பட்ட நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் உரிய கொடுப்பனவுகளுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோக | இணக்க சபை கலந்துரையாடலுக்கு முன்னாள் கம்பனியின் முகாமைத்துவம் பங்குபற்றியிருந்தது. இந்த இணக்க சபை நிபந்தனைகளில் 18 ''அ'' மற்றும் ''ஆ'' இன் கீழ் ஊழியர்களின் நிலுவையாகியிருந்த சம்பளம் செலுத்துதல் தொடர்பாக இணங்கப்பட்ட நிபந்தனைகள் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளுக்கு இணங்கும் அடிப்படை பின்வருமாறு,<br>2017 நவம்பர் மாதத்தின் 29 ஆம் திகதி சகல ஊழியர்களும் வளாகத்தில் இருந்து அகற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்து. அது வரையில் நவம்பர் மாதத்தில் வேலை ஆற்றிய காலத்திற்குரிய மேலதிக | இழப்பீடு கொடுப்பனவு மீதான கணக்கீட்டு அவதானிப்பை கணக்கெடுத்த பின்னர் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

முன்னர் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியமை இணங்கப்பட்டிருந்தது. கம்பனியினால் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக கம்பனியின் செயற்பாடுகள் செயலற்று காணப்பட்ட 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய பிரயாணச் செலவினம், தங்குமிட படிகள் மற்றும் செயலாற்றல் படிகள் மற்றும் வாகன படிகளாக ரூபா 12,211,073 தொகையான ஏனைய படிகள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் உரிய விடயங்கள் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தியதற்காக பொறுப்பு வாய்ந்ததரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்காக முகாமைத்துவம் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

த்தரிடமிருந்து அவற்றை மீள அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

படிகள் மற்றும் சம்பளம் செலுத்துதல் இடம்பெறாதிருந்தமையால் விஷேடமாக நவம்பர் மேலதிகநேர படி செலுத்துமாறு இணங்கப்பட்டிந்தது. அவ்வாறே அநேகமான ஊழியர்களில் 97 சதவீதம் அளவில் ஆரம்ப சம்பளம் ரூபா 12,000 – 20,000 இடையே காணப்பட்டது. அதனால் செயலாற்றல் படி ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நிரந்தர படியாக கம்பனியின் ஆரம்பம் முதல் செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் எரிபொருள், போக்குவரத்து, தங்குமிட படிகள் போன்றவை கம்பனியின் மத்திய மற்றும் உயர்தர முகாமைத்துவத்தின் 07 பேர்களுக்காக மாத்திரமே செலுத்தப்படுகின்றது. அந்த ஊழியர்களுக்கு கம்பனியின் மிகுதி வேலைகளைச் செய்வதற்காக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 360 ஊழியர்களுக்கு மேல் சேவையாற்றிய கம்பனியொன்று ஒரே தடவையில் வியாபார நடவடிக்கைகளை நிறுத்தினால் ஊழியர்களை விலக்குதல், இழப்பீட்டு பணம் கலந்துரையாடல், சொத்துக் கையளித்தல், ஆவணங்களை அகற்றுதல் போன்ற செயற்பாடுகளுக்காக நிறுவனத்தைப்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்கள் இருக்க வேண்டும். அந்த ஊழியர்கள் 2018.01.31 வரையும் தமது சேவையை முன்னரைப் போன்றே நிறுவனத்திற்கு வழங்குகின்றமையால் அவர்களின் சகல சமபளங்களும் செலுத்தப்படுதல் வேண்டும். | |
| (ஔ) | வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றில் கொடுப்பனவு உறுதிச் சீட்டு யாவும் தொடர் இலக்கத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அவ்வாறே சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் கணக்காய்விற்காக பூரணப்படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்டு வைப்பதற்கு உறுதிச் சீட்டுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் கண்காணித்து கொள்ள வேண்டியிருந்த போதிலும் மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட முறையே ரூபா 29,975,094 தொகைக்கும், ரூபா 4,543,395 தொகைக்கும் உரிய 123 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் 2021 மே 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை கட்டிடத்தில் இருந்து அகற்றும் போது முறையாகவும் ஒழுங்கு முறையாகவும் மேற்கொள்ளாமையினால் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியாகத்தர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அம்பாந்தோட்டை துறைமுக வளவில் சில மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட மிகவும் குறுகிய அறிவித்தலுடன் சகல ஊழியர்களையும் கோவைகள் முதலியவற்றையும் அகற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஊழியர்கள் வளவில் பலாத்காரமாக இருந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அதன் பின்புலத்தில் இந்த ஆவணங்கள் தொலைந்து போயிருந்தமை ஏககாலத்தில் ஏற்பட்டிருந்ததாக முன்னாள் தலைவரினாலும் உங்களுக்கு விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகளின் பிரதிகள் உங்களுக்குகசமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளர் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்காக தவறவிடப்பட்ட மற்றும் துண ஆவணங்களைத் பரீட்சிப்பதற்கு குழுவொன்றை நியமித்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஃ) | பெறுகை செயல்வழிக் கோவையினதும் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நோக்கங்களின் பிரகாரமும் பெறுகைகளின் போது மிகவும் சிறந்த வெளிப்படையான மற்றும் சிறந்த நிர்வாகம் ஒன்று காணப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி கண்காணித்துக் கொள்ள வேண்டிய போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோற்றியிருந்த சட்டத்தரணிகள் கம்பனிக்கு ரூபா 7,250,000 தொகை சட்ட செலவினமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த சட்டத்தரணியை தெரிவு செய்யும் போது வெளிப்படையான மற்றும் சிறந்த நிர்வாகத்துடனான முறைமையொன்று பின்பற்றப்பட்டமைக்கான தகவல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே உரிய சட்ட ஆலோசனைக் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறுகை நடவடிக்கைகளின் போது வெளிப்படையானதும், சிறந்த நிர்வாகத் திறமையுடனும் நடந்துகொள்ளுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோற்றியிருந்த சட்டத்தரணிக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. புதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் முதலாவது சந்தர்ப்பத்தின் போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட DDR 1347/19 என்ற வழக்கு தொடர்பாக பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கு 2020.08.18 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கின் வெளிப்படையான விஷேடமான தன்மை வழக்கு கோரப்பட்ட ஆரம்ப தினத்திலேயே எதிர்ப்பும் கோவையிடப்பட்டிருந்தது. அவ்வாறு இல்லையாயின் கௌரவ நீதிமன்றத்தினால் வழக்கில் கோரப்பட்டுள்ள ரூபா 4.4 பில்லியன் தொகைக்காக சட்ட ரீதியான தீர்ப்பு வெளியிடல் தீர்மானிக்கப்பட்டால் கம்பனி கடுமையான சிக்கல்களுக்கு உட்படும். அது வரையில் கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட தொகை ரூபா 1.2 பில்லியனுக்கு சமமான தொகையொன்று இருந்தமையால் ஆகும். அதன் பிரகாரம் கூடிய விரைவில் கௌரவ நீதிமன்றம் அந்த எதிர்ப்பை கோவையிடுவதற்கான தேவை ஏற்பட்டமையினால் அதற்கான | இந்தப் பணம் சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்காக எந்தக் கொடுப்பனவும் மீண்டும் செலுத்தப்படமாட்டாது. |

காலமொன்று காணப்படாதிருந்தமையால் நம்பிக்கையான மற்றும் மிகவும் விரைவாக எதிர்ப்பினை தயாரிப்பதற்காக சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் பிரதான தேவையொன்றாக இருந்தமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கூறப்பட்ட சட்டத்தரணி ஒருவரின் உதவி பெறப்பட்டிருந்தது. அதன் போது சட்டத்தரணிக்காக சட்டத்தரணி கட்டணம் முழு வழக்கு நடவடிக்கைகளுக்காகவும் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மீண்டும் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆலோசனைகள், எதிர்ப்புக்களை கோவையிடல், வழக்குகளுக்குரிய எழுத்து மூல ஆலோசனைகளை கோவையிடல், நீதிமன்றத்தில் சமூகம் அளித்தல் உள்ளடங்கலான சட்டரீதியான விடயங்கள் தொடர்பான கேள்விகள் எழுமாயின் எழுத்து மூல ஆலோசனைகளை கோவையிடல் போன்றன சட்டத்தரணிகளிற்கு செலுத்தப்பட்ட கட்டணங்களிற்குள் உள்ளடங்கும்.

## 4.72 சிலோன் சிப்பிங் கோப்பரேஷன் லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 3,324,917,174 | 4,848,058,265 | 13,672,450,365 | 13,728,113,672 | (1,523,141,091) | முனைப்பழியுள்ள |
| **2019** | 3,989,119,660 | 5,074,335,216 | 13,730,143,678 | 15,005,645,794 | (1,085,215,556) | முனைப்பழியுள்ள |
| **2020** | 3,334,544,974 | 3,861,670,002 | 12,092,519,473 | 14,134,132,967 | (527,125,027) | தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கச்சா எண்ணெய் போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கணக்கின் (சீபீசீ) ரூபா 95,420,000 மீதி கடந்த 3 ஆண்டுகளில் எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் இல்லாமல் காணப்பட்டது. கம்பனி இம் மீதியை கணக்கிணக்கம் செய்வதற்கு | இந்தக் கட்டுப்பாட்டுக் கணக்குகளை முகாமைத்துவம் இணக்கஞ்செய்யும் என்பதுடன் முரண்பாடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை | சீஎஸ்சீஎல் ஆனது சீபீசீ மற்றும் முகவருக்கு இடையில் ஒரு நடுத்தர நபராக செயற்பட்டு, இரு தரப்பினருக்கும் விலைப்பட்டியல்களை அதிகரித்துள்ளதுடன் அறவீடுகள் சேகரிக்கப்படும் போது | சீஎஸ்சீயின் சட்டத் திணைக்களத்தால் சட்டமாஅதிபதித் திணைக்களத்திற்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டிருந்தது. தற்போது ஆலோசனைச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. கணக்காய்வு பரீட்சிப்புக்களின் பிரகாரம் 2014/15 ஆம் ஆண்டில் ஈசீபீ இன்டர்நேஷனல் இற்கு செலுத்தப்பட்ட தாமதக்கட்டணத்தை அறவீடு செய்வதற்கு சீபிசீ இற்கு ரூபா 82,192,817 தொகையான 5 விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தமை குறித்துக்கொள்ளப்பட்டது. ஆனால், கம்பனி ரூபா 51,890,465 தொகையை மாத்திரம் ஈசீபீ இன்டர்நேஷனலிற்கு தாமதக்கட்டணமாக செலுத்தியிருந்ததுடன் விலைப்பட்டியல் தொகைக்கும் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான ரூபா 30,302,352 தொகையான வேறுபாடு மேற்படி மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | அதற்கேற்ப தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உங்கள் தகவலுக்கு, நிதிக்கூற்றுக்கள் மற்றும் அவர்களுக்கு வழங்க வேண்டிய இறுதி மீதிகளை நாங்கள் பிரித்தெடுக்கும் கட்டுப்பாட்டு கணக்குகள் இதுவாகும். இது எல்கேஏஎஸ் 01 இன் பிரகாரம் அறிக்கையிடுவதில் எந்த மீறலையும் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு தரப்பினருக்கும் செலுத்த வேண்டிய உண்மையான மீதிகள் சீஎஸ்சீ நிதிக்கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளன . | செய்முறையிலுள்ளது. |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் (எல்கேஏஎஸ் 01) தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அல்லது வருமானம் மற்றும் செலவினங்களை எதிரீடு செய்தல் ஏனைய எஸ்எல்எவ்ஆர்எஸ் மூலம் தேவைப்படுத்தப்பட்டால் தவிர அனுமதிக்கப்படாது. எவ்வாறாயினும், அதற்கு | நிதித் தகவலின் சரியானதன்மை, முழுமைத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். மேலும், நியமங்களால் வேண்டப்பட்டவாறு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட | நாங்கள் அதனுடன் இணங்காததுடன் எல்கேஏஎஸ் 01 இன் பிரகாரம் நாங்கள் எமது பேரேட்டுக் கணக்குகள், அனைத்து செலவினங்கள் மற்றும் வருமானம் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பேணி வருகின்றோம். தங்களது | 2021/2022 ஆம் நிதி ஆண்டிலிருந்து நாணயமாற்று மிகை மற்றும் நட்டம் அல்லது ஏனைய வருமானம் இருந்தமையால் நாணய மாற்று விகித மாற்றங்களை இனங்காண்பதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | முரணாக கம்பனி ரூபா 46,755,453 தொகையான வியாபார மற்றும் ஏனைய கடன் மீதிகளை தனித்தனியாகக் கணக்கீடு செய்திருந்த போதிலும் அவை வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய வரவு மீதிகளிற்கு எதிராக ஈடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் என்பன அத் தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | வேண்டும். | அறிக்கையின் பிரகாரம் ரூபா 46,755,453 தொகை கொள்கலன் மீளளிப்புக்களில் இருந்து பெறப்பட்டிருந்ததுடன் அவை சீஎஸ்சீ சரக்குதாரர்களுக்கு மீள்நிரப்பல் செய்யப்படும். இது எல்கேஏஎஸ் 01, பந்தி 33, 34 மற்றும் 35 ஆகியவற்றுடன் இணங்குகின்றது. | எடுத்திருந்தது. |
| (இ) | அந்நிய செலாவணி விகிதத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவு (எல்கேஏஎஸ் 21) தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 23 (அ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் இறுதியிலும், வெளிநாட்டு நாணய கண்காணிப்பு உருப்படிகள் இறுதி விகிதத்தைப் பயன்படுத்தி மாற்றப்படும். எனினும், அதற்கு மாறாக, 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 348,746,443 மற்றும் ரூபா 536,871,355 தொகையான முறையே வெளிநாட்டு வியாபார கடன்பட்டோர் மற்றும் வெளிநாட்டு வியாபார கடன்கொடுத்தோர் கொடுக்கல்வாங்கல் | நிதிக்கூற்றுக்களின் மீதிகளை மாற்றும் போது முகாமைத்துவம் இலங்கை கணக்கீட்டு நியமம் 21 உடன் (எல்கேஏஎஸ் 21) இணங்க வேண்டும். | குறித்த பெரும்பாலான கடன்பட்டோர் மீதிகள் வணிகத் துறையால் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த புள்ளிவிபரங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான நாணயமாற்று விகிதத்திற்கு மாற்றப்படுவதில்லை என முகாமைத்துவம் தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது. | இந்த வெளிநாட்டு கடன்கொடுத்தோர் 10 வருடங்களுக்கு மேலாக செயற்பாட்டிலில்லாமையால் அத்திகதியிலுள்ளவாறு மதிப்பிடாமலிருப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடம்பெற்ற திகதியில் நிலவிய அந்நேர விகிதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டது. மேலும், வெளிநாட்டு கடன்கொடுத்தோரிற்கான ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | சொத்துக்களின் நட்டக்கழிவு தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 36) இன் பிரகாரம், கம்பனி அதற்கு சொந்தமான இரண்டு கப்பல்களை மதிப்பீடு செய்து நட்டக்கழிவு காணப்படவில்லை என தீர்மானித்திருந்தது. அந்தச் செயன்முறையின் போது அடுத்த 23 ஆண்டுகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கம்பனி மதிப்பீடு செய்திருந்தது. 2020/21 ஆம் ஆண்டிற்கான திறந்த சந்தை நடவடிக்கைகளில் ஒவ்வொரு கப்பலின்தும் சராசரி ஒப்பந்த விலைவிகிதம் ஒரு நாளைக்கு ஐ.அ.டொலர் 13,754 ஆக இருந்தது. எனினும் வணிக முகாமைத்துவ கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2020 ஆகஸ்ட் வரை எம்பீ செலோன் பிறீசீ மற்றும் எம்பீ செலோன் பிறின்சேஸ் | இயன்றவரை எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தேவையானபோது நியாயமான எடுகோள்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | எம்/எஸ் கிளார்க்சன் ஆராய்ச்சி நுண்ணறிவு வாராந்த அறிக்கைகளின் அடிப்படையில் மிகவும் நம்பகரமான நியாயமான வளமூலங்களான சுப்பர்மாக்ஸ் சராசரி ஒப்பந்த வாடகை, வருடாந்த வருமானத்திற்கான எம்ரீ ஒன்றிற்கான சரக்குக் கப்பல் விலைவீதம் மற்றும் பதுங்கு குழி சரிசெய்தலுக்கான பீஎல்ஏரீரீஎஸ் பங்கர் வயர் சுட்டெண் ஆகியவை கணிப்பீட்டிற்கு எடுக்கப்பட்டன. ஆனால் கொவிட் - 19 பரவல் நிலைமையுடன் கூடிய எதிர்பாராத சூழ்நிலையால் உலகப் பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் தொற்றுநோயுடன் வரலாற்று சந்தை குறைவாகக் காணப்பட்டது. பெரும்பான்மையான நாடுகள் பூட்டுதல்களை | 2019/2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கூட இந்த விடயம் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகியவற்றிற்கான உண்மையான வருமானங்கள் முறையே ஐ.அ.டொலர் 5,893 மற்றும் ஐ.அ.டொலர் 8,236 ஆகவே காணப்பட்டது. இது உண்மையான மற்றும் எதிர்வுகூறப்பட்ட ஒப்பந்த விலைவிகிதங்களுக்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாட்டைக் காட்டியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியால் இவ் விடயம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகளில் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொண்டு இந்திய துணைக்கண்டத்தில் உள்ள பல்வேறு துறைமுகங்களில் போர்ஸ் மயெயுர் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியின் போது இரண்டு கப்பல்களும் ஒப்பந்தத்திற்காக திறக்கப்பட்டன. எம்பீ. சிலோன் பிரின்ஸ் 2020 ஏப்ரல் 19 இல் ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்டது, அந்த நேரத்தில் தென்னாபிரிக்கா முதல் இந்தியாவின் மேற்கு கடற்கரை வரை பீஎஸ்ஜ ஏசியா சுட்டெண் ஒரு நாளைக்கு ஐ.அ.டொலர் 2886 ஆக இருந்ததுடன் எம்/எஸ் கிளாக்சன் சுட்டெண் சுப்பர்மக்ஸ் அளவு ஆர்பீசீரி இற்கு ஒரு நாளைக்கு ஐ.அ.டொலர் 2,312 ஆக இருந்தது. | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, நிறுவனமானது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் திறனை மதிப்பீடு செய்ய வேண்டும். அதன் மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது | இது தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தினால், முகாமைத்துவம் அதனை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான வெளிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு கம்பனியானது 2021 யூலை 3 இல் இடம்பெற்ற அதிவிசேட வர்த்தமானிக் கூட்டத்தில் சில குறைப்பு நடவடிக்கைகளை முன்மொழிந்திருந்தது. as at 31st மீளாய்வாண்டிற்கான |

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால் அது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான நிறுவனங்களின் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும். எனினும், நிதிக்கூற்றுக்களில் இருந்து நிச்சயமற்ற தன்மைகள் ஏற்பட்ட போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நட்டங்களிற்கான பிரதான காரணமாக 2019/2020 நிதியாண்டிற்குரிய ஈஜீஎம்க்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது மீளாய்வாண்டிற்கான நட்டத்திற்கான பிரதான காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யூஎஸ்டி கடன் மீதியை ரூபா பெறுமதிக்கு மாற்றுவதன் மூலம் ஏற்பட்ட ரூபா 1,009 மில்லியன் தொகையான நாணயமாற்று நட்டம் இருந்தது எனக் காட்டியது. இந்தக்கூட்டத்தில் முகாமைத்துவமானது கப்பல் கட்டிட கைத்தொழில் சாதாரண வழக்கமுறையென்பதால் வட்டிவிகிதத்தை 7.88 சதவீதத்திலிருந்து 2 – 4 சதவீதத்திற்கு குறைப்பதை உள்ளடக்கி சாதகமான விதிகள் மற்றும் நியதிகளுடன் யூஎஸ்டி கடனை

ரூபாய் கடனுக்கு
மாற்றுவதற்கும்
கடனை
மீளப்பட்டியலிடுவதற்கு
ம் அனுமதி
கொடுத்திருந்தது.
எனினும்,
மத்திய வங்கியால்
அனுமதி
வழங்கப்பட்டிருக்காதது
டன்
கடனை
எஸ்கேஆர் க்கு
மாற்றமுடியாதிருந்தது.
கடனானது
வங்கியால் 15
வருடத்திலிருந்து 20
வருடங்களிற்கு
மீள்பட்டியலிடப்பட்டிருந்
தது.
ஆனால்,
வட்டிவீதமானது
எதிர்பார்க்கப்பட்டவாறு
2–4
சதவீதத்திற்கு
குறைக்கப்பட்டிரு
க்காததுடன் 5.25
சதவீத + 6 மாத
லைவோ
குறைக்கப்பட்டிருந்தது.
ஆகையால்,
259/2021/151 ஆம்
சுபை தீர்வின்
பிரகாரம்,
யூஎஸ்டி இலிருந்து
ஏல்கேஆர் இற்கு
கடனை மாற்றுவதற்கு
முன்னர் மற்றும்
பின்னர்
தோன்றுகின்ற
காசுப்பாய்ச்சலை

அடிப்படையாகக்
கொண்ட பிரதான
நட்ட குறைப்புக்
காரணி
வெற்றியளிக்கவில்லை.
மேலும், 2020 நவம்பர்
17 இன்
அமைச்சரவையின்
தீர்மானத்தின்
பிரகாரம்,
கடன்
செய்முறைக்கு
மீள்நிதியிடல் 2022
சனவரி 21
வரையிலும்
பூர்த்தியடைந்திருக்கவி
ல்லை.
இலங்கையின்
கொடிப்பதிவை
ஊக்குவித்தல்,
மிதக்கும்
பதிங்கு
குழிவினை
செயற்படுத்தல்,
நுரைச்சோலையில்
பயணிகளின்
போக்குவரத்திற்காக
படகினையும்
கார்கோ இனையும்
கட்டியெழுப்பல்,
பங்களாதேஸ்
கப்பற்துறை
கூட்டத்தாபனத்துடன்
இணைந்து கொழும்பு
மற்றும்
பங்களாதேஸ்
இற்கு
இடையில்
ஊட்டிச்
சேவையினை
செயற்படுத்தல்
மற்றும்

கச்சா எண்ணெயின் கடல் போக்குவரத்திற்காக உள்நுழைவதற்கு டேங்கர் கப்பலை அந்த நேரத்தில் அல்லது வெற்றுக்கப்பலை சாசன அடிப்படையில் வாடகைக்கெடுத்தல் போன்ற நீண்டகால வளர்ச்சியை அடைவதிலுள்ள வணிக தந்திரோபாயங்களாக வுள்ள வணிகத்தை விரிவு ஆக்குவதற்கான ஏனைய பிரேரணைகள் அமுல்படுத்தப்பட்டிருக் கவில்லை.

## 4.73 நோர்த்சீ லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 383,791,242 | 394,688,954 | 456,729,008 | 418,731,312 | (10,897,711) | முனைப்பழியுள்ள |
| **2019** | 258,829,633 | 376,990,294 | 366,679,295 | 471,140,734 | (118,160,662) | மறுப்பு |

**2020** நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2001 நவம்பர் இலிருந்து 2019 திசெம்பர் வரைக்கான வற் மற்றும் என்பீரீ போன்ற நியதிச்சட்ட கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 212,299,019 | தேவையற்ற தண்டப்பணக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் உரிய வரிச் சட்டங்களுடன் | பெறுமதி சேர் வரியை செலுத்தாததற்காக கம்பனி எந்தவொரு தண்டப்பணத்தையும் செலுத்தியிருக்காததுடன் அதனை விட்டுவிடுவதற்கு நிதி அமைச்சிற்கு மேன்முறையீடு | பொறுப்புக்கள் நிறுத்துவதற்கு அமைச்சரவை ஞாபகார்த்தல்களை சமர்ப்பித்தல் செயன்முறையிலுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகையானது ஒட்டுமொத்த நிலுவையாகவிருந்தது. மேலும், குறித்த காலத்தில் கம்பனி வற் மற்றும் என்பீரீயினை செலுத்தாமையால் கம்பனியானது ரூபா 34,677,273 தொகையான தண்டப்பணக் கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது. | இணங்குதல் வேண்டும். | அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வீரவில மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கம்பனியின் தொழிற்சாலைகள் மற்றும் நிரந்தர கட்டிடங்கள் ரூபா 11,247,881 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமைத்துவமானது கம்பனியின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை அல்லது மாறாக கம்பனிக்கு காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஏற்படும் ஏதேனும் சட்டச் சிக்கலைத் தவிர்ப்பதற்கும் அதே வளாகத்தில் முதலீடு மற்றும் வணிகத்தைத் தொடர்வதைப் பாதுகாப்பதற்கும் காணியின் உரிமைத்துவத்தை கம்பனியின் பெயருக்கு மாற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நோர்த்சீ லிமிட்டட்டின் தற்போதைய முகாமைத்துவம் யாழ்ப்பாணம் மற்றும் வீரவில தொழிற்சாலைகளின் காணிகளின் உரிமைத்துவம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். | நோர்த்சீ லிமிட்டட்டிற்கு காணியை மாற்றுவதற்குரிய பேச்சுவார்த்தையில் ஈடுபடும் செய்முறையில் நாங்கள் உள்ளோம். |
| (இ) | கம்பனி 2018 இல் ரூபா 3,076,305 அரசாங்க மானியத்தை செலவிட்டு லுனுவில தொழிற்சாலைக்கு கழிவு நீர் முறைமையைக் கொள்வனவு செய்திருந்ததுடன் பின்னர் 2019 இல் அதற்காக ரூபா 2,531,801 செலவிடப்பட்டது. எனினும், பொறி செயலற்ற நிலையில் உள்ளதுடன் 2021 மே 31 வரையிலும் செயற்படவில்லை. | இந்த விடயம் தொடர்பான விசாரணைக்குப் பின்னர் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக முகாமைத்துவம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கம்பனி கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி செயற்படாதமைக்காக அது தொடர்பான ஏறத்தாழ ரூபா 7.3 மில்லியன் தொகையான செயலாற்றல் பிணைமுறியை காசாக்கியிருந்ததுடன் பகுதியளவு பணத்தை அறவீடு செய்திருந்தது. இந்தச் சொத்து முன்னைய | இது இராசயான கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிமுறை இன்மையால் இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால், பணமானது பிணைமுறியின் செயலாற்றலை காசாக்குவதன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முகாமைத்துவத்தால் நிறுவப்பட்டதுடன் அதன் செயற்படாத நிலைமைக்கு அவர்களே பொறுப்பாவார்கள். | மூலம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | பங்கு வழங்கல், 5 ஆம் பிரிவின் கீழ் கம்பனியொன்றை கூட்டிணைத்த உடனேயே, கம்பனி அந்த நபருக்கு உரித்துள்ள பங்கை இணைப்பதற்காக விண்ணப்பத்தில் பெயரிடப்பட்ட ஒவ்வொரு பங்குதாரருக்கும் வழங்க வேண்டும். கம்பனி பங்குகளை வழங்கியிருந்த போதிலும் 2001 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டு, கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப்பதிவு செய்யப்பட்டதால் அதன் பங்குதாரர்களுக்கு பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பங்குச் சான்றிதழ்கள் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும். | கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து 2014/15 நிதியாண்டு வரை ரூபா 700.00 கூறப்பட்ட மூலதனத்தை கொண்டிருந்தது, இது ஏழு பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொன்றும் ரூபா 100 ஆன ஏழு பங்குகளைக் உள்ளடக்கியிருந்தது. பின்னர், இது 2015/16 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்டு, சொத்துக்கள் கூறப்பட்ட மூலதனமாக மாற்றப்பட்டது. முன்னைய முகாமைத்துவம் எந்தவொரு பங்குச் சான்றிதழையும் வழங்கியிருக்கவில்லை, அத்துடன் இந்த விடயத்தில் எங்களுக்கு வழிகாட்டுமாறு பொதுத் திறைசேரிக்கு கோரிக்கையொன்றை அனுப்பியிருந்தோம், ஆனால் எங்களுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. | எந்தவொரு பங்குச்சான்றிதழ்களும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2018 ஆம் ஆண்டில் அரச வங்கியிடமிருந்து எல்சி கடன் பெறப்பட்டதன் காரணமாக 2018 முதல் 2020 யூலை வரையான காலப்பகுதி தொடர்பாக ஏற்பட்ட ரூபா 14,420,368 தொகையான வட்டிச் செலவினம் | முகாமைத்துவம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய செலவினங்களை இனங்கண்டு | ஆண்டு ரீதியான இறக்குமதி கடன் வட்டி விபரங்களின் சரியான பிரித்தெடுப்பை இலங்கை வங்கி எங்களுக்கு வழங்கியிருக்காததுடன் | இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறை காலப்பகுதியில் செலவினங்களாகக் காட்டப்பட்டிருந்தன, ஆகையால் ஆண்டுக்கான தேறிய நட்டம் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும், ரூபா 56,399,310 நிலுவைக்கடனிற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வு இறுதியாக்கும் வரை பெறப்பட்டிருக்கவில்லை. | இலாபம்/ நட்டம் மற்றும் சொத்துக்கள்/ பொறுப்புகளை அதிகரித்தோ அல்லது குறைத்தோ காட்டுவதை தவிர்க்கும் வகையில் நிதிக்கூற்றை தயாரிக்க வேண்டும். | 2018/19 ஆம் ஆண்டிற்கான தொடர்புடைய நிதிக்கூற்றுக்களில் 2018/19 ஆம் ஆண்டிற்கான இறக்குமதி கடன் வட்டி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக மார்ச் 16 முதல் மே 11 வரை கம்பனி மூடப்பட்டதன் காரணமாக கணக்குகளை மூடுதல் தாமதமானதால் 2020 யூலையில் கணக்குகள் மூடப்பட்ட திகதியில் உள்ள முழு வட்டியும் 2019/20 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கிறது. 2020/21 ஆம் நடைமுறை ஆண்டில் இந் நிலைமை சீர்செய்யப்பட்டு அதற்கிணங்க இறக்குமதி கடன் வட்டி அறவிடப்படும். | |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 20 இன் பிரகாரம் நியாயமான பெறுமதியில் காசற்ற மானியங்கள் உட்பட சொத்துக்கள் தொடர்பான மானியங்கள் நிதி நிலைமைக் கூற்றில் பிற்போடப்பட்ட வருமானமாக மானியங்களை நிர்ணயிப்பதன் மூலமாகவோ அல்லது சொத்தின் தொகையைக் கழிப்பதன் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு முரணாக கம்பனியானது சொத்துக்களிற்குரிய பயன்தரு ஆயுட்காலத்தை கருத்தில் | நிதிக்கூற்றுக்களில் எல்கேஏஎஸ் பின்பற்றப்படுகிறது என கம்பனி குறிப்பிட்டுள்ளது. அதற்கிணங்க எல்கேஏஎஸ் 20 இல் குறிப்பிடப்பட்டுள்ள | அரசாங்க மானியமானது திருப்பிச் செலுத்தப்படாததால் 2015/16 நிதியாண்டு முதல் 2019/20 நிதியாண்டு வரை மூலதனமாக வகைப்படுத்தப்பட்டது. ஆகையால் நாங்கள் மானியத்தை ஏற்கனவே பயன்படுத்தியுள்ளதால் நடைமுறையல்லா | 2020/2021 இற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| கொள்ளாமல் 2018/2019 இல் ரூபா 103,500,000 தொகையும் 2016/2017 இல் ரூபா 99,968,373 தொகையுமான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட சொத்துக்களிற்குரிய மொத்த அரசாங்க மானியங்கள் காலக்கழிவிடப்பட்டிருந்ததுடன் அறிக்கையிடும் திகதி வரை இத் தவறு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டின் பிரகாரம் அரசாங்க மானியங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பொறுப்பின் கீழ் அதனை பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதுவது நடைமுறையில் இல்லை. மேலும், கணக்காய்வாளர்கள் 2015/16, 2016/17, 2017/18 மற்றும் 2018/19 நிதியாண்டுகளில் மானியத்தின் கணக்கீட்டை அங்கீகரித்திருந்ததுடன் சர்வதேச நியமங்கள் மானியத்தை மூலதன மானியங்களாக கருதப்படுவதற்கு அனுமதிக்கின்றன. எனினும், அரசாங்க மானியத்தின் வகைப்படுத்தல் திறைசேரி பிரதிநிதிகளால் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன் எல்கேஏஎஸ் 20 இற்கு இணங்குமாறும் அதனை பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதி நடைமுறையல்லாத பொறுப்பாக வகைப்படுத்துமாறும் நாங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டோம். 2020/21 நிதியாண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் அரசாங்க மானியத்தின் வகைப்படுத்தல் சீர்செய்யப்பட்டு, மானியமானது நடைமுறையல்லா பொறுப்பின் கீழ் பிற்போடப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருமானமாக வகைப்படுத்தப்படும் என இணங்கப்பட்டது. | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முகாமைத்துவம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்கான நிறுவனத்தின் இயலுமையை மதிப்பீடு செய்து ஏதேனும் பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகள் காணப்பட்டால் அவற்றை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு முரணாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதிலும் அவை குறிப்புகளாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிகும் நேரத்தில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை முகாமைத்துவம் நியமங்களுக்கு இணங்கக் கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு கம்பனியின் உண்மையான நிலைமையை சுட்டிக்காட்ட வேண்டும். | நோர்த்சீ லிமிட்டட்டானது 100 சதவீத திறைசேரிக்குச் சொந்தமான கம்பனியாக உள்ளதுடன் இது தொடக்கத்திலிருந்தே நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டுள்ளது. கூட்டிணைந்த திட்டத்தில் எமது பிரச்சனைகளைக் குறிப்பிட்டுள்ளதுடன் அதனை வெற்றிகொள்வதற்கு முயற்சித்து வருகின்றோம். | 2020/2021 இற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு, பெறுகைத் திட்டம், மனித வளத் திட்டம், மீள்கொடுப்பனவுத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் உள்ளடங்கலாக அடுத்த நிதியாண்டில் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய வணிகச் செயற்பாடுகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அத்தகைய செயல்நடவடிக்கைத் திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் உரிய சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கி கம்பனியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். | 2019/2020 ஆம் ஆண்டில் நாங்கள் எந்தவொரு மானியத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதாலும் அமுல்ப்படுத்தப்படுவதற்கு குறித்துரைக்கப்பட்ட வணிகச் செயற்பாடு எதனையும் கொண்டிருக்காததாலும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டம்,பாதீடு, பெறுகைத்திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மனித வளத்திட்டம் இறுதியாக்கும் செய்முறையிலுள்ளது. |

## 4.74 மாந்தை சோல்ட் லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 170,096,004 | 128,359,827 | 302,344,046 | 108,470,777 | 41,736,177 | முனைப்பழியுள்ள |
| **2019** | 115,888,547 | 103,590,304 | 296,506,131 | 89,836,529 | 12,298,244 | முனைப்பழியுள்ள |
| **2020** | 218,204,048 | 148,035,518 | 350,461,990 | 86,973,075 | 70,168,530 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு முறையே மன்னார் உப்பளத்தில் ரூபா 7,012,838 இற்கு சமமான 1,243.4 மெற்றிக் தொண் மற்றும் ரூபா 4,959,911 இற்கு சமமான 797.7 மெற்றிக் | இருப்புக்களை பேணுவதில் சரியான தன்மையை பேணுவதற்கு சரக்குகளின் மதிப்பீட்டில் தொழில்துறை நடைமுறையை | பெறப்பட்ட உப்பு தட்டையான வடிவத்தில் வைக்கப்பட்டவுடன் அது முக்கோணக் கற்றைகளில் ஊழியர்களால் வடிவமைக்கப்பட்டு, கீழே உள்ள விஞ்ஞானவியல் | பெறப்பட்ட உப்பை அளவிடுவதற்காக பயன்படுத்தக்கூடிய நியம செயற்பாட்டு செய்முறையினை நாங்கள் தயாரித்திருந்தோம். மேலும், உப்பள முகாமைத்துவத்துடன் |

தொண் உப்பு இருப்பு பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் இருப்பு பற்றாக்குறைக்கான காரணங்களை விசாரணை செய்து இருப்பு பற்றாக்குறையை நிதிக்கூற்றுக்களில் சீர்செய்வதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

முகாமைத்துவம் பயன்படுத்த வேண்டும். மேலும், கம்பனி எஸ்எம்ஈ (SME) க்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் (SLFRS)இன் 3.19 இ (ii)

இன் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

சூத்திரத்தைப் பயன்படுத்தி நிறை கணிப்பிடப்படும்.

நிறை = பெறுமதி X அடர்த்தி

நிறை = (HXBXL) உப்பின் அடர்த்தி

குவியலில் உள்ள உப்பின் அளவைப் பொறுத்து உப்பின் அடர்த்தி மாறுபடும் என்பது இந்த அளவீட்டின் பலவீனமாகும். மேலும் அழுத்தத்தின் விளைவாக அக் காலப்பகுதி முழுவதும் குவியலின் உச்ச அளவு கீழே வரும்.

எனவே இந்த முறைகள் கடினமான முறைகளாகவும் கருதப்படுகிறது.

கம்பனியானது

வேலைச்செய்முறையினை அளவிடமுடியாமலிருந்தமையால் (உப்பு நீரில் உப்பு உருவாக்கியமையால்) உப்பு உற்பத்திச் செய்முறையின் தன்மையினால் வேலைச்செய்முறையை இனங்காணமுடியாத நிலையிலிருந்தது.

இணைந்து உள்ளகக் கணக்காய்வுக் குழு உப்பின் அடர்த்தியை அளவிட்டது. இது எதிர்கால இருப்பு அளவீட்டில் பயன்படுத்தப்படும்.


எதிர்காலத்தில் இருப்புப் பற்றாக்குறை இருக்காது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கூறப்பட்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 42,900,000 பெறுமதியான காணியின் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட காணிகளின் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்தும் முறையான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உப்பள வரலாற்றின் பிரகாரம் அனைத்து உப்பளங்களும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்பட்டு லங்கா சோல்ட் லிமிட்டட்டிற்கு மாற்றப்பட்டன. புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள உப்பளங்கள் 1994 இல் தனியார் மயமாக்கப்பட்டன, லங்கா சோல்ட் லிமிட்டட்டின் வாரிசாக வட மாகாணத்தில் உள்ள உப்பளத்தை கையேற்பதற்காக 2001 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் சொந்த கம்பனியாக மாந்தை சோல்ட் லிமிட்டட் உருவாக்கப்பட்டது. உப்பளங்கள் அனைத்தும் அரச காணியாக இருந்ததால் அரச சொத்தாக அது உருவாகும் போது காணி பெறுமதி கணக்குகளில் பதிவு செய்யப்பட்டது. 2012 இல் உற்பத்தி காலாவதியானதன் காரணமாக காணி பயன்பாட்டில் இல்லாத போது குத்தகை செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக கம்பனி குத்தகை அனுமதிக்கு பிரதேச செயலாளரிடம் விண்ணப்பிக்கவில்லை. | குத்தகைக் கொடுப்பனவிற்காக அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து காணியினை மதிப்பிடுவதற்காக செய்முறையில் கம்பனியுள்ளது.<br><br>உப்பளப்பிரதேசத்தினுள் ஏற்பட்ட அத்துமீறலால் மதிப்பீடு தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மன்னார் உப்பளமும் மேற்படி விளக்கத்தின் கீழ் வருகிறது. அதேநேரம் கம்பனி குத்தகை அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளதுடன் அனுமதி விரைவில் வழங்கப்படும். | |
| (இ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகளின் வழிகாட்டல்கள் தொடர்பான 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.1 ஆம் பந்தியின் பிரகாரம், மனித வள முகாமைத்துவம் தொடர்பான அத்தியாயத்தை ஒன்றிணைத்து, மனித வள முகாமைத்துவம் தொடர்பான அனைத்து விடயங்களிலும் விதிகள் மற்றும் பிரமாணங்களை வழங்குவதன் மூலம் பெறுகை கைநூலை கம்பனி தயாரிக்கத் தவறியிருந்தது. | கம்பனி மனித வள முகாமைத்துவ நடைமுறைகள் உள்ளடங்கிய செயன்முறை கையேட்டைக் கொண்டிருக்க வேண்டும். | கம்பனி படிப்படியாக நிறுவனத்திற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. | எஸ்எல்ஏஜடிஏயிடமிருந்தான ஆலோசனை சேவைகள் இது தொடர்பில் பெறப்பட்டிருந்தது.. |
| (ஈ) | 2006 ஆம் ஆண்டு அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை விபரமாக உள்ளடக்குவதன் மூலம் குறைந்தபட்சம் 03 ஆண்டு காலப்பகுதிக்கு திட்டமிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக் கால அட்டவணையை கம்பனி தயாரிக்க தவறியிருந்தது. | பெறுகை வழிகாட்டலைப் பின்பற்றுவதற்கு முகாமைத்துவம் பிரதான பெறுகைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். | குறைந்தபட்சம் மூன்றாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ள கூட்டிணைந்த திட்டத்தின் அடிப்படையில் கம்பனி வருடாந்த பெறுகை திட்டத்தைத் தயாரிக்கிறது. எதிர்காலத்தில் கூட்டிணைந்த திட்டத்திலிருந்து தனித்தனியாக பிரதான பெறுகைத் திட்டத்தை வைத்திருத்தல் கருத்தில் கொள்ளப்படுகிறது. | பெறுகைத்திட்டம் 3 வருடங்களிற்காக தயாரிக்கப்பட்டு வருவதுடன் இப்போது 2022 தொடக்கம் 2025 இற்காக தயாரிக்கின்றது. |

## 4.75 இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் மதியுரைச் சேவைகள் (தனியார்) கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 97,602,996 | 82,211,903 | 248,065,387 | 85,045,314 | 15,391,094 | முனைப்பழியற்ற |
| **2019** | 102,966,275 | 89,177,127 | 244,548,244 | 76,235,429 | 13,789,148 | முனைப்பழியுள்ள |
| **2020** | 96,040,842 | 86,103,586 | 325,409,594 | 156,753,350 | 9,937,256 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான (எஸ்எல்பீஏ) Mc Cullum Lock gate வளாகமானது 2018 பெப்ரவரி 01 தொடக்கம் ஐந்து வருடங்களுக்காக குத்தகை | கம்பனிக்கு ஏதேனும் அறவிடமுடியாக் கடன் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக மீளளிக்கக்கூடிய | கம்பனி மீளளிக்கக்கூடிய வைப்பு மீதியைப் பெற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் | கொவிட் 19 பரவல் காரணமாக ஒப்பந்தகாரரின் அடிக்கடியான பிரயாண தடைகள் போன்றவற்றினால் உணவகத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கையொன்றை 2018 ஏப்ரல் 10 இல் கம்பனி கைசாத்திட்டதன் மூலம் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைதாரர் உடன்படிக்கையை நிறைவேற்றும் போது ஆறு மாத குத்தகை வாடகையின் மதிப்பீட்டுக் கட்டணம் மற்றும் வைப்பை ரூபா 3,150,000 இற்கு சமமான மீளளிக்கக்கூடிய வைப்பாகச் செலுத்த வேண்டிய போதிலும் குத்தகைதாரர் ரூபா 1,811,250 தொகையை மாத்திரமே மீளளிக்கக்கூடிய வைப்பாக வைப்புச் செய்திருந்ததுடன் குத்தகைதாரர் ஆண்டின் போது உடன்படிக்கையை முடிவுறுத்தியிருந்த அதேநேரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,279,263 தொகை நிலுவையாக காணப்பட்டது. | வைப்பு மற்றும் ஏனைய இணங்கப்பட்ட கொடுப்பனவை உரிய நேரத்தில் சேகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொற்றுநோய்களின் பின்விளைவுகள் என இரண்டு பெரிய கறுப்பு ஸ்வான்ஸால் (major black swans) இத் தன்மையிலான வணிகங்கள் மிகவும் பாதிக்கப்பட்டதால் கம்பனி பொறுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், பெறவேண்டியவைகளை இயன்றளவு விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். | பராமரிக்கமுடியாதிருந்தது என ஒப்பந்தகாரரால் அறிவிக்கப்பட்ட பின்னர் 2021 செப்தெம்பர் இலிருந்து ஒப்பந்தகாரர் இடங்களை கைப்பற்றிக்கொண்டிருந்தனர். எனினும், கம்பனி அவர்களிடமிருந்து அறவிடவேண்டிய வரிகள் நிலுவையை அறவிடும் செய்முறையில் தற்போதுள்ளது. அதற்கு மேலதிகமாக, ஒரு தரப்பினர் நியம விலைமனு செயன்முறையின் கீழுள்ள இடங்களில் உணவகமொன்றை நடாத்துவதற்கு பத்திரிகை விளம்பரமொன்றினூடாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் இலிருந்து அந்த இடங்கள் புதிய தரப்பினருக்கு மீள் குத்தகைக்கிடப்படும். |
| (ஆ) | காலி முகத்திடல் பசுமையின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கம்பனியால் கைச்சாத்திடப்பட்ட | எதிர்காலத்தில் ஏதேனும் சட்டச் சிக்கல்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு உடன்படிக்கை முறையாக | உடன்படிக்கையை கையொப்பமிடும் செயன்முறையை விரைவுபடுத்துமாறு SLPMCS பலமுறை SLPAயிடம் கோரிக்கை விடுத்திருந்தது. | புதிய உடன்படிக்கையினை அணுகுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கை 2019 பெப்ரவரி 09 இல் காலாவதியாகியிருந்ததுடன் இது 2021 மே 31 வரை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கைச்சாத்திடப்பட வேண்டும். | எனினும், 2020.06.17 ஆம் திகதிய உபதலைவரின் (SLPA) கடிதத்தின் மூலம் வளாகத்தை நிர்வகிப்பதற்கான உரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2017 மார்ச் 28 இல் எழுத்துமூலமான உடன்படிக்கையின்றி காலி முகத்திடல் பசுமையில் உணவுக் கடைகளை அமைப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு காணித் துண்டொன்று குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அக் கம்பனியிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள ரூபா 1,635,000 வாடகை காணப்பட்டதுடன் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட மீளளிக்கத்தக்க வைப்பு ரூபா 900,000 ஆகும். | பெறவேண்டியவை களை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | இந்த இடம் டைன்மோ (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கை ஏற்கனவே முடிவுறுத்தப்பட்டதுடன் பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை கம்பனி எடுக்கும். | இந்த விடயங்களிற்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று இங்கு உள்ளது. கம்பனியின் சட்ட ஆலோசகர் இந்தத் தொகையினை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமர்த்தப்பட்டிருந்தனர். |
| (ஈ) | காலி முகத்திடலில் விற்பனை செய்பவர்களிடமிருந்து வருமானத்தை சேகரிப்பதற்காக கம்பனி முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை கொண்டிருக்காததுடன் 2020 மற்றும் முன்னைய ஆண்டுக்காக சேகரிக்கப்படாத நிலுவை மீதிகள் முறையே ரூபா 5,898,125 மற்றும் ரூபா 5,301,077 ஆக காணப்பட்டன. | காலிமுகத் திடலின் விற்பனையாளர்களிடமிருந்து வருமானத்தை சேகரிப்பதற்கு முகாமைத்துவம் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும். | இந்த விற்பனையாளர்கள் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவர்கள் பரம்பரை அடிப்படையில் தொழில் செய்து வருகின்றனர். எனினும், இக் காலப்பகுதியின் போது இலங்கை கடற்படை மற்றும் எஸ்எல்பீஏ மூலம் | மீள்கட்டமைப்புச் செயன்முறை ஏற்கனவே ஆரம்பித்திருந்ததுடன் பழைய கடைகள் அகற்றப்பட்டுக் கொண்டுள்ளதுடன் கடைகள் புதிய நிலைமையுடன் மீள்கட்டியெழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நிர்மாண வேலைகள் முடிவடைந்ததும் புதிய |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | வளாகங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டில் சரியான திட்டத்தின் பிரகாரம் விற்பனையாளர்களை முறைமைப்படுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | மீள்நிர்மாணத்தின் கீழ் இந்த வேலையை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. |
| (உ) | காலிமுகத் திடல் பசுமையில் உள்ள நிலத்தடி உணவகம் 2017 யூன் 01 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு உடன்படிக்கை ஒன்றின் மூலம் 2017 மே 19 இல் தனியார் தரப்பினரொருவரிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் பின்னர் இணங்கப்பட்ட நிபந்தனைகள் 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாற்றப்பட்டது. இணங்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 1,500,000 இற்கு சமமான முன்று மாத குத்தகை வாடகை கம்பனிக்கு மீளளிக்கக்கூடிய வைப்பாக வைக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி 2020 திசெம்பர் 31 வரையிலும் அத்தகைய வைப்பை பெற்றிருக்கவில்லை. | உரிய தரப்பினர்களிடம் இருந்து உரிய காலத்தில் பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனி மீளளிக்கக்கூடிய வைப்பு மீதியைப் பெற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தொற்றுநோய்களின் பின்விளைவுகள் என இரண்டு பெரிய கறுப்பு ஸ்வான்ஸால் இத் தன்மையிலான வணிகங்கள் மிகவும் பாதிக்கப்பட்டதால் கம்பனி பொறுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், பெறவேண்டியவைகளை இயன்றளவு விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். | தற்காலத்தில் பணம் தவணைக்கட்டணங்களில் சேகரிக்கப்பட்டுவருகின்றது. |
| (ஊ) | கம்பனி வருடாந்த பொருள் கணிப்பீட்டு மெய்மையாய்வை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், முகாமைத்துவம் அதன் சொத்துக்களை | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டில் வருடாந்த பொருள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | | மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2020 மே 28 வரையிலும் கம்பனியின் நீண்டகால இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற கூட்டிணைந்த திட்டம் இன்னும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால இலக்குகளுடன் கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை என்பன திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இயக்குனர் சபையால் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அனுமதிக்கப்பட்டிருந்தது. | பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு அறிக்கைகள் ஊடாக காலி முகத்திடல் பகுதியில் செயற்படுகின்ற வியாபாரிகளிமிருந்து வருமானத்தை சேகரிப்பதை முறைமைப்படுத்துவதற்கான தேவையை கம்பனி அறிந்திருந்த போதிலும் வியாபாரிகளுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல் போன்ற முறையான நடைமுறைகள் 2022 மே 31 வரை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | வளாகங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபரிகளுடன் முறையான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவ் வணிகர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடைமுறையில் மிகவும் சிக்கல் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. | புதிய மீள்கட்டமைப்பின் கீழ் காலி முகத்திடத்தில் செயற்படுகின்ற அனைத்து வணிகங்களுடன் குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்படும். |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்தான (தொடர்புபட்ட தரப்பினர்) ரூபா 165,254,816 வியாபார பெறவேண்டியவையை கம்பனி காட்டியிருந்த போதிலும் துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய வியாபாரமாக ரூபா 13,496,949 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது, ஆகையால் ரூபா 151,757,868 ஆன குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்பட்டது. 2021 யூன் 30 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டியவை ரூபா 214,992,582 வரை அதிகரித்திருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் எந்த முரண்பாடுகளையும் தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் காலரீதியாக தொடர்புபட்ட தரப்பினருடன் மீதியை கணக்கிணக்கம் செய்ய வேண்டும். | எஸ்எல்பிஎம்சீஎஸ் ஆனது சேவையைப் பெற்ற எஸ்எல்பீஏ இன் குறிப்பிட்ட பிரிவுக்கு தொடர்ந்துவரும் மாதத்தில் சேவைகளுக்கான விலைப்பட்டியல்களை எஸ்எல்பீஏ இற்கு சமர்ப்பிக்கின்றது. எமது புரிந்துகொள்ளலின் பிரகாரம் அந்த ஆவணங்களை உரிய பிரிவிலிருந்து நிதிப் பிரிவுக்கு அனுப்புவதற்கு சிறிது நேரம் எடுக்கும், இது இந்த சிக்கலை விளைவித்திருக்கலாம். மேலும் நாங்கள் இது தொடர்பாக எஸ்எல்பீஏ இற்கு எழுத்துமூலமும் தெரிவித்துள்ளோம். எனினும் எஸ்எல்பீஏ இன் மீதிகள் எமது அதிகார எல்லைக்கு உட்பட்டவை அல்ல. அத்துடன் நாங்கள் எமது மீதிகளிற்கு மாத்திரமே உறுதியளிக்கிறோம். | 2021 இல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது துறைமுக அதிகாரசபையுடன் இந்த விடயம் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் மீதிகளை திருத்துவதற்கான வேலை போய்கொண்டிருக்கின்றது. |

## 4.76 லங்கா கோல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 41,470,171,433 | 41,482,629,437 | 5,849,612,288 | 5,750,518,006 | 0 | முனைப்பழியுள்ள |
| **2019** | 42,470,160,495 | 42,480,493,670 | 3,677,721,659 | 3,578,627,377 | 0 | முனைப்பழியுள்ள |
| **2020** | 41,000,383,219 | 41,008,538,055 | 6,546,358,988 | 6,439,389,706 | 0 | முனைப்பழியுள்ள |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 41,470.17 | 41,482.63 | 5,849.61 | 5,750.52 | - |
| 2019 | 42,470.16 | 42,480.49 | 3,677.72 | 3,578.63 | - |
| 2020 | 41,000.38 | 41,008.54 | 6,546.36 | 6,439.39 | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனி நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பேணவில்லையென்பதையும் | கம்பனியானது நிலையான சொத்துப் | கம்பனியால் பரிந்துரைகள் அமுல்படுத்தப்ப | இருப்பு கணிப்பீட்டிற்கு மேலதிகமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்துக்களின் பட்டியல் MS Excel இல் பராமரிக்கப்பட்டதுடன் இது அதிகாரபூர்வமற்ற கொடுக்கல்வாங்கல்கள் இடருக்கு சாத்தியமுள்ளது என அவதானிக்கப்பட்டது. நிலையான சொத்துப் பதிவேடு இலத்திரனியல் உபகரணத்தின் தொடர்ச்சியான இலக்கங்களை கொண்டிருக்காதன் வினைவால் சொத்துக்களின் பூர்த்தியாக்கலினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பதிவேட்டினை பேணவேண்டுமென்பதுடன் நிலையான சொத்துக்களைப் பராமரிக்கையில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்த வேண்டும். | ட்டிருக்கவில்லை. | கம்பனியானது கணக்காய்வாளர்களால் பரிந்துரைத்த நிலையான சொத்துப் பதிவேட்டை பராமரித்தது. |
| (ஆ) | கம்பனியானது விநியோகிக்கும் பற்றுச்சீட்டுக்களிற்காக தொடர்ச்சியான பற்றுச்சீட்டு இலக்கத்தொடருடன் முன்அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டுப் படிவங்களை பயன்படுத்துவதில்லை. ஆகையால், பற்றுச்சீட்டினை பதிவுசெய்தலின் பூர்த்தியாக்கலினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கம்பனியானது பற்றுச்சீடு போடுதல் தொடர்பில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்த வேண்டும். | தொடர்ச்சியான பற்றுச்சீட்ட இலக்கத் தொடர் அறிமுகப்படுத்தவில்லை. | இறுதி வரிப் பற்றுச்சீட்டானது எல்சீசீ ஆல் நகர்தல் இலக்கத்தை குறிப்பிட்டு விநியோகிக்கப்பட்டது. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ் 12)<br><br>வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆம் பந்தியின் பிரகாரம் 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான பொருளாதார சேவைக் கட்டணத்திற்குரிய (ஈஎஸ்சீ) ரூபா 159,549,619 மதிப்பீடு தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அவை | இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் கம்பனி இணங்க வேண்டும். | பேச்சுவார்த்தைகள் செயன்முறையிலுள்ளது. | 2021 நிதி அதிகாரச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஈஎஸ்சீயை மற்றும் உரிய தண்டப்பணங்களை இல்லாமல் செய்வதற்கு ஐஆர்டியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பாக விதிக்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 75,461,644 தொகையாகும். | | | |
| (ஈ) | வருமானம் தொடர்பான இலங்கைக் கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ் 18)<br><br>நிலக்கரியினை இறக்குமதி செய்யும் போது, உண்மையில் ஏற்படாததாகக் காணப்படுகின்ற சுங்க நோக்கத்திற்காக பெறுமதியினை நிர்ணயிக்கையில் உத்தேச சரிப்படுத்தலொன்றாக சுங்க புள்ளியில், பெறுமதிக்கு 10 சதவீத இலாபமொன்று சேர்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், கம்பனி வருமானத்திற்கு ரூபா 3,653,155,934 தொகையான அவ்வாறான 10 சதவீத இலாபத்தினை சேர்த்திருந்ததுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கு கழிவாக அவ்வாறான தொகையினை வழங்கியிருந்ததுடன் விற்பனைக் கிரயத்திற்கு சாட்டியிருந்தது. இதன் விளைவாக விற்பனைக் கிரயம் மற்றும் வருமானம் சமமான தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | கம்பனியானது குறித்த விடயம் தொடர்பில் ஐஆர்டி வழிகாட்டல்களைப் பெறுவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | ஐஆர்டி வழிகாட்டல்கள் பெறப்பட்டிருக்க வில்லை. | வருமானத்தை உள்ளடக்குகின்ற 10% பெயரளவு இலாபத்தினை அகற்றுவதன் மூலம் வெளிவாரி வற் இனை கணிப்பிடும் சாத்தியத்தன்மையை உள்நாட்டு இறைவரித்திணைக்க ளத்திடமிருந்து எல்சீசீ விசாரணை செய்தது – பதில் இதுவரை பெறவேண்டியிருந்தது. |
| (உ) | 3 வருடங்களுக்கு மேலாக முன்கொண்டுவருகின்ற 2020.12.31 இல் உள்ளவாறான ரூபா 10,624,394 தொகையான நீண்டகால வருமதியாகவுள்ள முகாமைத்துவக் கட்டணத்திற்காக எந்தவித காலக்கழிவு | நீண்டகால வருமதிகளுக்காக கம்பனியானது ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். | பெறவேண்டிய முகாமைத்துவ க் கட்டணங்கள் அறவிடப்பட்டிரு க்காததுடன் காலக்கழிவு | வருமதி மீதிகளை சேகரிப்பதை இறுதியாக்குவதற்கு வழமையான கூட்டங்கள் நடைபெற்றுவருகின்ற ன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏற்பாட்டினையும் கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. | | ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 2,559,819 வரவு மீதியை கொண்டுள்ள தொங்கல் கணக்கில் சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய ரூபா 12,073,788 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2020.01.01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதிகள் ரூபா 4,674,041 தொகையாகவிருந்தது. மீளாய்வாண்டின் போது கம்பனி எந்தக் காரணங்களுமில்லாமலும் தொங்கல் கணக்கிற்கு ரூபா 1,594,325 தொகையை வரவு வைத்ததுடன் ரூபா 3,708,547 தொகையை செலவையும் வைத்தது. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையானது சீராக்கல் பதிவு தொடர்பில் எற்த பிரேரணைகளையும் மேற்கொள்ளாததுடன் கம்பனியானது அத்தகைய சீராக்கல்களை நியாயமான அடிப்படை இல்லாமல் மேற்கொண்டிருந்தது. ஆகையால், கம்பனியானது தொங்கல் கணக்கை இல்லாமல் செய்வதற்கு முறையான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். | கம்பனியானது கணக்காய்வாளரின் பிரேரணையுடன் இணங்கியிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அறிக்கை இலக்கம் - சீஈபீ/சீஐஏ/எஸ்ஏ – 33/2019-85 (பக்க இலக்கம் 04) இன் பிரகாரம், சீஎஸ்சீக்கு செலுத்தவேண்டிய பழைய கணக்கில் ரூபா 5,218,271 கணக்கீட்டு வழுவொன்றிருந்தது. எப்படி சீராக்கம் செய்யவேண்டுமென்பதை கணக்காய்வு அறிக்கையின் 3.1.2 மற்றும் 3.1.3 ஆம் ஐய வினாவின் கீழ் கூறப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க எல்சீசீ சீராக்கங்களை மேற்கொண்டது. |
| (எ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இறுதி வற் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபீயிடமிருந்து ஏனைய பெறவேண்டியவை ரூபா 197,452,711 ஆகும். எனினும், இது சீஈபீயால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கணக்காய்விற்கு போதிய சான்றுகிடைக்காமையால் வியாபார கடன்பட்டோர் மீதியின் சரியான தன்மையை கணக்காய்வில் | கம்பனியானது சீஈபீயுடன் பேச்சுவார்த்தையை நடாத்திய பின்னர் இந்த விடயத்தை உடனடியாக தீர்க்க வேண்டும். | இந்த விடயம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று தரப்பினர் கலந்துரையாடல் (எல்சீசீ/சீஈபீ/சீஎஸ்சீ) செயன்முறையிலுள்ளதுடன் பெறவேண்டியதாக ரூபா 205 மில்லியன் இறுதியாக்கப்பட்டதுடன் சீஈபீயிடமிருந்து ரூபா 81 மில்லியனை தீர்ப்பதற்கு ஏற்கனவே |

| | | | | |
|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்தமுடியாதிருந்தது. | | | இணங்கப்பட்டது. |
| (ஏ) | வரையறுக்கப்பட்ட செலோன் சிப்பிங் கூட்டுத்தாபனத்தினூடாக (சீஎஸ்சீஎல்) வரையறுக்கப்பட்ட ரேறியன் இரும்பு மற்றும் உருக்கு (ரீஜஎஸ்சீஎல்) கம்பனியிடமிருந்து நீண்டகாலமாக பெறவேண்டிய ரூபா 539,192,079 தொகையினை அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது.<br>வரையறுக்கப்பட்ட செலோன் சிப்பிங் கூட்டுத்தாபனம் 2020.12.31 இல் உள்ளவாறு அவர்களுடைய நிதிக்கூற்றுக்களில் மேற்கூறப்பட்ட மீதியை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>ரீஜஎஸ்சீஎல்/சீஎஸ்சீஎல் இந்த மீதியை உறுதிப்படுத்தவோ காலக்கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவோ இல்லை. ஆகையால், மேற்கூறப்பட்ட மீதியின் சரியான தன்மையை மற்றும் உறுதித்தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியாதிருந்தது. | தொடர்புடைய தரப்பினரிடமிருந்து மீதியை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | பேச்சுவார்த்தைகள் செயன்முறையிலிருந்தது. | சட்டமா அதிபதி திணைக்களம் மற்றும் தனியார் ஆலோசனையாளர்களிடமிருந்து இது தொடர்பில் பெறப்பட்ட சட்ட அபிப்பிராயங்களின் பிரகாரம், உடன்படிக்கையின் பிரகாரம் நிலக்கரியை தொடர்ச்சியாக வழங்குவதற்கு அனுமதிக்காததுடன் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை எல்சீசீ மீறியமையால் எல்சீசீ ரீஜஎஸ்சீஎல்க்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு எல்சீசீ திடமான காரணத்தை கொண்டிருக்கவில்லையென்பதுடன் இது பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்குரிய விடயமாகும். |
| (ஐ) | சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய ஈஎஸ்சீ ரூபா 578,678,686 மீதி மற்றும் பல்வகையான கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 18,075,801 மீதி, வரையறுக்கப்பட்ட நோவல் வளங்கள் சர்வதேச கம்பனியிடமிருந்து (பீரீஈ) பெறவேண்டிய ரூபா 1,115,987 மீதி மற்றும் வரையறுக்கப்பட்ட | **சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய ஈஎஸ்சீ :**<br>ரூபா 578,678,686<br>கம்பனியானது ஈஎஸ்சீ அதிகாரச்சட்டத்துடன் இணங்க | சீஈபீயிடமிருந்து மீதியானது அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதி அதிகாரச்சட்டத்தின் கீழ் பெறவேண்டிய மீதிகளை இல்லாமல் செய்வதற்கு ஐஆர்டியுடன் கலந்துரையாடல்கள் போய்கொண்டிருக்கின்றன. |

| | | | |
|---|---|---|---|
| நோவல் வளங்கள் சர்வதேச கம்பனியின் (பீரீசு) வியாபாரக் கடன்கொடுத்தோர்கள் ரூபா 85,887,776 மீதி மற்றும் வரையறுக்கப்பட்ட லிவேட்டி கோமடிரிஸ் கம்பனியிடமிருந்து அறவிடவேண்டிய 50% எஸ்ஜீஎஸ் கட்டணங்கள் ரூபா 8,048,531 மீதி போன்றவற்றை உறுதிப்படுத்துவது தொடர்பிலான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | வேண்டுமென்பதுடன் சீஈபீயிடமிருந்து பெறவேண்டியவற்றை ற உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | உறுதிப்படுத்தப்படாத மீதிகளின் மூலங்கள்/ தோற்றத்தினை நிச்சயிப்பதற்கு மேலும் விசாரணை நடைபெற்று வருகின்றது. |
| | **பல்வகையான கடன்பட்டோர்கள்.**<br>ரூபா 18,075,801<br>கம்பனியானது பெறவேண்டிய மீதியின் மூலத்தினை நிச்சயிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கம்பனியானது பெறவேண்டிய மீதியின் மூலத்தினை நிச்சயித்திருக்கவில்லை. | *2021 நிதிக்கணக்குகளில் குறிப்பு இலக்கம் 11 இல் ஏனைய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட வரையறுக்கப்பட்ட லிவேட்டி கோமடிரிஸ் கம்பனியிபென காட்டுகின்ற யூஎஸ்டொலர் 1,575,141.86 ஐ உரிமைகோருபவருக்கு (லங்கா கோல் கம்பனி) பொறுப்புடையவை வழிநடத்தி நியதிச்சபை கட்டளை / தீர்ப்பு பெறப்பட்டது. |
| | **நோவல் வளங்கள் வியாபாரக் கடன்கொடுத்தோர்கள் ரூபா 85,887,776 மற்றும் வருமதிகள் ரூபா 1,115,987**<br>கம்பனியானது மீதிகளை உறுதிப்படுத்த வேண்டியதுடன் தேவையானதை செய்ய வேண்டும். | உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | |
| | **வரையறுக்கப்பட்ட லிவேட்டி கோமடிரிஸ்** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **கம்பனியிடமிருந்து அறவிடவேண்டிய 50% எஸ்ஜீஎஸ் கட்டணங்கள்**<br>**ரூபா 8,048,531**<br>கம்பனியானது பெறவேண்டிய மீதியினை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | |
| (ஒ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் ஈஎஸ்சீ பொறுப்பு காலாண்டு முடிவடைந்த பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தின் இருபதாம் நாள் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். இவ் அறிக்கைத் திகதி வரையிலும் கம்பனியானது ரூபா 579,179,232 தொகையான செலுத்த வேண்டிய மொத்த ஈஎஸ்சீ ஐ கம்பனி செலுத்தியிருக்கவில்லை. | நிதி அதிகாரச்சட்டத்துடன் கம்பனி இணங்க வேண்டும். | செலுத்தவேண்டிய ஈஎஸ்சீ ஐ இல்லாமல் செய்வதற்கு ஐஆர்டியிடமிருந்து வழிகாட்டிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதி அதிகாரச்சட்டத்தின் கீழ் பெறவேண்டிய மீதிகளை இல்லாமல் செய்வதற்கு ஐஆர்டியுடன் கலந்துரையாடல்கள் போய்கொண்டிருக்கின்றன. |
| (ஓ) | கம்பனியின் ஊழியரொருவர் 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை கையாள்வதன் மூலம் ரூபா 590,193 தொகையான மோசடியொன்றை செய்துள்ளார். எனினும் இவ் அறிக்கை திகதி வரையிலும் இவ் ஊழியரிற்கு எதிராக கம்பனி ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் இவ் ஊழியரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனியால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் இவ் ஊழியரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | ஏற்றுமதி இல. 123 இற்கான சுங்க வற்றாக ரூபா 136,236,370 தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. எனினும், குயிஸ்டெக் இன் பிரகாரம் உள்ளபடியான வற் தொகை ரூபா 106,969,404 ஆக காணப்பட்டது. ஆகையால், மேலதிகமாக செலுத்தப்பட்ட வற் தொகை ரூபா 29,266,965 ஆக காணப்பட்டது. | இலங்கை சுங்கத்திடமிருந்து இம் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை கம்பனி எடுக்க வேண்டும். | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்குரிய வழிகாட்டிகள் பெறப்பட்டிருக்க வில்லை. | நாங்கள் ஏற்கனவே மீள்செலுத்தலிற்கான கோரிக்கையை சமர்ப்பித்திருந்ததுடன் சுங்கத்திணைக்களம மீளச்செலுத்துவதற்கே ா அல்லது எல்சீசீ இற்கு செலுத்த வேண்டிய மீதிகளுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கோ தேவையான விடயங்களை மேற்கொண்டு வருகின்றது. |
| (∴) | கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் பிரகாரம், இலங்கை சுங்கத்தால் ரூபா 205,000,000 தொகையான தண்டப்பணம் கம்பனிக்கு விதிக்கப்பட்டுள்ளது. கம்பனி 2019 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட தண்டப்பணத்தை இலங்கை சுங்கத்தின் ரூபா 158,186,165 தொகைக்யான வற் கணக்கிற்கும் ரூபா 39,970,418 தொகையான வற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும்<br><br>ரூபா 6,843,417 தொகையான சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்தது. ஆகையால், பிடித்துவைத்தல் வருமானங்கள் ரூபா 205,000,000 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்க வற் கணக்கு மற்றும் வற் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 198,156,583 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்ததுடன் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கு ரூபா 6,843,417 ஆல் | கம்பனி இக் கொடுப்பனவை தண்டப்பண செலவினங்களாக பதிய வேண்டியதுடன் பணிப்பாளர் சபையிடமிருந்து இக் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டுமமென்பதுட ன் இந்த நட்டத்திற்கு பொறுப்பானவர்களை அடையாளங்காண்ப தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த விடயம் முடிக்கப்பட்டிரு க்கவில்லை. | மூன்று தரப்பினர் கலந்துரையாடல் (எல்சீசீ/சீஈபீ/சீஎஸ்சீ) செயன்முறையிலுள்ள துடன் பெறவேண்டியதாக ரூபா 205 மில்லியன் இறுதியாக்கப்பட்டதுட ன் சீஈபீயிடமிருந்து ரூபா 81 மில்லியனை தீர்ப்பதற்கு ஏற்கனவே இணங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. ரூபா 205,000,000 தொகையான தண்டப்பணத்தை செலுத்துவதற்கு நகர்வுப் சிட்டையின் தீர்ப்பனவிற்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறப்பட்ட நிதியத்தை சபையின் அனுமதி இல்லாமல் கம்பனி பயன்படுத்தியதுடன் இந்த நட்டத்திற்கு பொறுப்பானவர்களை அடையாளங்காண்பதற்கு முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (க) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டமொன்று (எஸ்ஓஆர்பி) கம்பனியில் காணப்படவில்லை. | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் கம்பனி இணங்க வேண்டியதுடன் எஸ்ஓஆர் ஐ தயாரித்து அதற்கான அங்கீகாரம் உடனடியாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | | பொது முயற்சிகள் திணைக்களம் அனுமதியை வழங்கியிருந்ததுடன் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடக்க வேண்டும். |
| (கா) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு முரணாக, 2017 ஆம் ஆண்டிலிருந்து கம்பனி இடர்கடன் திட்டத்தினை அமுல்படுத்தியிருந்ததுடன் கம்பனி முறையான அனுமதி இல்லாமல் கிடைக்காத உத்தியோகத்தர் | சுற்றறிக்கைகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | சுற்றறிக்கைகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தருக்கு பிணையாளருடன் சான்றுறுதிசெய்யப்பட்ட சட்டத்தரணி பிரேரித்த கடன் விண்ணப்பப்படிவத்துடன் ஆகக்குறைந்த மீதியில் சந்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுகயீன விடுமுறைக்காக ரூபா 1,418,274 தொகையொன்றை ஏற்பாடு செய்திருந்தது. | | | வீதத்துடன ஒப்பிட்டு 6% வட்டி வீதத்தில் ஊழியரொருவருக்கு ஆகக்கூடியது ரூபா 350,000 உத்தியோகத்தர் கடனாக வழங்குவதற்கு 73வது இயக்குனர் சபையில் அனுமதி வழங்கப்பட்டது. 87வது சபைக் கூட்டமானது உத்தியோகத்தர்களின் சுகயீன விடுமுறை தொடர்பில் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனுமதியை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கியது. |
| (கி) | பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டிற்கான உத்தியோகத்தர் மிகையூதியமாக ரூபா 1,795,212 தொகையொன்றை கம்பனி செலுத்தியிருந்தது. | 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும். | கம்பனி சுற்றறிக்கையுடன் இணங்கியிருக்கவில்லை. | எல்சீசீ செலவீனம் சீஈபீ ஆல் மீளளிக்கப்பட்டிருந்தமையால் சீஈபீயிடமிருந்து ஆட்சேபனை இல்லை என்ற கடிதத்திற்கு இணங்க சபையானது மிகையூதியத்திற்கு அனுமதி வழங்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக, இது சீஈபீக்கு மேலதிகமான கிரயமாகவில்லாதுள்ளதுடன் 2020 இற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அதே செய்முறையை பின்பற்ற வேண்டும். |
| (கீ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு இணங்க 2015 இலிருந்து 2020 வரையான வரையான ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளுக்கிணங்க 2017, 2018 மற்றும் 2019 இற்கான அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தயாராகவுள்ளதுடன் 2020 இற்கானது அச்சிடும் செயன்முறையிலுள்ளது.. |

## 4.77 கொலதெனிய ஹைத்ரோபவர் (பிறைவேட்) லிமிட்டட


| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 115,920,606 | 45,251,219 | 486,288,252 | 47,721,053 | 70,669,387 | முனைப்பழியற்ற |
| **2019** | 107,122,844 | 45,313,902 | 474,335,657 | 156,975,414 | 61,808,942 | முனைப்பழியற்ற |
| **2020** | 52,742,198 | 118,444,230 | 175,609,898 | 23,212,570 | (65,702,032) | முனைப்பழியற்ற |




- பாரிய பிரச்சகைனள் இருக்கவில்லை.

## 4.78 ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 52,548,039 | 123,362,625 | 333,385,190 | 327,858,815 | (66,151,871) | முனைப்பழியுள்ள |
| **2019** | 395,291,314 | 354,572,258 | 488,433,684 | 442,206,363 | 46,735,544 | முனைப்பழியுள்ள |
| **2020** | 323,765,340 | 256,076,551 | 476,457,347 | 375,755,975 | 76,115,183 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எஸ்கேஏஎஸ் 02) இருப்புக்கள் தொடர்பான 37 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை | கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க | கம்பனி எஸ்கேஏஎஸ் 02 உடன் இணங்கியிருக்கவில் | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்துவோரிற்கு பயன்படுகின்ற வெவ்வேறு இருப்பு வகைப்படுத்தல்களில் இடம்பெறுகின்ற முன்கொண்டுசெல்லும் தொகைகள் மற்றும் அச் சொத்துக்களில் ஏற்படுகின்ற மாற்றங்களின் அளவு என்பன தொடர்பான தகவல்களை நிறுவனம் வெளிப்படுத்துதல் வேண்டும். எனினும் இருப்புக்களின் வெவ்வேறு வகைப்படுத்தல்களை நிறுவனம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | வேண்டும். | லை. | 6 ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம், முடிவடைந்த பொருட்களின் முடிவடைந்த பொருட்கள் மற்றும் வேலைச் செய்முறை மற்றும் மூலப்பொருட்களின் பெறுமதி போன்றவற்றை உள்ளடக்கிய இருப்புப் பெறுமதியின் விபரங்களைத் தருகின்றது. இந்தக் குறிப்பு 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டுள் ளது. |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எஸ்கேஏஎஸ்) 38 – கற்பனைச் சொத்துக்கள் தொடர்பான 118 (அ) மற்றும் (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம், கம்பனியானது பயன்தருகாலம் வரையறையற்றதா அல்லது வரையறையுடையதா என்பதை வெளிப்படுத்த வேண்டும். வரையறையுள்ளதாகவிருந்தால், கற்பனைச் சொத்துக்களிற்காக வரையறையான காலங்களுடன் பயன்படுத்தப்பட்ட பயன்தரு | கம்பனியானது கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்க வேண்டும். | கம்பனியானது சிபாரிசுகளுடன் இணங்கியிருக்கவில் லை. | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கீழுள்ள வெளிப்படுத்தலொன் றுடன் திருப்தியடைந்திருந் தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலங்கள் அல்லது காலக்கழிவு முறைமை பயன்படுத்தப்பட்டது. எனினும், கம்பனியானது நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் (எஸ்கேஏஎஸ் 16) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 79 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம், முழுமையாகபெறுமானத்தேய்வு செய்யப்பட்ட தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முன்கொண்டுவரும் பெறுமதியினை கம்பனி வெளிப்படுத்த வேண்டும். எனினும், கம்பனி ரூபா 9,573,376 தொகையான முழுமையாக பெறுமானத்தேய்வு சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கீழ் வெளிப்படுத்தல் இருந்ததன் மூலம் இது திருப்தியடையப்பட்டிருந்தது. |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,218,582 தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனி மூலத்தை இனங்கண்டு உடனடியாக இந்த மீதியை தீர்க்க வேண்டும். | 2022 மே 31 வரையிலும் தொங்கல் கணக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொங்கல் மீதிகளை இனங்காணல் செய்முறை தற்போதுள்ளது.. மீற்றர் வெளிக்காட்டி விற்பனைகள் தொடர்பில் சீஈபீயிடமிருந்து பெறப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இனங்காணப்படாத நிதியத்துடன் இது அடிப்படையா உள்ளடக்கியுள்ளது. |
| (உ) | நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு இலக்கம் 07 இன் பிரகாரம், இரண்டு வருடங்களுக்கு மேலாக பெறவேண்டிய நிலுவையாகவுள்ள நிறுத்திவைத்தல் வரி ரூபா 2,120,524 ஆகவிருந்தது.<br><br>எனினும், டபிள்யூஎச்ரீ சான்றிதழ் கணக்காய்வுப் பரீட்சிப்பிற்காக இருக்கவில்லை. | ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. | டபிள்யூஎச்ரீ சான்றிதழ் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக் கவில்லை. | வரிப்பிரமாணங்கள் மற்றும் வரி வருமானத்தை நிரப்புதல் தற்போது செய்முறையிலுள்ள து |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு உள்ளபடியான செலவீனமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 749,992 தொகை தீர்க்கப்படாமல் ஒரு வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவிருந்தது. எனினும், நிலுவை மீதியை தீர்ப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர்க ளின் நடவடிக்கையை விசாரணை செய்த பின்னர் இந்த மீதிகளை<br><br>மீள எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | செலுத்தவேண்டிய மீதிகள் 2022 மே 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவி ல்லை. | இந்த தீர்ப்பனவுகளுக்காக நடவடிக்கைகள் மே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (எ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டியல்களுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்துட ன் இணங்க வேண்டும். | வருமான வரி அறிக்கைகள் 2022 மே 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | வரிப்பிரமாணங்கள் மற்றும் வரி வருமானத்தை நிரப்புதல் தற்போது செய்முறையிலுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கை மற்றும் ஏனைய தேவையான ஆவணங்கள் மதிப்பீட்டு ஆண்டின் இறுதியை தொடர்ந்து வரும் நவம்பர் 30 இல் அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கம்பனி வருமான வரி அறிக்கை எதனையும் சமர்ப்பித்திருக்கவில்லை. | | | து. |
| (ஏ) | கம்பனியானது மானி மேவுகை அடைப்புக்களை உற்பத்தி செய்து இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா எலெக்ரிசிற்ரி (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு உற்பத்திப்பொருளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள போதிலும் மானி மேவுகை அடைப்புக்களின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக உடன்படிக்கை அல்லது எம்ஓயூ எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மானி மேவுகை அடைப்புக்களின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக கம்பனிக்கும் சீஈபீ/ எல்ஈசீஓ இற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | எம்ஓயூ அல்லது உடன்படிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏம்ஏயூ அல்லது உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் இது துலைமை கம்பனிக்கு மானி மேவுகையை வழங்குகின்ற 100 உள்வீட்ட 100% உரிமையாக்கப்பட்ட சொந்த துணைக்கம்பனியாகவுள்ளது. |
| (ஐ) | உத்தியோகத்தரின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளிற்காக ஆட்சேர்ப்புத்திட்டமொன்று (எஸ்ஓஆர்) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் | எஸ்ஓஆர் 2022 மே 31 வரையிலும் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எஸ்ஓஆர் இனை தயாரித்தலானது செய்முறையிலுள்ளது. |


| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்புத்திட்டமென்று (எஸ்ஓஆர்) தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட வேண்டும். | | |
| (ஓ) | கூட்டுமுயற்சியான அம்ராட் ஹோல்டிங்ஸ் (தனியார்) லிமிட்டட்டுடன் பறக்கும் சாம்பல் மற்றும் கீழ் சக்தியை பயன்படுத்தி சீமெந்து அடிப்படையிலான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,364,447 தொகையை தொகுதி முதலீடு செய்திருந்தது. எனினும் கூட்டுமுயற்சி உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் வணிகப் பங்காளர் இன்மையால் செயற்திட்டத்தின் சொத்து விளைவற்றிருந்தது. விளைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், சொத்தின் மதிப்பீடானது 2019 மே 31 அளவில் ரூபா 2,660,000 ஆகவிருந்தது வித்தியாசம் காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஏற்பட்ட செலவீனத்தை அறவிடுவது தொடர்பான போதிய முறையான சான்றுகளைப் பெறுவதற்கு முடியாதிருந்தது. | விளைவற்ற சொத்தை பயன்படுத்துவதற்கு முறையான நடவடிக்கை உடனடியான எடுக்க வேண்டும். | 2022 மே 31 வரையிலும் இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்வலு அமைச்சின் ஏசீஎம் இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், சீஈபீயின் சபைக் கூட்டங்களின் கீழ் இது கலந்தாலோசிக்கவேண்டியுள்ளதுடன் தீர்மானம் எஸ்எல்ஈக்கு கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது. |
| (ஓ) | 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை மற்றும் 2007 ஒக்தோபர் 02 ஆம் திகதிய பிஈடி/45 ஆம் இலக்க பொது | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் பிந்தியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டிற்கான வரைபு நிதிக்கூற்றுக்கள் ஏற்கனவே |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாகச் சுற்றிக்கை என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் வரைபு செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் 2021 ஏப்ரல் 28 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படட்டிருந்தன. | | | தயாரிக்கப்பட்டு இயக்குனர் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்தது . |
| (ஔ) | ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | வருடாந்த அறிக்கைகள் 2022 மே 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த துடன் இது எஸ்எல்ஈ இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் மீளாய்வின் கீழ் தற்போதுள்ளது. |
| (ஃ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்தல் செயன்முறையிலுள் ளது. | கூட்டிணைந்த திட்டம் தற்போது பூர்த்தியடைந்து மீளாய்வு நோக்கத்திற்காக எஸ்எல்ஈ இன் முகாமைத்துவக் குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந் தது. |
| (க) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது | கம்பனி சுற்றறிக்கைகளுடன் இணங்கியிருக்க | இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக் | தற்போது மீளாய்வின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனி செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | வேண்டும். | கவில்லை. | கீழுள்ளது. |
| (கா) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சிநிரல்" இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ய வேண்டிய போதிலும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடையப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைவதிலுள்ள இடைவெளிகள் மற்றும் அவ்வாறு செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி நிரல்" இனை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | கம்பனி அடையப்பட வேண்டிய இலக்குகளை அடையப்பட்டிருக்க வில்லை. | கம்பனியானது எஸ்டிஜீ இலக்குகளின் நோக்கெல்லையுடனும் மீள் சக்தி உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபடுகின்றது. |

## 4.79 ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 7,602,797 | 7,505,467 | 177,278,520 | 54,540,836 | 113,900 | முனைப்பழியுள்ள |
| **2019** | 20,269,248 | 18,125,303 | 180,708,237 | 56,094,118 | 2,157,474 | முனைப்பழியற்ற |
| **2020** | 73,742,266 | 68,950,101 | 187,975,489 | 60,302,251 | 4,822,328 | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கம்பனி 2015 இல் கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு எந்தவொரு வருமான வரி அறிக்கைகளையும் கம்பனி சமர்ப்பித்திருக்காத போதிலும் | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | வருமான வரி வருமானங்கள் 2022 மே 31 வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரி பிரமாணங்கள் மற்றும் அதற்கிணங்க வரி வருமானங்களை நிரப்பும் செய்முறை திருப்தியளிக்கும் நிலையிலுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020 திசெம்பர் 31 வரையான வருமான வரி ஏற்பாடு ரூபா 14,792,436 ஆக காணப்பட்டதுடன் இது 2021 நவம்பர் 10 வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | | | |
| | ரூபா 17,114,299 தொகையான பெறுமதி சேர் வரி (வற்) 26 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | செலுத்தவேண்டிய வற் மீதி 2022 மே 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாகவுள்ள செலுத்த வேண்டிய வற் மீதியை தீர்ப்பதற்காக தற்போது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை தற்போது நடைபெறுவதுடன் செலுத்தும் முறைமையும் கோரப்பட்டதுடன் மேற்கூறப்பட்ட வரிப்பொறுப்பை தீர்ப்பனவு செய்வதற்காக ஒவ்வொரு மாதத்திலும் ரூபா 1 மில்லியனை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (இ) | முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 7,418,633 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) தண்டப்பண அறிவித்தல்களை கம்பனி பெற்றிருந்தது. எனினும் கம்பனி எதிர்பாராத பொறுப்பிற்காக ஏற்பாடு எதனையும் மேற்கொண்டிருக்கவில்லை அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை | கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளினை கம்பனி பின்பற்றப்பட வேண்டும். | செலுத்தவேண்டிய என்பீரீ தண்டப்பணமானது ஐஆர்டிக்கு செலுத்தப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாகவுள்ள செலுத்த வேண்டிய என்பீரீ மீதியை தீர்ப்பதற்காக தற்போது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை தற்போது நடைபெறுவதுடன் செலுத்தும் முறைமையும் கோரப்பட்டதுடன் மேற்கூறப்பட்ட என்பீரீ வரிப்பொறுப்பை தீர்ப்பனவு செய்வதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| ல. | | | | ஒவ்வொரு மாதத்திலும் ரூபா 1 மில்லியனை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது நிகழத்தக்க பொறுப்பாகக் கருதப்படும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு இலக்கம் 6.1 – வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் பிரகாரம், பெறவேண்டிய நிறுத்திவைத்தல் வரி ரூபா 84,949 தொகையாகும். எனினும், நிறுத்திவைத்தல் வரிச் சான்றிதழ்களின் மூலங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | .கணக்காய்விற்கு ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. | நிறுத்திவைத்தல் வரிச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்முறைக்காக இந்தச் சான்றிதழ்கள் கிடைப்பதற்கு இணங்குதல். |
| (உ) | முறையான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தை (எஸ்ஓஆர்) கொண்டிருக்காமல் பதவியணியினர் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்புத்திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எஸ்ஓஆர் ஒன்றினைத் தயாரிப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கான எஸ்ஓஆர் இன் மீளாய்வு தற்போதுள்ளது. |
| (ஊ) | 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை மற்றும் 2007 ஒக்தோபர் 02 ஆம் திகதிய பிஈடி/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் வரைபு செயலாற்றல் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கம்பனியானது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. | இந்த வருடத்திலிருந்து சிறந்த நடைமுறையுடன் இணங்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கையுடன் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் 2021 ஏப்ரல் 28 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | | |
| (எ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது இது எஸ்எல்ஈ இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் மீளாய்விலுள்ளது. |
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். | கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் செய்முறையிலுள்ளது. | தற்போது கூட்டிணைந்த திட்டம் பூர்த்தியடைந்திருந்ததுடன் மீளாய்வு நோக்கத்திற்காக எஸ்எல்ஈ இன் முகாமைத்துவக் குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனி வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். | வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மீளாய்வின் கீழுள்ளது. |
| (ஒ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | கம்பனி அடையப்பட வேண்டிய | கம்பனியானது எஸ்டிஜீ |

| | | | |
|---|---|---|---|
| நாடுகளின் “2030 நிகழ்ச்சிநிரல்” இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ய வேண்டிய போதிலும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடையப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைவதிலுள்ள இடைவெளிகள் மற்றும் அவ்வாறு செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை. | தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரல்” இனை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | இலக்குகளை அடையப்பட்டிருக் கவில்லை. | இலக்குகளின் நோக்கெல்லையுடனும் மீள்<br>சக்தி உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபடுகின்றது. |

## 4.80 கும்பல்கமுவ மினிஹைட்ரோ பவர் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 95,130,264 | 101,031,890 | 553,037,458 | 444,881,319 | (5,863,611) | முனைப்பழியற்ற |
| **2019** | 106,274,755 | 92,472,958 | 541,456,433 | 419,438,841 | 13,861,453 | முனைப்பழியுள்ள |
| **2020** | 115,197,323 | 83,025,944 | 546,942,415 | 392,674,336 | 32,250,486 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனியானது 2015 பெப்ரவரி 15 இலிருந்து 20 ஆண்டு காலப் பகுதிகளிற்காக சிறிய நீர் மின்வலுப் பொறிக் கட்டிடம், சொந்தமாக வைத்திருத்தல் மற்றும் செயற்படுத்தல் | கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். | சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கீழ் இந்த வருடாந்த அனுமதிக்கட்டணம் செயற்பாட்டுக் |

| | | |
|---|---|---|
| நோக்கத்திற்காக காணியொன்றை குத்தகை அடிப்படையில் வனவள பாதுகாப்பு திணைக்களத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் வனவள பாதுகாப்பு திணைக்களத்திற்கு வருடாந்த அனுமதிக் கட்டணமாக ரூபா 4,436,705 செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், எஸ்எல்எவ்ஆர்எஸ் - 16 இன் குத்தகை கொடுப்பனவாக அனுமதிக்கட்டணம் அடையாளம் காணப்பட்டிருக்காததுடன் குத்தகை பொறுப்பு மற்றும் சொத்துப் பயன்படுத்துவதற்குரிய உரிமை கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியானது வன வள பாதுகாப்பு திணைக்களத்திற்கு வருடாந்த அனுமதிக் கட்டணக் கணிப்பீடுகளிற்காக செய்யப்பட்ட திருத்தங்களுடன் இணங்கியிருக்கவில்லை. இதன்விளைவால், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான வருடாந்த அனுமதிக் கட்டணம் ரூபா 578,700 ஆல் குறைத்துக் | | குத்தகைக் கொடுப்பனவாக இனங்காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2015 மார்ச் 06 ஆந் திகதிய முதலீட்டுச் சபையின் உடன்படிக்கையின் 2(i) ஆம் பிரிவின் பிரகாரம் வரி விடுமுறைக் காலம் முடிவுறுத் வரைக்கும் கம்பனி 5000 அமெரிக்க டொலர்களுக்குச் சமமான ஒரு வருடாந்தக் கட்டணத்தை ரூபாய்களில் முதலீட்டுச் சபைக்குச் செலுத்த வேண்டியதுடன் கம்பனி வருடாந்தக் கட்டணத்தை ஒவ்வொரு மாதத்தின் 10வது நாள் அல்லது அதற்கு முதல் செலுத்தத் தவறினால் அந்த ஆண்டிற்கான நடைமுறையிலுள்ள 364 திறைசேரிப் பத்திர வீதத்திற்குச் சமமான வட்டியானது தாமதக் கட்டணமாக வசூலிக்கப்படும். இருப்பினும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்தக் கட்டணங்கள் மற்றும் அதற்கான தண்டப் பணம் என்பன 2021 நவம்பர் 10 வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இதனை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கேஎம்எச்பிபி யின் மின் உற்பத்திக்கு திடீரென ஏற்பட்ட இடைத்தடங்கல்களுடன் பீஓஐ கொடுப்பனவுகளின் தீர்ப்பனவிற்காக போதிய நிதியங்களை ஒழுங்குபடுத்துவது கஸ்டமாகவிருந்ததுடன் தற்போது நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்யும் பேச்சுவார்த்தையிலுள்ள து. |


| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக கம்பனியால் நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பொருள் மெய்மையாய்வு கணிப்பீட்டு சபை 2021 ஆம் ஆண்டிற்காக பூர்த்தியடைந்திருந்தது. |
| (ஈ) | முறையான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தை (எஸ்ஓஆர்) கொண்டிருக்காமல் பதவியணியினர் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்புத்திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எஸ்ஓஆர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கான எஸ்ஓஆர் மீளாய்வின் கீழ் தற்போதுள்ளது. |
| (உ) | 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை மற்றும் 2007 இன் பிஈடி/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் வரைபு செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் 2021 ஏப்ரல் 28 இலேயே | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | வரைபு செயலாற்றல் அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த வருடத்திலிருந்து சிறந்த நடைமுறையுடன் இணங்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | | |
| (ஊ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்க வேண்டும். | வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது இது எஸ்எல்ஈ இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் மீளாய்விலுள்ளது. |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். | கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் செய்முறையிலுள்ளது. | தற்போது கூட்டிணைந்த திட்டம் பூர்த்தியடைந்திருந்ததுடன் மீளாய்வு நோக்கத்திற்காக எஸ்எல்ஈ இன் முகாமைத்துவக் குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனி செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | கம்பனி சுற்றறிக்கைகளுடன் இணங்கியிருக்க வேண்டும். | இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மீளாய்வின் கீழுள்ளது. |
| (ஐ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சிநிரல்” இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரல்” இனை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | கம்பனி எஸ்டிஜீ இலக்குகள் நோக்கெல்லையின் கீழ் அடையப்பட வேண்டிய இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | கம்பனியானது எஸ்டிஜீ இலக்குகளின் நோக்கெல்லையுடனும் மீள் சக்தி உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதிலும் |

அமுல்படுத்துவதற்கு ல. ஈடுபடுகின்றது.
பங்களிப்பு செய்ய வேண்டிய போதிலும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடையப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைவதிலுள்ள இடைவெளிகள் மற்றும் அவ்வாறு செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

## 4.81 தேதுறு ஓயா மினி ஹைட்ரோ (பிறைவேட்) லிமிட்டட

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 0 | 217,165 | 11,189,757 | 11,722,479 | (216,572) | முனைப்பழியற்ற |
| **2019** | 0 | 3,781,647 | 71,527,333 | 31,023,221 | (3,327,306) | முனைப்பழியுள்ள |
| **2020** | 0 | 3,556,168 | 180,330,853 | 143,262,614 | (3,435,873) | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விபரத் திரட்டு மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்த பின்னர் நவம்பர் 30 ஆம் திகதி | கம்பனி உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் விதி முறைகளுக்கு இணங்க வேண்டும். | கம்பனி வரிச் சட்டத்தின் விதி முறைகளுக்கு இணங்கவில்லை. | வரிச் சட்ட விதிகளுக்கமைய வரி விபரத்திரட்டு மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், இக் கம்பனி 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை 2019 / 2020 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி விபரத் திரட்டினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கவில்லை | | | |
| (ஆ) | கம்பனியால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) தயாரிக்கப்படாமல் பதவியணியினர் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் செய்யப்பட்டிருந்தனர். | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கம்பனியினால் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது, எஸ்ஓஆர் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2007 ஒக்டோபர் 02 ஆம் திகதிய பிஈடி/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் வரைபு செலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் | கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | | நடப்பாண்டு தொடக்கம் இந்த சிறந்த நடைமுறையை கடைபிடிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2021 ஏப்ரல் 28 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | | |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை மற்றும் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்படவில்லை | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளுடன் கம்பனி இணங்குதல் வேண்டும். | வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்தப்பட வில்லை | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு தற்போது எஸ்எல்ஈ இன் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் மதிப்பாய்வில் உள்ளது. |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | கூட்டிணைந்த் திட்டம் தயாரிப்பது இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. | கூட்டிணைந்த திட்டம் நிறைவடைந்து, மீள்ஆய்வு நோக்கத்திற்காக எஜ்எல்ஈ இன் முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் கம்பனி வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும்.. | இற்றைவரை பதில் வழங்கப்படவில்லை . | தற்போது அது பரிசீலனையில் உள்ளது. |
| (எ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டீஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரலின்” பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் பரப்பின் கீழ்க் காணப்படும் இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளின் அமுல்ப்படுத்தலில் பங்களிப்புச் | நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரலின்” ஏற்பாடுகளைக் கம்பனி பின்பற்றுதல் | | கம்பனி எஸ்டீஜீயின் இலக்குகளின் நோக்கத்துடன் இணங்குகிறது மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை |


செய்தல் வேண்டும். ஆனால் கம்பனி அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்கள் அந்த இலக்குகளினை அடைந்து கொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயலாற்றலினை அறவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகளை இனங்காண்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

வேண்டும்.

மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

## 4.82 அன்ரீ லெகோ மீற்றரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 889,599,495 | 929,609,118 | 815,363,775 | 423,202,380 | (40,009,623) | முனைப்பழியற்ற |
| **2019** | 1,256,226,767 | 1,184,260,753 | 874,041,183 | 434,001,797 | 71,966,014 | முனைப்பழியற்ற |
| **2020** | 974,265,278 | 944,869,436 | 745,791,976 | 288,428,145 | 29,395,843 | முனைப்பழியற்ற |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 889.60 | 929.61 | 815.36 | 423.20 | (40.01) |
| 2019 | 1@256.23 | 1@184.26 | 874.04 | 434.00 | 71.97 |
| 2020 | 974.27 | 944.87 | 745.79 | 288.43 | 29.40 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனி உரிய சான்றாதாரங்களுடன் நாளேட்டுப் பதிவு கொடுப்பனவு சிட்டைகள் ஒழுங்கான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டுப் பதிவுகள் சரியான முறையில் பேணப்படுதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |


| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | கம்பனி நிலையான சொத்து பதிவேட்டை முறையாக பராமரிக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு சரியாக புதுப்பிக்கப்பட வேண்டும் | 2021 யூன் 30 ஆம் திகதி தொடக்கம் கம்பனி நிலையான சொத்துகள் பதிவேட்டுடன் புதிய ஈஆர்பீ முறைமையை கொள்வனவு செய்து அமுல்படுத்துகின்றது. | புதிய நிலையான சொத்துகள் பதிவேட்டை மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல கம்பனியின் ஆதனம், பொறி, இயந்திர உபகரணங்கள் பதிவேட்டில் ரூபா.94,681,267 பெறுமதியான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள சொத்துக்களில் சில சொத்துக்கள் இன்னும் பயன்பாட்டில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளன.<br><br>ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலம் ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்படும், மேலும் எதிர்பார்ப்புகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், வேறுபாடுகள் கணக்கிடப்படும்.<br><br>இருப்பினும், கம்பனி மேற்கூறிய தேவையை பூர்த்தி செய்யவில்லை. | எல்கேஏஎஸ் 16 இன் தேவைகளுக்கு இணங்கப்பட வேண்டும் | சோதனை பெஞ்சுகள், டீசல் ஜெனரேட்டர் மற்றும் வாகனம் போன்ற சில இயந்திரங்களை 2021 ஆம் ஆண்டில் மாற்ற திட்டமிட்டுள்ளோம். பொருளாதார நிலை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக வங்கிகளில் யூஎஜ்டி இல்லாததால் சொத்துக்களை அகற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில் இயந்திரங்களை மாற்றுவ தற்கு தொடங்குகிறது. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை பின்பற்ற வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | திட்டமொன்று (எஸ்ஓஆர்பி) கம்பனியிடம் காணப்படவில்லை. | | | |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம்<br><br>கம்பனியிடம் விரிவான கட்டுப்பாட்டு மற்றும் நிர்வாக செய்முறைகள் கையேடு இருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகளினை கம்பனியினால் பாராளுமன்றத்திற்கு பட்டியல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பீஈடீ/12 ஆம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையினால் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பீஈடீ/12 ஆம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஏ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருடாந்த அறிக்கைகளினை கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பீஈடீ/12 ஆம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | கம்பனியினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழுவொன்றை கம்பனி உருவாக்கியிருக்கவில்லை. | அது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஓ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டீஜி) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களும், அதன் பரப்பின் கீழ்க் காணப்படும் இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளின் அமுல்படுத்தலில் பங்களிப்புச் செய்தல் வேண்டும். ஆனால், கம்பனி எஸ்டீஜீ பற்றி அறிந்திருக்காததுடன் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்கள், அந்த இலக்குகளினை அடைந்து கொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயலாற்றலினை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகளைக் கூட இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ ஏற்பாடுகளினைக் கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

## 4.83 லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 34,155,206,000 | 30,937,904,000 | 44,107,019,000 | 12,350,902,000 | 3,217,302,000 | முனைப்பழியற்ற |
| **2019** | 36,729,109,163 | 32,801,317,005 | 47,496,836,471 | 13,960,234,591 | 3,927,792,158 | முனைப்பழியற்ற |
| **2020** | 32,498,903,423 | 30,189,910,809 | 47,344,681,926 | 12,662,316,361 | 2,308,992,614 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | குறுங்காலத்தில் அல்லது நீண்டகாலத்தில், IT இற்கான ஒட்டுமொத்த திட்டத்தினை விபரிப்பதற்கு IT தந்திரோபாயமொன்றை கம்பனி கொண்டிருக்கவில்லை. | சிரேஷ்ட முகாமைத்துவ மீளாய்வு மற்றும் அங்கீகாரத்தினால் கட்டளையிடப்பட்ட உள்ளூர் வியாபார தேவைப்பாடுகளினை ஈடுசெய்யக்கூடியதாகக் | தகவல் தொழில்நுட்பத் திட்டம் மற்றும் கொள்கை நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் | பணிப்பாளர் சபையிடமிருந்து அனுமதி பெறுதல் நிலுவையாக உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்படும் IT இனை அளிக்கக்கூடிய தந்திரோபாய வழிகாட்டனினை நிறுவனம் ஸ்தாபிக்க வேண்டும். | சபையின் அனுமதிக்கு அனுப்பப்படுகின்றன. | |
| (ஆ) | PRONTO XI மற்றும் BILLING முறைமைகள் ஆகிய இரண்டு சாதாரண மற்றும் சிறப்பு பயன்பாட்டாளர்களுக்கான முறையான காலரீதியான பயன்பாட்டாளர் அணுகுதல் கண்காணிப்பினை கம்பனி செயற்படுத்தியிருக்கவில்லை. | எவ்விதமான தேவையற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு, சிறப்பு பயன்பாட்டாளர்களின் ID’s மூலம் செயற்படுத்தப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் உள்ளக (அல்லது வெளியக) IT கணக்காய்வு குழுவொன்றின் மூலம் உள்நுழைந்து மீளாய்வு செய்யப்படல் வேண்டும். அவர்களின் பணி பாத்திரங்கள்/ தொழிற்பாடுகளுக்கு எதிராக பயன்பாட்டாளர் அணுகல் உரிமைகளின் துல்லியத்தன்மை மற்றும் ஏற்புடமையினை உறுதிப்படுத்தும் பொருட்டு காலரீதியில் மீளாய்வுகளினை மேற்கொள்வதற்கு மேலும் பரிந்துரைக்கப்படுகின்றது | பயனர் மேம்படுத்தல் மாதந்தோறும் புதுப்பிக்கப்படும். | மதிப்பாய்வு செயல்முறை புதிய ஈஆர்பி முறைமையுடன் அறிமுகப்படுத்தப்படும். |
| (இ) | புதிய இணைப்புக்கள் ஆரம்பித்த திகதி BILLING முறைமையில் ஏதேனும் திகதிக்கு பிற்திகதியிடக்கூடியதாக காணப்படுகின்றது. | இணைப்புக்கள் ஆரம்பித்தல் திகதி பிற்திகதியிடப்படுவதனை மட்டுப்படுத்த, BILLING முறைமையினை முகாமைத்துவம் மேம்படுத்த வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது | மீட்டர் சீலிங் டாக்கெட்டில் இருந்து திகதியானது எடுக்கப்பட்டது, அதுவே உண்மையாக ஆரம்பத்தின் திகதியாகும். | விலைப்பட்டியல் முறைமைத் திகதி மற்றும் பௌதீக ரீதியாக இணைக்கப்பட்ட திகதி ஆகியவை தொழில்நுட்ப அதிகாரிகளால் ஒப்பிடப்படுகின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | றன |
| (ஈ) | தலைமை அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2002 இல் நாரஹன்பிட்டயில் காணியொன்றை எல்ஈசிஓ கொள்வனவு செய்திருந்தது. அதன் கொள்வனவிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டிருந்த இந்த காணிக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கு கணிசமான கிரயம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. நாரஹன்பிட்டயில் சொந்தக் காணியை எல்ஈசிஓ கொண்டிருந்த போதிலும், அனைத்து வரிகளும் உள்ளடங்கலாக ரூபா 3,543,040 மாதாந்த வாடகைக்கு இலக்கம் 411, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள கட்டிடத்தில் இதுவரை அவர்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளினை மேற்கொள்கின்றனர். | மேலும் தாமதமின்றி அரச பெறுகை வழிகாட்டலினைப் பின்பற்றி கட்டிடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கட்டுமானப் வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. | நிறைவேற்றல் பணிகள் நடந்து வருகின்றன. |
| (உ) | அன்ரீ லெகோ (பிறைவேட்) லிமிட்டட்டில் 4 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ரூபா 47.1 மில்லியன் முதலீடொன்றுக்கான பங்குப் பத்திரங்கள் மற்றும் பங்கு ஒதுக்கீடு இதுவரை முடிவடையாது காணப்படுகின்றது. | அன்ரீ லெகோ (பிறைவேட்) லிமிட்டட்டுடன் ஏதேனும் சர்ச்சை காணப்படுமானால் கம்பனி கலந்துரையாடி தீர்க்கவேண்டியதுடன் இந்த முதலீடு தொடர்பில் பங்குகளினை உறுதிப்படுத்தி, விரைவில் ஒதுக்க வேண்டும். | இன்னும் நிலுவையில் உள்ளது.<br><br>தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது ஆனால் இறுதி பங்கு வெளியீடு இன்னும் முடியவில்லை | இறுதிப் பங்கு வெளியீடு முடிவடையவில்லை. |
| (ஊ) | சீஈபீ மற்றும் லங்கா எலற்றிக்சிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டிற்கிடையே எவ்விதமான முறையான மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையும் காணப்படவில்லை. | இரண்டு தரப்பினர் களுக்கிடையே ஏற்படக்கூடிய முரண்பாடுகளினை தவிர்ப்பதற்கு, மேலும் தாமதமின்றி முறையான மின்வலு கொள்வனவு உடன்படிக்கை தாபிக்கப்படல் வேண்டும். | சிஈபீ உடன் கலந்துரையாடல் நடந்து வருகிறது. | மின் கொள்முதல் ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | லங்கா பிராட்பேண்ட் (பிரைவேட்) லிமிடெட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையான சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிற்கான பங்குப் பத்திரங்களினை சமர்ப்பிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. எவ்வாறாயினும், இந்த தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் முழுமையாக நட்டக்கழிவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானத்தினைப் பெற்ற பின்னர் தொகையினை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | எல்ஈசிஓ ஆனது சட்டமா அதிபர் திணைக்களத் திடமிருந்து சட்ட ஆலோசனையைப் பெறுகிறது. |
| (ஏ) | தொகுதிக்குள் எவ்விதமான அகல்விரிவான கட்டுப்பாடு மற்றம் நிர்வாக நடைமுறைக் கையேடும் காணப்படவில்லை. | தொகுதி, எழுத்துமூல நியமமான கட்டுப்பாடு மற்றும் நிர்வாக நடைமுறைகளினை தயாரித்து பேணுதல் வேண்டும். கையேடு தயாரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, தேவையானவற்றை புரிந்துகொண்டு அவற்றை பிரயோகிக்க ஊழியர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும். | கட்டுப்பாடு மற்றும் நிர்வாக நடைமுறைகளை உருவாக்குவது நடைபெற்று வருகிறன. | கையேடுகளை தயாரிப்பதற்கான ஆலோசகரை தேர்வு செய்ய விலைமனு கோரப்பட்டு, தற்போது நிபுணர்கள் குழு தயாரித்து வருகின்றது. |
| (ஐ) | வாடிக்கையாளரிற்கு வழங்கப்பட்ட பௌதீகரீதியான விலைப்பட்டியலுடன் முறைமையில் வருமான உத்தியோகத்தரால் உள்ளீடு செய்யப்பட்ட அலகுகளின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்கு கம்பனி எந்தவொரு கட்டுப்பாடுகளையும் அமுல்ப்படுத்தியிருக்கவில்லை. அத்தகைய வேறுபாடுகளை வாடிக்கையாளர் அறிவிக்கும் போது அத்தகைய வேறுபாடுகளை கம்பனி | வருமானத்தை துல்லியமாக பதிவு செய்ய நம்பகமான முறையை பின்பற்றப்பட வேண்டும். | இதுபோன்ற பிரச்சினைகளை குறைக்க தொலை மீட்டர் வாசிப்பு வசதியுடன் வாடிக்கையாளர்களுக்காக ஸ்மார்ட் மீட்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. | எந்த நடவடிக்கையும் சரி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்காணுகின்றது. இது பிழையான வருமான இனங்காணுதலை விளைவிக்க முடியும். | | | |
| (ஒ) | ஒழுங்கான அடிப்படையில் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை முகாமைத்துவம் மீளாய்வு செய்திருக்கவில்லை. இதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8.7 பில்லியன் தொகையான சொத்துக்களை கம்பனி முழுமையாக பெறுமானத்தேய்விட்டிருந்தது. | ஒழுங்கான அடிப்படையில் சொத்துக்களின் ஆயுட்காலத்தை முகாமைத்துவம் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் அதற்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மான வீதங்கள் தொழில்துறை நடைமுறைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. | தொழில் நிபுணத்துவ உதவியாளரைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படும். |
| (ஓ) | புதிய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 53,541,250 கிரயத்தில் 2001 ஆம் ஆண்டில் நரஹேன்பிட்டியவில் 73.85 பேர்ச்கள் காணியொன்றை கம்பனி கொள்வனவு செய்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டளவில் நிர்மாணம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் காணிப் பாதுகாப்புத் தொடர்பாக ரூபா 10 மில்லியனிற்கு மேற்பட்ட தொகை 18 ஆண்டுகளிற்கு மேலாக செலவிடப்பட்டிருந்ததுடன் 1999 செப்தெம்பர் தொடக்கம் 2019 யூன் வரை கட்டிடத்தை வாடகைக்கு பெறுதல் தொடர்பாக ரூபா 208 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இடம் போதாமை காரணமாக 2015 இல் வாடகைக்கு பெறப்பட்டிருந்த மேலதிகக் கட்டிடத்திற்காக 2019 யூன் வரை வாடகையாக ரூபா 22.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | மேலதிக தாமதமின்றி நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டுமானப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. | நிறைவேற்றுவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலின்” பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்ப்படுத்தும் போது பங்களிப்பு செய்ய வேண்டிய போதிலும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் அதேபோல் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலுடன்” இணங்குதல் வேண்டும். | செயல் திட்டம் கண்டறிந்து, அதை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (க) | ஏகல களஞ்சியம், வஸ்கடுவ களஞ்சியம், கோட்டே கிளை, நுகேகொட கிளை மற்றும் நீர்கொழும்பு கிளை ஆகியவற்றின் சரிபார்கும் தாள்களுக்கும் பொது பேரேட்டின் தொகைக்குமிடையே வேறுபாடுகள் முறையே ரூபா. 841,799, ரூபா. 763,212, ரூபா. 2,149,068, ரூபா. 1,527,221 மற்றும் 547,038 ஆக காணப்பட்டன. | வேறுபாடுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (கா) | வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மீற்றர் சோதனைக் கட்டணங்கள், வாடிக்கையாளர்கள் செலுத்தும் புள்ளியில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு, அந்தத் தொகை ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், மீற்றர் சோதனையில் பிழைகள் கண்டறியப்பட்டால், வாடிக்கையாளரிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளப்பெறப்பட வேண்டும். இருப்பினும், மீற்றர் சோதனைக் கட்டணங்கள் மூலம் கிடைக்கும் வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட வருவாய், எஸ்எல்எப்ஆர்எஸ் 15 இன் பந்தி 31 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்கவில்லை. | | | |
| (கி) | எல்கேஏஎஸ் 2 இன் பிரிவு 9 இன் பிரகாரம், இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய நிகர பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்பட்டது. இருப்பினும், பங்கு மதிப்பீட்டிற்கான தேறிய நிகரப் பெறுமதியினை கம்பனி கருத்தில் கொள்ளவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (கீ) | எல்ஈசிஓவின் நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக சட்ட மற்றும் நிர்வாக முகாமையாளரால் 29 ஏப்ரல் 2021 ஆம் திகதியிட்ட எல்ஓ/ ஜீஈஎன்/13 இலக்க கடிதத்தின்படி, கம்பனிக்கு எதிராக ரூபா. 11,253,884 தொகையுடன் மூன்று சட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் கம்பனிக்கு சாதகமாக தீர்மானம் வருவதற்கான நிகழ்தகவு குறைவாகவே காணப்பட்டமையானது அவதானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் எல்கேஏஎஸ் 37 இன் படி, நிகழத்தக்க பொறுப்பு தொடர்பான வெளிப்படுததல்களை கம்பனியால் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (கு) | எல்கேஏஎஸ் 1 இல் பந்தி 32 இன் படி, நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல், வழங்குனர்களிடமிருந்து தாமதக் கட்டணங்கள் ரூபா. 64,314,868 தொகையானது மீளாய்வாண்டில் | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெற |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழிற்பாட்டுச் செலவினத்திற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டது. | | | வில்லை |
| (கூ) | பட்டியலிடல் முறைமையில் உள்ளடங்கிய மீளாய்வாண்டின் வியாபாரக் கடன்பட்டோருக்கு எதிராக வாடிக்கையாளர்களின் செலவு நிலுவைகள் ரூபா.9,174,474 பெறுமதியினை கம்பனி ஈடுசெய்துள்ளமையானது அவதானிக்கப்பட்டது. மேலும், இச் செலவு மீதிகள் அனைத்தும் அதிக கட்டணமாக செலுத்தப்பட்ட மின்சாரக் கட்டணங்களில்லை, அவற்றில் பெரும்பாலானவை சூரிய மின்சக்தி கடன் வைத்திருப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கொடுப்பனவுகளாகும். கம்பனியின் பட்டியலிடல் முறைமையிலிருந்து உருவாக்கப்பட்ட கடன் தீர்வு அறிக்கையின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட சூரியக்கலன் கடன் தவணைகளை தேசிய சேமிப்பு வங்கிக்கு மாற்றுகின்றது. சூரியக்கலன் கடன் தவணைகள் பட்டியலிடல் முறைமையில் சரியான புதுப்பிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, மேற்கூறிய கடன் தீர்வு அறிக்கை உன்மையானதகாக காணப்படவில்லை. இதனால், வசூலிக்கப்பட்ட தவணையை வங்கிக்கு மாற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. | தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களின் தேவைக்கு இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (கெ) | மீளாய்வாண்டில் அட்டுறு செலவுகளுக்குள்ளடக்கப்பட்ட சில்லறைக் கடன்கொடுத்தோருக்கு எதிராக முற்பணக்கொடுப்பனவுகள் ரூபா. 9,385,853 தொகையானது பதிவளிப்பு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (கே) | 2020 திசெம்பர் 31 இல் கம்பனி நிலையான சொத்துகள் பதிவேட்டின்படி, முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் பெறுமதி ரூபா.9,206,401,000 ஆனது காணப்பட்டதுடன் அவற்றில் சில இற்றைவரை பயன்பாட்டில் உள்ளன. | கணக்கீட்டு நியமங்களின் தேவைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (கை) | 2020 திசெம்பர் 31 இல் படி, பொதுப் பேரேடு (நிதிக் கூற்றுக்கள்) மற்றும் மூலதன வேலைகளுக்கு வழங்கப்பட்ட அட்டவணை ஆகியவற்றுக்கு இடையே முன்னேற்றத்தில் உள்ள மூலதன வேலைகளில் வேறுபாடு காணப்பட்டது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் கொடுக்கல் வாங்கல்களை சரியாக பதிவு செய்வதில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| கிளை | 31.12.2020 இல் பொது பேரேட்டின் படி மீதிகள் (ரூபா.) | 31.12.2020 இல் பட்டியலின்படி மீதிகள் (ரூபா) | வேறுபாடுகள் (ரூபா.) |
|---|---|---|---|
| ------- | ----------- | ----------- | ---------- |
| கோட்டை | 124,530,978 | 124,637,375 | (106,397) |
| நுகேகொட | 215,834,467 | 237,329,923 | (21,495,456) |
| நீர்கொழும்பு | 29,970,666 | 35,308,618 | (5,337,952) |
| களுத்துறை | 96,670,525 | 96,695,527 | (25,002) |
| காலி | 77,226,400 | 65,301,260 | 11,925,140 |
| மொரட்டுவ | 32,400,255 | 32,204,210 | 196,045 |
| களனி | 21,444,022 | 21,417,744 | 26,278 |
| களுத்துறை - கட்டிடம் | 751,837 | N/A | - |
| நுகேகொட - 11KVA வலு வரிசை | 117,070,917 | N/A | - |
| தலைமை அலுவலகம் -கட்டடம் | 20,460,697 | N/A | - |
| தலைமை அலுவலகம் - துணையின் ADB நிதி | 725,414 | N/A | - |
| தலைமை அலுவலகம் -கட்டடம் | 6,133,274 | N/A | - |
| மொத்தம் | 743,219,454 | 612,894,657 | |

| | | | | |
|---|---|---|---|---|
| (கொ) | 2020 திசெம்பர் 31 இல் நுகேகொட கிளையில் ரூபா.5,997,445 தொகையானது வைப்பிலிடப்பட்டதுடன் நிதிக்கூற்றில் வங்கி மேலதிகப்பற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (கோ) | மக்கள் வங்கியில் ஒன்பது கால வைப்புத்தொகை மற்றும் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புத்தொகை தொடர்பான வட்டி வருமானம் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி, முதலீட்டு பெறுமதி அண்ணளவாக ரூபா. 136,806,661 இனால் குறைவடைந்திருந்ததுடன் வட்டி வருமானம் அண்ணளவாக ரூபா. 67,972,005 இனால் குறைவடைந்து காணப்பட்டது. | முதலீட்டின் மீதான வட்டி வருமானம் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (கௌ) | பயன்பாட்டு உரிமைச் சொத்துகளின் மீதான பெறுமானத் தேய்வு கம்பனியில் தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ஒவ்வொரு பயன்பாட்டு உரிமைச் சொத்திலிருந்தும் ஒரு மாதத்திற்கான பெறுமானத்தேய்வு அதிகமாக காட்டப்பட்டிருந்தன. | சொத்துகளின் பயன்பாட்டு உரிமையின் தேய்மானத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ங) | வருமானக் கூற்றிலிருந்து கழிக்கப்பட்ட பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா.188,775,000 இற்கு சமமாக இருந்தது. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது, கம்பனி ரூபா. 378,219,000 பணிக்கொடை ஏற்பாட்டில் சீராக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஙா) | விலைப்பட்டியல் முறைமைக்கும் நிதிக்கூற்றுக்களுக்கும் இடையே கடன்பட்டோர் மீதியில் ரூபா. 13,548,574 | வேறுபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் | முகாமைத்துவத்தின் கருத்துரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகை இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | லை | கிடைக்கப்பெற வில்லை |
| (ஙி) | மீளாய்வாண்டில் ஏனைய விரிவான வருமானக் கூற்றுமற்றும் இலாப மற்றும் நட்ட ஒருங்கிணைந்த கூற்றுகளில் அன்ரி எல்ஈசிஓ கம்பனியின் வருமான வரி செலவினத் தொகை ரூபா.6,092,227 ஆனது சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கட்டுப்படுத்தாத வட்டி மற்றும் தேறிய வருவாய் முறையே ரூபா.1,827,668 மற்றும் ரூபா. 4,264,559 தொகையினால் அதிகரித்துக் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதில் போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஙீ) | சூரிய மின்சக்தி கடன் திட்டம் 2017 பெப்ரவரி 13 ஆம் திகதியில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுடனான சந்திப்பின் போது ஒப்புக்கொள்ளப்பட்டு கம்பனியினால் தேறிய கணக்கு மற்றும் தேறிய கூட்டு முறையைப் பயன்படுத்தி மின்சாரம் வாங்குவதற்கான நட்ட சீராக்கல் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தன. | பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்கப்பட வேண்டும். இணங்காவிட்டால் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஙு) | கம்பனியினால் லங்கா பிறோட் பிறாட் நெட்வோக் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் லெகோ புரொஜெக்டஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றில் கம்பனியால் செய்யப்பட்ட முதலீட்டின் காலக்கழிவு நட்ட ஏற்பாடுகள் தொடர்பாக குழுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு தொடர்புடைய ஆவணங்கள் கிடைக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஙூ) | பட்டியலிடல் முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த கடன்படடோர் தொகை ரூபா.429,985,332 அல்லது 6 சதவீதமானது 2 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. மாகாண | கடன்பட்டோர் நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபைகளில் இருந்து பெற வேண்டிய காரணத்தினால் தெரு விளக்கு எரிசக்தி கட்டணங்களில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா.388,266,981 தொகையானது அல்லது 90 சதவீதமானது 2 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. | | | |
| (ஙெ) | மீளாய்வாண்டின் இறுதியில் VAT மற்றும் GST மீளப் பெறப்பட வேண்டிய 1999, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய தொகை ரூபா. 12,020,077 ஆனது மீளப்பெறப்படாமல் தொடர்ந்தும் காணப்படுகின்றது. | ஏனைய தரப்பினரிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஙே) | 2020 திசெம்பர் 31 இல் நிராகரிக்கப்பட்ட கணக்குகளில் ரூபா.8,075,976 தொகையானது இனங்காணப்படாத வைப்பாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பேரேட்டு கணக்குகளில் இணக்கம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களை பதிவழிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஙை) | கம்பனி தற்காலிக இணைப்புகளின் வைப்புத் தொகையான ரூபா. 12,335,580 ஆனது வசதி துண்டிக்கப்பட்ட பின்னர் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் இந்நிலுவைகள் நீண்ட காலமாக தொடர்ந்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டன. | வைப்புத் தொகையை மீளப்பெற அல்லது வருமானமாக அங்கீகரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஙொ) | களனி கோவிலிருந்து LECO இறுதி வரையான வீதி அமைப்பதற்கு 2012 யூன் 07 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ருபா.3,026,458 தொகையானது கம்பனியினால் | மூலதனத் செயற்திட்டங்களை தாமதமின்றி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கணக்காய்வு திகதி வரை கம்பனியினால் இச் செயற்திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | |
| (நோ) | நீண்ட காலம் நிலுவையாகவுள்ள VAT கொடுப்பனவுத் தொகை ரூபா. 33,427,699 முற்கொடுப்பனவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திகதி வரை மேலே கூறப்பட்ட நிலுவைகள் கம்பனியால அறவிடப்படமுடியவில்லை. | ஏனைய தரப்பினரிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஙௌ) | 2020 திசெம்பர் 31 இல் அம்பலாங்கொடை, ஜா-எல, மற்றும் கந்தானை ஆகிய இடங்களில் உள்ள நுகர்வோர் சேவை மையங்களின் கட்டடங்களை மீள்மதிப்பீட்டு நட்டங்கள் முறையே ரூபா.3,767,651, ரூபா.234,975 மற்றும் ரூபா. 26,916,683 ஆக காணப்பட்டன. | காணி மற்றும் கட்டடத்தின் கிரயம் சரியாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ச) | சூரியக்கலன் கடன் திட்டத்துடன் தொடர்புடைய தேறிய கணக்கு மற்றும் தேறிய மிகை முறையைப் பயன்படுத்தி மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சீஈபீ உடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (சா) | சுய உற்பத்தி கொடுப்பனவுகளுக்கான எந்த விதமான ஒப்பந்தங்களும் இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் கம்பனிக்குமிடையே மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சீஈபீ உடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (சி) | களனி, நுகேகொட மற்றும் மொரட்டுவ கிளைகளில் 9 வாடிக்கையாளர்களிடமிருந்து | வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் | முகாமைத்துவத்தின் கருத்துரை | முகாமைத்துவத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறப்பட்ட ரூபா. 1,326,946 பெறுமதியான 11 காசோலைகளும் வங்கியினால் மறுக்கப்பட்ட்ன. கம்பனி அவ் நிலுவைகளை மீளப் பெறுவதற்கு தேவையான எந்தவிதமான நடவடிக்கைகயையும் மேற்கொள்ளப்படாமையானது அவதானிக்கப்பட்டது. | தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்கப்பெறவில்லை | கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (சீ) | லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட்டினால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் இலங்கை மின்சார சபை ஆரம்ப உப மின் நிலையங்களை நிர்மாணித்திருந்தது மற்றும் 20020 திசெம்பர் 31 இல் கம்பனியினால் ரூபா. 206,610,712 பெறுமதியான கிரயம் காணி கட்டடத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. காணிகளின் பெறுமதி வியாபர மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் அங்கீகரிக்கப்பட்டது. மேலும், மேற்படி செயற்திட்டங்கள் தொடர்பாக கம்பனிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு அதிகமான பயன்களை ஏற்படுத்துவதற்கு நிறுவன வளங்களை பயன்படுத்த வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (சு) | இலங்கை மின்சார சபையின் முதன்மை உப நிலையம் அமைந்துள்ள (நாவல) 52.5 பேர்சசஸ் (Lot W) காணியுடன் தொடர்புடைய 6 பேர்ச்சஸ் காணி மற்றும் 14.55 பேர்ச்சஸ் காணி உரிமை கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த 6 பேர்ச்சஸ் காணியை வழங்குமாறு 2013 மார்ச் 04 ஆம் திகதி நீதிமன்றத்தினால் உத்தரவு வழங்கப்பட்டது. குறித்த தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கம்பனியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, வழக்கை மீளபெறுமாறு சட்டமா அதிபரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. 6 | கம்பனியின் பெறுமதியினை அதிகரிப்பதற்கும் மற்றும் இழப்பீட்டினை குறைப்பதற்கும் செயற்திறன் நடவடிக்கைகளை மிகவும் திறமையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேர்ச்சஸ் காணியை வழங்கவும் மற்றும் வீதியின் வலதுபுறத்தில் ஒரு தீர்வை அடையும். நிதிக்கூற்றில் இவ் வழக்கு தொடர்பாக எந்த வெளிப்பாடும் அல்லது சீராக்கலும் செய்யப்படவில்லை. அதற்கு மேலதிகமாக மேற்படி 6 பேர்ச்சஸ் காணியின் கொள்வனவு விலையான ரூபா.11,664,122 இனால் [(102,061,068/52.50)*6] கம்பனிக்கு நட்டம் எற்பட்டுள்ளது. | | | |
| (சூ) | கம்பனியின் ஆதனம் , பொறி, இயந்திர மற்றும் உபகரணங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. 31 திசெம்பர் 2020 இல் அண்ணளவாக புத்தகப் பெறுமதி ரூபா.243 மில்லியனாக இருந்ததுடன் மோட்டார் வாகனங்களின் பெறுமதியை ஈடுசெய்வதற்கு மட்டுமே காப்பீட்டு கொள்கை பெறப்பட்டிருந்தது. மேலதிகமாக நிலையான சொத்துக்களுக்கும் இருப்புக்களின் பெறுமதி ரூபா.2,805 மில்லியனுக்கும் 31 திசெம்பர் 2020 வரை காப்புறுதி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. | நிலையான சொத்துக்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (செ) | ல.508, அல்விட்டிகல வீதி, நாரஹேன்பிட்டில் அமைந்துள்ள 73.7 பேர்ச்சஸ் காணியானது ரூபா.53,432,500 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும். 2001 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக, மீளாய்வாண்டின் இறுதி வரை கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆலோசனைக் கட்டணங்கள் உட்பட இது சம்பந்தமாகச் செய்யப்பட்ட செலவினங்கள் மூலதனவேலை குறைவேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | கட்டுமான வேலைகளை தாமதமின்றி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (சே) | 2000 சனவரி முதல் 2018 வரை கிளை அலுவலகங்கள், வாடிக்கையாளர் சேவை நிலையங்களை அமைப்பதற்காக காணி வாங்கப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரை கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. விவரங்கள் பின்வருமாறு. | கம்பனிக்கு நீண்ட கால பயன்களை உருவாக்குவதற்கு அவற்றின் கட்டுமான வேலைகள் தாமதமின்றி நிறைவடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| அலுவலகம் | காணி கொள்வனவு செய்யப்பட்ட திகதி | இடப் பரப்பளவு (பெர்ச்ஸ்) |
|---|---|---|
| கிளை அலுவலம் களனி | ஆகஸ்ட் 2001 | 117.55 (2 Rood 37.55 பெர்ச்ஸ்) |
| சி.எஸ்.சி - தலுகம | ஆகஸ்ட் 2015 | 57.12 (1 Rood 27.12 பெர்ச்ஸ்) |
| சி.எஸ்.சி – வத்தளை | 1994 | 30 |
| சி.எஸ்.சி – நீர்கொழும்பு | 19 ஒக்டோபர் 2018 | 32.3 |
| சி.எஸ்.சி – பயாகலை விடுதிகள் | 2019 | 15.5 |
| கிளை அலுவலம்-கோட்டை | 26 சனவரி 2000 | 51.50 (1 Rood 11.5 பெர்ச்ஸ்) |
| சி.எஸ்.சி – | 10 மே | 35.80 |

| | | |
|---|---|---|
| நுகேகொட | 2001 | |
| சி.எஸ்.சி – பாணந்துறை விடுதி | மே 2019 | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| (சை) | வத்தளையில் வாடிக்கையாளர் சேவை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 1994 ஆம் ஆண்டு 99 வருட குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அமைச்சரவை அனுமதியுடன் காணி பெற்றுக்கொள்ளப்பட்டது. கம்பனியால் அக்காணியில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய எந்தவித நடவடிக்கைகள் தொடப்படவுமில்லை மற்றும் கூறப்பட்ட கட்டடங்கள் அமைக்க முடியாமையினால் 2003 ஆகஸ்ட் 20 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், 1997 இல் இக்காணியின் மொத்தப் பெறுமதி ரூபா. 3,099,000 ஆனது கம்பனியினால் உள்ளடக்கப்பட்டிருந்துடன் சில்லறைக் கடன்பட்டோராக பதிவு செய்யப்பட்டது எவ்வாறாயினும், இம் முதலீட்டினால் எந்தவிதமான நிதி நன்மை அல்லது ஏனைய நன்மைகள் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>அதை மீளப் பெற்றுக்கொள்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், திட்டமிட்டபடி CSC இனை அமைப்பதற்கு கம்பனி தவறியமையால் அந்தந்த அலுவலக கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு செயற்பட்டு வருகின்றன. | கம்பனியின் வளங்கள் கம்பனியின் அதிகபட்ச நன்மைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (சொ) | திட்டமிட்டபடி அலுவலக கட்டிடங்கள் நிர்மாணிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால், பெரும்பாலான அலுவலகங்கள் நீண்ட கால அடிப்படையில் வாடகை கட்டிடங்களில் தொழிற்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, கம்பனியால் அலுவலக வாடகைக்கு | செலவினங்களை வினைத்திறனுடன் முகாமை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகளவு செலவிடபபட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் அலுவலக வாடகை ருபா.71,429,500 ஆன தொகை காணப்படுகின்றது. | | | |
| (சோ) | 2020 மார்ச் 02 ஆம் திகதியில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா.2,000,000,000 தொகையான கடன் முறையான ஒப்பந்தங்கள் இலங்கை மின்சார சபையுடன் மேற்கொள்ளாது கம்பனியால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், கணக்காய்வுத் திகதி வரை மேற்கூறிய கடனின் எந்த தவணைக்கட்டணமும் கம்பனியால் பெறப்பட்டிருக்கவில்லை. | சீஈபீ உடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ள சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (சௌ) | தேசிய சேமிப்பு வங்கிக்கும் கம்பனிக்கும் இடையேயான சூரிய மின்சக்தி கடன் ஒப்பந்தத்தில் வட்டி செலுத்தும் திகதி மற்றும் வட்டிக் கணிப்பீட்டின் அடிப்படையில் தொகை ஆகியவை தெளிவாக குறிப்பிடப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | அனைத்து ஒப்பந்தங்களிலும் தேவையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளதா என அவதானம் செலுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞ) | முதன்மை பெறுகைத் திட்டமானது மூன்று வருட காலத்திற்கு பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கவில்லை. மேலும் இது 2020 இல் செய்ய திட்டமிடப்பட்ட பெறுகைகளையும் உள்ளடக்கின்றது. | பெறுகை வழிகாட்டுதலில் உள்ள விதிகளின்படி, முதன்மை பெறுகைத் திட்டம் 03 ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் விரிவான பெறுகைத் திட்டம் 1 வருடத்திற்குத் தயாரிக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞா) | முதன்மை பெறுகைத் திட்டம் தொடர்ந்து பதிவேற்றப்பட்டிருக்கவுமில்லை மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டுதலுள்ள ஏற்பாடுகளின் படி, முதன்மை பெறுகைத் திட்டம் ஆறு மாத கால | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடைவெளியில் நீடிக்காமல் தொடர்ந்து பதிவேற்றப்பட வேண்டும். | | |
| (ஞி) | முதன்மை பெறுகை திட்டத்தில் நியாயமான இருப்பு பொருட்கள் மற்றும் எழுதுபொருட்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. வேலைகளுக்கான பெறுகை, ஆலோசனை சேவைகள் உள்ளிட்ட சேவைகள் திட்டத்தில உள்ளக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் முதன்மை பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞீ) | திட்டத்தின் முன்னேற்றத்தை புதுப்பிக்க சரியான வழிமுறையில்லை, இதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட திகதியில் பெறுகை முன்னேற்றத்தை தனித்தனியாக அடையாளம் காண்பது கடினமாக காணப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளில் முன்னேற்றம் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞு) | முதன்மை பெறுகைத் திட்டத்தின்படி, 2020 இன் செயல்திட்டத்தில் 6 பெறுகைகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. இருப்பினும், செயற்திட்டத்திற்கும் பெறுகைத் திட்டத்திற்கும் சரியான தொடர்பு காணப்படவில்லை. | செயல் திட்டத்திற்கும் பெறுகைத் திட்டத்திற்கும் இடையே சரியான இணைப்பு காணப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞூ) | பீஈடி/12 சுற்றறிக்கையின் பிரிவு 9.3 இன் படி ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை கம்பனி அனுமதி பெறவில்லை. | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞெ) | பீஈடி /12 சுற்றறிக்கையின் பிரிவு 9.2 இன் படி, பொதுத் திறைசேரியின் பொது முயற்சி திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்ட | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் | முகாமைத்துவ த்தின் கருத்துரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனக்கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் கம்பனியினால் தயாரித்து பராமரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கைகளுடன் இணங்கப்பட வேண்டும். | லை | கிடைக்கப்பெற வில்லை |
| (ஞே) | பீஈடி/12 சுற்றறிக்கையின் பிரிவு 9.14 இன் அடிப்படையில் கம்பனி ஒரு நடைமுறைக் கையேட்டைத் தயாரிக்கவில்லை. | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞை) | மீளாய்வாண்டில் நிர்வாக அலுவலர், உதவிக் கணக்காளர், போக்குவரத்து நிர்வாகி மற்றும் பயிற்சி நிர்வாகி ஆகிய பதவிகளுக்கு எட்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், அந்தந்த நிறுவனங்களில் இருந்து தகுதிகள் மற்றும் பணி அனுபவம் தொடர்பாக விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நியாயமானதும் மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | ஆவணங்களின் உண்மைத் தன்மையானது சரிபார்க்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (ஞொ ) | நிர்வாக அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி 2009 நவம்பர் 26 முதல் 2015 மே 08 வரை 5 ஆண்டுகள் நிதிக் கம்பனியில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்துள்ளர். இருப்பினும், தொடர்புடைய நிதி கம்பனி வழங்கிய தகவல்களின் படி, மேற்கூறிய நபருக்கு சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமில்லை என்பது தெரிய வந்தது. அந்த கால கட்டத்தில், அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் இளங்கலை பட்டதாரியாக இருந்தார். இதன்படி, அவர் சமர்ப்பித்த சேவை சான்றிதழ் போலியான ஆவணமாக | ஆவணங்களின் உண்மைத் தன்மையானது சரிபார்க்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |


| | | | | |
|---|---|---|---|---|
| | இருக்கலாம் என மேலும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஞோ) | உதவிக் கணக்காளர் ஆட்சேர்ப்பு தொடர்பாக, 2020 செப்டம்பர் 21 வரை கம்பனிக்கு 1,382 விண்ணப்பங்கள் பெறப்பட்டன, அவற்றில் முதல் 325 விண்ணப்பங்கள் மட்டுமே தேர்வுக்கு பரிசீலிக்கப்பட்டன. மேலும், வேறு எந்த நியாயமான காரணங்களும் இல்லாமல், மீதமுள்ள 1057 விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பு செயல்முறைக்கு மதிப்பீடு செய்யப்படவில்லை. | கம்பனிக்கு பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் முறையான முறைமையை உருவாக்க வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ஞௌ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிதிப் பிரிவின் மீள்சீரமைப்பின் கீழ் உதவிக் கணக்காளர் பதவி வெற்றிடத்தை நிரந்தர அடிப்படையில் நிரப்ப திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 09 மற்றும் 2021 சனவரி 12 ஆம் திகதிகளில் மூன்று விண்ணப்பதாரர்கள் இந்த பதவிக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். தகுதியான ஏராளமான விண்ணப்பதாரர்கள் அந்த பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். எவ்வாறாயினும், கணக்காய்வு திகதி வரை நிரந்தர அடிப்படையில் அந்தப் பதவி வெற்றிங்களை நிரப்ப எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கம்பனிக்கு பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் முறையான முறைமையை உருவாக்க வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |
| (ட) | உதவி கணக்காளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் போது, நபர்களின் விண்ணப்பங்கள் நேரடியாக கம்பனித் தலைவரிடம் அனுப்பப்பட்டது, சாதாரண அடிப்படையில் உதவிக் கணக்காளர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவர்களை பரிசீலிக்குமாறு | கம்பனிக்கு பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் முறையான முறைமையை உருவாக்க வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | மனிதவளத் தலைவருக்குஅவர் அறிவுறுத்தினார். கம்பனியின் நடைமுறைகளின் படி,, சிரேஸ்ட நிதி அதிகாரி, கம்பனியின் தற்போதைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி நேர்காணல்களை மேற்கொண்டார், மேலும் விண்ணப்பதாரர்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சாதாரண அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பான சான்றாதாரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பட்டிருக்காமையானது அவதானிக்கப்பட்டது. | | | |
| (டா) | செய்தித்தாள் விளம்பரத்தின்படி. உதவிக் கணக்காளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 3 நபரில் விண்ணப்பதாரர் இலக்கம். 103, அவர் 2020 செப்டம்பர் 16 ஆம் திகதியில் சமர்ப்பித்த விண்ணப்பத்துடன் (முதல் விண்ணப்பம்) கூடுதலாக 2020 திசெம்பர் 01 ஆம் திகதியில் தலைவருக்கு ஒரு விண்ணப்பத்தை (இரண்டாவது விண்ணப்பம்) நேரடியாகச் சமர்ப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பதாரர் 11 வார காலத்திற்குள் சமர்ப்பித்த இந்த இரண்டு விண்ணப்பங்களையும் பரிசோதித்ததில், இரண்டு விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைச் சான்றிதழ்களுக்கும் அனுபவ காலத்துக்கும் இடையில் முரண்பாடு காணப்பட்டது. மேற்படி விண்ணப்பதாரர் அனுப்பிய இரண்டாவது விண்ணப்பத்தின்படி, அவருக்கு பொது பேரேட்டில் மற்றும் கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் கணினி அடிப்படையிலான கணக்கியல் முறையுடன் பணி அனுபவம் இல்லை மற்றும் தனியார் நிறுவனத்தில் வாடிக்கையாளர் சேவை அதிகாரியாக ஒரு வருட அனுபவம் மட்டுமே | கம்பனிக்கு பொருத்தமான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையை உருவாக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்தது. எவ்வாறாயினும், மேற்கண்ட முரண்பாடுகளுடன் இரண்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சாதாரண அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. | | | |
| (டி) | வேலை விபரம் மற்றும் போக்குவரத்து நிர்வாகி மற்றும் பயிற்சி நிர்வாகி பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட வேலைப்பட்டியல் ஆகியவை கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | வேலை விபரங்கள் மற்றும் கடமை பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப் பெறவில்லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |
| (டீ) | பெறுகை தாமதம் காரணமாக வருடாந்த செயல்பாட்டு திட்டத்தில் திட்டமிட்டபடி LBS ஆட்டோமேஷன், ∴பீடர் எண்ட் வோல்டேஜ் கண்காணிப்பு, தெரு விளக்கு கட்டுப்பாடுகள் போன்ற சில செயல்பாடுகளை கம்பனியால் நிறைவேற்ற முடியவில்லை. | திட்டமிட்ட படி இலக்குகளை அடைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவத்தின் கருத்துரை கிடைக்கப்பெறவில் லை | முகாமைத்துவ த்தின் கருத்துரை கிடைக்கப்பெற வில்லை |

## 4.84 வெஸ்ற் கோஸ்ற் பவர் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 40,653,198,427 | 28,549,747,785 | 78,742,999,488 | 17,045,740,424 | 12,103,450,641 | முனைப்பழியற்ற |
| **2019** | 49,390,293,390 | 37,827,250,026 | 73,475,019,095 | 12,730,159,755 | 11,563,043,364 | முனைப்பழியற்ற |
| **2020** | 46,293,609,871 | 30,718,744,552 | 89,344,010,769 | 15,557,526,991 | 15,574,865,318 | முனைப்பழியற்ற |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 40653.20 | 28549.75 | 78743.00 | 17045.74 | 12103.45 |
| 2019 | 49390.29 | 37827.25 | 73475.02 | 12730.16 | 11563.04 |
| 2020 | 46293.61 | 30718.74 | 89344.01 | 15557.53 | 15574.87 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மின்வலு உற்பத்திகள் தொடர்பான மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியால் வழங்கப்பட்ட மாதாந்த விலைப்பட்டியல்கள் இலங்கை மின்சார சபையினால் (சீஈபீ) | இது தொடர்பாக முறையான கொள்கை ஸ்தாபிக்கப்பட வேண்டும். | வெஸ்ற் கோஸ்ற் பவர்(டபிள்யுசிபி) மற்றும் சீஈபி ஆகியன இவ் விடயத்தை கலந்தாலோசிக்கின்றன, ஆனால் அவர்கள் | வெஸ்ற் கோஸ்ற் பவர்(டபிள்யுசிபி) மற்றும் சீஈபி ஆகியன இவ் விடயத்தை கலந்தாலோசிக்கின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் பல தடவைகள் சீஈபீ ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை விலைப்பட்டியலிடப்பட்ட தொகையை விடக் குறைவாக காணப்பட்டது. இணங்கப்பட்ட தொகையை சீஈபீ உறுதிப்படுத்துகின்றதுடன் வேறுபாட்டிற்கு தாக்கம் செலுத்துகின்ற காரணங்களை வழங்குவதில்லை. எனினும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் இப் பிரச்சனைக்கான தீர்வை கம்பனியால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | இறுதி ஒப்பந்தத்திற்கு இற்றைவரை வரவில்லை. மேலும், பல தடவைகள் பராமீற்றர் வேறுப்பட்டமை தொடர்பாக டபிள்யுசிபிஎல் இற்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் சிஈபீ இனால் எந்தவிதமான பதிலும் வழங்கப்படவில்லை. இருப்பினும், சர்ச்சைக்குரிய தொகைக்கு டபிள்யுசிபீஎல் 50% இழப்பீடு வழங்கியுள்ளது. | றன, ஆனால் அவர்கள் இறுதி ஒப்பந்தத்திற்கு இற்றைவரை வரவில்லை. மேலும், பல தடவைகள் பராமீற்றர் வேறுப்பட்டமை தொடர்பாக டபிள்யுசிபிஎல் இற்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் சிஈபீ இனால் எந்தவிதமான பதிலும் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | கம்பனியானது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் உதவிக் கணக்காளர் ஆகிய மூன்று பதவிநிலை உத்தியோகத்தர்களை கொண்டிருந்த போதிலும் கம்பனிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தை (எஸ்ஓஆர்) தயாரித்திருக்கவில்லை. | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை ஏற்பாடுகளை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | கம்பனியில் சிஈஓ, கணக்காளர் மற்றும் உதவி கணக்காளர் மட்டுமே உள்ளனர். மேலும் பணியாளர்களை நியமிப்பதற்கு எந்தவித திட்டமும் காணப்படவில்லை. | மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான எந்தவித திட்டமுமில்லை. அதனால் எஸ்ஓஆர் நிலைப்பாடு அவ்வாறே காணப்படுகின்றது. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் | கம்பனீ 300 மெகாவாட் கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தை சொந்தமாக வைத்து நடத்துகிறது. அது மட்டுமே கம்பனியின் தொழிற்பாடாகவுள்ளது. | மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் கீழ் சீஈபீ வழங்கிய அறிவுறுத்தல்களின்படி இயக்கப்படும் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்பாடுகளை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | அதன் பரிவர்த்தனைகள் சீபிசீ இனால் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருளுக்காக செலுத்தப்படும் கொடுப்பனவுகள், உபகரணகள் வழங்குனர்களால் பரிந்துரைக்கப்பட்ட சில இரசாயனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஓஅன்எம் ஒப்பந்த முகாமைத்துவமத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பின்பற்றப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள். மின் உற்பத்தி நிலைய உள்கட்டமைப்பில் ஏதேனும் முன்னேற்றத்திற்கான மூலதன வரவு செலவுத் திட்டமும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | கிடைக்கச் செய்வதே இந்த கம்பனியின் ஒரே நோக்கமாகும். கம்பனிக்கு சீஈபீ மூலம் வருடாந்த மற்றும் அண்ணளவாக அனுப்புதல் திட்டம் மட்டுமே வழங்கப்படுகிறது. 2021 மார்ச் 31 ஆம் திகதியில் இருந்த நிலை அப்படியே உள்ளது. |
| (ஈ) | கம்பனியால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை ஏற்பாடுகளை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | சட்டரீதியான கணக்காய்வு பாதீடு மற்றும் இந்த நடைமுறைகளுடனான முறைப்பாடுகள் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கம்பனிக்குள் பிரவேசிப்பதற்கு 03 ஊழியர் மட்டுமே உள்ளனர். | இந்த கம்பனியின் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை சொந்தமாக்க ஒரு ஒற்றை நோக்க முறைமையாக கம்பனியுள்ளது. சீஈபீ உடன் கையொப்பமிடப்பட்ட பீபீஏ இன் தேவைகளின்படி, மின் |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உற்பத்தி நிலையத்தின் முழு செயல்பாடும் ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்படுகிறது.<br><br>நிறுவனத்தின் செயல்பாடுகள் வரையறுக்கப்பட்டவை மற்றும் வெளியக கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. |
| (உ) | மீளாய்வாண்டின் போது கம்பனியால் கணக்காய்வுக் குழுக்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லை. | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை ஏற்பாடுகளை கம்பனி பின்பற்றுதல் வேண்டும். | சட்டரீதியான கணக்காய்வு பாதீடு மற்றும் இந்த நடைமுறைகளுடனான முறைப்பாடுகள் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கம்பனிக்குள் பிரவேசிப்பதற்கு 03 ஊழியர் மட்டுமே உள்ளனர். | நிலைப்பாடுகள் அவ்வாறே உள்ளது. |
| (ஊ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்படுத்துவதில் பங்களிப்பு செய்ய வேண்டும். எனினும் கம்பனி எஸ்டிஜீ தொடர்பாக அறிந்திருக்காததுடன் அடைந்துகொள்ளப்பட வேண்டிய | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரல்" இன் ஏற்பாடுகளை கம்பனி பின்பற்றுதல் வேண்டும்.. | கம்பனி சீஈபீ உடன் மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன் மற்றும் அதற்கு இணங்கியது | கம்பனி பீபீஏ இனைக் கடைபிடிக்கிறது. கம்பனி பீபீஏ பற்றி அறிந்திருக்கிறது மற்றும் சீஈபீ போன்றவற்றை பீபீஏ இல் சேர்த்துள்ளது. டபிள்யுசீபீஎல் உடன் பீபீஏ இணங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேறகெகாண்டுள்ளது மற்றும் சுற்றுச்சூழலைப் |

இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயன்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கு பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

பாதுகாக்கும் மின்நிலையத்தை இயக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 4.85 வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சக்திக் கம்பனி

| | மொத்த வருமானம்<br>ரூபா | மொத்த செலவினம்<br>ரூபா | மொத்த சொத்துக்கள்<br>ரூபா | மொத்த பொறுப்புக்கள்<br>ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)<br>ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,769,526 | 17,608,938 | 88,775,429 | 8,669,386 | (14,839,412) | முனைப்பழியற்றது |
| **2019** | 1,771,230 | 15,246,464 | 68,177,476 | 1,470,740 | (13,475,234) | முனைப்பழியற்றது |
| **2020** | 102,596 | 12,977,874 | 61,530,167 | 8,499,147 | (12,875,278) | முனைப்பழியற்றது |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 97.60 | 82.21 | 248.07 | 85.05 | 15.39 |
| 2019 | 102.97 | 89.18 | 244.55 | 76.24 | 13.79 |
| 2020 | 96.04 | 86.10 | 325.41 | 156.75 | 9.94 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | சங்கிலி இணைப்பு வேலியின் (Chain Link Fence) நிர்மாணம் ருஹுணு அபிவிருத்தி ஒப்பந்த மற்றும் பொறியியலாளர் (தனியார்) கம்பனிக்கு 2015 ஆகஸ்ட் 14 இல் ரூபா 48,282,120 ஒப்பந்தப் பெறுமதிக்கு | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதியானது ஆறு (06) மாதங்களாக இருந்தது. நிர்மாணத்தின் ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதி 2016 பெப்ரவரி 13 ஆக இருந்தது. நிர்மாண ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு 2018 மே 31 வரை பதினொரு (11) கால நீடிப்புக்களை வழங்கியிருந்த போதும், இவ்வறிக்கை திகதி வரை பௌதீக செயன்முன்னேற்றம் 98 சதவீதமாகவே இருந்தது. | | | |
| (ஆ) | சம்பூரில் திருகோணமலை மின்சக்தி கம்பனி விமிட்டட்டால் 50 MW சூரியசக்தி மின்நிலையத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் கூட்டுமுயற்சி பங்குதாரர் உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் மேற்படி மின்நிலையத்தின் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு பொறுப்பான தரப்பினர்கள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த | செயற்திட்ட நடவடிக்கைகளை செயன்முறைப்படுத்துவதற்கும் கூட்டிணைந்த திட்டம் மற்றும் | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை தயாரிப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் | | |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | முகாமைத்துவம் கம்பனிக்கான வருடாந்த பாதீட்டை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |
| (உ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 மற்றும் 41 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்திருக்கவில்லை. அல்லது உளளக கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபித்திருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி ஆரம்பித்ததிலிருந்து | சுற்றறிக்கை மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாளதுவரை ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | | |
| (ஏ) | ரூபா 2,985,550 தொகையான காணி மற்றும் அபிவிருத்தி சொத்துக்களை பதிவழித்தமைக்காக ஒப்பந்ததாரர் ஒப்புதல் மற்றும் சபைத் தீர்மான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்று வலியுறுத்தல்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்றினை ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் வழங்கப்பட வேண்டியதுடன் செயன்முறைகள் மீது அமுல்ப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின் முறையான நிறைவேற்றலை உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |
| (ஏ) | தேசிய அனல் மின்சக்தி கூட்டுத்தாபன மதியுரை பணி ஒதுக்கீட்டிலிருந்து பெறவேண்டிய ரூபா 3,241,657 முற்பணத்திற்கான ஆதாரப்படுத்தும் மூல ஆவணம் அல்லது உறுதிப்படுத்தல் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இம் முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் அவற்றின் அறவீட்டுத்தன்மையை மீளாய்வு செய்வதற்கு முகாமைத்துவம் நட்வடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | ரூபா 10,00,000 தொகையான வங்கி வைப்புக்களிற்காக குறுங்கால வங்கி வைப்புக்களின் புதுப்பித்தல் அறிவித்தல் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் குறுங்கால வங்கி வைப்புக்கள் தொடர்பாக ஆதாரப்படுத்தும் ஆவணங்களை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்வு பரீட்சிப்பிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |
| (ஓ) | பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி என்பன கம்பனியில் காணப்படவில்லை. | உரிய வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. |

## 4.86 லெகோ புரொஜெக்டஸ் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 787,608 | 834,328 | 7,181,466 | 8,331,522 | (46,720) | தனியார் கணக்காய்வு நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டது |
| **2019** | 520,691 | 379,545 | 7,356,180 | 8,365,090 | 141,146 | முனைப்பழியற்றது |
| **2020** | 792,057 | 364,550 | 8,147,891 | 8,780,595 | 427,507 | முனைப்பழியற்றது |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இக் கம்பனி லங்கா எலக்ட்றிசிட்டி (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 1,000 பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2012 | கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். | நட்டத்தை போக்க மேலதிக செயற்திட்டங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூபா 28 மில்லியனுக்கு | கம்பனியை திருப்திகரமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இல் தொடங்கப்பட்ட கம்பங்கள் உற்பத்தித் திட்டத்தின் தரச் சோதனைகள் தோல்வியடைந்தமையால் திரண்ட இலாபம் ரூபா 5.9 மில்லியனிலிருந்து ரூபா 3.4 மில்லியன் திரண்ட நட்டம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மிகவும் எளிமையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இக் கம்பனி அதிக சம்பளக் கிரயம் மற்றும் காணிக்கான குத்தகை வாடகை என்பவற்றைத் தாங்க வேண்டியிருந்தது. கடந்த சில ஆண்டுகளாக எவ்வித செயற்பாடுகளும் இல்லாத போதிலும் கம்பனியைச் செயற்படுத்துவதற்கான பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் முகாமைத்துவச் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஒரு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டம் 2022 சனவரியில் மேற்கொள்ளப்பட்டது. இது திரண்ட நட்டத்தை குறைக்கும். | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயற்பாடுகள் இல்லாததால், ஆண்டறிக்கை தயாரிக்கப்படவில்லை. | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை | வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | சீல் வைக்கப்பட்ட இடத்தில் எந்த ஊற்ற இறக்கமும் இல்லாமல் குறித்த | அத்தகைய சரக்கிருப்புக்கள் அசைவற்ற மூலப்பொருட்கள் என |

| | | | | |
|---|---|---|---|---|
| | ல. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீதி ரூபா 12,141,603 ஆக காணப்பட்டது. | | காலப்பகுதிக்கான இருப்பு மீதிகள் அவ்வாறே காணப்பட்டன. | அடையாளப்படுத்துவதற்கு பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| (ஈ) | நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்து மீதி ரூபா 5,159,044 ஆக காணப்பட்டது. | ஒவ்வொரு ஆண்டிறுதியிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலையான சொத்துக்கள் அனைத்தும் எந்த ஏற்ற இறக்கமும் இல்லாமல் காணப்படுகின்றது. | இவை முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட பொருட்களாக பிரதிபலிக்கின்றன. |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5,159,044 ஆக காணப்பட்டதுடன் இந்த சொத்துக்கள் அனைத்தும் 2013 முதல் விளைவற்றிருந்தன. | சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்து நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பயன்படுத்த வேண்டும். | இந்த நிலையான சொத்துக்கள் அனைத்தும் எந்த ஏற்ற இறக்கமும் இல்லாமல் காணப்படுகின்றது. | இவை முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட பொருட்களாக பிரதிபலிக்கின்றன. |
| (ஊ) | 2003 யூன் 02 இல் வெளியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் இலக்க பற்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று நிறுவனத்தின் எதிர்கால வழிகாட்டல் தொடர்பான மூலோபாயங்களை ஒன்றிணைக்கின்றது. கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | எந்த செயல்பாடுகளும் இல்லாததால் கூட்டிணைந்த திட்டம் காணப்படவில்லை. | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.87 மகநெகும கென்சல்ரன்சி அன்ட் புரஜெக்ட் மனேஜ்மென்ட் சேர்விஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா | மொத்த செலவினம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 232,823,189 | 213,766,202 | 499,436,083 | 107,919,019 | 19,056,987 | முனைப்பழியுள்ளது |
| **2019** | 251,998,683 | 217,100,535 | 531,482,358 | 116,489,335 | 34,898,148 | மறுப்பு |
| **2020** | 181,367,841 | 167,827,660 | 522,410,890 | 101,221,270 | 13,540,181 | முனைப்பழியுள்ளது |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | ------------------------------- | ----------------------- | ----------------------- | ----------------------- |
| (அ) | கம்பனியால் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட | கம்பனி எல்கேஏஎஸ் 08 இன் பிரகாரம் மீளக் | குறித்துக் கொள்ளப்பட்டதுட ன் அனைத்து சொத்துக்களையும் | மீள்மதிப்பீட்டு செயன்முறை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்துகளின் கிரயம் ரூபா 21,745,498 ஆக காணப்பட்ட போதிலும் எல்கேஏஎஸ் 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு இணங்க மீள்மதிப்பீடு செய்வதற்கும், எல்கேஏஎஸ் 08 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகளுக்கு இணங்க முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட அத்தகைய சொத்துக்களை மீள குறிப்பிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில் முன்னைய கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாக இது அறிக்கையிடப்பட்டிருந்தது. | குறிப்பிடுவதற்கு அல்லது எல்கேஏஎஸ் 16 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ல்லை. |
| (ஆ) | எல்கேஏஎஸ் 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 67 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் அவற்றின் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாத போது சொத்துக்கள் மீள அங்கீகரிக்கப்படக்கூடாத போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் பயன்படுத்தப்படாத ரூபா 2,965,180 தொகையான முழுமையாக | எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 67 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்காலத்தில் பொருளாதார நலன்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாத போது அவை மீள | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் மீள்மதிப்பீட்டு செயன்முறையின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் கிரயம் அதன் நிதிக்கூற்றுக்களில் இருந்து மீள அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அது கம்பனியின் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படக் கூடாது. | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற வேண்டிய தொகை ரூபா 97,131,281 ஆக காணப்பட்ட போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 73,770,988 ஆக காட்டப்பட்டுள்ளது. ஆகையால் இரண்டு மீதிகளிற்கும் இடையில் ரூபா 23,360,293 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளல் இவ் வேறுபாடுகள் காணப்படட்டன. | வேறுபாட்டிற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு ஒரு விரிவான இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | இணக்கப்படுத்தல் செயன்முறை இன்னமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டிற்கான எடைக் கட்டணங்கள் மற்றும் அலுவலக கட்டிட வாடகைக்காக கம்பனியிலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 5,087,218 ஆக காணப்பட்ட போதிலும் வீதி | இது தொடர்பாக தொடர்ச்சியாக கணக்கிணக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்படும் கணக்குப் பதிவேடுகளில் அவ்வாறான தொகைகள் எதுவும் காட்டப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக கம்பனியால் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | ரூபா 35,160,969 கூட்டுமொத்தமான நிலுவையாகவுள்ள ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான பிடி பணம் மற்றும் வேலை விலைப் பட்டியல்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் முறையே ரூபா 52,696,059 மற்றும் ரூபா 44,950,700 தொகைகள் நிலுவையாக காணப்பட்டன. | RDA இடமிருந்து பெறவேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பரஸ்பரம் இணங்கிக்கொண்ட பின்னர் செலுத்த வேண்டிய மீதிகளிற்கு எதிராக ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மக நெகும வீதி நிர்மாண உபகரண கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையில் ஐந்தாண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ள ரூபா 882,118 தொகையான | முறையாக நடைமுறைகளைப் பின்பற்றி நிலுவை மீதிகள் தீர்க்கப்பட வேண்டும் அல்லது கம்பனியின் வருமானத்திற்குத் மீள | குறித்துக் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவற்றைத் தீர்ப்பதற்கு ஆதாரப்படுத்தும் ஆவணத்திற்காக நாங்கள் | இவ் அறிக்கை திகதி வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலை ஆரம்பிப்பு முற்பணம் தீர்ப்பனவு செய்யப்படாமல் உள்ளது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. | பதிவழிக்கப்பட வேண்டும். | காத்திருக்கிறோம். | |
| (எ) | சில செயற்திட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய நிலுவை மீதி ரூபா 23,041,015 தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக தீரப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டது. அதேநேரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் முதல் முறையே ரூபா 24,612,484 மற்றும் ரூபா 24,934,577 தொகைகள் நிலுவையாக உள்ளன. | முறையாக நடைமுறைகளைப் பின்பற்றி நிலுவை மீதிகள் தீர்க்கப்பட வேண்டும் அல்லது கம்பனியின் வருமானத்திற்குத் மீள பதிவழிக்கப்பட வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | கம்பனி வாழ்க்கைச் செலவுப் படியை புறக்கணித்து அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பிட்டு கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது. | கணிப்பீட்டிலும் கொடுப்பனவை மேற்கொள்வதிலும் வாழ்க்கைச் செலவு படி கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் சீர்செய்வதற்கு இணங்கப்பட்டுள்ளது. | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | கம்பனியால் பயன்படுத்தப்படும் சொத்துக்களுக்கு கம்பனி மற்றும் தொடர்புடைய தரப்பினரிடையே வாடகை உடன்படிக்கைகள் எதுவும் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கம்பனி உடன்படிக்கையை கைச்சாத்திட வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் RDA | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இன்னும் வழங்கியிருக்கவில்லை. | |
| (ஒ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவிற்கு முரணாக கம்பனி ரூபா 94,030 கூட்டுமொத்தமான எரிபொருள் படிகளை உரித்துள்ள எல்லைகளை மீறி 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனியின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தியிருந்தது. | கம்பனி காலத்திற்கு காலம் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்படும் சுற்றறிக்கைகளை பின்பற்ற வேண்டும் அல்லது தனியான நடைமுறையொன்றை தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டது. | RDA அல்லது வரிசை அமைச்சு இது தொடர்பாக கம்பனிக்கு தெளிவான வழிகாட்டல் பற்றிய தெளிவான ஆலோசனையை இன்னும் வழங்கியிருக்காததால், அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் தலைவருக்கு மாதாந்தம் அனைத்தும் உள்ளடங்கலாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 75,000 ஆக காணப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டில் தலைவருக்கு உரித்துள்ள எல்லைகளுக்கு முரணாக ரூபா 2,400,000 தொகை மேலதிகமாக | கம்பனி காலத்திற்கு காலம் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்படும் சுற்றறிக்கைகளை பின்பற்ற வேண்டும் அல்லது தனியான நடைமுறையொன்றை தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தை | 001/02/2020 ஆம் இலக்க சபை பத்திரத்தின் பிரகாரம், தலைவரின் சம்பளம் மற்றும் ஏனைய ஊதியம் அப்படியே இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. | RDA அல்லது வரிசை அமைச்சு இது தொடர்பாக கம்பனிக்கு தெளிவான வழிகாட்டல் பற்றிய தெளிவான ஆலோசனையை இன்னும் வழங்கியிருக்காததால், அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் முறையே ரூபா 3,313,000 மற்றும் ரூபா 4,530,000 தொகைகள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெற்றுக்கொள்ள வேண்டும். | | |
| (ஔ) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ள போதிலும் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் முகாமைத்துவம் ஒவ்வொரு நான்கு ஆண்டுகளிற்கும் சுழற்சி அடிப்படையில் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டது. | RDA அல்லது வரிசை அமைச்சு இது தொடர்பாக கம்பனிக்கு தெளிவான வழிகாட்டல் பற்றிய தெளிவான ஆலோசனையை இன்னும் வழங்கியிருக்காததால், அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (க) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் சபையால் அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைகளை சுட்டிக்காட்டும் அதிகாரக் கையளிப்பு காணப்பட வேண்டிய போதிலும் அதிகார கையளிப்பு கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி குறைந்தபட்ச பதவியணியினரை பேணுகின்ற போதிலும் கம்பனியை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், செயற்திறனாகவும் செயற்படுத்தவதற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். | MNCPMSC இலாபகரமாக கம்பனியை நடாத்துவதற்காக, தமது வணிகத்தைச் செய்வதற்கு குறைந்தபட்ச பதவியணியினரை பேணி வருகிறது. எனவே அனைத்து அதிகாரங்களும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க | அவதானிப்பு இன்னும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனைத்து செலவினங்களும் தலைவரால் கண்காணிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. | |
| (கா) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னதாகவே நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டம் வரிசை அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த வரவு செலவுத் திட்டம் கட்டுப்படுத்தும் கருவியொன்றாக தயாரிக்கப்பட்டு கம்பனியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட வேண்டும். | பீபி013/02/2020 ஆம் இலக்க சபை பத்திரத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்டம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை உரிய அதிகாரிகளிடம் உரிய திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கும் நடைமுறை காணப்படவில்லை. |
| (கி) | 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.2 மற்றும் 9.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பொருத்தமான பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு முறைமையை உள்ளடக்கிய மனித வளத் திட்டமொன்று காணப்பட வேண்டிய போதிலும் பதவியணியினர் மற்றும் | கம்பனி இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து உடனடியாக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். | சபை அங்கீகரித்த பதவியணியினர் வரிசை அமைச்சு மூலம் MSD இற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், அவர்களிடமிருந்து இன்னும் எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இன்னும் நாங்கள் | உரிய அதிகாரிகளால் இன்னும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு முறைமைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது. | | அதையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். | |
| (கீ) | செயல்நடவடிக்கை திட்டமொன்று கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் முகாமைத்துவத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு காலரீதியாக அதன் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். | குறித்துக் கொள்ளப்பட்டது. | இன்னும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (கு) | வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | இன்னமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இன்னமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

**4.88 வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனி**

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 4,276,329,230 | 4,193,995,112 | 4,694,103,156 | 2,568,291,643 | 82,334,119 | மறுப்பு |
| **2019** | 3,462,668,986 | 3,421,792,274 | 5,410,169,409 | 3,238,271,798 | 40,876,711 | மறுப்பு |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | | |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 4,276.33 | 4,194.00 | 4,694.10 | 2,568.29 | 82.33 |
| 2019 | 3,462.67 | 3,421.79 | 5,410.17 | 3,238.27 | 40.88 |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இல் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அதே வருடத்தில் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் ரூபா 683.04 மில்லியன் தொகை 2018 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகளுக்கு | குறைத்து அல்லது அதிகரித்து அறிக்கையிடுவதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் வருமானமும் அந்த ஆண்டிலேயே அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. 2019 இல் இந்தத் தொகை ரூபா 202.9 மில்லியனாகவிருந்தது. | வேண்டும். | | |
| (ஆ) | 2012, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மானங்களுக்குரிய கூட்டு மொத்தமான ரூபா 1,571.63 மில்லியன் ஆன இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, 2016,2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 590.8 மில்லியன் தொகையான சான்றுறுதி செய்யப்பட்ட சிட்டைகள் 2019 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. | குறைத்து அல்லது அதிகரித்து அறிக்கையிடுவதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் வருமானமும் அந்த ஆண்டிலேயே அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது. |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் மற்றும் நிறுத்தி வைத்தல் பணத்திற்காக பெற வேண்டிய தொகைக்கிடையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 282.31 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் இது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,111 மில்லியனாகவிருந்தது. | இணக்கக் கூற்றுக்கள் காலரீதியில் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். | இணங்கப்பட்டது.<br><br>மீதிகள் வித்தியாசத்திற்கான காரணங்களை குறித்துக்காட்டி அறிக்கைத்திகதியிலுள்ளவாறு கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்டதுடன் வழுக்களைத் திருத்தல் தற்போதும் செயன்முறையிலுள்ள | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது. |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | து. | |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தொகைகளுக்கு இடையில் ரூபா 1,162.72 மில்லியன் வேறுபாடிருந்ததுடன் இது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,420 மில்லியனாகவிருந்தது. | இணக்கக் கூற்றுக்கள் காலரீதியில் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். | இணங்கப்பட்டது. | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது. |
| (உ) | இலங்கை சனநாயக சோஷலிஷ குடியரசின் 1999 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1074/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஐந்து (05) இல் கம்பனியின் நான்கு (04) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுவதற்கு பதிலாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் (SMEs) இற்கான SLFRS) தயாரிக்கப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோஷலிஷ குடியரசின் 1999 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1074/7 ஆம் இலக்க வர்த்தமானியில் காண்பிக்கப்பட்டுள்ள ஐந்து (05) நிபந்தனைகளில் நான்கு (04) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையினால் கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குதல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br>இந்த அவதானிப்பு 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வின் போதும் சுட்டிக்காட்டப்பட்டது. 1074/7 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் குறிப்பிட்டதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிபந்தனையை பூர்த்திசெய்கின்ற எந்தக் கம்பனியும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்ற வேண்டும். எனினும், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட மூன்று தொகுதி கணக்கீட்டு நியமங்களுக்கிடையில் | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கம்பனியானது SMEs இற்கான SLFRS இனை பிரயோகிக்க உரித்துள்ளதாகும். இந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் வேறுபாடு இருக்கவில்லை. | |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் ஆளணிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கம்பனியின் பதவியணி இன்னமும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 2008/1109 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் எந்தவொரு செயற்திட்டத்தையும் உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்குவதில்லை என சபை தீர்மானம் எடுத்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய ஆந் திகதிய 2008/1109 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கு இணங்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்ற நிர்மாண வேலைகளை கம்பனி மேற்கொள்ள வேண்டும். | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனினும் கம்பனியால் பெறப்பட்ட 3,382 செயற்திட்டங்களில் 5.4 சதவீதத்திற்கு சமமான 185 திட்டங்கள் மாத்திரமே 2008 முதல் 2018 வரையான காலப்பகுதியில் கம்பனியால் நேரடியாக பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் 3,197 செயற்திட்டங்கள் உப ஒப்பந்தகாரர்களால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. | | | |
| (ஏ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முறையே 6 மாதங்கள் மற்றும் 10 மாதங்கள் காலதாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இன்றவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தால் குறிப்பிட்டவாறு குறித்த திகதியில் கம்பனி நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். | அவதானிப்பிலுள்ள காரணி தற்போதுமுள்ளது |
| (ஐ) | வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்ததாக கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்ததாக கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | குழுவானது தற்பொழுது உருவாக்கப்பட்டது டன் கணக்காய்வாளர் திணைக்களத்திடமி ருந்து எந்தவொரு பிரதிநிதியும் இருக்கவில்லை.ene ral. |

**4.89 மகநெகும எமுல்சன் புரடக்சன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட**

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 97,965,208 | 173,732,387 | 264,272,122 | 172,980,309 | (75,767,180) | முனைப்பழியுள்ளது |
| **2019** | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | | |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | | |




| | Total Revenue Rs.Million | Total Expenditure Rs.Million | Total Assets Rs.Million | Total Liabilities Rs.Million | Profit /Loss Before Tax Rs.Million |
|---|---|---|---|---|---|
| 2018 | 97.97 | 173.73 | 264.27 | 172.98 | (75.77) |
| 2019 | - | - | - | - | - |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் (எல்கேஏஎஸ் 16) கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 21,566,870 தொகையான | தொடர்புடைய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கம்பனி ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து அதற்கேற்ப கணக்கீடு செய்ய | 2021 ஆம் ஆண்டிலிருந்து சிபாரிசு அமுல்படுத்தப்படும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரயங்களிலான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அதன் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் (எல்கேஏஎஸ் 01) மற்றும் நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பு தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு முரணாக கம்பனியின் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் காசு அடிப்படையை பயன்படுத்தி கணிப்பிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வால் கணிப்பிடப்பட்ட வட்டி வருமானத்திற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வட்டி வருமானத்திற்கும் இடையே ரூபா 8,654,795 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஏனைய வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கம்பனியின் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டும். | அட்டுறு அடிப்படையில் வட்டிவருமானத்தை இனங்காண்பது மிகவும் பிரச்சனைக்குரிய ஒன்றாகும். | இந்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் (எல்கேஏஎஸ் 01) மற்றும் குத்தகைகள் (எல்கேஏஎஸ் 17) தொடர்பான இலங்கை | குத்தகைகள் மீதான பொறுப்புக்கள் தொடர்புடைய | திருத்துவதற்கு இணங்கப்பட்டது. | இந்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்கீட்டு நியமங்களிற்கு முரணாக பொறுப்புக்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புகளாக தனித்தனியாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,090,060 தொகையான மொத்த குத்தகைக் கடன்கொடுத்தோர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதற்கேற்ப வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமத்தில் பரிந்துரைக்கப்பட்டவாறு நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதவை என தனித்தனியாக வகைப்படுத்த வேண்டும். | | ல்லை. |
| (ஈ) | கம்பனி அரை மாதச் சம்பளத்தைப் பயன்படுத்திக் கணிப்பிடுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஊழியராலும் சம்பாதிக்கப்படும் மாதாந்த சம்பளத்தால் சேவைக் காலத்தைப் பெருக்குவதன் மூலம் ஓய்வூதிய பணிக்கொடை கடப்பாட்டை கம்பனி கணிப்பிட்டிருந்தது. | கம்பனி கணக்கீட்டுக் கொள்கைகளை உருவாக்கும் போது, தற்போதுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் விடயப் பொருள் தொடர்பான நியமத் தேவைப்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். | கம்பனியின் கொள்கையின் பிரகாரம் ஒரு மாத அடிப்படைச் சம்பளம் ஏற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றதுடன் பூர்த்தி செய்த சேவைக் காலத்தை பெருக்குவதன் மூலம் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | இந்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (உ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 4 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கான மூலதன முதலீடு ரூபா 100 மாத்திரமே ஆகும். எனினும், அதிகாரசபையின் நிதிக்கூற்றின் பிரகாரம் ரூபா 100 இற்கு மேலதிகமாக ரூபா | குழுவிற்குள் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களை குறிப்பாக கம்பனியின் கட்டுப்பாட்டு சக்தியாக தீர்மானிக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கு உடன்படிக்கை தேவைப்படுகின்றது, | செலுத்தப்படாத கடன் மீதியானது இக் கம்பனியை நிறுவும் போது வழங்குவதற்கு இணங்கப்பட்ட ஆர்டிஏ இடமிருந்து பெறவேண்டிய | இந்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1,000,000 முதலீடு கம்பனிக்கு மூலதன பங்களிப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நடைமுறை பொறுப்பின் கீழ் செலுத்தப்படாத கடனாக அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முதலீட்டை கம்பனி பதிவு செய்திருந்தது. | | தொகையாகும். | |
| (ஊ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 5,861,611 ஆகும். எனினும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலிலுள்ளவாறு இது ரூபா 2,428,542 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகையால், இரண்டு மீதிகளுக்குமிடையில் ரூபா 3,433,069 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் கணக்கிணக்கம் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணக்கக் கூற்று காலரீதியாக தயாரிக்கப்பட வேண்டும். | கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதி சரியான மீதியாகும். . | இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மகநெகும எமுல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியிடமிருந்து பொறி மற்றும் இயந்திரத்தை வாடகைக்கு எடுப்பதற்காக கம்பனிக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 4,456,625 தொகையாகவுள்ளது. எனினும் | இணக்கக் கூற்று காலரீதியாக தயாரிக்கப்பட வேண்டும். | கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதி சரியான மீதியாகும். . | இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியவையாக ரூபா 1,471,358 காட்டபட்டிருந்தது. ஆகையால், இரண்டு மீதிகளுக்குமிடையில் ரூபா 3,985,267 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் கணக்கிணக்கம் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஏ) | 2015 யூன் 17 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுத்தரமல்லாத இயக்குனருக்கு ரூபா 198,000 அமர்தல் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது கம்பனி தற்போது தற்போதுள்ள வேலைக் கட்டமைப்பு மற்றும் உரிய அதிகாரசபையால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிகளுடன் இணங்க வேண்டுமென்பதுடன் ஆர்டீஏயும் சபை பிரதிநிதித்துவம் ஊடாக தலைமைக் கம்பனியாக வழிகாட்டிகளை குறித்துக் காட்ட வேண்டும். | இயக்குனர் சபை கொடுப்பனவை அனுமதித்தது என குறித்துக் காட்டப்பட்டது. | அவதானிப்பிலுள்ள உண்மை தற்போதுமுள்ளது. |
| (ஐ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் உரித்துள்ள வரம்புகளுக்கு முரணாக ரூபா 1,047,150 கூட்டுமொத்தமான எரிபொருள் படிகள் உரித்துள்ள வரம்பை மீறி செலுத்தப்பட்டிருந்தது. | அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஏற்கனவேயுள்ள வேலைக் கட்டமைப்பு மற்றும் உரிய அதிகாரிகளால் வழங்கப்படும் வழிகாட்டல்களை கம்பனி பின்பற்ற வேண்டியதுடன் ஆர்டிஏ அதன் சபை பிரதிநிதிகள் மூலம் வழிகாட்டல்களை தாய் நிறுவனமாக பரிந்துரைக்க வேண்டும். | கம்பனியின் இயக்குனர் சபையால் இந்தப் படி அனுமதிக்கப்பட்டது . | அவதானிப்பிலுள்ள உண்மை தற்போதுமுள்ளது.. |
| (எ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய | சுற்றறிக்கையின் பிரகாரம் | ஏற்றுக்கொள்ளப்பட் | அவதானிப்பிலுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | பீஈடி/12 இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2 இன் பிரகாரம், கம்பனியால் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | டுள்ளதுடன் தொடர்ந்துவரும் ஆண்டிற்கான அறிக்கையைத் தயாரிப்பதற்கு இணங்கப்பட்டது. . | உண்மை தற்போதுமுள்ளது.ins. |
| (ஏ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.2 மற்றும் 9.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம், பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு முறைமைக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு முறைமைக்கான அங்கீகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட மனித வள கையேடு அனைத்து தொடர்புடைய நடைமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது. | அவதானிப்பிலுள்ள உண்மை தற்போதுமுள ins. |
| (ஒ) | கம்பனியால் வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்பிலுள்ள உண்மை தற்போதுமுள ins.ains. |

## 4.90 வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி

**2018** - நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2019** - நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2020** - நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்திய ஐந்து சந்தர்ப்பங்களில் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சோமலாப நிதியம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நிகழ்ந்துள்ள மொத்தம் ரூபா. 1,644,253 ஆன நட்டம் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களை அடையாளம் காணப்பட்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நட்டம் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்கள் தொடர்பில் நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | எதிர்வருங் காலத்தில் அவ்வாறு ஏற்படாதிருப்பதற்கு பொறுப்பாக இருப்பதுடன், இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. | இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நிமித்த கட்டுநிதி வழங்குதல் பதவிநிலை தரத்திலான அலுவலர்களுக்கு மட்டும் வரையறுக்கப்படுதல் வேண்டுமாயினும், அதற்கு இணங்காத வகையில் மீளாய்விற்கான ஆண்டில் ஒப்பந்த அடிப்படையின் மீது சேவையில் ஈடுபட்டிருந்த அலுவலருக்கு 09 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 472,415 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | விசேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையை மீறியதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (இ) | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் | கணக்காய்வு | விசேட கவனம் | கணக்காய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020 நவம்பர் 16 ஆந் திகதி வரை வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியிடம் வழங்கப்பட்ட 26 கணக்காய்வு ஐயவினாக்களின் பொருட்டு பதில் வழங்கப்படவில்லை. அதேபோன்று குறித்த கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில், அவற்றை செவ்வையாக்கி கொள்ளுதல் தொடர்பில் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாக்களுக்கான பதில்கள் வழங்கப்படுதல் வேண்டுமென்-பதுடன், அதன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகளை செவ்வையாக்கி கொள்ளுதல் வேண்டும். | செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | விசாரணைகளுக்கு பதில்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில் லை. |
| (ஈ) | 2020 ஒக்டோபர் 20 ஆந் திகதியில் அச்சீட்டுப் பிரிவில் ரூபா. 10,520,015 ஆன கடனாளிகளின் மீதி ரூபா.9,627,122 ஐ அதாவது மொத்த கடன் மீதிக்கு 91.5% 2015-2019 காலத்திற்கு ஏற்புடையதாக நிலுவை கடனாக காணப்படினும், குறித்த கடன் தொகை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கடனாளிகளின் மீதி அறவிடுதல் தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். | இதற்கு புறம்பான அலுவலர் ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் கம்பனியில் பிரதானமாக 05 வியாபார நடவடிக்கைகளில் 03 நடவடிக்கைகள் நட்டம் பெற்று வந்ததுடன், குறித்த நிலைமை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தொழில்பாட்டு நடவடிக்கைகள் இலாபம் பெறுகின்ற வகையில் பேணிச்செல்வதற்காக பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | எதிர்வரும் காலத்தில் இலாபகரமானதாக பேணிச் செல்வதற்கு கவனம் செலுத்தும் படி ஆலோசனை வழங்கப்பட்டது | வியாபாரத்தை இலாபகரமாக நடத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பிரிவின் பிரகாரம், அரச கம்பனிகளில் வருடாந்த நிதி கூற்றுகள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கம்பனியால் 2019/2020 கணக்கு ஆண்டுகளுக்கு ஏற்புடையதான நிதிக் கூற்றுகள் கணக்காய்வு திகதியான 2022 சனவரி 31 ஆந் திகதியிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதியில் கணக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 2019/2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முடிவடைந்தவுடன் பெப்ரவரி 15 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படும். | 2022 பெப்ரவரி 07 இல் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (எ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 (2) (எ) பிரிவின் பிரகாரம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற மற்றும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தை அரசு அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சிமன்ற நிறுவனங்கள் வைத்திருந்தால் அக் கம்பனிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு முகாமைத்துவ குழுவை அமைத்து எதிர்கால திட்டமிடல் செய்ய அறிவுறுத்தப்பட்டது. | தற்போது கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஏ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 23.1(அ) பிரிவின் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் குறிப்பிட்ட அதிகாரி ஒருவர் விரைவில் | பொருத்தமான அதிகாரியை நியமிக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் கம்பனியின் தகவல்கள் அதிகாரியாக ஒரு அதிகாரி அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கு பெயர் குறிப்பிடப்பட்ட ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், எடுக்கப்பட்டிருக்கவில்லை | எடுக்கப்பட வேண்டும். | நியமிப்பதற்கு முகாமைத்துவப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஐ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 5.2.3 மற்றும் 4 ஆம் பந்திகளின் பிரகாரம் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுவதற்கான விசேட கவனம் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ஒ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியசாலைப் பொருட்களுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபை மற்றும் விசேட கணிப்பீட்டுச் சபை மற்றும் விசேட கணக்கெடுப்பு சபை நியமிக்கப்பட்டு பொருட் கணிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் வருடத்தின் பின்னர் பொருட் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது பொருட் கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், பொருட் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.. | இன்றுவரை, கணக்கெடுப்பு சபையினால் மேற்கொள்ளப்படவி ல்லை. |
| (ஓ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை | தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு |


| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 9.2 மற்றும் 9.3.1 ஆம் பந்திகளின் பிரகாரம் கம்பனிக்கான பதவியணி அங்கீகரிகப்பட்டிருக்காததுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | வருவதுடன் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படவி ல்லை. |
| (ஔ ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வணிக நடவடிக்கைகளுக்காக குறுங்கால மற்றும் நீண்டகால தூரநோக்குடன் ஒருங்கிணைந்த திட்டமொன்று மற்றும் எதிர்வரும் நிதியாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கியதான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | இன்றுவரை, எந்த செயல் திட்டமும், கூட்டிணைப்புத் திட்டமும் உருவாக்கப்படவில் லை. |
| (க) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (அ),(ஆ),(இ),(ஈ) இன் பிரகாரம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் புதுப்பிக்கப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியல் பயன்படுத்தப்பட வேண்டியுள்ள போதிலும். கம்பனியின் கீழ் உள்ள உணவகத்திற்கான பொருட்கள் கொள்வனவு, செய்யப்படும் போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது வழங்குநர்களை பதிவு செய்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வழங்குநர்களை பதிவு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கா) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையில் 4.2.1 (அ) பிரிவின் பிரகாரம் பெறுகைப் பிரிவினால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பிரதான பெறுகைத் திட்ட்ம் தயாரிக்கப்படவில்லை |
| (கி) | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பெனிக்காக கணக்காளர் ஒருவரை நியமனம் செய்து கொள ளுதல் பொருட்டு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், உதவி கணக்காளர் பதவிகளும் 2019 யூன் 03 ஆந் திகதி வரை வெற்றிடமாக நிலவியது. இந்த நிலைமை இறுதி நிதிக் கூற்றுகளை, காலோசிதமாக கணக்காயவில் சமர்ப்பித்தலானது தாமதமடைவதற்கு காரணங்களாகின. | ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டிற்கான புதிய நிதி ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டது. எதிர்காலத்தில் விரைவாக கணக்காய்வு செய்ய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. | நிரந்தரமாக கணக்காளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (கீ) | கம்பனியின் உணவகத்தின் மூலம் செயற்படுத்தப்படக் கூடிய உணவுக் கட்டளைகள் கம்பனியின் மூலம் பெறுகைச் செயற்பாடுகளைப் பின்பற்றாது மூன்று சந்தர்பங்களில் மொத்தம் ரூபா 1,685,900 செலவிடப்பட்டு வெளியார் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் கம்பனிக்கு கிடைக்க கூடியதாக விருந்த இலாபம் உழைக்கக் கூடிய சந்தர்ப்பம் தவறவிடப்பட்டிருந்தது. | தொழில்களை இலாபகரமாக நடத்த வேண்டும். | பெறப்படும் கட்டளைகளின் தன்மையைப் பொறுத்து, உரிய வசதிகள் மற்றும் சேவைகள் இல்லாத நிலையில், எங்கள் சிற்றுண்டியின் வெளிவளங்கள் வழங்கப்படும், மேலும் ஏலதாரர்களின் வேண்டுகோளின்படி வெளிவளங்களின் கம்பனிகளால் இன்னும் செய்யப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். | இலாபகரமான தொழிலை நடத்துவதற்கான முறையான திட்டம் எதுவுமில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கு) | ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் 2030 ஆகும் போது தமது அமைப்பிற்குரிய எல்லா நாடுகளிலும் பொருளாதார விருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அளிப்பதனை அடிப்படையாகக் கொண்டு அறிமுகப்படுத்திய “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030” இல் தமது விடயவெல்லையின் கீழ் வருகின்ற பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் காணப்பட்டு செயற்படுவதற்கு கம்பனி பணியாற்றியிருக்கவில்லை. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | தற்போது அது தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலையான வளர்ச்சி நோக்கங்கள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்பட வில்லை. |

### 4.91 கஹறட்டகஹ கிறபைட் லங்கா லிமிட்டட

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 132,379,453 | 133,979,739 | 374,416,666 | 48,594,554 | (1,600,287) | முனைப்பழியுள்ள |
| **2019** | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | | | | |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | | | | |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 132.38 | 133.98 | 374.42 | 48.59 | (1.60) |
| 2019 | - | - | - | - | - |
| 2020 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 யூலை 18 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் | கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக முகாமைத்துவ | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் |


| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 1 (ii) ஆம் பந்தியின் குறைந்தபட்ச உற்பத்தி 65 மெற்றிக் தொன்னாக இருக்கும் போது நிலத்தடி ஊழியர்கள் மற்றும் பராமரிப்புப் பிரிவிலுள்ள ஊழியர்களுக்கு ரூபா 300 நாளாந்த படி செலுத்தப்பட்டிருந்ததுடன் செயன்முறைப்படுத்தல் பிரிவு மற்றும் அலுவலகத்திற்கு முறையே படியின் 50 சதவீதம் மற்றும் 40 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | பிரகாரம் அனைத்து படிகளையும் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. | அறிவுறுத்தலின்படி புதிய உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | 2007 ஒக்தோபர் 04 ஆம் திகதிய டிஎம்எஸ்/11பி/சீ9 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம்<br>(i) கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட 79 உத்தியோகத்தர்கள் 06 மாத ஒப்பந்த காலப்பகுதிக்கு உட்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியதுடன் இலாபத்தன்மை தொடர்பாக ஒப்பந்த காலப்பகுதியை நீடித்தல் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2014 நவம்பர் 12 ஆம் திகதி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது தொடர்பான சுற்றறிக்கைகள் மாத்திரம் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது | கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட 25/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை கம்பனிகளுக்கு பொருந்தாத போதிலும், அந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் 59 ஊழியர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருந் தனர். | | | |
| | (ii) ஒப்பந்த பதவியணியினருக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கா ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினர் காணப்படாத போதிலும் கம்பனியின் உள்ளபடியான பதவியணியினர் 195 ஆக காணப்பட்டது. | ஒப்பந்த ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரிப்பதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு அமைவாக செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து நிரந்தர மற்றும் போதுமான பணியாளர்களுக்கு அனுமதி பெறுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஒவ்வொரு ஆண்டிற்குமான உற்பத்தி இலக்குகளை இனங்கண்டு அதற்கேற்ப மாதாந்த உற்பத்தியை திட்டமிட்டு செயன்முன்னேற்றத்தை அளவிட்டு உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கான மூலோபாயங்கள் வகுக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த 03 வருடங்களில் சராசரி மாதாந்த உற்பத்தி 65 மெற்றிக் தொண்ணாக காணப்பட்டதுடன் | ஒவ்வொரு ஆண்டிற்குமான உற்பத்தி இலக்குகளை இனங்கண்டு அதற்கேற்ப மாதாந்த உற்பத்தியை திட்டமிட்டு உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | மாதாந்திர உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. | 2021 வரை உற்பத்தி மேம்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போதும் சராசரி மாதாந்த உற்பத்தியை அதிகரிக்க முடியாதிருந்தது. | வேண்டும். | | |
| (ஈ) | 0.6 சரக்கிருப்பு புரள்வு அதிர்வெண் மற்றும் 608 நாட்கள் சரக்கிருப்பு வைத்திருக்கப்படும் காலப்பகுதி என்பவற்றுடன் உற்பத்தி செய்யப்பட்ட சரக்கிரப்பை விற்பனை செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால் கம்பனியில் வினைத்திறனற்ற செயற்பாட்டு செயன்முறையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சரக்கிருப்பு புரள்வு அதிர்வெண்ணை (frequency) அதிகரிப்பதன் மூலமும், சரக்கிருப்பு வைத்திருக்கப்படும் காலப்பகுதியை குறைப்பதன் மூலமும் வினைத்திறனான செயற்பாட்டு செயன்முறை ஒன்று கம்பனியால் அடைந்து கொள்ளப்பட வேண்டும். | குறைந்த தர கிரா∴பைட் சரக்கிருப்பை விற்பதற்காக விலைமனு கோரப்பட்டு, விற்பனை முகாமையாளர் சேவைகளை ஆட்சேர்ப்பு செய்ய முகதமைத்துவ துறையிடம் இருந்து அனுமதி பெறப்பட்டது. | பங்கு வைத்திருக்கும் காலம் தொடர்ச்சியாக இருக்கின்றது. |

## 4.92 லங்கா சதொச லிமிடட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 30,158,014,023 | 33,046,477,295 | 8,296,891,812 | 22,145,768,869 | (2,888,463,272) | மறுப்பு |
| **2019** | 27,107,498,562 | 30,266,042,599 | 8,013,530,413 | 24,445,461,339 | (3,158,544,037) | பாதகமான |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | | | | |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 30158.01 | 33046.48 | 8296.89 | 22145.77 | (2888.46) |
| 2019 | 27107.50 | 30266.04 | 8013.53 | 24445.46 | (3158.54) |
| 2020 | 0 | 0 | 0 | 0 | 0 |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம், இருப்புக்கள் கிரயம் மற்றும் அதன் நிகர தேறத்தக்க பெறுமதியில் குறைவானது மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் இருப்புக்கள் கிரயப் | இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு வழிகாட்டலில் ஏற்படும் பிழைகளைத் தவிர்க்க அனைத்து | மிகவும் துல்லியமான சரக்கு மதிப்பீட்டை செயல்படுத்த அனைத்து விற்பனை நிலையங்களையும் படிமுறைகளையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுமதியில் கணக்கிடப்பட்டிருந்தன. நாடு முழுவதும், காணப்படும் விற்பனை நிலைய வலையமைப்பில் 2/3 பகுதியினர் வழிகாட்டல் கணக்கீட்டு முறைமை காணப்படுவதன் காரணமாக உள்ளார்ந்த வழுக்கள், தரவு விடுபாடுகள், இரட்டை பதிவுகளில் வழுக்கள் காணப்படல் மற்றும் மிகை மற்றும் குறை பெறுமதியிலான பதிவுகள் போன்ற பல்வேறு வழுக்கள் அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம், நடைமுறை சொத்துக்கள் மற்றும் விற்பனை கிரயம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,462,675,947 பெறுமதியிலான இருப்புக்களின் சாத்தியமான நிதி விளைவினை வரையறுக்கவோ அல்லது தீர்மானிக்கவோ முடியவில்லை. | | விற்பனை நிலையங்கள் மற்றும படி முறைகள் கணினிமயமாக்க கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணினிமயமாக்குவதற்கு ஈஆர்பீ முறைமை அமைக்கப்படுகிறது. |
| (ஆ) | ஆதன, பொறி மற்றும் உபகரண பேரேட்டின் ஆரம்ப மீதியானது நிலையான சொத்து பதிவேட்டின் ஆரம்ப மீதியை விட ரூபா.1,045,174,713 தொகையால் அதிகமாக இருந்தது மற்றும் 2013 முதல் ரூபா 529,010,712 தொகையான இனங்காண முடியாத ஆரம்ப மீதிகளின் சேகரிப்பொன்றும் இந்த வேறுபாட்டில் காணப்பட்டன. | ஆரம்ப மீதியின் வேறுபாடு கண்டறியப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆரம்ப வேறுபாடுகள் இனங்காணப்பட வில்லை. |
| (இ) | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தினால் உடமையாக்கப்பட்ட ரூபா.22,798,843 பெறுமதியான சொத்துக்களின் ஆவணங்களின் சான்றாதாரங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | கூட்டுத்தாபனத்திடமிருந்து உடமையாக்கப்பட்ட சொத்துக்கள் இனங்காணப்படல் வேண்டும். | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் நிலுவைகள் உறுதி செய்யப்படுகிறது. | கம்பனியின் உரிமையை சான்றுப்படுத்த ஆவணங்கள் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கிளிநொச்சி,வெலிகம, வெலிசர மற்றும் கம்புறுபிட்டிய பகுதிகளில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட நான்கு வர்த்தக கட்டிடங்களின் கிரயம் ரூபா.384,921,862 ஆகும். இந்த கட்டிடங்களுக்கு சொந்தமான காணிகளின் மதிப்பீட்டு கிரயத்தினை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் கிரயத்தை கணக்கிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த காணிகளை சட்டப்பூர்வமாக உரிமையை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கிடைக்கவில்லை. |
| (உ) | வாடகை முற்பண கணக்கு அட்டவணையில் விற்பனை நிலையங்களுக்கு செலுத்திய ரூபா.3,298,677 வாடகை முற்பணங்கள் 5 வருடங்களாக அடையாளம் காணப்படாமல் காணப்பட்டன மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது இந்த மீதியினை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணினி முறைமைகளின் மீதி மாற்றும் போது சமநிலை சரியாக மாற்றப்பட வேண்டும் மற்றும் அத்தகைய மாற்றங்களுக்கான காரணங்களை சரிபார்க்க வேண்டும். | இந்த நிலுவையை கண்டறிய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிலுவைகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஊ) | நிதிக்கூற்றுக்களில் உள்ள வாடகை வைப்பு கணக்கு அட்டவணையில் ரூபா 1,484,265 அடையாளம் காணப்படாத மீதியொன்று 7 வருடங்களாக காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணினி முறைமைகளினை மாற்றம் செய்யும் போது மீதிகள் சரியாக மாற்றம் செய்யப்படல் வேண்டும். மற்றும் அவ்வாறான மாற்றங்களுக்கான காரணங்கள் சரிபார்க்கப்படல் வேண்டும். | நிலுவைத் தொகையை சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிலுவைகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | சதொச விற்பனை நிலையங்களின் நாளாந்த வருமானத்தின் ஒரு பகுதி கம்பனியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை மற்றும் 2016 இற்கு முன்னர் செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 74,643,497 தொகை வைப்புக்கள் மற்றும் முற்பணங்களில் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறான வருமானத்தினை நிறுத்தி வைத்த 217 விற்பனை நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூபா 2,000 முதல் ரூபா. 900,000 வரை இருந்தது. எவ்வாறாயினும், இந்த தொகையினை நிரூபிக்க எவ்வித எழுத்த மூலமான சான்றுகளும் இல்லை மற்றும் 2016 இல் ரூபா.50,000,000 தொகையும் 2017 இல் ரூபா.6,762,337 தொகையும் இழக்கப்பட்டிருந்தது. | விற்பனை நிலையங்களின் பணம் முறையான அதிகாரத்தில் செலவழிக்கப்பட வேண்டும் மற்றும் அது பிரதான பேரேட்டில் கணக்கிடப்பட வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் தேக்கிவைக்கப்பட்ட பணம் மற்றும் செலவழிக்கப்பட்ட விதம் ஆகியவற்றை சரிபார்த்து, முறையாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் படி முறைமைகளை கணினிமயமாக்கவும், 2021 ஆம் ஆண்டுக்குள் ஈஆர்பி முறையை அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | 2016 ஆம் ஆண்டு முதல் தலைமை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கம்பனியின் திரண்ட பற்றாக்குறை ரூபா 17,884,556,952 இனை போன்றே, நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறை பொறுப்புக்கள் ரூபா.3,735,588,882 ஆக காணப்பட்டதுடன், இதன் விளைவாக கம்பனிக்கு அதன் சொத்துக்களின் மூலம் அதன் பொறுப்புக்களை தீர்க்கும் இயலுமை மற்றும் திறைசேரியின் நிதி ஏற்பாடின்றி தொடர்ந்து நடாத்தி செல்லுவதில் நிச்சயமற்ற தன்மை நிலவியது. இந்த நிலைமைக்கு முக்கிய காரணங்களாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செலுத்த வேண்டிய செண்மதி மீதிகள் வியாபார மற்றும் ஏனைய கடன் மீதிகளின் நிலுவை ரூபா.9,248,426,171 ஆக காணப்படுகின்றமை, பிரதி பொது முகாமையாளர் பதவிக்கான ஆட்சேட்ப்பு ஒப்பந்த அடிப்படையில் ஒன்று மற்றும் இரண்டு வருடங்களுக்கு குறைவான காலப்பகுதி யொன்றாக இருத்தல் மற்றும் சிரேஷ்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பதவிகளில் 912 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை என்பன அவதானிக்கப்பட்டன. | தொழிற்படு மூலதனத்திற்காக கடன்கள் வாங்க வேண்டாம். கம்பனி தேவையான பணியாளர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். | வெற்றிடமாகவுள்ள பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு தற்போது நடைபெற்று வருகிறது. | கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் கம்பனிக்கில்லை மற்றும் நிரந்தர அடிப்படையில் உதவிப் பொது முகாமையாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், இன்றுவரை மேல்நிலை, மூன்றாம் நிலை மற்றும் இடைநிலை வகுப்புகளில் 912 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. |
| (ஐ) | 2011 யூலை 28 ஆந் திகதிய சிபி/11/135/540/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் “லங்கா சதொந லிமிடட்இன் விற்பனை வலையமைப்பினை விரிவுபடுத்தல”என்ற அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதற்கான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | வாடகை நிலுவைகள் மற்றும் நிலையான சொத்துகளின் மதிப்பு உட்பட முழுத் தொகைக்கும் பங்குகள் வெளியிடப்படவில்லை . |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் நிலையான சொத்துக்களின் பெறுமதி உள்ளடங்கலான 2021 மார்ச் 31 வரையிலான காலப்பகுதிக்கான நிலுவை வாடகை மற்றும் இருப்புக்களின் பெறுமதி என்பவற்றிற்கான முழு தொகைக்கும் பங்குகள் வழங்கப்படல் வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. | | | |
| (ஒ) | 2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் சேதமடைந்த இருப்புக்களை கழிப்பது தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம், பணிப்பாளர்களின் சபையின் அங்கீகாரம் கம்பனியால் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அவ்வாறான எவ்வித அங்கீகாரமும் பெறப்படவில்லை. மிகை மற்றும் பற்றாக்குறை மீதிகளை வேறுபடுத்துவதற்கான முறையான பொறிமுறையொன்று காணப்படவில்லை மற்றும் பற்றாக்குறை மீதிகளால் ஏற்பட்ட நட்டமானது பொறுப்புடைய உத்தியோத்தர்களிடமிருந்து மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டுக்குள் பற்றாக்குறை நிலுவைகளை ஆய்வு செய்ய பங்குகள் பற்றாக்குறை குழு நியமிக்கப்பட்டுள்ளது . | பற்றாக்குறை நிலுவைகளின் இழப்பு பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிடப்படவில்லை. |
| (ஓ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஒரு | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடம் மற்றும் ஆறு மாதங்கள் தாமதமாக 2021 யூலை 19 ஆம் திகதியன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் அவ்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் அவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் பெறப்படவில்லை. |
| (ஔ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதம நிறைவேற்ற உத்தியோகத்தருக்கும் ஏழு பிரதி பொது முகாமையாளர்களுக்கும் தலா ரூபா.75,000 படி ரூபா 4,350,000 செயலாற்றுகை படியானது பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரமின்றியும் கொடுப்பனவு செய்யப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (க) | 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் உள்ள சிரேஸ்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய தொழில் சார் கொடுப்பனவை விட அதிகமாக ரூபா. 630,000 தொகை செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இன்றும் கூட வழங்க வேண்டிய தொழில் கொடுப்பனவை விட அதிகமாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (கா) | 2015 மே 25 ஆந் திகதிய 01.∴2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் எச்எம்1 வகை அல்லது உயர் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவ் விடயம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இன்றும் கூட, உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு தகுதியற்ற அதிகாரிகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ வாகனங்களை தமது அலுவலக மற்றும் தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்த உரித்துடையவர்களும் உத்தியோகபூர்வ வாகனமொன்றினை அல்லது மாதாந்த போக்குவரத்து படியொன்றினை பெற்றுக் கொள்ள முடியும். இருந்த போதிலும், இதற்கு முரணாகவும் திறைசேரியின் அங்கீகாரமின்றியும் உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்த உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்கு தலா ரூபா 12,500 போக்குவரத்து படியானது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 17 உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,885,833 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 1,750,000 போக்குவரத்து படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | | மாதாந்திர போக்குவரத்து கொடுப்பனவு வழங்கப்பட்டது. |
| (கி) | 2017 மே 16 ஆந் திகதிய டீஎம்எஸ்/1741 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கும், பிரதி முகாமையாளர்களுக்கும் மாதாந்த படியாக முறையே ரூபா 95,000 மற்றும் ரூபா 90,000 கொடுப்பனவு செய்வதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன், ரூபா 250,000 மாதாந்த | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவ் விடயத்தை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இன்றும் கூட, அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவை விட அதிகமாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | படியொன்று பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது மற்றும் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமின்றி ரூபா 150,000 மாதாந்த படியொன்று பொது முகாமையாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2018 இல் திறைசேரியின் அதிகாரமின்றி 07 உத்தியோகத்தர்களுக்கான மிகை கொடுப்பனவு ரூபா 5,100,000 தொகையாகவும் 2019 ஆம் ஆண்டில் 09 உத்தியோகத்தர்களுக்கான மிகை கொடுப்பனவு ரூபா 4,505,163 தொகையாகவும் இருந்தது. | | | |
| (கீ) | 2017 பெப்ரவரி 22ஆந் திகதிய டிஎம்எஸ்/1744 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த பிரதி பொது முகாமையாளர் (விற்பனை) பதவிக்காக அனைத்து படிகளும் உள்ளடங்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்த மாதாந்த படிகள் ரூபா 150,000 தொகையினை விஞ்சி செயலாற்றல், போக்குவரத்து, எரிபொருள் மற்றும் தொலைபேசி படிகளுக்காக ரூபா 1,299,753 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்துடன் கூடுதலாக வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் திறைசேரி அனுமதி பெறப்பட வேண்டும். | இவ் விடயம் சரி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இன்றும், அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவை விட அதிகமாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கு) | மீளாய்வாண்டின் போது தொழிலாளர் திணைக்களம், கம்பனியின் ஊழியர் நலன்புரிய நிதியத்தின் பங்களிப்பினை கணிப்பிடுதல் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் வழங்கிய அறிவுரைக்கமைய 2018 சனவரி மாதம் முதல் ஊழியர் நலன்புரிய நிதியத்திற்கு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட 10 சதவீத பங்களிப்பு, 8 சதவீதமாக மாற்றப்பட்டமையின் அடிப்படையில் 2018 சனவரி மாதத்திற்காக ஊழியர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டு ஊழியர் நலன்புரிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருநுத 2 சதவீதத்திற்கு சமனான ரூபா 5,550,876 ஆன தொகை 2018 பெப்ரவரி மாதத்தின் போது மீள ஊழியரின் சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | திருத்தத்தின் காரணமாக ஊழியருக்கு செலுத்தப்பட்ட பங்களிப்புப் பணம் ஊழியரிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டும். | ஊழியரிடம் இருந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை | அந்தத் தொகை ஊழியரிடம் இருந்து அறவிடப்படவில்லை. |
| (கூ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது முற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கம்பனியின் ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ஊக்க கொடுப்பனவு தொகை ரூபா.3,000 என்ற போதிலும், திறைசேரியின் அங்கீகாரமின்றி தலா 25,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பெது முயற்சிகள் சுற்றறிக்கைறின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் விடயம் சரி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய திகதியில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வில்லை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், அதற்கு மாறாக நிதிக்கூற்றுக்கள் ஒரு வருடம் மற்றும் ஆறு மாதங்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதுடன் சுற்றறிக்கைக்கு முரணாக கொடுப்பனவு செய்த ஊக்க படிகளின் மொத்த தொகை ரூபா.74,698,075 ஆகும். | | | |
| (கெ) | 2018 ஆம் ஆண்டிற்க முன்னரான ரூபா 2,036,750 தொகையான மிகுதி விழா முற்பணத்தில் இருந்து, 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,801,312 தொகையாக இருந்ததுடன் 2021 திசெம்பர் 02 இற்குள் மீதியானது அறவிடப்பட்டிருக்கவில்லை மற்றும் இந்த மீதியில் ரூபா. 446,000 தொகையொன்று சேத இழப்படைந்திருந்தது. | நிலுவைத் தொகையை முன்கூட்டியே அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் விடயம் சரி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (கே) | வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அரச நிறுவனங்களுக்கு சொந்தமான 10 கட்டிடங்களுக்கு முறையாக வாடகை ஒப்பந்தமொன்று செய்து கொள்ளாமல் ரூபா 2,708,780 தொகையொன்று வாடகை முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் விற்பனை நிலையங்களுக்காக மூன்று கட்டிடங்களை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 7,745,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய இரண்டு விற்பனை நிலையங்கள் தாமதமாக திறக்கப்பட்டிருந்ததுடன் இந்த அறிக்கை திகதி வரையிலும் ஒரு | கட்டிடங்களினை வாடகை அடிப்படையில் பெறும் போது முறையான வாடகை ஒப்பந்தம் ஒன்று செய்யப்படல் வேண்டும் மற்றும் குத்தகை கடடிடங்களினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ் விடயம் சரி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒப்பந்தங்களின்படி விற்பனை நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | விற்பனை நிலையம் திறக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கை) | மன்னார் பிரதேசத்தில் வர்த்தக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக வரையறுக்கப்பட்ட தனியார் சதொச கன்ஸ்ரக்ஷன் அன்ட் என்ஜினியரிங் கம்பனிக்கு மொத்த ஒப்பந்த தொகையில் 20 சதவீதமான ரூபா.14,108,445 தொகையினை முற்பணமொன்றாக 2017 இல் கொடுப்பனவு செய்திருந்தது மற்றும்பெறுகை வழிகாட்டியின் 5.4.4(1) பிரிவின் பிரகாரம், முற்பண பிணை முறியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை . நீதிமன்ற நடவடிக்கை ஒன்றின் காரணமாக நிர்மாணிப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ரூபா 2,051,486 தொகையினை மட்டும் ஒப்பந்த கம்பனி மீள செலுத்தியிருந்ததுடன், பெறுகை வழிகாட்டியின் 8.12.2 (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம், பூரணப்படுத்திய வேலைக்கான சான்றிதழ் மற்றும் செலவுகளின் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலினை சமர்ப்பிக்காமல் ஒப்பந்ததாரரினால் மீதி தொகையான ரூபா.12,056,960 தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் இந்த தொகை சேத இழப்பை (Impaired) அடைந்திருந்தது. 20 பேர்ச் காணியின் உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கம்பனியிடம் காணப்பட்டிருந்த போதிலும், | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வேலை நிறைவடைந்தமை தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் பிடிப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிடிப்பணம் அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவற்றின் மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | | | |
| (கொ) | பொருட்களின் கொள்வனவிற்கான தேவையினை இனங்காணாமல் பெறுகை வழிகாட்டியின் 2.3.2(இ), 2.7.5, 2.8.1(இ), 2.8.1(ஈ), 3.2, 3.4, 4.2.1, 4.2.2, 4.2.3, 4.3.1(அ), 4.3.2, 5.1.1(அ), 5.1.1(ஆ), 6.3.3(அ), 6.3.6, 7.1.1, 7.11.1, 8.9.1(ஆ) பந்திகளுக்கு முரணாக 2017 இல் 12,800 பிளாஸ்டிக் பொதியிடல் கூடைகள் (Crates) ரூபா 24,382,509 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன மற்றும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,761,348 பெறுமதியான 1975 கூடைகள் உபயோகிக்கப்படாமல் இருந்தன. | பெறுகை வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம், கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கொள்வனவின் தேவையினை இனங்காண்பதற்கும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிளாஸ்டிக் பொதியிடல் கூடைகள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிளாஸ்டிக் பொதியிடல் கூடைகள பயன்படுத்தாமல் பயன்பாடுகளற்று காணப்படுகின்றன. |
| (கோ) | 2019 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தினை மீள் மதிப்பீடு செய்வதற்கு பிரதி பொது முகாமையாளர் (நிதி) இன் பரிந்துரையின் பேரில், பெறுகை செயல்முறையொன்று இல்லாமல் தனியார் நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்கு பணிப்பாளர்கள் சபையினால் 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதியன்று அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மற்றும் கணக்காய்வு நிறவனத்தினால் கொடை முனைவு செய்யப்பட்ட விலை ரூபா 3,800,000 ஆக இருந்தது. பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 4,200,000 ஆக | சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி, பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டதற்கான எழுத்துப்பூர்வ ஆதாரங்களில்லை. பணிப்பாளர் சபை இவற்றில் கவனம் செலுத்த வேண்டும். பணிப்பாளர் சபையின் பிரதி பொது முகாமையாளரின் (நிதி) பரிந்துரையை அங்கீகரிக்கக்கூடாது மற்றும் பெறுகை குழுவின் தீர்மானம் பரிசீலிக்க வேண்டும். | அதிகமாக செலுத்திய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதிக கட்டணம் அறவிடப்படவில்லை. |

இருந்த போதிலும், உரிய தொகையை அங்கீகரித்தமைக்கான காரணங்களினை பணிப்பாளர்கள் சபை குறிப்பிட்டிருக்கவில்லை.
மேலும், நிலையான சொத்துக்களின் பதிவேட்டின் பிரகாரம், காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.
எனினும், ஒப்பந்த பெறுமதி மீள திருத்தப்பட்டிருககவில்லை.
2020 மார்ச் 12 ஆந் திகதியன்று கணக்காய்வு நிறுவனத்திற்கு ரூபா.5,133,896 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததனால் ஒப்பந்த தொகைக்கு மேலதிகமாக ரூபா.1,333,896 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மூன்று மாதங்களில் நிறைவு செய்ய வேண்டிய மீள் மதிப்பீட்டு பணியினை நிறைவு செய்வதற்கு இரண்டு வருடங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

**4.93 வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம்**

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 3,549,978,934 | 3,580,847,245 | 2,795,573,823 | 2,009,172,129 | (30,868,311) | முனைப்பழியுள்ள |
| **2019** | 2,562,338,573 | 2,683,638,884 | 2,492,632,179 | 1,841,918,914 | (121,300,311) | முனைப்பழியுள்ள |
| **2020** | 2,762,090,933 | 2,701,709,124 | 2,514,535,678 | 1,813,046,536 | 60,381,809 | முனைப்பழியுள்ள |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்த மற்றும் அமைய அல்லது வேறுவகையில் | அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் திறைசேரி அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கு திறைசேரியிடம் அனுமதி பெற நடவடிக்கை | ஒப்பந்த அடிப்படையில் திறைசேரி அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை |


| | | | | |
|---|---|---|---|---|
| | ஆட்சேர்ப்புக்கான திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஒப்பந்தம் மற்றும் அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் அப் பதவியினருக்கு செலுத்தப்பட்டுள்ள சம்பளமும் படியுமாக முறையே ரூபா.46,460,747 மற்றும் ரூபா.11,060,030 செலுத்தப்பட்டுள்ளது. | | எடுக்கப்பட்டு வருகிறது. | எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 பந்தியின் பிரகாரம், திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாமல், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ரூபா.2,966,000 தொகையான பயணப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான அனுமதிக்கான செயல்முறை நடந்து வருகிறது. | தேவையான அனுமதி பெறப்படவில்லை. |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 2015/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்துவதற்கு உரித்தற்ற நாற்பத்தியேழு (47) உத்தியோகத்தர்களுக்கு ரூபா.3,645,000 கூட்டு தொகையான பயணப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான அனுமதிக்கான செயல்முறை நடந்து வருகிறது. | தேவையான அனுமதி பெறப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2015 இன் 16 ஆம் திகதிய பீஈடி/03 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 2.1 மற்றும் 2.8 ஆம் பந்தியின் பிரகாரம், செலுத்த வேண்டிய படிகளுக்கு மேலதிகமாக தலைவருக்கும் செயற்பாட்டு பணிப்பாளருக்கும் முறையே ரூபா 100,000 வீதம் 1,079,333 வும் ரூபா 40,000 வீதம் ரூபா.465,332 வீதமும் பொழுது போக்கு படியாக செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாடும் பெற்றிருக்கவில்லை | உரிய அனுமதிகளைப் பெற்ற பிறகு கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறதா என்பதை முகாமையினால் உறுதி செய்யப்பட வேண்டும். | எஸ்ரிஎஸ் இலிருந்து முன்னைய தலைவர் மற்றும் தொழிற்பாட்டு பணிப்பாளர் ராஜினாமா செய்ததால், குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு நிறுத்தப்பட்டது. | அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியினுள உள்ளடங்கப்படாத பதவியாகிய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் மற்றும் அமைச்சின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஆகிய இரு பதவிகளுக்கு ஒரு நபர் நியமிக்கபட்டிருந்ததோடு அவரது சுயவிபரக் கோவையினை பரிசீலனை செய்த போது இதற்கு பொருத்தமாக தகமைகள் காணப்படாமல் இருந்தது. குறிப்பிட்ட நிதியாண்டின் போது இவருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 1,095,753 செலுத்தப்பட்டுள்ளது | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்கு தகுதியான பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். | 2019 இற்குப் பின்னர் ஒப்பந்தம் நீட்டிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் திரும்பப் பெறப்படவில்லை. |
| (ஊ) | தற்போதுள்ள கணக்கீட்டு முறைமையினை நவீனப்படுத்துவதற்கு மொத்த ஒப்பந்த பெறுமதி | முகாமையானது கணக்கீட்டு முறைமையினை முழுமையாக | 2009 ஆம் ஆண்டு மேற்படி ஒப்பந்ததாரரால் நிறுவப்பட்ட கணினி | கடிதத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, பன்னிரெண்டு |

| | | | |
|---|---|---|---|
| ரூபா.9,025,000 இருந்து ரூபா.1,805,000 முற்பண கொடுப்பனவாக 2017 திசெம்பர் 18 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் ஒப்பந்த அளிப்பு கடிதத்தில் இணங்கிய பன்னிரெண்டு செயற்பாடுகளில் ஒரு செயற்பாடு மாத்திரமே நிறைவுற்றிருந்தது.<br>எவ்வாறாயினும் இந்த தொகையானது மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய மீதியினுள் உள்ளடங்கியிருந்தது. | நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு. | முறைமை மற்றும் கம்பனியின் பல கணினி பிரச்சினை எதிர்கொண்டுள்ளது. கம்பனியின் புதிய கணினி முறைமை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது | செயல்பாடுகள் நிறைவடையவில்லை. |

## 4.94 வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 15,737,938 | 14,773,190 | 1,262,579,982 | 7,720,880 | 964,748 | முனைப்பபழியற்ற |
| **2019** | 3,951,125 | 6,919,452 | 1,268,541,338 | 6,485,778 | (2,968,327) | முனைப்பபழியற்ற |
| **2020** | 2,425,791 | 5,252,549 | 1,265,977,343 | 6,456,602 | (2,826,758) | முனைப்பபழியற்ற |





| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 2018 | 15.74 | 14.77 | 1262.58 | 7.72 | 0.96 |
| 2019 | 3.95 | 6.92 | 1268.54 | 6.49 | (2.97) |
| 2020 | 2.43 | 5.25 | 1265.98 | 6.46 | (2.83) |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கம்பனி ஊழியர் 2016 இல் இருந்து வரையறுக்கப்பட்ட கொமர்சியல் வங்கியிடம் இருந்து ரூபா.15,435,000 தொகையான முறையற்ற கொடுக்கல் வாங்கலில் கம்பனி இந்த முறையற்ற கொடுக்கல் வாங்கலை 2019 இல் வெளிப்படுத்தி இருந்தது பின்பு 24 திசெம்பா 2019 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் | கணக்கீட்ட நியமங்கள் மூலம் தேவைப்படும் நிதிக்கூற்றுக்களில் கம்பனி இந்த விடயம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) தற்போது மோசடியை விசாரணை செய்து வருகிறது, மேலும் அதன் முன்னேற்றத்தை விசாரிக்க நாட் வெல்த் கார்ப்பரேஷன் ஒரு வழக்கறிஞரின் | 2021ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன, மேலும் இந்த மோசடி குறித்த விபரங்கள் 2021 ஆம் ஆண்டுக்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | (சீஜடி) கம்பனி முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தது. எனினும் இந்த விடயம் ஆண்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. | | உதவியைப் பெற்றுள்ளது. 2019 இல் மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் அந்த நேரத்தில் விசாரணையில் இருந்தது, மேலும் 2019 கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை மற்றும் 2020 ஆம் ஆண்டில் எந்த வெளிப்பாடுகளும் செய்யப்படவில்லை. மேலும் விபரங்கள் 2021 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட உள்ளன. |
| (ஆ) | கம்பனியானது 2013 ஆம் ஆண்டில் ரூபா 16,600,601 பெறுமதியுடைய மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா.58,097,943 பெறுமதியுடைய நிதி சேவைகளின் பெறுமதி சேர் வரிக்கான மதிப்பீட்டு அறிவுறுத்தலை இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றிருந்தது. கம்பனி இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கூறப்பட்ட அறிவுறுத்தலிற்கு எதிராக மேன்முறையீடு செய்தது. மேலே கூறப்பட்ட மதிப்பீடுகளிற்கு 50 சதவீத தண்டப்பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. | கம்பனி வரியை தீர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் பின் தொடர வேண்டும். | மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான வரிகள் 2022 மார்ச் 31 இற்கு முன்னர் செலுத்தப்பட்டு அதற்கேற்ப அனைத்து அபராதங்களும் தள்ளுபடி செய்யப்படும். | வரி செலுத்துவது தொடர்பான முதற்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. |

## 4.95 வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 235,595,474 | 474,007,547 | 3,675,638,869 | 2,716,657,776 | (243,412,073) | முனைப்பழியற்ற |
| **2019** | 422,835,039 | 198,414,514 | 1,324,491,207 | 140,983,872 | 224,420,525 | முனைப்பழியற்ற |
| **2020** | 109,770,602 | 58,649,332 | 1,339,347,469 | 104,712,930 | 51,121,270 | முனைப்பழியுள்ள |




| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (அ) கம்பனியின் 2008/2009, 2009/2010, 2010/2011, 2011/2012, 2013/2014, 2014/2015, 2015/2016 மற்றும் | கம்பனி நிதிக்கூற்றில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள | வருமானம் மற்றும் பெறுமதி சேர் வரி அறிக்கைகள் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு உள்நாட்டு | பந்தியில் கூறப்பட்டதன் படி, மொத்த மதிப்பீட்டு வருமான வரி பெறுமதி ரூபா. 431,581,015 ஆனது 2022 பெப்ரவரி 14 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| 2017/2018 மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான முறையே ரூபா.24,136,857, ரூபா.77,382,317, ரூபா.84,378,708, ரூபா.66,181,759, ரூபா.18,288,933, ரூபா.113,687,212, ரூபா.36,466,487 மற்றும் ரூபா.11,058,742 பெறுமதியுடைய வருமான வரி மதிப்பீடு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டது. 2017 இன் 24 ஆம் இலக்க இறைவரி சட்டத்தின் படி, என்டபிள்யூஎஸ்எல் வருமான வரிக்கு பொறுப்பாக உள்ளது. எனினும் நிதிக்கூற்றில் செலுத்த வேண்டியவையாக காட்டப்படவில்லை. | வேண்டும். | இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. முதற்தர சந்தை பரிவர்த்தனைகளுக்கு வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், அதில் கிடைக்கும் இலாபத்தில் எந்த இலாபமும் அல்லது வரி விலக்கும் செய்யப்படுவதில்லை. இருப்பினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் முதற்தரச் சந்தை பரிவர்த்தனைகளை முதற்தரச் சந்தையில் இருந்து திறைசேரி பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவிற்கும் விற்பனைக்கும் ஒரு நாள் என வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இரண்டாம் நாள் முதல் மேற்கூறிய திறைசேரிப் பத்திரங்கள் அனைத்தும் இரண்டாம் நிலை சந்தைப் பரிவர்த்தனைகளாக மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் வரி மேல்முறையீட்டு ஆணையத்தில் வழக்குகளைத் தாக்கல் | திகதி வரை செலத்தப்பட்டிருக்க வில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்துள்ளது. அதன்படி, செலுத்த வேண்டிய வரித் தொகை நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக பொறுப்புகளாகக் காட்டப்பட்டுள்ளது. நிறுவனத்தை கலைக்க அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதால், கலைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில், அனைத்த வரி நிலுவைகளையும் செலுத்த பணிப்பாளர் சபை தீர்மானித்தள்ளது. | |
| (ஆ) | கம்பனியானது 2013 ஆம் ஆண்டில் ரூபா 16,600,601 பெறுமதியுடைய மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா.58,097,943 பெறுமதியுடைய நிதி சேவைகளின் பெறுமதி சேர் வரிக்கான மதிப்பீட்டு அறிவுறுத்தலை இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றிருந்தது. எனினும், இது செலுத்தப்படவில்லை மற்றும் செலுத்த வேண்டியவையாக நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை. | கம்பனி நிதிக்கூற்றில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். | முதற்தரச் சந்தையின் பரிவர்த்தனைகள் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது மற்றும் இறுதி அறிக்கைகளில் பெறுமதி சேர் வரியில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், நிறுவனத்தை கலைப்பதற்கான அமைச்சின் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், அனைத்து நிலுவைத் தொகைகளையும் கலைப்பு தொடர்பான நியமிக்கப்பட்ட குழுவின் அங்கீகாரத்துடன் மற்றும் மஹாபொல அறக்கட்டளை நிதியின் அறங்காவலர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்த தீர்மானம் மெற்கொள்ளப்பட்டது. | பந்தியில் கூறப்பட்டுள்ளதன் படி, மொத்த பெறுமதி சேர்வரி (வீஏரி) ரூபா.74,698,544 தொகையானது 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி வரை செலுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மத்திய வங்கியின் நாணயசபை கம்பனியின் உரிமையாண்மை மறுகட்டமைப்பு திட்டத்தை முடிவுறுத்தல் மற்றும் மறுகட்டமைப்பு முடியும் வரை மாதாந்தம் மத்திய வங்கிக்கு அமுலாக்கம் தொடர்பாக செயற்பாடுகளை அறிக்கையிட வேண்டும், மறுகட்டமைப்பு முடிவடையும் வரை பணிப்பாளர் சபையில் இருந்து விலகுவதற்கு கட்டுப்பாடு விதித்தல், கம்பனி எந்த நேரத்திலும் அனைத்து சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்குதல் மற்றும் அரசாங்க பிணைகளின் இரண்டாம் தர சந்தையில் வினைத்திறனான பங்குபற்றல் மற்றும் தள பரிசோதனையை மேற்பார்வை செய்வதில் திருத்தத்தை அதிகரித்தல் போன்ற நிபந்தனைகளுடன் முதற்தரவணிகராக கம்பனியின் வியாபார மற்றும் செயற்பாடுகளை ஆறு மாத காலத்திற்கு இடை நிறுத்துவைத நீக்கம் செய்தது. எனினும், கம்பனி நிபந்தனைகளுடன் இணங்குவதற்கு தவறிவிட்டது மற்றும் கம்பனி முதற்தர வணிகராக வியாபார நடவடிக்கைகளை நடத்துவதற்கு நீக்கப்பட்டது. | கம்பனி சரியான நேரத்தில் நிபந்தனைகளுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | இலங்கை மத்திய வங்கி (சிவிஎஸ்எல்) நிறுவனத்தின் இருப்பை பராமரிக்க தேவையான குறைந்தபட்ச மூலதனமான ரூபா.1 பில்லியன் அளவைக் கூட பராமரிக்காததற்காக, நிறுவனத்தை எச்சரித்திருந்தது. அந்த நேரத்தில் சந்தையில் ஏற்பட்ட மந்தநிலை மற்றும் பர்பச்சுவல் ட்ரஷரீஸ் லிமிடெட் ஒரு முதன்மை வாங்குபவராக நிதி தவறாகப் பயன்படுத்தியதன் காரணமாக, வாடிக்கையாளர்களின் நம்பிக்கையின் வீழ்ச்சியின் காரணமாக அவர்களின் முதலீட்டிற்கான திடீர் தேவை சுமார் ரூபா.700 மில்லியன் இழப்புக்கு வழிவகுத்தது. கூடுதலாக, முதன்மை சந்தையின் செயல்பாட்டிற்கு சுமார் ரூபா. 5 பில்லியன் புதிய செயல்பாட்டு மூலதனம் தேவைப்பட்டது. பிரதான முதலீட்டாளரான மஹாபொல புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியானது, அபாயகரமான முயற்சியில் மேற்கொண்டு முதலீடு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை மற்றும் அதன் அனைத்து பங்குகளையும் விற்க அமைச்சரவையின் அனுமதியினை கோரியுள்ளது. 2020 ஒக்டோபரில் அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்டு, | கம்பனியை கலைக்க அமைச்சரவை அனுமதி அளிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிறுவனத்தை கலைக்க பரிந்துரைத்துள்ளது. அதன்படி, நாட் வெல்த் செக்யூரிட்டீஸ் 2020 நவம்பர் 20 ஆம் திகதியில் முதன்மை கொள்வனவு செய்பவரின் உரிமத்தை இலங்கை மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்பியது. | |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டில் இரண்டு நிறுவனங்களுக்கு (ஒயிட் க்ரோவ் ஹோல்டிங்ஸ் மற்றும் ஆஸ்ட்ரல் கேபிடல் ஹோல்டிங்ஸ்) செலுத்தப்பட்ட ரூபா.19,725,000 அங்கீகரிக்கப்படாத தரகு கட்டணம் தொடர்பாக 2016 ஆம் ஆண்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சிஜடி) கம்பனி முறைப்பாடு செய்திருந்தது. இந்த நிறுவனங்கள் பணம் செலுத்துவதற்கு முன்னர் நிதி நிறுவனங்களாக சிஜடியில் பதிவு செய்தனவா என்பதை கம்பனி உறுதிப்படுத்தவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | இக் கம்பனி சிவிஎஸ்எல் இல் நிதிக் கம்பனியாகப் பதிவு செய்துள்ளதா என்பதை உறுதிசெய்து அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மோசடி ஒப்பந்தத்தில் கம்பனியின் சிரேஷ்ட கணக்காய்வு அதிகாரி, ஹபீஸ் கேம்ப்பெல் நேரடியாக ஈடுபட்டதால் இந்த அலட்சியம் ஏற்பட்டது. இது தொடர்பாக பணிபுரிந்த அனைத்து நிறுவன அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், தற்போது இந்த விடயம் தொடர்பில் சிஜடி விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் தேவையான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளது. | தேவையான விசாரணைகளை சி.ஐ.டி.யினால் செயற்படுத்தப்படுகின்றது. அதன் முன்னேற்றம் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலம் கண்டறியப்படுகிறது. |

## 4.96 லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேசன் பிஎல்சி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 6,458,750,055 | 5,402,188,414 | 8,568,143,665 | 2,530,359,893 | 1,056,061,640 | முனைப்பழியற்ற |
| **2019** | 6,464,813,140 | 5,808,659,452 | 8,901,417,154 | 2,847,363,578 | 667,653,687 | முனைப்பழியற்ற |
| **2020** | 5,954,768,530 | 5,494,659,105 | 9,267,888,059 | 2,637,674,092 | 467,109,425 | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பீஈடி1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதம நிறைவேற்று | பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து கம்பனி நடைமுறைக்காக அங்கீகாரத்தை | லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேஷன் பிஎல்சீ பொது பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றானதுடன் எரிபொருள் படி ஊழியர் | 2022 சனவரி 31 இல் சுற்றறிக்கை விதிகள் இணங்கவில்லை மற்றும் பொது |


| | | | | |
|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர் மற்றும் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர்/ பிரதம நிதி உத்தியோகத்தரிற்கு எல்லைகளை விஞ்சி முறையே 50 லீற்றர் மற்றும் 35 லீற்றர் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்தன. | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பளத்தின் ஒரு பகுதியாகும். அறியப்பட்ட வரலாற்றில் இருந்து வரும் நிறுவன நடைமுறையின் பிரகாரம் எரிபொருள் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. சம்பள தொகுப்பின் ஒரு பகுதியாக ஆட்சேர்ப்பு நேரத்தில் கம்பனியின் எரிபொருள் உரிமை தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒத்த வகைகளின் அளவுகள் மற்றும் ஏனைய பொது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களால் அவர்களிற்கு வழங்கப்படும் எரிபொருள் உள்ளடங்கலாக மொத்த சம்பளம் தொடர்பில் விண்ணப்பதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது. | முயற்சி திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்படவில்லை |
| (ஆ) | சீசெல்ஸில் ரூபா.42,127,193 தொகையை முதலீடு செய்வதன் மூலம் சிகிச்சை நிலையமொன்றை 2017 ஆம் ஆண்டில் கம்பனி ஆரம்பித்திருந்தது. சீசெல்ஸ் சிகிச்சை நிலையம் 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா.11,193,820 மற்றும் ரூபா.2,473,850 தொகையான தேறிய நட்டத்தை அறிக்கையிட்டிருந்தது. சிகிச்சை நிலையம் நட்டங்களை | முதலீடொன்றை மேற்கொள்வதற்கு முன்னர் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | சீசெல்ஸ் சிகிச்சை நிலையத்தைத் திறப்பதன் முக்கிய நோக்கம் சீசெல்ஸிலிருந்து பரிந்துரைக்கப்படும் நோயாளிகளைப் பெற்றுக்கொள்வதாகும். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் சீசெல்ஸிலிருந்து பரிந்துரைக்கப்படும் நோயாளிகளை பெற்றுக்கொள்வதை இது மோசமாகப் பாதித்ததுடன் இது சீசெல்ஸ் சிகிச்சை நிலைய செயற்பாடுகளின் நட்டத்திற்கு பங்களித்திருந்தது. தற்போது | 2020 இல் இந்த மருத்துவ நிலையம் மூடப்பட்டுள்ளது. இருப்பினும், 2022 சனவரி 31 இல் இழப்பக்கான காரணங்கள் மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய நபர்கள் இனங்காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்ச்சியாக அறிக்கையிட்டிருந்ததால் 2020 மே 12 இல் செயற்பாடுகளை தொடராமலிருப்பதற்கு சபை தீர்மானித்திருந்தது. மேலும் முதலீட்டின் மொத்த நட்டம் முகாமைத்துவத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | கொவிட்-19 நிலைமை சீசெல்ஸின் செயற்பாடுகளையும் மோசமாக பாதித்துள்ளது. குறிப்பாக எங்களால் சீசெல்ஸில் உள்ள நிலையத்திற்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதை தொடர முடியாதிருந்தது. எமது ஊழியர்களின் பாதகமான போக்குகள் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நாங்கள் 2020 யூலை 31 தொடக்கம் செயற்பாட்டை நிறுத்தியுள்ளோம். | |
| (இ) | சில விசேட பகுதிகளிற்காக பணிக்கமர்த்தப்பட்ட 21 மதியுரையாளர்களிட மிருந்து பெறப்பட்ட சேவைகளிற்காக கம்பனி தனியாக செலுத்தியிருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக அம் மதியுரையாளர்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா.110,381,165 தொகையை அவர்களிற்கு செலுத்தியிருந்தது | கொடுப்பனவு சிக்கனமாக உள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கு முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | இலங்கையானது வைத்தியசாலை சார்ந்த சந்தையை விட மதியுரையாளர் சார்ந்த சந்தையைக் கொண்ட நாடாகும். பெரும்பாலான இலங்கை நோயாளிகள் தங்களுக்கு விருப்பமான மதியுரையாளர்களை வைத்தியசாலை பெயர்கள் மூலம் அல்லாமல் அவர்களின் பெயர்கள் மூலம் ஆலோசிக்கிறார்கள், இத் தொழில்துறை தன்மை லங்கா ஹொஸ்பிட்டலிற்கும் பொருந்தும். தொழில்துறையில் முன்னணியில் உள்ள லங்கா ஹொஸ்பிட்டலில் இருப்பதற்கு மிகவும் புகழ்பெற்ற முக்கிய மதியுரையாளர்களுடன் பங்குடமையொன்று இருக்க வேண்டும். முழு நேரமும் | இந்த கூடுதல் கொடுப்பனவு 2022 சனவரி 31 இல் இன்னும் நடைமுறையில் காணப்படுகின்றது. |

மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மற்றும் சில நோயாளிகளுக்கும் அவசர அடிப்படையில் விசேட மருத்துவ உதவி தேவைப்படும் சில நோயாளிகளிற்கும் ஏனைய வணிகத்தைப் போல அல்லாமல் மருத்துவ உதவியை தாமதப்படுத்துவது மனித உயிரையே இழக்க நேரிடலாம், எனவே வைத்தியசாலை பல்வேறு விசேட துறைகளில் முன்னணி மதியுரையாளர்களுடன் பங்குடமையொன்றை வைத்திருக்க வேண்டும். இந்த முன்னணி மதியுரையாளர்களை வைத்தியசாலை பணியாளர் பதவியணியில் வைத்திருப்பது சாத்தியமில்லை, ஏனெனில் அவர்கள் முழுநேர ஊழியராக சேர விரும்பவில்லை. வைத்தியசாலை அவர்களை முழு நேர பணியாளராக நியமிக்க விரும்பினால், அது நிறுவனத்திற்கு இன்னும் அதிகமாக செலவாகும்.

## 4.97 லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 1,369,559,775 | 1,092,302,605 | 1,145,665,150 | 295,833,057 | 277,257,170 | முனைப்பழியற்ற |
| **2019** | 1,480,345,783 | 1,167,897,766 | 1,448,433,037 | 425,007,433 | 312,448,017 | முனைப்பழியற்ற |
| **2020** | 1,582,098,465 | 1,213,650,272 | 1,359,213,402 | 384,884,011 | 368,448,193 | முனைப்பழியற்ற |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள | பொதுமுயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு | லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (எல்எச்டி) 2007 இன் 7 | 2022 சனவரி 31 இல் பொது முயற்சியின் திணைக்களத்திடமிருந்து அனுமதி |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் படிகள் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டியதுடன் திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி மீளாய்வு அனுமதிக்கப்படாத போதிலும் கம்பனி அத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாக உள்ளதுடன் இது லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேஷன்ஸ் பிஎல்சியின் முழுமையான துணைக்கம்பனியாக பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாக செயற்படுகின்றது. இலங்கை ஆய்வுகூடத் தொழிற்துறையானது மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக உள்ளதுடன் மேலும் வெற்றியடைந்து இத் துறையில் குறிப்பிடத்தக்க மருத்துவ ஆய்வுகூட சேவை வழங்குநராக இனங்காணப்பட வேண்டும், எல்எச்டி ஆனது சந்தையில் உள்ள ஏனைய தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு இணையாக அதனது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆகையால் எல ்எச்டி ஆனது சந்தையில் போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு, போட்டித்தன்மையிலான சம்பளங்கள் மற்றும் கூலிகளை வழங்கி திறமையானதும் | பெறப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தகுதிவாய்ந்ததுமான பதவியணியை ஆட்சேர்ப்பு செய்து பேண வேண்டும். | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 9.2ஈ பிரிவின் பிரகாரம் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (எல்எச்டி) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாக உள்ளதுடன் இது லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேஷன்ஸ் பிஎல்சியின் முழுமையான துணைக்கம்பனியாக பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாக செயற்படுகின்றது. | 2022 சனவரி 31 இல் பொது முயற்சியின் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்படவில்லை |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் சபை வரைபு வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | மேலதிகமாக கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டடின் தனியான வருடாந்த அறிக்கை எதுவுமில்லை. | 2022 சனவரி 31 வரை, தனியான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட வில்லை. |

## 4.98 ஹொட்டேல் டிவலபர்ஸ் (லங்கா) லிமிடெட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,995,518,000 | 3,108,030,000 | 15,330,551,000 | 1,409,733,000 | (126,461,000) | முனைப்பழியற்ற |
| **2019** | 4,363,245,000 | 3,258,352,000 | 16,605,325,000 | 1,579,615,000 | (312,448,000) | முனைப்பழியற்ற |
| **2020** | 1,117,399,000 | 2,043,595,000 | 16,295,030,000 | 2,195,516,000 | (877,343,000) | முனைப்பழியற்ற |





| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது கம்பனியின் திரண்ட நட்டம் | இலாபத்தை அடைந்து கொள்ளும் வகையில் வளங்களை | முத்திரையிடப்பட்ட குடியிருப்புகள், வர்த்தக கோபுரங்கள் மற்றும் சில்லறை விற்பனை | கம்பனியின் திரட்டப்பட்ட இழப்பு மற்றும் சாதகமற்ற செயல்பாட்டு மூலதனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா.6,937,589,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 7,821,569,000 வரை அதிகரித்திருந்தது. அதற்கு சமனாக 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் கம்பனியின் பாதகமான தொழிற்படு மூலதனம் ரூபா.997,068,000 ஆக இருந்தது. | | நிலையங்களுடன் கலப்பு அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | அதிகரிக்கப்பட்டது. |
| (ஆ) | ஹொட்டலின் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதியீட்டம் செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கம்பனி இலங்கை வங்கி மற்றும் சம்பத் வங்கியில் இருந்து அ.டொலர் 27 மில்லியன் ஒட்டுமொத்த கடன் கோரியிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட இரண்டு வங்கிகளினதும் இணக்கப்பாட்டின் பின்னர் அ.டொலர் 27 மில்லியன் கடன் இரத்துச் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது கம்பனி அ.டொலர் 30 மில்லியன் பெறுமதிக்கு புதிய கடனொன்று டீஎப்சீசீ | தற்போது பயன்படுத்தப்படுகின்ற கடன் கிரயத்திற்கு உரித்தற்றிருந்தமை மற்றும் அமுல்படுத்தப்படுகின்ற மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படாதிருந்த மையினால் செலவிடப்பட்ட காலப்பகுதியில் கிரயமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | கடன் உடன்படிக்கையின் அடிப்படையில் செலவிடப்பட்ட கிரயங்கள் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு நேரடியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், செயற்திட்டத்தின் தாமதம் பூரணமாக கம்பனியின் கட்டுப்பாட்டில் இல்லாதிருந்தது. செயற்திட்டத்தை அமுலாக்கும் கட்டம் முதல் நடைமுறை வேலைக்காக கிரயம் அறவிடப்பட வேண்டும். | செலவுகள் ஏற்படுத்தப்பட்ட காலகட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. |

வங்கியில் இருந்து கோரப்பட்டிருந்தது. டீஎப்சீசீ வங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பின்னர் அ.டொலர் 30 மில்லியன் மேற்கூறப்பட்ட கடன் இரத்துச் செய்யப்பட்டு கம்பனி 2020 ஆம் ஆண்டின் போது 2 பில்லியன் பெறுமதிக்கு ரூபா கடன் மக்கள் வங்கியில் இருந்து கோரப்பட்டிருந்தது. எனினும், அ.டொலர் கடன் பெறப்படாத போதிலும், கம்பனியால் செலவிடப்பட்ட உடன்படிக்கைக் கட்டணம், ஒன்றிணைந்த கட்டணம் மற்றும் சட்ட கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா.17,659,767 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் ரூபா.5,665,900 பெறுமதி மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கிரயமாக மூலதனமாக்கப்பட்டது.

### 4.99 கொழும்பு பைனன்சல் சிட்டி பவுன்டீன் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 22,271,306 | 22,271,306 | 125,028,081 | 125,028,081 | - | முனைப்பழியுள்ள |
| **2019** | 25,097,649 | 25,097,649 | 100,004,729 | 100,004,729 | - | முனைப்பழியுள்ள |
| **2020** | நிதிக்கூற்றுக்கள் பெறப்படவில்லை. | | | | | |




| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (அ) நிதி நகரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட | நிதி நகர சட்டத்தை இறுதி தீர்மானம் செய்ய தேவையான | நிதி நகர சட்டம் வரைவு சட்டமா அதிபர் | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆவணத்தை உருவாக்குவதற்காக இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், வரைவு செய்யப்பட்ட கொழும்பு நிதி நகரச் சட்டம் 2019 ஏப்ரலில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உண்மைகளை கண்டறிய முடியவில்லை. |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா.71 மில்லியன் மற்றும் ரூபா.100 மில்லியன்கள் திறைசேரியினால் வழங்கப்பட்டன, மேலும் அந்தத் தொகைகளில் ரூபா.129 மில்லியன்கள் 2019 மார்ச் 31 இல் நடைமுறைக் கணக்கில் செயலற்ற நிலையில் இருந்தன. | திறைசேரியின் மானியங்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடைமுறைச் பிரச்சினைகள் மற்றும் சட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக காசு மீதிகள் நடைமுறைக் கணக்கில் வைத்திருக்க வேண்டியிருந்தது. | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை கண்டறிய முடியவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனி 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளை 05 மாதங்கள் கழித்து 2019 | சுற்றறிக்கையில் உள்ள விதிகளுக்கு இணங்கப்பட வேண்டும். | கம்பனியின் கணக்குப் பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர் குறைவாக காணப்பட்டுள்ளது. | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை கண்டறிய முடியவில்லை. |


| | | | | |
|---|---|---|---|---|
| | நவம்பர் 06 ஆம் திகதியிலேயே வழங்கியிருந்தது. | | | |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் நகல், அடுத்த நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும். இருப்பினும், கம்பனி அதை அனுப்பவில்லை. | சுற்றறிக்கையில் உள்ள விதிகளுக்கு இணங்கப்பட வேண்டும். | அமைச்சினால் கோரப்பட்ட தகவல் கூட தெரியாமல் கொடுக்கப்பட்டதாக நினைக்கின்றேன். | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை கண்டறிய முடியவில்லை. |
| (உ) | மீளாய்வாண்டில் கம்பனியின் ஸ்தாபன பணிப்பாளர்/ஸ்தாபன உறுப்பினர்களுக்க வழங்கப்பட்ட ரூபா.4,382,578 தொழில்சார் கொடுப்பனவு செலுத்தப்பட்டமையானது 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பந்தி 18 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய தரப்பினருடனான நேரடி அல்லது மறைமுக ஒப்பந்தங்களின் நிலைமை கம்பனியினால் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை கண்டறிய முடியவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள | சுற்றறிக்கையில் உள்ள விதிகளுக்கு இணங்கப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்தம் நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் தொடர்பான பௌதீகப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2020 மார்ச் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கிரயம் ரூபா 9,353,423 ஆன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பௌதீகப் பரிசோதனை தொடர்பாக அத்தினத்தில் கணிப்பீடொன்று செய்யப்படவில்லை. | | | கண்டறிய முடியவில்லை. |
| (எ) | 2020 மார்ச் மாதம் 26 ஆம் திகதிய மற்றும் சீபி/20/0595/204/052 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பிணையால் வரையறுக்கப்பட்ட சீஎவ்சீ பவுண்டிங் கம்பனியை தன்னிச்சையாக கலைப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும் கண்ககாய்வு தினமான 2021 மார்ச் 19 வரையில் கம்பனியை கலைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சரவையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை கண்டறிய முடியவில்லை. |
| (ஏ) | கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தத்தில் 1.4 ஆம் | நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட | பதில்கள் வழங்கப்படவில்லை. | கம்பனியினைக் கலைக்க முன்மொழியப்பட்டதால் உண்மைகளை |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் வாடகை வைப்பு, மாதாந்த வாடகைப் பெறுமதி மற்றும் சேவை வைப்பு போன்றவற்றின் மூன்று மடங்காக இருக்க வேண்டிய போதிலும் ஒப்பந்தத்தின் 9 ஆவது அட்டவணையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான குத்தகை ஒப்பந்தத்தின் வைப்பு ரூபா 2,124,636 என்பதுடன் கணக்கின் பிரகாரம் செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 257,690 ஆகும். வேறுபாடான ரூபா.1,866,945 ஆன வைப்புப் பணம் அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் மின்சார வைப்பான ரூபா 109,975 ஆனது அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். | கண்டறிய முடியவில்லை. |

**4.100 வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்**


| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 89,482,586 | 90,749,709 | 211,689,556 | 12,229,453 | 14,750,722 | முனைப்பழியுள்ள |
| **2019** | 69,608,460 | 78,021,201 | 211,591,653 | 11,535,430 | 5,862,694 | முனைப்பழியுள்ள |
| **2020** | 16,833,188 | 44,245,388 | 197,298,670 | 11,688,779 | 18,031,933 | முனைப்பழியற்ற |




| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2011 நவம்பர் 18 ஆம் திகதிய டிஎம்எஸ்/ஈ4/47/9/282/1/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் கடிதத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் முறையே கம்பனியின் 33 உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்பு படிகளாக ரூபா.2,266,500 மற்றும் ரூபா.2,638,750 ஆகிய தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.. | பணிப்பாளர் சபையின் அனுமதியில் மட்டுமே இந்தக் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன |

**4.101 ஸ்ரீ லங்கா திரிபோசா லிமிட்டட்**

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,844,531,980 | 2,765,891,006 | 1,353,618,185 | 234,847,435 | 78,640,974 | முனைப்பழியுள்ள |
| **2019** | 3,321,821,316 | 3,143,686,220 | 1,525,439,303 | 238,575,310 | 178,135,096 | முனைப்பழியுள்ள |
| **2020** | 2,034,727,483 | 1,934,001,706 | 1,944,712,162 | 246,086,610 | 100,725,777 | முனைப்பழியுள்ள |





| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களுக்கான அனைத்து செலவினங்களையும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு மேற்கொள்வதால், உற்பத்தி செயன்முறையின் கழிவுகளிலிருந்து | கழிவு விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2011 ஆம் ஆண்டில் சபை அங்கீகாரங்களை பெற்றுக்கொண்ட பின்னர் உற்பத்தி கழிவுகளிலிருந்துதான விற்பனை வருமானம் ஊழியர்களின் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 வரை கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தை அரசாங்க திரட்டிய நிதியில் வரவு வைக்க நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

கிடைக்கும் விற்பனை வருமானம் அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திறகு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் கழிவு விற்பனை மூலம் கிடைத்த வருமானமான ரூபா 12.6 மில்லியன் தொகையானது அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான 10 வருட காலப்பகுதியின் போது அரசாங்கம் அந்த வகையில் ரூபா 152.5 மில்லியன் கூட்டுமொத்தத்தை இழந்திருந்தது.

4.102 வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனி

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | 36,528,358 | 29,879,576 | 223,526,873 | 78,157,792 | 6,648,781 | முனைப்பழியுள்ள |
| 2019 | 22,696,922 | 25,712,706 | 196,812,423 | 54,606,225 | (3,015,782) | முனைப்பழியுள்ள |
| 2020 | 18,340,074 | 25,142,746 | 208,125,539 | 56,258,639 | (6,802,673) | முனைப்பழியுள்ள |




| | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த செலவினம் ரூபா. மில்லியன் | மொத்த சொத்துக்கள் ரூபா. மில்லியன் | மொத்த பொறுப்புக்கள் ரூபா. மில்லியன் | வரிக்கு (… இலாபு (நட்டம் ரூபா. மில்ல |
|---|---|---|---|---|---|
| 2018 | 36.53 | 29.88 | 223.53 | 78.16 | 6.65 |
| 2019 | 22.70 | 25.71 | 196.81 | 54.61 | (3.02) |

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (அ) கொரியாவில் தொழில்வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்ற ஊழியர்களிடமிருந்து செலுத்தும் வைப்புக்களாக 10 வருடங்களுக்கு முன்னர் ரூபா 50,000 படி நிறுத்தப்பட்டு | தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்ற ஊழியர்களிடமிருந்து மீளசெலுத்தும் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட இந்த | கோரிக்கை முன்வைக்கப்பட்டால் கொடுப்பனவுகளுக்காக இந்த மீதி முன்கொண்டு வரப்பட்டவாறு உள்ளது. | 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள், உரியவர்களுக்குத் தொகையைத் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்காமல், அந்தத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைக்கப்பட்ட ரூபா 16,215,000 ஆன தொகை மற்றும் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 241 ஊழியர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட ரூபா.1,904,322 கூட்டுத்தொகையான கடவுச்சீட்டு கட்டணங்களுக்கு மீள செலுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை துரிதமாக செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | தொகைகள் தக்க வைக்கப்பட்டுள்ளன.<br><br>2021 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாத நிலுவை ரூபா.7,090,083 ஆகும். |
| | வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்காக வெளியேறி அங்கு மரணமடைந்த இலங்கையர்களுக்காக 2013 - 2018 காலப்பகுதியினுள் முகவராண்மைக்கு கிடைத்த ரூபா 8,273,415 கூட்டுத்தொகையான மரண நட்டஈட்டுக்குரிய தரப்பினர்க்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வெளிநாட்டில் மரணமடைந்த ஊழியர்களுக்காக கிடைத்துள்ள இந்த நட்டஈட்டுத் தொகை உரிய தங்கி வாழ்வோரை இனங்கண்டு அவர்களுக்கு வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணியகத்தினால் தங்கி வாழ்வோர் குறித்துரைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு தாமதமாகுதல். | |
| (ஆ) | கொரியா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு வேலைக்காகச் செல்லும் தொழிலாளர்களுக்கு மருத்துவ அறிக்கைகளை வழங்குவதற்காக தனியார் கம்பனியுடன் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ நிலையத்திற்கு ரூபா.3,476,298 மதிப்புள்ள அலுவலக உபகரணங்களையும் வாடகைக் கட்டிடத்தையும் கம்பனி வழங்கியுள்ளது.<br><br>2016 செப்டெம்பர் 26 ஆம் திகதி அந்த மருத்துவ | முகராமைத்துவ திறமையின்மை மற்றும் அலட்சியத்தின் விளைவாக இந்த மருத்துவ நிலையத்தை தொடங்குவதும் பராமரிப்பதும் கம்பனிக்கு பாதகமாக இருந்ததால் இதற்கு காரணமானவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இன்சிலாப் மருத்துவ நிலையத்தின் பணிப்பாளர் விடாபிடியாக மருத்துவ நிலையத்தில் தங்கியிருப்பதால் குத்தகை ஒப்பந்தத்தின் சரத்து (ஊ) இற்கு இணங்க முடியவில்லை. கட்டட உரிமையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க, பணிப்பாளர் சபையின் | குறித்த தனியார் கம்பனி குறிப்பிட்ட காலத்திற்குள் வாடகைக் கட்டடத்தை விட்டு வெளியேறாததால், மீளப்பெறக்கூடிய வாடகை தொடர்பாக கம்பனிக்கு எதிராக கட்டடத்தின் உரிமையாளர் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இறுதி செய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையத்தினால் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கைகளை அந்த வெளிநாட்டினால் நிராகரித்ததன் காரணமாக அந்த தனியார் கம்பனிக்கு அதன் வணிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தெரிவிக்கப்பட்டிருந்தும்,<br><br>இது அவர்களின் வணிக நடவடிக்கைகளில் தவறு செய்யப்படவில்லை மற்றும் 2019 யூலை மாதம் கணக்காய்வு திகதி வரை கட்டடத்திலி?ருந்து வெளியேற்றப்பட்டிருக்கவில்லை. | | அனுமதியுடன் 12 தவணைகளில் ரூபா.2,640,000 வாடகை செலுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இவ் விடயம் தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களம் கம்பனியின் நிலுவையில் உள்ள இரண்டு வழக்குகளுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்கியுள்ளது. | |
| (இ) | புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான காப்புறுதி நிதி தொடர்பான ஒப்பந்தத்தில் உள்ள காப்புறுதிக் காலப்பகுதி கம்பனிக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கும் நிறுவனத்திற்கும் இடையில் 02 வருடங்கள் மற்றும் 03 மாதங்கள் காப்புறுதிக் ஒப்பந்தத்த காலம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. கம்பனியினால் வழங்கப்பட்ட சலுகைக் காலத்திற்குள் காப்பீட்டாளர்களுக்கு செய்யப்பட்ட இழப்பீடுகளின் | இவ் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதில் உள்ள இடர்கள் மற்றும் கம்பனிக்கு ஏற்படக்கூடிய நிதி இழப்புகள் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு இழப்பீடு வழங்கும் விதத்தில் முறையாக உடன்படாதது தொடர்பாக பொறுப்பான அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த காப்புறுதித் திட்டம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இழப்பீட்டுத் தொகையை வழங்குவதில் கம்பனி பொறுப்பேற்றததினால் தொடர்புடைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | கம்பனியின் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான அலட்சியத்தால், கம்பனியின் நிதி நிலைமை மோசமடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்பின் சுமை காரணமாக 03 வருட காலத்திற்குள் ரூபா.7,024,940 மேலதிகமாக இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தது. | | | |
| (ஈ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கம்பனிக்கு 05 நாடுகளில் இரண்டு வருடங்கள் வரையான செல்லுபடியான 14 வேலைவாய்ப்பு கட்டளைகளின் கீழ் 1492 வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், கணக்காய்வு தினமான 2021 மார்ச் 30 ஆந் திகதியிலும் 20 தொழிலாளர்கள் மாத்திரமே வெளிநாட்டிற்கு சென்றிருந்தனர். ஜப்பான் அரசின் தொழில்சார் பயிற்சி துறைகளுக்கு உரிய 04 வேலைவாய்ப்பு கட்டளைகளின் கீழ் 481 வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அதில் 15 தொழிலாளர்கள் மாத்திரம் தொழிலுக்காக அனுப்பப்பட்டிருந்தனர். | அரச அனுசரணையுடனான இந்த தொழில் சந்தர்ப்பங்களை பிரயோசனப்படுத்தி கம்பனி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | அண்மைக்காலமாக உலகளாவிய தொற்றுநோய் காரணமாக பணி கட்டளைக்கு தொழிலாளர்களை அனுப்புவது குறைவாக இருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கம்பனியின் வேலை உத்தரவுகள் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முறையே 109 மற்றும் 152 ஆகும். |
| (உ) | விவசாயத்துறையில் வேலைவாய்ப்பைப் பெறுவது தொடர்பாக இஸ்ரேலுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், வேலை அனுமதிப்பத்திரம் காலாவதியாகி இஸ்ரேலுக்குச் சென்ற தொழிலாளர்களை மீளக் கையாளும் பொறுப்பு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இஸ்ரேலுக்குள் சட்டவிரோதமாக தங்கியிருந்த | வேலைக்காக புலம்பெயர்ந்து இலங்கைக்கு திரும்பாத தொழிலாளர்களுக்கு எதிராகவோ அல்லது அந்த தொழிலாளர்கள் சார்பாக பங்குகளுக்கு உரிமையுள்ள நபர்களுக்கு எதிராகவோ சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் தொழிலாளர்களின் பணி அனுமதிப்பத்திரம் காலாவதியான பிறகு அவர்களை நாடு திரும்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | வேலைக்காக மீண்டும் இஸ்ரேலுக்குச் சென்ற நபர்களிடமிருந்து பெறப்பட்ட பங்குகளுக்கு 2021 திசெம்பர் 31 ஆம் திகதி இல் ரூபா.15,100,000 மீதியை தீர்வு செய்ய நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படவில்லை |


105 தொழிலாளர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பவோ அல்லது அவர்களின் உத்தரவாதங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவோ கம்பனியால் இரண்டு ஆண்டுகளுக்குள் முடியவில்லை. எவ்வாறாயினும், ரூபா.2,500,000 பிணைப்பத்திரத்தினை தொடங்குவதற்கான வழிமுறையினால் இஸ்ரேலில் பணிபுரிந்து, தமது தொழில் காலத்தை முடித்துவிட்டு தாய்நாட்டிற்கு புலம்பெயர்ந்த புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து மேற்படி பிணைப்பத்திரத்திற்கு மேலதிகமாக ரூபா 100,000 பாதுகாப்புத் தொகையை செலுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

என கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

.

## 4.103 நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டெட்

| | மொத்த வருமானம் ரூபா. | மொத்த செலவினம் ரூபா. | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,554,680,695 | 2,896,207,306 | 10,618,379,569 | 10,038,296,389 | (341,526,610) | முனைப்பழியற்ற |
| **2019** | 3,020,245,234 | 3,028,588,641 | 10,637,354,161 | 10,184,195,582 | (8,343,408) | முனைப்பழியற்ற |
| **2020** | 3,336,322,289 | 2,751,571,491 | 11,218,648,450 | 10,298,017,335 | 584,750,798 | முனைப்பழியற்ற |




| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின 9.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டமானது பொதுத்திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியுடன் பணிப்பாளர் சபையினாலும் உரிய | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது திறைசேரியின் எந்த நிதியுதவியுமின்றி முழுமையாக இயங்குகின்ற சுயநிதி நிறுவனம் என்பதால், பணிப்பாளர் சபையின் அனுமதி மட்டுமே போதுமானதாகவுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி 2021 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், கம்பனியானது அமைச்சிடமிருந்து ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 8.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஊக்குவிப்புப்படி கொடுப்பனவிற்கான அனுமதியானது பொதுத்திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டும். எனினும், சந்தைப்படுத்தல் பிரிவிற்கான 2018 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா. 90,502,435 மற்றும் ரூபா. 3,663,218 தொகையான விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் அத்தொகைகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையானது முகாமைத்துவம் செய்தற்குமுரிய மற்றும் வணிகத்தின் முகாமைத்துவத்தையும் மற்றும் கம்பனியின் நடவடிக்கைகளையும் வழிப்படுத்தி மேற்பார்வை செய்வதற்குரிய அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் படி 2021 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.322,350,000 ஆன நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனெஜ்மென்ட் லிமிட்டட் இயங்கி வருகின்ற 25 ஏக்கர் காணி மற்றும் புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் 15 ஏக்கர் காணியையும் 30 வருடக் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணக்கம் | குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்படுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 வரை குத்தகை ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை. |

செய்யப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்ட போதிலும் 2021 மே மாதம் வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவில்லை.